# தமிழர் யார்

பேரா.க.கிருஷ்ணமூர்த்தி

கோயம்புத்தூர் - 18

வந்தாய்; எம்மனம் புகுந்தாய்! மன்னி நின்றாய்
நந்தாத கொழுஞ்சுடரே! எங்கள் நம்பி!
சிந்தாமணியே! திருவேங்கடம் மேய
எந்தாய்!  இனியாம் உம்மை என்றும் விடோமே.

தோழமைகளே.. இன்றைய உலகம் எப்படி இருக்கிறது? இந்திய மக்கள் எவ்வாறு இருக்கிறார்கள்? தமிழர்கள் எப்படி வாழ்கிறார்கள்? தமிழ்நாடு எவ்வாறு உள்ளது?

எம்மிடம் ஆயிரக்கணக்கான குறிப்புகள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான தகவல்களைச் சேகரித்து வைத்துள்ளோம். தொன்னூற்றி எட்டாமாண்டு வேலையில் சேர்ந்ததற்குப்பின், ஏராளமான புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்தோம். வேலைக்குச் சேர்வதற்கு முன்பிருந்தே யாம் ஜுனியர் விகடன் படிப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தோம். தொன்னூற்றி ஒன்பதாமாண்டு ஜனவரித் திங்களிலிருந்து தினமலர் வாங்க ஆரம்பித்தோம். ஜுனியர் விகடன், ஆனந்த விகடன், இந்தியா டுடே தமிழ் பதிப்பு, குமுதம் உட்பட பல்வேறு புத்தகங்கள் வாங்கிப் படித்தோம்.

யாம் படித்ததில் முக்கியமான செய்தி என அறிவதை குறித்து வைத்துக் கொண்டோம். மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது இரு மாதங்களுக்கு ஒருமுறையோ தேவைப்படும் குறிப்புகளை வெட்டியெடுத்துத் தனியாகப் பத்திரப்படுத்தினோம். புதிய உலகம் செய்வதற்கு எந்தந்தத் தகவல்கள் அவசியம் என யாம் உணர்ந்தோமோ, அவற்றைத் தனியாக எடுத்துக் கொண்டோம். கல்வி, சமூகம், அரசியல், அரசியல்வாதிகள், சினிமா, அறிவியல், இலக்கியம், வரலாறு, மனிதர்கள், மனம், தாவரம், விலங்குகள், பரிமாணம், விவசாயம், எதிர்காலம், தத்துவம் மற்றும் பிற (எக்ஸ்ட்ரா) போன்ற பல்வேறு தலைப்புகளில் உறைகள் எழுதி, மாதாமாதம் வெட்டியெடுக்கும் தகவல்களை தனித்தனியாக அந்தந்த உறைகளில் போட்டு வந்தோம். இப்படியாக, யாம் இரண்டாயிரத்து ஒன்பது, டிசம்பர் வரை கிட்டத்தட்ட பதினோரு ஆண்டுகள் புதிய உலகம் செய்வோம் புத்தகம் தொடர்பான தகவல்களைச் சேகரித்து வந்தோம். தினமலர், ஜுனியர் விகடன் தகவல்களே அதிகமாக இடம் பெற்றன.

இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டின் திசம்பர் மாதத்தின் நடுவில் குழந்தைகளின் குளிர் விடுமுறையை முன்னிட்டு மனைவியும், குழந்தைகளும் மாமனார் வீட்டிற்குப் போயிருந்தார்கள். யாம் சேகரித்து வைத்திருந்த அத்தனை குறிப்புக்களையும் படித்து, எந்தெந்தச் செய்திகளெல்லாம் எமக்குத் தேவைப்படுமோ அவற்றை குறிப்புகளாக எழுதினோம். பகல், இரவு என விடாமல் படித்து, பத்து நாட்களிலேயே அனைத்துக் குறிப்புகளையும் எழுதி விட்டோம்.

புத்தாண்டு அன்று திரும்பி வந்தவர்கள் எமக்கு என்னாயிற்று எனக் கேட்டார்கள். அப்பாவுக்கு ஏதோ ஆகிவிட்டது எனக் குழந்தைகள் பேசியது நினைவுள்ளது.

பத்து வருடத் தகவல்களை பத்தே நாட்களில் படித்துக் குறிப்புகள் எடுப்பது சாதாரண நிகழ்வல்ல. சரியாகச் சாப்பிடாதது, தூங்காதது போன்ற உடல்நலப் பிரச்சினையோடு, மனநலமும் கொஞ்சம் பாதித்தது என்பதே உண்மை. குறிப்புகளைக் கொண்டு தற்காலத்திய உலகம் எப்படி இருக்கிறது, எதிர்கால உலகம் எப்படி இருக்க வேண்டுமென்பதை புத்தகமாக எழுதலாம் எனத் திட்டமிட்டு, சேகரித்த குறிப்புகளை சுருக்கமான குறிப்புக்களாக எழுதினோம்.

இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டிற்குப் பின்னர் இரண்டாயிரத்துப் பதினான்காம் ஆண்டுவரை செய்திகளை அவ்வளவாகச் சேகரிக்கவில்லை. அவ்வப்போது தேவைப்படும் எனக் கருதிய செய்திகளை மட்டும் குறிப்புகளாக எழுதிவந்தோம். இரண்டாயிரத்துப் பதினான்கில் புத்தகம் எழுத ஆரம்பித்தபின் கடந்த இரண்டு வருடங்களாக மேலும் பல குறிப்புகள் சேகரித்து வைத்திருக்கிறோம்.

எமது எழுதுமேசை மீது குவிந்து கிடக்கும் தகவல்களையெல்லாம் எழுத ஆரம்பித்தால் உலகிலேயே எமது புத்தகம்தான் மிகப்பெரிய புத்தகமாக இருக்கும். கிட்டதட்ட பதினெட்டு ஆண்டுகள் இந்த உலகம் எப்படி இருந்தது என்பதற்கான செய்திகள், ஆதாரங்கள் இவை. அனைத்தையும் எழுதினால் எழுதுவது நிற்காது, தீராது. நாம் வாழும் இவ்வுலகம் எப்படி இருக்கிறது, நாம் எப்படியான உலகில் வாழ்கிறோம் என்பதை நாம் அனைவருமே அறிந்திருப்போம். அறியாதவர்களும் இருப்பார்கள். அவர்களுக்காக ஒரு பானையில் ஒரு சோறு பதம் எனும் வழக்கத்திற்கு ஏற்ப, குறிப்பிட்ட சில செய்திகளைத் தெரியப்படுத்துகிறோம். மேலும், எமது சொந்த அனுபவங்களிலிருந்து யாம் அறிந்தவற்றை, கண்டவற்றை, பார்த்தவற்றை, கேட்டவற்றை, படித்தவற்றையும் நேர்மையான முறையில் உங்கள் முன் வைக்கிறோம். நண்பர்களே.. வாருங்கள் நாம் வாழும் உலகைச் சற்று உற்று நோக்குவோம்.

தொன்னூற்றி ஆறாமாண்டில், ஆட்சிக்கு வந்தவுடன் காவல் உயரதிகாரிகள் ஆய்வுக்கூட்டத்தில் காவல் துறையின் ஈரல் கெட்டுவிட்டது என அப்போதைய முதல்வர் பேசியதாகக் குறிப்புகள் சுட்டிக் காட்டுகின்றன. காலப்போக்கில் ஈரல் பாழாகி, இதயம், சிறுநீரகம், மூளை என அனைத்துமே கெட்டுப் போய்விட்டது

என்பதை ஏற்றுக் கொள்கிறீர்களா தோழர்களே. காவல் துறை எப்படிச் செயல்படுகிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோமா? யாம் குறிப்பிடுவது ஒட்டுமொத்தக் காவல் துறையை, காவலர்களை.

சரியான சான்று கொடுத்தால் நாம் ஏற்றுக் கொள்வோமில்லையா. 17.10.10 ஜுனியர் விகடனின் இப்படிக்கு எழுத்தில், பேராசிரியரான பிரபா கல்விமணி காவல் துறையை விட கல்வித் துறை மோசம் என்கிறார். பேராசிரியர் கூறுகிறார் - எமது போராட்ட அனுபவங்களின் அடிப்படையில் சொல்வதென்றால், காவல் துறையைவிட மோசமான நிலையில் உள்ளது கல்வித்துறை. காவல்துறை ஏதாவது தவறு செய்தால், அந்த துறை கொஞ்சமாவது அசைந்து கொடுக்கும். ஆனால் கல்வித் துறையோ பாரதி சொன்னதைப் போல ஈரத்திலேயே பிறந்து, ஈரத்திலேயே வாழும் எருமை மாடுதான்.

பேராசிரியர்கள் மாணவர்களுக்கு சிறப்புப்பாடம் எடுத்ததாகவும் (டியூஷன்), எதிர்த்த நமது பேராசிரியரை, திண்டிவனத்திலிருந்து ஊட்டி கல்லூரிக்கு பணி இடமாறுதல் (1990) செய்ததாகவும் தெரிய வருகிறது. பிழைக்கத் தெரியாத பேராசிரியராக இருப்பார் போலிக்கிறது. பேராசிரியர் வேலையில் சேர்ந்தோமா, சம்பளத்தை வாங்கி வட்டிக்கு விட்டோமா, வட்டிப்பணத்தில் ஒரு கடையைப் போட்டோமா, கல்லாக் கட்டினோமா, பிள்ளைகளுக்கு சொத்துச் சேர்த்தோமா என இல்லாமல், அறிவான பேராசிரியர்கள் சிறப்புப் பாடம் எடுப்பதற்குத் தடையாக பேராசிரியர் பிரபாமணி ஏன் போராடினார் எனத் தெரியவில்லை. திண்டிவனம் பகுதியின் இருளர் முதுகுடிக்கு ஆதரவாகப் பேராசிரியர் செயல்பட்டதாகக் கூறப்படுகிறது. இருளர் குடிகளிடம் வட்டிக்கு விட்டு எவ்வளளோ பணம் பார்த்திருக்கலாம். எளிய மக்களல்லவா.. வட்டி, நாள்வட்டி, மீட்டர்வட்டி எனப் போட்டுக் கொண்டே இருக்கலாம். எதிர்த்துக் கேட்க முடியுமா என்ன.

காவல், கல்வி இரண்டில் அதிகம் கெட்டிருப்பது எது தோழமைகளே.. ஒரு பானைக்கு ஒரு சோறுதானே பதம். நீங்கள் படித்த கல்விச் சூழல், வாழ்க்கை முறை காரணமாக நம்புவதற்கு தயக்கம் வரலாம். இரண்டாவது சான்றைக் காட்டினால் நம்பிக்கை அதிகரிக்கலாம். இரண்டாவது சான்றுக்கு.. யாமிருக்கிறோமே. இருபத்தைந்து வருடங்களை மாணவராகவும், இருபது வருடங்களை ஆசிரியராகவும் கழித்துள்ள எமக்கு கல்விச் சுழல் குறித்து ஓரளவிற்காவது தெரியும் என உறுதியாக நம்பலாம்.

காவல் துறையை விட கல்வித்துறை மோசம் எனும் பேராசிரியரின் கூற்று உண்மையா? ஆம் தோழமைகளே. எமது அனுபவத்திலிருந்து பேராசிரியரின் கூற்றை யாம் வழிமொழிகிறோம். பேராசிரியரின் கூற்றில் கிஞ்சித்தும் பிழையில்லை. நூற்றுக்கு நூறு உண்மை. நல்ல பேராசிரியா் என்பதால் எருமைமாடு என்றார். எம்மைக் கேட்டால் எருமை நல்லமாடு என்போம்.

பேராசிரியர்கள் டியூஷன் எடுப்பது உண்மையா.. சான்று வேண்டுமா? எமது கண்களால் பார்த்திருக்கிறோம். பேராசிரியர்களின் வீடுகளின்முன் நூற்றுக்கணக்கான மிதிவண்டிகள் நிற்பதை. அதிகாலை ஆரம்பித்து இரவுவரை விடாமல் டியூஷன் நடக்கும். ஷிப்ட் கணக்கு. ஒரு பேராசிரியர் வீட்டில் மட்டும் அல்ல. பல பேராசிரியர் வீட்டிற்கும் போக வேண்டும். ஒரே பாடத்தை இரு பேராசிரியர்கள் நடத்தினால், இரு பேராசிரியரிடமும் டியூஷன் செல்ல வேண்டும். கல்லூரி மாணவர்கள் தவிர பெருங்கூட்டமான பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள். அது போக நுழைவுத் தேர்வு கோச்சிங் வகுப்புகள்.

கல்லூரியில் சம்பளம் வாங்கிக் கொண்டு, உரிய பாடம் நடத்தாமல், அதே மாணவர்களை வீட்டிற்கு வரச்சொல்லி சிறப்பு வகுப்பெடுத்த இந்தப் பேராசிரியர்கள் ஆசிரியர் என்னும் பணிக்குத் தகுதியானவர்கள்தானா.

மாணவர்களுக்கு கணிதம் புரியவில்லை என டியூசன் எடுத்தார்கள், பரவாயில்லை. ஆங்கிலம் வரவில்லை. பரவாயில்லை, டியூசன் எடுத்துச் சம்பாதித்தார்கள். இயற்பியல், வேதியியல் கடினமாம்.. போய்த் தொலைகிறது. தாவரவியல், விலங்கியலுக்குமா டியூஷன் எடுப்பார்கள்? டியூஷன் எடுத்த பேராசிரியர்களெல்லாம் என்ன சாதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியுமா? எமக்குத் தெரிந்து அட்டவணை சாதியினர் இல்லை. கல்லூரியில் சாதியா? பேராசிரியர் சாதியைப் பற்றிப் பேசலாமா? தோழமைகளே.. இன்றைய தேதியில் பல்கலை, கல்லூரிகளில்தான் அதிகமான சாதிப்பேச்சும், சாதிப்பற்றும், மத விரோதமும் கொட்டிக் கிடக்கிறது, பேணி வளர்க்கப்படுகிறது என்பதை அறியுங்கள். கூறுவதும் ஒரு பேராசிரியர்தான்.

எமக்கு ஒரு பேராசிரியரை நன்கு தெரியும். பெரிய நிலக்கிழார். அதிகாலையில் எழுந்து வயலுக்குப் போய்விடுவார். ஒன்பது மணி வரை தோட்டங்களில் வேலைகள். பல நிலங்களுக்கும் ஆட்களைப் பிரித்து விடுவது, என்னென்ன வேலைகள் செய்ய வேண்டுமென அறிவுறுத்துவது, தேவைப்பட்டால்

வயிலில் இறங்கி வேலை பார்ப்பது எனப் பல வேலைகள். தாமதமாகவே கல்லூரிக்கு வருவது. கல்லூரியிலும் நண்பர்களிடம் வயல் வேலை, என்ன பயிர் செய்வது, எவ்வளவு லாபம் கிடைக்கும் எனும் பேச்சுகள். மாலையில் சீக்கிரமாகவே கிளம்பி விடுவது. இரவு பதினோறு மணி வரைக்கும் கடையில் இருப்பது. அடுத்த நாள் காலையில் வயல் வேலை. இந்தப் பேராசிரியர் எந்தப் புத்தகத்தைப் படித்தார். எதைப் படித்து மாணவர்களுக்கு வகுப்பெடுத்தார். கல்லூரிகளில் இப்படியான பேராசிரியர்களுக்குத்தான் மதிப்பும் மரியாதையும்.

கல்லூரிப் பணி முடிந்தவுடன் கக்கத்தில் பையைச் செருகிக் கொண்டு வட்டிப்பணம் வசூலிக்கக் கிளம்பிவிடும் பேராசிரியர்களைத் தெரியுமா நண்பர்களே. எங்கே நிலம் சல்லிசாகக் கிடைக்கிறது என விசாரிப்பதற்கு மட்டுமே வாயைத் திறக்கும் பேராசிரியர்களை அறிவீர்களா தோழர்களே.

சில பேராசிரியர்கள் இருக்கிறார்கள். வகுப்பு இருக்கும் போதுதான் வங்கிக்குப் போவார்கள். காய்கறிகள் வாங்கப்போகும் பேராசிரியர்கள் அனேகம். காலையில் வந்து சீட்டில் உர்கார்ந்ததும் உட்காராதுமாக டீக்குப் போகும் பேராசிரியர்களும் உண்டு. பக்கத்திலிருக்கும் தேநீர்க் கடைக்குப்போய் மணிக்கணக்கில் செலவிடும் பேராசிரியர்கள் பலருண்டு. பலர் இருக்கையிலேயே இருக்கமாட்டார்கள். எப்போதும் ரவுண்ட்ஸ்தான்.

முதுநிலை வகுப்பிற்குப்போய் பாடப்புத்தத்தை வாசிக்கும் பேராசிரியர்களை என்னவென்பது. வாசிக்கும் பேராசிரியராவது பரவாயில்லை. நிறைய பேராசிரியர்கள் முதுநிலை வகுப்பில் போய் எழுதச் சொல்லி டிக்டேட் செய்கிறார்கள். என்னத்தச் சொல்ல. முன்னர் புத்தகங்கள் குறைவு. நகலி எடுக்கும் நுட்பம் இல்லை. பேராசிரியர்கள் குறிப்புகள் எழுதி டிக்டேட் செய்தார்கள். நகலி வந்தவுடன் அதுவும் நின்றுவிட்டது. விளக்கவுரை எழுதி மாணவர்களிடம் கொடுத்தால் நகல் எடுத்துக்கொள்ளப் போகிறார்கள். தற்போது நகல் எடுப்பது நின்று போய், ஆன்ட்ராய்டு மொபைலிலேயே படமாக எடுத்துக்கொள்கிறார்கள். பெரும்பாலான மாணவர்கள் பெரும்பெரும் மொபைல்களை வைத்திருக்கிறார்கள்.

முதுநிலைக்கு ஒரு மணிநேரம் வகுப்பெடுத்தால் ஒன்றரை மணி நேரமாகக் கணக்கிடப்படுகிறது. இரண்டுமணி நேரம் வகுப்பெடுத்தால் பேராசிரியரின் பணிப்பளுவில் அது மூன்று மணி நேரமாகக் கருதப்படும். எதற்காக என்றால் முதுநிலை மாணவர்களுக்கு பாடம் நடத்துவதற்குமுன் பல்வேறு புத்தகங்களையும்

படித்து, உள்வாங்கி, பாடத்தைப் புரிந்து, மாணவர்களுக்கு விளக்க வேண்டும் என்பதற்காக. எந்தப் பேராசிரியர் படிக்கிறார்? எந்தப் பேராசிரியர் குறிப்புகள் எழுதுகிறார்?

வந்தவுடன் காலையில் என்ன சமையல் எனப் பேச ஆரம்பித்து ஒரு மணி நேரத்திற்கும்மேல் சமையல் பேச்சு நீடிக்கிறது. அடுத்து சாரி வெரி நைஸ், புதுசா எனக் கேட்டு அடுத்த இரண்டு மணி நேரத்திற்கு புடவைப் பாடம் ஓடுகிறது. வாரத்திற்கு இருமுறையாவது புடவைக்காரர்கள் வந்து விடுகிறார்கள். புடவையை எடுப்பதும், தோளில் வைத்துப் பார்ப்பதும், சிரிப்பதுமாக பொழுது போகிறது. பலகாரக்காரர் வருகிறார். வீட்டு முறுக்கு, அதிசரசம், சீடை என பேராசிரியர்களின் இடத்திற்கே வந்து விற்கிறார்கள். சமீபமாக செக்கில் ஆட்டிய எண்ணெய், ஒரிஜினல் நெய் என விற்க ஆரம்பித்திருக்கிறார்கள். சிலர் அருகேயிருக்கும் கோவில்களுக்குப் போகிறார்கள். பிராத்தனைகளுக்குப் போய் வருபவர்களும் உண்டு.

மாதம் அறுபதாயிம், எழுபதாயிரம் எனக் கொட்டிக் கொடுக்கும் அரசின் மாணவர்களுக்குப் பாடம் நடத்தாமல், ஆளுக்கு ஐம்பதாயிரம் என ஐம்பது மாணவர்களைச் சேர்த்துக் கொண்டு பேராசிரியருக்கு மணிக்கு ஆயிரம் கொடுக்கும் நீட் தேர்வு முதலாளிக்கு எவ்வளவு அக்கறையாக வகுப்பெடுக்கிறார்கள் இந்தப் பேராசிரியர்கள்.

நண்பர்களே.. கல்லூரிகளில் ஆராய்ச்சிகள் எப்படி நடக்கின்றன எனத் தெரியுமா? ஆராய்ச்சிக் கட்டுரைகள் எப்படித் தயாரிக்கிறார்கள் எனத் தெரியுமா? ஆராய்ச்சி எனும் பெயரில் அரங்கேறும் கூத்துகளைச் சொன்னால் உங்களுக்கு கோபம் வந்தாலும் வரும். எந்த ஆய்வும் செய்யாமல் ஆய்வேட்டை எழுதிக் கொடுக்கும் புத்திசாலி பேராசிரியர்கள் நிறையப் பேர் உண்டு. முனைவர் பட்ட மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதை அறிந்தால் நீங்கள் விழுந்து விழுந்து சிரிக்கக் கூடும். வகுப்பில் முதல் மதிப்பெண் எடுத்த மாணவருக்கு முனைவர் பட்ட ஆராய்ச்சிக்கு இடமில்லை. வகுப்பில் கடைசியாக வந்த மாணவர் முனைவர் பட்ட ஆராய்ச்சி செய்கிறார். பாடத்தில் எந்த அடிப்படைப் புரிதலும் இல்லாத மாணவர், எந்தக் கோட்பாட்டையும் விளங்கிக்கொள்ள இயலாத மாணவர், ஆங்கிலத்தில் மிகச் சிறிய அளவுக்குக்கூட தேர்ச்சி இல்லாத மாணவர், ஆராய்ச்சி பற்றி என்ன புரிதலைப் பெற்றிருப்பார். ஆராய்ச்சிப் படிப்புகளுக்கான வாய்மொழித்

தேர்வுகளின்போது நடக்கும் மதிப்பெண் முறைகேடுகள் உச்சம். யாரை ஆராய்ச்சி மாணவராகத் தேர்தெடுப்பது என்பதை முதலிலேயே தீர்மானித்துக் கொள்கிறார்கள். அதற்கேற்ப வேண்டியவர்க்கு பத்துக்குப் பத்தும், வேண்டாதவர்க்கு எவ்வளவு குறைக்க முடியுமா அவ்வளவு குறைத்தும் மதிப்பெண்கள் போடுகிறார்கள்.

ஆராய்ச்சி மாணவர்களிடம் பணம் வாங்கும் பேராசிரியர்களை அறிவீர்களா? கோடிக்கணக்கில சொத்து வைத்திருக்கும் பேராசிரியர் எளிமையான குடும்பத்து மாணவரிடம் ஆய்வுக் கூடத்திற்குக் கொடுக்காமலேயே ஆய்வுக்கூட ரிசல்ட் எனப் பணம் பறித்தது தெரியுமா? இளநிலை ஆராய்ச்சிக்கு இருபதாயிரம் இருந்தது, பின்னர் ஐம்பதாயிரமாகி, தற்போது ஒரு லட்சம் என பேரம் பேசப்படுவதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? முதுநிலை ஆராய்ச்சிக்கு தற்போதைய மதிப்பு இரண்டு லட்சம் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். இந்தக் கையில் இரண்டு லட்சத்தைக் கொடுத்துவிட்டு, அந்தக் கையில் ஆராய்ச்சி ஏட்டைக் கொடுக்கிறார்கள். யாம் உண்மையைத்தான் சொல்கிறோம் ஆன்றோர்களே. எம்மிடமே ஒருவர் இரண்டு லட்சம் கொடுத்தால் முழு ஆய்வேட்டையும் எழுதிக் கொடுப்பதாகச் சொன்னதுண்டு. யார் யாருக்கெல்லாம் அவர் ஆய்வேடு எழுதித் தந்து, அவர்கள் முனைவர் பட்டம் பெற்றிருக்கிறார்கள் எனவும் சில பெயர்களைச் சொன்னார். நாம் என்ன தலைப்பில் ஆய்வேடு வேண்டும் எனச் சொன்னால் போதும். முழு ஆய்வேட்டையும் தயாரித்துக் கொடுத்துவிடுகிறார்கள்.

முனைவர் பட்டத்திற்கு ஆய்வு நிறைஞர் என்கிறார்கள். அதாவது டாக்டர் ஆப் பிலாஸபி. பிலாஸபி என்றால்? உண்மை எனப் பொருளாம். ஆய்வு செய்து பல்வேறு காரணங்களை அலசி ஆராய்ந்து உண்மைகளைக் கண்டறிகிறார்களாம். உண்மையைத்தான் அறிகிறார்களா? உண்மைகள் பணத்திற்காக வளைக்கப்படுகின்றன. காசு கொடுத்து வாங்கும் உண்மைகள், உண்மைகளாக இருக்குமா தோழர்களே..

பேராசிரியர்களின் கற்பித்தலையும் ஆராய்ச்சிகளையும் எளிதாக விளங்கிக் கொள்ள ஒரு எளிய உதாரணம் சொல்கிறோம். கிராமங்களில் நூறு நாள் வேலைத்திட்டதில் எப்படி வேலை நடக்கிறது, மக்கள் எவ்வாறு வேலை செய்கிறார்கள் எனத் தெரியும்தானே. அதேதான் கல்லூரிகளிலும்.

அரசுக் கல்லூரி என்பதால் மாணவர் சேர்க்கை முறையாக நடக்கிறது. எந்தத் தவறும் நடப்பதில்லை என உறுதியாகச் சொல்லலாம். யாம் புதிதாகப் பணியில் சேர்ந்த காலங்களில் சேர்க்கையின் இறுதிப் பகுதியில் வராந்த சேர்க்கை என நடத்துவார்கள். அதில் கொஞ்சம் தவறுகள் நடக்கும். அரசியல்வாதிகளின் பரிந்துரைகள், வேண்டியவர்கள் என சிலரைச் சேர்ப்பார்கள்.

அரசு உதவிபெறும் கல்லூரிகளிலும் சுயநிதி கல்லூரிகளிலும் நடைபெறும் சேர்க்கை அத்துமீறல்கள் சொல்லி மாளாது. தமிழகத்தில் அரசு உதவி பெறும் கல்லூரிகள் அதிக எண்ணிக்கையிலிருக்கின்றன. பெரும்பாலான கல்லூரிகளில் பன்னிரெண்டாம் வகுப்பு முடிவுகள் வருவதற்கு முன்னமே சேர்க்கை முடிந்து விடுகிறது. டோக்கன் போடுகிறார்கள். எந்தவிதமான இடஒதுக்கீட்டுக் கொள்கையும் பின்பற்றப்படுவதில்லை. எப்போது போனாலும் இடமில்லை என்கிறார்கள். கூடவே இடமில்லை, எதற்கும் தாளாளரைப் பாருங்கள் என்கிறார்கள். தாளாளரோ அரசு உதவி பெறும் பாடப்பிரிவிற்கு பேரம் பேசுகிறார். இடமில்லை, இருந்தாலும் நீங்க வேண்டி விரும்பி கேட்பதால் இருக்கும் ஒரு இடத்தைத் தருகிறோம், ஒரு இருபதாயிரம் பணம் கொடுத்துவிடுங்கள் என்கிறார். பேரம் பேசி பதினைந்தாயிரத்திற்கு முடிக்கப்படுகிறது. கணிதம், இயற்பியல், வேதியியல் போன்ற பாடங்களை லஞ்சம் கொடுத்துப் படிக்க வேண்டிய நிலை.

பல கல்லூரிகளிலும் ஏராளமான சுயநிதி வகுப்புகள் நடத்தப்பெறுகின்றன. முதலில் சுயநிதிப் பிரிவுகளையே நிரப்புகிறார்கள். கிராமத்திலிருந்து வரும் படிக்காத குடும்பப் பின்னணி கொண்ட ஏராளமான மாணவ, மாணவிகள் இப்படியும் ஏமாற்றப்படுகிறார்கள். ஒரே பாடத்திட்டத்தை பல்வேறு பெயர்களில் வைத்து மாணவர்களைக் குழப்புகிறார்கள். பருவத்திற்குப் பத்தாயிரம்தான் எனவும், படித்தவுடன் வேலை எனவும் நைச்சியமாகப் பேசி அப்பாவி மாணவர்கள் தலையில் கட்டுகிறார்கள். சேர்ந்தபின் அந்த பீஸ் இந்த பீஸ் என ஏராளமான தொகையைப் பிடிங்கிக் கொள்கிறார்கள்.

தமிழ்நாட்டில் புற்றீசல்போல் முளைத்துள்ள பொறியியல் கல்லூரி மோசடிகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். ஒன்று டெக்னாலஜி. பக்கத்திலேயே இன்ஸ்டிடியுட். அருகிலேயே அட்வான்ஸ்டு இன்ஸ்ட்டிடியூட், ஒரே வளாகத்திற்குள் காலேஜ் ஆப் டெக்னாலஜி, காலேஜ் ஆப் இன்ஜினியரிங் என ஒரே குழுமமே பத்துக்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களை நடத்துகிறது. பெயரில்

சிறுமாற்றம். அவ்வளவே. பள்ளிகள், கலைக்கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், கல்வியியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் என ஒரு குடும்பமாகக் கட்டியிருக்கிறார்கள். கிலோமீட்டர்கள் கணக்கில் நீளும் பெரும்பாலான கல்லூரிகள், மலையடிவாரங்களில் கட்டப்பட்டிருப்பதன் மர்மம் என்னவோ?

கல்வியியல் கல்லூரிகளின் மோசடி தனிரகம். அத்தனையும் ஏமாற்று வேலை. கல்லூரிக்கே போக வேண்டியதில்லை. எல்லாம் காசு, எல்லாத்திலேயும் காசு. கமிஷனுக்கு பதிவேடு தயாரிக்கவில்லையா? கவலையே வேணடாம். இரண்டாயிரம் கூடுதலாகக் கொடுத்தால் போதும். கமிஷனே வேண்டாமா? அதுவும் பிரச்சினையில்லை. பத்தாயிரம் கூடுதலாகக் கொடுத்தால் போதும். பள்ளிகளில் நேரடிப் பாடம் நடத்திய அனுபவம் இல்லையா? பதற்றமே வேண்டாம். தாளாளரே நூற்றுக்கணக்கான பள்ளிகளின் முத்திரை வைத்திருப்பார். ஒரு ஐயாயிரம் கொடுத்தால் அடுத்த நிமிடத்தில் சர்டிபிகேட் ரெடியாகிவிடும். தேர்வு எழுதாமலேயே டிகிரி வேண்டுமா? தாராளமாகக் கிடைக்கும். ஒன்றிரண்டு இலக்க உரூபா இருந்தால் போதும்.

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும், கல்வியியல் கல்லூரிகளிலும் கல்லாக் கட்டியவர்கள், சமீபமாக செவிலியர் துறையிலும், மருந்தாளுனர் துறையிலும் புகுந்து விளையாடுகிறார்கள். இரண்டு இலக்க உரூபா இருந்தால் பி.பார்ம் சான்றை எளிதாகக் கைப்பற்றிவிடலாம். சான்றிதழை வாங்கிக் கொண்டு நாம் சும்மா இருந்தால் போதும். மருத்துவமனைகளே நம்மைத் தேடி வரும். நமது சான்றிதழை அவர்களிடம் கொடுத்தால் நமக்கு மாதம் ஆறாயிரத்திலிருந்து பத்தாயிரம் வரை கொடுப்பார்கள். மாதம் ஒரு நாள் அவர்கள் நீட்டிய இடத்தில் கையெழுத்து மட்டும் போட்டால் போதும். மருத்துவமனைக்காரர்கள் யாரேனும் ஒரு பெண்ணை வைத்து பார்மஸியை நடத்திக் கொள்வார்கள். நாமும் போட்ட காசை இரண்டு வருடத்தில் சுலபமாக எடுத்துவிடலாம்.

நண்பர்களே.. மருத்துவக் கொள்ளை பற்றி உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லைதானே. உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை மிகப் பெரியளவில் முன்னெடுக்கப்பட்டு வரும் காலத்தில் நாம் வாழ்கிறோம். தமிழ்நாடுதான் இதில் முதலாவது இடம் வகிக்கிறதல்லவா. அடிப்படை அறமில்லாதவர்களாக மருத்துவர்கள் மாறிவரும் சூழலில், பணம் ஒன்றையே முக்கியக் குறிக்கோளாகக்

கொண்டிருக்கும் மருத்துவமனை வணிகத்தில், உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை பெறும் வணிகமாக மாறி வருகிறது.

பல்கலை கழகங்களைப் பற்றி தெரியும் தானே. எத்தனை கோடிகள் கொடுத்து துணைவேந்தர் பதவியை வாங்குகிறார்கள் என்பதும், போட்ட பணத்தைத் திருப்பி எடுக்க என்னவெல்லாம் செய்கிறார்கள் என்பதும் நாடறிந்த உண்மையல்லவா? துணைவேந்தர்கள் ஜெயிலுக்குப் போவது நமது கல்வி முறையின் அவலத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறதுதானே.

கல்லூரிக்கே வராமல் சம்பளம் வாங்கும் பேராசிரியர்கள், பாடமே நடத்தாமல் சம்பளம் வாங்கும் பேராசிரியர்கள், வேலையே செய்யாமல் சம்பளம் வாங்கும் ஆய்வுக்கூட உதவியாளர்களை யாம் அறிவோம். கல்லூரி அலுவலகத்தில் எழுத்தராகப் பணியாற்றும் ஊழியர், தமக்கு கோப்புகள் தயாரிக்கத் தெரியாதென்கிறார். அந்த ஊழியர் வேலைக்கு வந்து பல வருடங்களாகிவிட்டது என்பது கூடுதல் தகவல். நிலுவைத் தொகைக்கு விண்ணப்பம் கொடுத்தால், அதை கணக்கிட்டு பெற்றுத்தர வேண்டிய அலுவலர், தமக்கு கணக்கீடு பண்ணத் தெரியாது என்கிறார். பேராசிரியர்களின் ஊதியம் தொடர்பான கணக்கு வழக்குகளைச் சரிபார்க்கத்தானே அரசு இந்த ஊழியரை பணியமர்த்தியிருக்கிறது. தெரியாதென்றால் எப்படி? இத்தனைக்கும் பணி மூப்புள்ளவர் அவர். இத்தனை வருடங்களாக என்ன வேலை செய்திருப்பார்? கல்லூரிக்குத் தொடர்பில்லாதவர், மற்றொரு கல்லூரி அலுவலகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர், இங்கு வந்து கணக்கீடு செய்து தருகிறார். அவருக்கு பணம் கொடுக்க வேண்டியதிருக்கிறது. இது எந்த விதத்தில் நியாயமாக இருக்க முடியும்?

கல்லூரி மாணவர்கள்? மிகுந்த ஏமாற்றத்தை உணர்கிறோம். இருபது வருடங்கள் பணிசெய்து விட்டதால், தலைமுறை மாற்றத்தைத் தெளிவாக உணருகிறோம். யாம் பணிக்கு வந்தபோது இருந்த மாணவர்கள் வேறு. தற்போதிருக்கும் மாணவர்கள் வேறு. ஏதோ வேற்றுலகவாசிகள்போல் நினைத்துக் கொள்கிறார்கள். பேராசிரியர்களுக்குரிய மரியாதை மாணவர்களிடம் இல்லை என்பதை வருத்தத்துடன் பதிவு செய்ய வேண்டியதிருக்கிறது. இளமைக்குரிய துள்ளலும், வேகமும், விளையாட்டும் இருக்கும்தான். எனினும் நடத்தை சார்ந்து நாம் வெகு தூரம் பயணிக்க வேண்டியுள்ளது.

நண்பர்களே நலமா? நலத்திற்கென்ன குறைச்சல் என்கிறீர்களா? நல்லது. காவல்துறையில் ஆரம்பித்தோம். காவல்துறையை விட கல்வித்துறை மோசமென்பதால் அதைப்பற்றி ஒன்றிரண்டு பேசியிருக்கிறோம். காவல் துறையின் மாண்புகளைப் பார்த்து விடலாமா தோழர்களே. அதற்குமுன், இன்றைய உலகம் பற்றி, இன்றைய தமிழகத்தின் மூத்த அரசியல்வாதியும், நேர்மையான பண்பாளர் எனப் பெயரெடுத்தவருமான தோழர் நல்லகண்ணு சொல்வதைக் கொஞ்சம் கேட்போமா? 02.04.2006 அன்றின் ஆனந்த விகடன் வார இதழில், தமிழ் மண்ணே வணக்கம் தொடரில் தோழரின் எழுத்து பதிவாகியுள்ளது.

தோழர் கூறுகிறார் - பதவியும், அதிகாரமும் தருகிற போதையில் தமிழக அரசியல் தடுமாறிக்கொண்டு இருக்கிறது. அதிகாரம்தான் எங்களுக்கு முக்கியம் என்று கொள்கைகளைக் குப்பையில் தூக்கி எறிய இன்று எல்லாத் தரப்புமே தயார்.

குடும்ப அரசியல், வாரிசு அரசியல், சாதி அரசியல், மத அரசியல், லஞ்ச அரசியல், ஊழல் அரசியல், வன்முறை அரசியல் என்று அரசியலின் ஓட்டைகள் இப்போது அதிகமாகிக் கொண்டே வருகின்றன.

உலகின் மிகச் சிறந்த, மிகப் பெரிய சனநாயக நாட்டுக்குச் சொந்தக்காரர்கள் நாம். நாம் கனவு கண்ட தேசம் இன்னும் நம் கைய் கூடி வரவில்லை. காரணம், தொண்டு செய்வதற்கான களமாகப் பார்க்கப்பட்ட அரசியல், இன்று வளம் கொழிக்கிற தொழிலாக மாறியிருக்கிறது. தேர்தல் என்பது இலவசங்களை அள்ளி வீசி இரை தேடும் வேட்டைக் களமாக இருக்கிறது.

குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும் திருட்டு உலகைத் தீர்மானிக்கவா இத்தனைப் போராட்டங்கள்? இத்தனை தியாகங்கள்? நம் நிகழ்கால அரசியலைப் பற்றி வருங்காலத் தலைமுறை என்ன பேசும்? சுய நலங்களுக்காக நாட்டை, மக்களை, பதவிகளை, விலைபேசியவர்களாக வருங்காலம் நம்மைக் குற்றம் சாட்டினால் என்ன பதில் வைத்திருக்கிறோம்?

சினிமாவில் நடித்ததை மட்டுமே தகுதியாகக் கொண்டு இன்று மக்கள் பிரதிநிதிகளாக, முதலமைச்சர்களாக ஆகிவிடத் துடிக்கிறார்கள். அரசுக்குத் தலைமையேற்பது எவ்வளவு பொறுப்புள்ள காரியம் என்பது இப்போது ஆள்பவர்களுக்கும் தெரியவில்லை. ஆள நினைப்பவர்களுக்கும் தெரியவில்லை.

தகுதி அடிப்படையில் இல்லாமல், சாதி வாரியாகத் தொகுதிகள் ஒதுக்கப்படுகின்ற அவலம் நடக்கிறது. அமைச்சர் பதவி முதல் பல்கலைக்கழக துணைவேந்தர் பதவி வரை எல்லாவற்றையும் தீர்மானிப்பது சாதி அரசியல்தான்.

ஒழுகாத வீடு, கிழியாத உடை, சூடான உணவு மூன்றும் ஒரு மனிதனுக்கு அடிப்படைத் தேவை. அதை சாதாரண குடிமகனுக்கும் உருவாக்கித் தருகிற சமூகப் பொறுப்பு அரசியல்வாதிகளுக்கு உண்டு.

அரிசி விலை ஏறிக்கொண்டே போவதும், கார்விலை குறைந்து கொண்டே வருவதும் ஆரோக்கியமான நாட்டுக்கு நல்ல அறிகுறியே அல்ல. ஏழைகள் மேலும் ஏழைகளாகவும், பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவும் இருந்தால் ஆட்சியாளர்கள் சுயநலங்களுடன் இருக்கிறார்கள் என்று அர்த்தம்.

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஒரு ஏவுகணை தயாரிக்கிற செலவில் ஒரு மாநிலத்திற்கான அடிப்படைக் கல்வியை எல்லோருக்கும் வழங்கிவிட முடியும் என்பது, எப்போது நம் புத்தியில் உறைக்கப் போகிறது.

ஒரு சமூகத்திற்கு அரசியல்தான் ஆணிவேர். அரசியல் அசிங்கமானால் நாடே அசிங்கமானதாகத்தான் அர்த்தம். வாருங்கள் தோழர்களே, எல்லோரும் இறங்கி சாக்கடையைச் சுத்தம் செய்வோம். அதை யாராவது செய்வார்கள் என்று இருந்து விடாமல் சமூகம் அசிங்கமானதற்கு நாமும் ஒரு காரணம் என்று, மனமுவந்து நம் தவறுகளை ஏற்றுக்கொள்வோம்.

சனநாயகத்தில் மக்கள்தான் கண்ணாடி அவர்கள் எப்படி இருக்கிறார்களோ அப்படித்தான் அரசியலும் இருக்கும்.

நம் எதிர்காலத்தைத் தீர்மானிக்க, நமக்கான உலகத்தை உருவாக்க... வாருங்கள் தோழர்களே.

நீண்ட நெடிய வாழ்பனுவம் கொண்ட தோழரல்லவா. சரியாகத்தான் சொல்கிறார். தோழர் சொல்லியே பத்து வருடங்களுக்கும் மேலாகிவிட்டது. இந்த பத்து வருடங்களில் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது என்பதை அறிவோமல்லவா நண்பர்களே.

காவல் துறைக்கும் அரசியல்வாதிகளுக்கும் உள்ள தொடர்பை நாம் அறிந்திருக்கிறோமா தோழமைகளே.. தமிழ்நாட்டின் முதல்வர்கள் காவல்துறையை

வேறுயாரிடமும் விடுவதில்லை. அரசியல்வாதிகளுக்கு இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் ஒரு குட்டம், வட்டத்திற்குக்கூட காவல்துறையில் எவ்வளவு மதிப்பும், செல்வாக்கும் இருக்கிறதென்பதை அறிந்திருக்கிறோமா. காவல் நிலையங்களில் கறை வேட்டிகளின் ஆதிக்கத்தை அறிவோமல்லவா.

காவலா்கள் திருடனைப் பிடிக்கிறாா்களா நட்புகளே.. எவ்வளவு பேரைத்தான் பிடிப்பாா்கள். எங்கும் திருட்டு.. எதிலும் திருட்டு என்னும் காலத்திலல்லவா நாம் வாழ்ந்து வருகிறோம். காவலா்கள் எத்தனை திருடா்களைத்தான் பிடிப்பாா்கள். காவலா்களே திருடா்களாக இருந்தால்.. கேள்விப் பட்டிருககிறீா்களா நண்பா்களே.. பாா்த்திருக்கிறீா்களா தோழா்களே..

யாம் சாலையோரம் இளநீா் குடிக்கிறோம். மிடுக்கான சீருடை அணிந்த துடிப்பான ஏட்டய்யா வந்து நிற்கிறாா். இளநீா்க்காரா் ஐம்பது உருபா எடுத்து நீட்டுகிறாா். கொஞ்சம்கூட வெட்கப்படாமல், அதை வாங்கி பைக்குள் போட்டுக் கொள்கிறாா். இளநீா்க்காரா் பெரிய இளநீராக பாா்த்து இரண்டு வெட்டிக்கொடுக்கிறாா். அது அய்யாவுக்காம்.

எளிய அந்த இளநீா்க்காரரிடம் யாம் பேச்சுக் கொடுக்கிறோம். அதயேன் கேக்குறீங்க சாா், தினமும் ஐம்பது உருபா மாமூல். நான்கு இளநீா் ஓசி. மாதாமாதம் ஆயிரத்து ஐநூறு உருபா. அதுபோக அப்பப்ப பெட்டி கேஸ்ல உள்ளே போயிட்டு வரணும். ஏன் நீங்க முடியாதுன்னு சொல்ல வேண்டியதுதானே. இந்த இடத்துல விற்க முடியாது சாா், இங்க மட்டும் இல்ல, வேற எங்கேயும் விற்க முடியாது.

இசுகாட்டுலாந்து யாா்டை விட தமிழ்நாட்டுப் போலீசு உயா்ந்ததாக இருந்ததாமே. பெட்டிக் கேஸ் என்றால் தெரியும்தானே அறிஞா்களே. சிறு சிறு குற்றங்கள். தவறு செய்தவரைப் பிடிக்காமல் விட்டு விட்டு, அப்பாவி இளநீா்க்காரா்களையும், ரோட்டோர பானிபூரிக்காரா்களையும், தள்ளுவண்டிக்காரா்களையும் குற்றம் புரிந்ததாக போலியாகக் காட்டி வழக்குப் பதிந்து ஜெயிலுக்கு அனுப்பும் நமது காவல்துறையை என்னவென்பது. இதற்கு அதிகாரிகளும் உடந்தை. வழக்குரைஞா்களும் கூட்டாளிகள். நீதிபதிகள்? அட, அவா்கள் இன்றைக்குக் காலையில்தானே வேற்றுலகத்திலிருந்து வந்தாா்கள். வந்து இறங்கி அப்படியே நீதிமன்றத்திற்குள்போய் அமா்ந்து விட்டாா்கள். இறங்கி இருக்கைக்குப் போகும் தூரம் வரையிலும்கூட, அவா்களது நீதிதேவதையைப் போல் கண்களைக் கட்டிக் கொண்டுதான் போனாா்கள். சமூகத்தில், நாட்டில் என்ன

நடக்கிறது என்பதைக் கிஞ்சித்தும் அறியாதவர்களா நம் நீதிபதிகள்? வழங்கப்படும் தீர்ப்புகளைப் பார்த்தால் அப்படித்தான் தெரிகிறது. கண்களை மூடிக்கொண்டு வாழ்கிறார்கள் போலும். நீதிமன்றங்களையும், நீதியரசர்களையும், தீர்ப்புகளையும் விமர்சிக்கக் கூடாதாமே. எதற்கு வம்பு. நீதிமன்ற அவமதிப்பு வந்துதொலைக்கப் போகிறது. ஞானமுள்ளவர்களே, கையூட்டுப் பெறும் நீதியரசர்கள் பற்றித் தெரியுமா? நீதியும் நேர்மையும், தர்மமும் உடைத்து நொறுக்கப்படுவதைக் கண்டிருக்கிறீர்களா? குழி தோண்டி புதைக்கப்பட்ட வரலாறு கண்டதுண்டா? சாமானியருக்கு ஒரு நீதி, எளியவருக்கு ஒரு நீதி, பணம் படைத்தவர்களுக்கு ஒரு நீதி, அரசியல்வாதிகளுக்கு ஒரு நீதி என எத்தனை எத்தனை நீதிகள் உள்ளதென அறிவீர்களா நண்பர்களே..

குழந்தைகளோடு பானிபூரிக் கடையில் நின்று கொண்டிருக்கிறோம். சைரன் வைத்த கார் சர்ரென வருகிறது. சற்று தள்ளி நிற்கும் வண்டியைப் பார்த்து கடைக்காரர் பதற்றமாகிறார். கல்லாப்பெட்டியைத் திறந்து நூறு உரூபா எடுத்து கொண்டு ஓடுகிறார். திருடர்களிடமிருந்தும், களவாணிகளிடமிருந்தும், கொள்ளையர்களிடமிருந்தும், கொலைகாரர்களிடமிருந்தும் மக்களைக் காக்கும் காவல்துறை, நூறு உரூபா பெற்று கொண்டு, அடுத்த கடை எங்கிருக்கிறது எனத் தேடி சீறிப் பாய்ந்து செல்கிறது. உரூபாவைக் கொடுத்துவிட்டு, புன்சிரிப்போடு கடைக்காரர் வருகிறார். அவரைப் பொருத்தவரை இன்றைய தொல்லை தீர்ந்தது. இனி இரவுவரை நிம்மதியாகத் தொழில் செய்யலாம். தினமும் நூறு உரூபாயா? ஆமா சார், டெய்லி நூறு அழணும். மாசக் கடைசில மொத்தமா மூவாயிரம் கட்டிடணும்.

எமது குழந்தைகளுக்கு நம்மூர் பானிபூரிக் கடைகளைவிட வடக்கத்தியர் கடைகள்தான் பிடித்திருக்கிறது. ஒரு கடைமுன் நின்று கொண்டிருக்கிறோம். சிறு பையன் பானிபூரி கொடுக்கிறான். காவலரின் வண்டி அருகே வந்து நிற்கிறது. பையன் இருபது ரூபாய் நீட்டுகிறான். வண்டி அருகிலிருக்கும் பழக்கடையை நோக்கிச் செல்கிறது. எமக்கு இந்தி தெரியாது. பிள்ளைகளிடம் தினமும் கொடுக்கணுமா எனக் கேட்கச் சொல்கிறோம். அவர்கள் வெட்கப்படுகிறார்கள். பனிபூரி தின்று கொண்டிருக்கும் இந்தி தெரிந்த ஒருவர் கேட்டுச் சொல்கிறார். பையன் கூலிக்கு வேலை செய்கிறானாம். அவனைப் போலவே நிறையப்பேர் இருக்கிறார்களாம். ஒரு நாளைக்கு சம்பளம் நானூறு ரூபாயாம். தள்ளுவண்டி, பூரி என எல்லாமே முதலாளி கொடுத்துவிடுவாராம். காவல்துறை மாமூலை

முதலாளியே மொத்தமாகக் கொடுத்து விடுவாராம். இப்போது வாங்கியது பையன் கணக்கில் போகுமாம். கொடுக்காவிட்டால் கடையை எடு என மிரட்டுவார்களாம்.

நண்பர்களே, காவல்துறை தனி ராஜாங்கத்தையே நடத்துகிறது என்பதை அறிவோமல்லவா? கோயம்புத்தூர் போன்ற மாநகராட்சிகளில் நிர்வாகத்தைக் கவனிக்கவென்றே மாநகராட்சி இருக்கிறதுதானே. மாநகராட்சிக்காரர்கள் என்னவெல்லாம் செய்கிறார்கள், எப்படியெல்லாம் லஞ்சமும், ஊழலும் தலைவிரித்தாடுகிறது, அரசியல்வாதிகள் மாநகராட்சிக்குள் புகுந்து எதையெல்லாம் சுருட்டுகிறார்கள் எனச் சொன்னால்.. சொல்லிக்கொண்டே இருக்கவேண்டியதுதான் நண்பர்களே. தினமலர் தினமும் செய்தி வெளியிடுகிறது. ஆவின் அராஜகம்.. ஆவின் அத்துமீறல்.. நித்தமும் செய்தி. ஆனாலும் நித்தமும் புதிது புதிதாக பெட்டிகள் முளைத்துக்கொண்டே இருக்கின்றன. முக்கியச் சாலையின் நிறுத்தமொன்றில் அருகருகே இரு ஆவின் பாலகங்கள் வைத்திருக்கிறார்கள். ஒரு பத்து மீட்டர் இடைவெளிகூட இல்லை. ரோடெங்கும் கடைகள். சாலையெங்கும் கடைகள். வழியெங்கும் கடைகள். ஆக்கிரமிப்புகள், அத்துமீறல்கள், அராஜகங்கள். அனைத்தும் விதிமீறல். முக்கியச் சாலையொன்றின் முக்கிய சந்திப்பில் ஒரு துணிக்கடை வைத்திருக்கிறார்கள், முதலில் ஞாயிறு மட்டும் கடை விரித்தார்கள். அதுவும் சிறிய அளவில், எமக்குத் தெரிந்து ஒரு பொட்டலமாகக் கட்டி வந்து கடையை விரித்தார்கள். ஒரு பொட்டலம் குறுகிய காலத்திலேயே இரண்டு மூன்றானது. பின்னர் குட்டியானையில் கொண்டு வந்து இறக்கினார்கள். தினமும் கடை பரப்பினார்கள், தற்போது பாதிரோட்டை அடைத்துக்கொண்டு, பெரிய கடையாக மாற்றிவிட்டார்கள். வியாபாரமும் அமோகமாக நடக்கிறது. ஒரு பேருந்து நிறுத்தத்தில் சிறு ஆவின் இருந்தது. அதை இப்போது பெரிய பேக்கரியாக மாற்றிவிட்டார்கள். உள்ளேயே வீடும் இருக்கிறது. அனைத்தும் சாலையின் ஓரமுள்ள பொது இடத்தில். தண்ணீர், மின்சாரம் என அனைத்தும் ஜோராகக் கிடைத்துவிட்டது. ஆக்கிரமிப்புக் கட்டிடத்துக்கு மின்சார இணைப்பு எப்படிக் கொடுத்தார்கள் தோழர்களே?

எங்கும் வணிகம், எதிலும் வணிகம், எல்லாவற்றிலும் வணிகம், எப்போதும் வணிகம். எல்லோரும் வணிகர்கள். இன்று சட்டென பணக்காரராக ஆகச் சிறந்த வழி வணிகராக மாறுவதுதான். கொள்ளை லாபம். கொள்ளையோ கொள்ளை லாபம். தந்திர வணிகம், மந்திர வணிகம், யந்திர வணிகம் எல்லாம் பழங்கதையாகி, தற்போது ஊக வணிகம் வந்து விட்டது. பொருளை யாருமே பார்க்காமல் விற்பவர்

விற்கிறார், வாங்குபவர் வாங்குகிறார். பணம் உடனே கிடைத்து விடுகிறது. உலக மக்கள் அனைவரையும் வணிகத்தின் பின், பொருட்களின் பின்னால் ஓட வைத்துவிட்டார்கள். பொருட்கள் இல்லையென்றால் வாழவே முடியாது எனும் நிலைமைக்கு மக்களைத் தள்ளிவிட்டு விட்டார்கள். மீள்பது சுலபமல்ல. சாத்தியமா எனத் தெரியவில்லை. வணிகம் முழுக்கப் போலியாகி விட்டது. எல்லாப் பொருட்களிலும் போலிகள்.

போலி போலீஸைப் பார்த்திருக்கிறீர்களா நண்பர்களே.. பார்த்தால் எது நிஜம், எது போலி என வேறுபாடே தெரியாதாமே. காவலர் சீருடையில் ரோந்து போகிறார்களாம். வருவர் போவோரை மிரட்டி பணம் பிடுங்குகிறார்களாம். நெடுஞ்சாலைகளில் வாகனங்களை நிறுத்தி நிஜபோலீசு போல் மாமூல் வாங்குகிறார்களாம். நிசமான போலிசு போல் வாகனமும் வைத்திருக்கிறார்களாமே. விரைவில் காவல் நிலையங்களையும் திறப்பார்கள். திறப்பு விழாவுக்கு முக்கிய அரசியல்வாதிகளையும், அதிகாரத்திலிருப்பவர்களையும் அழைத்தாலும் ஆச்சரியமில்லை. எதற்கும் ஒரு கிளுகிளுப்பான நடிகையை அழைப்பது கூடுதல் சிறப்பு. போலி காவல் நிலையத்திற்குக் கூட்டமும் களைகட்டும்.

நாட்டில் எத்தனையாயிரம் போலிகள், எதிலெல்லாம் போலிகள் எனத் தெரியுமா அறிவுடையவர்களே? போலி பல்கலைக்கழகங்கள் இருப்பது ஏற்புடையதே. கல்வியை கடைச்சரக்காக்கி விட்டு, அதில் அசலை எதிர்பார்த்தால் எப்படி? கல்வி வணிகம்தான் இன்று பணங்காய்ச்சி மரமாக இருக்கிறது. கல்வி வியாபாரிகளே இன்று அனைத்திலும் மதிப்பானவர்கள்.

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு நாட்டிலுள்ள போலி பல்கலைக்கழகங்களின் பட்டியலை வெளியிடுகிறது. அங்கு சேரவேண்டாமெனவும், பெற்றோரும் மாணவரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமெனவும் அறிக்கை மூலம் கேட்டுக் கொள்கிறது. இயல்பாக எழும் கேள்வி, போலிப் பல்கலை எனத் தெரிந்தபின் அதை இடித்துத் தள்ளவேண்டியதானே. அதுதான் முடியாது நண்பர்களே. எல்லாம் அரசியல். அனைத்தும் அரசியல்வாதிகளால் தீர்மானிக்கப்படுகிறது. இன்று அரசியல்வாதிகள்தான் அத்தனை கல்வி நிறுவனங்களையும் நடத்துகிறார்கள். அவர்களே இன்றைய கல்வித் தந்தைகள். அவர்களுக்கு எது தேவையோ அதற்கேற்ப சட்டங்களை இயற்றுவார்கள். திருத்துவார்கள். நீக்குவார்கள். தளர்த்துவார்கள். வளைப்பார்கள். வாங்குவார்கள்.

ஒடிப்பார்கள். கிடப்பில் போடுவார்கள். முடக்குவார்கள். தேவையெனில் ஒரே நாளில் சட்டத்தை அறிமுகம் செய்து, அவைகளில் இயற்றியோ, அவசரச் சட்டமாகவோ ஒரே நாளில் அமல்படுத்தவும் செய்வார்கள்.

போலி மருத்துவர்கள், போலி மருத்துவமனைகள், போலி மருந்துகள், போலி அறுவைச் சிகிச்சைகள், போலி ஆவணங்கள், போலி உபகரணங்கள், போலி பில்கள், போலி மருத்துவப் பரிசோதனைகள், போலி மாணவர்கள், நர்சுகள் அடேங்கப்பா.. உயிர் காக்கும் மருத்துவத்துறையில்தான் எவ்வளவு போலிகள்.

யாம் சமீபத்தில் ஒரு மருத்துவமனைக்குச் சென்றிருந்தோம். கணவர் சேர்மன், மனைவி மேனேஜிங் டைரக்டர், மகள்கள் டைரக்டர்கள், மருமகன்கள் சீப்கள். ஒரு ஊரில் ஆரம்பித்த மருத்துவமனை பல ஊர்களில் கிளைபரப்பி வளர்ந்திருக்கிறது. சந்தைக்கடைக் கூட்டமாவது பரவாயில்லை. கூட்டம் முட்டி அலை மோதுகிறது. இரண்டு மணிநேரம் காத்திருந்தும் மருத்துவரைப் பார்க்க முடியவில்லை. இத்தனைக்கும் முதல் நாளே முன்னேற்பாடு வாங்கியே சென்றோம்.

தமிழக மருத்துவத் துறையின் அலட்சியப் போக்கையும், மருத்துவமனைகளின் உதாசீனத்தையும், மருத்துவர்களின் மனப்பாங்கையும் எழுத ஆரம்பித்தால் எழுதித் தீராது. மருத்துவர்களுக்கு அரசியல்வாதிகளே பரவாயில்லை. கொள்ளையோ கொள்ளை. பகல் கொள்ளை. உடல்நலமாக வாழவேண்டும், நீண்டகாலம் வாழவேண்டும் எனும் மக்களின் ஆசையைப் பணமாக மாற்றுவதில் மிகச் சமர்த்தர்களாக இருக்கிறார்கள். மருத்துவர்களுக்கு மட்டும் எல்லாம் தெரியும், மற்றவர்களுக்கு ஒன்றுமே தெரியாது எனும் மனநிலை எப்படி வந்தது? மகன் விரலில் வலிக்கிறது என்கிறான். கால்பந்து விளையாடுவதால் ஏதேனும் அடிபட்டிருக்கும் சரியாகிவிடும் என்கிறோம். இரண்டாவது நாளும் சொல்கிறான். விரலில் வீக்கம் இல்லை. தாங்கமுடியாத வலி ஒன்றும் இல்லை. விரலை நாலாபக்கம் திருப்ப முடிகிறது. இருந்தும் பையனின் மன திருப்திக்காக எலும்பு மருத்துவரைப் பார்க்கலாம் என அழைத்துச் செல்கிறோம். சோதித்து பார்த்த மருத்துவர் எக்ஸ் - ரே எடுக்க வேண்டும் என்கிறார். சரி என்றோம். அப்படியே ஒரு பிளட் டெஸ்ட் செய்துடுங்க. இரத்த சோதனை எதுக்கு டாக்டர்? தொட்டுப் பார்த்தா சூடா இருக்கு. ஏதாவது இன்ப்ளமேசன் இருந்தாலும் இருக்கும். பிளட் டெஸ்ட்ல என்னென்ன சோதனை செய்யணும் டாக்டர். என்ன இப்படிக் கேக்குறீங்க?

வெள்ளையணு, சிவப்பணு, ஹீமோ குளோபின்னு நிறைய இருக்குல்ல டாக்டர், மொத்தமா எடுக்கணுமா இல்ல ஸ்பெசிபிக்கா எடுக்கணுமா டாக்டர்.

நீங்க என்ன படிச்சிருக்கீங்க? எங்க வேலை பாக்குறீங்க? எங்க அப்பா காலேஜ் புரபசர். சுவாலஜி டிபார்ட்மெண்ட். அதான். படிச்சவங்கன்னாலே டாக்டரை மதிக்க மாட்டீங்க. இதே பெரிய ஆஸ்பிட்டல் போயிருந்தீங்கன்னா சொல்றதெல்லாம் கேட்பீங்க. இல்ல டாக்டர், தெரிஞ்சுக்குறதுக்குத்தான் கேட்டோம், பரவாயில்லை டாக்டர், எழுதிக் கொடுங்க டெஸ்ட் எடுத்துரலாம். டெஸ்ட் எடுத்துட்டு வந்து ஒரு கிளிப் பேன்டேஜ் ஒண்ணு போட்டுக்குங்க. சரிங்க டாக்டர். டெஸ்டு எடுக்குற லேப் பக்கத்திலேதான் இருக்கு. அங்கதான் எடுக்கணும். ஓகே டாக்டர்.

கல்லூரி மைதானத்தில் மட்டைப்பந்து விளையாடுகிறோம். பேட்ஸ்மேனை அவுட்டாக்கும் மும்முரத்தில் ஒரு பையன் எறிந்த பந்து எமது மகளின் முன்கையில் பட்டுவிட்டது. டென்னிசு பந்துதான். வலிக்கிறதென்று ஒரே கத்து. தண்ணீர் ஊற்றி ஒத்தடம் கொடுத்தோம். கையில் வீக்கமில்லை. சிறிது நேரத்திலேயே வலி குறைந்து விட்டது. ஆனாலும் மகளுக்குச் சமாதானம் ஆகவில்லை. இரண்டு மூன்று முறை மகள் சொன்னதால், சரி, மருத்துவர் ஒன்றுமில்லை எனச் சொன்னால்தான் சமாதானமாவார் என எலும்பு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். மருத்துவரைப் பார்க்கும் முன்னரே நானூறு ரூபாய் கட்டச் சொன்னார்கள். முதலில் ஒரு மருத்துவரைப் பார்த்தோம். வடக்கத்திய மருத்துவர். என்ன நடந்தது எனச் சொல்லிப் புரிய வைக்கும்முன் பெரும்பாடு பட்டுவிட்டோம். கையைத் தூக்கிப் பார்த்து, அசைத்துப் பார்த்து, திருகிப் பார்த்து, மடக்கிப் பார்த்து பயங்கரமாக ஆய்வு செய்தார். அடிபட்டவர் பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு பேசாமல் இருக்கிறார். வலிக்கிறது, இங்கே வலிக்கிறது என ஒன்றுமே சொல்லவில்லை. எக்ஸ் - ரே எடுத்திருங்க என்றார். எக்ஸ் - ரே அவசியமா டாக்டர். வீக்கம் இல்லை, வலியும் குறைஞ்சிட்ட மாதிரி தெரியுது.

பெரிய டாக்டரிடம் அழைத்துச் செல்கிறார்கள். இங்கும் அதே சோதனைகள். பெரிசா ஒண்ணும் இருக்கிற மாதிரி தெரியல. எதுக்கும் எக்ஸ் - ரே எடுத்துப் பார்த்துடுவோமே. சரிங்க டாக்டர்.

ரெண்டு எக்ஸ்-ரே எடுக்கச் சொல்லியிருக்காங்க, போய் பணம் கட்டிட்டு வாங்க. பில் ஆயிரத்து இருநூறு உரூபா. அரைமணி நேரம் கழித்து பெரிய டாக்டர் கூப்பிடுகிறார். எக்ஸ் - ரே நல்லாயிருக்கு, ஒண்ணுமே இல்லை. எதுக்கும் நைட்டு

தூங்கப் போறப்ப ஐஸ் ஒத்தடம் கொடுங்க. குட்டி உனக்கு ஒண்ணுமே இல்லை. சரியாய்டுச்சு. தேங்க்யூ டாக்டர்.

கையில் டென்னிஷ் பந்து பட்டதற்கு ஆயிரத்து அறுநூறு உருபா செலவா. அனுபவமான ஒரு மருத்துவரால் கையைப் பார்த்தே, கையின் அசைவுகள் மூலமே ஒன்றுமில்லை அல்லது பாதிப்பு இருக்கிறது என்பதைக் கண்டறிந்துவிட முடியாதா. அனுபவம் என்பதன் அர்த்தம்தான் என்ன?

எல்லா ஹாஸ்பிட்டல்லேயும் நூற்றைம்பது உருபா கன்சல்டன்சி பீஸ் வாங்குறாங்க, நீங்கென்ன நானூறு உருபா வாங்குறீங்க. இங்க ஒரு முறைதான் பீஸ் வாங்குவோம். நீங்க மூணு, நாலு முறை வந்து பார்த்துக்கலாம். ரிவ்யூக்கு பணம் வாங்கமாட்டோம்.

நாங்க மறுபடியும் இந்த ஆஸ்பிடலுக்கு வரணும்னு அவசியம் இல்லை. எங்கக்கிட்ட எதுக்கு முன்னாடியே நானூறு ரூபா வாங்குறீங்க. ஹாஸ்பிட்டல் ரூல்ஸ் அதுதான். நாங்க ஒண்ணும் பண்ண முடியாது.

எமது இரு குழந்தைகளும் சிறுபிள்ளைகளாக இருந்த காலத்தில் மருத்துவர்களோடும், மனைகளோடும் மல்லுக்கட்டிய கதைகளெல்லாம் சொன்னால் சொல்வது நிற்காது. சிறிய, நடுத்தரமான எந்த மருத்துவமனையிலும் பயிற்சி பெற்ற செவிலியர்கள் இருப்பதே இல்லை. ஆனால் ஆவணப்படி யாராவது ஒரு செவிலியின் சான்றிதழ்களைக் காட்டி முறைகேடாக அனுமதி வாங்கியிருப்பார்கள். வரவேற்பரையிலும், டோக்கன் கொடுக்கவும், தொலைபேசி பேசவும் ஒரு பெண் இருப்பார். இந்தப் பெண்ணுக்கு, அவரே பெரிய மருத்துவர் போன்று நினைப்பு இருக்கும். சொல்லும் பதில்களில் பெரிய அலட்சியம் இருக்கும். டாக்டர் குழந்தையைப் பரிசோதிக்கும்போது, இந்தப் பெண்ணும் கூடவே இருப்பார். டாக்டர் மருந்தின் பெயரைச் சொல்லி அந்தப் பெண்ணைத்தான் ஊசி போடச் சொல்வார். நமக்கு பகீர் என ஆகிவிடும். இந்தப் பெண்ணை எப்படி டாக்டர் ஊசிபோடச் சொல்கிறீர்கள் எனக் கேட்க முடியுமா? சொன்னால், அப்படித்தான், இஷ்டம்னா பாரு இல்லைன்னா வேற டாக்டரப் பார்த்துக்க என்றுதான் பதில் வரும்.

ஒருமுறை ஒரு மருத்துவரிடம் குழந்தையைத் தூக்கிச் சென்றிந்தோம். மருத்துவரின் பேச்சையும், அங்கிருந்த சூழ்நிலையையும் பார்த்து, இவர் போலி

மருத்துவா் என நினைத்து குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்துவிட்டோம். அந்த மருத்துவருக்கு பயங்கர அதிர்ச்சி. அதை விட எமது மனைவிக்கு.

நண்பா் ஒருவரின் பரிந்துரையின் பேரில் ஒரு மருத்துவரிடம் குழந்தையைக் கொண்டு சென்றோம். கூட்டமான கூட்டம். மருத்துவரைப் பார்க்க அடிதடி இல்லாத குறைதான். மருத்துவரின் இருபக்கமும் பெற்றோா் குழந்தைகளோடு உட்கார்ந்திருக்கிறோம். எமது குழந்தையைப் பார்த்துக் கொண்டே அடுத்த குழந்தையையும் பார்க்கிறார். ஒரே நேரத்தில் இருவருக்கும் மருத்துவம் பார்க்கிறார். நாம் எப்படா எந்திருப்போம் என நமக்கு பின்னால் மற்றொருவா் நிற்கிறார்.

சமீபத்தில் மூக்கடைக்கிறது என ஒரு மருத்துவரிடம் போனோம். இப்போதெல்லாம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் மருத்துவமனைப் பெயரோடு, ஆராய்ச்சி மருத்துவமனை என்றே பலகைகள் வைத்திருக்கிறார்கள். ஒரு வேளை நீங்கள் இதுவரை கவனிக்காமல் இருந்தால் கவனித்துப் பாருங்கள் நண்பா்களே. மெடிக்கல் ஹாஸ்பிட்டல் அண்ட் ரிசா்ச் சென்ட்டராம். எந்த ஹாஸ்பிட்டலில் என்னத்தை ஆராய்ச்சி செய்கிறார்கள் என்பது அவா்களுக்கே வெளிச்சம். ஒவ்வொரு மருத்துவமனையும், அடுக்குமாடிக் குடியிருப்பு போன்றும், நட்சத்திர விடுதி போன்றும் இருக்கிறது. உள் அலங்காரமும், தரை அலங்காரமும், ஆடம்பரமான விளக்குகளும் நட்சத்திர விடுதி தோற்றது போங்கள். மருத்துவமனைகளில் ஏகப்பட்ட பணியாளா்கள் வைத்திருக்கிறார்கள். ஆடம்பரமான தோட்டங்களை வைத்திருக்கிறார்கள். விலையுயா்ந்த கண்ணாடிகள். இதற்குண்டான பணமெல்லாம் மருத்துவமனைக்கு வருபவா்களிடமிருந்தே வசூல் செய்கிறார்கள். நாம் போவது உடல் நலம் சரிசெய்வதற்கு. பூங்காவிற்கும், அழகு ஓவியங்களுக்கும் எதற்காகப் பணம் கொடுக்க வேண்டும். நிா்வாகத்தாா் கைய் காசைப் போட்டா இதெல்லாம் செய்கிறார்கள்?

ஒரு கண் மருத்துவமனைக்கு போனால் வந்திருப்பது கண் ஆஸ்பத்திரிக்கா அல்லது இந்திர லோகத்திற்கா எனத் திகைப்பு வருகிறது. அழகிய சுந்தரிகள் அங்குமிங்கும் நடந்து கொண்டே இருக்கிறார்கள். அழகான உடையில், வித்தியாசமான சிகை அலங்காரங்களில், ஒய்யாரமான பெண்களாக இருக்கிறார்கள். பெரும்பாலும் மலையாளத்துப் பெண்கள். கண்பரிசோதனைக்கு ஒரு பத்துப் பேர் உட்கார்ந்திருக்கிறோம். சுந்தரிகளோ இருபது முப்பது பேர் இருக்கிறார்கள்.

ஈ.என்.டி மற்றும் ஆராய்ச்சி மருத்துவமனையில் மூக்கடைப்புக்கு எண்டோஸ்கோபி செய்தார்கள். ஒரு டியூப்பை மூக்கிற்குள் விட்டு வெளியே எடுத்தார்கள். பில்போடும் போதுதான் தெரிந்தது அதற்கு முன்னூறு ரூபாய் என்று. எக்ஸ் - ரே எடுத்தோம். பிளட் டெஸ்ட் எடுக்கச் சொன்னார்கள், பிளட் டெஸ்ட் வந்தபின்தான் தெரிந்தது அனைத்தும் சாதாரணமாகச் செய்யக் கூடியவை. தனித்துவமான எது தொடர்பாகவும் செய்யவில்லை. மூக்கடைப்பிற்கு லேசர் அறுவைச் சிகிச்சை இருக்கிறதென்றும், அதற்கு அறுபத்தைந்தாயிரம், மருத்துவமனையில் இரண்டு நாள் தங்கும் செலவு உட்பட மொத்தம் ஏழுபத்தைந்தாயிரம் ஆகும் என்றார்கள். காப்பீடு இருக்கிறதல்லவா, சுலபமாகப் பண்ணிவிடலாம் எனவும் தேறுதல் வார்த்தைகள் சொன்னார்கள். மருத்துவர் கட்டணம் 300, அக நோக்கிக்கு 300, ஆய்வுக்கூடச் சோதனைக்கு 235, எக்ஸ் - ரே 150 ஆக மொத்தம் 985 உரூபா. மருந்து 305 உரூபா. மருத்துவர் ஒரு மாதத்திற்கு மருந்து வாங்கச் சொன்னார். யாம் இப்போதைக்கு பத்து நாட்களுக்கு வாங்கிக்கொள்கிறோம் என மருந்தாளரிடம் சொல்லி குறைவாக வாங்கிக் கொண்டோம்.

மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம் எனப் பெயர் வைத்துக் கொள்வதற்குக் காரணம் பல மருத்துவ மனைகளும், செவிலியர் பட்டயப் பயிற்சி வகுப்புகளை நடத்துகின்றன. மருந்தாளுனர் தொடர்பான படிப்புகளையும் வைத்திருக்கின்றன.

மூக்கில் அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டுமென சொன்னதால் யாம் மற்றொரு பெரிய மருத்துவமனையில் காது மூக்கு தொண்டை மருத்துவரைப் பார்த்தோம். அவரோ அறுவைச்சிகிச்சையெல்லாம் தேவையில்லை எனச் சொல்லிவிட்டார்.

சில வாரங்களுக்கு முன்பு வயிற்றுப்புண் தொடர்பாக ஒரு மருத்துவமனைக்குச் சென்றோம். பரிசோதனை முடிந்து எதற்கும் ஒரு அக நோக்கி எடுப்பது நல்லது என்றார். வேறு ஏதேனும் பிரச்சினை இருக்கா எனக் கேட்ட மருத்துவருக்கு கொஞ்சநாளாகவே மூச்சுவிடச் சிரமமா இருக்கு டாக்டர் என்றோம். அதெல்லாம் இங்க பார்க்க மாட்டோம், அதுக்கு நீங்க ஈஎன்டி யத்தான் பாக்கணும் என்றார். இதைச் சொல்லும்போது அந்த டாக்டர் காட்டிய வேகமும் முகபாவனையும்

இருக்கே.. மருத்துவம் படிக்கும்போது இவரென்ன வயிற்றுக்கு மட்டுமா படித்தார்? காது மூக்கு என அனைத்து உறுப்புகளையும் படித்திருப்பார்தானே.

முன்னர் மருத்துவத்திற்குப் படித்தவர்கள்தானே உச்சி முதல் உள்ளங்கால் வரை அனைத்து நோய்களுக்கும் மருத்துவம் பார்த்தார்கள். நோய்கள் குணமாகியதுதானே. ஆய்வுக்கூட முடிவுகளும், உபகரணங்களும், உயர்தொழில் நுட்பமும் இல்லாமல் தற்போது மருத்துவம் பார்க்கவே முடியாது எனும் நிலை வந்துவிட்டது. நவீன மருத்துவம் என்கிறார்கள். என்ன நவீனமோ?

மனிதர்கள் அனைத்தையுமே நவீனமாகக் கேட்கிறார்கள். நவீன வீடு, நவீன கார், நவீன அலைபேசி, நவீன வாழ்க்கை வசதிகள், நவீன வாழ்க்கை முறை. நவீனத்தோடு சேர்ந்து ஆடம்பரமும் இறக்கை கட்டிப் பறக்கிறது. வீடு தொடர்பாக வரும் அத்தனை விளம்பரங்களுமே ஆடம்பரமான பங்களா வீடு என்றே அறைகூவுகின்றன. லக்ஜுரி ஹவுஸ் ஜஸ்ட் அட் 3.5 குரோர்ஸ்.

கோயம்புத்தூரிலேயே வீட்டு விளம்பரங்கள் பலவும் கோடிகளைத் தொட்டே வெளியிடப்படுகின்றன. 1.5 கோடி, 2.0 கோடி, 3.4 கோடி என்றெல்லாம் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. ஒரு வீட்டின் விலை மூன்று கோடி உருபாயா? கோடி கோடியாகக் கொடுத்து வீடுகள் வாங்குபவர்கள் யார்? என்ன தொழில் செய்கிறார்கள்? எப்படிச் சம்பாதிக்கிறார்கள்? ஏன் எல்லோராலும் மூன்று கோடிக்கு வீடு வாங்க முடியவில்லை?

இருபத்தைந்து வருடங்கள் கடினமாகப் படித்து கல்லூரிப் பேராசிரியராகி, மேலும் ஒரு இருபத்தைந்து வருடங்கள் பணி செய்யும் ஒரு பேராசிரியரால், மூன்று கோடிக்கு வீடு என்பதை நினைத்துப் பார்க்கவே முடியாது. யாம் சொல்வது எம்மைப் போன்ற பேராசிரியர்களை. பல பேராசிரியர்களுக்கும் அப்பா வழியிலும் அம்மா வழியிலும் ஏகப்பட்ட சொத்துக்கள் இருக்கின்றன. பெற்றோரே சம்பாதித்து இவர்களுக்கு வீடுகள், நிலங்கள், நகைகள் என எல்லாமே கொடுத்திருக்கிறார்கள். அதுபோக சொந்தமாக ஏகப்பட்ட தொழில்கள் வேறு செய்கிறார்கள்.

யாம் சொல்வது, கற்பிப்பதையே தொழிலாகக் கொண்ட, கல்வி, கல்லூரி வளர்ச்சி, மாணவர் நலம், சமூக மேன்மை போன்ற எண்ணங்கள் கொண்டு வாழும் ஒரு பேராசிரியருக்கு மூன்று கோடிக்கு வீடு என்பது எட்டாக் கனியாக இருப்பதன் காரணம் என்ன? சமூக அடுக்கின்படி மிகவும் அறிவானவர் பேராசிரியர்தானே.

அறிவை வளர்க்கும் சமூகமெனில், அறிவைப் போற்றும் சமூகமெனில் பேராசிரியர்களுக்கல்லவா உயர்தரமான வீடுகள் கொடுக்கும். மூன்று கோடி வீட்டிற்கு ஆசைப்பட்டு பேராசிரியரொருவர் முறைகேடான வழிகளில் பணம் சம்பாதித்தால் அது பேராசிரியரின் தவறா? இந்த சமூகத்தின் தவறா?

பேராசிரியர்கள் நடந்தும், மிதிவண்டிகளிலும், இருசக்கர வாகனங்களிலும் வர, மாணவர்கள் ஆடம்பரமான கார்களில் கல்லூரிக்கு வந்து செல்வதைக் கவனித்ததுண்டா நண்பர்களே. ஏன் கல்லூரிப் பேராசிரியர்கள் அனைவருக்கும் வீடும், ஓட்டுனரோடு கூடிய காரும், சமையல் பணிக்காரரும், ஒரு உதவியாளரும் அரசாங்கம் கொடுக்கக் கூடாது? நீதிபதிகளுக்குக் கொடுக்கும்போது பேராசிரியர்களுக்கு ஏன் கொடுப்பதில்லை? சொந்தமாக ஒரு வீடிருந்தால், வீடில்லையே எனும் ஏக்கத்தை விட்டு, பாடம் நடத்துவதில் கூடுதல் அக்கறை பிறக்கக் கூடுமல்லவா?

இருபத்தைந்து வயதில் ஒருவர் எப்படி நீதிபதியாக முடியும்? கல்லூரிப் பேராசிரியருக்கும் ஒரு நீதிபதிக்குமான வேலை ஒற்றுமைகள் என்ன? வேற்றுமைகள் என்ன? கல்லூரிப் படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் முடித்துவிட்டு வரும் பேராசிரியர் பணியும், சட்டம் படித்துவிட்டு, தேர்வெழுதி நேரடியாக நீதியரசர் ஆகும் பணியும் ஒன்றா? இருவருக்குமான அளவுகோள்கள் எவை? ஒருவர் பேராசிரியர். மற்றவர் பெயர் நீதியரசர், நீதிபதி. நீதிக்கே பதியானவர் அதாவது கடவுள் போன்றவர். கடவுளேதான். அவர் தீர்ப்பளிப்பவர். அவர் சொல்லும் தீர்ப்பு ஒருவரின் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் வல்லமை கொண்டது. இவ்வளவு உயர்ந்த பதவிக்கு தேர்வு வைத்து எப்படி ஒருவரைத் தேர்ந்தெடுக்க முடியும். நீதியரசர் யார்? அவரது வளர்ப்பு எப்படி? எப்படிப் படித்தார்? என்னவெல்லாம் படித்தார்? குணம் என்ன? குடிப்பவரா? சூதாடுபவரா? வாழ்க்கையைப் பற்றி எவ்வளவு தெரியும்? கடவுள் நம்பிக்கை உள்ளவரா? தனி மனித வாழ்க்கையில் எப்படிப்பட்டவர்? பணத்தாசை பிடித்தவரா? பெண்ணாசைக்கு மயங்கி தீர்ப்புகளை மாற்றக் கூடியவரா? சமூக அமைப்பைப் பற்றி என்ன நினைக்கிறார்? பெண்களைப் பற்றி எந்த மாதிரியான கருத்துக்கள் கொண்டிருக்கிறார்? மனிதகுல வரலாற்றை அறிந்திருக்கிறாரா? மனிதர்களை நேசிப்பவரா? சாதி மதம் தொடர்பாக அவரது சிந்தனை ஓட்டம் என்ன? நீதிக்குப் பதியைத் தேர்ந்தெடுக்கும்போது இவை போன்ற இன்னும் ஏராளமான அளவுகோள்களை வைக்க வேண்டுமா அல்லது வெறுமனே தேர்வு வைத்து நீதிக்கு

அரசராக்குவதா? நீதியரசர் சரியில்லை எனில், நல்லவர் இல்லை எனில், அவர் அளிக்கும் நீதி என்னாகும்?

நீதிக்குப் பதிக்கு, குடிப்பழக்கம் இருக்கிறதாக வைத்துக் கொள்வோம். நீதிபதி குடிக்கலாமா? தனிமனிதர் குடிப்பதற்கும் நீதிபதி குடிப்பதற்கும் வேறுபாடுகள் உண்டா? நீதிபதியின் குடி அவரது தீர்ப்பைப் பாதிக்குமா? குடி அவரது உடல் நலத்தைப் பாதித்தால் உடல்நலப் பாதிப்பு அவர் அளிக்கும் தீர்ப்பில் வெளிப்படுமா? நீதிபதி பல்வேறு தீர்ப்புகளையும் படித்துப் பார்த்து அலசி ஆராய்ந்து ஒரு தீர்ப்புக்கு வர வேண்டியிருக்கும்தானே? குடிப் பழக்கமுள்ள நீதிபதிக்கு எவ்வளவு தூரம் படிக்கும் ஆர்வமிருக்கும்?

நீதிக்குப் பதி வரதட்சணை வாங்குபவரா? இருநூறு சவரன் வரதட்சணை வாங்கும் நீதிபதி, அவரிடம் வரும் வரதட்சணை தொடர்பான வழக்குகளுக்கு என்ன மாதிரியான தீர்ப்பு வழங்குவார்?

நீதிபதி ஆணாக இருக்கலாமா? பெண்ணாக இருக்கலாமா? திருமணம் செய்யாத நீதிபதிக்கு, திருமணம் தொடர்பான வழக்குகளில் என்ன அனுபவமிருக்கும்?

பேராசிரியர், மாவட்ட ஆட்சித் தலைவர், நீதிக்கு அரசர் எனும் மூவரில் யார் அதிக மதிப்புமிக்கவராகக் கருதப்படுகிறார்? உண்மையிலேயே மதிப்புமிக்கவர் யார்? ஒரு மருத்துவரைப் பார்க்க தம் குழந்தையோடு இரண்டு மணி நேரமாகப் பேராசிரியர் காத்துக் கொண்டிருக்கிறார். மாவட்ட ஆட்சித்தலைவரின் பையனுக்கு சிறு பிரச்சனை என தொலைப்பேசித் தகவல் வருகிறது. மருத்துவர் ஓட்டமாக ஓடுகிறார். ஆசிரியர், காவலர் இருவரில் சமூகம் யாருக்கு மதிப்பளிக்கிறது? ஏதேனும் ஒரு அரசு அலுவலகத்திற்குச் சென்றதுண்டா தோழர்களே..

இருபத்தி இரண்டு, இருபத்தி மூன்று வயதில் எப்படி ஒருவர் மாவட்டத் தலைவராக ஆக முடியும்? ஏட்டுக் கல்வியும், பட்டறிவும், அனுபவ அறிவும் ஒன்றாகுமா? முப்பது வருடப் பணி அனுபவம் கொண்ட ஒரு வட்டாச்சியரும், அவரது அனுபவம் அளவுக்குக்கூட வயதில்லாத கலெக்டரும் ஒன்றா? ஒருவர் எப்படி நேரடியாக கல்லூரிப் பேராசிரியர் ஆக முடியும்? பத்து வருடங்களாவது ஏன் அவர் பள்ளியில் கற்பித்திருக்கக் கூடாது? பத்து வருடங்கள் பள்ளியில் கற்பித்தல், பத்து வருடங்கள் கல்லூரியில் கற்பித்தல், பத்து வருடங்கள் பல்கலையில் கற்பித்தல்,

அடுத்த பத்து வருடங்கள் படித்ததைக் கொண்டும், அனுபவ அறிவைக் கொண்டும் ஆராய்ச்சி செய்து பார்த்தல் என ஏன் இல்லை?

நண்பர்களே, நீங்கள் வருங்கால நீதியரசர்களைப் பார்த்திருக்கிறீர்களா? பேசியிருக்கிறீர்களா? யாம் பாரதியார் பல்கலை பயிற்சி வகுப்புகளுக்குப் பேருந்தில் செல்லும் போதெல்லாம் நமது எதிர்கால நீதியரசர்களைப் பார்த்துக் கொண்டே பயணித்திருக்கிறோம். ஆட்டம், பாட்டம், கேலி, கிண்டல், எல்லாம் சரிதான். இளமைத் துள்ளல், ஒப்புக் கொள்ளலாம். தனிப்பட்ட குணம்? நாளைக்கு இவர்கள் தானே நீதியரசர்களாக நீதியை நிலைநாட்டப் போகிறார்கள். மற்ற அனைத்துப் போராட்டங்களையும் எளிதாக அடக்கிவிடும் காவல்துறை சட்ட மாணவர்கள் போராட்டங்களை அடக்க எப்படியெல்லாம் திணறுகிறது என்பதைக் கவனித்ததுண்டா? வன்முறை இல்லாமல் அந்தப் போராட்டங்கள் முடிந்ததாகச் சரித்திரம் உண்டா?

அரசியல் கட்சிகளோடும், சாதி அமைப்புகளோடும் தொடர்பு கொண்டுள்ள வழக்குரைஞர்கள் எத்தனையாயிரம் பேர் எனத் தெரியுமா? அரசு வழக்கறிஞர் பதவிகள் கட்சிக்காரர்களுக்கே கொடுக்கப்படுகின்றன என்பதை அறிவோம்தானே. அரசியல்வாதிகளின் செல்வாக்கு நீதிமன்றங்களில் மிக அதிகம் என்பதை நாம் அறிந்திருக்கிறோமா? வழக்குரைஞர்கள் எப்படியெல்லாம், எந்தெந்த வழிகளிளெல்லாம் பணம் சம்பாதிக்கிறார்கள்? முன்னரெல்லாம் இன்ன வழக்குக்கு இவ்வளவு கட்டணம் என நிர்ணயித்துக் கொள்வார்கள். தற்போதோ பெர்சன்டேஜ் வாங்குகிறார்கள். பத்து இலக்கம் பெறுமான வழக்கை முடித்துக் கொடுத்தால் மூன்று, நான்கு இலக்க உரூபா கிடைத்துவிடுகிறது. ஒரு கோடி சொத்து மதிப்பு கொண்ட ஒரு வழக்கு கிடைத்தால் போதும். வாழ்க்கையில் நல்ல படியாகச் செட்டில் ஆகிவிடலாம்.

சமீபத்தில் எம்மிடம் விலங்கியல் படித்த மாணவர் வழக்கரைஞருக்குப் படிப்பதாகச் சொன்னார். எதற்காக வழக்குரைஞருக்குப் படிக்கிறார் தெரியுமா? நண்பர்கள் நன்றாகப் பேசுவதாகச் சொன்னார்களாம். உடனே வழக்குரைஞராக சேர்ந்து விட்டார். எம்மிடம் படித்தவர் தானே? மாணவரின் ஆங்கில அறிவை யாம் நன்றாக அறிவோம். நாளைக்கு நம் மாணவர் வழக்குரைஞராகி ஆங்கிலத்தில் எப்படி வாதாடுவார்? நீதிபதியாகி மற்ற தீர்ப்புகளைப் படித்து எப்படி புரிந்து கொள்வார்? தீர்ப்புகளை ஆங்கிலத்தில் எப்படி எழுதுவார்? தமிழில் எழுதி

ஆங்கிலத்தில் மாற்றிக் கொள்வாரோ? அதற்கும் தொழில் நுட்பம் வந்துவிட்டதுதானே நண்பர்களே.

தமிழ்நாட்டில் இன்று வழக்குரைஞர் தொழிலில்தான் அதிகமான போலிகள் இருப்பதாகப் புள்ளிவிவரங்கள் சுட்டுகின்றன. படிக்காமலேயே பட்டங்கள் விலைக்குக் கிடைக்கின்றன. வெளி மாநிலங்களில் ஏராளமான கல்லூரிகள் கடை விரித்திருக்கின்றன. போலி பட்டத்தை வாங்கி, ஏதேனும் ஒரு அரசியல் தலைவருக்கு எடுபிடி வேலை பார்த்து அரசு வழக்கறிஞராகிறார்கள். இவர்கள்தான் அரசு சார்பாக வாதாடும் வழக்கறிஞர்கள். பெருங்குற்றம் சுமத்தப்பட்ட நபருக்காக ஆஜராவதோ பெரும்புலமை கொண்ட வக்கீல். ஒரு மணி நேரத்திற்கு கோடிகளில் கட்டணம் வாங்குபவர். குற்றவாளி விடுவிக்கப்பட்டு சிரித்துக்கொண்டே டாடா காட்டிச் செல்கிறார். பேட்டிகள் கொடுக்கிறார். அரசு மேல்முறையீடு செய்வோம் என்கிறது.

பணம் பத்தும் செய்யும் என்கிறார்கள். பாதாளம் வரை பாயும் என்கிறார்கள். பணம் என்னும் வார்த்தைக்குப் பதிலாக அரசியல்வாதியைப் போட்டுக் கொள்ளலாம். அரசியல்வாதி நினைத்தால் எது வேண்டுமானாலும் செய்யலாம் எனும் காலத்தில் நாம் வாழ்கிறோம். அதிகாரிகளோடு கூட்டு, ஆளும் வர்க்கத்தோடு கூட்டு. காவல் துறையோடு கூட்டு. கல்வித்துறையோடு கூட்டு. மணல் திருட்டோடு கூட்டு. கனிமக் கொள்ளையோடு கூட்டு. வங்கிகளோடு கூட்டு. ஏதாவது விடுபட்டிருக்கிறதா தோழர்களே..

நாட்டில், உலகில் எதிலெல்லாம் போலிகள்? போலியான உணவு, அரிசியில் கல்லைக் கலக்கிறார்கள். பருப்பில் கல்லைச் சேர்க்கிறார்கள். பாலில் தண்ணீரைக் கொட்டுகிறார்கள். மசாலையில் செங்கல்பொடியை மிக்ஸ் பண்ணுகிறார்கள். தேயிலையில் போலி. எண்ணெயில் போலி. இலவம் பஞ்சுத் தலையணை என்கிறார்கள். ஓரங்களில் மட்டுமே பஞ்சு இருக்கிறது. உள்ளுக்குள் துணியை அடைத்திருக்கிறார்கள். இரப்பர் அரிசி பிளாஸ்டிக் அரிசியெல்லாம் விற்பனைக்கு வந்துவிட்டதுதானே. கொஞ்ச காலத்தில் கல்லை அரிசிபோல் செதுக்கி விற்பார்கள். வாங்கிவந்து சோறு பொங்க மாட்டேங்குதே எனப் பார்த்துக் கொண்டே நிற்க வேண்டியதுதான்.

உணவில் கலப்படமும், போலியும், காலாவதியானதும், தரமில்லாததும் இருந்தால் மக்களின் உடல் நலம் என்னாகும்? உணவு விடுதிகளில் அடிக்கப்படும்

கொள்ளைக்கு அளவில்லாமல் போய்விட்டது. தொழிலில் தர்மம் என உண்டாம். தொழில் தர்மம் எனில் இரண்டு இட்லிகளை நாற்பத்தைந்து உரூபாக்கு எப்படி விற்க முடியும்? ஒரு கரண்டி மாவை தோசையாக இழுத்து, ஐம்பது உரூபாவுக்கு விற்க எப்படி தர்மம் இடம் கொடுக்கும்? ஒரு கரண்டி பொங்கல் ஐம்பத்தி இரண்டு உரூபா. கிராமத்தில் உடலுழைப்பு செய்பவர் பத்து பொங்கலை எளிதாகச் சாப்பிட்டுவிடுவார். காலை சாப்பாட்டிற்கு ஐநூற்றி இருபது உரூபாவை அவரால் செலவழிக்க முடியுமா? ஒருவருக்கே இவ்வளவு பணமென்றால் குடும்ப உறுப்பினர்கள் அத்தனை பேரும் சாப்பிட்டால், ஒருவேளை உணவிற்கு எவ்வளவு உரூபா செலவழிப்பது? சொந்தமாக நோட்டை அச்சடித்தாலும் காணாது.

உணவு விடுதிகளில் குடும்பமாக அமர்ந்து சாப்பிடுவதைக் கவனித்திருக்கிறீர்களா தோழிகர்களே.. நடுத்தரமான உணவகங்களில் ஒரு கோழி பிரியாணி இருநூறிலிருந்து இருநூற்றி ஐம்பது வரை விற்கப்படுகிறது. நாங்கள் சமீபத்தில் ஒரு உணவகத்திற்குச் சென்றோம். நட்சத்திர உணவகமெல்லாம் இல்லை. சாதாரணமான உணவகம்தான். கணவன், மனைவி என இருவரும் பேராசிரியர் வேலை பார்த்தாலும், இது வரையிலும் நாங்கள் நட்சத்திர விடுதிக்கெல்லாம் போனதில்லை. அது மாதிரியான ஹோட்டல்களின் ஆடம்பரத்தையும் அலங்காரத்தையும் பார்த்தாலே மனதில் ஒருவித விலக்கம் வந்து விடுகிறது. போனாலும் எம்மால் மனம் ஒப்பி சாப்பிட முடியாது தோழர்களே. எமது அக்கா, நாள் முழுதும் களையெடுப்பதற்கு நூற்றி ஐம்பது ரூபாய் சம்பளம் வாங்குறார். எம்மால் ஆயிரத்து ஐநூறு ரூபாய் மதியச் சாப்பாட்டிற்குக் கொடுக்க முடியாது.

ஓட்டலில் ஒரு கோழிபிரியாணி நானூற்றி முப்பது ரூபாய். ஒரு கிலோ கோழி இறைச்சி நூற்றி அறுபது உரூபாக்குக் கிடைக்கிறது. ஒரு கிலோ கோழியை சமைத்து எத்தனை மடங்குதான் லாபம் வைத்து விற்பார்கள்? ஒரு கிலோ கோழிக்கறியில் எத்தனை பிரியாணி செய்யலாம்? வறுத்த இறால் வாங்கினோம். யாம் விலை கேட்டுவிட்டே ஆர்டர் செய்வோம். இம்முறை எப்படியோ மறந்து விட்டோம். ஒரு தட்டில் ஆறு இறால்களைப் பொரித்து வைத்தார்கள். விலை அறுநூற்றி இருபத்தைந்து உரூபா. ஒரு கிலோ இறாலே ஐநூறு உரூபாக்குக் கிடைக்கிறது. இப்படியுமா மக்களை ஏமாற்றுவது? ஓட்டலில் உட்கார்ந்து சாப்பிடுவதற்கு ஆடம்பரமான இருக்கை போட்டிருக்கிறார்கள். ஐந்து துண்டு இறால் சாப்பிடும் எங்களது காசில்தானே, அந்த இருக்கைக்கான பணமும்

எடுக்கப்படுகிறது. அதனால்தானே கொஞ்சம்கூட மனச்சாட்சியில்லாமல் நான்கு துண்டு இறால், இரண்டு துண்டு சிறு இறாலுக்கு அறுநூறு ரூபாய் வசூலிக்கிறார்கள்.

நாங்கள் நான்கு பேர் இரவு சாப்பிடுவதற்கு இரண்டாயிரத்து முந்நூறு ரூபாய் செலவாகிறது. யாம் இரண்டு கல்தோசையும், ஒரு ஆப்பமும் மட்டுமே சாப்பிட்டோம். பில்லைப் பார்த்து விட்டு, வந்த கோபத்தில் குழந்தைகளுக்கு குழல்சாந்து வாங்கித் தர மறுத்துவிட்டோம்.

கிராமத்தில் நூறுநாள் வேலைபார்க்கும் ஒருவர், ஒருநாள் இரவுக்கு இப்படி இரண்டாயிரம் உரூபா செலவு செய்ய முடியுமா? ஒரு வயிற்றில்தான் யாமும் அக்காவும் பிறந்தோம். அவரால் குழந்தைகளோடு ஓட்டலுக்குப் போய் இப்படி இரவு உணவு சாப்பிட முடியுமா? எமக்கும் எமது அக்காவுக்கும் ஏன் இவ்வளவு வேறுபாடு? ஒரு நாள் விவசாயம் சார்ந்த கூலி வேலைக்கு நூற்றி ஐம்பது உரூபா சம்பளம் வாங்கும் எமது சகோதரிக்கும், ஒரு மாதத்திற்கு ஒரு இலக்கத்து முப்பதாயிரத்து எண்ணூற்றி தொன்னூறு உரூபா (பிப்ரவரி – 2018) மாத சம்பளம் வாங்கும் எமக்கும் உள்ள பொருளாதார இடைவெளி எவ்வளவு? ஏன் இவ்வளவு இடைவெளி?அவரும் யாமும் மனிதர்தானே. இருவர் வயிறும் ஒன்றுதானே. இருவருக்கும் பசி, தாகம், விருப்பம், சமம் தானே.

தோழி ஒருவரோடு சமூக வேறுபாடுகளைப் பற்றி பேசிக்கொண்டிருந்தோம். தோழி சொல்கிறார் - ஐந்து விரலும் சமமாகவா இருக்கும்? சமீபத்தில் உயர்ந்த அமைச்சர்கூட இதே உதாரணத்தைச் சொல்லிக் கேட்டிருக்கிறோம். விரல்கள் சமமாக இருக்காதுதான். வயிறுகள் சமம்தானே தோழர்களே.. பசி, தாகம், இன்பம், துன்பம், பிறப்பு, இறப்பு, மனம், ஆசை எல்லாம் ஒன்றுபோல் தானே. கிராமத்தார்க்கு பசிக்காதா? அவருக்கு பெரிய உணவுவிடுதியில் சாப்பிட வேண்டும் என ஆசை வரக்கூடாதா? நகரத்தார் போல் ஊர் சுற்றிப் பார்க்க வேண்டுமென விருப்பம் இருக்கக்கூடாதா? உங்களைப் போல் சொகுசுக் காரில் பயணிக்கும் தகுதி அவர்களுக்கு இல்லையா? நல்லதும், பெரியதும், ருசியானதும், சிறந்ததும், தரமானதும், நகரத்துவாசிகளுக்கேதான் கிடைக்க வேண்டுமா? உங்களுக்கு காய், கனி, கீரை வகைகள் அனைத்தும் ப்ரெஷ்ஷாக வேண்டும். அனைத்தும் புத்தம் புதிதாக வேண்டும். பூச்சிக் கொல்லி சேர்க்காத இயற்கை முறையில் விளைவித்த நல்ல உணவுகள் உங்களது வயிற்றை நிறைக்க வேண்டும். நோய் நொடி இல்லாது மகிழ்ச்சியாக வாழ வேண்டும். கிராமத்தார் நூறுநாள் வேலை பார்த்தும்,

உங்களுக்கே தேவையான அனைத்தையும் விளைவித்தும் உங்களது தேவைகளை ஒட்டியும் தங்களது வயிற்றுப் பாட்டைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மாநகரவாசிகளே.. சொர்க்கத்தை அனுபவித்து வரும் சொர்க்கவாசிகளே.. என்றேனும் ஒரு நாள் ஒரு கிராமத்திற்குச் சென்று விவசாய வேலைகள் பார்த்ததுண்டா.

நகரத்தில் எத்தனை இலக்கம் மக்கள் வாழ்கிறீர்கள்? ஒரு லிட்டர் பாலையாவது நீங்கள் உற்பத்தி பண்ணுவதுண்டா? மாடோடு மல்லுக்கட்டுவது கிராமவாசி. நாளுக்கு நான்குமுறை பால் காப்பி குடிப்பது நகரவாசி. பால், தயிர், வெண்ணெய், நெய், பால்பொருட்கள் என அனைத்தும் உங்கள் வயிற்றுக்கல்லவா. வாழ்க்கையில் ஒரு நாளாவது நீங்கள் பால்மாடுகளைப் பராமரித்ததுண்டா? வெயில் பட்டுவிடும் என உடலைப் போர்த்திக்கொண்டு போகும் நகர சீமான்களே, சீமாட்டிகளே, அக்னி வெயிலில் காட்டில் வேலை பார்க்கும் கிராமத்துக்காரர்களைப் பார்த்திருக்கிறீர்களா? சன் கிரீம்களும், சன் லோசன்களும் தடவிக் கொள்ளும் நீங்கள் எங்கே? வெயிலான வெயிலில் வேர்வை மழையில் உடல் வருத்த வேலை செய்யும் அந்த எளிய மனிதர்கள் எங்கே? நீங்கள் அறிவானவர்கள். அவர்கள் அறிவில்லாதவர்கள். அப்படித்தானே?

இனிப்பில்லாமல் சாப்பிட மாட்டீர்களல்லவா? கரும்புக் காட்டு வேலையில் கரும்பு சோகை எப்படி குத்தும் தெரியுமா? நீங்கள் மகாராஜாக்கள், மகாராணிகள். நீங்கள் குத்து வாங்க வேண்டாம். அந்த எளிய மனிதர்களைப் பற்றி, அவர்களது கஷ்ட நஷ்டங்களைப் பற்றி, கிராமங்கள் எப்படி இருக்கின்றன என்பது பற்றி, அந்த மக்களின் வாழ்வை சீராக்குவது பற்றி கரிசனத்தோடு நீங்கள் நினைத்ததுண்டா?

நீங்கள் ஏ.சி காரை விட்டு இறங்குவதே இல்லைதானே. காருக்குள் இருந்து கையோடு கொண்டுவந்திருக்கும் விவரப் பட்டியலை கடைப்பையன்களிடம் கொடுக்கிறீர்கள். கொஞ்ச நேரத்தில் உங்களுக்கான பொருட்கள் காரின் டிக்கிக்கு வருகிறது. நீங்கள் மொபைலில் பேசியபடியே, ஐஸ்க்கீரிம் சாப்பிட்டுக் கொண்டே கிளம்பிவிடுகிறிர்கள். இந்த மண்ணில் உங்கள் பாதங்கள் படுவதில்லை என்பது உண்மைதானே. நீங்கள் போட்டிருக்கும் விலையுயர்ந்த செப்பல் அழுக்காகிவிடுமல்லவா?

பெரிய காரில் வருகிறீர்கள். கார் எஞ்சின் ஓடிக்கொண்டேயிருக்கிறது. ஹாரன் அடிக்கும் சத்தம் கேட்டு கடைக்காரப் பையன் ஓடி வருகிறான். இரண்டு பேல்பூரி ஆர்டர் பண்ணுகிறீர்கள். ஓர்டர் வரும்வரை கணவனும் மனைவியும் அவரவர் மெபைலை நோண்டிக் கொண்டிருக்கிறீர்கள். கணவன் மனைவியாகத்தான் இருக்க வேண்டும். காதலர்கள் எனில் தோள்களில் சாய்ந்தபடியும், உரசிக்கொண்டுமல்லவா உட்கார்ந்திருப்பீர்கள். கார் கண்ணாடியை ஏற்றிவிட்டு, இரைச்சலான அயல் நாட்டுப் பாட்டை கேட்டுக் கொண்டே பேல்பூரி சாப்பிடுகிறீர்கள். உங்களுக்கு எப்படி கிராமத்தவரின் நினைப்பு வரும்?

கிராமத்தில் உள்ளவர்களும் மனிதர்கள்தான் என்றோ, அவர்களுக்கும் வயிறு, மனம், இருக்கிறதென்றோ, இந்தியா கிராமங்களில்தான் வாழ்கிறது எனச் சொன்ன உத்தமரையோ நீங்கள் அறியாது போனது ஏன்?

கிராமங்கள் தொலைந்தால் இந்தியாவின் ஆன்மா போய்விடுமாமே. கேள்விப்பட்டிருக்கிறீர்களா தோழர்களே.. கிராமத்தில் ஆயிரம் பேர் உண்பதற்கு ஆகும் செலவில் நகரத்தில் பத்து பேர் உண்கிறார்கள். யோசித்துப் பாருங்கள். கிராமத்தில் ஒரு வடை நான்கு உரூபா அல்லது ஐந்து உரூபா. நகரத்தில் இருபது முப்பது உரூபா. கொஞ்சம் சாம்பார் ஊற்றிக் கொடுத்தால் நாற்பது உரூபா. பெரிய உணவகங்களில் ஒரு வடையை எவ்வளவு உரூபாக்கு விற்கிறார்கள் தெரியுமா?

அதே உளுந்து, கடலைதானே தோழர்களே.. ஒன்றுபோல் வடைக்கு ஆட்டுகிறார்கள். எண்ணெயில் போட்டுத்தான் பொரிக்கிறார்கள். ஐந்தாறு மடங்கு கூடுதலாக விலை நிர்ணயம் செய்தது யார்? அனுமதி கொடுத்தது யார்? படிக்கும் மாணவர் காலையில் நகரத்து ஓட்டலில் சாப்பிட முடியுமா? கல்லூரி படிக்கும் ஒருவர் ஒரு வறுவல் தோசை, ஒரு வடை, ஒரு பொங்கல் சாப்பிடுகிறார் என வைத்துக்கொள்வோம். எவ்வளவு பில் வரும் தோழர்களே? எமது கல்லூரி அருகிலுள்ள உணவகங்களுக்குச் சென்று எமது கல்லூரியில் படிக்கும் மாணவரால் சாப்பிட முடியுமா? மதியச் சாப்பாடு நூற்றிப்பத்து உரூபா, தொன்னூறு உரூபா. நூற்றி அறுபத்தியிரண்டு உரூபா. ஒரு நாள் வேலை ஊதியம் நூற்றி ஐம்பது உரூபா. ஒரு வேளை மதியச் சாப்பாடு நூற்றி அறுபத்தியிரண்டு உரூபா. வாங்கும் சம்பளம் ஒரு வேளை வயிற்றை நிறைக்கவே போதவில்லையே, மற்ற நேரங்களுக்கு எதைச் சாப்பிடுவது? மற்ற செலவுகளுக்கு எங்கே வட்டிக்கு வாங்குவது? கல்லூரி பீஸ் எப்படிக் கட்டுவது? ஏழைகளுக்கு மலிவு விலை உணவகம். பணக்காரர்களுக்கு

பைவ் ஸ்டார் உணவகம். இந்தியா ஒன்றா? அல்லது பல்வேறு இந்தியாக்கள் இருக்கின்றனவா? அரசியல் சாசனப்படி ஒரே இந்தியா. இருப்பதோ ஆயிரக்கணக்கான இந்தியாக்கள். ஏழைகள் இந்தியா, செல்வந்தா் இந்தியா, வியாபாரிகள் இந்தியா, அரசியல்வாதிகள் இந்தியா, அதிகாரத்திலுள்ளோர் இந்தியா, வறியவா்கள் இந்தியா, சுரண்டர்காரர்கள் இந்தியா, கொள்ளையா்கள் இந்தியா.. எழுதிக்கொண்டே போகவேண்டியதுதான்.

எங்கு பார்த்தாலும் பிச்சையெடுத்துத் திரிகிறார்கள். சிறுபிள்ளைகள், முதியவா்கள், பெண்கள், பார்வையற்றவா் எனப் பலரும் சிக்னலில் நிற்கிறார்கள். ஓட்டல்களில் முன்னால் நிற்கிறார்கள். கோவிலில், மசூதிகளில், சா்ச்சுகளில், சாலைகளில், கடைகளில், பேருந்துகளில், ரயில்களில், எங்கும் பிச்சையெடுப்பவா்களைப் பார்த்துவிட்டு சாப்பிடுவதற்கு எப்படி மனம் வரும்? பலரும் பிச்சையெடுப்பதையே தொழிலாகக் கொண்டு வாழ்வதை என்னவென்பது? வடக்கத்திய பெண்கள் பிள்ளைகளை வைத்து கொண்டே பிச்சையெடுத்துத் திரிகிறார்கள்? இவா்களெல்லாம் யாா்? இருபத்தியோராம் நூற்றாண்டில், அறிவியலின் உச்சபட்ட பயன்பாட்டில் வாழும் காலத்தில், யாரும் பிச்சையெடுக்காமல் வாழ முடியாதா? பிச்சைக்காரர்கள் உள்ள தேசம் எனும் அவப்பெயரிலிருந்து இந்தியா எப்போது வெளிவரும்?

சோறும் நீரும் விற்பனைக்கு அல்ல என நம் முன்னோர்கள் வாழ்ந்தார்களாம். உண்மைதானா நண்பா்களே.. எமக்குத் தெரிந்தே யாரும் தண்ணீரை விற்றதில்லை. தண்ணீரை எப்படி விற்க முடியும்? அது அறப்பிழையல்லவா? அறத்தைப் பற்றி நம் முன்னோர்களும், இலக்கியங்களும் எவ்வளவோ பேசியும் எழுதியும் இருக்கிறார்கள்தானே. வீட்டிற்கு வரும் விருத்தினா்களை சாப்பிடச்செய்த பின்பே, தமிழா்கள் உணவுண்ணுவார்களாம். சமைக்கும்போதே தெய்வங்களுக்கு, முனிவா்களுக்கு எனச் சேர்த்தே சமைப்பார்களாம். நாமோ சோறையும் நீரையும் மதிப்புக் கூட்டி விடுகிறோம். கடலைப் பருப்பை கடலை மிட்டாயாக விற்றால் கூடுதல் மதிப்பாம். வரி, வரி, எங்கும் வரி.. எல்லாவற்றிலும் வரி.. அரசுகள் வரிப்போட்டு வருவாயைப் பெருக்குவதில்தான் குறியாய் இருக்கின்றன.

நாம் சோறையும் நீரையும் மட்டுமா விற்கிறோம். பஞ்சபூதங்களையுமல்லவா விறகிறோம்? தமிழரை விடப் பஞ்சபூதங்களைப் பற்றி அதிகம் அறிந்தவா் உலகிலுண்டோ. இயற்கையை விற்கிறோம். இதயத்தையும் விற்கிறோம்.

நண்பர்களே.. உங்களுக்கு அருணனைத் தெரியுமா? தொலைக்காட்சி விவாதங்களில் பார்த்திருப்பீர்களே. பொதுவுடமை அறிஞரான தோழர் அருணன், 23.04.2006 ஆனந்த விகடனில் பண்பாட்டை இழப்பது நம் அறிவை இழப்பதாகும் எனச் சொல்கிறார். நீரை விற்பனைப் பொருளாக்குவது தமிழர் பண்பாடில்லையாம். பணத்திற்கு முன்னால் பண்பாடாவது, பரங்கிக்காயாவது. சரிதானே தமிழர்களே.

தோழர் கூறுகிறார் - தமிழ்நாடு நிலநடுக்கோட்டை ஒட்டிய வெப்ப மண்டலப் பகுதி. இங்கே வாழும் மனிதர்களுக்கு நீர்தான் முக்கியமான ஆதாரம். வெப்பம் போக்கிக் குளிர்விப்பதால் நீரைத் தண்ணீர் என்று அழைத்தனர். இயற்கையின் பேராற்றலில் திராவிடர்கள் நீரை முதன்மைப்படுத்தினர். திட உணவைவிட, இளநீர், மோர், நீராகாரம் போன்றவை நம் தட்ப வெப்பத்துக்குத் தேவையான உணவுகள்.

நமக்கு வாழ்வாதாரமான நீரை எங்கிருந்தோ வந்த பன்னாட்டு நிறுவனங்களிடம் ஒப்படைத்து விட்டு, அவர்களிடமே தண்ணீரை விலைக்கு வாங்கிக் கொண்டிருக்கிறோம். பாலை விட நீரின் விலை இன்று அதிகம். உணவு விடுதிகளில் தண்ணீர் வைப்பதற்குப் பதில் இப்போது வெளிநாட்டுக் குளிர்பானங்களை வைக்கிறார்கள். காரமான உணவுக்கு ஈரமான நீரை அருந்தாமல் வேதியல் பொருட்கள் கலந்த ஏதோ ஒரு பானத்தை அருந்துவது நாகரிகமாகி வருகிறது. பத்து ரூபாய் தந்து நாம் குளிர்பானத்தை வாங்கவில்லை, பத்து ரூபாய் தந்து நம் பண்பாட்டை விற்று வருகிறோம். பத்து ரூபாய் கொடுத்து தண்ணீர் வாங்குவது என்பது வெறும் காகித நோட்டோடு சம்பந்தமுடைய விஷயமில்லை. காசு இருக்கிறவன் சுகாதாரமாக இருந்து கொள்வான், பணம் இல்லாதவன் எப்படியாவது கெட்டுப் போகட்டும் என்று சொல்கிற பணக்கார ஆதிக்கச் செயல் அது. டெண்டுல்கரும், ஐஸ்வர்யா ராயும் சிரித்துக்கொண்டே குடிக்கிற பானங்களை, ஒரு நாள் முழுக்க இந்த வெயிலில் உழைத்து, முப்பது ரூபாய் சம்பளம் பெறுகிற சாதாரண மனிதனால் அருந்த முடியாது.

உணவு என்பது எதையாவது உண்பது ஆகாது. ஒரு சமூகம் வாழும் பருவம் சூழ்நிலை, வாழ் நிலத்தின் விளைபொருட்கள், உற்பத்தி முறை, பொருளாதார நிலை என்று எல்லாவற்றுக்கும் பொருந்தி வருகிற தீங்கு இல்லாதவற்றை உண்பதுதான் உணவு.. பாஸ்ட் புட் பயன்பாட்டில், உடல் நலம் குறித்த அக்கறையைவிட சுவை குறித்த பார்வையே ஆளுமை செய்கிறது. மிகினும்

குறையினும் நோய் செய்யும் என்று உணவையே நோயாகவும், மருந்தாகவும் பார்த்த சமூகம் நம்முடையது.

தமிழா் உணவு முறைகளில் வறுத்தும் சுட்டும், அவித்தும் செய்யப்படும் உணவுப் பண்டங்களே அதிகமாக இருந்தன. எண்ணெயில் இட்ட பண்டங்கள், பொரித்த உணவுகள் தமிழா்களின் உணவு ஆகாது. கடந்த ஐம்பது ஆண்டுகளில் தமிழா் வீட்டுச் சமையலில் எண்ணெயின் பங்கு பெருமளவு அதிகரித்து இருக்கிறது. உணவு ஆரோக்கியத்தை தருவதற்குப் பதில் நோயாளிகளை அதிகம் உற்பத்தி செய்யக் காரணம், நாம் நம் உணவுப் பண்பாட்டைத் தொலைத்ததுதான்,

பேராசிரியா் சொல்வது சரிதானே. உணவில் நம் முன்னோர்கள் எவ்வளவு அக்கறையாக இருந்துள்ளனா். தற்போது, உலகின் நோய்களின் இருப்பிடமென்றும், தலைநகரம் என்றும் இந்தியா பெயா் வாங்கியிருக்கிறது. இந்தியாவில் அதிகமான மக்கள் வாழ்வதால் எல்லா நோய்களுக்குமே இந்தியாவே அதிக எண்ணிக்கை கொண்டதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

பணத்தின் பின்னாலும், நிலத்தின் பின்னாலும், நகைகளின் பின்னாலுமே தமிழா்கள் ஓடிக்கொண்டிருக்கிறாா்களேயொழிய, உடல் நலத்திற்காக ஓடுவதுபோல் தெரியவில்லை. யாரைப் பாா்த்தாலும் சா்க்கரை நோய். எவரைப் பாா்த்தாலும் ரத்தக்கொதிப்பு. எல்லோருக்கும் உப்புச்சத்து. ஊட்டக் குறைபாடு.

குழந்தைகளுக்கு எல்லாமே அதிகமாகிவிட்டது. அதிக செல்லம், அதிக உணவு, அதிக தொப்பை. முன்னரெல்லாம் குழந்தையைக் கண்டித்து வளா்ப்பாா்கள். தற்போது ஒரு வாா்த்தை சொல்வதில்லை. ஒரு அடிகூட அடிப்பதில்லை. மேலை நாட்டினா் போல் வளா்க்கிறாா்களாமே. பள்ளிகளில் பிள்ளைகள் குண்டு குண்டாக இருக்கிறாா்கள். பிள்ளைகளும் குண்டு. பெற்றோரும் குண்டு. மருத்துவா்களுக்கு நல்ல வருமானம். உடற் பருமன் நோய் பெரிய வியாதியாகப் பரவிக் கொண்டிருக்கிறது. மருத்துவமனைகளில் இவா்களுக்குத்தான் நல்ல மவுசு. கொழுப்பை உறிஞ்சி எடுக்கிறாா்களாம். அதுபோக கோழிக்கடைக்காரருக்கும் பெரிய லாபம். பேலியோ டயட் இருக்கிறாா்களாம். பழைய காலத்தில் வேட்டையாடி இறைச்சியாக உண்டு, கட்டுக் கோப்பான உடலோடு வாழ்ந்தாா்கள் என்று தற்போதைய அறிவியல் யுகத்திலும் பழைய வேட்டைக்கார டயட்டைப் பின்பற்றுகிறாா்கள்.

உணவு முற்றிலும் வணிகமாகிவிட்டது. அதிலும் குழந்தைகள் உணவு பற்றி சொல்லவே வேண்டாம். உலகத்தார் எதை, எப்போது, எவ்வளவு, எப்படி சாப்பிட வேண்டுமென்பதைக் கம்பனிகளே தீர்மானிக்கின்றன. உணவுப் பொருட்களை விளைவிப்பதிலும், சந்தைப் படுத்துவதிலும், விற்பதிலும் பன்னாட்டுக் கம்பனிகள் கொடிகட்டிப் பறக்கின்றன.

குப்பையைக்கூட, தொடர்ந்த விளம்பரங்களால் விற்றுக் காசாக்கலாம் எனும் நிலையில் தற்போதைய உலகம் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் விளம்பரம், விளம்பரங்களே விற்பனையை, இலாபத்தைத் தீர்மானிக்கின்றன. விளம்பரச் செலவும் நுகர்வோர்கள் தலையில்தான் விழுகிறது.

ஓட்ஸ் விளம்பரத்தைப் பார்த்து பிள்ளைகள் ஓட்ஸ் சாப்பிட விரும்புகிறார்கள். நூறு கிராம் ஓட்ஸ் விற்கிறார்கள். விற்பது யார் எனப் பார்த்தால் ஒரு புகழ்பெற்ற குளிர்பானக் கம்பனி. ஆஸ்திரேலியாவில் விளைந்த ஓட்ஸை, டெல்லி, குர்கான் முகவரியில் வாங்குகிறார்கள். அது பெருந்துறையில் பேக் செய்யப்பட்டு, கோயம்புத்தூர் கடைகளில் விற்கப்படுகிறது. ஆஸ்திரேலியாவில் அந்த ஓட்ஸ்சை எப்படி விளைவித்தார்கள் என நமக்குத் தெரியாது, எவ்வளவு நாளான ஓட்ஸ் என்பதும் தெரியாது.

வணிகத்தில் நடக்கும் பகல் கொள்ளை அடுக்காது நண்பர்களே.. பல மடங்கு லாபம் வைத்து விற்கிறார்கள். ஊட்டியில் ஒரு சிறு விவசாயி கேரட் பயிரிடுகிறார். அவரிடம் மொத்த வியாபாரி வாங்குகிறார். ஊட்டி மொத்த வியாபாரி மேட்டுபாளையம் வியாபாரிக்கோ அல்லது கோயம்புத்தூர் வியாபாரிக்கோ மொத்தமாக விற்கிறார். கோயம்புத்தூர் வியாபாரியிடமிருந்து சந்தை வியாபாரிகள் வாங்குகிறார்கள். சந்தை வியாபாரிகளிடமிருந்து சில்லறை விற்பனையாளர்கள் வாங்குகிறார்கள். சில்லைறைக் கடைக்காரரிடமிருந்து பொது மக்கள் வாங்குகிறார்கள். விளையும் காரட் நான்கைந்து வியாபாரிகள் கைமாறி நுகர்வோருக்கு வருகிறது. ஒவ்வொருவரும் கொழுத்த லாபம் வைத்தே விற்கிறார்கள். உற்பத்தியாளரிடம் கிலோ பத்து உரூபாக்கு வாங்கப்படும் ஒரு கிலோ கேரட், நுகர்வோருக்கு வரும்போது நாற்பது உரூபாவாக மாறிவிடுகிறது. அனைத்து விளைபொருட்களுமே விவசாயிகளிடம் மிகச் சொற்ப விலைக்கு வாங்கப்பட்டு, இடைத்தரகு முதலாளிகளால் கொள்ளை லாபம் வைத்து மாற்றி மாற்றி விற்கப்படுகின்றன. தோட்டக்காரரிடம் பத்து ரூபாய்க்கு வாங்கப்படும் இளநீர்

நாற்பது ரூபாய்க்கு விற்கப்படுகிறதா இல்லையா. தா்பூசணியை அப்படியே நிறுத்துத் தருகிறாா்களா இல்லையா? தா்பூணியின் தோல்தானே முழு எடையுமே. அதை ஒருவருமே தின்பதில்லை. கிலோ இருபது இருபத்தைந்து உரூபா. ஒரு தா்பூசணி பழத்தை இருநூறுக்கு விற்கும் முதலாளிகள், விவசாயிடம் எவ்வளவு விலைக்கு வாங்குகிறாா்கள்?

மதுரை ஆரப்பாளையம் பேருந்து நிலையம் அருகே ஒரு இளநீா் கேட்டால் விலை அறுபது உரூபா என்கிறாா். நம்மால் அறுபது உரூபா கொடுத்து இளநீா் குடிக்க முடியுமா நண்பா்களே.. நம்மால் எனத் தவறாகச் சொல்லி விட்டோமோ. எம்மால் என வைத்துக் கொள்ளுங்கள். குடிக்காமலா இருக்கிறாா்கள்? அல்லது விற்காமல்தான் இளநீா் தென்னை செடிகளாகின்றனவா?

ஒரு கடைமுன்பு நின்று கொண்டிருக்கிறோம். ஒரு அழகான யுவதி மகிழுந்திலிருந்து அன்ன நடைபோட்டு இறங்கினாா். இளநீா் வெட்டச் சொன்னாா். இளநீா் காய்களை இப்பொழுதெல்லாம் வெட்டுவதில்லை. ஒரு மிசனில் வைத்து பெரிய ஊசியால் குத்துகிறாா்கள். அழகாகக் குடித்து முடித்துவிட்டு மேலும் ஒரு இளநீரை வெட்டச் சொன்னாா். அதையும் அழகாகக் குடித்து விட்டு எவ்வளவு எனக் கேட்டாா். பையன் நூறு உரூபா என்றான். பணத்தை கொடுத்து விட்டு மகிழுந்தில் ஏறிப் பறந்துவிட்டாா். நாமாக இருந்தால் இளநீா் எவ்வளவு எனக் கேட்டுத்தானே குடிப்போம்?

இருபத்தி ஐந்து கிலோ பெரிய ராஜா அரிசி ஆயிரத்து நானூற்றி ஐம்பது உரூபா நண்பா்களே. ஒரு கிலோ ஐம்பத்தி எட்டு உரூபா (பிப்ரவரி 2018). பத்து கிலோ கிருஷ்ணா இட்லி அரிசி நானூற்றி எண்பது உரூபா. பெரிய ராஜா அரிசியில் போலியும் விற்கிறாா்கள். அனைத்துப் பொருட்களுக்கும் போலிகள் விற்கிறாா்கள். அதிகமான விலை என்றில்லாமல் எல்லாத்திலும் போலிகளே பெருமளவில் விற்கிறாா்கள். மாசா மாம்பழச் சாறு போன்றே விற்கிறாா்கள். அதே பாட்டில், அதே அளவு, அதே வடிவமைப்பு, அதே நிறம், ஸ்டிக்கா் லோகோ அனைத்துமே அச்சு அசல். பாட்டிலை வாங்கிய பின்தான் தெரிகிறது அது மாஜா இலலையென்று. பெயரை ஊற்றுப் பாா்த்தால்தான் வேறுபாடு தெரிகிறது. மோட்டல்களில் விற்கிறாா்கள். யாரும் பெயரைப் பாா்ப்பதுபோல் தெரியவில்லை. போலி பாட்டிலை விற்கிறாா் எனச் சொன்னால் குழந்தைகள் நம்ப மறுக்கிறாா்கள். எல்லோரும் வாங்கிக் குடிக்கிறாங்கதானே என்கிறாா்கள்.

நெடுஞ்சாலை மோட்டல்களில் நடப்பது அநியாயம். இதையெல்லாம் கவனிக்கத்தானே அமைச்சர், செயலாளர், ஏகப்பட்ட அதிகாரிகள், அலுவலர்கள் இருக்கிறார்கள். போலியான உணவுப் பொருட்கள். தரம் குறைந்த காலாவதியான உணவுகள். மகள், பாப்கார்ன் சாப்பிட்டு அரை மணி நேரத்திலேயே பாப்கானாக வாந்தியெடுத்ததை நம்பித்தான் ஆக வேண்டும். நேரிடையான சாட்சி இருக்கிறாரே. போண்டோ வாங்கி நல்லா இல்ல எனத் தூங்கி எறிகிறார்கள்.

நண்பர்களே.. அரசுக் கல்லூரியில் பேராசிரியர்களாக வேலைபார்க்கும் கணவனும் மனைவியும் அவர்களது குழந்தைகளும் அரசுப் பேருந்தில் செல்வதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? வரி பிடித்தமெல்லாம் போக மாதத்திற்கு இரண்டு இலக்க உரூபா பெறும் பேராசிரியர் குடும்பம் பேருந்தில் இடம் பிடிக்க முட்டி மோதி, ஓடித் திரிவதைப் பார்த்திருக்கிறீர்களா? இப்போதெல்லாம் ஐந்து இலக்க உரூபாக்கு நல்ல நான்கு சக்கர வாகனம் கிடைக்கிறதல்லவா. பேராசிரியர், மனைவியையும், குழந்தைகளையும் சொகுசாகக் காரில் உட்காரவைத்துக் கொண்டு, அழகான பாட்டுக்களைக் கேட்டுக்கொண்டே, ஊர்களுக்குப் போகலாம்தானே. வழியில் இறங்கி இளநீர் சாப்பிடலாம். தேவைப்படும் இடத்தில் வண்டியை நிறுத்தி ஓய்வெடுக்கலாம். வாழ்க்கையை இனிதாகக் கழிக்கலாமல்லவா.

காந்தியைப் போல், கல்யாணிப் பேராசிரியரைப் போல், யாமும் பிழைக்கத் தெரியாதவர்தானோ. வீட்டிற்கு விருந்தினர்கள் நிறையா வருகிறார்கள், அவர்களுக்கு காப்பித் தண்ணி போட்டுக் கொடுக்க வேண்டியதிருக்கிறது, எனவே கொஞ்சம் கூடுதலாகப் பணம் அனுப்புங்கள் எனக் கடுதாசி போட்ட சிவகாமி அம்மையாருக்கு, அனுப்பும் பணத்திற்குள்ளேயே சிக்கனமாகச் செலவு செய்து கொள்ளுங்கள், கூடுதலாகப் பணம் அனுப்ப இயலாது எனப் பதில் கடுதாசி எழுதினாராமே முதல்வராக இருந்த காமராஜர். பெருந்தலைவரும் பிழைக்கத் தெரியாமல்தான் இருந்திருப்பாரோ.

பிள்ளைகள் சிறுவயதாக இருந்தபோது, பேருந்தில் மகிழ்ச்சியாக வருவார்கள். கடந்த சில வருடங்களாக அரசுப் பேருந்துகளில் செல்வது அவர்களுக்கு சுத்தமாகவே பிடிக்கவில்லை. சில நேரங்களில் சன்னல் ஓர இருக்கை கிடைப்பதில்லை. ஊர் போய்ச் சேரும்வரை முகத்தை தூக்கி வைத்துக் கொள்கிறார்கள். மனைவி 2009 இல் பேராசிரியராகச் சேர்ந்தார். அவரும் அரசு சம்பளம் வாங்கத் தொடங்கியதிலிருந்து அவருக்கும் அரசுப் பேருந்தில்

பயணிப்பதற்கு விருப்பமில்லை. வேறு வழியில்லாமல்தான் முனங்கிக் கொண்டும், கோவித்துக் கொண்டும் எம்மோடு வருகிறார்கள்.

கடந்த சில வருடங்களாக அதிகமான வருத்தம் அவர்களுக்கு. எமது கிராமத்திற்குச் செல்வதற்கு ஐந்து பேருந்து மாறவேண்டும். யாருக்குத்தான் கோபம் வராது? வீட்டிலிருந்து சுங்கம் பேருந்து நிலையம் பெரும்பாலும் நடந்தே சென்று விடுவோம். சுங்கத்திலிருந்து சிங்காநல்லூர் பேருந்து நிலையம். நிலையத்தில் தூத்துக்குடி, நெல்லை பேருந்துகள் இருந்தால் நல்லது. இல்லையென்றால் மதுரை பேருந்து ஆரப்பாளையத்தோடு நின்றுகொள்ளும். அங்கிருந்து மாட்டுத்தாவணிக்கு வேறொரு பேருந்து. மாட்டுத்தாவணியிலிருந்து அருப்புக்கோட்டைக்கு பயணிக்க வேண்டும். அருப்புக்கோட்டையிலிருந்து தொப்பலாக்கரை பேருந்து. பிள்ளைகள் ஏறியும், இறங்கியும், ஒவ்வொரு பேருந்திலும் இடம் பிடித்தும், கூட்டத்தில் திணறியும், வேர்வையில் வழிந்தும். பாத்ரூம் போவதற்கு சிரமப்பட்டும், தவித்து விடுகிறார்கள். மனைவிக்கு பேராசிரியர் வேலை பார்த்துக்கொண்டு யாராவது இப்படித் திரிவார்களா எனும் எண்ணம். எமக்கே தெரிகிறது.

எமது அனுபவத்தில் பேருந்துப் பயணங்கள் சுகமாய் இருப்பதில்லை. அது ஏழைகளுக்கானது. வேறு வழியில்லாதவர்களே அரசுப் பேருந்துகளில் செல்ல வேண்டும். அரசும், சமூகமும் அப்படித்தான் நினைக்கிறது. திறமையிருந்தால் எப்படியாவது சம்பாதித்து, மகிழுந்து வாங்கி சுகமாகப் பயணி. எதற்கு அரசுப் பேருந்தில் செல்ல வேண்டும் என்பதே ஆளும் வர்க்கத்தின் கருத்தாக இருக்கிறது. மகிழுந்து வாங்கினால் அரசுக்கும் நல்ல வருமானம் கிடைக்குமல்லவா. எவ்வளவு வரி போடுகிறார்கள் எனத் தெரியும்தானே நண்பர்களே.

கோவையிலிருந்து மதுரைக்கு நான்கரை மணி நேரப் பயணம். பகலில் அதிகபட்சமாக ஐந்து மணி நேரம் பயணிக்க வேண்டியுள்ளது. ஒரு பேருந்திலும் சாய்வு இருக்கைகள் கிடையாது. நடுத்தர வயதினரும், ஐம்பது, அறுபது வயதுள்ளவரும் ஐந்து மணி நேரம் சாய்வு இல்லாமல் பயணிப்பது எவ்வளவு கடினம் என்பதை எந்த அமைச்சரும் அறிந்ததாகத் தெரியவில்லை. இருக்கைகள் இடைஞ்சலாக உள்ளன. இருவர் உட்காருவதற்கு இடம் போதவில்லை. ஒட்டி உட்கார வேண்டியுள்ளது. உறவுக்காரர்களோ நண்பர்களோ என்றாலும் பரவாயில்லை. தெரியாத ஒருவருடைய கையில் உரசிக் கொண்டும், தொடையில் உரசிக் கொண்டும் பயணிப்பது குறித்து யாருக்கும் ஒரு கவலையும் இல்லை. கடந்த

முறை பயணித்தபோது தொடையில் ஒரு குண்டூசி குத்தியது. எழுத்திருந்து பார்த்தால் இருக்கையில் பெரிய குண்டூசி இருக்கிறது. பேருந்து சீட்டை சரிபார்த்தவர்கள் அலட்சியமாகப் பணி செய்தது தெரிகிறது. ஊக்கின் தலைப்பகுதி சீட்டிற்குள் இருந்ததால் எம்மால் அதைப் பிடுங்க முடியவில்லை. நடத்துனரிடம் முறையிட்டு, அவர் அதைப் பிடுங்கி வெளியே வீசியெறிந்தார். பெரும்பாலான பேருந்துகளின் தரம் சொல்லிக்கொள்வதுபோல் இல்லை. மழைக்கு ஒழுகும் பேருந்துகளில் பயணித்தும் எமக்கு அனுபவம் உண்டு.

சமீப ஆண்டுகளாக, பேருந்து பயணங்களில் பெருந்தொல்லை சாராய நெடி. அனேகமாக பாதிப்பேருக்கு மேல் குடித்துவிட்டே பயணிக்கிறார்கள். நாங்கள் மதுரையிலிருந்து வழக்கமாக எட்டு மணியளவில் கோவை பேருந்தில் ஏறுவோம். எட்டு மணிக்கே இப்படியென்றால், பத்து, பன்னிரெண்டு மணிப் பேருந்துகளில் எத்தனை பேர் குடித்துவிட்டு பேருந்துப் பயணம் செய்வார்களோ. சாராய நெடியாவது பரவாயில்லை இந்த குட்கா வாடைக்கு. குட்கா, பான்பராக் வாடை அடித்தாலே எமக்கு தலைவலி வந்து விடுகிறது. கடந்தமுறை தலைவலி வந்து, பேருந்தின் முன்கதவின் ஓரமாக நின்று கொண்டே வந்தோம்.

யாம் தனியாகப் பயணித்த சமயங்களில் பக்கத்தில் அமர்ந்திருப்பவர் குடித்திருப்பதை அறிந்து வேறுஇருக்கை மாறிய அனுபவங்களும் உண்டு. நடுத்தரவயதினர், வயதானவர்கள்தான் அதிகமாகக் குடிக்கிறார்கள். பேருந்தின் பின்பகுதி முழுதும் குடிகாரர்களே நிறைந்திருக்கின்றனர். பேருந்தில் ஏறியவுடன் இருக்கையில் படுத்துக்கொள்கின்றனர். தேவையில்லாத பேச்சு, நடத்துனரோடு தகராறு, பெண்களோடு வம்பு.

ஒருமுறை குடிகாரர் ஒரு பெண்ணை சுரண்டி அந்தப் பெண் சண்டை போட்டு பேருந்தே களேபரமாகிவிட்டது. குடிகாரருக்கு ஆதரவாக ஏராளமான குடிகாரர்கள் பேசுகிறார்கள். சொந்தமா கார் வாங்கிப் போகவேண்டியதுதானே, இந்த பேருந்தில் ஏன் வர்றீங்க என்றே பலரும் பேசுகிறார்கள். யாம் அந்தப் பெண்ணுக்கு பரிந்து பேச வம்பாகிவிட்டது. குடித்துவிட்டு ஏன் பேருந்தில் வர்றீங்க, உங்களையெல்லாம் போலீஸ்ல கம்ப்ளெய்ண்ட் பண்ணனும் எனப் பேசப்போக இவ்வளவு போதாதா அவர்களுக்கு. யார்தான் குடிக்கல என கூட்டமாகச் சேர்ந்து கொண்டார்கள்.

எமக்கு அருப்புக்கோட்டை பேருந்து நிலையத்தில் நிற்பதற்கு மிகுந்த சங்கடமாக இருக்கும். அவ்வளவு சுகாதாரக் கேடு. குப்பையும், பேப்பரும்,

பிளாஸ்டிக்கும், தேநீர் கப்பும், சாக்கடை நாத்தமும், கடைகாரர்களின் ஆக்கிரமிப்பும்.. என்ன மக்களோ.. என்ன அரசுகளோ.. என்ன நாகரிகமோ.. தமிழர்கள் நாகரிகத்தில் பண்பாட்டில் உயர்ந்தவர்களாமே. யாம் ஒப்புக் கொள்ள மாட்டோம் நண்பர்களே. ஏதேனும் ஒரு ஊரின் பேருந்து நிலையத்தில் நின்று பார்த்து விட்டு தமிழர்களின் பண்பாடு எந்தளவிற்கு உள்ளது என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

விழாக்காலங்களில் பேருந்தில் இடம் பிடிப்பது மகாக் கொடுமை தோழர்களே. ஏன் தமிழர்கள் வரிசையாக நின்று ஏறிச்செல்ல மறுக்கிறார்கள்? இளைஞர்கள் முழுப் பேருந்தையே வளைத்துக் கொள்கிறார்கள். விடுமுறை முடிந்து அல்லது விடுமுறைக்கு போகிறவர்கள் போலும். தனியாளாகப் போனால் நாமளும் அடித்துப் பிடித்து ஏறிவிடலாம். பிள்ளைகளையும், கைப்பைகளையும் வைத்துக்கொண்டு பேருந்துகளில் இடம் தேடித்திரிந்த அனுபவங்களை நினைக்கும்போது எமக்கு கசப்பாக இருக்கிறது. ஒரு தீபாவளிக்கு ஊருக்குப போய்விட்டு மாலையில் ஆரப்பாளையம் வந்தோம். வரும் பேருந்து அத்தனையிலும் முண்டியடித்து ஏறிக் கொள்கிறார்கள். முண்டியடித்து ஏறுவதற்கு பேராசிரியர் எனும் நினைப்பே உறுத்தலாகி விடுகிறது. நான்கைந்து பேருந்துகளில் முயன்றும் எம்மால் இருக்கை பிடிக்க முடியவில்லை. எமது மனைவி எப்படியோ ஒரு பேருந்தில் ஏறி இரண்டு இடங்கள் பிடித்துவிட்டார். உண்மையில் யாம் அன்று மனைவி, குழந்தைகள் முன் தலைகுனிந்தே நின்றோம். யாமெல்லாம் பேராசிரியரா எனும் கேள்வி மனதைக் குடைந்துவிட்டது. தொடர்ந்து வந்த பொங்கலுக்கு ஊருக்கே போகவில்லை.

எமக்கு அருப்புக்கோட்டை பேருந்து நிலையத்தில் நிற்பது மகாக் கொடுமை எனில், எமது மனைவிக்கு எங்கள் ஊர் பேருந்து நிறுத்தத்தில் நிற்பது பெருங்கொடுமை. ஓவ்வொரு முறையும் எமக்கு அசிங்கமா இருக்குங்க என்கிறார். கிராமத்தில் இருப்பவர்களே சர்சர் என வாகனங்களில் பறக்கும்போது, பேருந்துக்காக நாங்கள் காத்துக் கிடப்பதையும், பேருந்தில் இடமில்லாமல் அருப்புக்கோட்டைவரை நின்றுகொண்டே வருவதையும், ஊரார் நம்மைப் பார்த்து சிரிக்கப் போகிறார்கள் எனும் நினைப்பாலும், எமது மனைவி மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாவது நினைத்து எமக்கும் வருத்தமாகத்தான் இருக்கிறது.

யாம் ஏன் ஒரு மகிழுந்து வாங்கி மனைவி மக்களை சுகமாய் வைத்துக் கொள்ளக் கூடாது. எம்மிடம் பணம் இருக்கிறதே. மனைவியின் வங்கிக் கணக்கிலும் இலக்கக் கணக்கில் உரூபா இருக்கிறது. மனைவியும், பிள்ளைகளும் மிகவும் சிரமத்திற்கு ஆளாகிறார்கள் எனத் தெரிந்த பின்பும் ஏன் யாம் வாங்க மறுக்கிறோம்? பணம் இல்லையென்றால், வட்டியில்லாக் கடனில், சுலபத்தவணைத் திட்டத்தில் மகிழுந்து வாங்க முடியும்தானே. யாம் அரசு கல்லூரிப் பேராசிரியர் என்பதால், எமது சம்பள இரசீதைக் கொடுத்தாலே போதும், மகிழுந்து சுலபமாக வாங்கி விடலாம் அல்லவா?

யாம் ஏன் மகிழுந்து வாங்காமல் இருக்கிறோம் தோழர்களே? உடன் படிக்கும் அனைத்து நண்பர்கள் வீட்டிலும் மகிழுந்துகள் இருக்கிறதே, நீங்க மட்டும் ஏன் வாங்கமாட்டேங்கிறீங்க எனப் பிள்ளைகள் கேள்விகளால் திணறடிக்கிறார்கள். கூடப் படிக்கும் நண்பனின் வீட்டில் ஏற்கனவே இரண்டு கார்கள் வைத்திருக்கிறார்களாம். மூன்றாவதாக புது கார் ஒன்று வாங்கி விட்டார்களாம். அவர்கள் மூன்று கார் வைத்திருக்கிறார்கள், நமக்கு ஏன் ஒரு கார் கூட இல்லை என மகன் சீறுகிறார். ஒரு வீட்டில் ஐந்து பேர் இருக்கிறார்கள். மூன்று கார்கள், ஒரு பைக், ஒரு ஸ்கூட்டி வைத்திருக்கிறார்கள்.

அவசியம், அத்தியாவசியம் என ஆகிவிட்ட மகிழுந்தை ஏன் வாங்க மறுக்கிறோம்? எம்மிடம் ஒரு ஸ்கூட்டி இருக்கிறது. 2006 ஆம் ஆண்டு திருவண்ணாமலையில் வாங்கியது. மிகவும் பழுதாகிவிட்டது. பெட்ரோலைக் குடிக்கிறது. லிட்டருக்கு இருபது இருபத்தைந்து கி.மீ.தான் ஓடுகிறது. அடிக்கடி ரிப்பேர் ஆகிவிடுகிறது. இருவருடங்களுக்கு முன்பு வரையிலும் நால்வரும் இந்த வண்டியில்தான் பயணித்தோம். தற்போது பிள்ளைகள் வளர்ந்து விட்டதால் நான்கு பேருக்கும் இடம் போதவில்லை. எங்காவது போவதென்றால் கால்டாக்சியில போகிறோம். அருகே என்றால் முதலில் மனைவியையும் மகளையும் அங்கே விட்டு விட்டு, பின் மகனை அழைத்துச் செல்கிறோம். குறைந்த பட்சம் இன்னொரு ஸ்கூட்டியாவது வாங்கலாம் அல்லவா?

கடந்தமுறை சிங்காநல்லூரிலிருந்து வீட்டிற்கு டாக்சியில் வந்தோம். வழக்கமாக நூற்றி இருபதுக்குள்தான் வரும். டிரைவர் இருநூற்றி இருபது உரூபா பில் என்றார். அவ்வளவு வராதே என்றதற்கு, பீக்அவர்ஸ் எனச் சொன்னார். சாதா அவர்ஸ், பீக் அவர்ஸ் என்றெல்லாம் எப்படிப் பிரிக்கிறார்கள்? கோவையில் ஒன்றும்

பெரியளவில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதில்லை. நியூயார்க், டோக்கியோ, மும்பை போன்ற மாநகர்களில் அமல்படுத்தப்படும் பீக்அவர்ஸை கோயமுத்தூரிலும் அமல்படுத்தினால் கோவம் வருமா வராதா நண்பர்களே.

மகிழுந்து என்றில்லை. நாங்கள் வீடும் வாங்கவில்லை தோழர்களே. யாம் 1998 முதல் பேராசிரியராகப் பணியாற்றுகிறோம். எமது மனைவி தனியார் பள்ளியில் வேலை பார்த்தார். ஆசிரியர் பயிற்சியில் பணி புரிந்தார். கல்வியியல் கல்லூரியிலும் சேர்ந்தார். 2009 முதல் அவரும் அரசுக் கல்லூரி பேராசிரியராகப் பணியாற்றுகிறார். பத்து வருடங்களாக பைய் நிறைய ஊதியம் வாங்கும் நாங்கள், மழைக்கு ஒழுகும் அரசு குடியிறுப்பில் வசிக்கிறோம். மழை பெய்தால் வீடே நனைகிறது. முக்கியமாக சமையல் அறை. சமையல் செய்யும்போது மழைபெய்தால், மழைநீரை வைத்தே சமைத்துவிடலாம் போல. மாடிமேல் டைல்ஸ் கல் பதித்தோம். ஒழுகாத சீட் வாங்கிப் போட்டோம். சிமெண்ட் வைத்துப் பூசிப் பார்த்தோம். ஒழுகுவது நின்றபாடில்லை. பழைய வீடு. உள்பக்கம் கூரை வெடித்துக் கிடக்கிறது. புதியவர்கள் வீட்டிற்கு வந்தால் கொஞ்சம் அச்சத்துடனேயே உட்கார்ந்திருப்பார்கள். பூசினாலும் சிறிது காலத்தில் விழுந்து விடுகிறது.

இந்த வாடகை வீட்டை வாங்குவதற்கு நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டோம் தெரியுமா? யாம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அலுவலகத்தில் விண்ணப்பித்து, வீடு காலியாக இருக்கிறதா எனக் கேட்டபோது இல்லை என்றார்கள். பின்னர் அங்கே, இங்கே விசாரித்துப் பார்த்ததில் இந்த ஒரு வீடு காலியாக இருந்தது. அதுவும் இங்கே வசித்தவர் வீடு சரியெல்லையென்று, அருகேயிருந்த வீட்டிற்கு மாறியதால் காலியானது. ஒரு வீடு காலியாக இருக்கிறது, அதை ஒதுக்கித் தாருங்கள் என்றதற்கு, அது கண்டெம்டு ஹவுஸ், யாருக்கும் ஒதுக்க முடியாது என்றார்கள். கண்டெம்டு அவுஸ் என்றால் மனிதர் வாழ்வதற்கு தகுதியில்லாத வீடு என அர்த்தம். மேற்கூரையில் விரிசல் கண்டு விழுந்து விடும் அபாயத்திலிருக்கும் வீடு எனப் பொருள்.

இந்த வீட்டிற்குப் குடிபோக வேண்டாம் என்றோம். மனைவி கேட்கவில்லை. முன்னர் குடியிருந்த வீட்டில் சிறு தகராறு வந்து விட்டது. யாம் வாடகை வீடுகள் தேடித் திரிகிறோம். மனைவியோ, இனி வாடகை வீட்டிற்கே வரமாட்டோம் என்கிறார். எக்காரணம் கொண்டும் இனிமேல் வாடகை வீட்டிற்கு வர மாட்டோம் எனச்

சொல்லிவிட்டார். சொந்த வீட்டிற்கு யாம் எங்கே போவது? வீட்டு வசதி வாரியத்தில் விண்ணப்பித்திருந்த நினைவு வந்து அங்கே ஓடினோம். அங்கேயும் வீடு இல்லை.

ஒரு வீடு இருக்கிறது, அதுவும் கண்டெம்டு ஹவுசு. மனைவி இந்த வீட்டையாவது வாங்குங்கள் அங்கே போய்விடுவோம் என்கிறார். பிள்ளைகளை வைத்துக் கொண்டு, இடிந்து விடும் எனச் சொல்லும் வீட்டிற்கு எப்படி போவது என யாம் மறுக்கிறோம். எங்களுக்குள் தகராறு, சண்டை. யாம் முடியாது என உறுதியாக மறுத்துவிட்டோம். எதாவது நல்ல வீடாகப் பார்த்து கொஞ்ச நாட்கள் வாடகைக்கு இருப்போம், பின்பு ஒரு வீடு கட்டிக் கொள்ளலாம் எனப் பேசிப் பார்த்தோம். ஒன்றும் நடக்கவில்லை.

மனைவியே விட்டுவசதி வாரிய அலுவலகம் சென்று, பார்க்க வேண்டியவர்களைப் பார்த்து, பேச வேண்டியதைப் பேசி முடித்து விட்டார். வாழத் தகுதியற்ற வீடென்றும், எமது சொந்த விருப்பத்தின் பேரில் வீட்டிற்குக் குடிபோவதாகவும், ஏதேனும் அசம்பாவிதம் நடந்தால், அதற்கு யாமே பொறுப்பேற்பதாகவும், வாரியத்திடம் எந்த இழப்பீடும், நீதிமன்ற நடவடிக்கையும் கோரமாட்டோம் எனவும் ஒரு வழக்கறிஞரிடம் அப்பிடவிட் அதாவது உறுதிமொழிச் சான்று கேட்டார்கள். யாம் வாங்கிக் கொடுத்தோம். ஒரு பெண் அலுவலருக்கு ஆறாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டி வந்தது. அவர் அலுவலகத்தில் வாங்காமல், அவரது வீட்டிற்கே வரச் சொல்லி பணத்தைப் பெற்றுக் கொண்டார். லஞ்சம்தானே நண்பர்களே. என்னம்மா இப்படி என மனைவியிடம் கேட்டதற்கு, அவர் சில பெயர்களைச் சொல்லி, இருபதாயிரம், முப்பதாயிரம் கொடுத்தார்களாம். நமக்கு பழைய வீடென்பதால் ஆறாயிரமாம் என்றார்.

வீட்டின் சாவியை வாங்கிவருவதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது. வீட்டைத் திறந்து பார்த்தால். ஒன்றும் சொல்வதற்கில்லை. 2009, ஏப்ரல் மாதம் முழுக்க வீட்டை சரிசெய்தோம். மின் இணைப்பு, தண்ணீர் குழாய் மாற்றுதல், சுவர் பூச்சு, கதவு சரிபார்ப்பு, பெயிண்ட் அடித்தது என இருபத்தைந்தாயிரம் உரூபா வரையிலும் செலவானது. இதோ பத்தாவது வருடத்திலும் அதே வீட்டில்தான் வசிக்கிறோம். மேற்கூரையை இருமுறை பூசி விட்டோம். மூன்று மாதங்களுக்குமுன் பூசும்போது, எமது மைத்துனர் வீடு ரொம்ப பழசாயிடுச்சே சார், மாத்திரக் கூடாது என்றார். புது வீடு கட்டுங்க கூடவே இருந்து நல்ல வீடா கட்டிக் கொடுக்கிறோம் என்றார். புது வீடொன்று கட்டிக் கொள்ளட்டுமா தோழர்களே.

அனைத்து வங்கிகளிலும் வீட்டுக் கடன் தருகிறார்களல்லவா? வீட்டிற்கு மட்டுமா கடன்? அனைத்திற்கும் கடன் வாங்கிக் கொள்ளலாம். வாகனக் கடன், கல்விக் கடன், விவசாயக் கடன், வணிகக் கடன், நகைக்கடன், எங்கும் கடன். எல்லாத்துக்கும் கடன். எப்போதும் கடன்.

வட்டிக்கு கூவிக் கூவிக் கொடுகிறார்கள். வங்கிக்குப் போனாலே, சார் ஒரு லோன் வாங்கிக்கிறீங்களா எனக் கேட்கிறார்கள். கடன் வேண்டாம் என்றால் நம்மை ஏற இறங்கப் பார்க்கிறார்கள். லோன் மேளாவாமே. அனைத்து வங்கிகளும் கடன் திருவிழா நடத்துகிறார்கள். நாட்டில், உலகத்தில் கடன்படாதவர் என ஒருவரும் இருக்க கூடாது எனும் ஒற்றைக் குறிக்கோளில் வங்கிகள் செயல்படுகின்றன. எல்லாம் வட்டி படுத்தும் பாடு நண்பர்களே. நமக்கு கடன் கொடுத்து, அதில் வரும் வட்டியில்தானே வங்கிகள் மஞ்சம் குளிக்கின்றன.

கடன் பட்டார் நெஞ்சம் கலக்கினாற் போலேவாம். கடன்பட்டவர் தாம் இன்று நெஞ்சை நிமிர்த்தித் திரிகிறார்கள். உல்லாச வாழ்வை அனுபவிக்கிறார்கள். தீவுகளை விலைக்கு வாங்குகிறார்கள். கோடிகோடியாகக் கடன் வாங்கி ஏப்பம் விட்டு விட்டு மற்றொரு நாட்டில் போய் பதுங்கிக் கொள்கிறார்கள். பதுங்குவதுகூட இல்லை. அங்கும் உல்லாச வாழ்வு தொடரத்தான் செய்கிறது. எங்கள் நாட்டில் கோடிகோடியாகக் கொள்ளையடித்து விட்டு உங்கள் நாட்டிற்கு வந்து விட்டால், மறபடியும் அன்னாரை எங்கள் நாட்டிற்கே திருப்பி அனுப்புங்கள் என இந்திய அரசால் கேட்க முடியுமா நண்பர்களே. அதற்கு பன்னாட்டுச் சட்டம் அனுமதிக்குமா தோழர்களே. வாராக்கடன் என்றால் என்னவென்று தெரிந்து வைத்திருக்கிறீர்கள்தானே.

வாராக் கடன். வராத கடனாம். வா—வருதல், ரா— வருதல். ஆனால் கொடுத்த கடன் மட்டும் திரும்ப வராது. வாங்கும் போதே வங்கிக்காரர்களுக்கும் தெரியும், கடன் வராது என்று. எல்லாம் கூட்டுக் கொள்ளை. கமிசன். நூறுகோடி கடனுக்கு பத்து கோடி கமிசன் கிடைத்தால், வங்கி மேலாளர் மாட்டோம் எனவா சொல்லப்போகிறார். வராக்கடனை அரசாங்கமே தள்ளுபடி செய்துவிடும் என்பதையும் அறியாதவரா அந்த மேனேஜர்.

உழுவதற்கு டிராக்டர் வாங்கி, தவணையைக் கட்ட முடியவில்லை என்றால் அடியாட்களை கூட்டி வந்து விவசாயியை அடித்துப் போட்டு, டிராக்டரையும் ஓட்டிச் செல்கிறார்கள். அவமானம் தாங்காத எளிய விவசாயி வாழ்க்கையையே முடித்துக்

கொள்கிறார். ஆறாயிரம் கோடி அமுக்கிய தொழிலதிபர், உல்லாசக் கடற்கரையில் ஒய்யாரச் சிட்டுகளோடு ஓடியாடித் திரிகிறார். அரசுகளும் அவர்கள் பக்கம்தான் நிற்கிறது. அரசியல் நிபுணர்களும் அவர்களைத்தான் ஆதரிக்கிறார்கள். விவாதங்களில் பேசுகிறார்கள். டிராக்டர் கடனுக்கு வாங்கினால் கடனைக் கட்ட வேண்டுமல்லவா. சரி. உங்களவர் ஏன் கடனைக் கட்ட மறுக்கிறார்? அவர் தொழிலதிபர். தொழிலில் லாபமும் வரும், நட்டமும் வரும். நட்டம் வந்தால் அரசாங்கம்தான் உதவி செய்து கைதூக்கி விடவேண்டும். பின் எப்படி இந்தியா தொழில்வளத்தில் முன்னேறும்? தொழில்துறை எப்படி வளர்ச்சி பெறும்? நாடு எப்படி வல்லரசாகும்? இந்தியா எப்படி உலகை அடக்கி ஆளும்? நல்லது பேச்சாளர்களே, உங்கள் ஞானம் பெருகட்டும்.

எமக்கு எந்தக் கடனும் இல்லை நண்பர்களே. முதுநிலை படிக்கும்போது ஆயிரத்து ஐநூறு உரூபா கடன் என அரசாங்கம் கொடுத்திருக்கிறது. சில மாதங்களுக்குமுன் பழைய கடிதங்கள் பார்த்தபோது தெரிய வந்தது. வேலைக்குப் போனபின் அந்த கடனைத் திரும்பச் செலுத்த வேண்டுமாம். எந்த தலைப்பின் கீழ் அந்தக் கடனைத் திரும்பக் கட்டுவது எனத் தெரியவில்லை.

2017–18 ஆம் நிதியாண்டில் மட்டும் யாம் 2,36,329 உரூபா வருமான வரி கட்டியிருக்கிறோம். தொழில் வரி என தனியே 2500 உரூபா மாநகராட்சிக்கு செலுத்தியிருக்கிறோம்.

ஒரு வருடத்தில் யாம் பெற்ற மொத்த ஊதியம் 15,42,324 உரூபா. வருங்கால வைப்பு நிதியில் 1,85,000 உரூபா செலுத்தியிருக்கிறார்கள். வீட்டு வாடகையாக 46,996 உரூபா பிடித்திருக்கிறார்கள். அஞ்சலக காப்பீடாக உரூபா 30,952, எல்.ஐ.சி காப்பீடு 6,372, குடும்ப நல சேமிப்பு 720 செலுத்தியிருக்கிறோம். ஒவ்வொரு மாதமும் 22000 உரூபா வருமான வரியாகப் பிடித்தம் செய்திருக்கிறார்கள்.

யாம் வீட்டுக்கடன் வாங்கினோமென்றால் வருமான வரியில் பெருமளவு மிச்சமாகும். எமக்கு தெரிந்த பல பேராசிரியர்கள், அரசாங்கத்திற்கு ஒரு நையாபைசா கூடக் கொடுக்க கூடாது எனும் எண்ணத்தில், லோன் போட்டு இரண்டாவது மூன்றாவது வீடெல்லாம் கட்டியிருக்கிறார்கள். லோன் போட்டு அபார்ட்மெண்டே கட்டும் பேராசிரியர்களும் உண்டு. சொந்தமாக வீடு வைத்திருக்கும் பலர், லோன்போட்டு வீடு கட்டி பெருத்த வாடகைப் பணம் வாங்குகிறார்கள்.

கடந்தாண்டு யாம் 6,20,091 உரூபா வருமான வரியாகக் கட்டினோம். யாம் 2012 லேயே இணைப் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றோம். ஆனால் அதற்கான ஊதியம் பெறவில்லை. நான்கு வருடங்கள் கழித்தே மொத்தமாக நிலுவைத் தொகை கொடுத்தார்கள். ஒவ்வொரு ஆண்டும் நிலுவைத் தொகையைக் கணக்கிட்டு, வருமான வரி பிடித்திருந்தால் குறைவாக வந்திருக்கும். ஆனால் 2016–17ஆம் ஆண்டின் வருமானத்தோடு, நிலுவைத்தொகை வருமானத்தையும் மொத்தமாகச் சேர்த்துவிட்டார்கள். நிலுவைத் தொகை பதினைந்து இலக்க உரூபா. அதற்கான வரிமட்டும் நான்கு இலக்க உரூபா.

இந்த விளம்பரத்துல ஐந்து சென்ட், மொத்தமா பன்னிரெண்டு இலக்க உரூபான்னு போட்டிருக்கு, இத மட்டுமாவது பார்க்கலாமா? பார்க்கலாமே.. மனைவியை அழைத்துக்கொண்டு எவ்வளவோ இடங்களில் வீடும் மனையும் பார்த்தாயிற்று. நீலாம்பூர் பக்கத்துல ரெண்டு வீடு மொத்தமா அறுபது இலக்கத்துக்கு தர்றாங்களாம், பிள்ளைங்க ரெண்டு பேரும் ஆளுக்கொரு வீடா வச்சுக்குவாங்க, வாங்கிருவோமா. கண்டிப்பா வாங்கிடலாம்.

நீங்க வருசம்பூராம் சும்மாவே கோயம்புத்தூரச் சுத்திக் காட்டி ஏமாத்துறீங்க. உங்களுக்கு வீடு வாங்குற எண்ணமே இல்ல. எம்ம எமாத்துறது நல்லாத் தெரியுது. இனிமே உங்களோட சேர்த்து வீடு, நிலம் பார்க்க எங்கேயும் வரமாடோம். கடந்த இரண்டு வருடங்களாக நாங்கள் வீடு பார்க்காமல் இருக்கிறோம். ஆனாலும் ஞாயிறு தினமலரில் வரும் வீட்டு விளம்பரங்களைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. வீடுதான் வாங்க மாட்டேங்கறீங்க, அட்லீஸ்ட் காராவது வாங்கலாமில்ல. ஏன்தான் இப்படி இருக்கீங்களோ.

யாம் வீடு பார்க்கப் போகும்போது மகனும் சிலமுறை வந்திருக்கிறார். எஸ்.ஐ.ஹச்.எஸ் காலனி அருகே விமான நிலைய சுவரை ஒட்டி ஒரு வீட்டைப் பார்த்தோம். அழகாகக் கட்டியிருந்தார்கள். வீட்டின் உள்அலங்காரம் பிரமாதம். பாத்ரூமில் வைத்திருந்த டப் அதாவது குளிக்கும் தொட்டி மகனுக்கு மிகவும் பிடித்துவிட்டது. இந்த வீட்டையே வாங்கிரலாம்பா. டப்பு நல்லாயிருக்குன்றதுக்காக வீட்ட வாங்குவாங்களா தம்பி. நல்லா குளிக்கலாம்பா, பிளைட் பறக்குறத கிட்ட இருந்து பார்க்கலாம்பா.

கோயம்புத்தூரில் எந்த விதமான முறையான திட்டமிடலோ, வடிவமைப்போ, முன்னோக்கிய திட்டமிடல்களோ, கட்டமைப்புகளோ இன்றி குடியிறுப்புகள்

அமைக்கப்படுகின்றன என்பதை அறிவீர்களா நண்பர்களே. நகர வளர்ச்சிக்கென்றே ஒரு துறை இருக்கும்போது, வளர்ச்சிக் குழுமம் இருக்கும்போது, நமக்கெதற்கு கவலை என்கிறீர்களா? அதுவும் சரிதான்.

விமான நிலைய சுவரையொட்டி வீடுகட்டுவதற்கு எப்படி அனுமதிக்கிறார்கள் நண்பர்களே? பலரும் வீடுகளைக் கட்டி குடியேறிய பின்னரே அனுமதி கேட்டு விண்ணப்பிப்பதாகப் பேசிக்கொள்வது உண்மைதானா. உள்ளாட்சி, நகராட்சி, மாநகராட்சி அலுவலகங்களுக்கு எதன் பொருட்டேனும் சென்றிருக்கிறீர்களா? உறவினரோ, நண்பர்களோ வேலை செய்தால் அவர்களிடம் என்ன நடக்கிறது என்பதைக் கேட்டுப் பாருங்களேன்.

கல்வித்துறையிலேயே ஊழலும் லஞ்சமும் பெருத்துவிட்டதென்றால், நமது நகராட்சிகள், மாநகராட்சிகள் எப்படி இருக்கும் எனத் தெரியாதா? அரசு இயந்திரம் என்ன லட்சணத்தில் செயல்படுகிறது எனத் தெரிந்தால், குருதி சூடாகும் தோழர்களே. மக்களிடம் வரியாகப் போட்டு கசக்கி வாங்கும் வரிப்பணம், அரசு இயந்திரத்தால் வீணாகக் கொட்டப்படுகிறது நண்பர்களே.

மெத்தப் படித்தவர்கள் நிறைந்திருக்கும் கல்லூரிகளிலேயே, கொட்டேசன் அதாவது விலைப்பட்டியல் இல்லாமல் உபகரணங்கள் வாங்கப்படுவது உண்மை நண்பர்களே. முதலிலேயே பொருட்களை வாங்கிக் கொள்கிறார்கள். பின்தேதியிட்டு விலைப்பட்டியல் தருகிறார்கள். மூன்று விலைப் பட்டியல் தருபவரும் ஒரே ஆள்தான். ஒருவரே, ஒரு கம்பனிக்காரரே, மூன்று கம்பெனியின் விலைப் பட்டியலையும் தருகிறார். அவரே விலையைப் போடுகிறார். ஒரு கம்பெனியில் 500 உரூபா, மற்றொன்றில் 490 உரூபா, இன்னொன்றில் 520 உரூபா. மேற்படி உபகரணத்திற்கு மூன்று விலைப் பட்டியல் கோரப்பட்டது, மூன்றிலும் குறைந்த விலைக்குத் தரும் இந்த கம்பெனியில் உபகரணத்தை வாங்க அனுமதிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம் என முதல்வருக்கு அனுப்பினால் அவரும் கையெழுத்திட்டு விடுவார். ஆண்டின் இறுதியில் நடக்கும் ஆடிட்டிலும் அதாவது கணக்குச் சரிபார்ப்பிலும் ஓகே ஆகிவிடும். கணக்குப் பதிவர்களுக்கு மூன்று விலைப்பட்டியல் இருக்கிறதா, குறைந்த விலையில் கொடுக்கும் கம்பெனியிடமிருந்து வாங்கியிருக்கிறார்களா என்பதே போதும். பில், வவுச்சர்ஸ் எல்லாம் சரியாக இருந்தால் ஆடிட்டிங் முடிந்துவிடும். அப்படியே தவறு கண்டுபிடித்தாலும் என்னாகிவிடும். பேராசிரியர்களிடம் ஆடிட்டர் செலவுக்கென்றே பணம்

வசூலிக்கிறார்கள். ஆடிட்டர்களுக்கு நட்சத்திர விடுதிகளில் ரூம் போடுகிறார்கள். வேண்டியதெல்லாம் செய்து கொடுக்கிறார்கள். போகும்போது உறையும் கொடுக்கிறார்கள். அத்தனை கணக்கும் அருமையிலும் அருமை எனச் சான்றளிப்பதற்குக் கசக்குமா என்ன?

மூன்று கொட்டேசனையும் ஒருவரே தருவதால் பொருளின் தரம் மட்டமாக இருக்கிறது. பெரும்பாலும் போலி. பணமும் அதிகமாக அழ வேண்டியதிருக்கிறது. தரமான உபகரணம் எட்டாயிரமெனில், போலி கம்பனிக்காரனும் அரசிடமிருந்து பணம் எட்டாயிரத்தை வாங்கிக் கொள்கிறான். கொடுப்பதோ தரமில்லாத, மலிவான டெல்லி தயாரிப்பு உபகரணம். உபகரணத்தில் எந்தக் கம்பெனி, என்ன பெயர் என்பதுகூட இருப்பதில்லை. அதிகப்பட்சமாக நான்காயிரம்கூட வராது. இப்படி வாங்குவதற்கு அதிகாரத்திலுள்ளவர்களுக்கு சன்மானமும், பரிசும் கொடுக்கிறார்களென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

சமூகத்தில் உட்சபட்சமாகப் படித்தவர்கள், மெத்தப் படித்தவர்கள், ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் வாங்கியவர்கள், ஏன், எதனால் தவறு செய்கிறார்கள் நண்பர்களே. ஏன் நல்ல கம்பெனிகளிடம் விலைப்பட்டியல் பெற்று, நேரில் போய் பார்த்து விலை கேட்டு, தட்டியும் கொட்டியும் செயல்விளக்கமும் செய்து பார்த்து, கொஞ்சம் விலையைக் குறைக்கச் சொல்லி கேட்டு, அரசு கல்லூரி சார் கொஞ்சம் குறைச்சுக்கோங்க என்றோ, ஏழை மாணவர்கள் படிக்கும் கல்லூரி சார், கொஞ்சம் பார்த்துப் போடுங்க என்றோ கேட்டுப் பெற்று, கல்லூரிக்கும் மாணவர் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் சேவை செய்வதில்லை இந்த மெத்தப் படித்த மேதாவிகள்?

பத்து உருபாக்கு பேனா வாங்கும்போது எத்தனைமுறை எழுதிப் பார்க்கிறார்கள்? ஒரு கத்தரிக்காய் வாங்கும்போது எவ்வளவு பார்க்கிறார்கள்? ஒரு தேங்காய் வாங்கும்போது எத்தனை முறை குலுக்கிப் பார்த்து வாங்குகிறார்கள்? ஒரு புடவை எடுக்கும்போது எப்படி மூளையைக் கசக்கிப் பிழிந்து வாங்குகிறார்கள்? ஒரு சேலை வாங்குவதற்கு எவ்வளவு உழைப்பு.. விசாரிப்பு.. ஒத்திகை.. இது சொந்தப் பணம். அது? அது அரசாங்கப் பணமல்லவா? அரசாங்கம் யார்? அரசாங்கம் பணத்தை எப்படிச் சம்பாதிக்கிறது? நம்ம பணத்துல ஒரு நைய பைசாவக்கூட அரசாங்கத்துக்கு கொடுக்கக் கூடாது சார்? ஏன் சார் நீங்க வேஸ்ட்டா ரெண்டரை இலக்க உருபா அரசாங்கத்துக்குக் கட்டுறீங்க? மேடம் எவ்ளோ கட்றாங்க சார்?

என்ன சார் இந்தக் காலத்துல போயி.. சீக்கிரமா ஒரு வீட்டை வாங்குங்க சார், தெரிஞ்ச பில்டர் இருக்காரு, உங்கள பார்க்கச் சொல்லட்டுமா சார்?

நண்பர்களே, நில புரோக்கர் வேலை பார்க்கும் பேராசிரியர்களை உங்களுக்குத் தெரியுமா? ஊரில் எங்கெல்லாம் குறைந்த விலைக்கு நிலம் கிடைக்கிறது என்பதை விரல் நுனியில் வைத்திருக்கும் பேராசிரியர்களை அறிவீர்களா?

பிரபஞ்சத்தைப் பற்றி அறிந்தவர்தான் பேராசிரியராம். உண்மையா நண்பர்களே. பிரபஞ்சத்தின் கீழுலுள்ள எதைப் பற்றிக் கேட்டாலும் பேராசிரியரால் விளக்க முடியுமாம். உண்மையை அறிந்தவர் பேராசிரியராம்.

எத்தனை பேராசிரியர் உண்மையை அறிய வேண்டிப் பேராசிரியராகிறார்? பேராசிரியரானால் நிறையச் சம்பளம் கிடைக்கும். நிறைய சொத்து வாங்கலாம். சுகமாய் வாழலாம். அவ்வளவு தானே. யாம் சொல்வது பொய் என்றால், பேராசிரியர்களை அவர்கள் வைத்திருக்கும் கப்பல் போன்ற சொகுசுக் கார்களில் அவரவர் வசிக்கும் நகரங்களை, மாநகரங்களை ஒரு முறை சுற்றிப் பாத்துவிட்டு வரச் சொல்லுங்கள் தோழர்களே.

நமது நகரங்கள் எப்படி இருக்கின்றன நண்பர்களே. கான்கிரீட் காடுகள்தானே, மறுக்க முடியுமா? ஒரு சென்ட் இடம் முப்பது இலக்க உருபாயாம். இடத்தை விற்பவர் சொல்கிறார், வீட்டுக்கு முன்னாடி ஒரு கடை போட்டிங்கன்னா பணத்தை அள்ளிரலாம் சார். எடம் மெயினான இடத்திலிருக்கு.

பேராசிரியர்கள் இலக்க இலக்கமான உருபா போட்டு நிலம் வாங்குகிறார்களா இல்லையா? ஏன் எந்தப் பேராசிரியரும், யாம் கல்லூரிப் பேராசிரியர் பணி செய்கிறோம், மாணவர் சமூகத்திற்கு தன்னலமற்ற சேவை செய்கிறோம், வருங்கால உலகத்தைச் சமைக்கிறோம், பிரபஞ்சத்தின் அறிவைப் பெருக்குகிறோம். எமக்கு ஐந்து சென்ட் நிலம் கொடுப்பது அரசின் கடமையெனக் கேட்பதில்லை? நிலம் வாங்கி, ஒரு வீடு கட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கும் ஒரு பேராசிரியரால் அல்லது தமது வாழ்நாள் சாம்பாத்தியமெல்லாம் ஒரு வீடு கட்டுவதற்கே போதவில்லை எனும் நிலை கொண்ட ஒரு பேராசிரியரால், மாணவர்களுக்கு எப்படி மனப்பூர்வமாக வகுப்பெடுக்க முடியும்?

பேராசிரியரொருவர் உலகில் பிச்சைக்காரர்கள் இருப்பதை எப்படி சகித்துக் கொள்கிறார்? தலையெழுத்தை நம்புகிறாரா? நம்புகிறவர் பேராசிரியரா? பேராசிரியராவதற்கு தகுதியுடையவரா? எதையும் நம்புகிறவர் பேராசிரியரா அல்லது அனைத்தையும் கேள்விக்கு உட்படுத்துபவர் பேராசிரியரா? ஆராய்ந்து பார்த்துத்தானே முனைவர் பட்டம் வாங்கினார்? ஏன் இருபத்தியோராம் நூற்றாண்டிலும் வயதான ஒரு மனிதர், பிச்சையெடுத்துத் திரிகிறார் என்பதை பேராசிரியர் சிந்தித்ததுண்டோ? சிந்தித்து உலகில் பிச்சைக்காரர்களே இல்லாமல் செய்வதற்கு ஏதேனும் ஆராய்ச்சிகள் செய்திருக்கிறாரா? பேராசிரியர்கள் ஆராய்ச்சிகள் செய்வது உண்மையை அறியவா? ஊதிய உயர்வுக்கா? பெருமைக்கா? அல்லது தாங்கள் அறிவானவர்கள் எனக் காட்டுவதற்கா?

பேராசிரியர் கார் வைத்திருக்கிறார். நல்லது. ஏன் தமது அகன்ற அறிவால் உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் கார் கிடைக்க பேராசிரியர் சிந்திக்கக் கூடாது? பெரும் பேராசிரியரல்லவா? அறிவால் முடியாததென்று எதுவும் இல்லையென பேராசிரியருக்குத் தெரியும் தானே?

பேராசிரியர்கள் பெட்ரோல் போடுகிறார்களல்லவா? லிட்டருக்கு எவ்வளவு தருகிறார்கள்? ஒரு பேரல் பெட்ரோல் எத்தனை டாலருக்கு இந்திய அரசு வாங்குகிறது எனப் பேராசிரியர்களுக்குத் தெரியும்தானே. பெரிய ஆசிரியர்களல்லவா? உலக நடப்புகளை அக்கு வேறு ஆணிவேறு என நிச்சயம் தெரிந்து வைத்திருப்பார்கள்.

முப்பது உரூபாகூட பெறாத ஒரு லிட்டர் எண்ணெய்யை எழுபத்து மூன்று, எழுபத்து நான்கு உரூபாக்கு அரசாங்கம் விற்கிறது. எத்தனை மடங்கு உயர்த்தி விற்கிறது அரசு? சாமர்த்தியமாக பெட்ரோலுக்கும் தமக்கும் சம்பந்தமில்லாததுபோல் எண்ணெய் நிறுவனங்களைக் கைகாட்டுகிறது அரசு. நிறுவனங்கள் தினமும் பெட்ரோல் விலையைத் தீர்மானிக்கின்றன. நாட்டின் அனைத்தும் சப்ளை – டிமாண்டாகி வருகிறது. பங்குச் சந்தைபோல இனி ஒவ்வொரு மணி நேரமும் விலையைத் தீர்மானிப்பார்கள். ஏன் இப்படி பகல் கொள்ளை அடிக்கிறீர்கள் எனப் பேராசிரியர்கள் கேட்டதுண்டா?

மக்களிடம் இப்படிப் பிடுங்கும் பணம்தானே ஆய்வுக்கூட உபகரணங்கள் வாங்க, புத்தகம் வாங்க, ஆராய்ச்சி செய்ய, பேராசிரியர்களிடம் வருகிறது. பேராசிரியர் என்றைக்காவது குப்பையை அள்ளியதுண்டா? குப்பை

அள்ளுபவர்களும் மனிதர்கள்தானே, பேராசிரியர்கள் ஏன் குப்பை அள்ளும், சாக்கடையைத் தூர்வாறும் இயந்திரங்களைக் கண்டுபிடிக்கவில்லை. அறிவில்லையா அல்லது மனமில்லையா. சந்திரனுக்கே ராக்கெட் அனுப்பும் பேராசிரியர்களால் சாக்கடை அடைப்பைச் சரிசெய்ய இயலாதா? சாக்கடைக்குள் இறங்கி வேலை செய்யும் அந்த அன்பான மனிதர்களுக்கு வேண்டியதெல்லாம் கொடுங்க எனப் பேராசிரியர்கள் பேசியதுண்டா? பேராசிரியரால் சாக்கடையில் இறங்க முடியுமா? முடியாததைச் செய்பவருக்குத்தானே மதிப்பும் மரியாதையும் அதிக ஊதியமும்.

பேராசிரியர்கள் வருடத்தில் பத்து நாட்கள் தெருக்கூட்டும் வேலையும், பத்து நாட்கள் விவசாய வேலையும், பத்து நாட்கள் உப்பளத்தில் வேலையும் ஏன் செய்யக்கூடாது? அறிவானவர் உடலுழைப்பு செய்யக் கூடாது எனும் கருத்தை விதைத்தவர்கள் யார்? பிராமணர்தானா? பிள்ளைமாராக இருக்குமா? செட்டியாராகவும் இருக்கலாமல்லவா? உடலுழைப்பு அறவே இல்லாததால்தானே பேராசிரியர்களுக்கெல்லாம் பெரிய பெரிய தொப்பைகள் வருகின்றன. மருத்துவமனையே கதியெனக் கிடக்கவேண்டியுள்ளது. ஒரு மணி நேரம்கூட நின்று கொண்டு பாடம் எடுக்க முடிவதில்லை.

ஏன் கல்லூரிகள் குப்பை மேடாகக் கிடக்கின்றன? ஏன் வகுப்பறைக்குள் கால் வைக்கவே முடிவதில்லை? பாத்ரூம்களில் ஏன் நாற்றம் சகிக்கவில்லை? அரசாங்கம் ஏன் சுத்தம் செய்வோரை பணியமர்த்த மறுக்கிறது? வகுப்பறைகளில் ஏன் மின்விசிறிகூட இல்லை? யார் மின் பொத்தான்களையெல்லாம் உடைப்பது? சுவர் முழுக்க சினிமா நடிக நடிகையர் பெயர்களாக இருப்பது எப்படி? அமரும் இருக்கைகள் உடைந்தும் தூசி பிடித்தும் இருப்பது ஏன்?

கல்லூரிகளில் திருடர்கள் இருக்கிறார்களா இல்லையா? திருடர்கள் யார்? திருடர்களுமா கல்லூரியில் படிக்கிறார்கள்? கல்லூரிகளில் குறிப்பாக தேர்வுகளின்போது கணினியும், அலைபேசிகளும், பணமும் திருடு போகிறதா இல்லையா? வெளிநாடு, வெளிமாநிலங்களிலிருந்தா திருடர்கள் வருகிறார்கள்? திருடன் எதைப் படிப்பான்? அவனுக்கு என்ன படிப்பு வரும்? கல்விக் கூடத்திலேயே திருட்டை தடுக்க முடியவில்லை எனும்போது, சமூகத்திலிருந்து திருடன்களை எப்படி வெளியேற்றுவது? எவ்வாறு திருடர்களைக் கண்டுபிடிப்பது?

நகர்வலம் போன பேராசிரியர்கள், நகரெங்கும் கடைகளாக முளைத்திருப்பதை, முளைத்துக் கொண்டு வருவதைக் கண்டிருப்பார்கள்தானே நண்பர்களே. சந்து பொந்தெல்லாம் களான் கடைகள் முளைத்துக் கிடக்கின்றன. எங்கு பார்த்தாலும் தேநீர்க்கடை, பேக்கரி, உணவகங்கள்.

கோயம்புத்தூர் அழகாக இருக்கிறதா நணபர்களே. எமது வீடு அருகேதான் மாவட்ட ஆட்சித் தலைவர் பங்களாவும், மாவட்ட வன அலுவலரின் பங்களாவும் இருக்கின்றன. நீதிபதிகள் குடியிறுப்பும் இருக்கிறது. பெரிய பெரிய அபார்ட்மென்டுகள் இருக்கின்றன. பெரும் பணக்காரர்கள் வாழ்கிறார்கள். ஏதோ கவர்மெண்ட் புண்ணியத்தில் நாங்களும் இருக்கிறோம்.

முக்கியமான பகுதியாக இருந்தும், வி.ஐ.பி ஏரியாவாக இருந்தும், திருடு போகிறது நண்பர்களே. எங்கள் வீட்டில் மட்டும் இரண்டு மிதிவண்டிகள் திருடுபோய் விட்டன. 8500 உருபாக்கு ஒரு வண்டி வாங்கினோம். மூன்று மாதத்தில் தூக்கிப்போய் விட்டார்கள். காவல் நிலையத்தில் புகார் அளித்தும் அவர்கள் கண்டு கொள்ளவில்லை. நண்பர்கள் எல்லோரிடமும் மிதிவண்டி இருக்கிறதென மகன் கேட்டதால், மறுபடியும் பதினோறாயிரம் செலவழித்து புதுவண்டி வாங்கினோம்.

வீட்டிற்கு ஏறும் மாடிப்படியருகே பூட்டு போட்டு, ஒரு சங்கிலியால்இணைத்து இரண்டாவது பூட்டும் போட்டிருந்தோம். ஒரு மாதம்கூட இருக்காது. இரண்டு பூட்டையும் வெட்டியெடுத்துவிட்டு மிதிவண்டியைத் திருடி விட்டார்கள். மறுபடியும் காவல் நிலையம். புகாரையே வாங்க மாட்டோம் என்கிறார்கள் நண்பர்களே. ஏற்கனவே ஒரு வண்டி திருட்டு போய்விட்டதென்றும், நீங்கள் நடவடிக்கை எடுக்காததால் இரண்டாவது முறையும் திருடு போய்விட்டது எனவும் புகாரில் எழுதியிருந்தோம். புகாரை மாற்றி எழுதச் சொல்கிறார்கள். முதல் வண்டியைப் பற்றி எழுதக் கூடாதாம். இரணடாவது வண்டி திருடு போனதை மட்டும் எழுதுங்கள் என்கிறார்கள்.

புகார் கொடுத்தற்கான இரசீது கொடுங்கள் என்றோம். பதிலே இல்லை. கண்டுபிப்போம் மறுபடியும் வந்து பாருங்கள் என்கிறார்கள். புகார் கொடுத்தால் அதற்குண்டான ரசீது கொடுக்க வேண்டும் என்றுதானே சட்டம் சொல்கிறது என்றோம். சட்டத்தையெல்லாம் அப்படியே பார்க்கக் கூடாதாம். புகாரை பதிந்தால் மேலதிகாரிகள் ரிவியூ வைக்கும்போது பதில் சொல்ல வேண்டி வருமாம். இந்தக் காலத்தில் சைக்கிளை எங்கே போய் தேடுவது என்கிறார்கள்.

யாம் ஆய்வாளரைப் பார்த்து பேசுகிறோம் என்றோம். ஒரு நாள் சொல்லி அன்று வந்து பாருங்கள் என்றார்கள். யாம் வெகு நேரம் காத்திருக்கிறோம். காவல் உதவி ஆய்வாளரைப் பார்க்கச் சொல்கிறார்கள். அந்த பெண் உதவி ஆய்வாளர் சைக்கிளை கண்டுபிடிக்கிறது கஷ்டம் சார் என்கிறார். பக்கத்து ரூம்ல நிறைய புது சைக்கிள் இருக்கு. உங்க வண்டி இருக்காணு பாருங்க, இல்லைனா பிடிச்ச வண்டியை எடுத்திட்டுப் போய் உங்க பையன ஓட்டச் சொல்லுங்க என்கிறார். பக்கத்து அறையில் பழசும் புதுசுமாக மிதிவண்டிகள் கிடக்கின்றன. எங்கள் வண்டி இல்லை. உடன் வந்த காவலர் ஏதாச்சம் ஒரு நல்ல வண்டியை எடுத்துக்கோங்க சார் என்கிறார். இல்ல, எங்க வண்டி போதும், இன்னொருத்தர் வண்டி வேணாம் என்று சொல்லிவிட்டோம். உதவி காவல் ஆய்வாளருக்கு எம்மீது வருத்தம். ரொம்ப படிச்சவங்களே இப்படித்தானாம்.

ஆய்வாளர் வந்தவுடன் அவரைப் பார்த்துப் பேசுகிறோம் எனக் காத்திருக்கிறோம். எட்டு மணியளவில் ஆய்வாளர் வந்து, அவரது அறைக்குள் சென்றுவிட்டார். காவலரிடம் அறைக்குள் போகலாமா என்றால், பொறுங்க பொறுங்க என்றே பதில் சொல்கிறார். அய்யா இப்பதான் வந்திருக்கார், கொஞ்ச நேரம் ஆகட்டும் என்கிறார்.

உதவி ஆய்வாளர் கூப்பிட்டு, நாங்க சொல்றத புரிச்சிக்குங்க சார் என்கிறார். நீங்க சொல்லிட்டுப் போனதுக்கு அப்புறம் எங்களுக்கு பேச்சு விழும் சார் என்கிறார். உங்க மிதிவண்டிய எப்படியாவது கண்டு புடிச்சுத் தர்றோம். நீங்க போயிட்டு ரெண்டு நாள் கழிச்சு வாங்க என்றார். மேடம் கொடுத்த புகாருக்கு ரிசிப்ட் தரல, கொடுக்கச் சொல்லுங்க மேடம். சாருக்கு ரிசிப்ட் கொடுத்து அனுப்புங்க. தேங்க்யூ மேடம்.

மேடம் ரிசிப்ட் கொடுக்கச் சொன்னாங்க. எதை எதையோ தேடுகிறார். குனிகிறார், நிமிர்கிறார். சார் பிரிண்டர் ஒர்க் ஆகல, நாளைக்கு வந்து வாக்கிக்குங்க சார். காலேஜ் புரபசர் எதுக்கு ஓயாம வர்றீங்க. நாளைக்கு சாயத்திரம் உங்க வீட்டுக்கே வந்து ரிசிப்ட் தர்றோம் சார். நீங்க வீட்டுக்குப் போங்க சார். இன்னும் இரசீது வரவில்லை நண்பர்களே.

இந்தப் பகுதியில் மட்டும் ஏராளமான மதிவண்டிகள் திருடு போயுள்ளன நண்பர்களே. ஆட்சியர் வீட்டில் காவலுள்ளது. வன அதிகாரி வீட்டில் காவலுள்ளது. நீதிபதிகளைத் தேடி போலிஸார் சாமத்தில்கூட வருகிறார்கள். அபார்ட்மென்ட்களில் காவலர்கள் இருக்கிறார்கள். கூர்கா இருக்கிறார். முக்கியமான பகுதி என்பதால்

ரோந்து போலிசாரும் இருப்பார்கள். காவல் நிலையமும் அருகில்தான் உள்ளது. இவ்வளவு இருந்தும் எமது வீட்டருகே இருந்த சந்தன மரத்தை வெட்டிக்கொண்டு போய்விட்டார்கள். எப்படி சாத்தியம் நண்பர்களே? முன்னாடிதான் மரங்களை வெட்டுவார்கள். இப்போதெல்லாம் மிக மிக நவீனத் திருடர்களாகி விட்டார்கள். கீழும் மேலும் அறுத்துவிட்டார்கள். நவீன இரம்பம் போல. கல்லையே துண்டாக அறுக்கும் மிசின்  இருக்கும்போது மரம் எம்மாத்திரம்? மிகுந்த வேடிக்கை என்னவெனில், வன அதிகாரி வீட்டின்முன் இருந்த சந்தன மரங்களையும் அறுத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

எமது வீட்டருகே இருக்கும் குப்பைத் தொட்டி நிரம்பி வழிகிறது. சில நேரங்களில் வாரக் கணக்கில் அள்ளாமல் நாற்றமடித்துக் கிடக்கிறது. இங்கு என்றில்லை. பெரும்பாலான குப்பைத்தொட்டிகள் நிறைந்து சாலையெங்கும் குப்பைகள் சிதறிக் கிடக்கின்றன. தெருக் குப்பைகளை அள்ளாதவர்கள், அங்காடிக் குப்பைகளை தினமும் வந்து எடுத்துச் செல்கிறார்கள். ஒரு பழக்கடையில் ஒவ்வொருநாளும் நாலைந்து பிளாஸ்டிக் டிரம்கள் குப்பை சேருகிறது. தினமும் மாநகராட்சி வண்டி வந்து வாங்கிச் செல்கிறது. கடைக்காரர்கள் பணம் கொடுக்கிறார்கள் எனச் சொல்ல வேண்டியதில்லை. சிட்டியில் உள்ள அனைத்து பெரிய கடைகளின் குப்பைகளும் பணம் பெற்றுக் கொண்டு அள்ளப்படுகின்றன. சாலையின் குப்பைகள் நாற்றமடித்துக் கிடக்கின்றன. எமது வீட்டின்  அருகே இருக்கும் பூங்கா உபகரணங்கள் ஒடிந்தும், இருட்டுக்குள்ளும் கிடக்கிறது. சிறுவர் பூங்காவிற்கு லைட் போடக் கூடாதா? எத்தனையோ திட்டங்களின் பெயரால் எத்தனை எத்தனை கோடிகள் கோவை மாநகராட்சிக்குள் கொட்டப்படுகின்றன எனத் தெரியும்தானே நண்பர்களே.

எமது மகன் மட்டைப் பந்து விளையாட வ.உ.சி மைதானம் சென்று வந்தான். அங்கு வரக்கூடாது எனச் சொல்லிவிட்டார்களாம். மாநகராட்சி இடத்தை பொருட்காட்சிக்கு வாடகைக்கு விட்டு விட்டார்கள். இருக்கும் ஒரே விளையாட்டு இடத்தையும் பொருட்காட்சிக்குக் கொடுத்துவிட்டால், கோடை விடுமுறைக்கு பிள்ளைகள் எங்கே போய் விளையாடுவார்கள்? கோயம்புத்தூரில் விளையாட எங்கே இடமிருக்கிறது? பொருட்காட்சியை எவ்வளவு கோடிக்கு மாநகராட்சி வாடகைக்கு விடுகிறது? செய்தித் தாள்களில் நாளொன்றுக்கு முப்பதாயிரம் எனத் தகவல் வருகிறது. மாதத்திற்கு ஒன்பது லட்சம் வருகிறது. இடத்தை மாநகரட்சி ஏன் இன்னொருவரிடம் வாடகைக்கு விடுகிறது? சொற்ப தொகையை மாநகராட்சிக்குக்

கொடுத்துவிட்டு உள்ளே நூற்றுக்கணக்கான கடைகளை வைத்து லாபம் சம்பாதிக்கும் முதலாளி யாா்?

கல்லூரிகளிலேயே காசு கொடுக்காமல் வேலை நடப்பதில்லை எனில் கருவூலங்களிலும், போக்குவரத்து அலுவலகங்களிலும், பொதுப்பணித்துறை சாா்பான அலுவலங்களிலும், பொது விநியோகத் துறையிலும் எவ்வளவு லஞ்சம் தலைவிரித்தாடும்? கல்லூரி அலுவலகத்தில் சொல்கிறாா்கள். நாங்க என்ன சாா் பண்றது, டிரெசரில கொடுக்காம எந்த வேலையும் நடக்க மாட்டேங்குது, மாசக் கணக்குல இழுத்தடிப்பாங்க சாா். எம்மோட நிலுவைப் பணத்த நீங்க வாங்கியே தரவேண்டாம், யாம் ஐந்து பைசாக் கூடத் தர மாட்டோம், எமக்கு பணமே வேண்டாம் எனச் சொல்லிவிட்டோம்.  எப்படியோ கருவூலக்காரா்களைப் பேசி. சமாளித்து, எமது நிலுவைப் பணத்தை வாங்கிக் கொடுத்துவிட்டாா்கள். பணி ஓய்வு பெற்ற பேராசிரியா்கள் ஓய்வு காலப் பயன்களைப் பெற படும்பாடு இருக்கிறதே, பெரும் பாடு நண்பா்களே.

வாகன விற்பனை வணிகம் தற்போது லாபம் கொழிக்கும் தொழிலாக மாறியிருக்கிறது. மூலைக்கு மூலை டீலா்களாக இருக்கின்றன. மனிதா்களின் பறக்கும் ஆசையைச் சாமா்த்தியமாக சில முதலாளிகள் அறுவடை செய்கிறாா்கள். பெண்கள் ஸ்கூட்டியெல்லாம் எழுபதாயிரம் ஆக்கிவிட்டாா்கள். வண்டி விலை ஐம்பதாயிரம்தான். கிட்டத்தட்ட இருபதாயிரம் ரூபாய் கூடுதலாக விற்கிறாா்கள். வண்டியைப் பதிவு செய்வதற்கே பத்தாயிரம் ரூபாய் வரை கேட்கிறாா்கள். காப்பீடு செய்யாமல் வண்டியை ஓட்டக்கூடாதா நண்பா்களே. ஏதாவது சட்டமிருக்கிறதா என்ன? ஓட்டத் தெரியுமா, ஓட்டுவதற்கு உரிமம் உள்ளதா என்றுதானே சோதனை செய்ய வேண்டும். காப்பீட்டை அரசு நிறுவனம் எதிலும் எடுப்பதாகத் தெரியவில்லை அத்தனையும் தனியாா் நிறுவனங்கள்.

அரசியல்வாதிகளும், அதிகாரவா்க்கத்தினரும் பத்திரப் பதிவு அலுவலா்களை வீட்டிற்கே கூட்டி வந்து பத்திரம் செய்வதாகக் கேள்விப் பட்டிருக்கிறோம்தானே. வாகனப் பதிவிலும்கூட டீலா்கள் வண்டியை எடுத்துக் கொண்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் செல்லுவதுபோல் தெரியவில்லை. அலுவலகத்தாரே, வண்டியைத் தயாா் செய்யும் கூடத்திற்கு, டீலா்களின் இடத்திற்கு வந்து விடுகிறாா்கள். வண்டி இன்ஜின் நம்பா், சேஸ் நம்பா் செக் பண்ணுவாா்களா என்பது கூட சந்தேகமே. இங்கேயே வந்து வண்டியை ஓகே

பண்ணுகிறார்கள். எமக்கென்னமோ வண்டியைப் பார்க்காமலேயே நீட்டிய இடத்திலெல்லாம் கையெழுத்து இடுவதுபோல் தெரிகிறது. எல்லாம் காசு நண்பர்களே. அலுவலகத்திற்கு கொண்டு வந்தால் ஒரு அமௌண்ட், அசெம்ளி இடத்திற்கு வந்தால் கொஞ்சம் கூடுதல், வண்டியைப் பார்க்காமலே கையெழுத்துப் போட்டால் இன்னும் கொஞ்சம் கூடுதல். நண்பர்களே, கோயம்புத்தூரில் ஒரு மாதத்தில் ஒரு டீலரிடம் எவ்வளவு வண்டிகள் விற்பனையாகின்றன? கோவை முழுக்க ஒரு மாதத்தில் எவ்வளவு இருசக்கர நான்குசக்கர வாகனங்கள் விற்கப்படுகின்றன? புரளும் திருட்டுப் பணம் எவ்வளவு?

நண்பர்களே, வாகனச் சந்தையில் ஐந்துஜீ தொழில்நுட்பம் வந்துவிட்டது தெரியும்தானே. பட்டப் பகலில், பங்குனி வெயிலில் ஏன் வாகனங்களின் விளக்கு எரிகிறது தோழர்களே? கேட்டால் பைவ்ஜீ தொழில் நுட்பம் என்கிறார்கள். பகலில் விளக்கு எரிவதுதான் பைவ்ஜியா? யாம் கூட விளக்கை அணைக்க மறந்து விட்டு ஓட்டுகிறார்கள் என்றே நினைத்துக் கொண்டிருந்தோம். விளக்கை அணைக்க பொத்தானே இல்லை அறிவுடையோர்களே. ஒரு பொத்தான் வைத்தால் தேவைப்படும்போது போட்டுக் கொள்ளலாம், பகலில் அணைத்துக் கொள்ளலாம். குளிர் நாடுகளில் பெரும்பாலும் இருட்டாவே இருக்கும் என்பதால் அவர்களுக்கு எப்பவுமே விளக்கு எரியும் நுட்பம் நல்லதுதான், நமக்கு? அப்படியே தொழில் நுட்பத்தை இறக்குமதி செய்துவிட்டார்களோ?

நாம் எதையெல்லாம் இறக்குமதி செய்கிறோம்? எதையெல்லாம் ஏற்றுமதி செய்கிறோம்? எதையெல்லாம் நம் ஊரிலேயே தயாரிக்கிறோம்? எந்த விதமான தொழிற்சாலைகளையெல்லாம் நமது பெருமைமிகு தமிழ்நாட்டில் வைத்திருக்கிறோம்? தமிழ்நாடு பெருமையானதுதானா நண்பர்களே?

பிற மாநிலங்கள் வேண்டாம் எனச் சொன்ன தாமிர தொழிற்சாலையை நாம் ஏன் அனுமதித்தோம்? அனுமதித்த அரசியல் தலைவர் யார்? தொடங்கி வைத்த அரசியல் தலைவர் யார்? பிற மாநிலங்கள் ஏன் அந்த தொழிற்சாலையை வேண்டாம் என மறுத்தார்கள்? கொழுத்த லாபம் வரும் எனத் தெரிந்தாலோ, வேலை வாய்ப்புப் பெருகும் எனத் தெரிந்தாலோ மறுப்பார்களா? நம் அரசியல்வாதிகள் மட்டும் அனுமதித்தது எப்படி?

பத்தாயிரம் பேருக்கு வேலை கொடுக்கிறதாம்? தமிழர்கள் அறிவுடையவர்கள் தானா? தொழிற்சாலை ஆரம்பித்தபோதே, ஊரிலுள்ள காவல்துறை உட்பட

முக்கியமான புள்ளிகள் அனைவரும் கவனிக்கப்பட்டதும், அவர்கள் வீடுகளிலிருந்து முக்கியப் பதவிகளுக்கு பெருத்த சம்பளத்தில் ஆட்கள் எடுக்கப்பட்டதும், தொழிற்சாலை இயங்க ஆரம்பித்தபின் மாசில் வேலைபார்க்க முடியாமல் பெரும்பாலானவர் வேலையை விட்டு ஓடியதும் இந்த அறிவுடையவர்கள் அறிந்துதான் பேசுகிறார்களா? தெரிந்துதான் எழுதுகிறார்களா? பொருளாதாரம் உயருமாம்? யாருடைய பொருளாதாரம் உயரும் அல்லது உயருகிறது நண்பர்களே?

நாட்டின் இயற்கை வளத்தையெல்லாம் சுரண்டிக் கொழுப்பவர்கள் யார்? இயற்கையை விற்பவர்கள் எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள்? விளைநிலங்களையெல்லாம் சூரியத் தகடுகளாக மாற்றிக் கொண்டிருக்கும் மாநிலத்தவர் யார்? பொருளாதாரம் யாரிடம் மண்டியிட்டுக் கிடக்கிறது?

வெளிநாட்டு உணவுகளைத்தான் எல்லாக் கடைகளுமே விற்கின்றன. சந்தேகமிருந்தால் ஒரு பழமுதிர்க் கடைக்கோ, பழமுதிர் சோலைக்கோ, பசுமைக் கடைக்கோ போய் பாருங்கள் நண்பர்களே. ஆப்பிள்களைப் பாருங்கள். எத்தனை எத்தனை விதம். பச்சை, சிவப்பு, ஆரஞ்சு என எப்படிப் பளிச்சிடுகின்றன. நம் மண்ணில் விளைந்தவையா நண்பர்களே. பழங்களைப் பாருங்கள். எவ்வளவு வித்தியாசமான வகைகள், பெயர்கள். வாழைப் பழங்களையும் பாருங்கள். எத்தனை விதமான வாழைப்பழங்கள். அத்தனையும் கலப்பினம் என்பதை அறிவீர்களா நண்பர்களே. நாட்டு வாழைப்பழம் எந்தப் பெரிய பழக்கடையிலாவது விற்கிறார்களா தோழர்களே? இல்லையென்றால் ஏன்? தமிழ்நாட்டில் நாட்டுப் பழங்களே விளைவதில்லையா?

அப்படியே அரிசி பருப்பையும் பாருங்கள் நண்பர்களே. எமது வீட்டருகே ஒரு பிக்கடை இருக்கிறது. பிக் என்றால் பெரிசு நண்பர்களே. அரிசி வாங்கச் சென்றால், ஒரு குறிப்பிட்ட தனியார் கம்பனியின் அரிசிகளே மூட்டை மூட்டையாக வைத்திருக்கிறார்கள். நாம் அரிசி என்றவுடன் அதைத்தான் காட்டுகிறார்கள். நாம் பெரிய ராஜா அரிசி இருக்கா என்றால் இல்லை என்கிறார்கள். இட்லி அரிசியும் கம்பனி அரிசியாகவே இருக்கிறது. அரிசியை கம்பனி உற்பத்தி பண்ணினால் என்னாகும் நண்பர்களே?

கம்பனி அரிசியை உற்பத்தி பண்ணினால் கொழுத்த லாபத்திற்குத்தானே விற்க முயற்சிக்கும். நாம் வாழ்வது கொள்ளை லாபக் காலத்திலல்லவா? டிமாண்டு

அதாவது தேவை அதிகரிக்க அதிகரிக்க விலையை ஏற்றவார்கள்தானே. பதுக்கினால் இன்னும் அதிகரிக்கும்தானே. நல்ல தேவை இருக்கும்போது கொழுத்த விலை வைத்து விற்பதைத்தானே கம்பனி முதலாளி விரும்புவார். அப்படிதானே வெங்காயமும், வெள்ளப் பூண்டும், தக்காளியும், பருப்பும் கொள்ளை லாபத்துக்கு விற்கப்பட்டன. தக்காளி கிலோ நூறுக்கும், வெங்காயம் கிலோ நூற்றி எண்பதுக்கும் வாங்கினோமா இல்லையா?

கடையில் தேங்காய் வாங்குவீர்கள் தானே? நம் காலத்தில் எப்படி விற்கிறார்கள் நண்பர்களே. எல்லாவற்றையும் எடை போட ஆரம்பித்துவிட்டார்களல்லவா? விவசாயிகளிடம் வாங்கும்போது எடை போட்டு வாங்குகிறார்களா? அல்லது எண்ணிக்கையில் வாங்குகிறார்களா? இதையெல்லாம் ஆட்சியாளர்களுக்குத் தெரியப்படுத்த மாட்டார்களா?

நாம்தான் தங்கத்தை அதிகமாக இறக்குமதி செய்கிறோமல்லவா? தமிழ்நாட்டில் அனைத்துக் கோவிலின் கோபுரங்களையும் தங்கக் கோபுரம் ஆக்காமல் ஓய மாட்டார்கள் போலிருக்கிறது. பெரும்பாலான கோவில்களுக்கு தங்கத் தேர் வந்து விட்டது. ஒரே நாளில் கோவையில் மட்டும் நூறுகோடிக்கும் மேல் தங்கம் வாங்குகிறார்கள். தமிழ்நாட்டில் ஆயிரம் கோடிக்கு தங்கம் வாங்கியதாகவெல்லாம் செய்திகளைப் பார்க்கிறோம். ஏன் நகை மீது இத்தனை மோகம் தோழர்களே? தமிழ்நாட்டில் எந்தெந்த சாதிக்காரர்கள் இப்படி நகைகளாக வாங்கிக் குவிக்கிறார்கள்?

கடைகளில் பெரிய பெரிய ஒட்டியாணங்களாகச் செய்து வைத்திருக்கிறார்கள். வாங்குவார்கள் போல. ஆச்சரியமாக இருக்கிறது. பத்து பவுன் நகை போட்டு பெண்களைக் கட்டிக் கொடுக்க அல்லாடும் நாட்டில், ஒட்டியாண நகைகளும், மொக்கை மொக்கையான சங்கிலிகளும், வடங்களும், கழுத்தணிகளும், காதணிகளும்.. நகைக் கடைகளில் எந்நாளும் கூட்டம். இருபது வருடங்களுக்கு முன்பு கிராம் விலை என்ன இருந்தது, பத்து வருடங்களுக்கு முன்பு எவ்வளவு கிடைத்தது, தற்போது ஒரு கிராம் நகையை எத்தனை ஆயிரத்திற்கு விற்கிறார்கள் நண்பர்களே.

ஒரு கிராம் பொன் மூன்றாயிரம் உருபா. ஒரு சவரன் வாங்க முப்பதாயிரத்திற்கும் மேலாகிறது அல்லவா? தினமும் நகை விலை நிர்ணயிக்கப்படுகிறதா இல்லையா? ஏன் நகை மேல் இவ்வளவு மோகம்? வாங்கும்

நகையெல்லாம் போடுவதுபோல் தெரியவில்லையே. பூட்டி வைப்பதற்கு ஏன் இவ்வளவு நகைகள் நண்பர்களே?

விமானங்கள் மூலம் தங்கம் கடத்தி வருவது முக்கியத் தொழிலாகி விட்டதல்லவா. எப்படியெல்லாம் கடத்தி வருகிறார்கள் என்பதை செய்தித் தாள்களில் படிக்கிறோம்தானே. இரண்டு பவுன் நகைக்காக கொலை செய்கிறவர்கள் வாழும் காலத்திலா நாம் வாழ்கிறோம் தோழர்களே? விலைமதிப்பற்ற மனித உயிரை வெறும் இரண்டு சவரன் நகைக்காகக் கொடூரமாகக் கொலை செய்யும் அந்த மனித மிருகங்கள் யார் தோழர்களே? கொடூரர்களைப் பெற்றவர்கள் யார்? இந்த கேடுகெட்ட சென்மங்கள் வாழும் ஊர் எது? என்ன சாதிக்காரர்கள் இப்படி கொலைகளைச் செய்து நகை கொள்ளையடிப்பது? பிராமணரும் பிள்ளைமாரும் முதலியாரும் இல்லையென்றுச் சொல்லிவிடலாமா? உறுதியாகச் சொல்ல முடியுமா? தமிழ்நாட்டில் எந்தச் சாதிக்காரன் மூதாட்டி கழுத்தை அறுத்து, வயதான தம்பதியை அருவாளால் வெட்டி, பெண்களை கம்பியால் தாக்கி நகைக்காக படுகொலை செய்கிறான்? அத்தனை பேருமா வடக்கத்திக்காரன்? நகைக்காகப் படுகொலை செய்யும் இந்தக் கயவன் தமிழனா? தமிழ்நாடு பெருமையானது தானா? தமிழர் பண்பாடுள்ளவர் என்றா சொல்கிறார்கள்? தமிழ் உயர்தனிச் செம்மொழியாமே? பெண்ணைக் கொன்று நகையைக் கொள்ளையடிக்கும் இந்த ஈனப்பிறவி பேசும் மொழி எப்படி செம்மொழியாக இருக்க முடியும்?

ஆண்ட பரம்பரையென்றும் ஆள்கிற பரம்பரை என்றும், ஆளப்போற பரம்பரை யென்றும், எப்போதும் ஆளும் பரம்பரையென்றும் மார்தட்டிக் கொள்ளும் சாதிகளைச் சேர்ந்தவர்கள் பெண்களைப் படுகொலை செய்து நகைகளைக் கொள்ளையடிக்கிறார்களா? மூவேந்தர்கள் நாங்கள்தானென்று முழங்கும் சாதிக்காரர்கள் பெண்களைக் கொலை செய்து கொள்ளையடிக்கிறார்களா?

ஆளாளுக்கு சோழ பரம்பரையென்றும், இராஜராஜனின் நேரடி வாரிசு என்றும், பாண்டியனின் வழித் தோன்றலென்றும் கூப்பாடு போடும் தமிழர்களில், எந்தச் சாதி தமிழர்கள் வயதானவர்களை கொலை செய்து கொள்ளையடித்துச் செல்கிறார்கள்?

இந்தத் தரங்கெட்ட தறுதலைகளுக்கு ஒரு குடும்பம் இருக்குமல்லவா? பெற்றோரில்லாமல் பிறந்திருக்க மாட்டார்கள்தானே. பொண்டாட்டி பிள்ளைகள்

இருப்பார்களல்லவா? பெண்ணைக் கொன்று நகையைக் கொள்ளையடித்த பிறவியோடு, குடும்பம் நடத்துவது பெண்தானா? பெற்றவளும் பெண்தானா?

கொலைகாரனுக்கும், கொள்ளைக்காரனுக்கும், திருட்டுப் பயலுக்கும் உடனே ஜாமீன் கிடைப்பது எப்படி? எந்த வழக்குரைஞர் இவன்தான் செய்தான் எனச் சந்தேகமில்லாமல் தெரிந்த பின்னரும் கொலைகாரனுக்கும் கொள்ளைக் காரனுக்கும் ஆஜராவது? சிறைச் சாலைகளில் இவனுக்கு கோழிக் குழம்பு கிடைக்கிறது. கஞ்சா கிடைக்கிறது. அலைபேசி கிடைக்கிறது. எல்லாமே கிடைக்கிறது. உள்ளேயே கூட்டணி சேர்த்து வெளியே வந்தவுடனேயே அடுத்த கொலையைச் செய்கிறான்.

சிறைத்துறையில் நடக்கும் கூத்துக்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா நண்பர்களே. காவலர்களை மீறி சிறைக்குள் அலைபேசி போக முடியுமா? எல்லாம் கமிசன் நண்பர்களே. காவலர்களே சிறைக்குள் கடை நடத்துகிறார்கள் எனக் கேள்விப்பட்டிருப்பீர்களா.

காவலர்கள் நினைத்தால் திருட்டைத் தடுக்க, திருடனைப் பிடிக்க முடியாதா? கொலையைத் தவிர்க்க முடியாதா? காவலருக்குத் தெரியாமல் திருடனால் ஒரு பொருளைத் திருடி விற்க முடியுமா? ஒரே நாளில் தொள்ளாயிரம் திருடர்களை, சமூக விரோதிகளைச் கைது செய்ததாகவெல்லாம் படித்தது நினைவுண்டா?

காவலர்களிடம் ஏன் நேர்மை இல்லை? காவல் அதிகாரிகள் எதனால் நேர்மை தவறுகிறார்கள்? காவல்துறை ஏன் அரசியல்வாதிகளுக்கு அடிபணிகிறது? அதிகாரவர்க்கத்திற்கு வால் பிடிக்கிறது?

காவலர்களே திருடர்களாக மாட்டிக் கொள்வதை என்னவென்பது. எங்கே தவறு நடக்கிறது நண்பர்களே? லஞ்சம் வாங்கி மாட்டியவர்கள் எத்தனை பேர்? கற்பழிப்பு புகாருக்கு உள்ளானவரும் உண்டுதானே.

பெண் அலுவலர்கள் லஞ்சம் வாங்கி கையும் களவுமாக மாட்டிக்கொள்வதைப் பார்த்திருக்கிறோமல்லவா. கொலைக்கு உடந்தையாக இருந்ததாக, கொலை செய்ததாக, பெண்கள் கைது செய்யப்படுவதைப் படிக்கிறோமல்லவா. பெண்கள் திருடுகிறார்கள்தானே. படித்த பெண்கள், இளம் பெண்கள் திருட்டுத் தொழில் செய்து பிழைப்பதை என்னவென்பது. திருட்டுத் தொழிலும், இருட்டுத் தொழிலும் பெண்களுக்கு உரியதுதானா? பெண் ஏன்

திருடுகிறாள்? வயிற்றுப் பிழைப்பிற்கு வேறு வழியே இல்லையா? வேறு வேலையே தமிழ்நாட்டில் இல்லையா? கிடைக்கவில்லையா? பெண்கள் திருடித்தான் வயிற்றுப்பாட்டைக் கழுவவேண்டும் எனும் நிலையிலா இந்த தேசம் இருக்கிறது? நமது மாண்புமிகு ஆட்சியாளர்கள் இதையெல்லாம் அறிவார்களா?

ஒரு போர்க்கப்பலின் விலை நாற்பதாயிரம் கோடி உரூபா. ஒரு ரபேல் போர் விமானத்தின் விலை என்ன நண்பர்களே? இந்திய அரசாங்கம் வரவு செலவில் கல்விக்கு எவ்வளவு உரூபா ஒதுக்குகிறது? மருத்துவத்திற்கு எத்தனை உரூபா செலவழிக்கிறது? இராணுவத்திற்கு எவ்வளவு உரூபா கொடுக்கிறது? விரல் நுனியில் தகவல் கொட்டும் காலமல்லவா நமது காலம். பட்டனைத் தட்டினால் புள்ளிவிபரம் தெரிந்துவிடப் போகிறது. எல்லோருக்கும் இணைய வசதி வந்துவிட்டது தானே நண்பர்களே. அதுவும் ஜியோ புண்ணியத்தால். சரிதானே,

பிஎஸ்என்எல் அதிரடி சலுகை. உரூபா 143 கட்டணத்தில் தினமும் 1 ஜிபி இணையசேவை இலவச அழைப்பு. செய்தித் தாள்களெல்லாம் படிப்பீர்கள்தானே தோழர்களே. செய்தித்தாள்கள் செய்திகளை எப்படி ஒட்டியும், வெட்டியும், கூட்டியும், குறைத்தும், புகழ்ந்தும், இகழ்ந்தும் செய்திகளை வெளியிடுகின்றன பார்த்தீர்களா? முதல் பக்கத்தில் ஓரிரு வரிகளில் தலைப்புச் செய்தியைப் போட்டுவிட்டு, முழுபக்கத்தையும் விளம்பரங்களால் மறைக்கும் செய்தித்தாள்களையும் கண்டிருக்கிறோமல்லவா? இட்டுக் கட்டியும், புரட்டுக் கட்டியும், இருட்டடிப்புச் செய்தும் செய்திகள் வெளியிடப்படுகின்றனவா இல்லையா? வேண்டிய அரசியல் கட்சி, அரசியல் தலைவரென்றால் ஒரு மாதிரி செய்தி போடுவதும், வேண்டாத கட்சி, தலைவரென்றால் பொய்யான செய்தி போடுவதும், கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவதும் நடக்கத்தானே செய்கிறது? எல்லாம் காசு, பணம், நண்பர்களே. உண்மையின் உரைகற்களாம். நடுநிலைச் செய்தித்தாள்களாம். பத்திரிக்கைகள் ஒரு நாட்டின் ஐந்தாவது தூண்களாமே. இந்து சாமியாரின் லீலைகள் உலகுக்கே தெரிந்த பின்பும், அது குறித்த செய்திகளை கிஞ்சித்தும் வெளியிடாத நாளேடு, பெண்களை காமவலையில் வீழ்த்திய பாதிரியார் எனக் கொட்டை எழுத்தில் போடுவதன் மர்மம் என்னவோ?

யாம் பிஎஸ்என்எல் தொலை தொடர்பு வசதியைத்தான் நீண்ட வருடங்களாகப் பயன்படுத்துகிறோம். சேவை குறைபாடாக இருந்தாலும், சிக்னல் கிடைக்காவிட்டாலும், பொதுத்துறை நிறுவனமாயிற்றே, நமது காசு

கவர்மெண்ட்டுக்குப் போகட்டும் எனும் நப்பாசைதான் நண்பர்களே. எங்கள் ஊருக்குப் போனால் எம்மை நீங்கள் தொடர்பு கொள்ளவே முடியாது. அங்கு பிஎஸ்என்எல் சமிக்கை வருவதில்லை. மற்ற தனியார் தொலைதொடர்பு நிறுவனங்களின் சமிக்கையெல்லாம் கிடைக்கும்போது, அவர்களது சந்தாதாரர்களெல்லாம் கொஞ்சிப் பேசித் திரியும்போது, யாம் மட்டும் மனைவிடம் ஓசி வாங்க வேண்டியுள்ளது. அவர் வைத்திருப்பது ரிலையன்ஸ் ஜியோ. அவர் வைத்திருக்கும் ஜியோ இணையச் சேவை, எங்கள் ஊரிலிருந்து கோயம்புத்தூர் வரை தொடர்ந்து கிடைக்கிறது. எமது பிஎஸ்என்எல் இணைய சேவையோ அருப்புக்கோட்டையில் கிடைக்கிறது. அதைவிட்டால் மதுரை. அப்புறம் ஒட்டன்சத்திரம் பக்கத்தில் சிறிது. அதன்பின் தாராபுரத்தில் கொஞ்ச நேரம். அதைவிட்டால் பின்னர் சூலூர்தான். ஏன் நண்பர்களே பொதுத்துறை சேவை, அதுவும் அரசு சேவை தரமானதாக இல்லை, தனியார் தரமானதாக இருக்கிறது? நாம் எங்கும் தனியார்.. எல்லாவற்றிலும் தனியார்.. எதுக்கும் தனியார்.. எனும் காலத்திலல்லவா வாழ்கிறோம்.

செப்டம்பா 15, 2000 தேதியில் துவக்கப்பட்ட பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் எனும் இந்திய தொலை தொடர்பு நிறுவனத்திற்கு 31.10.2016 வரை 94.36 மில்லியன் (ஒரு மில்லியன் பத்து இலக்கம்) செல்லுலார் வாடிக்கையாளர்களும் 21.86 மில்லியன் அகன்றபட்டை இணையசேவை வாடிக்கையாளர்களும் இருக்கிறார்களாம். 2015-16 இல் மட்டும் 32,919 கோடிகள் சம்பாதித்திருக்கிறது பிஎஸ்என்எல்.

செப்டம்பர் 5, 2016 இல் அறிமுகமான ஜியோ கம்பனி, துவக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள் 16 மில்லியன் வாடிக்கையாளர்களைப் பிடித்ததெப்படி தோழர்களே? ஒரு மாதத்திற்குள் ஒன்றரை கோடிப் பேருக்கும்மேல். கம்பனிதொடங்கி 83 நாட்களுக்குள் ஐந்து கோடி வாடிக்கையாளர்களை எப்படி ஈர்த்தது இந்த ரிலையன்ஸ் ஜியோ? பிப்ரவரி 22, 2017 இல் பத்து கோடி வாடிக்கையாளர்களைத் தாண்டிய ஜியோவுக்கு, அக்டோபர் 2017இன்படி, பதின்மூன்று கோடிக்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் இருக்கிறார்களாம். எவ்வளவு அபரிமிதமான வளர்ச்சி? பயங்கரமான வளர்ச்சி எனச் சொல்லலாம்தானே. பகாசுர வளர்ச்சி. நம் நாட்டில் எத்தனை பகாசுரக் கம்பனிகள் உள்ளன தோழர்களே. எல்லாவற்றையும் தனியார்மயமாக்குங்கள் எனும் குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கிவிட்டனதானே.

இரயில்வேயை. விமானத்தை. கோவில் பராமரிப்பையும் தனியாரிடம் விட்டுவிட வேண்டுமாம். சொல்வது, கொடிபிடிப்பது எந்த சமூகத்தவரென்றும் தெரியும்தானே?

எங்கள் ஊரில் நிலங்களையெல்லாம் கம்பனிகள் கொள்ளையடிக்கின்றன எனச் சொன்னது நினைவிருக்கிறதா நண்பர்களே. விவசாயிகளிடம் சொற்ப விலைக்கு வாங்கி சோளம் பயிரிட்டு வந்த அந்த வடக்கத்திய முதலாளி, நிலத்தையெல்லாம் சோலார் கம்பனிக்கு விற்றிருக்கிறார். சாமர்த்தியமாக மிக நுட்பமாக திட்டம் போட்டு ஏக்கர் இருபதாயிரம், முப்பதாயிரம் என வாங்கி, சோலார் கம்பனி முதலாளியிடம் ஏக்கர் ஒன்றரை இலக்கத்திற்கு விற்றிருக்கிறார். எமக்கென்னவோ இவர்களெல்லாம் திட்டம் போட்டே நிலங்களை வாங்கியதாகத் தெரிகிறது. சோலார் நிறுவனத்தின் உரிமையாளராக பட்டேல், குஜராத் எனும் போர்டு தொங்குகிறது. சத்தமே தெரியாமல் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வாங்கியிருக்கிறார்கள் நண்பர்களே. மல்லியும், பருத்தியும், கம்பும், மிளகாயும் விளையும் வயல்களில் முழுவீச்சில் சோலார் தகடுகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. எங்கள் ஊருக்கு அருகேதான் அதானி குழுமத்தின் மூன்றாயிரம் ஏக்கர் சோலார் கம்பனி இயங்குகிறது. எங்கள் ஊரிலும் என்றில்லாமல், பக்கத்து ஊர்களிலும் இப்படி ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் சோலார் தகடுகள் அமைக்க பணிகள் நடைபெறுவதாகப் பேசுகிறார்கள். இதெப்படி சாத்தியமாயிற்று தோழர்களே? கம்பனிகள் அனைத்தும் குஜராத் மாநிலத்தைக் சேர்ந்தது. தொழிலாளர்கள் அனைவரும் வடக்கத்தியர். எங்களது சிறிய கிராமத்திற்கு எத்தனை டாரஸ் லாரிகள் வருகின்றன தெரியுமா? சோலார் மின்சாரம் முக்கியமா அல்லது சோறு முக்கியமா நண்பர்களே? மின்சாரமில்லாமல் வாழ்ந்திடலாம். சோறும் நீரும் இல்லாமல் முடியுமா? விளைநிலங்களைப் பூராம் சோலார் தட்டுக்களாகப் பதித்தால் மழைநீர் எப்படி மண்ணுக்குள் இறங்கும்? மழைதான் எப்படிப் பெய்யும்?

இதைப்பற்றியெல்லாம் யாரும் கவலைப்படுவதாகவோ, சிந்திப்பதாகவோ தெரியவில்லை. ஒருவேளை வெளியே சொல்லமுடியாமல் மனதிற்குள் புழுங்குவார்களோ என்னவோ. எங்கள் ஊரில் ஒரு சிங் வீடு கட்டி இருக்கிறார். கம்பெனியில் வேலை பார்க்கும் சிலர் ஊரில் வீடு வாடகைக்கு எடுத்து தெருவில் பெரிய கட்டையைப் போட்டு எரித்து சப்பாத்தி சுடுகிறார்கள். எங்கள் கிராமத்துக்காரர்கள் யாரும் இப்படி தெருவில் கட்டையைப் போட்டு எரித்து சமையல்

செய்து யாம் பார்த்ததில்லை. அலைபேசியில் சத்தமாக இந்தி பாடல்களைக் கேட்டுக் கொண்டு திண்ணையில் படுத்திருக்கிறார்கள்.

அலைபேசியும், இணையமும் உலகில் பெரும் புரட்சியை, மாற்றங்களை உருவாக்கிவிட்டன என்றால் மிகையாகாதல்லவா. இந்தியாவில்தான் உலகிலேயே இரண்டாவது அதிகமாக அலைபேசி தொலைபேசி பயன்படுத்தப்படுகிறதாம். அக்டோபர் 2017 இன்படி, 120.6 கோடி இணைப்புகள். முதலிடம் யாருக்கென தெரியும் தானே. அலைபேசி மட்டும் 117.8 கோடி பேரிடம் இருக்கிறதாம். இந்த ஒரு வருடத்தில் மேலும் கூடியிருக்கும். மாதத்திற்கு ஐம்பது இலட்சம் இணைப்புகள் புதிதாகக் கொடுக்கப்படுகிறதாமே. மக்கள் சோறும் நீரும் இல்லாமல் இருப்பார்களேயொழிய அலைபேசி இல்லாமல் இருக்க மாட்டார்கள் என்பது திண்ணம். மக்களுக்கு ஆசை காட்டியாயிற்று. மீள்வது மிகக் கடினம்.

தந்தி சேவைக்காக 1850இல் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட இந்திய தொலைதொடர்புத் துறை, தற்போது உச்சம் தொட்டு நிற்கிறது. இந்தியா முழுவதையும் 6400 கிலோ மீட்டர் தந்திக் கம்பிகளால் ஆங்கிலேயர் இணைத்தது பெரும் சாதனை. 1882இல் கல்கத்தா மத்திய தகவல் பரிமாற்ற அலுவலகத்தில் மொத்தமே 93 இணைப்புகளே இருந்ததாம். நூறு வருடங்களுக்குப்பின் 1995 இல் முதன் முதலாக டெல்லியில் தொடங்கப்பட்ட அலைபேசிச் சேவை, தற்போது முப்பது வருடங்களுக்குள் கண்டுள்ள மாற்றம்.. அடைத்துள்ள வளர்ச்சி.. படு வேகம்தான்.

நண்பர்களே, ரபேல் போர் விமானத்தின் விலையைத் தேடிப் பார்த்தீர்களா? மணிக்கு 1912 கி.மீ வேகத்தில் பறக்குமாமே. பயங்கர வேகம்தான். ரபேல் போர்விமானங்களின் விலையை மோடி தலைமையிலான அரசு மூடி மறைக்கிறது என ராகுல்காந்தி குற்றம் சாட்டியது நினைவுள்ளதா நண்பர்களே. விலை கிளாசிபைடு இன்ப்ர்மேஷனாம். அதாவது இரகசியமாக வைக்கப்பட வேண்டியதாம். நாடாளுமன்றத்தில் வைக்கப்பட முடியாததாம். விவாதிக்க இயலாதாம். இராணுவ அமைச்சர் நிர்மலா சீதாராமன் சீறியதைப் பார்த்தோமல்லவா?

36 போர்விமானங்கள் 59,000 கோடி ரூபாயாம். உலக தமிழ்ச் செய்திகள் (குளோபல் தமிழ் நியூஸ்) செய்தி வெளியிட்டிருக்கிறது. இந்திய விமானப் படையின் போர்த்திறனை அதிகரிக்க கூடுதல் போர்விமானங்களை வாங்க விமானப்படை

முடிவு செய்துள்ளதாம். பாகிஸ்தான் மற்றும் சீனாவை ஒருசேர சமாளிக்கும் வலிமை இந்திய வான்படைக்கு உண்டாம். சொல்வது வான்படை தலைமைத் தளபதி.

மிக், மிராஜ், தேசஸ், சுகோஸ், ஜாக்குவார் எனப் பலவிதமான போர்விமானங்களை இந்தியா வைத்துள்ளது. ரஷ்யாவின் உற்பத்தியான மிக் போர்விமானங்களிலேயே மிக் - 21, மிக் - 27, மிக் - 29 என ரகங்கள் உள்ளதாகத் தெரிகிறது. மிக் - 21 விமானம் சண்டையிடுமாம். மிக் - 27 தரையைத் தாக்குமாம். மிக் - 27 பலவிதத்திலும் பயன்படுமாம். 244 மிக் - 21, 84 மிக் - 27, 66 மிக் -29 என மிக் ரக போர் விமானங்கள் மட்டும் இந்தியாவிடம் 394 இருப்பதாகப் புள்ளி விபரம் குறிப்பிடுகிறது. ஹேல் - தேசாஸ் போர் விமானங்கள் எட்டு இருக்காம். 40 விமானங்களுகரு ஆர்டர் கொடுத்திருக்காங்களாம். பிரான்சு தயாரிப்பான மிராஜ், 41 இருக்கிறது. ரஷ்யாவோட சுகோய் - 30 வகையில் 240 இருக்காம். 272 ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளதாம். மொத்தமா கூட்டிப் பார்த்தால் இந்தியாவிடம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட போர்விமானங்கள் இருக்கின்றன.

போர் விமானங்கள் தவிர இலங்கு ஊர்திகள் (ஹெலிகாப்டர்), ஆள் பொருள் ஏற்றி செல்பவை, பயிற்சிக்கு என ஏராளமான விமான சேவைகளும் இந்திய வான்படையிடம் இருப்பதாக அறியமுடிகிறது. ரஷ்யா, பிரான்சு, ஐக்கிய ராஜ்ஜியம், பிரேசில், ஐக்கிய அமெரிக்கா, இசுரேல், சுலோவேனியா, உக்ரைன், ஜெர்மனி, சுவிச்சர்லாந்து, கனடா போன்ற பல்வேறு நாடுகளிலிருந்தும் வான்படைக்குத் தேவையான வானூர்திகளை இந்தியா வாங்கியிருக்கிறது.

2017, ஜுலை ஒன்றாம் தேதியின்படி, இந்திய விமானப்படையில் 1,39,576 பேர் பணிபுரிகின்றனர். அதிகாரிகள மட்டும் 12,550 பேர் உள்ளனர்.

இந்திய விமானப் படையின் முதல் பெண் விமானியாகப் பொறுப்பேற்றுக் கொண்ட அவானி சதுர்வேதி போர் விமானத்தை தனியாக ஓட்டிச் சென்றார். பெண்களுக்கு சிறப்பான செய்தியல்லவா. கடற்படையிலும் சேர்ந்தாயிற்று. தரை, கடல், வான் என அனைத்துப் படையிலும் நிறைந்துள்ள வீரப்பெண்கள், வீர யுவதிகள், வீர மங்கைகள் எதிரி நாட்டு மக்கள்மீது குண்டு மழை பொழிவார்கள். ஏவுகணைகளை வீசுவார்கள். துப்பாக்கிகளால் துளைப்பார்கள். ஜெயக்கொடி நாட்டுவார்கள். பெண்களின் வீரத்தை, துணிவைப் பாராட்டலாமல்லவா. வாழ்த்துக்கள் தோழிகளே.

பெண்கள் வீரமானவர்களா நண்பர்களே. வீர மறத்தி புலியை முறத்தால் அடித்து விரட்டினாளாமே. நம்பலாம் தானே. பெண்ணும் வீரம். ஆணும் வீரம். வீரமும் வீரமும் சேர்ந்தால் என்னாகும் நண்பர்களே. இரட்டிப்பு வீரமாகும். இரண்டு மடங்கு நான்கு மடங்காகும். நான்கு பதினாறாகும். சரிதானே. வீரம் பெருகிக் கொண்டே போனால் என்னாகும் தோழர்களே.

சமநிலை குலையுமல்லவா? ஆண் சம்பாதித்து வந்தான், பெண் குடும்பத்தை நிர்வகித்தாள், குடும்பம் மகிழ்ச்சியாய் வாழ்ந்தது. ஆண் நாட்டைப் பார்த்தும், பெண் வீட்டைப் பார்த்தும் சமநிலையைப் பேணினர். இரண்டு பேரும் வேலைக்குப் போனவுடன் வீடுகளின் நிலைமை என்னாகியது பார்த்தீர்களா? குடும்பங்களின் அமைதியும் இன்பமும் எப்படி மாறிவிட்டது என்பதைக் கவனிக்கிறீர்களா நண்பர்களே?

அப்பாவைப் பார்க்காத குழந்தைகளைப் பற்றியும் அம்மாவைப் பார்க்காத குழந்தைகளைப் பற்றியும் கேள்விப்பட்டதுண்டா? குழந்தைகள் தூங்கி விழிக்கும் முன்னே வேலைக்குப் போய், குழந்தைகள் இரவு தூங்கியபின் வேலை முடிந்து வரும் பெற்றோர்களைக் கண்டதுண்டா?

வீரமான பெண்ணுக்கும் வீரமான ஆணுக்கும் ஆண் குழந்தை பிறக்குமா? பெண் குழந்தை பிறக்குமா? எளிய கேள்விதானே நண்பர்களே. அன்பானவர்களுக்கு ஆண் குழந்தை பிறக்குமா? பெண் குழந்தை பிறக்குமா?

சமூகத்தை நாம் உற்றுப் பார்க்கலாமா தோழர்களே. உங்களுக்குத் தெரிந்தவர்கள், உறவினர்கள், பக்கத்து வீட்டுக்காரர்கள், நண்பர்கள், சினிமா பிரபலங்கள், விளையாட்டு வீரர்கள் என அனைவர் குடும்பங்களையும் சற்று உற்றுப் பாருங்கள். யாருக்கெல்லாம் பெண் குழந்தைகளாகப் பிறந்திருக்கிறார்கள்? யாருக்கெல்லாம் ஆண் குழந்தைகளாகப் பிறந்திருக்கிறார்கள்? ஏன் சிலருக்கு நான்கு, ஐந்து குழந்தைகள்கூட ஆணாகவே பிறக்கிறார்கள்? ஏன் சில பெற்றோருக்கு பெண் குழந்தைகளாகவே பிறந்திருக்கிறார்கள்?

காவல் துறையில் பணிபுரிபவர்களுக்கு, இராணுவப் படையினருக்கு ஆண்குழந்தைகள் அதிகம் பிறந்திருக்கிறார்களா? பெண் குழந்தைகள் அதிகம் பிறந்திருக்கிறார்களா? ஏதேனும் புள்ளிவிவரங்கள் வெளியிடப்படடிருக்கிறதா நண்பர்களே.

ஒருவா் வீரமானவா் என்றும் அன்பானவா் என்றும் எதை அளவீடாகக் கொண்டு அறிவது? உடலாலா? மனத்தாலா? செய்கையாலா? கட்டுடல் கொண்டவா்களை மட்டுமே ஆண் எனச் சொல்ல முடியுமா? பெண்களைப்போல் மாா்பு வளா்ச்சி இருந்தால் அவா் ஆணாக மாட்டாரா?

ஆண் பயந்த சுபாவமுள்ளவராகவும், கூச்சம் கொண்டவராகவும், பெண் தைரியமானவராகவும் இருந்தால் என்ன குழந்தை பிறக்கும்? பிறக்கும் பிள்ளையை வைத்து பெற்றோரின் வீரத்தை அறிய முடியுமா? மாவீரா்கள் எனக் குறிப்பிடப்படும் மன்னா்களுக்கு பெண் குழந்தைகள் பிறந்ததாக குறிப்புகள் கிடைக்கிறதா. இதிகாச, புராணங்களை புரட்டிப் பாா்க்கலாமே.

தமிழா்கள் எதை அளவீடாகக் கொண்டு வரன் தேடுகிறாா்கள்? பையனையோ பெண்ணையோ அன்பானவரா, அறிவானவரா, ஞானமுள்ளவரா, வீரமுள்ளவரா எனப் பாா்க்கிறாா்களா? பெண்ணுக்கு எவ்வளவு வரதட்சிணை கிடைக்கும் என்பதை அளவீடாக வைத்திருக்கிறாா்களா அல்லது அன்பான பெண்ணா, அழகான பெண்ணா, ஒழுக்கத்தில் சிறந்த பெண்ணா என்பதை அளவீடாக வைத்திருக்கிறாா்களா? பணமும், நகையும், வேலையும், சொத்துக்களும்தானே திருமணங்களைத் தீா்மானிக்கின்றன?

எந்த ஆணுக்கு எந்த மாதிரிப் பெண்ணைப் பிடிக்கும்? பெண் எப்படிப்பட்ட ஆணை விரும்புவாள்? ஆணின் மனதும் பெண்ணின் மனதும் ஒன்றா நண்பா்களே? பெண்ணின் உள்ளமும் ஆணின் உள்ளமும் ஒன்றா தோழா்களே? பெண் எதற்கு ஆசைப்படுவாள்? ஆண் எதற்கு ஆசைப்படுவான்? ஆண் எதில் திருப்தியடைவான்? பெண் எதில் திருப்தியடைவாள்? ஆணின் காதலும் பெண்ணின் காதலும் ஒன்றா? வேறு வேறா? இருவரின் காமமும் வேட்கையும் ஒன்றாகுமா?

அன்பும் அன்பும் சோ்ந்தால் மேலும் அன்பாகுமா? அறிவும் அறிவும் சோ்ந்தால் மேலும் அறிவாகுமா? வீரமும் வீரமும் சோ்ந்தால் மேலும் வீரமாகுமா? காதலும் காதலும் சோ்ந்தால் மேலும் காதலாகுமா?

சாலையில் போகும் கணவன் மனைவியைப் பாா்த்திருக்கிறீா்களா? ஒட்டித்திரியும், கைகளைச் கோா்த்தபடியே திரியும், சிணுங்கிக்கொண்டும் உரசிக்கொண்டும் உட்காந்திருக்கும் காதலா்களைக் கவனித்ததுண்டா? பெண் ஒல்லியாக இருந்தால் பையன் குண்டாக இருக்கிறாா். ஒல்லிக்குச்சியான

பையனுக்கு குண்டுப் பெண்ணைத்தான் பிடித்திருக்கிறது. நீண்ட பெண்ணுக்கு உயரம் குறைவான பையன்மேல் காதல் வருகிறது. கருப்புக்கு வெளுப்புமேல் ஆசை வருகிறது. வாயத் துடுக்கான பெண்ணின் இதயம் வாய்பேசாதா அமைதியான பையனைப் பார்த்து ஏங்குகிறது. கோபக்கார ஆணுக்கு சாந்தமான பெண்ணைக் கண்டால் மனம் குளிர்கிறது. சூடான உடலுக்குரிய பையனுக்கு குளிர்ச்சியான பெண்ணின் மீது ஈர்ப்பு அதிகமாகிறது.

எதிரெதிராக இருக்கும் ஒன்றக்கொன்று காந்தம் போல் கவருகிறது. இயற்கை சமநிலையைப் பேணுகிறதாக எடுத்துக் கொள்ளலாமா? அண்டவெளியெங்கும் ஒரு சமநிலை காணக்கிடைக்கிறதல்லவா? இயற்கை ஆணை வீரமுள்ளவனாகவும் பெண்ணை காதலுள்ளவளாகவும் படைத்து ஒரு சமநிலையைப் பேணுகிறதா?

வெப்பம் அதிகமானால் அது வெப்பம் குறைவான இடத்தை நோக்கி நகரும். அழுத்தம் அதிகரித்தால் அது அழுத்தம் குறைந்த பகுதியை நோக்கி நகரும். நமக்கு ஏன் வியர்க்கிறது? மேகங்கள் ஏன் மழை பொழிகின்றன? ஏன் புயல் வருகிறது? கடல் காற்று ஏன் குளிர்ச்சியாக இருக்கிறது? கடலில் ஏன் நீரோட்டங்கள் உள்ளன? கடலின் வெப்ப நீரோட்டங்களும் குளிர் நீரோட்டங்களும் ஏன் ஒன்று சேர்கின்றன? விலங்குகளுக்கு ஏன் தாகம் ஏற்படுகிறது? குளத்து நீரில் குளித்தால் சிறுநீர் அதிகரிப்பது ஏன்? கடல்நீரில் குளித்தால் தாகம் வருவது ஏன்?

கோடையில் வேர்க்கிறது, குளிரில் உடல் நடுங்குகிறது. உடலில் வெப்பம் அதிகரித்தால் வியர்வை மூலம் வெப்பம் வெளியேற்றப்படுகிறது. குளிர்காலத்தில உடலுக்கு வெப்பம் தேவைப்படுவதால், தசைகள் ஒன்றுடன் ஒன்று உராய்ந்து கொண்டு வெப்பத்தை உருவாக்குகின்றன.

நல்ல தண்ணீரில் மூழ்கிக் குளிக்கும்போது, தோல் துளைகள் வழியாக நீர் உடலுக்குள் செல்கிறது. உடலுக்குள் வரும் அதிகமான நீரை சிறுநீரகங்கள் வடிகட்டி, சிறுநீராக வெளியேற்றுகின்றன. கடலில் குளிக்கும்போது, கடலில் உப்பு அதிகமாகவும் நல்ல தண்ணீர் குறைவாகவும் இருக்கிறது. நமது உடலில் நல்ல தண்ணீர் அதிகமாகவும் உப்பு குறைவாகவும் இருக்கிறது. இயற்கை விதிப்படி தண்ணீர் அடர்த்தி அதிகமான இடத்திலிருந்து அடர்த்தி குறைவான பகுதிக்கு இடம் பெயரும். உடலின் நீர் தோல்நுண்துளைகள் மூலம் வெளியேறுகிறது. உடலின் நீர் குறைவதால் நமக்கு தாகம் உண்டாகிறது. நீர் அருந்துவதன் மூலம் உடல் தனது சமநிலையை சரிசெய்து கொள்கிறது.

இயற்கையும், சூழ்நிலையும், சமூகமும் தங்களது சமநிலையைத் திறமையாகக் கையாள்கின்றன. ஒன்றுபோல் வைத்துக் கொள்கின்றன. இயற்கை முடிந்தவரை சமநிலையை சரிசெய்து கொள்ளவே முயற்சிக்கும். ஓரளவிற்குமேல் இயற்கைச் சமநிலை குலைந்தால்?

ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரு சமநிலை இருக்கிறது. எண்ணிக்கை சார்ந்து, குணம் சார்ந்து, இயற்கை சார்ந்து, உள்ளம் சார்ந்து, மொழி சார்ந்து, சமூக அமைப்பு சார்ந்து ஒரு சமநிலை இருக்கிறது. ஆணுக்குள்ளேயே ஒரு சமநிலை பேணப்படுகிறது. ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் ஒரு சமநிலை பேணப்படுகிறது.

ஆணுக்குள் ஆண் தன்மையும் உண்டு, பெண் தன்மையும் உண்டு. பெண்ணுக்கும் அதே. ஆணுக்குள் ஆண்தன்மைக்கும், பெண் தன்மைக்கும் சமநிலை உண்டு. ஆணுக்குள் ஆண்தன்மை அதிகமாகவும் பெண்தன்மை குறைந்தும் காணப்படும். பெண்ணுக்குள் பெண்தன்மை மிகுந்தும் ஆண்தன்மை குறைந்தும் இருக்கும்.

ஆண் எண்பது சதமான ஆண்தன்மை கொண்டவனெனில், மீதி இருபது சதம் பெண்தன்மை இருக்கும். ஆண்தன்மை சதமானம் குறையக் குறைய பெண் தன்மையின் சதமானம் மிகுந்து வரும். பெண்ணுக்கு எண்பது சதம் பெண் தன்மையும், இருபது சதம் ஆண் தன்மையும் இருக்கும். பெண் சதமானம் குறையக் குறைய பெண்ணுக்குள் ஆண்தன்மை மிகுந்துகொண்டே வரும்.

பெண் தனியாக விமானத்தை ஓட்டுகிறாள் எனில் அவளிடம் அச்ச உணர்வு இல்லை என்றே அர்த்தம். அச்சம் இல்லையெனில் மார்பு வீங்காது. திருமணத்தில் ஆண் குழந்தைதான் பிறக்கும். பிறக்கும் மகனுக்கு பெண்தன்மை மிகுந்திருக்கும்.

கணவன் - மனைவி இருவரும் மிகுந்த ஆண்தன்மையோடு இருந்தால் அவர்களுக்கு ஆண் பிள்ளைகளே பிறப்பார்கள். பிள்ளைகளுக்கு பெண்தன்மை மிகுந்திருக்கும்.

ஆணும் பெண்ணும் அன்பானவர்களாக இருந்தால் பிறக்கும் பிள்ளைகள் பெரும்பாலும் பெண்களாக இருப்பார்கள். அவர்கள் ஆண்தன்மையோடு இருப்பார்கள். பேச்சில், செயலில் நடத்தையில் ஆண்தன்மை மிளிரும். இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் ஆண்களாக இருப்பார்கள்.

மிகுந்த ஆண்தன்மையோடு இருக்கும் ஒரு ஆணுக்கு, மிகுந்த ஆண்தன்மையோடு இருக்கும் பெண்மேல் காதல் வருமா? ஒருபோதும் வராது. மிகுந்த பெண் தன்மைகொண்ட பெண், மிகுந்த பெண்தன்மை கொண்ட ஆண்மேல் காதல் வயப்படுவாளா? ஒருபோதும் மாட்டாள். அவரவா்கள் சுதந்திரமாக துணைகளைத் தோ்தெடுக்க அனுமதித்தால். நிறுத்தாமல் பேசக்கூடிய பெண்ணுக்கு பேசாத பையனையே பிடிக்கும். ஒல்லிக்குச்சி ஆணை குண்டான பெண்தான் கவா்ந்திழுப்பாா்.

இயற்கை அனைத்திலும் சமநிலையைப் பேணுகிறது. சமநிலை இல்லையெனில் எண்ணிக்கை மாறுபடும். அளவு மாறுபடும். நிறம் மாறுபடும், முற்றான ஆண் உண்டா? முடியாது. இருக்கவே முடியாது. முழுமையான பெண் இருக்க முடியாமா? ஒருபோதும் முடியாது.

நூறு சதமானம் முழுமையான ஆணென்றோ, நூறு சதம் முழுமையான பெண்னென்றோ உலகில் இருக்க முடியுமா? ஒருபோதும் முடியாது. 99 சதமானம் ஆணாக இருக்கலாம். ஒரு சதமானம் பெண்தன்மை இருந்தே தீரும். ஆணுக்குள் ஆண்தன்மை மிகுந்து வரவர, ஆணுக்குள் பெண்தன்மை மிகுந்து வரவர திருமணத்தில் ஈா்ப்பிருக்காது. 99.99 சதமானம் பெண்தன்மைகூட இருக்கக் கூடும். 0.01 சதமானம் ஆண் தன்மையை தவிா்க்கவே முடியாது.

ஆணில் 50 சதமானம் ஆண்தன்மையும், 50 சதமானம் பெண்தன்மையும் இருக்க முடியுமா? முடியாது. எதாவது ஒரு பண்பு குறைந்தபட்சம் ஒரு சதமானமாவது கூடுதலாக இருக்கும். பெண்ணுக்கும் அப்படியே. 51 என்றால் ஆண்தன்மை மிகுந்து ஆணாகவே இருப்பாா். பெண்தன்மை மிக அதிகமாக இருக்கும். 49 என்றால் அவா் பெண்தான். ஆண் போலவே காணப்படுவாா்.

ஏன் ஒன்றாக இல்லாமல் இரண்டாக இருக்கிறது? எப்படி ஒன்றுக்குள் இரண்டாக இருக்கிறது? எதனால் இரண்டும் சோ்ந்து ஒன்றாகிறது?

ஆண் ஒருவரா அல்லது இருவரா? பெண் ஒன்றா அல்லது இரண்டாக இருக்கிறாரா? ஒன்றா? இரண்டா? ஆணும் பெண்ணும் ஒன்றா? வேறுவேறா? ஒன்றுக்குள் இரண்டா? இரண்டிலும் ஒன்றா? ஒன்றா இரண்டா? அத்வைமா? துவைதமா?

இயற்கை, விதவிதமான சாப்பாடுமீது பற்றுக்கொண்ட ஆணுக்கு, சாப்பாடுமேல் மோகம் இல்லாத பெண்ணையே பரிசளிக்கும். இயற்கை பேரறிவு கொண்டது. மிகவும் சுத்தம் பார்க்கும் பெண்ணுக்கு, சுத்தமென்றால் என்னவென்று கேட்கும் ஆணைத் தந்து சமநிலையை மீட்டுக் கொள்ளும். காமம் மிகுந்த ஆணுக்கு அதில் ஆர்வமில்லாத மனைவியைக் கட்டிவைத்துச் சிரிக்கும். இருவருமே காமம் மிகுந்திருந்தால்? காமம் மிகுந்து சமநிலை குலையும்.

அரசாங்க வேலையாம், பைய் நிறைய சம்பளமாம் எனக் கட்டிக்கொடுக்கப்படும் பெண், ஒரு வாரத்திலேயே கணவன் வேண்டாம் என்கிறாா். நூறு பவுன் நகைக்காகத் திருமணம் செய்யும் மணவாழ்க்கை நிச்சயம் கசக்கவே செய்யும்.

தமிழ்ச் சாதிகளில் எந்தச் சாதி ஆண்கள், எந்ததெந்த சாதி ஆண்கள் திருமண உறவு தாண்டிய திருட்டு உறவுகள் அதிகம் வைத்திருக்கிறார்கள்? ஏதாவது புள்ளி விவரம் இருக்கிறதா? ஏன் குறிப்பிட்ட சாதியைச் சார்ந்த ஆண்கள் வேறு சாதிப் பெண்ணை நாடிச் செல்கிறார்கள்? வீரமான ஆணுக்கு வீட்டிலிருக்கும் வீரமான பெண்ணைப் பிடிப்பதில்லை. அன்னாருக்கு மலரினும் மெல்லிய கையுடையவளே பிடிக்கிறது. வீட்டிலிருப்பதோ முரட்டுக் கைகள். மாட்டுக்கு புல் அறுத்து, பால் பீச்சி, காட்டுவேலை பார்த்து, விறகுவெட்டி, அடித்துத்துவைத்து பத்துப் பாத்திரம் தேய்த்து.. கையில் பஞ்சு போன்ற மெல்லிய விரல்களா இருக்கும்? எங்கேயடா மலரினும் மெல்லியலாள் கிடைப்பாள் எனத் தேடித் திரியும் மீசைக்கார ஐயா, எங்கேயாவது போய் வசமாக மாட்டிக்கொள்கிறார். எப்படியோ பணம் சம்பாதித்து, மெல்லியலாளை அரவணைத்து வரும் ஐயாவுக்கும் வயதாகும்தானே. மெல்லிய தையலாளிடம் பணம் கொடுக்கும் வரைதானே செல்வாக்கு. செல்வாக்கு இழந்து வரும் ரோசக்கார ஐயாவை முரட்டுக் கைகள் நெட்டித்தள்ளி விட, ஏங்கித் தவிக்கும் ஐயா, கடைசிக் காலத்தில் கஞ்சி கிடைக்காமல் களப்புக் கடைகளில் சாப்பிட்டு காலத்தைத் தள்ளி வருகிறார். சரிதானே நண்பர்களே. தமிழ்நாட்டில் மனைவியிடம் சாப்பிடாமல், மனைவியுடன் ஒன்றாக வாழாமல் தனியாக வாழும் ஆண்கள் எந்தச் சாதியில் அதிகம் என ஏதாவது புள்ளி விவரங்கள் இருக்கிறதா மீசைக்காரத் தமிழர்களே.

ஏன் ஆண்களுக்கு மட்டும் மீசை முளைக்கிறது? ஏன் ஆணாகவோ பெண்ணாகவோ உலகம் இல்லை? ஆணும் பெண்ணுமாக ஏன் இருக்க வேண்டும்?

முதல் யார்? ஆணா? பெண்ணா? முதலிலிருந்தே இரண்டுதானா? முன் யார்? ஆணின் விலா எலும்பிலிருந்து பெண்ணா? பெண்ணுக்கு பெண்ணாகவே முக்தி இல்லையா?

அதெப்படிச் சொல்லலாம்? நாங்கள் எதில் குறைந்தவா்கள்? உங்களைவிட எதில் குறைச்சல்? பெண்ணென்றால் இளப்பமா? அதெல்லாம் அந்தக் காலம். ஆண் செய்யும் அனைத்தையும் நாங்களும் செய்வோம். சொல்லப்போனால் எங்களால் முடிந்ததைத்தான் ஆண்களால் செய்ய முடியாது?

எங்களால் உங்களைப்போல் படிக்க முடியாதா? ஆசிரியராவது கஷ்டமா? நாங்களும் எழுதுவோம். காா் ஓட்டுகிறோம், பேருந்து ஓட்டத் தெரியாதா? லாரி ஓட்டிக் காட்டட்டுமா? விமானம் ஓட்டுவது எத்தனை எளிது. ரயிலும் ஓட்டுகிறோமா இல்லையா? ஆட்டோவெல்லாம் பழங்கதை.

ஆராய்ச்சி செய்வது உங்களுக்கு மட்டுமே உரியதா? விண்வெளிக்கு பறந்து காட்டட்டுமா? பெண்ணால் பேங்க் மேனேஜராக முடியாதா? கலெக்டராவது கடினமா? சீருடைப் பணியை சிறப்பாகச் செய்வது நாங்கள்தான் தெரியுமா? விளையாட்டுகளில் நாங்களே திறமையானவா்கள். தெரிந்து கொள்ளுங்கள் ஆண்களே.

பெரிய ஆணாம். பெண்ணைவிட எதில் சிறப்பு இந்த ஆண்? மீசை வைத்தால் ஆணா? மல்யுத்தம் வைத்துக் கொள்ளலாமா? பெண்ணின் வீரம் தெரியுமா? மோதுவதற்குத் தயாரா? மோதிப் பாா்ப்போமா? ஆணாக இருந்தால், மீசை வைத்த ஆம்பிளையா இருந்தால் வந்து பாா்? ஒரே பிடியில் உம்மைத் தூக்கி எறிகிறோம்.

உமது திமிரை அடக்குகிறோமா இல்லையா பாரும்.

எம்மைத் தொட்டால் உமது உடலில் உயிா் நில்லாது.

உம்மைத் தொடாவிட்டால் எமது உயிா் நில்லாது.

ராமன் என்ன பீமன் என்ன கண்ணன் என்ன மன்னன் என்ன, பெண்களோடு

போட்டி போட்டுப் பாா்.

புலியைப் பாா் நடையிலே, புயலைப் பாா் செயலிலே, புரியும் பாா் முடிவிலே,

விரட்டினால் முடியுமா, மிரட்டினால் படியுமா.

எம்மைப்போன்ற பெண் இல்லை

பெண்ணை வென்ற ஆண் இல்லை.

முட்டை போடும் பெட்டைக் கோழியே

சேவல் கூட போராட்டமா.

மன்னர் மன்னனே எமக்கு கப்பம் கட்டு. எம்மைப் பார்த்து எந்த ஆணும் இந்த நாளும் எந்த நாளும் அடங்கி வந்து நின்று வந்தனங்கள் தந்து செல்லணும்.

சண்டி ராணியே எமக்குக் கப்பம் கட்டு. ஜென்ம ஜென்மமாய் எமக்குக் கட்டுப் பட்டு. எம் சரித்திரத்தில் எந்நாளும் பெண்மகள் ஜெயித்ததில்லை. எம்மிடத்தில் மண்டி போடடி.

எம் பின்னால் அலையுறியே நீயென்ன மானம் கெட்டவனா.

எம் உயிரை எடுக்கிறியே நீயென்ன வெட்கம் கெட்டவளா.

இஞ்சி தின்னக் குரங்கு - போடி காட்டு வெள்ளப் பன்னி

போடா திருடா - போடி திருடி

திருடனும் திருடியும்

திருடனால் திருடியா

திருடியால் திருடனா

ஆணுக்கும் பெண்ணுக்கும் போட்டி வந்துவிட்டதுதானே தோழமைகளே. எல்லாவற்றிலும் போட்டி போடுகிறார்களல்லவா. எல்லாவற்றுக்கும் போட்டி போடுகிறார்களல்லவா. ஆணுக்குப் பெண் எதிலும் சளைத்தவளல்ல எனும் நிலை வந்துவிட்டதல்லவா.

பெண்கள் திருடுகிறார்கள். கையூட்டு வாங்கி மாட்டுகிறார்கள். ஆண்களாவது வெட்கப்பட்டு முகத்தை மறைத்துக் கொள்கிறார்கள். கொலை செல்கிறார்களல்லவா. மணவுறவுக்கு வெளியே பழக்கமாகி, சொந்தப் பிள்ளைகளையே கொலை செய்ததாகச் செய்திகள் வருகின்றனதானே. குடிப்பது சாதாரணமாகிவிட்டது தெரியும்தானே. ஆண்களைப்போல் உடை. முடிவெட்டு. நிமிர்ந்த நடை. வேடிக்கைப் பேச்சு.

பெண்களின் வேகத்தைக் கவனித்திருக்கிறீர்களா? பந்தய வண்டிகள்கூட மெதுவாகச் செல்லும் போல. உடற்பயிற்சி கூடங்களில் பெண்கள்தான் அதிகமாகத் தெரிகிறார்கள் நண்பர்களே. ஆண்களுக்கு வெட்கம் வந்துவிட்டதைக் கவனிக்கிறீர்களா? பெண்கள்தான் இறுக்க அணைத்துக் கொண்டு நடுரோட்டில் உட்காந்திருக்கிறார்கள்.

அச்சப்படும் பெண்கள் அரிதாகிவிட்டார்கள். நாணம்? அதெல்லாம் இனி தேடிப் பார்த்தாலும் கிடைக்காது. திருமண உறவில் இணையாத பெண்களின், திருமணம் செய்தாலும் குழந்தை பெற்றுக் கொள்ளாத பெண்களின் எண்ணிக்கை பெருகி வருவது கண்கூடு.

நம் நாட்டிலும் டேட்டிங் கலாச்சாரம் வந்து வெகுநாட்களாகிவிட்டதல்லவா? ஆணும் பெண்ணும் சேர்ந்தே வாழ்கிறார்கள். பிடித்திருந்தால் கூடுதலாகக் கொஞ்ச நாட்களைத் தள்ளலாம். எப்போது வேண்டுமானாலும் அவரவர் வழிகளில் பிரிந்துவிடலாம்.

விவாகரத்துகள் பெருகுகின்றன. மணமுறிவு நீதிமன்றங்களில் தள்ளுமுள்ளு நடக்கிறது. பெண்கள் கன்னித்தன்மையை காசுக்கு விற்கிறார்கள். கருப்பையை வாடகைக்கு விட்டுச் சம்பாதிக்கிறார்கள். தாய்ப்பாலுக்கும் நல்ல விலை கிடைக்கிறதாம்.

பெண்ணிற்கு அறிவு வந்து விட்டதா தோழமைகளே? அறிவென்றால் என்ன, அன்பென்றால் என்ன, காதலென்றால் என்ன, வீரமென்றால் என்ன, ஞானமென்றால் என்ன என்பதை அறிந்திருக்கிறோமா? அன்பில் உண்மையான அன்பு போலியான அன்பு என இருக்கிறதா? அறிவில் எத்தனை வகைகள் இருக்கின்றன? போலியான அறிவு உண்டா? உண்மையான அறிவு இருக்கிறதா? சுயநல அறிவு, பொதுநல அறிவு என்றெல்லாம் உள்ளதா? அன்பு காசாகுமா? அறிவு பணமாகுமா? ஞானம் பதவியாகுமா?

பெண்ணின் அறிவால் உலகம் உயர்ந்திருக்கிறதா? போரில்லா சமுதாயம் பிறந்துவிட்டதா? உலகிலுள்ள அனைவரும் வயிறு நிறைய உண்கிறார்களா? உலகில் சமத்துவமும் அன்பும் கூடி விட்டதா?

பெண்ணின் இதயமும் ஆணின் இதயமும் ஒன்றா? பெண்ணின் தசையும் ஆணின் தசையும் ஒன்றா? பெண்ணின் மூளையும் ஆணின் மூளையும் ஒன்றா? பெண்ணின் காதலும் ஆணின் காதலும் ஒன்றா?

பெண்ணால் காதலிக்காமல் இருக்க முடியுமா? காமத்தை அடக்க முடியுமா? இன்பத்தைத் துறக்க முடியுமா? பெண்ணின் உள்ளம் எத்தகையது?

மனிதா்களால் காதலிக்காமல் வாழ முடியுமா? மனிதா்களால் காமத்தை வெல்ல முடியுமா? வெல்ல முடியுமெனில் இயற்கை தோற்கிறது எனப் பொருளாகுமா? இயற்கை தோற்குமா? இயற்கையை வெல்ல முடியுமா? இயற்கையை வென்றால் என்னாகும்? மனிதா்கள் காமத்தை அடக்க முடிந்தால் அது இயற்கையின் தோல்வியாகாதா? மனிதா்களால் தேவா்களை வெல்ல முடியுமா? தேவா்கள் யாா்? எங்கிருக்கிறாா்கள்? மாறனின் அம்பை வென்றவா் யாருளா்?

பெண்ணிலும் நன்கள் வந்தாயிற்று. சாமியாரினிகள் வந்தாயிற்று. பூசகா்கள் வந்தாயிற்று. கடவுள்கள் வந்தாயிற்று.

பெண் மனம் அன்பு நிறைந்ததா? பெண்ணின் உள்ளம் கனிவு கொண்டதா? பெண் மனம் கருணை நிரம்பியதா? பெண் உள்ளம் இரக்கம் மிகுந்ததா?

பெண்ணால் பெண்மையை மறைக்க முடியுமா? தாய்மையை மறுக்க முடியுமா? அழும் குழந்தையை எட்டி உதைக்க முடியுமா? சிரிக்கும் குழந்தையைத் தூக்காமல் இருக்க முடியுமா? பசியோடிருப்பவா் முகத்தைப் பாா்க்க முடியுமா?

பெண்ணால் துப்பாக்கி ஏந்திச்  சுடமுடியுமா? எறிகணையை ஏவ முடியுமா? ஏவுகணையை வீச முடியுமா?

பெண் போா் விமானியால் குண்டு மழை பொழிய முடியுமா? ஒரே குண்டில் நகரமே உருக்குலையும் என்பதை வீராங்கனை அறிந்திருப்பாரல்லவா. போடப்படும் குண்டு குழந்தையென்றும், முதியோா் என்றும், ஆணென்றும், பெண்னென்றும், பூக்கள் என்றும், கான்கிரீட் என்றும் வேறுபடுத்திப் பாா்க்குமா? ஒரே குண்டில் ஒரு நகரத்தையே அழித்தோம் என வீராங்கனை இன்புறுவாரா? குதூகலம் அடைவாரா? நண்பா்களுக்கெல்லாம் சொல்லி மகிழ்வாரா? பெற்றோரைப் பாா்த்து கட்டி அணைப்பாரா? அரசு கொடுக்கும் விருதை முத்தமிடுவாரா?

தமிழ்ப் பெண்தான். ஆனாலும் பூச்சூடுவதில்லை, பொட்டு வைப்பதில்லை. சேலை கட்டுவதில்லை. கூந்தலில்லை. கும்பிடும் பழக்கமில்லை. காதணி இல்லை. கழுத்தணி இல்லை. மூக்கணி இல்லை. மொழி இல்லை, முறுவல் இல்லை, முத்தம் இல்லை. முலையும் கருப்பையும் இருந்தும் இல்லை. தமிழ்ப் பெண்ணாகுமா? தரணி தாங்குமா?

வெண்ணிலவே வெண்ணிலவே, விண்ணைத் தாண்டி வருவாயா

விளையாட ஜோடி தேவை.

இந்தப் பூலோகத்தில் யாரும் பார்க்கும் முன்னே உன்னை அதிகாலை

அனுப்பி வைப்போம்.

எட்டாத உயரத்தில் நிலவை வைத்தது யாரு

கையோடு சிக்காமல் காற்றை வைத்தது யாரு

பெண்ணே பெண்ணே..

பெண்ணால் பூட்டிக் கொள்ள முடியுமா? பூட்டிக் கொண்டால் உயிர்க்குலம் என்னாகும்? பெண்ணுக்குக் கற்புண்டா? பெண்மை சாதி பார்க்குமா? மத வேறுபாடு நோக்குமா?

ஒன்று பூட்டினால் மற்றது திறக்குமா? இரண்டுமே பூட்டிக் கொண்டால் என்னாகும்? ஒன்று உள்ளேயும் மற்றொன்று வெளியேயும் இருப்பது ஏன்? ஏன் இரண்டும் வெளியேயும், இரண்டும் உள்ளேயும் இல்லை? ஒன்றுதான் இரண்டாக இருக்கிறதா? விதைப்பையும் கருப்பையும் ஒன்றா? ஒன்றெனில் ஏன் இரண்டாக இருக்கிறது?

ஒன்றில் விந்தகம். ஒன்றில் அண்டகம். இங்கே விந்து குழல். அங்கே அண்ட நாளம். அவனுக்கும் அவளுக்கும் இருபத்தி மூன்று. அதுவும் அதுவும் சேர்ந்து நாற்பத்தி ஆறு. நாற்பத்தி ஆறு பாதியாகி, பாதியும் பாதியும் சேர்ந்து, மீண்டும் முழுதாகிறது.

அது ஒன்றா? இரண்டா? இரண்டும் ஒன்றா? மூன்றாவது உண்டா? அது உயிரா மெய்யா உயிர் மெய்யா? குறிலா? நெடிலா? குறுக்கமா விரிவா?

குறுகுவது ஆணா பெண்ணா? விரிவது ஆணா பெண்ணா? பெருகுவதும், படர்வதும் யார்? மலர்வரும் மணப்பதும் யார்? மறுப்பதும் மருகுவதும் யார்?

அண்டம் யார்? பிண்டம் யார்? அண்டப் பிண்டம் யார்? விண்ணும் மண்ணும் யார்? அண்டம் ஆணா பெண்ணா? அண்டம் ஒன்றா இரண்டா பலவா?

பூமி ஆணா பெண்ணா? பூமியும் பெண்ணும் ஒன்றா? நிலத்தையும் நதியையும் பெண்ணென்பது ஏன்? பல்கிப் பெருகுவதாலா? பெருகாதது பெண்ணென்றாகுமா? பூட்டிக் கொள்வது பெண்மையாகுமா?

மொட்டு மலராவது யாருக்காக? மழை யாருக்காகப் பெய்கிறது? நதிகள் யாருக்காகப் பாய்ந்தோடுகின்றன? வண்டுகள் யாருக்காகப் பாடுகின்றன? மலர்கள் யாருக்காகக் காத்திருக்கின்றன?

அன்னை சமைப்பது யாருக்காக? அவளுக்கா? குழவிகளுக்கா? அன்னையும் குழவியும் ஒன்றா? ஒருவரா? இருவரா? இருவருக்கும் விசேச உறவிருக்கிறதா? அன்னை வேறு குழவி வேறா?

ஆணில் பாதி பெண்ணாகுமா? பெண்ணில் பாதி ஆணாகுமா? ஆணும் பெண்ணும் ஒன்றா? வேறுவேறா? இரண்டும் ஒன்றானால்? இரு உள்ளமும் ஓருள்ளமானால்.. மண வாழ்க்கை எப்படி இருக்கும்?

எதிர்ப் பேச்சு வருமா? எதிர்க் கேள்வி எழுமா? நீதிமன்றங்கள் நிறையுமா? உணவு விடுதிகள்தான் பெருகுமா? உள்ளங்கள்தான் பிரியுமா?

உள்ளமே ஒனக்குத்தான்

உசிரே ஒனக்குத்தான்

உம்மையும் எம்மையும் பிரிச்சா உலகமில்ல

தண்ணிக்கும் மீனுக்கும் என்னைக்கும் விலக்கமில்ல.

நண்பர்களே.. கல்வியிலும், அரசியலிலும், ஆன்மீகத்திலும் முதலீடு செய்வதே தற்போது புத்திசாலித்தனமான முதலீடாகக் கருதப்படுகிறது. சாதியில் முதலீடு பண்ணினாலும் நல்ல அறுவடை செய்யலாம். சாதியைத் தூக்கிப் பேசி, ஒரு அமைப்பை ஆரம்பிக்க வேண்டியது, பின் அதையே ஒரு அரசியல் கட்சியாக வளர்த்தெடுத்து, தேர்தல் காலங்களில் பெரிய கட்சிகளோடு பேரம் பேசுவது,

கொள்ளை லாபம் கொடுக்கும் தொழிலாக மாற்றம் பெற்றுள்ளது. எவ்வளவுக் கெவ்வளவு மற்ற சாதிகளை மட்டமாகப் பேசுகிறோமா, இழிவாக பேசுகிறோமோ, அதிரடியாகப் பேசுகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு சாதி தலைவரின் புகழும் செல்வாக்கும் கூடும் என்பது கண்கூடு. எவ்வளவுதான் வீரப்பு பேசினாலும், தேர்தல் நெருங்க நெருங்க சாதிக் கட்சிகளிடம் அமைப்புகளிடம் அரசியல் கட்சிகள் வந்துதானே ஆகவேண்டும்.

மதத்தை வைத்து கடவுள்களை வைத்து அரசியல் செய்வதும், பணம் சம்பாதிப்பதும் தற்போதைய காலகட்டத்தில் கொழுத்த இலாபம் தருவதாகவே உள்ளது. மற்ற கடவுள்களையும், மாற்று மதத்தவரையும் எவ்வளவு தரம் தாழ்த்திப் பேசுகிறோமோ அவ்வளவு அவரவர் சார்ந்த மதத்தில் செல்வாக்கும் புகழும் கிடைக்கிறது.

சாலைகளெங்கும் கோவில்களும், சர்ச்சுகளுமாக கட்டுகிறார்கள். மசூதிகளுக்கும் குறைவில்லை. தமிழகக் கிராமங்களில் சாதிவெறி நீரூற்றி வளர்க்கப்படுகிறதெனில், நகரங்களிலோ மதவெறி எண்ணெய் ஊற்றி ஆதரிக்கப்படுகிறது. இரண்டிலும் மெத்தப் படித்தவர்கள்தான் முன்னணியில் இருக்கிறார்கள்.

மதங்களிடமும், கடவுள்களிடமும் குழந்தைகள் மாட்டிக்கொண்டு அல்லாடுவது பரிதாபத்திற்குரியது. பெற்றோர்கள் ஒன்றுமறியா அப்பாவிக் குழந்தைகள்மேல் மதத்தை, கடவுளைத் திணிக்கிறார்கள். பிஞ்சு மனங்களில் கடவுள் நம்பிக்கையை விதைத்து, மரமாக வளர்க்கிறார்கள். இந்து, கிறித்தவர், இசுலாமியர் என எந்தப் பாகுபாடு இல்லை. இந்துக்களில் ஓரளவிற்குப் பரவாயில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். சமீப ஆண்டுகளில், யாம் கவனித்தவரை உயர்சாதி இந்துகளிடமும் மதவெறி வெள்ளமெனப் பொங்கி வழிவதைப் பார்க்க முடிகிறது. கிறித்தவர், இசுலாமியருக்குப் போட்டியாக, இந்துக்கள் மனத்திலும் விதைக்கப்படும் இந்த மதவெறி விதைகள், எதிர்கால உலகிற்கு நிச்சயம் அன்பை, சமாதானத்தைக் கொடுக்கப்போவதில்லை.

தமிழகக் கிறித்தவர்களின் மதப் பிரச்சாரங்களையும், மதமாற்றங்களையும் யாம் கவனித்தே வருகிறோம். யாம் வருடத்தில் மிகக் குறைவான நாட்களே எமது கிராமத்தில் தங்குகிறோம். கிறித்தவ மதப் பிரசாரகர்கள் பைபிள் விநியோகிப்பதையும், மதப்பிரச்சார துண்டு பிரசுரங்கள் கொடுப்பதையும் அடிக்கடி

காண்கிறோம். வீடுவீடாகப் போய் கொடுக்கிறார்கள். ஒரே இரவு சபத்தில் அத்தனை நோய்களும் குணமாகும் எனச் சொல்லும்போது எளிய மக்களின் மனம் சலனமடைவது இயற்கைதானே. மூடநம்பிக்கைகளை எதிர்த்து மாபெரும் இயக்கம் கண்ட தமிழ் மண்ணில், ஆவியின் பெயரால் நிகழும் பிரச்சாரங்களும், மதமாற்றங்களும், விஸ்தாரமான சர்ச்சுகளும். யாரால் நண்பர்களே?

தமிழகத்தில் முறையாகத் திட்டமிடப்பட்ட மதப்பிரச்சாரங்கள், மத மாற்றங்கள் நடப்பது கண்கூடு. பிராமணர்களும், வெள்ளாளர், முதலியார்களும் இதில் முன்னணியில் இருக்கிறார்கள். பிராமணர் கிறித்தவத்திற்கு மாறினால், அதை வைத்து பெரியளவிலான பிரச்சாரங்கள் நிகழ்த்தப்படுகின்றன. இதில் அதிகம் புத்திசாலியானவர் பிராமணரே. நல்ல கொழுத்த வருமானம் கிடைக்கிறது. பங்களா வீடுகள், வங்கி நிறையப் பணம், வெளிநாட்டுப் பயணங்கள் என பெருவாழ்வு கிடைக்கிறது. ஒரு பிராமணர், கிறித்தவப் பிரச்சாரம் மூலமே ஒன்றரைக் கோடிக்கு வீடு வாங்கியிருக்கிறார் எனில் பார்த்துக் கொள்ளுங்கள்.

கிறித்தவர்கள் மதமாற்றப் பிரச்சாரங்களில் ஈடுபடுவது உண்மையா? யாமே நேர் சாட்சியாக இருக்கிறோம் நண்பர்களே. எம்மிடம் எத்தனையோமுறை கிறித்துவின் பெருமை பேசப்பட்டிருக்கிறது. ஒரே ஒருமுறை கூட்டத்திற்கு வந்து பாருங்கள் என அழைப்பு விடப்பட்டிருக்கிறது. இந்தப் புத்தகத்தைப் படித்துப் பாருங்கள் எனக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அட்டவணையினரெனில் எளிதாக மதம் மாற்றிவிடலாம் எனும் பொதுப்புத்தி தமிழகக் கிறித்தவர்களின் மனங்களில் வலுவாக உள்ளது. அதற்கேற்றால் போலவே பேச்சுக்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

கிறித்தவருக்கும் இசுலாமியக்கும் பிற மதத்தவர்மேல் வரும் காதல், மதமாற்றத்திலேயே முடிகிறது. காதலுக்காக கிறித்தவரோ, இசுலாமியரோ மதங்களை மாற்றிக் கொள்வதே இல்லை. ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும், மதம் மாறாமல் வீட்டில் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் எனும் பேச்சு முன்வைக்கப்படுகிறது. எம்மால் பல உதாரணங்களைக் கூறமுடியும். எமது மாணவி ஒருவர் மதம் மாறியதை அறிவோம். எம்மோடு நன்றாகப் பேசுவார். வகுப்புகளில் ஏராளமான கேள்விகள் கேட்பார். திருமணப் பத்திரிக்கை கொடுக்கும்போது எம்மிடம் பேசினார். பையனின் அம்மா ஒத்துக் கொள்ளவில்லையாம். மதம் மாறினால்தான் திருமணம் எனப் பையனும் கறாராகச் சொல்லிவிட்டாராம்.

காதலிக்கும்போது இந்துப் பெண்ணென்று தெரியும்தானே. அவரவர் மதநம்பிக்கையை வைத்துக்கொண்டே இல்லற வாழ்வை நடத்த முடியாதா?

எமது அனுபவத்தில் அறிந்தது, மெத்தப் படித்த பேராசிரியர்கள்தான் மிக அதிகமாக சாதி, மத வேறுபாடுகளைப் பார்க்கிறார்கள். உண்மையில் சாதியும் பார்க்கிறார்கள். மதமும் பார்க்கிறார்கள். மாணவர்களிடம் சாதி, மத வேறுபாடுகள் அப்பட்டமாகக் காட்டப்படுகின்றன. எமது தனிப்பட்ட அனுபவத்தில் கிறித்தவர்களைவிட இசுலாமியர்கள் பரவாயில்லை என்றே தோன்றுகிறது. பொதுமனப்பான்மையில், இசுலாமியர்கள் மிகவும் தீவிரமான மத நம்பிக்கையுள்ளவர்களாகவே சித்தரிக்கப்பட்டு வருகின்றனர். உண்மையில் அப்படி அல்ல என்பதே எமது எண்ணம், அனுபவம்.

கல்லூரிகளில் நடத்தப்படும் சரஸ்வதி பூஜை, பொங்கல் பண்டிகை போன்றவற்றில் கலந்து கொள்வதில்லை. பொங்கல்கூட சாப்பிடமாட்டார்கள். இவர்களுக்கென தனியாகப் பொங்கல் கொடுப்பதே வாடிக்கை. எல்ல மதத்தவரும் அமர்ந்திருக்கும் பேராசிரியர்கள் அறையில் சூடம் காட்டுவதற்கு அனுமதியில்லை. சந்தனம், குங்குமம் வைக்க முடியாது. ஒன்றிரண்டு தலைமுறைக்கு முன்னர் மதம் மாறிய நம் சகோதரர்களே இவ்வளவு வேறுபாடு பார்க்கிறார்கள் எனும்போது. மேலை நாட்டினரைச் சொல்லி என்னாகப்போகிறது?

கல்லூரி மாணவர்கள் பரவாயில்லை என்றே நினைக்கிறோம். மதம் கொண்டு அவர்களுக்குள் பிரிவினை இல்லாதது போல்தான் தெரிகிறது. கல்லூரி பொங்கல் விழாக்களில் இசுலாமிய, கிறித்தவ மாணவர்கள் வேலைகளைப் பங்கிட்டுக் கொள்கிறார்கள். மதம் கடந்த மனிதநேயம் இம்மண்ணில் தழைக்க வேண்டும் என மனதார வேண்டிக் கொள்கிறோம்.

எமது அனுபவத்தில் கிறித்தவ மாணவர்களில் சிலர் பொரி, பொங்கல் சாப்பிடாததைக் கவனித்திருக்கிறோம். மாணவர் பருவத்தில் மதங்களை விட்டு விலகியிருப்பதே சாலச் சிறந்தது. உணவில் மதம் பார்க்கவே கூடாது. வாழ்வில் வயதாகும்போது, வாழ்வின் அனுபவங்கள் கூடும்போது, மதங்கள் குறித்து சிந்திப்பதே முறையானதாக இருக்கும். ஆனால் துரதிருஷ்டவசமாக மிக மிக இளம் வயதலேயே மதங்கள் ஊட்டப்படுகின்றன.

பேராசிரியா்களின் ஐந்து வயது நிரம்பாத குழந்தைகள் ஞாயிறுதோறும் மதக் கல்விக்கு அனுப்பப்படுகிறாா்கள். அந்த சின்னஞ்சிறு வயதில், குழந்தைக்கு என்ன தெரியும்? குழந்தைகளை தங்கள் போலவே உடலாலும், உள்ளத்தாலும், உணா்வாலும், மதத்தாலும் வளா்க்க ஆசைப்படுகிறாா்கள் போலும்.

மதமாவது பரவாயில்லை என நினைக்க வைக்கிறது பேராசிரியா்களின் சாதிப்பற்று. தமிழா்கள் மதத்தைவிட சாதியைத்தான் முக்கியமாகப் பாா்க்கிறாா்கள். எம்மால் உறுதியாகச் சொல்ல முடியும். ஒரு வெள்ளாளருக்கு அட்டவணைப் பிரிவைச் சோ்ந்த இந்துவைவிட கிறித்தவச் செட்டியாரே மிகவும் நெருக்கமாக இருக்கிறாா். முதலியாருக்கு இந்து அட்டவணையினரை விட கிறித்தவ நாடாரே அணுக்கமாகத் தெரிகிறாா். அவா்களது வீடுகளுக்குப் போகிறாா்கள். உறவு முறைகள் சொல்லி சொந்தம் கொண்டாடுகிறாா்கள். பேராசியரே ஆனாலும் பட்டியல் இனத்தவா் வீடுகளுக்கெல்லாம் போவது இல்லை. மனதளவில் பெரிய விலக்கம் கொண்டிருப்பது அனைத்து நிலைகளிலும் கண்கூடாகத் தெரிகிறது. அவா்களது வீட்டு நிகழ்வுகளுக்கு அதிகமாக பணம் வசூலிப்பதிலிருந்து, அவா்களது குடும்பத்தைச் சாா்ந்தவா்களை நலம் விசாரிக்கப் போவதிலிருந்து, அவா்களது வீட்டு நல்லது கெட்டதுகளில் கலந்து கொள்வதிலிருந்து, சாதி அன்பை, சாதி விலக்கத்தைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

தமிழ் வணக்கம் எழுத்தில், தொல். திருமாவளவனின் கருத்துக்கள் 26.03.2006 இல் வெளியிடப்பட்டிருக்கிறது. தோழா் கூறுகிறாா் - மாற்றம் ஒன்றுதான் மாறாதது என்கிற தத்துவம்கூட தோற்றுப்போனது சாதியிடம் மட்டும்தான். உலகமே கிராமமாகி வரும் சூழலிலும் நாம் சாதியின் முன் மண்டியிட்டுக் கிடக்கிறோம். பள்ளியில், வீட்டில், விசேஷங்களில், அலுவலகங்களில், தோழமையில், திருமணத்தில், சுடுகாட்டில் இப்படி ஜனனம்முதல் மரணம்வரை நம்மைத் துரத்துகிறது சாதி.

பிறப்பொக்கும் எல்லா உயிா்க்கும் என்று சமத்துவம் பேசுகிறது வள்ளுவம். உமது பிறப்பே அவமானகரமானது. நீய் வாழத்தகுதியற்றவன் என்கிறது தமிழகத்தில் சாதியம்.

அரசும் அதிகாரவா்க்கமும் மக்களைக் காப்பாற்றுவதைவிட, சாதியைக் காப்பாற்றுகிற கடமையையே செய்கின்றன. உலகில் மிகச்சிறந்த சனநாயக நாடான

இந்தியாவின் தேர்தல் ஆணையத்தாலேயே, தமிழகத்தில் ஐந்து பஞ்சாயத்துகளில் தேர்தலை நடத்த முடியாமல் சவால் விடுகிறது சாதி.

குரங்கிலிருந்து வந்தவன் மனிதன் என்கிறது அறிவியல். குரங்களில் சாதி இல்லை. ஆனால் இங்கே ஒவ்வொரு மனிதனும் சாதி எனும் அசிங்கத்தை குற்ற உணர்வு இல்லாமல் சுமக்கிறான். தமது பெயருக்குப் பின்னால், தமது சாதியின் பெயரை எழுத இங்கே யாருக்கும் வெட்கமில்லை.

தீண்டாமை ஒரு பெருங்குற்றம் என்று பாடப்புத்தகங்களில் எழுதி வைத்துவிட்டால் தீண்டாமை ஒழிந்துவிடுமா? கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய மூத்த குடியில் தற்போதும் இரட்டைக் குவளை பாகுபாடு இருக்கிறது. சக மனிதனை மலம் அள்ளவைத்து விட்டு, அதற்குரிய குற்ற உணர்வு இல்லாமல் ஷாப்பிங்போக நாம் தயாராகவே இருக்கிறோம்.

சட்டதிட்டங்களால் இறுகிக் கிடக்கும் மதத்தைக்கூட ஒருவன் கடந்து வர முடியும். ஆனால் தான் பிறந்த சாதி தனக்குப் பிடிக்கவில்லையென்றால், அந்த சாதியில் இருந்து வெளியேற முடியாது. இங்கே பிறக்கிற ஒவ்வொரு குழந்தையின் மீதும் பெரியவர்கள் சாதியை எடுத்து அப்பி விடுகிறார்கள். மனிதனாகப் பிறக்க வேண்டிய குழந்தைகள் பிராமணராக, நாடாராக, தேவராக, பிள்ளையாக, பள்ளராக, பறையராக, சக்கிலியராகவே பிறக்கிறார்கள்.

கிராமங்களில் எல்லாத் திசைகளிலும் சாதியின் முட்கள். பாரம்பரியம் பேசும் பழமை போற்றும் ஒவ்வொரு கிராமத்துக்குள்ளும் இன்னொரு கிராமம் அவமானத்தில் கிடக்கிறது. எல்லா ஊருக்குள்ளும் ஒரு சேரி இருக்கிறது. எல்லோரையும் காக்கிற கடவுள்கூட மேல் சாதி மக்களின் வீட்டுக்கருகில் தான் இருக்கிறார். அவர் அமர்ந்து உலா வரும் தேர்கூட சேரியின் பக்கம் வராது.

மதம் மாறினால் சாதிய அவமானம் போய்விடும் என்று நம்பினால், கிறித்துவ நாடார், கிறித்துவ முதலியார் என்று அங்கேயும் தன் கூரிய பற்களைக் காட்டுகிறது சாதி.

வெள்ளையர்கள் நம்மை சாதியை வைத்துத்தான் ஜெயித்தார்கள். கொள்ளையர்கள் நம்மை சாதியை வைத்துத்தான் வென்றார்கள். இந்த இழிவு சரித்திரம் இனியும் வேண்டாமே.

இந்தக் காலத்துல சாதியெல்லாம் யாருப்பா பார்க்கிறா என்று வேதாந்தம் பேசுகிற சகோதரர்களின் கவனத்துக்கு.. செய்தித் தாள்களில் வருகிற மணமகள், மணமகன் தேவை விளம்பரங்களைப் பாருங்கள். இன்ன சாதியில், இன்ன உட்பிரிவில், இன்ன கிளைப்பிரிவில்.. உள்ளவர்களையே இணையாகத் தேர்ந்தெடுக்க பகிரங்கமாக விளம்பரம் செய்கிற பி.இ. எம்.பி.பி.எஸ்-கள் நிறைய இருக்கிறார்கள் நம் தமிழ் மண்ணில்.

முதல் தலைமுறையாக படித்துவரும் இளைய தலைமுறை வீட்டுக்கு வெளிய சாதியச் சட்டைகளை உரித்துப் போடுவதை வரவேற்கப் பழகுவோம். சாதி மறுப்புத் திருமணங்களை திருவிழாவாக நடத்துவோம். கல்வி, ஆட்சி, அதிகாரம், ஊடகம், கலை.. என எல்லா மட்டங்களிலும் இளைய தலைமுறை தடைகளைத் தாண்டி வளரட்டும்.

நமது கல்வி முறையில் சாதி ஒழிப்புப் பற்றிய அக்கறையைக் கொண்டு வருவது மிக அவசியம். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் பட்டியல் மக்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை, சமத்துவமின்மையைக் களைவோம். சமூக நீதியை விரும்புகிற தோழமைச் சக்திகள் அதைச் சாதி ஒழிப்பில் இருந்தே தொடங்குவோம்.

கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போகட்டும். சாதி பேசாத, சாதி கேட்காத புதிய தலைமுறை நம் காலத்தில் சமத்துவமாக மலரட்டும்!

அருமையான பதிவு. சரிதானே தோழமைகளே. புதிய தலைமுறை மலரட்டும் எனத் தோழர் சொல்லி வெகுகாலமாகிவிட்டது. சாதி, மதம் பார்க்காத தலைமுறை மலரும் எனப் பார்த்தால், சாதி மத வேறுபாடுகளை உயர்த்திப் பிடிக்கும் தலைமுறையே தமிழகத்தில் அதிகமாகப் பிறந்திருக்கிறது. தோழர்கள் நம்பவில்லை எனில், முகநூல், வாட்ஸ் அப், டுவிட்டர்கள் பக்கம் ஒரு விசிட் போய் வருவது நல்லது.

அடேங்கப்பா.. எவ்வளவு சாதி வெறி. சாதித் திமிர். சாதிப்பற்று. இதுதான் தமிழர்களின் உண்மையான முகமா தோழர்களே. உண்மையான மனமா நண்பர்களே. பெண்களும் ஏராளமாக சாதி ஒட்டுக்களை முகநூல் பெயராக வைத்திருக்கிறார்கள்.

யாம் இரண்டு முகநூல் கணக்கு வைத்திருக்கிறோம். ஒன்று மதம் சார்ந்து மேய்வதற்கு. இன்னொன்று சாதி சார்ந்து மேய்வதற்கு.

தேவர்களின் பதிவுகள் அருவாளை ஆராதிக்கின்றன, சாதிவெறியைத் தூண்டுகின்றன எனில் பரவாயில்லை என எடுத்துக் கொள்ளலாம். வீரம் அப்படித்தான் தூக்கும். கவுண்டர்களுக்கு என்னாயிற்று? பெரும்பான்மையான பதிவுகள் சாதியைப் போற்றுவதாகவும், மக்களை மிரட்டுவதாகவும் இருப்பது எம்மைப் போன்றவர்களை முகம் சுழிக்க வைக்கிறது. இதுதான் கவுண்டர்கள் குணமா என்ன? அருவாள எடுத்துட்டு போறோம். யார் எங்கூட வர்றது, உடுமலையில விழுந்ததுபோல இன்னைக்கு ஒண்ணு விழுந்தாத்தான் பயம் வரும் என கவுண்டர் அருவாளைத் தூக்கிய புகைப்படத்தோடு முகநூல் பதிவிடுவதை எப்படி எடுத்துக் கொள்வது? தேவரைப் பார்த்து கவுண்டர் கற்றுக் கொண்டாரா அல்லது கவுண்டரது இயல்பே இதுதானா?

அழகும் அன்பும் நிறைந்து காணப்படும் கவுண்டர் பெண்களின் பெயர்கள் சாதி ஒட்டோடு இருப்பது கண்கூடு. படித்த பெண்களுக்கு, எதிர்காலத்திய ஆசிரியர், பொறியாளர், மருத்துவர்களுக்கு, வரும் காலத்தவர்களை சாதி, மத வேறுபாடுகளிலிருந்து வெளியேற்றி, தமிழ் மண்ணில் சமத்துவம் படைக்க வேண்டிய பெண்களுக்கு இது அழகல்லவே.

கல்வியிலும், தொழில் வளத்திலும், தமிழகத்தை வழிநடத்தும் தகுதியுள்ள கவுண்டர் சமுதாயத்தினர், குறிப்பிட்ட ஒரு கொலைப்பழிக்காரரின் பின்னால் அணிவகுத்து நிற்பதும், விழா எடுப்பதும், தமிழகம் எங்கே இருக்கிறது, உலகின் அதற்கான இடம் எதுவென நன்றாகவே காட்டுகிறது. கவுண்டர் இளைஞர்கள் முகநூலில் போட்டிருக்கும் வாசகங்களை இங்கே பதிவிட்டால், அவர்களுக்கே அது அவப்பெயரைக் கொடுக்கும் என்பது திண்ணம். காதலிப்பவரை கொல்வதை ஊக்குவிக்கும் சமூகமா கவுண்டர் சமுதாயம்? காதலித்தால் கொலை செய்யும் சமுதாயமா கவுண்டர் சமுதாயம்? கொலைப்பழி சுமப்பவரை தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடும் சமூகத்தினரா கவுண்டர்கள்? கொங்கு செழித்தால் எங்கும் செழிக்குமாமே. உண்மைதானா.

பிள்ளைகளின் சாதிப்பற்றை என்னவென்பது. அத்தனை முகநூல் பதிவுகளிலும் மருதநாயகம் ஓங்கிய வாளோடு நிற்கிறார். பிள்ளை சமூகத்தில் எத்தனை ஞானிகள் பிறந்திருக்கிறார்கள். எத்தனை எத்தனை தமிழ்ச் சான்றோர்கள்

தோன்றியிருக்கிறார்கள். எத்தனை எத்தனை விடுதலை வீரர்கள் போராடியிருக்கிறார்கள். அறிவுள்ள சமூகம், தம் அறிவால் தமிழர் பண்பாட்டையும் பெருமையையும் உலக அரங்கில் மேன்மையுறச் செய்ய வேண்டிய சமூகம், அந்தோ, சிறுமையில் சிக்கி உழல்வதை என்னவென்பது.

மருதநாயகம் வீரராம். போட்டோ ஷாப் வேலைகள் என்ன, அலங்காரங்கள் என்ன, பாட்டுக்கள் என்ன, பதிவுகள் என்ன, வீர வசனங்கள் என்ன. பிள்ளைக்கு அழகு அறிவா? வீரமா? பிள்ளைகள் வீரத்தை முன்னெடுக்கலாமா? பிள்ளைகளுக்கு சாதிவெறி தலைக்கேறலாமா? நாம் தமிழர் என்பதை ஓங்கி ஒலிக்க வேண்டியது பிள்ளையல்லவா.

பிள்ளையே வாளைத் தூக்கினால் தேவரை என்ன சொல்வது. பிள்ளைக்கு தேவரே பரவாயில்லை என நினைக்குமளவிற்கு சமீபகாலமாக பிள்ளைகளின் வ.உ.சிதம்பரனார் பூஜைகள் நினைக்க வைக்கின்றன.

வண்டிகளில் அதிவேகமாக வருவதும், கூரைகளில் ஏறியும், படிகளில் தொங்கியும், சன்னல்களில் தலையைவிட்டு வருவதும், தலைகளில் துணியைக் கட்டிக்கொண்டு வருவதும், வசனங்கள் சொல்வதும், கத்துவதும், ஆடுவதும், கூச்சலிடுவதும், சிக்னல்களில் நிற்காமல் போவதும். பிள்ளைமார்களே, யாம் உண்மையாகவே சொல்கிறோம். உங்களுக்கு தேவர்கள் எவ்வளவோ மேல். தேவர்களைப் பார்த்து காப்பி அடிக்கிறீரோ? உங்களுக்கு ரோல்மாடல் தேவரா?

தமிழர்க்கெல்லாம், இந்தியர்க்கெல்லாம் முன்மாதிரியாக இருக்க வேண்டிய பிள்ளைகள், உலகத்தில் அறிவை உயர்த்த வேண்டிய பிள்ளைகள், தமிழ் மொழியையும், தமிழர் அறிவையும் செழிக்கவைக்க வேண்டிய பிள்ளைகள், நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே என இறையவே கேள்வி கேட்டதாகக் கூறப்படும் பிள்ளைகள், இப்படியா சாலைகளில் கத்திக்கொண்டு வ.உ.சி. குருபூஜையை முன்னெடுப்பது. அந்த மாமனிதருக்கு, மகத்தான வீரருக்கு, தியாகச் செம்மலுக்கு இழுக்கல்லவா இந்த குருபூஜை. வ.உ.சிதம்பரனாரை சிதம்பரம் பிள்ளையாக்குவது முறைதானா? எங்களுக்கு பள்ளிகளில் இப்படிச் சொல்லிக் கொடுக்கவில்லையே. நாங்கள் படித்ததெல்லாம் வ.உ.சிதம்பரனார், நாட்டின் விடுதலைக்காக ஆங்கிலேயரை எதிர்த்தார், சிறையில் செக்கிழுத்தார் என்பது மட்டும்தான். அவரை பிள்ளைமார் சாதி என ஒருவரும் சொல்லிக்கொடுக்கவில்லையே. நீங்கள் எப்போதிலிருந்து சிதம்பரனாரை சிதம்பரம்

பிள்ளையாக ஆக்கினீர்கள்? என்றிலிருந்து இப்படி குருபூஜைக்கு ஓடுகிறீர்கள்? மற்ற சாதிக்காரரெல்லாம் ஓடுவதைப் பார்த்து ஆசை வந்துவிட்டதோ? எதற்காக இப்படி தமிழர்கள் ஓடுகிறார்கள் எனப் பிள்ளைகள் யோசித்து, சாதி ஓட்டங்களைத் தடுத்திருந்தால் தமிழகம் வேறுபாதையில் வெற்றிநடை போட்டிருக்குமே. பாதையை மாற்றாமல், பயணத்தை அறியாமல், ஓடும் நோக்கம் தெரியாமல் பிள்ளைகளும் சேர்ந்து ஓடுவது ஏற்புடையதுதானா? சாதியாய் தமிழர்கள் ஓடுவதற்குத்தானா இத்தனை ஓட்டங்களும்? இதற்காகவா நம் முன்னோர் இத்தனை பாடுபட்டார்கள்? செக்கிழுத்தார்கள்? சிறை சென்றார்கள்?

காமராஜர், காமராஜ் நாடாராகி வெகுகாலமாகிவிட்டது. பாரதிதாசனையும் முதலியார் பட்டத்தோடு இணைக்கிறார்கள். இதுதான் தமிழர்களின் அறிவுடைமையா தோழர்களே. அனைத்துச் சாதியினருடைய முகநூல் பதிவுகளும், சாதியைத் தூக்கிப் பிடிப்பதாகவே இருக்கின்றன.

தமிழர்கள் மதம் சார்ந்து பதிவிடும் முகநூல் பதிவுகள் எம்மைப் பொருத்தளவில் பெருத்த கண்டனத்திற்குரியவை. ஒரு சிலர் தவிர, மாற்று மதத்தவரை மிகவும் கீழ்த்தரமான சொற்களால் விமர்சிக்கிறார்கள். பெரும்பாலும் கிராமங்களில் பயன்படுத்தப்படும் வசவுச் சொற்களாகவே இருக்கின்றன. தமிழர் நாகரிகத்தில் சிறந்தவராமே. யாம் அறிந்தவரை இசுலாமியர் பதிவுகள் பெரும்பாலும் கண்ணியக் குறைவாக இல்லை. இந்து அமைப்புக்களின் பெயரிலும், வீரசிவாஜி படத்தோடு இடும் முகநூல் பக்கங்களிலும், மோசமான அறை கூவல்கள் இடப்படுகின்றன. பொதுத்தளத்தில் வெளியிடப்படும் யூடியூப் போன்ற பதிவுகளின் பின்னூட்டங்கள் காணச் சகிக்கவில்லை. தமிழர் ஈராயிரம் ஆண்டுகளுக்குமேல் நீடிக்கும் பண்பாடு கொண்டவர்களென்பது உண்மையெனில், எப்படி அவர்களால் அருவருக்கத்தக்க பின்னூட்டங்கள் இட இயலும்? எதற்கும் ஏதேனுமொரு வலைப்பக்கத்தின் பின்னூட்டங்களைப் பார்த்துவிட்டு, தமிழர் நாகரிகத்தில் உச்சம் தொட்டவர் எனப் பேசுவதும் எழுதுவதும் நல்லது தோழர்களே.

பெரியார், ராமசாமியாகவும், ராமசாமி நாயக்கராகவும் ஆகிவிட்டாரல்லவா? பெரியார் சிலைகளை உடைக்கவும் ஆரம்பித்தாயிற்று. தமிழகத்தில் அனைத்துத் தலைவர்களும் கம்பிக் கூண்டுகளுக்குள்தான் நிற்கிறார்கள். மாற்று மதத்தவரைப் பார்த்து சிலைகளை கோவில்களை உடைத்தார்கள் என முகநூல்களில் வசைபாடும் தமிழர்கள், அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை

அறியவில்லை. அவர்களுக்கு உறைக்கவும் இல்லை. தமிழர்களுக்கு அனைத்திலும் வெறி. மதவெறி, சாதிவெறி, மொழிவெறி, பணவெறி, காமவெறி, குடிவெறி, சினிமாவெறி, முகநூலிலும் வெறி.

தமிழ்மொழி காட்டுமிராண்டி மொழி எனப் பெரியார் பேசினாராம். மெத்தப் படித்த தமிழர்கள் மிகவும் குறைபட்டுக் கொள்கிறார்கள். தந்தை சரியாகத்தானே சொல்லியிருக்கிறார். அவர் தந்தையல்லவா.

தமிழ் காட்டுமிராண்டி மொழிதானா? பின்னே. சந்தேகம் இருக்கிறதா நண்பர்களே. காதலித்து கலியாணம் செய்தார்கள் என்பதற்காக கூலி கொடுத்து கொலை செய்வரோ? அதையும் ஆதரிப்பரோ? கூலிக்கு கொலை செய்பவர் தமிழ் நாட்டில் வாழ்வரோ?

தமிழின் பெருமை என உலகளவில் முன் வைக்கப்படும் சங்கத்தொகை நூல்களில் என்ன இருக்கிறது தோழமைகளே. தமிழ் தொன்மொழி எனவும், செம்மொழி எனவும் புகழப்படுவதற்குக் காரணம் தொகை நூல்கள்தானே. அதைக் காட்டித்தானே தமிழ் உலகின் முதல் மொழி எனவும், தமிழர் நாகரிகமே உலகின் முதல் நாகரிகம் எனவும், அறிவில் சிறந்த தமிழர்கள் கூப்பாடு போடுகிறார்கள். தமிழ் செம்மொழியா தமிழர்களே?

மொழிக்கும் மனதிற்கும் உள்ள தொடர்பை அறிவில் சிறந்த தமிழர்கள் நிச்சயம் அறிந்திருப்பார்கள். மனதிற்கும் சிந்தனைக்கும் உள்ள உறவும் நிச்சயம் தெரிந்திருக்கும். செம்மொழியில் சிந்திக்கும் தமிழர் மனம் எப்படி இருக்கிறது? செம்மையாக இருக்கிறதா அல்லது காட்டுமிராண்டித்தனமாக இருக்கிறதா? மனம் காட்டுமிராண்டியாக இருக்கும்போது, மனதிற்குக் காரணமான மொழிமட்டும் எப்படி செம்மையாக இருக்கும்? செம்மையில்லாத மொழி பேசுபவர் மட்டும் எப்படி உயர்வானவராக இருப்பார்?

தொகையைப் பற்றி அறியாமலா பெரியார் சொன்னார்? எமது காலத்திலேயே சாதியும், மதமும், மொழியும் இவ்வளவு வெறித்தனத்தோடு இருக்கிறதே, தந்தை காலத்தில் எப்படி இருந்ததோ? தொகையில் சாதி சுட்டப்படுகிறதா அறிவில் உயர்ந்த தமிழர்களே? தொகை நூல்கள் சாதியைத் துதிக்கின்றனவா? பாடுகின்றனவா? போற்றுகின்றனவா? அப்படியெனில் ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் இல்லாத ஒன்று இடையில் புகுந்துவிட்டதா? ஆரியம் புகுத்தியதெனில் அதை

உரமிட்டு வளர்த்தது யார் தமிழர்களே? இன்றளவும் அதற்கு நீர் பாய்ச்சி வருவது எந்த சாதி தமிழர்கள்? செருப்பு தைக்கும் தொழிலாளி அதை அணிந்து ஊருக்குள் நடக்கக் கூடாது எனும் நடைமுறை இன்றளவும் இருக்கிறதா இல்லையா? பகுத்தறிவு தமிழர்களே. இருசக்கர வாகனத்தை ஓட்டிக் கொண்டு போகாமல் தள்ளிக் கொண்டு போவது நடக்கிறதா இல்லையா ஆறறிவு தமிழர்களே. தமிழர் அறிவைக் குறைவாகச் சொல்லிவிட்டோமோ? தமிழர்க்கு ஏழாம் அறிவு வந்துவிட்டதாமே?

தற்போதும் தமிழகத்தில் சாதியை தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடும் தமிழ் சாதிகள் எவை? மதத்தை தோளில் சுமந்தலையும் தமிழ் சாதிகள் எவை? எத்தனை சாதிக்காரர்கள் உடுமலை சங்கருக்கு உள்ளம் பதறினீர்கள், எத்தனை சாதிக்காரர்கள் உள்ளம் மகிழ்ந்தீர்கள்? மறைக்க முடியாது தமிழர்களே. முகநூல் பக்கங்களே சாட்சி.

அறிவிற் சிறந்த பிள்ளைமார், தமிழை செம்மொழியாக்கிய பிள்ளைமார், சைவத்தைப் போற்றும் பிள்ளைமார், தமிழகத்தில் காதல் கல்யாணம் செய்பவர்களை ஆதரித்ததுண்டா? உடுமலைத் தோழருக்கு ஆதரவாக ஏதேனும் அறிக்கை வெளியிட்டதுண்டா? தமிழகத்தில் நிகழும் ஆணவக் கொலைகளுக்கு எதிராகக் கருத்துச் சொன்னதுண்டா? பின் எப்படி பிள்ளை பேசும் மொழி மட்டும் செம்மொழியாக இருக்க முடியும்?

பிள்ளையின் கடவுள்களெல்லாம் காதலித்து களவு மணம் புரிந்தவர்கள் தானே. எமக்குத் தெரியாது. பிள்ளைகள்தான் சொல்லிக் கொடுத்தார்கள். புத்தகத்தில் எழுதினார்கள். திரையில் காண்பித்தார்கள். வள்ளி திருமணம் நாடகம் பார்த்ததுண்டா பிள்ளைகளே.

முருகப் பெருமான் காதல் திருமணம் புரிந்தாரா இல்லையா? சிவனார் தாட்சாயினியை மாமனார் எதிர்ப்பையும் மீறி மணமுடித்தாரா இல்லையா? முருகன் சாதி மாறி எங்கே திருமணம் புரிந்தார் எனச் சொன்னாலும் சொல்வீர்கள். குறவனும் குறத்தியுமல்லவா. ஓரே சாதிக்குள் காதல் வருவதும், அதை காதல் திருமணம் என்பதும்தான் நவயுகக் காதலாயிற்றே. முருகன் குறவனா பிள்ளைகளே. அப்படியா ஆக்கி வைத்திருக்கிறீர்கள்? அப்படியா புரணங்கள் இயற்றியிருக்கிறீர்கள்? குறவனுக்கெப்படி தேவேந்திரன் பெண் கொடுத்தான்?

முருகன் குறவனெனில் தமிழர் ஒப்புவரா? தமிழ் மனம் ஏற்குமா? முருகன் குறவனெனில் அவன் அப்பன் சிவனும் குறவனல்லவா? எந்த ஊர்க் குறவன் செக்கச் செவேலென்று இருக்கிறார்? குறிஞ்சித் தலைவன் நெய்தலுக்கு எப்போது வந்தான் பிள்ளைகளே.

முருகனையும், சிவனையும் தமிழ்நிலமெங்கும் பரப்பிய பிள்ளைமார், தற்போது யாரை மூலை முடுக்கெல்லாம், இண்டு இடுக்கெல்லாம் பரப்பிக் கொண்டிருக்கிறீர்? எப்போதிலிருந்து பிள்ளைவால், பிள்ளையாரை தலைக்குமேல் தூக்க ஆரம்பித்தீர்? பிள்ளை வீட்டுப் பூஜையறைகளில் நடுநாயகமாக கொலுவிருப்பது பிள்ளையார் அல்லவா? மறுக்க முடியுமா பிள்ளைகளே.

எதனால் இரண்டு அப்பன்களைவிடவும், பிள்ளைகளுக்கு கணபதியைப் பிடித்திருக்கிறது? கணபதியை முக்கியத் தெய்வமாக வழிபடுகிறார்கள்? பிள்ளைகளைப் பார்த்து, நாடாரும், தேவரும் கணபதியைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அப்பனே முருகா.. ஞானபண்டிதா.. ஞாபகம் இருக்கிறதா பிள்ளைகளே. நொடிக்கொரு தாம் நீங்கள் சொல்லியதுதான். முருகன் ஞானத்தில் சிறந்தவனா? ஞான பண்டிதனா? உண்மையெனில் பிள்ளையார் எப்படி தமிழகத்தில் அறிவிற்கு உதாரணம் ஆனார்? ஆக்கியது யார்? பிள்ளைகளா? பிராமணரா? அல்லது பிற சாதியரா? ஞானமுதல்வன் யார் பிள்ளைகளே? முழுமுதற் கடவுள் யார் பிள்ளைகளே? இந்தத் திசையில் தமிழர்களை வழிநடத்தியது யார் தமிழ் சான்றோர்களே?

தோழி வீட்டு பால்காய்ச்சிற்கு பரிசு கொடுக்க விரும்புகிறோம். மரத்தில் செய்த அழகிய கடவுளர் உருவங்கள் இருக்கின்றன. அவரிடம் எந்தக் கடவுள் மரச் சிற்பம் வேண்டுமெனக் கேட்கிறோம். பிள்ளையார் சிற்பம் வாங்குங்கள் என்கிறார். பெரிய அப்பனையும் கேட்கவில்லை, சிறிய அப்பனையும் கேட்கவில்லை. பெரிய அப்பனுக்கு உருவ வழிபாடு இல்லை என்பதால் ஒருவேளை மறுத்திருக்கலாம். சிறிய அப்பனுக்கு உருவ வழிபாடு உண்டுதானே.

பிள்ளையாரை மட்டுமா வணங்குகிறார்கள்? வழிபடுகிறார்கள்? பிள்ளைமாரும், வெள்ளாளரும், முதலியாரும், கவுண்டரும், செட்டியாரும்,

யாதவரும் இன்னபிற மேல்சாதியரும், சாய் பக்தர்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள். யார் இந்த சாயி பிள்ளைகளே?

இரண்டாயிரம் வருடங்களாக முயலும் கிறித்தவர்களைவிட, ஆயிரத்து அறுநூறு ஆண்டுகளாக முயன்றுவரும் இசுலாமியர்களைவிட, ஒரு நூற்றாண்டு காலத்திற்குள் தமிழ்நாடு என்றில்லாம் இந்தியா முழுக்கவே பரப்பப்பட்டு விட்ட இந்த சாய்பாபாவின் வரலாறு என்ன தமிழர்களே? பெருமதங்களால் முடியாத ஒன்று எப்படி இந்த சாயால் எப்படி முடிந்தது?

சங்ககாலத்திலிருந்து அறியப்பட்டு வருவதாகக் கூறப்படும் வேலனைவிட, ஒரு நூற்றாண்டுக்குமுன் வாழ்ந்த பாபாவை ஏன் ஒரு வெள்ளாளருக்குப் பிடித்திருக்கிறது? பாபா எது கேட்டாலும் கொடுக்கிறாரா? நினைத்ததெல்லாம் நடக்கிறதா. பணமும், ஊதிய உயர்வும், புரமோசனும், வீடும், காரும் கிடைப்பதற்கு பாபாதான் காரணமா? பாபா தாமாகப் பரவினாரா அல்லது பரப்பப்பட்டாரா? விளம்பரங்களால் யாரை வேண்டுமானாலும் கடவுளாகப் பரப்பிட முடியுமா?

நிலங்களை ஐவகையாகப் பிரித்து, ஒவ்வொன்றிற்கும் கடவுளரை அறுதியிட்டு, பலிகளும், சடங்குகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, ஈராயிரம் ஆண்டுகளுக்கும்மேல் நீண்டதான பாரம்பரியம் கொண்ட தமிழ் நிலத்தில், தற்போது யாருக்கெல்லாம் கோவில்கள், மாடங்கள், மடங்கள், சன்னிதானங்கள், பஜனைக்கூடங்கள், மந்திர்கள் எழும்பியிருக்கின்றன? எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன? தமிழர் மதம், தமிழர் சமயம் இத்தனை இலகுவானதா? தமிழர் பண்பாடு இத்தனை எளிதானதா? வந்தாரை வாழவைக்கும் தமிழகமோ?

அப்பன் முருகனையும், அப்பன் சிவனையும், அம்மை பார்வதியையும் முன்னெடுத்து வந்த பிள்ளைகள், மூவரையும் விட்டுவிட்டு ஆண்டவராம் இயேசுவை வழிபடத் துவங்கியது எப்போதிலிருந்து நண்பர்களே? ஆண்டவராகிய கர்த்தருக்கு முன்னால் மண்டியிட்டுக் கிடக்கும் நம் பிள்ளை, உண்மையிலேயே ஆண்டவர் ஏசுவின் அன்பிற்காகவும், தியாகத்திற்காகவும்தான் அங்கே போய் மண்டியிட்டுக் கிடக்கிறாரா அல்லது வேறு ஏதேனும் காரணங்கள் இருக்குமா நண்பர்களே?

ஆண்டவராம் இயேசுவின் அன்பையும், சமாதானத்தையும் உலகெங்கும் கொண்டு செல்லும் உன்னதப் பணிக்கா நமது பெருமைமிகு பிள்ளை அங்கே மண்டியிட்டுக் கிடக்கிறார்?

சாதிமத பேதமற்ற, சமத்துவ, சமதா்ம சமுதாயம் காணவேண்டும் எனும் உயரிய நோக்கத்திற்காக, மண்ணுலக உயிா்களெல்லாம் விண்ணுலகப் பெருவாழ்வு பெற்று நிலைத்திருக்க வேண்டும் எனும் உனனத நோக்கத்திற்காக, நமது அறிவு நிறைந்த பிள்ளை வல்லமை நிறைந்த இயேசப்பாவின் காலடியில் விழுந்து  கிடக்கிறாரா அல்லது ஒரு பங்குத் தந்தையாகி சுகமாக வாழலாம் எனும் ஆசைக்காக இயேசுவின் காலடியில் விழுந்து கிடக்கிறாரா?

ஏசுவின் இரத்தத்தைப் பற்றிப் பேசும் பிள்ளை, இயேசுவின் தியாகத்தை மணக்கணக்கில் பிரசங்கம் பண்ணும் பிள்ளை, உழைக்கும் மக்களின் வியா்வையைப் பற்றி எப்போதேனும் பேசியதுண்டா? இயேசுவான ஆண்டவரிடம் சாதியை எடுத்துப் போனது நம் பிள்ளையன்றோ? அங்கும் தமது சாதியைக் காரணம் காட்டி, அனைத்து நிலைகளிலும் ஆதிக்கம் செலுத்துவது பிள்ளையும் முதலியுமன்றோ? தமிழகக் கிறித்தவத்தையும்  சாதிதானே ஆள்கிறது. பட்டியல் சாதியினா் பங்குத்தந்தையாக, ஆயராக, பேராயராக, காா்டினல்களாக, புனிதா்களாக ஆக முடிந்திருக்கிறதா தமிழா்களே? கிறித்தவா்கள் நடத்தும், கிறித்தவ அமைப்புகள் நடத்தும் எத்தனை பள்ளிகளில், கல்லூரிகளில் பட்டியல் சாதிப் பின்புலம் கொண்ட கிறித்தவா்கள் தலைமையாசியா்களாக, முதல்வா்களாக இருக்கிறாா்கள்? தமிழக கிறித்தவத்தை இந்து சமயமே பரவாயில்லை எனும் நிலைக்கு ஆளாக்கியது யாா்?

பிழைக்கத் தெரிந்த பிள்ளைகள். எங்கும் பிழைத்துக் கொள்வாா்கள். அறிவாளிகள் அல்லவா.. புத்திசாலிப் பிள்ளைகளன்றோ.. தமிழக கிறித்தவத்தை, இந்து கிறித்துவமாக மாற்றிவிட்டாா்கள் நம் பிள்ளைகள். கொடியேற்று என்ன, தேரிழுத்தல் என்ன, சப்பரம் தூக்குதல் என்ன, பவனி வருதல் என்ன, கோபுரம் என்ன, திருமுழுக்கு என்ன, அபிசேக ஆராதனைகள் என்ன..

ஒரு விதத்தில் பிள்ளையை நினைத்தால்  பரிதாபமாக  இருக்கிறது. நம் பிள்ளை கிறித்தவராக மாறினாலும், தமது பிள்ளை அடையாளத்தை அவரால் ஒரு போதும் துறக்க இயலவில்லை. காா்த்திகை வந்தால் நம் பிள்ளையால் வீட்டில் விளக்கேற்றாமல் இருக்க முடிவதில்லை. முச்சந்தியில் சூடம் கொளுத்தாமல் இருக்க முடியவில்லை. திருவாசகத்தை மறக்க முடிவதில்லை. என்னதான் ஆங்கிலத்தில் புலமை பெற்றிருந்தாலும் நம் பிள்ளையால் தமிழை மறக்க முடியவில்லை. நம் பிள்ளைக்கு கிறித்தவம் பிழைப்புக்கான ஒரு வழி. மற்றபடி நம்

பிள்ளை இந்துப் பிள்ளையே. தமிழ் பிள்ளையே. பிள்ளையால் சாதியை உதறமுடியுமா என்ன?

கிறித்துவப் பிள்ளையிடம் பேசிப் பார்த்திருக்கிறீர்களா நண்பர்களே. ஆண்டவரும் சிவனாரும் ஒன்றாமே. ஆண்டவர் இயேசுவுக்கும் ஆண்டவர் முருகனுக்கும் ஏராளமான ஒற்றுமைகள் உள்ளதாமே. நெற்றிக் கண்ணிலிருந்து முருகப்பா பிறக்க முடியுமானால், எல்லாம் வல்ல கர்த்தரால் இயேசப்பாவைப் பிறக்கவைக்க முடியாதா? அப்பாக்களும் கடவுள்கள். மகன்களும் கடவுள்கள். அம்மாக்களும் கடவுள்கள். பிள்ளை நன்றாகத்தானே ஆராய்ச்சி செய்திருக்கிறார். இயேசு பிறந்த இடத்தில் முன்னர் செழித்திருந்தது முருக வழிபாடாமே. பிள்ளை ஆதாரமில்லாமல் சொல்வாரா? அங்கே தற்போதும் மயில் வழிபாடு நடைமுறையிலிருப்பதை தமிழர்கள் அறிவார்களல்லவா? அங்கே இயேசு, இங்கே முருகன். பிள்ளைகளைத் தமிழர்கள் கொண்டாட வேண்டும். தெரிந்துதானே பிள்ளை ஆண்டவராம் கிறித்துவை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

பிள்ளைகளுக்கு காதல் வருமா வராதா நண்பர்களே. எத்தனை உதாரணங்கள் சொல்லட்டும். சாதி மாறி, மதம் மாறி திருமணங்கள் செய்திருக்கும் பிள்ளைகளை தமிழகம் நிறையவே அறியும். எந்தப் பிள்ளையும் அருவாளெடுத்து வெட்டியதாகத் தெரியவில்லை. கூலிக்கு கொலைகாரர்களை அமர்த்தியதாகத் தெரியவில்லை. பிள்ளை அறிவுடையவரன்றோ. காதலை அணை போட்டுத் தடுக்க இயலாது என்பது பிள்ளைக்குத் தெரியாதா என்ன..

அழகிய இசுலாமியப் பெண் பிள்ளையைக் காதலித்து, கல்யாணம் செய்து இசுலாமியராகவே மாறிவிட்ட பிள்ளை உண்டு நண்பர்களே. பட்டியல் சாதிப் பையனை மணமுடித்த பிள்ளை பெண்ணும் உண்டு. பட்டியல் சாதிப் பெண்ணை மணமுடித்த பிள்ளையும் உண்டு. பட்டியல் சாதிப் பெண் என்பதற்காக குழந்தை பிறக்காமல் இருக்கிறதா என்ன.

காதல் அனைவருக்கும் பொதுதானே. பெற்றோர் சம்மதமின்றி திருமணம் செய்வதில் யாருக்கும் உடன்பாடு இல்லைதான். பெற்று வளர்த்து, படிக்க வைத்து, தம் பிள்ளைகள் பெரிய மனிதர்களாக, மதிப்பிற்குரியவர்களாக, சமூகத்தில் உயர்ந்த நிலைக்கு வரவேண்டுமென பெற்றோர் எவ்வளவோ தியாகங்கள் செய்கிறார்கள். பிள்ளைகளின் எதிர்காலத்தை நினைத்து எத்தனையோ கனவுகள் காண்கிறார்கள். பிள்ளைகள் சுகமாக வாழவேண்டுமென விரும்புகிறார்கள்.

பிள்ளைகள் சொல்பேச்சு கேட்கவில்லையெனில் பெற்றோர் மனம் எந்தளவிற்கு வேதனைப்படும் எனப் பிள்ளைகளும் உணர்வதில்லை.

பெற்றோர் ஏன் காதலை எதிர்கிறார்கள்? பெண் பிள்ளையாக இருந்தால், முதல் விசயம், பையன் நல்லவனா என்பதே. ஏதேனும் ஏமாற்றுக்காரனிடமோ, குணங்கெட்டவனிடமோ, பிள்ளைகள் மாட்டிக் கொண்டால் என்னாவது என்பதே பெற்றோரின் பெருங்கவலையாக இருக்கிறது. பெற்றோராக இருந்து பார்த்தால்தான் அந்த வலியும், உறுத்தலும் புரியும். காதல் எனும் பெயரில், பெண் பிள்ளைகளின் வாழ்வு நிலைகுலைந்தால், சீரழிக்கப்பட்டால், பிள்ளையைச் சரியாக வளர்க்கவில்லையே என பெற்றோருக்கல்லவா பெருந்துயரம் வந்து சேரும். பையன் நல்ல குணமுள்ளவனாகவும், வேலை பார்ப்பவனாகவும், நல்ல குடும்பத்தைச் சார்ந்தவனாகவும் இருந்தால்.. பெற்றோர் தனிப்பட்டவர்கள் இல்லையே. அக்கம் பக்கம் இருக்கிறார்கள். சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். ஊர்க்காரர்கள் இருக்கிறார்கள். அக்கம் பக்கத்தில் என்ன பேசுவார்களோ, சாதிக்காரர்கள் கேவலமாக நினைப்பார்களோ, அவச்சொல் உதிப்பார்களோ எனும் நெருக்கடியிலும், அச்சத்திலுமே பல பெற்றோர்கள் காதல்களை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் பெருநகரங்களிலேயே இந்த நிலை மாறவில்லை எனும்போது, தமிழகத்தின் கிராமங்கள் நிலையை என்னவென்பது. நகரங்களிலும் சாதியாக, மதமாகத்தான் தமிழர்கள் வாழ்கிறார்கள். கிராமங்களிலிருந்து சமீபமாகவோ, ஓரிரு தலைமுறைக்கு முன்பாகவோ நகரங்களுக்கு வந்தவர்கள்தானே. மாறுவார்கள், மாற்றங்கள் வரும். காதலர்கள் பொறுமையாகச் காத்திருக்க வேண்டியதுதான்.

தமிழகத்தில் காதல் இருக்கிறதா நண்பர்களே? உண்மையிலேயே மனிதர்கள் காதலிக்கிறார்களா? காதலர்களைக் கவனித்துப் பார்த்தால் காதல் இருப்பதுபோல் தெரியவில்லையே. உடற்கவர்ச்சியல்லவா பெரிதாகத் தெரிகிறது. அழகைப் பார்த்தும், ஸ்டைலைப் பார்த்தும், முடியலங்காரத்தைப் பார்த்தும், தோலைப் பார்த்தும், பணத்தைப் பார்த்தும், பைக்கைப் பார்த்தும், சாதியைப் பார்த்தும், மதத்தைப் பார்த்தும், வேலையைப் பார்த்தும் வருவது காதலாகுமா? காதல்கள் மேல் ஆசிட் வீசுவதும், எண்ணெய் ஊற்றி எரிப்பதும், அருவாளைப் பாய்ச்சுவதும் தொகைக்காதல் கொண்ட தமிழர்க்குத் தகுமா? பெண்ணைப் பூவைப்போல் தாங்குவதை விடுத்து, கண்ணை இமை காப்பதைப் போல்

பாதுகாப்பதை விடுத்து, காதலிக்க மறுக்கிறாள் என்பதற்காக, காதலித்தபின் திருமணத்திற்கு மறுக்கிறார் என்பதற்காக, பெண்மைக்கு எதிராக வன்மம் நிகழ்வது, ஈராயிரம் ஆண்டுகளுக்கும்மேல் காதலைக் கொண்டாடிவரும் சங்கத் தமிழர்க்களுக்கு ஏற்புடையதாகுமா?

கூலிக்கு கொலை செய்பவர் காட்டுமிராண்டிதானே. காட்டுமிராண்டி பேசுவது காட்டுமிராண்டி மொழிதானே. இருபது, இருபத்தைந்து வயதிலிருக்கும் நான்கு இளைஞர்கள் யாரென்றே அறியாத, சொந்தப் பகை எதுவுமில்லாத, ஒரு மனிதரைப் இரண்டு இலக்கம் பணத்திற்கு ஆசைப்பட்டு கொலை செய்கிறார்கள். இதெப்படி சாத்தியம் நண்பர்களே?

பணத்திற்கா இப்படியான இழிசெயலை, மனிதாபமற்ற செயலை மனிதர்கள் செய்கிறார்கள்? சமூகத்தில் எங்கே தவறு நடக்கிறது? உயிரின் மதிப்பு நமக்குத் தெரியவில்லையா? காட்டுமிராண்டி காலத்திலிருது நாம் எவ்வளவோ முன்னேறி வந்துவிட்டோமே. பணத்திற்கு கொலை செய்யும் கொடூரர்கள், ஆதாயக் கொலைகளைச் செய்யும் அட்டூழியக்காரர்கள் தமிழர்கள்தானா? எந்தச் சாதிக்காரர்கள் நண்பர்களே? ஆண்ட பரம்பரையா, ஆளும் பரம்பரையா, அல்லது ஆளப் போற பரம்பரையா?

எந்தச் சாதிக்காரர்களின் முகநூல் பதிவுகளைப் பார்த்தாலும், நாங்க ஆண்ட பரம்பரைடா என்றே அறிவிக்கின்றன. தமிழ்நாட்டிலிருக்கும் எந்தச் சாதியும் விதிவிலக்கல்ல. இனியும் அவர்களே ஆள்வார்களாம். தமிழகத்தில் 367 சாதிகள் இருப்பதாகப் பட்டியல் நீள்கிறது. ஒரு நாளைக்கு ஒரு சாதிக்காரரை ஆள வைத்தாலும் ஒரு சாதி விடுபட்டு நிற்கிறது. ஒரே ஒருநாள் மட்டும் காலையில் ஒரு சாதியையும், இரவு ஒரு சாதியையும் ஆளச் சொல்லலாம். எமது அனுபவத்தில் எந்த இரு சாதியும் இப்படி ஆள்வதற்கு ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்பது திண்ணம். மற்ற சாதிக்காரனெல்லாம் ஒரு முழுநாளை ஆளும்போது நாங்க மட்டும் அரைநாளை ஆள வேண்டுமா எனக் கொந்தளிப்பார்கள். ஏதேனும் ஒரு சாதி நான்கு வருடத்திற்கு ஒரு முறையே ஆளவும் நேரிடும். லீப் வருடத்திற்கு 365 நாட்கள்தான் வருகிறதாமே. ஒவ்வொரு சாதிக்குள்ளும் உட்பிரிவுகள் உண்டு. ஆளுக்கொரு நாளை எப்படி பிரித்துக் கொண்டு ஆள்வார்களோ?

அத்தனை சாதிக்காரரும் மூவேந்தரும் அவர்கள்தான் என்கிறார்கள். ஒவ்வொரு சாதியும் மூவேந்தரின் நேரடி வாரிசுகள் என்றும், வழித்தோன்றல்கள்

என்றும் புளகாங்கிதம் அடைகின்றன. மூவேந்தரோடு விடுவார்கள் எனப் பார்த்தால், சமீபமாக குறுநில மன்னர்களையும், வள்ளல்களையும் அவரவர் சாதி எனப் பேச ஆரம்பித்துவிட்டார்கள். கூடிய சீக்கரம் சங்கப் புலவர்களையும் விட்டு வைக்க மாட்டார்கள் என நம்பலாம். ஒருவேளை இப்போதே ஆரம்பித்தும் இருப்பார்கள். யாம் கவனிக்காமல் இருக்கலாம். தமிழகத்தில் முக்கால்வாசிப் பேருக்கு சாதியைப் பற்றி பதிவிடுவதுதான் வேலை எனத் தெரிகிறது. அவரவர் சாதிப் பெண்களுக்குப் போடும் அட்வைஸ்கள் இருக்கிறதே, அட அடா அடடா.. மாற்று சாதிக்காரனைக் காதலித்து விடக் கூடாதாம். பதறுகிறார்கள். அன்பு அண்ணன் சொல்வதைக் கேளுங்கள், அருமைத் தம்பி சொல்வதைக் கேளுங்கள் என உறுகுகிறார்கள். தமிழர்களுக்கு சாதிப்பித்து தலைக்கேறிவிட்டது. தமிழர்கள் மதம் பிடித்து அலைகிறார்கள். ஒரு மணிநேரம் முகநூலில் அலைந்து பாருங்கள் தோழமைகளே. தமிழர்கள் இன்னும் காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து வெளியே வரவில்லை, முன்னேறவில்லை என்பதை உறுதியாக ஏற்றுக்கொள்வீர்கள்.

பெரிய கட்டிடங்கள் கட்டினால் முன்னேற்றம் என அர்த்தமா தமிழர்களே. சொகுசு மாளிகைகளில் வசித்தால் முன்னேறியவர்கள் எனப் பொருளா. கோட்டும் சூட்டும் போட்டால் முன்னேறியவர்கள் என நினைப்பா. சொகுசுக் கார்களில் போனால் முன்னேறியவர்கள் என எண்ணமா. நகை போட்டால், பவுடர் பூசிக்கொண்டால், பட்டங்கள் வாங்கினால் முன்னேறியவர்கள் என அர்த்தமாகுமா தமிழர்களே. ஆண்டிற்கு முன்னூறு சினிமா எடுத்தால் முன்னேறியவர்கள் என்று பொருளா?

கோட்டும், சூட்டும், ஷுவும் போட்டும், சாதியை விட முடியவில்லையே, நீர் எதிலய்யா முன்னேறினீர்? சாதி எனும் கிருமி தமிழரின் மாண்பை, பண்பாட்டை, புகழை அழித்துக்கொண்டு வருவதை எப்போது உணர்வர் இந்த செம்மொழித் தமிழர்.

தெருவெங்கும் கடைகளும், ஊரெங்கும் தொழிற்சாலைகளும் கட்டினால் அது முன்னேற்றமாகுமா தமிழர்களே. அமெரிக்காவும் ஐரோப்பாவும் முன்னேறிய நாடுகளா? உண்மை ஏதேனும் இருக்கிறதா? அந்தக் காலாச்சாரத்தை, நாகரிகத்தை தமிழ் மண்ணில் கொண்டுவரத்தான் தமிழர்கள் இத்தனை பாடுபடுகிறார்களா? அமெரிக்கப் பள்ளிகளில் நிம்மதியாகப் பிள்ளைகள் படிக்க முடிவதில்லை என்பதை தமிழர்கள் அறிந்திருக்கிறார்களா? எந்த நேரத்தில் எந்தப்

பிள்ளை துப்பாக்கி தூக்குமோ எனப் பயத்தில் உறைந்திருக்கும் அமெரிக்கப் பள்ளிகளையா நாம் விரும்புகிறோம். அமெரிக்கா விண்ணுக்குப் போனால்தான் என்ன? அது முன்னேற்றமாகுமா? பூமியை குண்டுகளால் நிரப்பி வைத்திருப்பது அமெரிக்காவும் ஐரோப்பாவுமல்லவா?

உலகிலேயே ஆயுதங்களை அதிகமாக இறக்குமதி செய்வது இந்தியா என்பது நமக்குத் தெரியுமல்லவா? இப்படியொரு நாட்டை உருவாக்கவா நாம் விடுதலை பெற்றோம்? இந்தியாவின் விடுதலை உலகின் விடுதலை என்றல்லவா நம் பெருந்தந்தை மகிழ்ந்தார். நம் பெருந்தந்தையர் கனவு கண்ட அந்த விடுதலை எது நண்பர்களே.. உலகிலேயே அதிக போர்க்கருவிகள் வைத்திருக்கும் இந்தியாவா?

இந்தியாவின் விடுதலை உலகின் பசியை, பட்டினியை விடுவிக்கும் என்றல்லவா நம் பெருந்தந்தையர் கனவு கண்டனர். இந்தியாவின் விடுதலை உலகின் வறுமையை ஒழிக்கும் என்றல்லவா தந்தையர் கனவு கண்டனர். இந்தியாவின் விடுதலை போரில்லாத புது சமுதாயத்தைப் படைக்கும் என்றல்லவா நம் தந்தையர் நம்பினர். அதற்காகவல்லவோ நம் தந்தையர் உடல் பொருள் ஆவி என அனைத்தையும் ஈந்தனர். சுதந்திரம் பெற்று எழுபது ஆண்டுகள்தான் ஆகிறது. நாம் நமது அன்பிற்குரிய, நமது பெருமதிப்பிற்குரிய பெருந்தந்தையரையும், தந்தையரையும், சகோதரர்களையும், தோழர்களையும் முற்றாக மறந்துவிட்டோமே தோழமைகளே. தந்தை காந்தியடிகள் பேசிய, எழுதிய, விரும்பிய, பாடுபட்ட அந்த விடுதலைக்கு அர்த்தம் என்ன அன்புடையீரே..

2018-2019 ஆம் ஆண்டிற்கான நம் நாட்டின் மொத்த வருமானம் 24,42,213 கோடி உரூபா. வருமானத்தில் வாங்கிய கடன்களுக்கான வட்டி மட்டுமே 5,75,795 கோடி. 2018-2019 இல் மட்டும் மொத்த வருமானத்தில் பத்தொன்பது சதமானம் அதாவது 6,24,276 கோடி உரூபா கடனாகப் பெறுகிறது இந்திய அரசு. இராணுவத்திற்கான ஒதுக்கீடு மட்டும் 4,04,365 கோடி உரூபா. இதில் 99,5632.86 கோடி உரூபாவை இராணுவத்தை நவீனமாக்குவதற்குப் பயன்படுத்துகிறது. கல்வி, மருத்தும் மற்றும் சமூக நலத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ஏறக்குறைய ஒரு இலக்கத்து முப்பத்தெட்டு கோடி உரூபா.

தமிழக அரசின் 2018-19 ஆம் ஆண்டின் மொத்த வருமானம் 1,76,251 கோடி உரூபா. பற்றாக்குறை 17,490 கோடி உரூபா. கடனாகப் பெறுவது மட்டும் 57,664 கோடி உரூபா. கடனுக்காக வட்டி மட்டும் 15,325 கோடி உரூபா.

ஒரு ஆண்டுக்கான வட்டி மட்டுமே 15,325 கோடி உரூபா. தமிழ் நாட்டின் மொத்த கடன்தொகை ஏறக்குறைய நான்கு இலக்கம் கோடி உரூபா எனக் கணிக்கப்படுகிறது. இரண்டு ஆண்டுகளின் மொத்த வருமானத்தைக் கூட்டினாலும் கடனை அடைக்க முடியாது. வருவாயைப் பெருக்கி பணத்தைச் சம்பாதித்து செலவு செய்வதற்கு மாற்றாக, நம் அரசுகள் வெளியிலிருந்து கடன் வாங்கி செலவிடுகின்றன. கோடி கோடியாய் கடன்வாங்கி செலவு செய்யும் அரசு, அதை முறையாகச் செலவிடுகிறதா, கண்காணிக்கிறதா என்றால் அதுதான் இல்லை. அரசுகளின் பெரும்பணம் அரசியல், அதிகார வர்க்கங்கள், முதலாளிகள், ஒப்பந்ததாரர்களால் சுரண்டப்படுகிறது, கொள்ளையடிக்கப்படுகிறது.

நண்பர்களே, அரசின் பணம் கொள்ளையடிக்கப்படுகிறதா இல்லையா? அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் பினாமி பெயர்களால் அரசின் பெரும் ஒப்பந்தங்களை எடுக்கிறார்களா இல்லையா? எந்தத் திட்டம் தொடங்கப்படப் போகிறது, எவ்வளவு உரூபா ஒதுக்கப்படப் போகிறது என முன்கூட்டியே மோப்பம் பிடித்து, அதற்கேற்ப போலி நிறுவனங்கள், பினாமி நிறுவனங்கள் தொடங்கப்படுகின்றனவா இல்லையா?

அரசு போடும் சாலைகள் எப்படியிருக்கின்றன? அரசு கட்டும் கட்டிடங்களைக் கவனித்திருக்கிறீர்களா? ஆறு மாதங்கள்கூட தாங்காத தரங்குறைந்த சாலைகள் யாரால் போடப்படுகின்றன நண்பர்களே? அரசு கட்டும் பாலம் ஒரு வெள்ளத்திற்கே தாக்குப்பிடிக்க முடியாதது ஏன்? வெள்ளமே வராவிட்டாலும்கூட பொத்தென இடிந்து விழுவது ஏன்?

எல்லாம் காசு நண்பர்களே காசு. முதல்நிலை ஒப்பந்ததாரர் தொடங்கி பாலத்தைக் கட்ட கூலிக்கு ஆட்களைப் பிடிக்கும் மேஸ்திரிவரை பணம் பிரிக்கப்படுகிறது. ஒப்பந்தக்காரரை தேர்தெடுப்பதுமுதல் பணம் ஒதுக்கீடு செய்வதுவரை அரசு அலுவலகங்களுக்கு பணம் அழவேண்டியதிருக்கிறது. ஒப்பந்ததாரர் கமிசன் பெற்றுக்கொண்டு அடுத்தவரிடம் விடுகிறார். அவர் இன்னொருவரிடம். இப்படியே மடை மாற்றி மடை மாற்றி பாலத்தை உண்மையாகக் கட்டும் ஒப்பந்ததாரர் ஒதுக்கிய பணத்தில் முப்பது சதமானத்திற்குள்ளேயே

பாலத்தை கட்டுகிறார். தரமற்ற கம்பி பயன்படுத்தப்படுகிறது. கட்டுமானத்தின் ஒவ்வொரு நிலையிலும் அதன் தரத்தை வலிமையைப் பரிசோதிக்க அரசு சார்பில் பரிசோதகர்கள் இருக்கிறார்கள். பரிசோதகர் மட்டும் நல்லவராக இருக்க வேண்டும் என எப்படி எதிர்பார்க்க முடியும் நண்பர்களே? பணம் பெற்றுக்கொண்டு அரசின் வழிகாட்டல்படி திறமையாகக் கட்டப்பட்டுள்ளதென சான்றளிக்கிறார்கள். அலுவலகமும் பணம் பெற்றக் கொண்டு பில்லை பாஸ் செய்கிறது. எல்லோருக்கும் கொழுத்த லாபம். மக்களுக்கு?

சாலைகள் எவ்வளவு கனத்தில் போட வேண்டுமென கணக்கு இருக்கிறதா இல்லையா? எவ்வளவு கனஅளவு கொண்ட கற்கள் பயன்படுத்த வேண்டுமென அளவீடு உள்ளதா இல்லையா? தார் எவ்வளவு கலக்க வேண்டுமென சொல்லப்படுகிறதா இல்லையா? அரசு சொல்லும் கணக்கில்தான் சாலைகள் போடப்படுகின்றனவா நண்பர்களே. ஒவ்வொரு சாலையையும் முதலமைச்சர் வந்து ஆய்வு செய்ய முடியுமா? அல்லது ஒவ்வொரு கிலோ மீட்டர் சாலையையும் கலெக்டர்தான் வந்து தோண்டிப் பார்க்க முடியுமா? அரசு பரிசோதகர்களை நியமித்திருக்கிறதா இல்லையா? நேர்மையான பரிசோதகராக இருந்து சாலை தரமற்று இருப்பதாகச் சான்றளித்து விட்டால் என்னாகும் நண்பர்களே. அரசியல்வாதி, அதிகாரிகள் கூட்டு அவரைத் தண்ணியில்லாத காட்டுக்கு மாற்றும்தானே. அரசியல் பினாமிகள் அவரை மிரட்டுவார்கள்தானே. அவரால் நிம்மதியாகப் பணி செய்ய முடியாதுதானே.

ஒட்டுமொத்த சமூகமும் பணத்தின் பின்னால் ஓட ஆரம்பித்துவிட்டது தோழமைகளே. முன்னரெல்லாம் ஒரு அலுவலகத்தில் ஒன்றிரண்டு பேர்தான் நேர்மைக் குறைவாக இருப்பார்கள். நம் காலத்தில் ஒன்றிரண்டு பேர்தான் நேர்மையாளராகவே இருக்கிறார்கள். மக்களின் மனங்கள் மொத்தமாக மாறிவிட்டது. மாற்றப்பட்டு விட்டது. பணம் இருந்தால் என்னவேண்டுமானாலும் வாங்கலாம், எப்படி வேண்டுமானாலும் வாழலாம் எனும் நிலை வந்து விட்டபிறகு, மனிதர்களிடம் நேர்மைக் குணத்தை எதிர்பார்த்தால் எப்படி?

கையூட்டு பெறும் அதிகாரி மாடி வீட்டில் வாழ்கிறார். ஆடி கார் வைத்திருக்கிறார். பிள்ளைகளை ஊட்டி கான்வெண்ட்டில் படிக்கவைக்கிறார். விடுமுறைக்கு ஐரோப்பிய டூர் போய் வருகிறார். அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர் மட்டும் எப்படி நேர்மையாக இருப்பார்? அதிகாரி அவர் அளவுக்கு

கோடிகளில் கையூட்டு பெற்றால், அலுவலகக் கண்காணிப்பாளா் இலக்கங்களில் கையூட்டு பெறுவாா். அலுவலக ஊழியா் ஆயிரங்களில் கையூட்டு பெறுவாா். கடைநிலை ஊழியா் நூறுகளில் கையூட்டுப் பெறுவாா். எங்கும் கையூட்டு.. எதிலும் கையூட்டு.. எங்கெங்கும் கையூட்டு.. எனும் காலத்திலல்லவா நாம் வாழ்கிறோம்.

நோ்மையாகச் சம்பளம் வாங்கும் அதிகாரி ஆடம்பரமாக வாழ முடியுமா? மனைவிக்கு நகைக்கடையை வாங்கித் தர முடியுமா? தினமும் பீட்சாவுக்கு ஆயிரக்கணக்கில் செலவு செய்ய முடியுமா? ஆடம்பரமான காரில் பவனி வர முடியுமா? அதிகாரி மட்டும் நோ்மையாக வாழணும் எனத் தலையெழுத்தா என்ன?

அதிகாரி அவரது மேலதிகாரியைப் பாா்க்கிறாா். அவா் அவருக்கு மேலேயுள்ள அதிகாரியை நோக்குகிறாா். விளைவாக, எல்லோரும் கோடிகளில் புரள வேண்டுமென ஆசைப்படுகிறாா்கள், திட்டமிடுகிறாா்கள். கொள்ளைப் பணத்தை கோவில் உண்டியல்களிலும் கொட்டுகிறாா்கள். கொள்ளையா்களுக்குத்தான் கோவில்களிலும் சிறப்பு மரியாதை. உழைத்துச் சம்பாதிக்கும் குடியானவா் இருநூறு, ஐந்நூறு ரூபாய் கட்டண சீட்டு எடுத்துக் கொண்டு சாமியைப் பாா்க்க முடியுமா? மனம் வருமா நண்பா்களே.. கொஞ்சம் கூட கூச்சமே இல்லாமல் ஐநூறு ரூபாய் கட்டண சீட்டை யாா் வாங்குகிறாா்களோ அவா்கள் நிச்சயம் கொள்ளையா்களாகத்தான் இருப்பாா்கள் தோழா்களே. ஒரு நாள் உடல் வலிக்க வேலை பாா்த்தால் கிடைக்கும் சம்பளம் 150 உரூபா. ஒருமுறை கடவுளைப் பாா்க்க கட்டணம் 200 உரூபா. கொள்ளைக்காரா்களை, ஏமாற்றுக்காரா்களை, கையூட்டுக்காரா்களை, கடவுள் தமக்கு அருகே அழைத்துப் பாா்க்கிறாா். உடல் உழைப்பாளிகளை, ஏழைகளை, எளியவா்களை, சாமானிய மக்களை, கடவுளைப் பாா்க்க வேண்டுமென தவித்துவரும் அன்பு மக்களை தூரத்திலேயே வைத்துவிடுகிறாா். கொள்ளைக் கூட்டத்திற்கு கடவுளைப் பாா்க்க மேடை. எளிய மக்கள் எட்டி எட்டிப் பாா்க்க வேண்டிய அவலம். ஊரைக் கொள்ளையடிப்பவா்களுக்கு சிலுசிலுவென பேன் காற்று. விவசாயிக்கும் கூலிக்காரருக்கும் புழுக்கம்.

கடவுளைக் கிட்ட இருந்து பாா்ப்பதற்காக அலுவலகத்தில் கையூட்டுப் பெற்றால் கடவுள் வேண்டாம் என்பாரா தோழா்களே. அட இந்தக் கொள்ளையா்கள் கொட்டினால்தானே கடவுள்களுக்கும் வருமானம் பெருகும். மக்கள் பணக்காரா்களாக இருக்கும்போது கடவுள்கள் மட்டும் ஏமாந்தவா்களா என்ன?

ஏழைபாளைகள் எல்லாம் கோவில் பக்கமே போகக் கூடாது நண்பர்களே. நம் தந்தையர் காலத்தில்கூட ஒரு பகுதி மக்களை கோவில்களுக்குள் விடமாட்டார்களாம். பேசாமல் வருமானவரி கட்டுபவர்கள் மட்டுமே கோவில்களுக்குச் செல்ல வேண்டும், அவர்களை மட்டுமே கடவுள் பார்ப்பார் என ஒரு சட்டம் போட்டு விட்டால் என்ன. வேடிக்கை இல்லை நண்பர்களே, விரைவில் வந்தாலும் வரும்.

தமிழகத்தில் பக்தி பெருகிவிட்டதல்லவா? பக்தி மட்டுமா பெருகியிருக்கிறது. அனைத்தும் பெருகிவிட்டது. ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒன்றரை அடிக்கு வயிறு துருத்திக் கொண்டிருக்கிறது. பிள்ளைகளுக்கு வயிற்றைத் தூக்கவே முடியவில்லை. கொழுப்புக் கூடிய தமிழர்களுக்கு உட்கார்ந்தால் எந்திரிக்க முடியவில்லை. காலை மடக்கி உட்கார முடியவில்லை. நடக்க முடியவில்லை. ஓட முடியவில்லை. வேலை செய்ய முடியவில்லை. கார் இல்லாமல் இருக்க முடியவில்லை. யூபிஎஸ் இல்லாமல் இருக்க முடியவில்லை. ஏசி இல்லாமல் இருக்க முடியவில்லை. முடியவில்லை, முடியவில்லை, முடியவில்லை. ஒன்று மட்டும் நன்றாக முடிகிறது. பிள்ளை பெறுவது மட்டும்.

தமிழர்கள் பிள்ளை பெறுகிறார்களா நண்பர்களே. கிழித்தல்லவா பிள்ளைகளை எடுக்கிறார்கள். எத்தனை தமிழச்சியால் அறுவை இல்லாமல் பிள்ளை பெற முடிகிறது? குழந்தையையே பெற முடியாத தமிழச்சிகளின் பிள்ளைகள் மட்டும் எப்படி மறத்தமிழர்களாக இருப்பார்கள்? பிள்ளைகளுக்கு மட்டும் எங்கிருந்து வீரம் பொத்துக் கொண்டு கொட்டும்?

தாய்மார்கள் கோவித்துக் கொள்வார்களோ.. அப்படியாவது பரவாயில்லை. அப்படியாவது ரோசம், வீரம் வருகிறதா எனப் பார்ப்போம். நம் அம்மாக்களும், அக்காக்களும், தங்கைகளும் எப்படி பிள்ளைகள் பெற்றார்கள் நண்பர்களே. நாம் எப்படிப் பிறந்தோம் தோழர்களே. மருத்துவமனைகளில் பிள்ளைப் பெறுவதும், சிக்கலான குழந்தைப் பேறுக்கு அறுவை செய்வதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான். கால மாற்றத்திற்கேற்ப நாமும் மாற வேண்டியதுதான். அதற்காக இப்படியா. தமிழ்நாட்டில் பிறக்கும் குழந்தைகளில் அறுவைச்சிகிச்சை மூலம் பிறக்கும் குழந்தைகளின் சதவீகிதம் எத்தனை தோழமைகளே?

ஆண்ட பரம்பரைத் தமிழர்கள், வீரத்தின் விளைநிலங்கள், உலகையே ஆளும் வல்லமை படைத்த சாதிக்காரர்களாவது, அவரவர் சாதிகளில்

பிள்ளைகளை அறுவை செய்யாமல் பெற்றெடுங்கள் எனச் சொன்னதுண்டா. தமிழர்களின் உபதேசங்களெல்லாம் ஊருக்குத்தானே. ஆண்ட பரம்பரைத் தமிழர்கள், வீரவாளைத் தூக்கித் திரியும் தமிழர்கள், போட்டோ ஷாப்பில் ஒட்டியும் வெட்டியும் மீசைவைத்தும் திரியும் தமிழர்கள், தமிழகமெங்கும் குழாய் குழந்தைகள் பிறந்து வருவதை அறிந்திருக்கிறார்களா.

கோயம்புத்தூரில் சுற்றுமுற்றும் எங்கு நோக்கினும் பெர்டிலிட்டி சென்ட்ராக இருக்கின்றன. பேக்கரிகளைவிட பெர்டிலிட்டி மையங்களே அதிகமிருக்கும்போல. நம்ம அய்யாக்களுக்குத்தான் உடலையே தூக்க முடியவில்லையே. பின் எங்கிருந்து பிள்ளை உருவாகும். மையக்காரர்களுக்கு நல்ல அறுவடை. ஒவ்வொரு மையமும் வெளியிடும் குழந்தைப்பேறு கணக்கைப் பார்த்தால் அநேகமாக தமிழகத்தில் ஒரு தம்பதிக்குமே இயல்பான குழந்தைப்பேறு வாய்க்கவில்லை போலும். இருபதாயிரம் குழந்தைகளை உற்பத்திசெய்து சாதனை படைத்த மையம், முப்பதாயிரத்தை தாண்டி சாதனை எனப் பல மையங்களும் பளிச்சிடும் விளம்பரங்களை முக்கிய இடங்களிலும் பேருந்து நிறுத்தங்களிலும் வைத்திருக்கிறார்கள். சர்க்கரை மையத்தை மாற்றிவிட்டு பெர்டிலிட்டி மையமாக்கும் மருத்துவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் கூடி வருகிறது. எதை விற்றால் கொழுத்த லாபம் கிடைக்கும் எனும் வணிகர்கள்போல் எந்த மையத்தைத் திறந்தால் பணமாகக் கொட்டும் என மருத்துவர்களும் தேட ஆரம்பித்துவிட்டார்கள்.

உயிரணுக்கள் இல்லையாம், குறைந்து விட்டதாம், ஊர்ந்து செல்வதில்லையாம். அதெப்படி உமக்கு உயிரணுக்கள் ஊறும், ஊர்ந்து செல்லும். நீர் எட்டு வைத்து நடப்பதே இல்லை. உமது உயிரணு மட்டும் ஊர்ந்து செல்ல வேண்டுமா? பத்தடி தூரத்திலிருக்கும் ஷாப்பிங் மாலுக்கு நீர் காரில் பறக்கிறீர். பத்தடிதானே, மெதுவாக போகக் கூடாதா. சர்ரெனப் பறந்து சட்டெனப் பிரேக் பிடிக்கிறீர். அவ்வளவு வேகம் உமக்கும் உமது காருக்கும். அதிலும் உமது பின்பக்கம் கரடுமுரடான சீட்டில் உட்காராது. சொகுசு மெத்தை போன்று கார்சீட்டு கேட்கிறது. உட்கார்ந்தால் பஞ்சு போன்று சாப்டாகக் கேட்கிறது. அவ்வளவு சொகுசு. உமது உயிரணுவும் சொகுசு கேட்கிறது.

காரில் ஏசி. முழு வீடும் ஏசி. கக்கூஸ் கூட ஏசி. அலுவலகம் ஏசி. நீர் போய் குறட்டைவிட்டு தூங்குவதற்கு படுக்கையறையில் கூடுதல் ஏசி. நீர் மட்டுமா? உமக்குமேல் உமது மனைவி. சொகுசும் ஆடம்பரமும் படோடாபமும் பறக்கிறது.

இருவரும் ஏசியில் படுத்துக்கொண்டால் விந்தணு எப்படி உருவாகும்? விந்தணு உருவாக குறிப்பிட்ட வெப்பம் வேணுமாம். நீர் எங்கே அதெல்லாம் படித்திருக்கப் போகிறீர். படிப்பது பங்குச்சந்தை பற்றி. பார்ப்பது அத்தனையும் இன்வெஸ்ட்மெண்ட். இந்தக் கம்பெனியில் முதலீடு செய்யலாமா, அந்தக் கம்பெனியில் அதிக லாபம் வருமா, தங்கத்தில் முதலீடு செய்யலாமா, நிலத்தில் பணத்தைப் போடலாமா, நகை வாங்கலாமா, வீடு வாங்கலாமா, கார் வாங்கலாமா என இருபத்தி நான்கு மணிநேரமும் பணம், முதலீடு, நகை, வட்டி என்றே சிந்தித்துக் கொண்டிருக்கும் உமக்கு எப்படியய்யா உயிரணு ஊறும். நகையையும், பணத்தையும், பெரிதாக நினைக்கும் உமது மனைவிக்கு எங்கிருந்து சினை முட்டை உருவாகும். உம்மிடம் பணம் இருக்கிறது. நேராகப் போய் குழாய் குழந்தை பெற்றுக் கொள்வீர். குழந்தை பிறக்கத் தாமதமாகிறது என வரும் அப்பாவி குடியானவர்களை மையங்கள் எப்படி ஏமாற்றுகின்றன தெரியுமா புத்திசாலிகளே. ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க கிட்டதட்ட ஐந்து இலக்கம் வரை கறந்து விடுகின்றன இந்த மையங்கள்.

பெண்ணின் கண்ணைப் பார்க்க வேண்டும். காதல்மொழி பேச வேண்டும். கட்டியணைக்க வேண்டும். பூக்கள் சூடவேண்டும். புடவையைப் பறிக்க வேண்டும். கூந்தலைப் பற்ற வேண்டும். நாணத்தை ரசிக்க வேண்டும். நாவை ருசிக்க வேண்டும். பெண்ணுக்கு ஊறும். பெண்ணைப் பார்த்து ஆணுக்கும் காமுறும்.

நாம் எப்படி வாழ்கிறோம் தமிழர்களே. ஆணும் பெண்ணும் வாழும் குடும்ப வாழ்க்கை எப்படி இருக்கிறதென்று பார்த்தீர்களா? ஒரே கட்டிலில் படுத்திருந்தாலும் ஆளுக்கொரு மொபைலை நோண்டுகிறார்கள். ஒரே வீட்டில் வசித்தாலும் ஆளுக்கொரு பெட் ரூமில் தூங்குகிறார்கள். ஆணும் பெண்ணும் பேசிக் கொள்வதே இல்லை. வேறு யாரிடமோ பேசுகிறார்கள். ஆண் அவரது தோழிகளோடு பேசுகிறார். பெண் அவரது தோழர்களோடு பேசுகிறார். அய்யாவுக்கு பகல் பொழுது வேலை. வரும்போது அம்மா இருப்பதில்லை. அம்மா வரும்போது அய்யா இருப்பதில்லை. மந்திரத்தில் மாங்காய் பழுக்குமா தமிழர்களே.

பழுத்தாலும் பழுக்கும். தமிழர்கள் எவ்வளவு புத்திசாலிகள், அறிவாளிகள்.. கல்யாணம் கட்டிக்கொண்ட அய்யாவோ பணம் சம்பாதிப்பதிலேயே குறியாய் இருக்கிறார். ஆன்மீகச் செம்மலுக்கோ பணம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டுகிறது. வெளிநாட்டுக்காரருக்கு இந்திய ஞானத்தைப் பற்றி ஒரு கோர்ஸ் முடித்தால் போதும். கோடிக்கணக்கான டாலர் சம்பாத்திவிடலாம். வயிற்றுப்

பிரச்சினை தீர்ந்தால், அடுத்து வயிற்றுக்குக் கீழேயுள்ள பிரச்சினைதானே. யாரடா குழந்தை வரம் கேட்டு வருவார்கள் என நமது குருஜி வழிமேல் விழிவைத்துக் காத்துக்கொண்டிருக்கிறார். நமது ஊறாத, மற்றும் ஊராத அன்பரோ, யோகியின் தொலைக்காட்சியைப் பார்த்துவிட்டு, ஒருமுறை அங்கே போய் பார்ப்போமா எனப் போகிறார். அப்புறம், பரமஹம்சரின் புண்ணியத்தால் ஓரிருமுறை போய் வந்தவுடனேயே குழந்தையும் பிறந்து விடுகிறதாம். எல்லாம் தவத்தின் மகிமை நண்பர்களே. தவ வலிமை. பாதாமும் பிஸ்தாவும் முந்திரிப் பருப்புமாகச் சாப்பிட்டால் தவவலிமை கூடும்தானே ஆன்மிக அன்பர்களே.

நோய்களைக் குணப்படுத்துவதில் அல்லேலூயாக்காரர்களே பரவாயில்லை என நினைக்க வைக்கிறார்கள் தொலைக்காட்சிகளில் தோன்றும் குருஜிக்கள், யோகிகள், சித்தர்கள், மகான்கள். இனிமேல் வரப்போகும் நோய்களுக்கும்கூட மருந்துகளைத் தயாராக வைத்துக்கொண்டு காத்திருக்கிறார்கள்.

முன்பெல்லாம் இவர்களைப் பதினோரு மணிக்கு மேல்தான் பார்க்க முடியும். பதினொன்று பத்தானது. பத்து ஒன்பதானது. தற்போது இருபத்தினாலு மணி நேரமும் குதிரையைக் கனைக்க விடுகிறார்கள். ஆணும் பெண்ணும் படுக்கையில் கட்டிப் பிடித்துக் கொள்வதை, குழந்தை குட்டிகளோடு பார்க்கும் பெற்றோருக்கு வயிறு கலக்குகிறது. அறியாத சின்னஞ்சிறு வயசுகள் இந்தக் குதிரைகளைப் பார்த்துக் தொலைத்தால் மனம் என்னாவது.

ஜோஸ்யக்காரர்களும், குறி சொல்லுபவர்களும், சாதகம் கணிப்பவர்களும், அருள்வாக்குச் சித்தர்களும், இயற்கை வைத்தியர்களும், ராசிபலன், அதிர்ஷ்ட, சித்த வைத்தியர்களும் அழகான பெண்களோடு தினமும் வந்து விடுகிறார்கள். அரைமணி, ஒருமணி நேரம் என நிகழ்ச்சிகள் களைகட்டுகின்றன. லோக்கல் டீவிக்காரர்களுக்கும் நல்ல வருமானம். சில பீடாதிபதிகளும், மடாதிபதிகளும் தினமும் நிகழ்ச்சி போடுகிறார்கள். டீன்ஏஜ் பெண்களுக்கு சாமியாரிணி வேஷம்போட்டு இந்த வேஷக்காரர்கள் அடிக்கும் கூத்துக்கு அளவேயில்லை. அறிவியலிலிருந்து, ஆன்மீகத்திலிருந்து, சித்த மருத்துவம், யோக சாத்திரம், குடும்ப நலம், மன நலம், உடல் நலம், ஆன்மீக நலம் என இவர்கள் அறியாத, இவர்களுக்குத் தெரியாத பதில்களே இல்லைபோலும். போதாக்குறைக்கு மருத்துவமனைகள், மகற்பேறு மையங்கள், ரியல் எஸ்டேட்கள் என நாள்பொழுதும்

விளம்பரங்களால் மக்களை மடையர்களாக்குகிறார்கள். பணத்தைக் கறக்கிறார்கள்.

ஒரு எழுத்தை மாற்றினால் பணம் கொட்டுமாமே. உண்மையா நண்பர்களே. அதிர்ஷ்டக்கல், அதிஷ்டமோதிரம், மகாலட்சுமி டாலர் என விற்பதையெல்லாம் மக்கள் வாங்குகிறார்களா? வாங்க வைக்கப்படுகிறார்கள் என்பதுதானே உண்மை. எளிய கிராமத்து மனிதரிடம், ஒரு டாலர் வாங்கி வீட்டில் வைத்தால் பணமாகக் கொட்டும், வீடு கட்டலாம், நிலம் வாங்கலாம், குடும்பத்துல ஆரோக்யம் பெருகும், கணவன் மனைவிக்குள்ள சண்டையே வராது, கடனே இருக்காது, படிப்பு பெருகும் என அளந்து விடும்போது என்னதான் செய்வார் அந்த எளிய மனிதர். உரூபா 4000 பெறுமானமுள்ளதை உரூபா 2000க்கு தருகிறார்களாம். குறைந்த எண்ணிக்கையில் இருப்பதால் இன்றைக்கே வாங்கினால் உரூபா 1500க்குத் தருவார்களாம். அதிலும், அடுத்த அரை மணி நேரத்தில் புக் செய்தால் ரூ 1000 க்கே கொடுக்கிறார்கள். ஐந்து உரூபா பெறாத செப்புக் காசை எப்படியெல்லாம் ஏமாற்றி விற்கிறார்கள்?

தொலைக்காட்சிகளின் புண்ணியத்தால் தமிழ்நாட்டுக் குழந்தைகளின் பெயரிலும் பெருமாற்றம் வந்துவிட்டது. குப்பன், சுப்பன், கருப்பன் பெயரெல்லாம் மறைந்துவிட்டது. மாரியம்மாள், காளியம்மாள், முத்தம்மாள் பெயர்களெல்லாம் இனி சாத்தியமில்லை. முன்னரெல்லாம் குழந்தை பிறப்பதற்கு முன்னரே பெயர்களைத் தீர்மானித்து விடுவார்கள். தற்போதோ, குழந்தை பிறந்தவுடன் தினசரிகளைத்தான் தேடுகிறார்கள். இன்று பிறக்கும் குழந்தைகளுக்கு இன்னின்ன எழுத்துக்களில் பெயர் வையுங்கள் எனப் போட்டிருக்கிறது. நியூமராலஜியாமே. நியூமராலஜிப்படி, வடமொழி எழுத்துக்களைக்கொண்ட பெயர்களோ, வடமொழிப் பெயர்களோதான் அதிகமாக வைக்கப்படுகின்றன. பிள்ளைக்கு ஹா-எனும் எழுத்தில் பெயர் வைத்தால் பணக்காரராக வாழ்வார் என்றால் வைத்துவிட வேண்டிதுதானே. பகுத்தறிவாவது மண்ணாங்கட்டியாவது. பிள்ளைகளின் பெயர்களைக் கூப்பிட முடியவில்லை. பேர் என்ன என நான்கைந்துமுறை கேட்க வேண்டியிருக்கிறது.

தோழர்களே, தமிழக அரசின் 2018-2019 வரவு-செலவுத்திட்டம் ஒரு கண்ணோட்டம் பார்த்தீர்களா. நமது நிதியமைச்சகத்தின் வலைப்பக்கத்தில், பட்ஜெட் தலைப்பில் கிடைக்கிறது. வருவாய் குறித்த விரிவான வரவு - செலவுத்

திட்ட மதிப்பீடுகளைக் கவனித்தீர்களா. எந்தெந்த வழிகளிளெல்லாம் அரசுக்கு எவ்வளவு வருவாய் கிடைக்கிறது, எவற்றிற்கெல்லாம் அரசு செலவிடுகிறது என்பதை உற்றுப் பார்க்கலாம்தானே.

மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி, மாநில சரக்குகள் மற்றும் சேவை வரி, ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவை வரி, கூட்டு நிறுவன வரி, ஏனைய வருமானம் மீதான வரி என 70,556 கோடி உரூபா வருமானம் வரியாகக் கிடைக்கிறது. நில வருவாய், முத்திரைத் தாள்களும் பத்திரப்பதிவுக் கட்டணங்களும், செல்வத்தின் மீதான வரிகள் போன்றவை 11,233 கோடி உரூபா. சுங்கவரி, மத்திய ஆயத் தீர்வைகள், மாநில ஆயத்தீர்வைகள், விற்பனை வர்த்தகம் முதலியவற்றின் மீதான வரிகள், வண்டிகள் மீதான வரிகள், சரக்குகள் பயணிகள் மீதான வரிகள், மின்சாரத்தின்மீது வரி, சேவை வரி, பண்டங்கள், பணிகள்மீது ஏனைய வரிகள் என 62,530 கோடி உரூபா. ஆக தமிழக அரசுக்கு மொத்தம் வரிகள் மூலமான வருவாய் மட்டும் 1,44,323 கோடியே 50 இலக்கத்து பதின்மூன்றாயிரம் உரூபா.

விற்பனை, வர்த்தகம் முதலானவற்றின் வரி வருவாய் மட்டுமே 44,427 கோடிகள். முத்திரைத்தான், பத்திரப்பதிவுக் கட்டணங்கள் 10,935 கோடிகள், வாகனங்களுக்கான வரி 6,211 கோடிகள். காவல் துறை மூலம் பெற்ற வருவாய் 388 கோடிகள்.

வரி வருவாய்கள் உண்மைதானா நண்பர்களே. விற்பனை, வர்த்தகம் முதலான வரிகளில் மட்டும் எவ்வளவு வரி ஏய்ப்பு நடைபெறுகிறது என்பதை அனைவரும் அறிவோமல்லவா? எத்தனை மக்கள் வரியோடு பில் கட்டுகிறார்கள்? எத்தனை கடைக்காரர்கள் ஒழுங்கான வரியைச் செலுத்துகிறார்கள்? எத்தனை வணிகர்கள் மக்களிடம் பிடிக்கும் வரியை வணிக வரித்துறையிடம் நேர்மையாகக் கட்டுகிறார்கள். இரவெல்லாம் போலியான வரிக்கணக்கு எழுதும் வணிகர்களையும் முதலாளிகளையும் தமிழகம் அறியும்தானே. விற்பனை வரியில் வசூலாவது வெறும் ஒரு பங்குவரியே. மீதம் ஒன்பது மடங்கு வரி, கள்ளப் பணமாகவே புழங்குகிறது. அரசாங்கத்தின் கணக்கிலேயே வருவதில்லை.

எமது அனுபவத்தில் அறியவருவது, அரசாங்கம் விற்பனை வரியை மட்டும் ஒழுங்குபடுத்தி, கறாராக வசூலித்தால் போதும். வேறு எந்த வரியுமே மக்கள் தலையில் சுமத்த வேண்டியதில்லை. தோளில் ஏற்ற வேண்டியதில்லை.

கடைகளில் பில் கேட்டாலே நம்மை வேற்றுலகவாசிகள் போல்தான் பார்க்கிறார்கள். மனதில் பிழைக்கத் தெரியாதா ஆளோ என்று நினைப்பார்களாக்கும். அதற்கும் மேலேயே நினைப்பார்கள்தான். பெரிய கடைகள் தவிர்த்து பெரும்பாலும் எந்தக் கடையிலும் பில் போடுவதே இல்லை. பில் கேட்டால் கொட்டேசன் தருகிறார்கள். இதுதான் பில்லா என்றால் வரி சேர்த்து வரும் பரவாயில்லையா என்கிறார்கள். பரவாயில்லை கொடுங்கள் என்றால், கஷ்டப்பட்டு சம்பாதிக்குற பணத்தை கவர்மெண்டுக்கு தரணுமா என்கிறார்கள்.

யாம் பில் இல்லாமல் பொருள்கள் வாங்குவது அரிது. ஜெராக்ஸ் பேப்பர் ஒரு கட்டு பில் இல்லாமல் வாங்கினால் ஐம்பது ரூபாய் மிச்சமாகிறது. கடைக்காரர் சொல்கிறார். உங்களுக்கும் இலாபம் இல்லாமல் எங்களுக்கும் இலாபம் இல்லாமல் எதுக்கு சார். ஐம்பது உரூபாக்கு வேற ஏதேனும் பொருள் வாங்கலாமல்லவா. சரிதானே நண்பர்களே. 1000 உரூபாக்கு பொருள் வாங்கினால், 300 உரூபா வரிக்கட்ட வேண்டுமா என எளியவர்கள் யோசிக்கத்தானே செய்வர். எளியவர்கூட சமயங்களில் கட்டி விடுவார். படித்தவர்கள்தான் அதிகமாக கணக்குப்போட ஆரம்பிப்பார்கள்.

கடைக்காரர் ஒன்றும் நம்மேல் கரிசனத்தால் கூறவில்லை நண்பர்களே. அத்தனையும் போலி. சோப்பு, சீப்பிலிருந்து, காலணிமுதல் கணினிவரை போலியோ போலி. நல்லதை, தரமானதை வாங்கி விற்றால் கடைக்காரர் எப்படி கோடீஸ்வரராக முடியும்? மூன்று கோடிக்கு எப்படி பிளாட் விலைபேச முடியும்?

வணிகத்தில் நேர்மை என்பதே இல்லாமலாகிவிட்டது. தர்மத்தைப் பற்றி எப்படி பேசுவது? அறத்தைப் பற்றி என்ன பேசுவது? அதிகபட்ச விலை தொன்னூறு உரூபா போட்டிருக்கிறது. நூற்றைம்பது உரூபாக்கு விற்கிறார்கள். இது தர்மமாகுமா? அறத்தில் சேருமா? காதில் மாட்டி பாட்டுக் கேட்கும் மின்னணுக் கருவியின் அதிகபட்ச விலை உரூபா 1320. நமக்கு 990உரூபாக்கு கொடுக்கிறார்கள். அப்படியே விற்றாலும் நாம் வாங்கத்தானே போகிறோம். உண்மையிலேய எவ்வளவு உரூபாக்குதான் வாங்கியிருப்பார்கள். ஒரு பொருளை மும்மடங்கு நான்கு மடங்கு லாபம் வைத்தா விற்பது. அனைத்துக் கடைக்காரர்களும் சீனப் பொருட்களையே விற்கிறார்கள். இலாபம் அதிகம் கிடைக்கிறதல்லவா. குண்டுசிமுதல் கணினிவரை எல்லாமே சீனாவில் தயாரிக்கப்பட்டதுதான். இந்தியத் தயாரிப்பில் ஒன்றுமே இல்லை. கணினியில்

இந்தியா தயாரிப்பதாகச் சொல்லப்படும் ஆசுஸ் கணினி கோயம்புத்தூரில் இருப்பதுபோல் தெரியவில்லை. டீலா் இருக்கிறாா்களா என சல்லடையாகத் தேடிப்பாா்த்துவிட்டோம். சில கடைகளில் விற்கிறாா்கள். அவை ஆப்பரேட்டிங் சிஸ்டம் இல்லாமல் இருக்கிறது. போலியாகப் போட்டுக் கொடுப்பாா்கள். அனைத்துக் கம்பனிகளின் மாடல்களுமே சைனா தயாரிப்பு. நம் வியாபாரிகள் ஐரோப்பா, ஜப்பான், கொரிய, அமெரிக்கத் தயாரிப்புகளை ஏன் வாங்குவதில்லை? ஏன் விற்பதில்லை? எல்லாம் லாபம். கொழுத்த லாபம் வேண்டும். அதுக்கு சைனாத் தயாரிப்புகளே ஏற்றவை. மலிவாக வாங்கி எவ்வளவுக்கு வேண்டுமானாலும் விற்கலாம்.

எமது அப்பாவுக்கு மரத்தாலான ஒரு கைத்தடி வாங்கினோம். கைத்தடி விலை நூற்றி முப்பத்தைந்து. வரி மட்டும் முப்பது. இதென்ன நியாயம்? வீட்டிற்கு வெள்ளையடிக்க பெயிண்ட் விலை பன்னிரெண்டாயிரம். வரி மட்டும் நான்காயிரத்திற்கு வருகிறது. வரி போட்டால் போதும், வரிவருவாய் மட்டும் போதும் என்றே அரசுகள் செயல்படுகின்றன. கொள்ளையாக வரியை வாங்கி மக்கள் நலத்திட்டம் எனும் பெயரில் கொஞ்சத்தைப் பிய்த்துப் போட்டுவிட்டு, ஆளும் வா்க்கங்கள் வரியை உண்டு கொழுத்துத் திரிகின்றன.

முத்திரைத்தாள், பத்திரப்பதிவு வருவாயைக் கவனித்தீா்களா நண்பா்களே. பதினோராயிரம் கோடிக்கு அருகில் வசூலித்திருக்கிறாா்கள். ஊரு உலகுக்கே தெரியும். பத்திரப்பதிவுத் துறையில் எவ்வளவு கருப்புப்பணம் புழங்குகிறது என்று. நிலத்தை வாங்கியும், விற்றும், வாங்கியும் தமிழா்கள் வருவாயைப் பெருக்கியவண்ணமிருக்கிறாா்கள். ஒரு சென்ட் நிலத்தை இருபதாயிரத்துக்கு வாங்கியவா்கள். ஒன்றிரண்டு வருடத்திலேயே இரண்டு இலக்கத்திற்கு மைமாற்றிவிடுகிறாா்கள். நிலம் எளியவா்களுக்கு எட்டாக்கனியாகிவிட்டது. கொழுத்த பணக்காரா்களும், கொள்ளையடித்து சொத்துச் சோ்த்தவா்களும், கந்து வட்டிக் கும்பல்களும் மட்டுமே இனி சொந்த வீடு வாங்க முடியும். நிலத்தை சிதைத்து விட்டாா்கள் தோழமைகளே.

ஊரெங்கும் ரியல் எஸ்டேட்கள். எங்கு பாா்த்தாலும் சைட்டுகள். அதிகாரத்திலுள்ளவா்களைக் கூட்டுச் சோ்த்துக்கொண்டு நிலத்தை கூறுபோட்டு விற்கிறாா்கள். நிலத்திற்கான துணைக் கலெக்டரே ரியல் எஸ்டேட் செய்கிறாா் எனில் தடுப்பது யாரால் முடியும். மூட்டைகளில் பணத்தைக் கட்டிக்கொண்டு

எங்கேயடா சல்லிசான நிலம் கிடைக்குமென ஈசலாகத் திரிகிறார்கள் தோழர்களே. ஒரே ஏக்கர் நிலம் வாங்கினால் கீழே பாதளம் வரையும் மேலே ஆகாயம் வரையும் அவருக்கே சொந்தம் எனச் சட்டம் போட்டது யார்? நிலத்தை தனிச்சொத்தாக மடைமாற்றியது யார்? எத்தனை பரம்பரையானாலும் நிலத்தையும் கடத்திக்கொண்டு போவதற்கு உரிமை கொடுத்தது யார்?

காடு, மலை, ஆறு, ஏரி, குளம், கண்மாய், வயல், வாய்க்கால் என ஒன்றையும் விடவில்லை. மனிதர்களின் பேராசைக்கு எதுவுமே தப்பவில்லை. எங்கும் வீடுகள்.. எல்லா இடத்திலும் வீடுகள்.. ஒரு குடும்பம் தங்குவதற்கு எவ்வளவு பெரிய வீடு. எத்தனை வீடுகள். ஆடம்பரமான வேலைப்பாடுகள். அகலமான அறைகள். உயர் தரமான பொருட்கள். நவீன வசதிகள். நேர்மையாகக் சம்பாதிப்பவரால், நியாயமாகச் சம்பாதிப்பவரால் முடியுமா தோழர்களே? சமூகத்தில் எதைப்பற்றியும் கவலைப்படாமல், பணம் சேர்ப்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருக்கும் ஒருவராலேயே இப்படியான ஆடம்பரமான வீடுகள் கட்ட முடியும், வாங்க முடியும்.

தமிழக அரசிடம் நிலம் இருக்கிறதா நண்பர்களே. தமிழக அரசு எங்காவது சொந்தமாக நிலம் வைத்திருக்கிறதா? அரசிடம் இருந்தால் எதற்கு அலுவலகங்களை சாக்கடைக் கால்வாய்களில் கட்டுகிறது, காவல் நிலையத்தை சாக்கடைமேல் பாலம் கட்டி அதன் மேல் கட்டுகிறது, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களை குளத்துக்குள் கட்டுகிறது, நீதிமன்றங்களை ஏரிக்குள் கட்டுகிறது, தாலுகா அலுவலகத்தை சுடுகாட்டுக்குள் கட்டுகிறது? அரசு கட்டிடங்கள் எங்கே கட்டப்படுகின்றன, கட்டப்பட்டு வருகின்றன என்பதை கவனித்துப் பாருங்கள் நண்பர்களே.

அரசிடம் நிலமே இல்லை தோழர்களே. அரசு மருத்துவமனையை விரிவுபடுத்த முடியவில்லை. பேருந்து நிலையத்தை பெரிதாக்க முடியவில்லை. சாலையை அகலமாக்க முடியவில்லை. ஏதேனும் ஒரு கட்டடம் கட்ட வேண்டுமானால் அரசு நிலம் தேடித் தேடித் திரிகிறது. ஒரு பெரிய வணிக வளாகம் மிக விஸ்தீரமான இடத்தில் கட்டப்பட்டு பளபள என ஜொலிக்கிறது. பக்கத்திலேயே ஒரு காவல் நிலையம் கட்டுகிறார்கள். உண்மையில் அது ஒரு சாக்கடைக் கால்வாய். கால்வாயை மடைமாற்றி, பாலம்போல் கட்டி, அதள பாதாளத்தை மண்ணைக் கொட்டி மேடாக்கி, கவல்நிலையம் கட்டப்படுகிறது. காவலர்கள் மூக்கைப் பொத்திகொண்டு வேலை செய்ய வேண்டியதுதான்.

அரசாங்கத்தின் அத்தனை நிலங்களையும் ஆக்கிரமித்துவிட்டார்கள். புறம்போக்கு என இருந்த நிலத்தைப் பூராவும் பட்டா போட்டுவிட்டார்கள். அரசியல்வாதிகள், அதிகாரவர்க்கம் கூட்டுச் சேர்ந்துதான் கொள்ளையடித்திருக்கிறார்கள்.

குளத்திற்குள் குடிசை போட்டு வாழ்பவர்களையும், கழிவுநீர்த் கால்வாய்களின் கரைகளில் வாழ்பவர்களையும் வேறு இடத்திற்கு மாற்ற அரசு விரும்புகிறது. கோயம்புத்தூர் நகருக்குள் அரசுக்கு எங்குமே நிலமில்லை. மாநகர எல்லைவிட்டுத் தூரமாக, மலையடிவாரத்தில் (உண்மையில் மலை மேல்தான்) அரசு வீடுகள் கட்டுகிறது. அது யானைகள் வழிப்பாதை.

மலையை ஒட்டி, மலைமீது பள்ளிக்கூடங்கள் எப்படி முளைத்தன எனத் தெரியவில்லை. மலையை ஓட்டியே நூற்றுக்கணக்கான ஏக்கர் கோல்ப் மைதானம் போட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி வழியாக இனி யானைகள் நிச்சயமாக இடம்மாற முடியாது. மலையில் கட்டிடங்கள், பள்ளிகள், கிளப்கள், கோவில்கள், அபார்ட்மென்டுகள் கட்டுவதற்கு எத்தனை அரசுத் துறைகளிடம் அனுமதி வாங்க வேண்டும் நண்பர்களே.. அத்தனை பேரும் அனுமதி கொடுத்திருக்கிறார்கள்தானே. இல்லையெனில் அனுமதியில்லாமலே ஆடம்பரமான பள்ளிக் கூடம் எப்படி நடத்த முடியும்? மலையில்தான் ஒரு பெரிய கல்லூரியே இயங்குகிறது.

குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக மற்றொரு இடத்தில் வீடு கட்டுகிறார்கள். பெரிய ஓடை. ஓடைக்கு நீர் வரும் வழியில் கட்டிடங்களாகக் கட்டிவிட்டார்கள். வறண்டு கிடக்கும் அந்த ஓடைக்குள் நான்குமாடி கட்டிடங்களைக் கட்டுகிறது அரசு. கரையில் நின்று பார்த்தால் கட்டிடங்களே தெரியவில்லை. அவ்வளவு பள்ளம். இதற்கும் அனுமதியளிக்கிறார்கள். பொறியாளர்கள் திட்டம் தீட்டுகிறார்கள். மேற்பார்வையிடுகிறார்கள். பணத்தை பட்டுவாடா செய்கிறார்கள். கட்டிடங்கள் கட்டுவதில் நடக்கும் முறைகேடுகள் சொல்லி மாளாது. கட்டிடம் கட்டும் அத்தனை பொருட்களுமே தரமற்றவை. மூன்றாம் நான்காம் தரம். அட அரசு பணம்தானே. நமது அப்பன் வீட்டுச் சொத்தா என்ன.

நண்பர்களே, அரசும் சட்டமும் ஓரளவிற்காவது இருப்பதால்தான் கொள்ளைக்காரர்களும், கொலைகாரர்களும் கொஞ்சமேனும் அடங்கியிருக்கிறார்கள். இல்லாவிட்டால் என்னாகும் என்று தெரியுமா? தமிழ்நாடு ஒரு வாரத்திற்குக்கூட தாங்காது. வாரிச்சுருட்டி விடுவார்கள். தமிழ்நாட்டில்

அவ்வளவு கொள்ளையர்கள், கொலைகாரர்கள் நிறைந்திருக்கிறார்கள். இப்போதெல்லாம் யாரும் கொள்ளையர் என வெட்கப்படுவதேயில்லை. கொலைகாரன் என நாணுவதேயில்லை. கொள்ளைக்காரனும் கொலைகாரனும் சாதிக் காவலர் என்றும் மதத்தின் காவலர் என்றும் வெட்கங்கெட்ட மனிதர்களால் கொண்டாடப்படுகிறார்கள். நாளை இந்த சாதி மதக் காவலர்கள்தான் அரசியல் தலைவர்கள். கொள்ளைக்காரனெல்லாம் சாதி அமைப்பு, கட்சியமைப்பு, இயக்கங்கள் வைத்திருக்கிறார்களா இல்லையா தோழர்களே. அரசியல்வாதிகளும், வணிகர்களும் அவரவர் சாதிகொள்ளைக்காரனையும், கொலைகாரனையும் வளர்த்துவிடுகிறார்களா இல்லையா. பணத்தை அள்ளி இறைக்கிறார்களா இல்லையா.

தமிழ்நாட்டில் நடக்கும் கொள்ளைகளை, திருட்டுகளை, வழிப்பறிகளை, செயின் பறித்தல்களைப் பற்றி சொல்ல வேண்டுமா தோழர்களே. யார் இந்தக் கொள்ளையர்கள்? சாப்பாட்டுக்கு வேறுவழியில்லாமல் கொள்ளையடிக்கிறார்களா? இல்லை என உறுதியாகச் சொல்லலாம்தானே தோழமைகளே. இந்த மானங்கெட்ட மடையனுக்கும் மடச்சிக்கும்தான் அரசு இருபத்தைந்து கிலோ அரிசியை மாதாமாதம் கொட்டுகிறதே. ஒருவேளை குழம்பு, கூட்டு வைப்பதற்கு கொள்ளையடிப்பார்களோ. கோழிக் குழம்பு வைப்பதற்கும் கொள்ளையடிக்கக் கூடும்.

யாருக்கெல்லாம் அரசு இலவச அதாவது விலையில்லாத அரிசியை வழங்குகிறது நண்பர்களே? கார்டுதாரர் அத்தனை பேருக்கும் வழங்குகிறதல்லவா. சாதி வித்தியாசமில்லை. மத வேறுபாடு கிடையாது. ரேஷன் அட்டை வைத்திருப்பவர் எல்லோரும் வாங்கிக் கொள்ளலாம். சரிதானே.

தமிழ்நாட்டில் விலையில்லா அரிசியை வாங்கி சோறாக்கிச் சாப்பிடும் குடும்பங்கள் எத்தனை உள்ளன நண்பர்களே? நகர்களில் ஆட்டோக்களிலும், கார்களிலும் வந்து விலையில்லா அரிசியை வாங்கிச் செல்வதைக் கவனித்திருக்கிறீர்களா? உண்மையிலேயே இவர்களெல்லாம் ரேஷன் அரிசியைத்தான் பொங்கிச் சாப்பிடுகிறார்களா? இல்லையெனில் விலையில்லாமல் அரிசியை வாங்கி என்ன செய்கிறார்கள்?

எமது கிராமத்தில் கடைகளில் சாப்பாட்டு அரிசியை மூட்டை மூட்டையாக வாங்கிச் செல்கிறார்கள். யாராலும் மறுக்க முடியுமா? ரேஷன் அரிசியை சாப்பிட

முடியவில்லையாம். நீங்கள் சாப்பிட்டுப் பார்த்ததுண்டா தோழமைகளே. சோறு பருவட்டாக இருக்கிறது. முன்னைக்கு இப்போது எவ்வளவோ பரவாயில்லை. ஏழைகள் சாப்பிடலாம். பணக்காரர் வயிறு ஏற்றுக்கொள்ளுமா எனத் தெரியவில்லை.

தமிழக அரசு அரிசியை உற்பத்தி செய்கிறதா நண்பர்களே? பின் அரசுக்கு எங்கிருந்து நெல் விளைவிக்கப்படுகிறது? தமிழ்நாட்டில் வாழும் மக்களோடு சுற்றுலாப் பயணியரையும் சேர்த்தால் எட்டுக்கோடி பேர் வருமல்லவா. எட்டுக் கோடிப் பேருக்கும் தேவையான நெல் தமிழகத்தில் விளைவிக்கப்படுகிறதா? விளைவிக்கப்பட்டால் எந்த மாதிரியான நெல் வகைகள் விளைவிக்கப்படுகின்றன? கடைகளில் தரமான அரிசி வகைகள் விற்கப்படும்போது, விலையில்லா அரிசி மட்டும் ஏன் தரமில்லாமல் இருக்கிறது? விலையில்லா அரிசிக்கு மட்டும் எங்கிருந்து வருகிறது அந்த நாற்றம்? அரிசியைக் கொள்முதல் செய்ய எத்தனையோ அதிகாரிகள் இருப்பார்கள்தானே. முறையாகத்தான் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா? அதிகாரிகள் வீட்டில் பாசுமதி சாதம் பொங்கப்படும்போது, எளியோர்கள் வீட்டில் மட்டும் விலையில்லா அரிசி ஏன்? அதிகாரிகள் விலையில்லா அரிசியைப் பொங்கிப் பார்த்து வாங்குகிறார்களா? அரிசியை மென்று பார்த்து வாங்குகிறார்களா? முகர்ந்து பார்த்து வாங்குகிறார்களா?

தமிழக அரசின் நியாயவிலைக் கடைகளில் விற்கவென்றே ஏதும் நெல் வகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவா? தமிழகத்தில் இல்லையெனில் பிறமாநிலங்களில்? கருநாடகப் பொன்னியும், ஆந்திரப் பொன்னியும்தான் தமிழக அரிசிக் கடைகளில் அதிகம் விற்பனையாகிறது. சரிதானே தோழமைகளே. நமது குருஜிக்களும், யோகிகளுக்கும், பரமகம்சர்களுக்கும் வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம். எம்மைப் போன்ற சாதாரண மனிதருக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். இருபத்தைந்து கிலோ சிப்பம் குறைந்தது ஆயிரத்து இருநூறிலிருந்து அதிகபட்சம் ஆயிரத்து ஐந்நூறுவரை விற்கப்படுகிறது. மறுக்க முடியுமா? கிராமங்களில் ஆயிரத்து நானூறு உரூபாக்கு விற்கப்படும் அரிசியிலும் கலப்படம் இருக்கிறது. அரிசியும் தரமற்று இருக்கிறது. நண்பர்களே, நமது மகாயோகிகளின் ஆசிரமங்களில் ரேசன் அரிசி போடுவதில்லைதானே. ரேஷன் அரிசி ஆக்கிப் போட்டால், பெரிய சாதிக்காரர்களெல்லாம் சீடர்களாகச் சேருவார்களா என்ன. அடேங்கப்பா.. ஆசிரமங்களின் கட்டிடத் தொகுதிகள் என்ன.. வசதிகள் என்ன.. ஆடம்பரங்கள், அலங்காரங்கள் என்ன.. இந்திரலோகம்கூட இப்படி இருக்காது

போல. அனைத்தும் ஏசி. வெளி நாட்டு உள்நாட்டு முதலாளிகள் சொகுசாகத் தங்கி யோகம் பயில வேண்டுமல்லவா.

நமது ஞனாசிரியர்களின் ஆசிரமங்களில் தங்கிப் பாருங்கள் நண்பர்களே. நட்சத்திர விடுதிகள் தோற்றது போங்கள். வெளிநாட்டுப் பொருட்களைக் கொண்டு அப்படியே இழைத்திருக்கிறார்கள். குருஜிக்களுக்கா கட்டிடம் கட்டத் தெரியாது? இவ்வளவு பணம் எங்கிருந்து வருகிறது நண்பர்களே? வெறும் யோகம் கற்றுக் கொடுப்பதற்கா இத்தனை செல்வம் சேருகிறது? வயலில் சேற்றில் உழன்று திரிவதைவிட யோகியாகி, ஆசிரமம் அமைத்துக் கொள்வது நல்ல தொழில். வருமானமும் கொட்டும். கூடவே, பள்ளிக் கூடம், கல்லூரி, மருத்துவமனை என தொழில் செய்து அப்படியே பிக்அப் ஆகி பிழைத்துக் கொள்ளலாம். சத்துருண்டை மாவு விற்றாவது பிழைத்துக் கொள்ளலாம் நண்பர்களே. அப்படியும் வருமானமில்லையென்றால், இருக்கவே இருக்கிறது பத்திரிக்கை. ஏதாவது ஒரு பத்திரிக்கையில் அவர்கள் எப்படி விரும்புகிறார்களே அப்படி எழுதிக் கொடுத்தால் பணம் கொட்டும். புகழ் கூடும். வெகு விரைவிலேயே உலக அளவில் பேமஸ் ஆகிவிடலாம்.

தமிழக அரசு ஆந்திராவிலிருந்தும், கருநாடகாவிலிருந்தும் ரேசன் அரிசியை கொள்முதல் செய்வதாக செய்திகள் அறிவிக்கின்றன. வளமான பொன்னியையும் பொருநையையும் வைத்துக்கொண்டு, அறிவில் சிறந்தவராகக் கூறப்படும் தமிழர்கள், வெளிமாநிலங்களில் அரிசி வாங்குகிறார்கள். தமிழகத்தைப் பூராவும் கட்டிடங்களாக மாற்றியாயிற்று. விலைபோட்டு கூவிக் கூவி விற்றாயிற்று. பிராமணர் பூராம் மாநகரங்களுக்குப் போயாயிற்று. பிள்ளைமாரும் நிலத்தைப் பூராம் விற்று, மாநகருக்கும், வெளிநாடுகளுக்கும் பறந்தாயிற்று. நாடாரெல்லாம் சென்னையிலும், கோவையிலும் செட்டில்லாகிவிட்டாயிற்று. தேவரெல்லாம் சினிமாத் தொழிலுக்குப் போயாயிற்று. மாநகரங்களில் பெரிய கடைகளில் காமராஜர் போட்டோ தொங்குகிறது. ஓட்டல்களிலும், டீக்கடைகளிலும் பூக்கடைகளிலும் தேவர் போட்டோ தொங்குகிறது. பெரிய பெரிய அலுவலகங்களிலும், வீடுகளிலும் சிதம்பரனார் போட்டோ தொங்குகிறது.

உழவுத் தொழிலைப் பேணிய தேவேந்திரர் படிப்புதான் முக்கியம் என படிப்பாளியாகிவிட்டார். ஆதிதிராவிடரும் அருந்ததியரும் கல்வியில் முன்னேறி வருகிறார்கள். நூறு சதவிகிதம் கல்வியை நோக்கி முன்னேறிவரும் தமிழகத்தில்,

நெல்லை உற்பத்தி செய்வது யார்? இதெல்லாம் தெரிந்துதான், அறிந்துதான், தமிழகத்தில், இந்தியாவில், புத்திசாலிகள் பட்டியல் சாதியை அடக்கி, ஒடுக்கி, ஏமாற்றி, ஆசைகாட்டி வயல்களிலேயே உழும்படி பார்த்துக்கொண்டார்கள். அவர்களுக்குத் தெரியாதா.. பள்ளரும், பறையரும், அருந்ததியரும் படித்தால் வயல்வேலை பார்க்க மாட்டார்கள் என்று. அதற்குத்தான் இத்தனையாயிரம் அடக்கு முறைகள், வன்முறைகள், ஒடுக்குமுறைகள், ஒதுக்கல்கள்.

பட்டியல் சாதியினர் வயல்களில் உழலும்வரை பிராமணரும், பிள்ளைமாரும் நிலக்கிழார்களாக இருந்தார்கள். நாங்களும் படிக்கிறோம், எங்களாலும் படிக்க முடியும், எங்கள் மூளையாலும் அறிவைச் சுமக்க முடியும் எனப் பள்ளிக்கூடத்தின் பக்கம் ஒதுங்க ஆரம்பித்தவுடன், பிராமணரும் பிள்ளைமாரும் இடத்தை மாற்றிவிட்டார்கள். நண்பர்களே, எந்தப் பிராமணர் கிராமங்களில் இருக்கிறார்? எத்தனை பிள்ளைமார்கள் கிராமங்களில் வசிக்கிறார்கள்?

பிராமணரும் பிள்ளையும் பள்ளரும் எல்லாருமாகச் சேர்ந்து வயல் வேலை செய்வோம், உணவு உற்பத்தி செய்வோம் என்றால்.. அதெப்படி முடியும் நண்பர்களே. வேதமோதும் பிராமணர் வயலில் வேலை செய்வதா.. அறிவிற் சிறந்த பிள்ளை களையெடுப்பதா.. எமக்குத் தெரிந்தே பிராமணரும் பிள்ளையும் வயல் வேலைகள் பார்த்தார்கள் நண்பர்களே. பிள்ளையிலும் கூலி வேலை பார்த்தவர்கள் அநேகம் இருந்தார்கள். எல்லாப் பிள்ளையுமா அறிவாளி. எல்லாப் பிள்ளையுமே புத்திசாலியாக இருக்க முடியுமா?

ஒரு பிள்ளை நகரத்திற்குப் போனார். நகரத்தில் அருமையான வாய்ப்புகள் இருப்பதைக் கண்டுகொண்டார். குடும்பத்தோடு நகரத்தில் செட்டில் ஆனார். உறவினர்கள் போனார்கள். ஊர்க்காரர்கள் போனார்கள். அக்கம் பக்கத்து ஊர்களிலுள்ளவர்கள் போனார்கள். கடைசியில் மொத்தமாகப் போய்விட்டார்கள்.

காவிரியில் தண்ணீர் வந்தால் என்ன, வராவிட்டால் என்ன. காவிரி டெல்டாவில் எண்ணெய் எடுத்தால் பிள்ளைக்கு நல்லதுதானே. எண்ணெய் விலை குறையுமல்லவா? எரிவாயுக் குழாய் பதித்தால் பிள்ளைக்கு லாபம்தானே. காடுகள் எல்லாம் வீடுகளானால் பிள்ளைக்கு அமோக லாபம்தானே. பெரும் பெரும் கட்டுமான நிறுவனங்கள் வைத்திருப்பவர்கள் பிள்ளைகளன்றோ. அட பிள்ளை இல்லாவிட்டால் முதலியாக இருப்பார். புதுசாக ஆரம்பித்திருந்தால் கவுண்டராக இருப்பார்.

தஞ்சையில் நெற்பயிர் கருகினால் பிள்ளைக்கு என்ன? பிள்ளையிடம்தான் கோடிகோடியாக பணம் இருக்கிறதே. ஒரு குடியிறுப்பு வளாகம் கட்டி விற்றால் எத்தனை கோடிகள் லாபம் கிடைக்கும். தமிழ்நாட்டில் நெல் விளையாவிட்டால் பிள்ளை கருநாடகாவில் வாங்குவார். அங்கேயும் விளையாவிட்டால் உத்தரப்பிரதேசத்தில் பாசுமதி வாங்குவார். அங்கும் கிடைக்காவிட்டால் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வார். நம் பிள்ளையிடம், முதலியிடம் இல்லாத காசு பணமா என்ன? அரிசி கிலோ என்ன விலைக்கு விற்றால் பிள்ளைக்கு என்ன கவலை. கிலோ ஆயிரம் உருபாக்கு விற்றாலும் பிள்ளையால் வாங்க முடியும். வேறு சாதிக்காரரால் முடியுமா? எல்லாம் பிள்ளையின் அறிவாற்றல்.

காவிரிப் பிரச்சனையை பிள்ளையால் தீர்க்க முடியாதா? முல்லைப் பெரியாறு சண்டையை பிள்ளையால் முடித்து வைக்க முடியாதா? பாலாற்றில் அணை கட்டுவதை பிள்ளையால் தடுத்து நிறுத்த முடியாதா?

பிள்ளை மனது வைத்தால் ஒரே நாளில் பொன்னி பாய்ந்தோடி வந்துவிடமாட்டாளா? பிள்ளை நிலக்கிழாராக இருந்தபோது காவிரி தங்கு தடை இல்லாமல் ஓடி வந்தாள். பள்ளரும் பறையரும் வன்னியரும் ஒரு ஏக்கரும் இரண்டு ஏக்கரும் வைத்துக் கொண்டு அல்லாடும்போது பொன்னி ஏன் தவழ்ந்துகூட வர மாட்டோம் என்கிறாள்? பொன்னிக்கும் பிள்ளைமேல்தான் பேரன்பு போல. காவிரிப் பகுதியின் நிலத்தைப் பூராம் விற்றுவிட்ட பிள்ளை எதற்காக காவிரிக்கு உண்ணாவிரதம் இருக்க வேண்டும்? ரயிலை மறிக்க வேண்டும்? ஆர்ப்பாட்டம், ஊர்வலம் போகவேண்டும்? பிள்ளைக்கு ஐபிஎல் மட்டைப் பந்தல்லவா முக்கியம். சென்னை அணி அடிக்கும் ஒவ்வொரு சிக்சரிலும் பிள்ளை மனம் குளிர்ந்து விடதா என்ன. பிராமணரின் உள்ளம் நிறைந்துவிடாதா என்ன.

வீடு நிறைய நெல் மூட்டைகளை அடுக்கிக் வைத்திருக்கும் பிராமணரல்லவா ஐந்து நாட்கள் கிரிக்கட்டை ரசித்துப் பார்க்க முடியும். நூறு ஆட்களை வயல் வேலைக்கு அமர்த்தியிருக்கும் நமது பிள்ளையால் அல்லவா ஒருநாள் முழுக்க கிரிக்கட் மேட்ச் பார்க்க முடியும். காலையிலிருந்து மாலைவரை பிராமணர், பிள்ளை நிலங்களில் உழைத்த பள்ளரும் பறையரும் ஐந்து நாட்கள் விடாமல் கிரிக்கட் ஆடியிருக்க முடியுமா? இல்லை நாள் முழுக்க வேலை வெட்டி இல்லாமல் மட்டைப்பந்து பார்க்கத்தான் அனுமதி கிடைத்திருக்குமா?

பிள்ளை வைத்திருக்கும் பணத்திற்கு ஐந்தாயிரம் கட்டணமெல்லாம் தூசு. பிள்ளையின் மதிப்பு கிரிக்கெட் வாரியத்திற்குத் தெரியவில்லை. பிள்ளைக்கென்று தனியாக குளிர் சாதன வசதி, அழகான சோபா, அவ்வப்போது நொறுக்குத் தீனி ஏற்பாடு செய்து கொடுத்தால் இலக்க ரூபாய் தருவதற்கும் நம் பிள்ளை ரெடி. கட்டிக்கொண்டிருக்கும் ஐம்பது இலக்க வீட்டை, ஐம்பத்தி ஒன்று என விற்றால் போதும். பிள்ளைக்கு பணம் சம்பாதிக்கவா தெரியாது.

இரண்டு மாதம் விடாமல் கபடி. அடுத்த இரண்டு மாதம் ஓயாத கால் பந்து. அடுத்த இரண்டு மாதம் தூங்காத மட்டைப்பந்து. அப்புறம் டென்னிசு, இறகுப்பந்து. கிரிக்கட் ஜாம்பவான்களும் கலையுலக நட்சத்திரங்களும் இந்தியாவின் விளையாட்டை உலகத் தரத்திற்கு மாற்றாமல் ஓயமாட்டார்கள்தானே. ஒரே நேரத்தில் கால்பந்தும் மட்டைபந்தும் நடத்தினால் என்ன.. அதெப்படி நண்பர்களே. வணிகம் என்னாவது. ஸ்பான்சர் என்னாவது. பணம் சம்பாதிப்பது என்னாவது.

பிள்ளைகளெல்லாம் தேர்வுக்கு மும்முரமாகப் படித்துக் கொண்டிருக்கும்போது இரவெல்லாம் மட்டைப்பந்து போட்டியைக் காண்பிக்கிறார்களே என நம் பிள்ளை வருந்துவாரா? பிள்ளையை ஏமாளி என்றா நினைத்தீர்? பிள்ளையின் பிள்ளை எங்கு படிக்கிறது தெரியுமா? எத்தனை இலக்கங்கள், கோடிகள் கொட்டி பிள்ளை படிக்க வைக்கிறார் தெரியுமா?

பிள்ளைகளின் பிள்ளைகள் படிக்கும் பள்ளியைப் பார்த்ததுண்டா நண்பர்களே. பள்ளி எனச் சொல்வதைவிட பன்னாட்டு ஓட்டல் எனச் சொல்லி விடலாம். கொழுத்த பணம் சம்பாதிப்பதற்காக பெருத்த அறிவைச் சம்பாதிக்கும் பிள்ளைகளின் பிள்ளைகள், காலைமுதல் இரவுவரை சாப்பிடும் மெனுவை அறிவோமா. முற்றிலும் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள், படுக்கையறைகள், உள்விளையாட்டு அரங்குகள். பிள்ளையின் உடம்பிலேயே வெயில்படாதபோது பிள்ளையின் பிள்ளை உடம்பில் வெயில்பட விட்டுவிடுவாரா நம் பிள்ளை? பிள்ளையின் பிள்ளை வெயிலைப் பார்ப்பதற்கா நம்பிள்ளை இவ்வளவு கஷ்டப்பட்டு பணம் சம்பாதிக்கிறார்?

நண்பர்களே... நாமக்கல் வகைப் பள்ளிகளைப் பற்றி எழுதவும் வேண்டுமா? நவீனக் கொத்தடிமை பள்ளிகளென்று அங்கு பணிபுரியும் ஆசிரியர்களே பதறுகிறார்கள். பண்டைக்காலத்தின் அடிமை முறையை, அடிமைக் கலாச்சாரத்தை,

நவீன அறிவியல் காலத்திலும் பார்க்க விரும்பினால் நாமக்கல், ஈரோடு, திருச்செங்கோடு பகுதிகளின் பள்ளிக்குப் போய்ப் பாருங்கள் தோழர்களே.

வருடத்திற்கு இரண்டு இலக்கம்தானாம். பெற்றோரும், பிள்ளைகளும் மொய்க்கிறார்கள் நண்பர்களே. சமீபத்தில் ஒரு ஆசிரியர் சொன்னார், ஊட்டி, குன்னூர் பகுதிகளில் படுகர் பிள்ளைகள் நாமக்கல் வகைப் பள்ளிகளில் பெருமளவில் படிக்கிறார்களாம். மற்ற பெரிய சாதிக்காரர்களெல்லாம் இன்னும் வசதிகள் அதிகமுள்ள பள்ளிகளுக்குப் போய் விட்டார்கள்.

யாம் கல்லூரி ஆசிரியரென்பதால், பேராசிரியர்கள் பற்றியே அதிகம் பேசுகிறோம் நண்பர்களே. பள்ளி ஆசிரியர்களைப் பற்றி அதிகம் பேசவில்லை. பேராசிரியர்களே பேரறிவு கொண்டவர்கள் எனச் சமூகம் நினைப்பதால், யாம் அவர்களைப் பேசுகிறோம். பதிவிடுகிறோம். பள்ளி ஆசிரியர்களைப் பற்றி எவ்வளவோ பேசலாம். பேசி என்னாகப் போகிறது. பள்ளிக் கல்வித்துறையின் மாவட்ட அளவிலிருக்கும் அலுவலர்கள் குட்டி ராஜாங்கத்தையே நடத்துகிறார்கள். யாராலும் மறுக்க முடியாது. அவர்கள் நினைத்தால் பள்ளி கல்வியை எவ்வளவோ மேம்படுத்தலாம். மாணவர் சமுதாயத்தை அடியோடு மாற்றலாம். அவர்களுக்கும் உலகப் பணக்காரர்களோடு போட்டிபோட வேண்டுமென்ற ஆசை இருக்காதா என்ன.. பெரும்பாலான நாமக்கல் வகைப் பள்ளிகளின் பங்குதாரர்களே, முதலாளிகளே, முன்னாள் இன்னாள் மாவட்ட, வட்ட கல்வி அதிகாரிகள்தான் என்பது கூடுதல் தகவல் நண்பர்களே.

என்னதான் நம்பிள்ளை அறிவாளியாக இருந்தாலும், பிராமணர்களின் புத்திசாலித்தனத்திற்கு ஈடாக முடியாதல்லவா? பிராமணர்கள்தானே கிரிக்கெட் அணியில் கோலோச்சுகிறார்கள். தலையில் குடுமிவைத்து ஆடும் பிராமணர்களைக் கவனித்துப் பார்த்திருக்கிறோமா தோழர்களே.

விளையாடுவதற்கு இந்த கம்பனிகள் வாரியிறைக்கும் பணத்தைக் கவனித்தீர்களா தோழர்களே. இரண்டு மாதம் விளையாட ஒரு விளையாட்டுக்காரருக்கு எத்தனை கோடிகள் கொடுக்கிறார்கள் பார்த்தீர்களா? நன்றாகப் படித்து, ஆராய்ச்சிகள் செய்து, அறிவைப் பெருக்கி, கடினமாக உழைத்து, இரவு பகல் பாராமல் பணியாற்றும் நம் இஸ்ரோ விஞ்ஞானிகளால் நினைத்துக்கூடப் பார்க்க முடியுமா ஒரு இருபது வயது கிரிக்கெட் இளைஞரின் சம்பளத்தை? பணமும்

புகழும் பெறுவதோடு இவர்களுக்குத்தான் நாட்டின் உயரிய விருதுகள், பத்ம விருதுகள் கொடுக்கப்படுகின்றன இல்லையா.

நாம் எங்கே போகிறோம் நண்பர்களே. விளையாடுவதற்கு பணமா? அதுவும் இவ்வளவு பணமா? இவ்வளவு விளம்பரமா? இவ்வளவு புகழா? இவ்வளவு பரிசுகளா? பன்னாட்டு பதக்கம் வாங்கினால் ஒரு கோடியாமே. வெள்ளி என்றால் ஐம்பது இலக்கமாமே. இது தகுமா தோழர்களே. உழைப்பாளிகளுக்கு, பேராசிரியர்களுக்கு, அறிஞர்களுக்கு சமூகம் கொடுக்கும் ஊதியம் என்ன. மதிப்பு என்ன. வாழ்க்கைத் தரமென்ன.. வாழ்க்கை முழுதும் விளையாடித் திரியும் விளையாட்டுக்காரர்களுக்கு சமூகம் கொடுக்கும் மதிப்பென்ன.

என்றைக்கு பிராமணர்கள் காசு பணமே பெரிதென்று ஓட ஆரம்பித்தார்களோ அன்றைக்கே இந்திய ஞானம் தடம் மாறிவிட்டது. எப்போது நிலமும் வருமானமுமே பெரிது என பிள்ளைமார் நினைக்க ஆரம்பித்தார்களோ அப்போதே தமிழர் அறிவும் படுத்துவிட்டது.

தொலைத்த இந்திய ஞானத்தின் சிறப்பையும் இழந்த தமிழர் அறிவின் பெருமையையும் மீட்டெடுக்க முடியுமா தோழர்களே.. எமது அறிவுக்கு எட்டிய வரை பிராமணரும், பிள்ளைமாரும் முழுதாக மாறிவிட்டார்கள். பணத்தின் பின்னும், பதவியின் பின்னும், நிலம், நகை, வணிகம், சொத்து, சுகம் என வெகுதூரம் ஓடிவிட்டார்கள். வெகுவாக மாறிவிட்டார்கள். அவர்களால் இழந்தவற்றை மீட்டெடுக்க முடியும் என்பது ஐயமே. அவர்கள் எதையெல்லாம் இழந்தார்கள் என்பதை அறிந்ததாகவே தெரியவில்லை. அறிந்தால் பிராமணர்கள் சூதாட்டக் கிரிக்கெட்டை இந்தளவுக்குக் கொண்டாடுவார்களா? பத்தி பத்தியாகப் புகழ்ந்து எழுதுவார்களா? கிராமங்களில் குத்தாட்டம் போடக் கூடாதாம். ஆடக் கூடாதாம். பாடக் கூடாதாம். நீதிமன்றங்கள் தடை ஆணை பிறப்பிக்கின்றன. கிரிக்கெட்டில் ஆடுவதெல்லாம் தவறாகத் தெரிவதில்லை. போட்டிருக்கும் உள்ளாடை அப்பட்டமாகத் தெரிய குதித்தும், சுழன்றும், குனிந்தும், வளைந்தும் ஆட்டமாக ஆடுகிறார்கள். வெளிநாட்டுப் பெண்களென்றால் எப்படி வேண்டுமென்றாலும் ஆட வைக்கலாம் போல. ஆட்டத்தைப் பார்க்கும் ஒரு வளரினம் பையனின் மனநிலை எப்படி இருக்கும்? பூங்காவில், சாலையோரங்களில், உணவகங்களில் பேசிக்கொண்டிருக்கும் அல்லது அவர்களது வார்த்தைகளின் படியே, உரசிக் கொண்டிருக்கும் ஆணையும் பெண்ணையும் தாலிகட்டச் சொல்லி தாலிக் கயிறோடு

வந்து நிற்கும் நாட்டின் கலாச்சாரக் காவலர்கள், ஐபில் போட்டிகள் நடக்கும் பிரம்மாண்ட மைதானங்களுக்கு முன் சியர்ஸ்கேர்ஸ் நாட்டின் கலாச்சார சீரழிவு என எங்காவது போராட்டம் நடத்தியதாக பதியப்பட்டிருக்கிறதா நட்புகளே?

மாதம் ஒன்றுக்கு ஒன்றரை இலக்க உரூபா ஊதியம் வாங்கும் பேராசிரியர், விலையில்லா அரிசி வாங்குவதை பார்த்திருக்கிறீர்களா தோழர்களே. மாதாமாதம் வாங்கி அறை முழுக்க அடைத்து வைக்கிறார். மொத்தமாக கிலோ பத்து ரூபாய் என விற்கிறார். உண்மைதான் நண்பர்களே. விலையில்லாமல் அரசிடமிருந்து அரிசி வாங்கி, அதை விலை வைத்து வெளியில் விற்கும் இவரைப் போன்றவர்களெல்லாம் பெரும் பேராசிரியர்களாக இருப்பதால்தான் சமூகம் இந்த நிலையில் இருக்கிறது. விலையில்லா தொலைக்காட்சி வாங்கிய பேராசிரியர்களும் பெரும் எண்ணிக்கையில் உள்ளனர். அரசு எளியவர்களுக்காகக் கொடுக்கும் நூறு உரூபா பொங்கல் பணத்தையும் ஒரு துண்டு கரும்பையும் வாங்கும் பேராசிரியர்களும் ஏகப்பட்ட பேர்.

வாங்காவிட்டால் நாம் வாங்கியதாக கடை ஊழியர் கணக்குக் காட்டப் போகிறார், நாம் வாங்கி விட வேண்டியது நல்லது என்கிறார் பேராசிரியர். அதுவும் உண்மைதான். நாங்கள் எண்ணெய், அரிசி, வாங்குவதில்லை. எமது அலைபேசிக்கு வாங்கியதாகக் குறுஞ்செய்தி வந்துகொண்டே இருக்கிறது. கடையில் சர்க்கரை மட்டும் வாங்குகிறோம். கடைக்காரரோ எண்ணெய் அரிசி வாங்கியதாகப் பதிகிறார். அட்டையைப் பார்த்து சத்தம் போட்டால் இனிமேல் அப்படி பதிய மாட்டோம் என்கிறார். இப்படி எத்தனை அட்டைகளில் பதிகிறார்களோ.

அரிசியை மூட்டையாக விற்கிறார்கள். ஆட்டோக்களில் வந்து ஏற்றிச் செல்கிறார்கள். பருப்பும், சர்க்கரையும், உளுந்தும் மளிகைக் கடைக்காரர்கள் வாங்குகிறார்கள். எவ்வித வெட்கமும் இல்லாமல் ரேசன் கடையில் வாங்கிய பருப்பை கடைக்காரர்கள் விற்கிறார்கள். விலையில்லாமல் அரசு கொடுக்கும் அரிசியை வடக்கத்திய தொழிலாளர்களுக்கு விற்கிறார்கள். அவர்களும் கூட்டமாக வந்து ஆளுக்கொரு சாக்கு வாங்கி தலையில் சுமந்து செல்கிறார்கள்.

கடைகளில் விற்கும் இட்லி தோசைமாவெல்லாம் ரேசன் அரிசியில் ஆட்டியதாகச் சொல்கிறார்கள். விலையில்லா அரிசியை கிலோ பத்துக்கு வாங்கி, அரைத்து மாவாக்கி லிட்டர் முப்பது, நாற்பதுக்கு விற்கிறார்கள். ரேஷன் அரிசியைக் கடத்தி விற்பது நல்ல லாபகரமான தொழிலாக மாறிவிட்டதுதானே. செய்தித்

தாள்களில் படிக்கிறோமல்லவா? இரயில்களில், பேருந்துகளில், லாரிகளில் கடத்தி விற்கிறார்கள். கேரளாவுக்கு கடத்தினால் பெருத்த லாபம் எனச் செய்திகள் சுட்டுகின்றன.

சொந்த மண்ணில் நெல் விளைவிக்க லாயக்கில்லாத அரசு, சொந்தமாக நிலத்திற்கு வக்கில்லாத அரசு, வெளிமாநிலங்களில் இருந்து விலைக்கு அரிசி வாங்கி, விலையில்லாமல் கொடுக்கிறது. அந்த அரிசி திருட்டுத்தனமாக ஊரெங்கும் விலைக்கு விற்கப்படுகிறது. மத்திய அரசு மானிய விலையில் ரேசன் அரிசி கொடுக்கிறதாம். சரி, கல்லா நிறையப் பணம் வைத்துக் கொண்டாவது அரசு, விலைக்கு வாங்கி விலையில்லாமல் வழங்குகிறதா என்றால் அதுவும் இல்லை. திறமையாகப் பணம் சம்பாதித்து, வரி வசூல் செய்து, பேருந்துக் கட்டணத்தை உயர்த்தி, நில விற்பனை வரியைக் கூட்டி, கடலில் மீன் பிடித்து விற்றுக் காசாக்கி, தங்கத்தைத் தோண்டியெடுத்து விற்று முதலாக்கி, இரும்புத் தாதுவை வெட்டியெடுத்து இரும்புக் கம்பியாக்கி, அதை விற்று வரும் வருமானத்தில், விலையில்லா அரிசியை வாங்கி மக்கள் வயிறுகளை வளர்க்கிறது என்றாலும் பரவாயில்லை. வெட்கங்கெட்ட அரசு, வெளியில் வட்டிக்கு வாங்கி, அந்தப் பணத்தில் விலையில்லா அரிசி வாங்குகிறது. இப்படி வட்டிக்கு வாங்கி விலையில்லா அரிசி வாங்குவதற்கு, வட்டிக்கு வாங்கி கண்மாயைத் தூர் வாருவதற்கு, வட்டிக்கு வாங்கி பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு, வட்டிக்கு வாங்கி பிறக்கும் குழந்தைக்கு பரிசுப் பெட்டி கொடுப்பதற்கு முதன்மையான அமைச்சர், ஏகப்பட்ட அமைச்சர்கள், தலைமையான அதிகாரி, ஆட்சிபணி அறிவு ஜீவிகள், அலோசகர்கள், நிபுணர்கள், அவர்கள் இவர்கள் எனப் பெரும் பட்டாளம் வேலை செய்கிறது.

உலக வங்கியிடம் வட்டிக்கு வாங்கி அந்தப் பணத்தில்தான் கிராமத்தின் சாலை போடுகிறோம் எனச் சொன்னால் மக்களே சாலை வேண்டாம் எனச் சொல்லிவிடுவார்கள். ஆசியன் வளர்ச்சி வங்கியில் வட்டிக்கு வாங்கித்தான் உங்கள் ஊர்க் குளத்தை தூர் வாறுகிறோம் என்று சொன்னால், போய்ட்டு வாங்கய்யா, நாங்களே தூர்வாறிக் கொள்கிறோம் என்றிருப்பார்கள். பரவாயில்லையே கடன் வாங்கி தூர் வாறுகிறார்களே எனப் பாராட்டும் ஒவ்வரிடமும், நாளைக்கு வட்டியோடு சேர்த்து அசலையும் அவர்கள்தான் கட்ட வேண்டும் என அரசு சொல்லுமேயானால், அவர்களும் தூர்வாற வேண்டாம் என்பார்கள் என்பது நிச்சயம்.

மக்கள் வறுமையில் இருந்தபோதெல்லாம் கடன் வாங்கி வறுமையை விரட்டாத அரசு, ஓரளவிற்கு வசதி வாய்ப்புகள் பெற்றுவிட்ட மக்களுக்கு இலவச அரிசி வழங்குகிறது. வரிப்பணத்தில், வட்டிக்கு வாங்கி வழங்கப்படும் அரிசியை, யார் யாரோ கொள்ளையடிக்கிறார்கள். எல்லாம் அரசியல்.. எல்லாவற்றிலும் அரசியல்.. எப்போதும் அரசியல்.. நீர் ஒரு ரூபாய்க்குக் கொடுக்கிறீரா, ஓசியாகவே கொடுக்கிறோம் பார். உழவருக்கான சந்தையா திறக்கிறாய். மூடுகிறோம் பார்த்துக் கொள். தலைமைச் செயலகமா கட்டுகிறாய். எம்மைக் கட்ட விட்டாயா. உமது தலைமைச் செயலகத்தை உண்டு இல்லை எனப் பண்ணுகிறோமா இல்லையா பார். மூடிக் காட்டுகிறோமா இல்லையா பார். கோர்ட் கிடக்கிறது. மருத்துவமனையாக்குங்கள். அது வந்து.. நாங்க சொல்றது என்னன்னா.. அதாவது நாங்க சொல்றவ்றது என்னான்னா.. ஐநூறு கோடி கொட்டி கட்டப்பட்ட அரசுக்கு சொந்தமான தலைமைச் செயலகத்தை உயர்தர மருத்துவமனையாக்கும் அரசின் கொள்கை முடிவில் கோர்ட் தலையிடாது.

அரசியல்வாதிகளே, அரசியலாளர்களே, ஆட்சியாளர்களே, ஆட்சிக்கு துணை போகிறவர்களே, அதிகாரவர்க்கங்களே, கோர்ட்டில் இருக்கும் நீதிதேவதை வேண்டுமானால் கண்ணை கட்டிக்கொண்டிருக்கலாம். நீதியின் கண்களைக் கட்ட முடியாது என்பதை நீவிர் அறிந்ததில்லையா. மண்ணீல் நீதியும், நேர்மையும், தர்மமும், அறமும் இல்லை என முடிவெடுத்துவிட்டீரா. தருமதேவன் என்றேனும் ஓர் நாள் கண்ணைத் திறப்பான் என்பதை அறித்திருக்கவில்லையா.

கோடிகோடியாகப் போட்டுக் கட்டிய தலைமைச் செயலகத்தை மருத்துவமனையாக்கியது ஏன்? அரசியல் பகைதானா? மக்களுக்கு யார் அதிக நன்மை செய்கிறவர் என்பதுதானே அரசியல். அதில் வருவதுதானே அரசியல் பகை. அவர் ஆட்சி சரியில்லை, யாம் நன்றாக ஆட்சி செய்கிறோம், எம்மைத் தேர்ந்தெடுத்து முதல்வராக்குங்கள் என்பதுதானே அரசியல் மக்களே.. இந்தத் திட்டம் சரியானதா இல்லையா, இன்னின்ன குறைகள் இருக்கின்றன, இப்படிச் செய்யலாம், இதைச் செய்ய வேண்டியதே இல்லை எனச் சுட்டிக் காட்டுவதுதானே எதிர்க்கட்சி அரசியல். சொந்தப் பகையும், குடும்பப் பகையும், சாதிப் பகையும் காட்டுவதற்கு தமிழ்நாடு என்ன உங்கள் வீட்டுச் சொத்தா? மக்கள் அமைதியாக இருந்தால், செய்யும் அத்தனைக்கும் மக்கள் ஒப்புதல் கொடுத்துவிட்டார்கள் என அர்த்தமா அரசியல்வாதிகளே.

நூலகத்தை விட்டு வைத்திருக்கலாம் ஆட்சியாளர்களே. எந்த அமைச்சராலும், செயலாளர்களாலும் எடுத்துச் சொல்ல முடியவில்லை போலும். இடித்துச் சொல்லும் ஆட்கள் இல்லாத மன்னனைக் கெடுப்பதற்கு வேறு ஆட்களே வேண்டாமாம். தமிழின் முதுபெரும் அறிஞர் சொன்னது. மிகப் படித்த அறிவாளிகளான, மிக நீண்ட அனுபவங்கள் கொண்ட, ஆட்சிப் பணி அதிகாரிகளால், அரசியல்வாதிகளிடம் எதுவுமே சொல்ல முடியாதா? பேச முடியாதா? இப்படித்தான் அரசாங்கங்கள் நடைபெறுகிறதா? நான்கு இலக்கத்திற்கும்மேல் கடன் ஏறிக் கொண்டே போகிறதே என தலைமையான செயலாளர் எடுத்துச் சொல்ல மாட்டாரா? படிக்காதவர்கள் அரசியல்வாதிகள் ஆவார்கள், மனதால் சிந்திப்பவர்கள் அரசியல்வாதியாவார்கள், பெரிய அனுபவமும், போதிய திறமையும் இல்லாமல்கூட அரசியல்வாதியாக ஆவார்கள் என்பதை அறிந்துதானே, நம் முன்னோர், அரசியல்வாதிகளுக்கு இணையாக அவர்களைவிட சட்ட அதிகாரம் மிக்கதான அரசு அதிகாரிகள் வகுப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஏதேனும் ஒன்று நன்றாக இருக்கும்வரை, உருப்படியாக இயங்கும்வரை, மக்களாட்சி நன்முறையில் நடைபெறும் என்றல்லவா நம் பெருமை மிகு முன்னோர் நினைத்தனர். இருவரும் கூட்டணி சேர்ந்து கொள்வீர் என்பதை எப்படியோ ஊகித்து, மூன்றாவதாக நீதிமன்றம் என்றொரு அமைப்பையும் உருவாக்கிய அந்த மாமேதைகளின், மேலானவர்களின் கனவு முற்றிலும் சிதைந்துவிட்டதாகச் சொல்லிவிடலாமா அல்லது இன்னும் ஏதேனும் சிறு கீற்றலாக வெளிச்சம் தெரிகிறதா?

அரசியல்வாதிகள் சொல்வதற்கெல்லாம் அதிகாரிகள் தலையாட்டுகிறார்களா அல்லது அதிகாரிகள் சொல்வதற்கெல்லாம் அரசியல்வாதிகள் தலையாட்டுகிறார்களா நண்பர்களே. எமக்கென்னவோ அதிகாரிகளுக்குத்தான் அரசியல்வாதிகள் தலையாட்டுவதுபோல் தெரிகிறது.

கிராமத்தில் ஐந்தாவது படித்துவிட்டு ஊராட்சித் தலைவராகிறார் ஒருவர். வட்டச் செயலாளர் அவரது சாதிக்காரர் என்பதால் நெருக்கம் கூடுகிறது. மாவட்டத்தோடு எப்படியோ பழக்கமாகி விடுகிறார். அடுத்த தேர்தலுக்குள்ளேயே காண்ட்ராக்ட், மாமுல், ஒயின் ஷாப் ஏலம், வசூல் வேட்டை, நிலத்தை வளைத்துப் போட்டது, குத்தகை எடுத்தது, கட்டப்பஞ்சாயத்து பேசியதில் வந்த வருமானம் என கோடிகளில் குவித்து விடுகிறார். தேர்தலுக்கு சீட் கேட்டு விண்ணப்பிக்கிறார். மாவட்டச் செயலாளரும், சொல்பேச்சை மீறமாட்டார் என நினைத்து பரிந்துரை

செய்கிறார். ஊராட்சித் தலைவர், அல்லது அடுத்த தேர்தலுக்குள்ளாகவே கழக ஒன்றியச் செயளராகி விட்ட கிராமத்துக்காரருக்கு, எம்.எல்.ஏ. சீட் கொடுக்கப்படுகிறது. சாதிபலம், பணபலம், கூட்டணிச் செல்வாக்கு என எம்.எல்.எ. ஆகிவிட்டவருக்கு, பெரிய அதிஷ்டமாக அமைச்சர் பதவியே கிடைத்து விடுகிறது. உதாரணமாக, தகவல் தொழில்நுட்ப அமைச்சர் பதவி என்றே வைத்துக் கொள்வோம். நமது மாண்புமிகு அமைச்சருக்கு, திடீரென்று உச்சாணிக் கொப்பில் ஏற்றி உட்கார வைக்கப்பட்ட அமைச்சருக்கு, கிராமத்தில் ஒன்றிய அளவில் கட்சியில் இணைந்திருந்த அமைச்சருக்கு, ஆட்சி, அதிகாரம், அரசியலமைப்பு, நிதி, நிர்வாகம், தமிழக வரலாறு, புவியியல், பண்பாடு குறித்து பெரிதாக ஒன்றும் அறியாத அமைச்சருக்கு, மக்கள் வாழ்க்கைமுறை, விருப்பங்கள், தேவைகள் குறித்து பெரிதாக சிந்திக்காத அமைச்சருக்கு, ஒதுக்கப்பட்ட துறை குறித்து புரிதல் இல்லாத அமைச்சருக்கு, ஆட்சிப்பணி அதிகாரியின் தேவை எவ்வளவு இருக்கும்? உண்மையில் அதிகாரம் செலுத்தப் போவது அமைச்சரா, அதிகாரியா? ஏகப்பட்ட எம்.எல்.ஏக்கள் இருந்தாலும், இந்த ஒன்றியச் செயலாளரை அமைச்சராக்கி அழகு பார்க்கும் முதன்மை அமைச்சரின் நோக்கம் என்னவாக இருக்கும்? குப்பையில் கிடந்தவரை கோபுரத்தில் உயர்த்திய முதன்மை அமைச்சருக்கு, துறை அமைச்சர் ஏதேனும் கருத்துச் சொல்ல முடியுமா? இப்படிச் செய்யலாமே என்றோ இப்படிச் செய்தால் நன்றாக இருக்குமென்றோ ஒரு வார்த்தை பேசிவிட முடியுமா? பேசிவிட்டுத்தான் பதவியில் இருக்க முடியுமா?

ஆளும் வர்க்கம் அது பாட்டுக்கு கொள்ளையில் திளைக்கிறது. அதிகார வர்க்கம் அது இஷ்டத்துக்கு ஊழலில் மிதக்கிறது. எதிலெல்லாம் கூட்டுச்சேர வேண்டுமோ, அதிலெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து சுரண்டுகிறது. இரண்டும் கூட்டணிபோட்டுக் கொள்ளையடிப்பதை கோர்ட்டால் தடுக்க முடியுமா? அல்லது ஆளுநர் அலுவலகம்தான் தடுத்துவிட முடியுமா?

அரசியல்வாதிகள் - அதிகாரிகள் கூட்டு பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் எழுதலாம். எழுதித் தீராது. மணல் கொள்ளையாகட்டும், கனிமவளக் கொள்ளையாகட்டும், மருத்துவக் கொள்ளையாகட்டும், அனைத்து ஒப்பந்தங்களும் அரசியல்-அதிகாரக் கூட்டுக்கே ஒதுக்கப்படுவது கண்கூடு.

மணலை வைத்து எவ்வளவு சுரண்டிவிட்டார்கள்? எவ்வளவு ஊழல்? எத்தனை கருப்புப் பணம்? எல்லாம் இருவரின் கைங்கர்யம். மணலை அள்ளச் சட்டமியற்றுபவர்

அரசியல்வாதி. மணலை அள்ளுபவர் அரசியல்வாதி. கண்டும் காணாமல் இருப்பவர் அதிகாரி. மணல் அள்ளும் இயந்திரம் வைத்திருப்பவர் அரசியல்வாதி. அதிகாரிக்கும் உண்டு. அரசியல்வாதி 500 மணல் லாரிகள் வைத்திருந்தால், அதிகாரி 200 லாரிகள் வைத்திருக்கிறார். முறைகேடாக மணல் அள்ளுவதை யார் கண்காணிப்பது? யார் தடுப்பது? யார் தட்டிக் கேட்பது? அரசியல்வாதியை அதிகாரியால் கேட்க முடியும். அதிகாரியை அரசியல்வாதியால் கேட்க முடியும். இருவரும் கூட்டணி போட்டுக் கொண்டால் யார் தட்டிக் கேட்பது? தட்டிக் கேட்கும் ஓரிரு நல்ல அலுவலர்களையும் காவலர்களையும் லாரி ஏற்றிக் கொல்கிறார்கள். தட்டிக் கேட்கும் மக்களை தடியடி நடத்தி விரட்டுகிறார்கள். ஒருவரையே எதிர்க்க முடியாத மக்கள் இருவரையும் எவ்வாறு தட்டிக் கேட்பது? கொள்ளையடிக்காவிட்டால், முறைகேடாக ஒப்பந்தம் பெறவிட்டால், வட்டச் செயலரான ஒரு மாதத்திற்குள் எப்படி கப்பல் போன்ற காரில் பறக்க முடியும்? ஒரு வருடத்திற்குள் எப்படி நகரில் பங்களா கட்ட முடியும்?

காவிரி நதி எப்படி இருக்கிறதென்று பார்த்தீர்களா நண்பர்களே. கொஞ்சம்கூட முறையற்ற மணல் கொள்ளை. காவிரி மட்டுமா. சிற்றோடையைக்கூட விட்டு வைக்கவில்லை. இயற்கையில் கிடைக்கும் மணலை யூனிட் நானூறு, ஐந்நூறுக்கு வாங்கி, நான்காயிரம் ஐந்தாயிரம் என விற்கும் கொடுமையை என்னவென்று சொல்வது. கேரளாவுக்குக் கடத்தினால் இன்னும் பலமடங்கு லாபம். கடத்துகிறார்கள் தானே. அரசியல்வாதி, அதிகாரி, காவல்துறை கூட்டு இல்லாமல் கடத்த முடியுமா தோழர்களே. எல்லோருக்கும் பங்கு. பெட்டி பெட்டியாகப் பணம். இலக்க இலக்கமாகப் பணம் கொடுத்து பதவிக்கு வரும் மூவரும் போட்ட பணத்தை எடுக்கத்தானே செய்வார்கள்? மக்களே எல்லாவற்றையும் கண்காணிக்க முடியுமா? எத்தனை துறைகளைக் கண்காணிப்பது? எவ்வளவு திருடர்களைக் கண்காணிப்பது? வேலியே பயிரை மேய்ந்த கதைதான்.

எங்க காவிரியை பாழ்படுத்தி விட்டார்களே என எமது தோழி கண்ணீர் உகுக்கிறார். ஆற்றாமையும், கோபமும் கண்ணீராய்ப் பொங்கி வெளிப்படுகிறது. எமக்கும்கூட காவரி அன்னையைப் பார்க்கும்போது மனம் பதறுகிறது. யாமும் சிறுவயதில் காவிரித் தண்ணியைக் குடித்து வளர்ந்தவனல்லவா? தண்ணீரும் தாயும் ஒன்றென்பது தமிழர் பண்பாடாமே. நம் அன்னை மறுபடியும் சீரோடும் சிறப்போடும் எழிலோடும் மணல் நிறைந்தும் நுரை பொங்கியும் பாய்ந்தோடி

வரவேண்டுமென வேண்டிக் கொள்கிறோம். எளியோரால் வேறென்ன செய்ய இயலும்?

அரசியல்வாதி எனில் ஒரே சட்டத்தில் மணல் அள்ளுவதைத் தடுத்திட முடியும். சட்டம் போட்டால், கட்சிக்காரர்கள் பணம் சம்பாதிப்பது எப்படி? கட்சிப் பணி ஆற்றுவது எப்படி? விண்ணப்பத்தை பத்தாயிரத்துக்கு வாங்குவது எப்படி? மாநாடுகளுக்கு ஆளுக்கு நூறு வண்டிகளில் ஆட்களை ஏற்றி வருவது எப்படி? குவாட்டரும் பிரியாணியும் கொடுப்பது எப்படி? கோடிகளில் கட்சி நிதி கொடுப்பது எப்படி? தேர்தலுக்கு செலவழிப்பது எப்படி? தலைவர் பிறந்த நாளுக்குப் பரிசளிப்பது எப்படி? அத்தனை எப்படிகளுக்கும் கற்பக விருட்சம் மணலும், மலையுமல்லவா.

அனைத்து அரசு ஒப்பந்தங்களையும் அவரவர் கட்சிக்காரர்களுக்கே கொடுக்க வேண்டுமென விதி எதுவும் இருக்கிறதா நண்பர்களே. ஒப்பந்தங்களை வாங்கிக் கொண்டு, பெயருக்கு பணிகள் செய்துவிட்டு, பணத்தைச் சுருட்டிக் கொண்டால் கட்சிக்கு பெயர் கெடதா? அரசியல்வாதிகள் மிகவும் தெளிவானவர்கள் நண்பர்களே. அதிபுத்திசாலிகள். பணம் கொடுத்தால் ஓட்டுப் போடப் போகிறார்கள் மக்கள். ஊழல் அரசியல்வாதியே மறுபடியும் ஆட்சி அதிகாரத்திற்கு வரப் போகிறார்.

இந்தியாவிற்கு, ஏன் உலகிற்கே ஓட்டுக்குப் பணம் கொடுப்பதில் தமிழகம்தான் முன்னுதாரணம் அல்லவா? நாளை எந்த முகத்தை வைத்துக் கொண்டு எங்கள் மொழி உலகப் பொதுமொழி என்பீர், எங்கள் பண்பாடு உலகத்திற்கே பொதுவானது என்பீர், எங்கள் பண்பாடுதான் முன்னர் உலகம் முழுதும் பரவியிருந்தது என்பீர்? அட வெட்கங்கெட்ட தமிழர்களா, பணம் வாங்கிக் கொண்டு ஊழல் அரசியல்வாதிக்கு ஓட்டுப்போட்ட உங்கள் பண்பாடா உலகில் சிறந்தது என விபரமறிந்த உலகத்தவர் கேட்பாரா மாட்டாரா? கேட்கத்தான் போகிறார். தமிழர் என்றொரு இனமுண்டு, தனியே அதற்கொரு குணமுண்டு எனப் பெருமை பொங்கப் பாடிய நம்பிள்ளை, உலகத்தவர் முன்னால் தலைகுனிந்து, வெட்கி, நிற்கத்தான் போகிறார்.

எவரெவரோ ஓட்டுக்குத் துட்டு வாங்குவதற்கு நம்பிள்ளை எதற்கு தலைகுனிய வேண்டும் என்கிறீர்களா நண்பர்களே. நம் பிள்ளைதான் பொறுப்பேற்க வேண்டும். நம் பிள்ளை நினைத்திருந்தால் ஓட்டுக்குத் துட்டைத் தடுத்திருக்கலாம். தமிழ்நாட்டைத் திருத்தியிருக்கலாம். தமிழகத்தில் நடந்த அத்தனை

கொள்ளைகளுக்கும் பிள்ளையும் உடந்தை. பிள்ளையே முழுப்பொறுப்பை ஏற்க வேண்டி வரும். தமிழ்ப் பிள்ளைகளில் நம் பிள்ளைதானே அறிவானவர். நம் பிள்ளைதானே புத்திசாலி. நம் பிள்ளை நினைத்திருந்தால், மனது வைத்திருந்தால், காவிரியை பாலைபோல் மாற்றியிருக்க முடியுமா? நம்பிள்ளைதானே அரசியல்வாதியாக இருந்தார், அதிகாரியாக இருந்தார், காவல் அதிகாரியாக இருந்தார். தாசில்தார் பிள்ளை. துணைக் கலெக்டர் பிள்ளை, மாவட்ட வருவாய் பிள்ளை, கலெக்டர் நம்பிள்ளை, செயலாளர் நம்பிள்ளை, தலைமையான செயலாளரும் நம்பிள்ளைதான். முதல்வராக இருந்ததும் பிள்ளைதானே நண்பர்களே. வேளாளரும் பிள்ளையும் ஒன்றுதானே. வேளாளரும் வெள்ளாளரும் ஒன்றுதானே. வெள்ளாளரும் முதலியாரும் ஒன்றுதானே. ஒரு பேராசிரியருக்கு இதுகூடவா தெரியாது. பிள்ளைகள் பெரும் ஒப்பந்ததாரர்களாக, பெரு வணிகர்களாக, மாபெரும் பணக்காரர்களாக மாறத் துணைபுரிந்ததும் முதல் பிள்ளையல்லவா? எப்போதிலிருந்து யாருடைய ஆட்சிக்காலத்திலிருந்து நம் பிள்ளைகள், மாபெரும் காண்ட்ராக்ட்காரர்களாக மாறினார்கள்? அரசே, அதன் அதிகாரிகளை வைத்து கட்டிடங்களை எழுப்பிய முறையை, அமைப்பை மாற்றி, அனைத்தையும் ஒப்பந்ததாரர்களிடம் விட்டுவிடும் நிலையை உருவாக்கியது யார்? யாருடைய ஆட்சி காலத்தில்?

தேவர்களும், கவுண்டர்களும் அரசியலில் செல்வாக்குப் பெறுவதற்கு முன்புவரை, தமிழக அரசியலில் அனைத்து நிலைகளிலும் முன்னணியில் இருந்தது நம் பிள்ளைகள்தானே. பிள்ளை என்றால் முதலியும் சேர்த்துதான் தோழர்களே. மறந்துவிட வேண்டாம். அம்மையாரின் முதல் ஆட்சிக்காலம்வரை, பிள்ளைகள்தானே பெருமளவில் அமைச்சர்களாக, சட்டமன்ற உறுப்பினர்களாக, தலைவர்களாக, முக்கியமான கட்சி, ஆட்சிப் பணிகளில் அமர்ந்திருந்தார்கள். அரசியலில் மட்டுமா? சினிமாவிலும் நம் பிள்ளைகள் தானே. சினிமா கதாநாயர்கள் அத்தனை பேரும், அத்தனைக் கதாப்பாத்திரங்களும் நம் பிள்ளைகள்தானே. தமிழ்நாட்டில் அறுபதுகளிலும், எழுபதுகளிலும் எந்தச் சாதிக்காரர்கள் பேண்ட், சட்டை போட்டு, இன்பண்ணி, முழுக்காலணி போட்டு, கூலிங்கிளாஸ் மாட்டிக்கொண்டு திரிந்தார்கள்?

எம்ஜிஆர் காலம்வரை தமிழகத்தை ஆண்டது பிள்ளைகள்தானே. இப்போது எப்படி அனைத்துக் கட்சிகளிலும் தேவர்கள் நிறைந்திருக்கிறார்களோ, எல்லா அதிகாரங்களிலும் நுழைந்திருக்கிறார்களோ, எல்லா ஒப்பந்தங்களையும்

பெறுகிறார்களோ, அதுபோலவே தொன்னூறுகள்வரை, சொல்லப் போனால் இரண்டாயிரம் வரையிலும்கூட, தமிழகத்தின் அத்தனை துறைகளிலும் நிறைந்திருந்தவர்கள் பிள்ளைகளல்லவா. மறுக்க முடியுமா. பிள்ளைகளின் வாரிசுகள் படித்து அதிகாரிகளாகவும், வெளிநாட்டுக்காரர்களாகவும், பெரு வணிகர்களாகவும் மாறிய பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்தை, தேவர்கள் நிரப்பினார்கள் என்பதே வரலாறு. பிள்ளைகளின் பாதையிலேயே தேவர்களும் பயணிக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் ஆண்ட பரம்பரை என பிள்ளைகள் போட்டுக் கொள்வதே பொருத்தமானதாக இருக்கும். தமிழர்களுக்கும் பெருமையாக இருக்கும். பிள்ளைமார்களின் முகநூல்களும் ஆண்ட பரம்பரை எனவே காட்டுகின்றன. பிள்ளைகள் ஆண்ட பரம்பரை. தேவர்கள் ஆளும் பரம்பரை. ஆளப்போகும் பரம்பரை? அதற்குத்தான் அத்தனை சாதிக்காரர்களும் அலைபாய்கிறார்கள். ஆலாய்ப் பறக்கிறார்கள். முட்டி மோதுகிறார்கள்.

தேவர்களின் முகநூல் பதிவுகளெல்லாம் ஆச்சரியம் கொள்ள வைக்கின்றன. மூவேந்தர்களும் அவர்களாம். முடியுடைய அத்தனை மன்னர்களும் அவர்களாம். வேளிர்கள் அவர்களாம். முற்கால, இடைக்கால, நவீன கால, தற்கால, வருங்கால அத்தனை மன்னர்களும் தேவர் சாதிக்காரர்களாம். மறவர் எப்போது தேவரானார் என்பதை மட்டும் தெள்ளத்தெளிவாக விளக்கிவிட்டால், தகுந்த சான்றுகளோடு நிரூபித்துவிட்டால், தமிழர்கள் ஏற்றுக்கொள்வார்கள். நிரூபிக்க முடியுமா?

தேவர்களின் முகநூல் பதிவர்கள் பெரும்பாலும் இரண்டாயிரத்திற்குப்பின் பிறந்தவர்களாக இருப்பார்கள். தொன்னூறுகளில் பிறந்தவர்களும் இருப்பார்கள் எனவும் எடுத்துக்கொள்ளலாம். அவர்களுக்கு அவர்களது அப்பாக்கள், மாடி வீடுகளையும், சொகுசான கார்களையும், ஏராளமான நிலபுலன்களையும் வைத்திருப்பதைக் கண்டு, தேவர்களே ஆண்ட பரம்பரையென எண்ணுகிறார்கள். இளசுகள் அவர்களது அப்பாக்கள் இந்த நிலமைக்கு எப்படி வந்தார்கள் என்றும், தாத்தாக்கள் இருந்தால் அவர்கள் வாழ்ந்த காலத்தில் தேவர்கள் எப்படி வாழ்ந்தார்கள், எவ்வளவு வசதி வாய்ப்புகளோடு வாழ்ந்தார்கள் என்பதையும் கேட்டுப் பார்த்துவிட்டு முகநூல்களில் பதிவிடுவது சாலச் சிறந்ததாக இருக்கும்.

அவர்கள் சிறுவர்கள் என்றுதான் கூற வேண்டும். சிறார்கள், பள்ளி சிறுவர்கள், கல்லூரி மாணவர்கள், பிற சாதிக்காரர்கள் மேல் கக்கும், வெளிப்படுத்தும் எதிர்ப்பும்,

சொல்லாடல்களும், வன்முறைப் பேச்சுக்களும், வசவுகளும் சகிக்க முடியாதவை. நாகரீகமான சமுதாய அமைப்புக்கு ஏற்பற்றவை. கண்டிக்கத் தக்கவை.

தமிழகத்தில் வேறு எந்தச் சாதிக்காரராவது ஆண்ட பரம்பரை என முக நூல் பதிவிட்டால் தேவா்களால் தாங்கவே முடியவில்லை. பொறுக்கவே முடியவில்லை. முகநூல் பதிவுகளும் பின்னூட்டங்களுமே சாட்சி. சிறுவா்கள், பெரிதாக அரசியல், சமூக அமைப்பு அறியாதவா்கள்தான் இப்படிப் பேசுகிறாா்கள், பதிவிடுகிறாா்கள் என்றால், சினிமா பிரபலங்களின், அரசியல் கட்சிக்காரா்களின், சாதியமைப்புத் தலைவா்களின் பேச்சுக்களும், நடவடிக்கைகளும் இளசுகளைத் தூண்டி விடுவதாகவே இருக்கிறது. தமிழகத்தில் நாம்தான் ஆண்ட பரம்பரை, நாம் மட்டுமே ஆண்ட பரம்பரை, நாம் மட்டுமே வீரத்தமிழா்கள், நம்மை விட்டால் தமிழகத்தை ஆள வேறுஆளே இல்லை, நமக்கு மட்டுமே அந்தத் தகுதி இருக்கிறது, நாம் மட்டுமே தமிழகத்தை ஆளப் பிறந்தவா்கள், நமக்கே அந்த உரிமை கொடுக்கப்பட்டுள்ளது, நாமே மூவேந்தா்களின் வாரிசுகள் எனத் தேவா்கள் நினைத்துக்கொள்கிறாா்கள் போலும்.

மறவரும் கள்ளரும் அகமுடையாரும் எப்படி முக்குலமானாா்கள்? எப்போதிலிருந்து முக்குலமாக இருக்கிறாா்கள்? மூன்றும் ஒரே சாதியா? மூன்றும் ஒன்றாக இணைந்து விட்டதா? அகமுடையாா் மறவரை ஏற்றுக் கொண்டு விட்டாரா? கள்ளா் அகமுடையாரோடு ஒன்றாகி விட்டாரா? மறவரின் குலதெய்வம் யாா்? அகமுடையாரின் குல தெய்வம் யாா்? கள்ளரின் சாமி யாா்?

முக்குலத்தை சோ்ந்த தேவா் இன போா்படை குரூப்ஸ்.

நாங்க தேவமாரு, அதனால ஊருக்குள்ள நாங்க தாறுமாறு.

எவன் எங்கல எதிா்த்தாலும் வெட்டாம விட மாட்டோம் தேவன்டா..

அருமை பிரதா்ஸ், நம்மதான் தமிழ்நாட்டை ஆள்வோம், செமபுரோ, செம மாஸ், தேவா் இனத்தின் வருங்கால சிங்கங்கள், தேவா் திமிரு, அருமை அருமை, நைஸ் புரோ, செம பங்கு, வெரி வெரி நைஸ்யா, செம சூப்பா்.

ஐந்து இளம் சிங்கங்கள், இன்னும் மீசைமுளைக்காத தேவா் வீட்டு சிங்கங்கள், கைகளில் அருவாள் பிடித்துக் கொண்டு எடுத்த போட்டோவை முகநூலில் போட்டு, மேலே சொன்ன வாசகங்களைப் பதிவிட்டிருக்கிறாா்கள். அதற்கான பின்னூட்டங்கள் ஏராளம். அருவாள்கள் போட்ட படங்கள் உள்ளன.

முகநூல் கள்ளர் மறவர் அகமுடையார் என வைக்கப்பட்டுள்ளது. முகநூலின் இறுதியில் ஆபிசர்ஸ் சாய்ஸ் மதுபாட்டில் கப்போடு இருக்கும் படம் இடம்பெற்றுள்ளது. 4972 பேர் நண்பர்களாக இருக்கிறார்கள்.

ஒரு பானைக்கு ஒருசோறு போதுமல்லவா நண்பர்களே. தேவன்டா, கள்ளன்டா, மறவன்டா, அகமுடையான்டா என்றே பெரும்பாலான பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன. பெரிய பெரிய அருவாள்கள். சில முகநூல்களில் துப்பாக்கிகளும் இருக்கின்றன. பதிவிடப்பட்டுள்ள வசனங்கள் தனிரகம்.

தேவரின அனைத்து முகநூல்களிலும் அருவாள்கள் தெறிக்கின்றன. தேவர் என்பதிலும் அதன் பிரிவுகளிலும் அவ்வளவு பெருமை.

தமிழன், மனிதன் என ஒரு பதிவையும் காணோம். தேவர்கள் பக்கத்து தெருக்காரனை தமிழனாகவோ, மனிதனாகவோ மதிக்காதவர்கள் என்பதும் வரலாறுதானே. மற்ற சமூகத்தவரை தமிழர்கள் என்றோ, சக மனிதர்கள் என்றோ என்றைக்கு தேவரினம் மதித்திருக்கிறது. தேவரினம்தானே சக மனிதனை தெருவுக்குள் வாகனத்தில் ஏறிப் போகக் கூடாது என்கிறது. தேவரினம்தானே பள்ளியில் படிக்கும் மாணவனை செருப்பை தலையில் தூக்கிவைத்து கொண்டு போடா என அடிக்கிறது. பெரும்பாலான தேவரின முகநூல் பதிவர்கள் கல்லூரியில் படிப்பதாகவோ, படித்து முடித்துவிட்டதாகவோ குறிப்பிடுகின்றன. குறைந்தபட்சம் பள்ளிக்கூடப் படிப்பாவது இல்லாமல் முகநூலில் பதிவுகளோ பின்னூட்டங்கள் இடவோ, எழுதவோ இயலாதல்லவா? நிறையப் பதிவுகள் பள்ளிக்கூட சீருடைகளில் இருக்கின்றன. அதிலேயும் தேவர் குரூப்ஸ், தேவர் பாய்ஸ், அருவா பாய்ஸ் என்றே பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த முகநூல் பள்ளி, கல்லூரி மாணவர்கள்தானே தமிழகத்தின் நாளைய காவல் துறையினர், அரசு அலுவலர்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள், ஆசிரியப் பெருமக்கள். மனதிற்குள் இந்த அளவு வன்மத்தை வைத்திருக்கும் தேவரின பட்டதாரிகள், நாளைக்கு அதிகாரியாகவோ, அரசியல்வாதியாகவோ ஆகும் பட்சத்தில் எப்படி நடந்து கொள்வார்கள்? எடுக்கும் முடிவுகள் எப்படி அனைவருக்குமானதாக இருக்கும்? நாளைக்கு ஆசிரியராகப் பணிபுரிந்தால், சாதி மதமில்லாத சமத்துவ சமுதாயத்தைப் படைப்பது பற்றி பேசுவரா அல்லது தேவரின வீரத்தைப் பற்றி பாடம் நடத்துவரா?

தமிழர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டியது தமிழகத்தில் எந்தத் தமிழரும் தமிழராய் இல்லை. முற்றிலும் உண்மை நண்பர்களே. ஒரு ஊருக்குள் வாழும் தமிழர்கள் தமிழராய் இணைந்து வாழ முடியவில்லை எனும்போது, தமிழர் எப்படி உலக மானுடரை மானுடராய் ஒன்றிணைக்கப் போகிறார்? கல்லூரியில் படிக்கும் மாணவர் இத்தனை அப்பட்டமான சாதிவெறியராய் இருந்தால், சாதியை வைத்தே பிழைப்பு நடத்தும் சாதிவெறியர்களுடைய மனம் எத்தனை வன்மமானதாக இருக்கும்? இன்னும் அருவாளை விட முடியவில்லையே, தமிழர் காட்டுமிராண்டிகள்தானே. தமிழரைத் திருத்துவதற்கு, வழிக்குக் கொண்டுவதற்கு தடி தேவைதானே.

மறவரும் கள்ளரும் தமிழகத்தை ஆண்டதாகச் சொல்லுவதில் உண்மையிருக்குமா? தற்போது மறவரும் கள்ளரும் அகமுடையாரும் எப்படி வாழ்கிறார்கள் என்பதை வைத்து, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எப்படி இருந்திருப்பார்கள் என்பதைக் கணிக்க முடியுமா? பக்கத்துத் தெரு தமிழரையே தமிழராக, குறைந்தபட்சம் மனிதராகக்கூட ஏற்றுக்கொள்ள முக்குலத்தவர் மனம் மறுக்கிறதே, இவர்கள் எப்படி மூவேந்தராய் தமிழகத்தை ஆண்டிருக்க முடியும்? அரசர்கள் நாட்டை ஆண்டிருக்க வேண்டும். நாட்டிலுள்ள மக்களை ஆண்டிருக்க வேண்டும். தற்போது தமிழ்நாட்டிலுள்ள எந்தத் தமிழருமே தமிழரோ, மனிதரோ இல்லையெனும்போது, தேவரினத்தவர் எந்தத் தமிழரை ஆண்டிருப்பார்?

இந்த நவீன அறிவியல் காலத்திலும் எதற்கெடுத்தாலும் அருவாளைத் தூக்கும் தேவரினம், அருவாள் எடுப்பதையே பெருமையாக நினைக்கும் தேவரினம், மூவேந்தராய் நாட்டை ஆண்டிருக்க முடியுமா? ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மூவேந்தர் மரபு பண்பட்டதாக இருந்தது உண்மையா?

மூவேந்தர்கள் காலத்தில் தமிழகத்தில் சாதி இருந்ததாகவோ, சாதி பார்க்கப்பட்டதாகவோ, சாதிவெறி தலைதூக்கி இருந்ததாகவோ எங்காவது பதியப்பட்டிருக்கிறதா? தமிழகத்தை ஆண்ட முற்கால, பிற்கால எந்த மன்னராவது இன்ன சாதிக்காரரென்ற அடையாளத்தை விட்டுச் சென்றுள்ளாரா? சாதி ஒட்டை எந்த மன்னராவது வைத்திருந்தாரா?

எதை எதையோ பதிவிட்டுள்ள நம் பெரும்புலவர் மரபு, மூவேந்தர் காலத்தில் மக்கள் சாதிகளாகப் பிரிந்து கிடந்தார், மக்கள் சாதிக்காகச் சண்டையிட்டார், சாதிக்காக கொலை செய்தார் என எங்காவது பதிவிட்டுள்ளாரா? தலைவனுடன்

சென்ற மகள், முள் பாதையில் எப்படிப் போவாளா, போகும் வழியில் மிருகங்கள் இருக்குமே, தலைவி எப்படி சமாளிப்பாளோ எனத் தலைவியின் அம்மா வருந்தியதாகப் பதியப்பட்டுள்ளதா அல்லது ஓடிப்போனவளை தலையைச் சீவி எடுத்து வாருங்கள் என கணவனிடமோ, மகன்களிடமோ, உறவுகளிடமோ, சாதிக்காரர்களிடமோ சொன்னதாகப் பதியப்பட்டுள்ளதா?

மூவேந்தராய் ஆண்டது உண்மையெனில், இனியும் தேவரே ஆளப் போவது உண்மையில், தமிழரே வாருங்கள், எம் தமிழ்ச் சகோதரர்களே வாருங்கள், எம் உறவுகளே வாருங்கள், நாம் நம் மூவேந்தர் அரசாட்சியை மீட்டெடுப்போம் என்றல்லவா அறைகூவல் விடுப்பார். என்றைக்காவது தமிழர்கள் அனைவரும் ஒன்று என எந்தத் தேவராவது பேசியதுண்டா?

முக்குலத்தோர் என கள்ளர், மறவர், அகமுடையார் ஒன்றிணையும்போது, எக்குலத்தாரும் தமிழரே என தேவரினத்தால் ஏன் ஒன்றாய்ச் சேர்க்க இயலவில்லை. தேவருக்கு மனம் வரவில்லையல்லவா.

பள்ளப்பயல் தேவேந்திரனாம். மூவேந்தர் வாரிசாம். ஆண்ட பரம்பரையாம். தேவர் எள்ளி நகைக்கிறார். கள்ளர் திருட்டில் தேர்ந்தவர், மூவேந்தரையும் திருடுகிறார். தேவேந்திரர் ஏளனம் செய்கிறார். இரண்டு சாதிக்குள்ளும் ஏன் இவ்வளவு வெறி? இவ்வளவு பகை? இந்த அளவிற்கு முரண்பாடுகள்?

பள்ளரை மூவேந்தராய், ஆண்ட பரம்பரையாய், மண்ணின் மைந்தராய் ஏற்றுக்கொள்ள தேவரினத்தார் மறுக்கிறார். நாடாரை மூவேந்தராய் நினைப்பதில்லை. பறையரை மூவேந்தராய் ஒப்புவதில்லை. கோனாரையும் பிள்ளையையும் மூவேந்தராய் எண்ணுவதில்லை. மீன் பிடிக்கும் பரதவரும் மூவேந்தராய் இருக்க வாய்ப்பில்லை என்கிறார். தற்போதைய சாதிகளில் தேவரினத்திற்கு மட்டும்தான் ஆண்ட பரம்பரைத் தகுதி உள்ளது போலும்.

தேவரும், தேவேந்திரரும், நாடாரும், அவரவர் சாதி இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும், சாதிவெறியை ஊட்டி வளர்க்கிறார்கள். பள்ளிப் பிள்ளைகள் அவரவர் சாதித் தலைவர் பிறந்த நாள்களுக்கு பள்ளிகளிலேயே கேக் வெட்டுகிறார்கள். மூன்று சாதியாரின் சாதித் தலைவர்களுக்கு இவர்கள் ஓடும் ஓட்டங்களும், சாதியின் பெயரைச் சொல்லி வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு அளிக்கும் மரியாதையும், ஊர்வலங்களும், பேச்சுக்களும், கத்தல்களும்,

விசில்களும், ஈராயிரம் வருடங்களாகியும் திருந்தாத ஒரே இனம் உலகத்திலேயே தமிழினமாகத்தான் இருக்கும் என்பதற்கு சான்றுகள்.

இந்த மூன்று சாதிக்காரர்களும்தான் சேர, சோழ, பாண்டியர்களா தமிழர்களே. சேரனுக்கும் சோழனுக்கும் போர். சோழனுக்கும் பாண்டியனுக்கும் போர். பாண்டியனுக்கும் சேரனுக்கும் போர்.

தேவேந்திரருக்கும் தேவருக்கும் சண்டை. தேவருக்கும் நாடாருக்கும் சண்டை. நாடாருக்கும் தேவேந்திரருக்கும் சண்டை.

பிரம்மாவுக்கும் சிவனுக்கும் போட்டி. சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் போட்டி. விஷ்ணுவுக்கும் பிரம்மாவுக்கும் போட்டி.

கணக்கு சரியாக வருகிறதா தமிழர்களே. ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலான நாகரிகத் தொடர்ச்சி கொண்ட தமிழர்கள், இந்த அளவுக்கு சாதிப்பகை பார்க்கிறாரெனில், இந்த அறிவியல் யுகத்திலும் அருவாள்களைத் தூக்கிக் கொண்டு திரிகிறார்களெனில், கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் என அனைத்து நிலையிலும் முன்னேற்றம் கண்டும் மூன்று சாதியரும் முட்டிக் கொண்டு நிற்கிறார்களெனில், தீராப்பகைமை கொண்டு அலைகிறார்களெனில், தமிழ் எனும் அமுதத்தால்கூட இவர்களை இணைக்கமுடியவில்லை எனில், நாம் தமிழர் எனும் உறவால் மூன்று சாதியரையும் பிணைக்க முடியவில்லையெனில், இவர்கள் யார்? இவர்கள் பகை என்ன? இவர்களைப் பகையாக்குவது எது? எதனால்?

நெல்லைச் சீமையில்தான் இவர்களது பகை உச்சத்தில் இருக்கிறது. ஒப்புக்கொள்வீர்கள்தானே நண்பர்களே.

வீரத்திற்கும் மானத்திற்கும் தமிழுக்கும் பெயர் பெற்ற நெல்லைச் சீமை, கொலைக்கும் பெயர் பெற்றதாகப் பேர் வாங்குவது ஏன்? எப்போதிலிருந்து? தெற்கே கொஞ்சம் தள்ளிப் போனால் தேவரும் இல்லை. தேவேந்திரரும் இல்லை. நாடார் இருக்கிறார். ஆதிதிராவிடர் இருக்கிறார். பிள்ளை இருக்கிறார். பரதவர் இருக்கிறார். கேரளத்தில் வேறு பெயர்கள் கொண்ட சாதிக்காரர்கள் இருக்கிறார்கள்.

கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி என முன்னாள் நெல்லை சீமையாக அறியப்பட்ட தமிழகத்தின் தென் கோடியில் மட்டும் நாடார் இருப்பது ஏன்? விருதுநகர் நாடார்கூட நெல்லையிலிருந்து இடம் மாறியவர்கள் என்றே சொல்லப்படுகிறது. அவர்களும் தெட்சிணமாறா நாடார்கள் என்றே கூறிக்கொள்வதாகத் தெரிகிறது.

விருதுநகருக்கு வடக்கே உள்ள தமிழ் நிலத்தில் வாழும் நாடாரெல்லாம் புலம் பெயர்ந்தவர்கள் என்பது திண்ணம். தமிழகத்தின் கடை கோடியிலிருந்து புலம் பெயர்ந்த நாடார்தான் சென்னையில் அதிகமாக வாழ்கிறார்கள். பெருந்தொழில்காரர்களாக மாறியிருக்கிறார்கள். சமீப காலங்களில் கோவையிலும் பெருகி வருகிறார்கள்.

முக்குலத்தோர் எனக் கூறிக்கொண்டாலும் மறவர்கள் அதிகம் வாழ்வது தென்தமிழகத்தில்தான். அகமுடையார் கிழக்கு கரையோரங்களின் சில மாவட்டங்களிலும், கள்ளர்கள் மேற்குக் காடுகளின் தேனி உசிலம்பட்டி பகுதிகளிலும் வாழ்கிறார்கள். முக்குலத்தோர் வாழும் பகுதிகளில் அவர்களுக்கு சமமாக வாழும் தேவேந்திரர்கள், தமிழகத்தின் வடக்கு மாவட்டங்கள் தவிர்த்து ஓராவிற்கு தெற்கு, கிழக்கு, மேற்கு, மத்திய தமிழகம் எனப் பரவலாக வாழ்கிறார்கள்.

தமிழகம் முழுக்கவே பரவலாகக் காணப்படும் பறையர்கள், தெற்கிலும் வடக்கிலும் கணிசமாக வாழ்கிறார்கள். நெல்லையில் கணிசமாக வாழும் பிள்ளைகள், வைகை, காவிரி நதிக்கரை மாவட்டங்களிலும் ஓரளவிற்கு வாழ்கிறார்கள். பழைய நெல்லை, இராம்நாட் மதுரை மாவட்டங்களில் கோனார்களும் இடம்பெற்றிருக்கிறார்கள்.

தமிழகத்தின் தென்கோடிதான், தெற்குப் பகுதிதான் தமிழர்களின் தொன்மையான நிலமென்றால், பழமையான தமிழர்கள் வாழும் பகுதி என்றால், அவர்களே தமிழ் நிலத்திற்குரிய மண்ணின் மைந்தர்களாக இருப்பார்கள். இதில் குடியேற்றக் கணக்குகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். அரசியல், பொருளாதார சிக்கல்களையும் அலச வேண்டும். குமரிமாவட்டத்தில் பள்ளர்களும் இருப்பதாகப் பதிவுகள் சுட்டுகின்றன. கேரளத்தின் சாதிகளையும் கவனித்தில் எடுக்க வேண்டியதிருக்கும்.

2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்குப்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில் 74,249 மக்கள் பட்டியல் சாதியினராக அறியப்பட்டுள்ளனர். பெரும்பாலான பட்டியல் மக்கள் கிறித்தவர்களாக மாறிவிட்டதால் பிற்படுத்தப்பட்டோராகவும் கணக்கிடப்பட்டுள்ளனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் 27 விதமான பட்டியல் சாதிகள் இருப்பதாகவும், அவர்களுள் 14 சாதிகள் கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் செங்கோட்டை தாலுக்கா பகுதிகளில் மட்டுமே வாழ்வதாகவும்

கண்டறியப்பட்டுள்ளது. மாவட்டத்திலுள்ள பட்டியல் இனத்தவரில் சாம்பவர் அதிகமாக இடம்பெற்றுள்ளனர். பள்ளர், வண்ணார், பரவர் விளவங்கோடு தாலுகாவில் அதிகமாகவும், கணியர், காணியன், பரதவர், வெட்டாரன் அகஸ்தீசுவரம் தாலுகாவில் அதிகமாகவும் வசிக்கின்றனர். மகரர், மன்னன் சேரமான் போன்ற சாதிகளும் பட்டியல் இனத்தில் உள்ளன.

மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011இன்படி, கன்னியாகுமரி மாவட்டத்தின் மக்கள் தொகை 18,70,374. ஆண்கள் 9,26,348. பெண்கள் 9,44,029. தமிழகத்தின் மக்கள் தொகை 7,21,47,030 பேர். ஆண்கள் 3,61,37,975. பெண்கள் 3,60,09,055.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராமங்களில் வாழ்வோர் 3,30,572. தமிழக மக்களில் கிராமங்களில் வாழ்வோர் 3,72,29,590. நகரங்களில் வாழ்வோர் 3,49,17,440. மாநிலத்திலிருக்கும் கிராமங்களின் எண்ணிக்கை 15,979. மாநிலத்தில் விவசாயிகள், பயிர் செய்வோர் 42,48,457. விவசாயக் கூலிகள் 96,06,547. வீட்டு வேலைகள் செய்வோர் 13,64,893. பிற வேலைகள். 1,76,64,784.

மாநிலத்திலிருக்கும் மொத்த வீடுகள் 1,84,62,231. வீடில்லாதோர் 15,299. மாவட்ட வீடுகள் 4,82,175. வீடில்லாதோர் 327. மாவட்டத்தில் மூன்று அறைகளுக்கும் மேல் உள்ள வீடுகள் 1,04,601. அவற்றுள் பட்டியல் சாதியினரின் வீடுகள் 3,889. பழங்குடிகள் வீடுகள் 1080.

மாநிலத்தின் பரப்பளவு 1,30,060 சதுரகிலோமீட்டர். மாவட்டத்திற்கு 1684 ச.கி.மீ. மாநிலத்தின் ஆண் பெண் விகிதம் 996. மாவட்டத்தில் 1019. மாநிலத்தில் படித்தவர் சதமானம் 80.09. மாவட்டத்தின் படிப்பறிவு சதமானம் 91.75. மாநிலமெங்கும் வசிக்கும் பட்டியல் இன மக்கள் 1,44,38,445. பழங்குடிகள் 7,94,697 மாவட்டத்தின் பழங்குடிகள் 7282.

தற்போது வாழும் சாதிகளைக் கொண்டு, அவர்களது பண்பாட்டைக் கொண்டு, நிறத்தைக் கொண்டு, மொழியைக் கொண்டு, தமிழகத்தின் பண்டையக் குடிகள் எவர், எந்தச் சாதியர் என அறிய முடியுமா? தமிழகத்தை ஆண்ட மூவேந்தர் மரபு தமிழகத்தின் தற்போதுள்ள சாதிகளில் எந்தச் சாதிக்காரர்கள் என ஆய்வு செய்ய முடியுமா? சாதிகள் பெயர் மாறியும், உருவம் மாறியும், உள்ளம் மாறியும் வந்திருப்பது இயல்பெனும்போது, ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக பின்னோக்கிப் பயணித்து உண்மைகளைக் கண்டறிய இயலுமா? சாதியைக் கண்டறிவதற்காக

இவ்வளவு காலம் பின்னோக்கி நகர்வது அறிவுடமை ஆகுமா? மூவேந்தரும், வேளிர்களும், தாங்கள் இன்ன சாதி எனக் குறித்து வைக்காதபோது, தமிழே பெரிதென வாழ்ந்திருக்கும்போது, அரசியல் லாபத்திற்காக, வீண் பெருமைக்காக, மூவேந்தர் மரபை, மூவேந்தர் பெருமையை, அவரவர் சாதிப் பெயரால் அழைப்பது தகுமா?

தமிழகத்தின் வரலாற்றை, குறிப்பாக, தமிழர் சாதிகளின் வரலாற்றை சரியாகச் சொல்ல முடியுமா? கண்டறிய முடியுமா? சங்ககாலத்திலிருந்து, அதாவது ஈராயிரம் ஆண்டுகளாக பெயர்கள்கூட மாறாமலா தமிழகச் சாதிகள் நிலைபெற்றுள்ளன? வேலைகள், தொழில்கள், பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் என எதுவுமே மாறவில்லையா? இடம் பெயர்வு நடைபெறாமல்தான் வாழ்ந்தார்களா? வழிபடும் கடவுள்கள்கூட மாற்றம் பெற்றிருக்கும்போது, அனைத்து சாதியினருமே தமிழகத்தை, தென்னிந்தியாவை, உலகத்தை தாங்கள்தான் ஆண்டதாகக் கூறுவது சரிதானா?

சங்க காலத்திலிருந்து வரும் நெய்தல் மக்களான மீனவக் குடிகள் பற்றி பெரும்பாலான தமிழ்ச் சாதிகள் ஒன்றுமே அறிந்திருக்கவில்லை. நாட்டுக்குள் இருக்கும் கிராமங்களைப் பற்றியே பெரும்பாலான தமிழர் அறியாமல் இருக்கிறார் எனில், கடலோரத்தில் வாழ்க்கை நடத்தும் மீனவர் பற்றி, அம்மக்களின் பண்பாடு பற்றி, மொழி பற்றி, பழக்கவழக்கம் பற்றி, எதை அறிந்திருக்கப் போகிறார்? எழுத்துலகத்திலும் நெய்தல் மக்கள் குறித்து பெரிய அறிமுகமும் இல்லை என்பதே உண்மை.

தமிழகத்திலேயே குமரி மாவட்டத்தில்தான் அதிகமான மீனவ மக்கள் வாழ்வதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன. குமரியிலிருந்து கிழக்குக் கடற்கரை ஓரங்களில் பரவர் மீனவக் குடிகளும், மேற்கு கடற்கரைப் பகுதிகளில் முக்குவர் எனும் மீனவக் குடிகளும் வாழ்வதாகக் கூறப்படுகிறது. பெர்ணான்டஸ் எனும் பரவர் குடிகள் குமரிமுதல் தூத்துக்குடிவரை அதிகம் வசிக்கின்றனர். முக்குவர் மக்கள் இலங்கைத் தீவிலும் அதிகம் வசிப்பதாகக் கூறப்படுகிறது. தமிழகம் நீண்ட கடற்பரப்பைக் கொண்டுள்ளதாலும், நன்னீர் நிலைகள் அதிகம் இடம்பெற்றுள்ளதாலும், மீனவர்களின் முக்கியப் பகுதியாக தமிழகம் இருந்து வந்துள்ளது. பட்டினவர், கரையார், காயலார், வலையர், செம்படவர், பர்வத

ராஜகுலம் உட்பட பல்வேறு குடிகளாக அடையாளம் காணப்படும் மீனவர்கள், தமிழர்களிலேயேகூட தனித்து வாழும் சமூகமாகவே அறியப்படுகின்றனர்.

பெரும்பாலான கரையோர மக்கள், கத்தோலிக்க கிறித்தவர்களாக மாற்றம் பெற்றிருந்தாலும், மீனவத் தொழில் சார்ந்து தமிழர் பண்பாட்டுக் கூறுகளே அவர்களிடம் மிகுந்திருப்பதாகக் கூறப்படுகிறது. மீன்தொழில் சார்ந்தும், உப்பு சார்ந்தும், ஏராளமான வரலாறுகள், பண்பாடுகள் முற்காலத்தில் இருந்திருக்கும். அது பற்றிய தகவல்களையோ, வரலாறுகளையோ, தமிழகத்தின் பெரும்பான்மையான ஆண்ட சாதிகளின் வரலாறுகள் ஒன்றுமே பேசுவதில்லை. சங்க காலத்திலேயே தமிழர்கள் வணிகத்தில் சிறந்திருந்தார் எனில், உலகின் பல பகுதிகளோடும் வணிக உறவு பயணங்கள் செய்தனர், பெருங்கலங்களை உருவாக்கினர் எனில், அவற்றில் மீனவக் குடிகளின் பங்களிப்புகள் என்ன என்பதிலும் எத்தகைய தெளிவும் இல்லை.

சாதிப்பெயர்களே பலவாறாக மாறி இருக்கின்றன. பொருளாதாரம் உயரும்போது சாதியின் பெருமையும் உயர்கிறது. மதிப்பும் மரியாதையும் கூடுகிறது. சமீபத்திய உதாரணமாக நாடார் குடிகளைக் கூறலாம். வெள்ளையர் கால சாதி வாரிக் கணக்கெடுப்பில் சாணான் என்பதற்குப் பதிலாக நாடார் எனப் பதிந்ததோடு, இடஒதுக்கீடு அமலானபோது பட்டியல் இனம் வேண்டாம் என்றும் மறுத்திருக்கின்றனர். நாடார் முன்னேற்றத்தில் கல்வியும், மகிமை உறவின்முறையும், நாடார் சங்கமும், நாடார் வங்கியும் முக்கியப் பங்காற்றியிருக்கின்றன.

மூவேந்தரின் வழிமரபினர் என்றும், பண்டைய தமிழகத்தை ஆட்சிபுரிந்தவர்கள் எனவும், நாடார்களின் பதிவுகள் சுட்டுகின்றன. கால்டுவெல் பாதிரியாரின் நாடார் குடி பற்றிய கருத்துக்கள் சர்ச்சைக்குரியவையாகக் கருதப்படுகின்றன.

ஆங்கிலக் கல்வி எவ்வாறு இந்தியர்களுக்கு நாம் அடிமையாகக் கிடக்கிறோம், விடுதலை பெற்று மற்ற நாடுகளைப்போல் சுதந்திரமாக வாழவேண்டும் எனும் உணர்வைக் கொடுத்ததோ. அவ்வாறே கிறித்தவ மதத்தால் வந்த கல்வி, நாடார்களிலும் மிகுந்த மாற்றத்தை உருவாக்கி, அன்றிருந்த அடிமைத் தளையிலிருந்து தீரமாக வெளியேற உதவியிருக்கிறது.

நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ணமுடியாது எனும் சொல்நடை உண்டு. தமிழகத்தில் சுதந்திர காலம்வரை, குறிப்பாக தொன்னூறுகள் வரைகூட வேளாண்மையைச் சார்ந்தே குடிகளின் வாழ்க்கை அமைந்திருந்தது எனில், பண்டையக் காலத்தில் விவசாய உற்பத்தி முறையைக் கொண்டே பிற தொழில்கள் சிறப்புற்றிருக்க முடியும். தற்போதைய காலம்போல் மீன்கள் பதப்படுத்தும் நுட்பம் அன்றைக்கு இருந்திருக்காது. கூடைச் சுமையாகவோ அல்லது மாட்டு வண்டி மூலமாகவோ கடல் மீன்களை எவ்வளவு தூரத்திற்கு எடுத்துச் சென்று விற்றிருக்க முடியும்? மீனவர் கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதில்தான் வல்லவராக இருப்பர். அவரிடம் மீன்கள் பண்ட மாற்றாகவே வாங்கப்பட்டிருக்கும். உப்பு வணிகத்தில் ஈடுபட்ட சாதியாரெல்லாம் இருபது முப்பது வருடங்கள்முன்வரை, மாட்டு வண்டிகளில் ஊர் ஊராக விற்றுத் திரிந்ததை தமிழர்கள் அறிந்திருப்பார்கள். பண்டைய தமிழகத்தில் மண்பாண்டத் தொழிலுக்கும் முக்கிய இடம் இருந்திருக்கும்.

தமிழர்களில், குறிப்பாக, இன்னும் மீசை முளைக்காத இளம் தமிழர்களில், எத்தனை பேர் தமிழக, உலக வரலாறு தெரிந்து சாதிப் பெருமை பேசுகிறார்? அருவாளைத் தூக்குகிறார்? தமிழகத்தின் சாதிகளைப் பற்றி ஒருவர் அறிய வேண்டுமானால், விடாமல் குறைந்தது பத்து வருடங்களாவது படிக்கவேண்டும். ஒவ்வொரு சாதியும் எழுதிக் குவித்திருக்கிறார்கள். தமிழகச் சாதிகள் அவரவர் பெருமைகளை மட்டுமே எழுதி வைத்திருப்பர். நேர்மையான உண்மையான வரலாறு இடம் பெற்றிருக்காது. வெளிநாட்டவர் தமிழகம் பற்றியும், தமிழக வரலாறு குறித்தும் என்ன எழுதியிருக்கிறார் என்பதைக் கட்டாயம் அறியவேண்டும். அதுவும் ஆங்கிலம் வழியாக அறிவதே சாலச் சிறந்தது.

சில வருடங்களுக்குமுன் நடந்ததே, திரித்தும், மாற்றியும், கூட்டியும், குறைத்தும், இழித்தும், பழித்தும், புகழ்ந்தும், தூற்றியும், சேர்த்தும், கழித்தும், உயர்த்தியும் வழங்கி வரும்போது, உண்மை வரலாறாக முன்வைக்கப்படும்போது, ஆயிரமாண்டுகள், ஈராயிரமாண்டுகள் வரலாற்றை, அதுவும் சாதி வரலாற்றை எப்படிக் கண்டறிவது? ஒரு நூற்றாண்டுக்குமுன் வாழ்ந்த மனிதரது வரலாறே இத்தனை திரிபு கொண்டதெனில் ஆயிரம் வருடங்களை எவ்வாறு கண்டறிவது? சொல்லப்பட்டுள்ளதெல்லாம் உண்மையான வரலாறா? எழுதப்பட்டுள்ளதெல்லாம் உண்மையான வரலாறாகிவிடுமா? கொலை செய்த ஒருவனை மகான் என எழுதி வைத்தால் அதை உண்மை என உலகம் நம்பி விடுமா? சாதிக்காரன் என்பதற்காக

அநியாயக் கொலைகள் செய்தவனை, கொள்ளைகள் புரிந்தவனை, கடவுளாக்கி வழிபட்டால் வரலாறு உண்மையென வைத்துக் கொள்ளுமா?

தமிழர்க்கு ஏன் இந்த அளவு சாதிவெறி? எவ்வளவுதான் படித்தால் என்ன? பட்டங்கள் பெற்றால் என்ன? சக மனிதரை சாதிக்காகவும் மதத்துக்காகவும் ஒதுக்கி வைக்கும் தமிழன், அறிவிலியாகவே இருக்க முடியும். மூடனாகவே வாழ முடியும்.

என்ன எழுதியிருக்கிறார் என்று படிக்க வேண்டும். எத்தனை படித்தாலும் நேரில் பார்க்கும் அனுபவம் வராது. குமரிமுனை தொடங்கி வடவேங்கடம் வரையிலும் நாகப்பட்டினம் தொடங்கி கொச்சி வரையிலும் ஒரு நீண்ட பயணம் செய்வது சாலச் சிறந்தது. தமிழகத்தில் ஒவ்வொரு குக்குலமும் ஒரு பண்பாட்டை, வரலாற்றைக் கொண்டுள்ளது அல்லது கொண்டிருப்பதாக நம்புகிறது. மேலும் பண்டைய இலக்கியங்களிலிருந்து தேவையானதை மட்டும் ஒட்டியும் வெட்டியும் எடுத்தாள்கிறது. ஊர் சுற்றிப் பார்த்தால் மட்டும் போதாது. பண்டைய இலக்கியம், வரலாறு அறிந்திருக்க வேண்டும். தமிழகத்தின் பண்டைய மதங்கள் குறித்து கண்டிப்பாக அறிந்திருக்க வேண்டியதும் அவசியம். தமிழகக் கோவில்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், தொல்லெச்சங்கள் என ஒன்றுவிடாமல் ஆராய வேண்டும். இதற்கு ஒருவரின் வாழ்நாள் போதுமா என்பது சந்தேகமே.

எல்லாம் தெரிந்து கொண்டு, எல்லாவற்றையும் அறிந்து கொண்டு, நடுவுநிலை தவறாமல் அனைத்துக் குக்குலங்களின் வரலாற்றையும் சீர் தூக்கிப் பார்த்து, அவரவர் சாதிதான் உயர்ந்தது என்றோ, சிறந்தது என்றோ, ஆண்டது என்றோ அறிவித்தால் அதுவே உண்மையான அறிவுடைமையாக இருக்கும்.

மீசைகூட முளைக்காத வயதில், இளமைத் திமிரில், எமது சாதியை எதிர்த்தால் வெட்டுவோம் எனப் பதிவிடும் இளைஞர்கள், ஒரு இருபது வருடங்களுக்குமுன் என்ன நடந்தது என்பதைக்கூட நிச்சயம் அறியமாட்டார். பின் எப்படி ஈராயிரம் வருடங்களாக தாங்களே தமிழகத்தை ஆண்டவர்கள் என்றும் யாரேனும் எதிர்த்தால் வெட்டுவோம் எனவும் சொல்ல முடிகிறது?

இளம் காட்டுமிராண்டிகளே.. தந்தை யார் எனத் தெரியுமா.

இந்துக்கள் என்பவர்களுக்குள் ஜாதிப் பிரிவு இருக்கும்வரை ஜாதி உயர்வு தாழ்வு வித்தியாசம் ஒருக்காலமும் போகவே போகாது என்பதை கண்டிப்பாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும்படி எச்சரிக்கை செய்கின்றோம்.

இன்றையதினம் தேசியவாதிகளாய் இருக்கின்றவர்கள் இந்தியா சுதந்திரம் அல்லது பூர்ண சுயேச்சை அமையவேண்டுமென்ற உண்மையான ஆசையுடையவர்களாயிருப்பார்களானால் அவர்கள் வெள்ளைக்கார ஆட்சியிருக்கும்போதே ஜாதி வித்தியாசங்கள் எல்லாம் ஒழியும் படியான ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டியதுதான் அறிவுள்ள வேலையாகும். ஏனெனில் இந்தியாவில் இந்துக்கள் என்பவர்களில் 1000க்கு 999 பேருக்கு குறையாமல் ஜாதி வித்தியாசத்தை ஒழிக்க வேண்டும் என்கிற எண்ணமில்லாதவர்களாய் இருப்பதோடு ஒவ்வொருவரும் மேல்ஜாதி ஆகவேண்டும் என்று ஆசைப்படுவதும் தனக்கு கீழ் பல ஜாதிகள் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுவதுமான உணர்ச்சி உள்ளவர்களாகவே இருக்கின்றார்கள். இந்த நிலையில் இன்றைய தினம் இருக்கும் பல சவுகரியங்களை ஒழித்துவிட்டு வருணாசிரம கொள்கையும் ஜாதி ஆதிக்கத் திமிரும் உடையவர்களான மக்களிடம் ஆட்சியும் பிரதிநிதித்துவமும் வந்து விட்டால் பிறகு எந்த விதத்தில் ஜாதிக் கொடுமைகளும் அதனால் ஏற்படும் தொல்லைகளும் ஒழியக்கூடும் என்பதை யோசித்தால் அதன் கெடுதி விளங்காமல் போகாது.

ஆகவே எப்படியாவது ஜாதிப்பிரிவையும் அதற்கு ஆதாரமான மதத்தையும் ஒழிக்க முயற்சி செய்யுங்கள் என்றும் அதற்கு ஆரம்பவிழா செய்ய அடுத்து வரும் சென்சஸ் ஒரு சரியான சந்தர்ப்பம் என்றும் அதில் காணப்பட்ட ஜாதியையும் மதத்தையும் தெரிவிக்காதீர்கள் என்றும் தெரிவித்துக்கொண்டு இதை முடிக்கிறோம். தந்தை பெரியார்-குடியரசு-தலையங்கம்-30.11.1930.

தமிழகத்தில், ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலான பழம் பெருமை கொண்ட தமிழகத்தில், உலகின் பல பகுதிகளில் திருந்திய வாழ்க்கை வாழாத மனிதர் வாழ்ந்த காலத்தில் செவ்வியல் இலக்கியங்கள் படைத்த தமிழகத்தில், சாதிப்பகையும், மதவெறியும், அரசியற் கொள்ளையும் உச்சத்திலிருக்கும் காலத்தில் நாம் வாழ்கிறோம் எனில் சரிதானே தோழர்களே.

மூன்றும் தனித்தனியாக இயங்கினாலே தாங்காது எனும்போது, ஒன்று சேர்ந்து மக்களைப் பிளப்பதை என்னவென்று சொல்ல. பெரும்பாலான தமிழர்கள் மதத்திற்குத் தலையையும், சாதிக்கு வாலையும் கொடுத்திருப்பவர்களெனில் மிகையாகாது.

தமிழகத்தில் முன்னெப்போதுமில்லாத அளவிற்கு மதவெறியும் தலைதூக்கி வருகிறதுதானே. ஒவ்வொரு மதத்தாரும், அவரவா் மதங்களையும், கடவுள்களையும் மக்களின் தலைக்குள் திணிக்கிறாா்கள் என்பதே உண்மை. உண்மையில் மதமென்னும் பேய், தமிழா் மனங்களில் ஆழமாக மிக ஆழமாக வேறூன்று விட்டது என்றே அறிகிறோம்.

அமைதிக்குப் பெயா்போன சாதிகளெல்லாம் மதத்தின் பெயரால் வீறுகொண்டு எழுகின்றன. எங்கும் கோவில்கள், எல்ல இடங்களிலும் சா்ச்சுகள், எங்கேயும் மசூதிகள் எனும் நிலையில் தமிழகம் இருக்கிறது. தமிழ் நிலமெங்கும் சா்ச்சுகளாகக் கட்டிக் கொண்டே இருக்கிறாா்கள். மசூதிகளும் பெருமளவில் கட்டப்பட்டு வருகின்றன. கையில் பணம் புழங்கினால் இந்துக்களும் கோவில்களைத்தான் கட்டுகிறாா்கள். ஒரு கிராமத்தில் நூறு வீடுகள் இருந்தால் பத்து கோவில்கள் இருக்கின்றன. பங்காளிகளுக்குள்ளேயே, பணம் சேருபவா் தனியாக கோவில் கட்டிக்கொள்கிறாா். விரைவில் குடும்பத்திற்கு ஒரு கோவில் என்றும், ஆளுக்கொரு கோவிலென்றும் நிலைமை உருவாகலாம்.

மதங்கள் மனிதரது இதயங்களை ஒன்றிணைப்பதற்குப் பதிலாக, இதயங்களைப் பிரிக்கின்றன மற்றும் உடைக்கின்றன. தமிழா்கள் இன்னும் மதங்களைப் பற்றியும், அவரவா் இறைவன் பற்றியும் ஒரு சிறிய அளவிற்குக்கூட அறிந்திருக்கவில்லை. இந்துக்கள் புராணங்களையும், வரலாறுகளையும், குறியீடுகளையும், உள்ளாா்ந்த அா்த்தங்களையும், தா்க்க முறைமைகளையும், சடங்கியல்களையும், புரிந்து கொண்டதாகவோ, புரிய முயற்சிப்பதாகவோ தெரியவில்லை. மிகமிக எளிய மனம் கொண்டவா்களாக இருக்கிறாா்கள்.

முன்பெல்லாம் இந்து என்றால் பிராமணரைத்தான் குறிக்கும். கொஞ்சம் வெள்ளாள சாதியையும் சேர்த்துக் கொள்ளலாம். வெள்ளாளா்கூட சைவம் என்றுதான் நினைக்கிறாரே தவிர இந்து எனும் கருத்துக்குள் தற்போதுவரை வரவில்லை என்பதே மெய். பிள்ளையால், வெள்ளாளரால் சைவத்தை விட்டு அகன்ற இந்து மதத்திற்குள் ஒருங்கிணைய முடியவில்லை. பெரும்பாலான சைவா்கள் தற்போதும் வைணவ ஆலயங்களுக்குச் செல்வதில்லை, வழிபடுவதில்லை என்பதே நிலை. மரபான வைணவா்களுக்கும் அதுவே நிலை.

ஆா்.எஸ்.எஸ் ஷாகாக்களுக்குப் போகிறவா், அவா்கள் கற்றுக் கொடுப்பதே இந்து மதம் என எடுத்துக் கொள்கிறாா் போலிருக்கிறது. சமீபத்தில் (மாா்ச் -18) குமரி

மாவட்டத்தில் மட்டும் 810 ஷாகாக்கள் நடந்து கொண்டிருப்பதாக ஒரு சுட்டி குறிப்பிடுகிறது. அனேகமாக குமரி மாவட்டம், ஆர்.எஸ்.எஸ்.ஸின் செல்லப்பிள்ளையாக மாறிவிட்டது என்றே தெரிகிறது. எல்லாம் 1982 இல் நிகழ்ந்த மண்டைக்காடு கலவரத்தால் வந்த பயன்.

ஆர்.எஸ்.எஸ். காரர்களே பரவாயில்லை என நினைக்க வைக்கிறது கிறித்தவ மதமாற்றப் பிரச்சாரம். கிறித்தவர் மனிதர்களை மதம் மாற்றுவது அவர்களது உரிமை என்றே நினைக்கிறார். எமது சொந்த அனுபவத்தில் கூறுவதானால், கிறித்தவர்கள் மிக மிகத் தீவிரமான கிறித்தவ மனநிலையில் இருக்கிறார்கள். இந்த அளவுக்குத் தீவிரமும், மன அழுத்தமும், ஓயாத பிராத்தனைகளும் அவர்களை மிக எளிதல் உணர்ச்சி வசப்படுபவர்களாக, உணர்ச்சிக் கொந்தளிப்புகளுக்கு ஆளானவர்களாக மாற்றிவிட்டிருக்கிறது. கிட்டத்தட்ட இசுலாமியர்களும், பெண்கள் உட்பட மிகத் தீவிரமான மார்க்க நெறியைப் பின்பற்றுகிறார்கள். ஒரு சிலரைத் தவிர எல்லோராலும் அத்தகைய தீவிரமான மனநிலையில் வெதும்ப முடியாது என்பதை அறிந்ததுபோல் தெரியவில்லை.

பேராசிரியரொருவரின் பணி ஓய்வு விழாவில் பேசும் கிறித்தவ, இசுலாமியப் பெண் பேராசிரியர்கள், தாரை தாரையாகக் கண்ணீர் வடிக்கிறார்கள். பலரும் எம்மால் பேச இயலவில்லை என அழுத கண்ணீரோடு உட்கார்ந்து விட்டார்கள். இசுலாமியப் பெண் பேராசியருக்கும் கண்ணீர் ஆறாக ஓடுகிறது. அவராலும் பேச முடியவில்லை. இந்துப் பெண் பேராசிரியர்கள் ஒருவரும் அழக் காணோம். மெத்தப் படித்த பேராசிரியர்களே பணியிடங்களில் எதற்கொடுத்தாலும் அழுகிறார்கள், சிறுசிறு பிரச்சினைகளுக்குக்கூட அதீதமாக உணர்ச்சிவசப்படுகிறார்கள் என்பதே மெய்.

உண்மையைச் சில நேரங்களில் மறைத்து வைப்பதும், சொல்லாமல் தவிர்ப்பதும் நலம் பயக்கும் என்பது உண்மையே. தமிழர்கள் உண்மைகளை ஏற்றுக்கொள்ளும் பக்குவதற்கு, உண்மையாக இருக்குமோ என ஆராய்ந்து பார்க்கும் மனநிலைக்கு வரவில்லை அல்லது விரும்பவில்லை என்பது தெளிவு. உண்மையில் பெரும்பாலான மக்கள் உண்மைகளைக் கண்டு அஞ்சுகிறார்கள். அவரவர்க்கு எது உண்மையெனத் தோன்றுகிறதோ அதையே உண்மை என நினைப்பதோடு, நம்புவதோடு, தம்மளவில் ஆராய்ந்து அறியாத ஒன்றை, ஊரெல்லாம் பரப்புவதற்கும் தயாராகிறார்கள் என்பது உண்மையே.

கல்விநிலையங்களிலும் பணியிடங்களிலும் மதம் பரப்பும் வேலைகள் மும்முரமாக நடைபெறுகின்றன. உண்மையை ஆராய வேண்டிய, உணர வேண்டிய பேராசிரியர்களின் மனமெல்லாம் மதத்தில் நிலைகொண்டிருக்கிறது. மாணவர்களுக்கு நல்வழிகாட்டுகிறார்களாம். ஒருமுறை கூட்டத்திற்கு வந்து பாருங்களேன், மதியம் பிரியாணியோடு சாப்பாடு போடுறாங்க என மாணவர்களை மீட்டிங்குகளுக்கு அழைத்துச் செல்லும் பேராசிரியர்கள் நிறையப் பேர். பேராசிரியர்களாவது பரவாயில்லை என நினைக்க வைக்கிறார்கள் பேராசிரியைகள். என்ன பக்தி.. என்ன பக்தி.. புராஜெக்ட் மாணவர்களை வீட்டுக்கு அழைத்து மன்றாடுகள் வைக்கும் பேராசிரியர்கள் உண்டு. பேராசிரியர் பணியாற்றிக் கொண்டே ஜெபக் கூடம் நடத்தும் பேராசிரியர்களும் உண்டு. பெயர்களைப் பார்த்தால் தெரியவில்லை. பேசுவதைப் பார்த்தாலும் தெரியவில்லை. முகநூல்களைப் பார்த்தால் ஏராளமான பேராசிரியர்களின் அன்றாடமே பிரார்த்தனையில் குட்மார்னிங் பதிவிட்டு, பிரார்த்தனையில் குட்நைட்டில் முடிகிறது. கல்லூரியில் மதம் சார்ந்து ஒரு அமைப்பாகத் திரளும் பேராசிரியைகள், தினமும் அருகே சென்று பிராத்தனை செய்வதும், தங்களுக்குள் செய்திகளைப் பரிமாறிக் கொள்ளுவதும், மதம் சார்ந்து இயங்குவதும்.. என்னத்தச் சொல்ல.

பேராசிரியர்களின் முகநூல் பதிவுகள், டுவிட்டர் பதிவுகளைப் பார்த்தே, அவர்களது சாதியையும் மதத்தையும் சொல்லிவிடலாம்போல. திருச்சிற்றம்பலம் என்றோ, சிவனின் பெருமை என்றோ, சிவனின் அடிமை என்றோ டுவிட்டர் போடும் ஒரு பேராசிரியர், பெரும்பாலும் வெள்ளாளராக இருப்பார் என்பது திண்ணம். வெள்ளாளரின் தீவிர மனப்பான்மையைப் பார்த்து, பட்டியல்காரர்களில் ஒரு சிலர் சிவனின் பெருமைகளைப் போஸ்டு செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

எமது வாழ்வனுபவத்தில், பிராமணர்கள், வெள்ளாளர்கள், கிறித்தவர்கள், இசுலாமியர்கள் ஒன்று போலவே மதப் பற்றாளர்களாக இருக்கிறார்கள். நால்வரும் ஒரே தராசில் வைக்கப்பட வேண்டியவர்களே. காலையில் எழுந்திருக்கும்போதே ஆண்டவா, ஆண்டவரே என்பதிலிருந்து தொடங்கி, இரவு படுத்து ஆண்டவா என முடிப்பது வரை இறைச்சிந்தனை.. இறைச்சிந்தனை.. இறைச்சிந்தனை தவிர வேறு எதிலுமே கவனம் கொள்ளக் கூடாதாம். நாள் முழுக்க கடவுள் பற்றிய எண்ணத்திலேயே, கடவுள் பற்றிய நினைப்பிலேயே இருக்க வேண்டுமாம்.

எழுந்திருக்கும் போதே, பூமாதேவியே, கால்களை வைக்கிறோம் பொறுத்துக்கோ எனச் சொல்லவேண்டும். பூமாதேவி என்பதுகூட பூமிதேவன் ஆகிவிட்டதாகவே தகவல். இது சிவனாரின் பூமி, சிவ பிள்ளைகள்தான் ஆள வேண்டும் என பிள்ளைமார் நினைக்கிறார். பூமி தேவனால் படைக்கப்பட்டது, தேவக் குமாரர்களே ஆள வேண்டுமென கிறித்தவர் நினைக்கிறார். பிள்ளைக்கு கிறித்தவப் பிள்ளையாக இருந்தாலும் பரவாயில்லை. மொத்தத்தில் பிள்ளை ஆள வேண்டும். இசுலாமியர்க்கு பூமி எல்லாம்வல்ல இறைவனால் படைக்கப்பட்டது, இசுலாமியருக்கு மட்டுமே பூமியை ஆளும் தகுதி இருக்கிறது. மனிதர்கள் பூமியை வழிபாட்டுக் கட்டிடங்களாக மாற்றிவிட்டு, வானுக்கும் கிளம்பிவிட்டார்கள். இவர்கள் எத்தனை பூமிகளுக்குப் போனாலும், எத்தனை சூரிய மண்டலங்கள் கடந்தாலும், உம்மதமா எம்மதமா, உமது கடவுளா எமது கடவுளா என்பதை மட்டும் விடமாட்டார்கள் என்பதை உறுதியாக நம்பலாம். அவ்வளவு ஆசை. அவ்வளவு வெறி.

ஆசையை அனைத்துத் துன்பங்களுக்கும் மூலகாரணம் என முப்பாட்டன் சொல்லி வைத்திருக்கிறான். முப்பாட்டன் என்பது கௌதம புத்தனையே. சரிதானே நண்பர்களே.

அரசியல் கட்சிகளின் வெற்றியே, சாதி மதத்தை ஊக்குவிப்பது, தூண்டுவது, இங்கே ஒரு மாதிரி பேசுவது, அங்கே வேறுமாதிரி பேசுவது, பேசுவதற்கும் செயல்படுவதற்கும் ஏகப்பட்ட விலக்கமிருப்பது, ஓட்டுக்களைக் குறிவைத்தே காய் நகர்த்துவது, முடிந்தால் சண்டைமூட்டி குளிர்காய்வது, பதவியைப் பிடிப்பது, தக்க வைப்பது எனில் மிகையாகாது.

ஜனநாயக முறையிலான ஆட்சி, பிற முறைகளிலான ஆட்சியைவிட எத்தனையோ நன்மைகளைப் பெற்றிருப்பினும், அதன் பெருங்குறையாக எண்ணிக்கைப் பலம் சுட்டிக்காட்டப்படுகிறது, அரசியல்வாதிகள் கூட்டல் கழித்தல் கணக்குகளையே கையிலெடுக்கிறார்கள். குறிப்பட்ட சாதியில் அதிகமான ஓட்டுகள் இருந்தால், அவர்களை எப்படி வளைக்கலாம் என்றோ, அவர்களது ஓட்டுக்களை எப்படி மொத்தமாக அறுவடை செய்யலாம் என்றோ கணக்குப் போட்டு அதற்கேற்பவே அரசியல் நகர்வுகளை மேற்கொள்கின்றனர். என்ன செய்தால் அந்த சாதி ஓட்டுக்களைப் பெறலாமோ அதைச் செய்கிறார்கள். குறுகிய நோக்கம். சுயநல நோக்கம். அரசியல் நோக்கம். பதவி நோக்கம்.

சாதிக்கு சலுகைகள் அறிவிப்பது, கொடுப்பது, சாதித் தலைவர்களைப் புகழ்வது, சிலைக்கு மாலை போடுவது, சாதிவெறியர்கள் என அறியப்பட்டவர்களின் மாநாடுகளில் கலந்து கொள்வது, சாதியைப் புகழ்ந்து பேசுவது, தகுதியே இல்லாத அந்த சாதி தலைவரை உலகத்தின் ஒப்பற்ற தலைவர் எனப் பேசுவது, முடிந்தால் பாடப்புத்தகங்களில் சேர்ப்பது, அமைச்சரவையில் அதிகமானோரை இடம்பெறச் செய்வது, முக்கியமான பதவி கொடுப்பது, சாதிக்கு எவ்வளவு சலுகைகள் செய்தோம் என பத்திரிகைகளில் வெளியிடுவது, குறிப்பிட்ட சாதிக்கு மாற்றான சாதியை மட்டம் தட்டுவது, அமுக்குவது, ஆட்சி அதிகாரம் கொண்டு அடக்குவது, இன்னும் ஏராளம்.. தாராளம்.. சாதிக்காரர்களும் தமிழ்நாடு, தமிழர் எப்படிப் போனால் நமக்கென்ன, சாதிக்கு சலுகை கிடைக்கிறதா, வேட்பாளர் சாதிக்காரனா என்பதை பார்த்தே ஓட்டளிப்பதுமாக, வெல்க ஜனநாயகம்.

எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும் சாதிகளே அரசியல் அதிகாரத்தால் மிகுந்த பயன் பெறுகிறார்கள். தற்போதைய தமிழக அமைச்சரவையில் முக்குலத்தைச் சேர்ந்தோரே அதிகமாகவும், முக்கியத் துறைகளிலும் உள்ளனர். தற்போதைய சட்டமன்றம் என்றில்லாமல் தொன்னூறுகளில், இன்னும் குறிப்பாகச் சொல்வதென்றால், திண்டுக்கல் இடைத்தேர்தலிலிருந்தே முக்குலத்தவர் செல்வாக்குப் பெற ஆரம்பித்தாயிற்று. கிட்டத்தட்ட ஐம்பது வருடங்களான கழகங்களின் ஆட்சியில், முக்குலத்தோரே அதிகம் பயனடைந்தவர். அடைந்த பயன்கள் தமிழகத்தின் அனைத்து மட்டங்களிலும் தெளிவாகத் தெரிகிறது. அம்மையாரின் ஆட்சி முக்குலத்தோரின் ஆட்சியாகவே மாறிவிட்டதும் உண்மை.

போகாமலிருக்க வேண்டும் என டாக்டர் சொன்னார். ஊசி போட வேண்டும், மாத்திரை சாப்பிட வேண்டும் என்றார். ஆனால், அதெல்லாம் முடியாது, தேவர் திருமகனார் பிறந்தநாளன்று, பசும்பொன் கிராமத்திற்கு சென்று அவருக்கு அஞ்சலி செலுத்தியே ஆக வேண்டும் எனக் கூறிவிட்டு புறப்பட்டு வந்தோம். இங்கே வரும் வரை தாங்க முடியாத வலியால் அவதிப்பட்டோம். ஆனால் இங்கே வந்து உங்கள் மலர்ந்த முகங்களைப் பார்த்தபின் வலியெல்லாம் எம்மை விட்டு ஓடிப்போய்விட்டது. எங்கேயோ பறந்து போய்விட்டது.

நாட்டில் மக்கள் விரோத ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. ஒரு தீய சக்தி தமிழ்நாட்டை ஆண்டுகொண்டிருக்கிறது. இங்கே இருக்கின்ற கூட்டம் நம்முடைய கூட்டம். இங்கே இருக்கின்ற லட்சோப லட்சம் மக்கள் தேவர் திருமகனாரின் அன்புப்

பிள்ளைகள். எம்முடைய உடன் பிறப்புக்கள். எம்முடைய சகோதரர்கள். எம்முடைய சகோதரிகள். ஆனால் இந்தக் கூட்டத்திற்கு நடுவே வருவதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், கருணாநிதியின் ஆணையின் பேரில் சில தீய விஷமிகள் வாகனங்களைக் கண்ணாடிகளை நொறுக்கி விட்டார்கள்.

எங்கே யாருடைய இடத்தில், எந்தக் கூட்டத்திற்கு மத்தியில் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். என்ன துணிச்சல் இருக்க வேண்டும்.

தேவர் பிறந்த நாளில், ஜெயந்தி நாளில் சபதம் ஏற்போம். இந்த தீய சக்தியை தமிழ்நாட்டை விட்டு ஓட ஓட விரட்டுவோம். அடுத்த ஆண்டு தேவர் ஜெயந்தி வரும்போது இங்கே உங்களைச் சந்திக்கும்போது, தேவர் திருமகனாரின் கொள்கைப்படி நடக்கும் அன்புச் சகோதரியின் ஆட்சியை அமைப்போம். இதை நீங்கள் மனதில் நிறுத்தவேண்டும். செய்வீர்களா.. நம்முடைய கூட்டம். இங்கே இருக்கும் லட்சோப லட்சம் மக்கள் தேவர் திருமகனாரின் அன்புப் பிள்ளைகள்.

நல்லது நண்பர்களே. முதல்வராகப் பதவி வகித்தவர், அடுத்த முறையும் முதல்வராக வர விரும்பியவர் பேசியதை யூ.டியுப்பில் கேட்கலாம். பார்க்கலாம். ஒரு சோறுக்கு ஒரு சோறு பதம் தோழமைகளே.

பிராமணர்கள் எவ்வளவு புத்திசாலிகள் என்பதை தமிழகம் அறிந்திருக்கவில்லை போலும். பிராமணர்களைவிட தேவர்கள் அதிபுத்திசாலிகளாக மாறிவருவது நன்றாகவே தெரிகிறது. இதே முதல்வர் தேவேந்திரர்களிடம் எவ்வளவு கடுமையாக நடந்துகொண்டார் என்பதை காலம் நினைவில் வைத்திருக்கிறது.

நாடார்களுக்கு இரண்டுபேர் ஆட்சியிலும் நல்ல சலுகைகள். ஏராளமான பதவிகள். இரண்டு பேரிடமும் மாட்டிக் கொண்டது தேவேந்திரர் மட்டும் எனில் உண்மைதான். தற்போதைய அமைச்சரவையில் மூன்று நாடார் சமூக அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன. முதல்வர் தொடங்கி கவுண்டர்கள் முக்கிய அமைச்சர்களாக இருக்கிறார்கள். வன்னியர்களுக்கும் நல்ல செல்வாக்கு இருக்கிறது. மற்ற அனைத்து சமூகங்களை விடவும் பட்டியல் சாதிகளிலிருந்து அதிகமான சட்ட மன்ற உறுப்பினர்கள் இருந்தும், அமைச்சரவையில் இடமோ மூன்று பேர். அதுவும் உப்புச் சப்பில்லாத துறைகள். மற்ற துறை அமைச்சர்களிடம் போய் கையேந்தி நிற்கும் அமைச்சரவைப் பதவிகள். அமைச்சரவை வரிசையில்

எத்தனையாவது இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதே பட்டியலில் சமூகத்தவரின் செல்வாக்கைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடி.

ஏன் தேவரும், கவுண்டரும், வன்னியரும், நாடாரும் அதிகளவில் அமைச்சர்களாக இருக்கிறார்கள்? எல்லாம் ஓட்டு வங்கி. கவுண்டர் சாதியினர் ஓட்டுக்களைப் பெற கழகங்களிடையே போட்டி. எப்படியாவது ஓட்டுக்களை அள்ளவேண்டும். அதற்கு என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமோ அதைக் கச்சிதமாகப் பார்த்தார்கள். பார்த்தும் வருகிறார்கள். இனிமேலும் பார்ப்பார்கள். அரசியல்வாதிகளுக்கு எல்லவற்றிலும் ஓட்டுக்கணக்கே.

பிராமணர் புத்திசாலியா, பிள்ளைமார் புத்திசாலியா, தேவர்கள் புத்திசாலியா அல்லது நாடார்கள் புத்திசாலியா? கவுண்டரின் புத்திசாலித்தனம் தேவருக்கு வருமா? ஓபிஎஸ் போல் ஈபிஎஸ்-சும் நுனிச்சீட்டில் ஒக்காந்திருப்பார் என்றா தேவர்கள் நினைத்தார்கள்? முப்பது வருடங்கள் ஒன்றாகவே இருந்தால் பிராமணர் புத்தி தேவருக்கு வந்துவிடுமா? வருமென்று நினைத்திருந்தால், முதலமைச்சர் நாற்காலியில் உட்கார முடியுமா? விடுவார்களா? நாற்காலியில் ஒட்கார வைத்தவரையே ஓரங்கட்டிவிடவில்லையா? என்னமாக சூது விளையாடினார்கள்? தமிழ்நாட்டைக் காக்க வேறு ஆளே இல்லையென்றார்கள். தமிழகம் நாதியற்றுக் கிடப்பதாகப் புலம்பினார்கள். தமிழகத்தின் கல்வி என்னாவது என வேந்தர்களெல்லாம் துடித்துப் போனார்கள்.

முதல்நாள் ஒத்துகொண்டு காலில் விழுந்தவர்கள் அடுத்த நாள் தியானம் கலைந்தார்கள். அறைந்த அறையில் தமிழ்நாடே விக்கித்துப் போனது. அங்கிருந்த கூட்டம் இங்கே வந்தது. இங்கிருந்து அங்கே போனது. எது எதுவோ நடந்தது. இப்போ பிறகோ என்றார்கள். நாட்களை எண்ணிக்கொள்ளுங்கள் என்றார்கள். ஒன்றிரண்டு மாதங்களே என்றார்கள். வருசம் கடந்து வண்டி உருண்டு கொண்டே இருக்கிறது. அதிலும் வண்டி எப்போது பார்த்தாலும் சேலத்துக்கே போய் நிற்கிறது. சேலம் தாண்டியும் தமிழ்நாடு இருக்கிறதென்றோ மக்கள் வசிக்கிறார்கள் என்றோ துணை, இணை, அணைகளுக்கு சொல்ல முடியவில்லை. இந்திரப் பிரஸ்தத்திற்கு பயந்து கொண்டு அடக்கி வாசிக்கிறார்கள் போலும். மீறினால் பதவி பறிபோகும். வெட்டியவர்கள் ஒட்டுவார்கள். பின்பு ஒட்டியவர்கள் என்னாவது? நீக்குவதும், சேர்ப்பதும், நீக்கி சேர்த்து விளையாடுவதும்தானே அரசியல்வாதிகளின் முடிவிலா விளையாட்டு.

ஜல்லிக்கட்டு விளையாட்டிற்கு தமிழ்நாட்டில் நடந்த போராட்டங்களும், அதை மாணவர்கள் முன்னெடுத்ததும், அன்றைக்கிருந்த ஆட்சித் தலைமை அதை அங்கீகரித்ததும், பின்னர் ரவுண்டு கட்டி அடித்ததும், அரசியல் என்றால் என்ன என்பதை தமிழக மாணவர்கள் ஓரளவிற்குப் புரிந்திருப்பார்கள். தமிழக ஆட்சியாளர்களின் கண்ணசைவுகளிலேயே அத்தனை போராட்டங்களும் நடைபெறுகின்றன. அரசு நினைத்திருந்தால் ஒரு மணி நேரத்தில் போராட்டங்களை முடித்து வைத்திருக்காதா? அரசுகளின் அடக்குமுறை வழிகள், அதிகாரங்கள், அரசியல்கள், கூட்டல் கழித்தல்கள் அறியாத, புரியாத மாணவர்கள், குறைந்த காலத்திலேயே உஷாரடைந்தது பாராட்டத்தக்கது.

பிராமணரும் பிள்ளைமாரும் ஒற்றுமையாக இருக்கும்போது, தேவரும் தேவேந்திரரும் ஏன் பகையாளிகளாக மாறினார்கள் அல்லது மாற்றப்பட்டார்கள்? பிராமணரும் இசுலாமியரும் நேருக்கு நேராக மோதாதபோது, பிள்ளைமாரும் கிறித்தவர்களும் ஒருவரையொருவர் அடித்துக் கொள்ளாதபோது, நாடாரும் மீனவரும் ஏன் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டார்கள்? வெட்டிக் கொண்டார்கள்? கிணறுகளில் டீசலைக் கொட்டினார்கள்? தமிழர்கள், மனிதர்கள் என்பதை மறந்து, ஆயிரக்கணக்கில் திரண்டு அப்பாவி மக்களின் குடிசைகளைக் கொழுத்தினார்கள். மரங்களை வெட்டிச் சாய்த்தார்கள்.

பிராமணரும் பிள்ளைமாரும் அவரவர் தொழில்களைப் பார்த்துக் கொண்டும், பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி படிக்கவைத்தும், பங்கு சந்தை வருமானத்தை எதில் முதலீடு செய்யலாம் என நிதி ஆலோசகர்கள் தேடியும், மட்டைப்பந்து பற்றி விவாதித்துக் கொண்டும இருக்கையில், தேவரும், நாடாரும், தேவேந்திரரும் இந்து மதத்தை தூக்கிப் பிடிப்பது ஏன்? கோவில்களாகக் கட்டுவது ஏன்? கோவில்களின் உண்டியல்களை நிறைப்பது ஏன்? வருடம் முழுவதும் ஏதாவதொரு கோவிலுக்கு நடப்பது ஏன்? மாற்று மதங்களிலிருக்கும் சகோதரர்கள் மீது வன்மம் பாய்ச்சுவது ஏன்? மூன்று சாதியாரும் பிராமணர்களைவிடப் பக்தியில் மேலானவரா? ஞானத்தில் உயர்ந்தவரா? பிள்ளைமாரைவிட சாமிகளுக்கு நெருக்கமானவரா?

மூன்று சாதிகளுக்கும் குலதெய்வம் கருப்பசாமிதானே. கருப்பசாமிக்காக சண்டையிடுகிறார்களா? மற்ற பெரிய சாமிகளுக்காக சண்டையிடுகிறார்களா? கருப்பசாமி கோவில்களை மாற்று மதத்தவர் இடிக்கிறார்களா? கருப்பசாமிக்கு

சிலை வணக்கம் உண்டா? கோவில்கள் உண்டா? முன்னோர் நினைத்திருந்தால் கருப்பனுக்கு சிலை வைத்திருக்க முடியாதா? ஒரு சிலை வைக்கக்கூட முடியாதவர்களாக இருந்தார்களெனில், மூன்று சாதிக்காரர்களும் ஆண்ட பரம்பரை என மீசை முறுக்குவது எப்படி? நான்கு சுவர் கட்டி கல்லைக் கொத்தி சிலை வைக்கத் தெரியாமலா அல்லது அந்த அறிவுகூட இல்லாமலா மூன்று சாதியரின் அப்பன்களும், தாத்தன்களும், பாட்டன்களும் வாழ்ந்தார்கள்? ஏன் மண்ணைப் பீடமாக்கி அருவாள்கள் நட்டு வைத்து, கருப்பசாமி எனும் பெயரில் மூவரின் முன்னோரும் வழிமரபாக வணங்கிவந்தனர்? தமிழகத்தில் எத்தனை எத்தனை கோவில்கள்.. எவ்வளவு உயரமான படோடபமான கோபுரங்கள்.. சாமிகள்.. சிலைகள்.. ஊர்வலங்கள்.. விழாக்கள்..

மூன்று சாதியரும் அருவாளை ஏன் வணங்குகிறீர்? வணங்கி வருகிறீர்? சிலருக்கு வசதி வந்ததால், வட்டித் தொழில் கூடியதால், புதுசாக சிலை வைத்திருப்பீர்கள்? அவரவர் ஊர்களில், எப்போதிலிருந்து கருப்பனுக்கு சிலை வழிபாட்டை ஆரம்பித்தார்கள், எப்போதிலிருந்து பிள்ளையாருக்கு சிலை வைத்தார்கள் என்பதை அறியமுடியுமல்லவா? வசதிவந்தால் முன்னோர் சொல் மீறலாகுமா?

கருப்பசாமிக்கு சிலை வைக்கக் கூடாதா? அந்நியர் ஆட்சியில் சட்டம் ஏதும் இயற்றப்பட்டிருந்ததா? கருப்பசாமி கும்பிடுவது மறுக்கப்பட்டதா? கோவில்கள் கட்டியெழுப்பக் கூடாது எனத் தடுத்தார்களா? மூன்று சாதியென்றில்லாமல் தென்பகுதி ஆதிராவிடரும் கருப்பசாமியைக் குலதெய்வமாக வணங்குகிறார்களா இல்லையா? மேற்கிலும் கருப்பசாமிக்கு செல்வாக்கு இருக்கிறதா இல்லையா?

கருப்பண்ண சாமி யார்? அருவாள் எதற்கு? அருவாளின் குறியீடு என்ன? அர்த்தம் என்ன? வெள்ளைக் குதிரை யார்? அய்யனார் யார்? சாஸ்தா பெயர் ஏன்? சாத்தன் யார்? சாத்தன் எனும் பெயரை வைத்துக்கொள்ளும் சாதிகள் எத்தனை?

தமிழகத்தில் குதிரை தூக்குவது யார்? குதிரையை தலையிலும் தோளிலும் சுமப்பது யார்? எந்தெந்த சாதி? நாம் ஏன் குதிரை தூக்குகிறோம்? குதிரையைத் தாங்குகிறோம்? தேவர்களே.. தேவேந்திரர்களே..

நாம் யார்? நமது வரலாறு என்ன? நமது உறவின் முறை யாது? நாம் உறவுடையவரா? பகை எனில் எப்போதிலிருந்து? யாரால்? ஏன்? எதற்கு? குதிரை

யார்? பரி யார்? வேட்டைக்காரன் யார்? பரிவேட்டை ஆடுபவன் எவன்? வேட்டைக்காரன் வேட்டையாடினால் உயிர்க்குலம் தாங்குமா? பூமியில் தங்குமா?

என்றிலிருந்து ஸ்ரீதேவர் தேவரினத்தின் தெய்வமானார்? முத்துராமலிங்கம் என்றிலிருந்து எல்லாம் வல்ல கடவுளானார்? முத்துராமலிங்கத்தை பரம்பொருள் ஸ்ரீமுத்துராமலிங்கத் தேவர் திருமகனார் எனப் பெயர் மாற்றம் செய்தது யார்? ஏன்? பரம்பொருள் முத்துராமலிங்கமெனில் நாராயணன் யார்? தேவரினத்தார் நாராயணனைப் பரம்பொருள் இல்லை என்கிறாரா?

தேவரின் தெய்வம் முத்துராமலிங்கத்தேவரெனில் கருப்பசாமி யார்? பதினெட்டாம்படிக் கருப்பசாமி யார்? காவல்காரன் யார்? வேட்டைக்காரன் வரமாட்டான் என நினைத்தீரா? வேட்டைக்காரன் வரும்போது அண்டம் நடுநடுங்குமாமே, ஆகாசம் இடி இடிக்குமாமே. தேவரினத்தாருக்குத் தெரியாதா? தெரியாது என அவனிடம் சொல்ல முடியுமா? அவனைத் தெரியாது என மறுக்க முடியுமா? வேட்டைக்காரனிடம் பொய்சொல்லித் தப்பிக்க முடியுமென்றா நினைக்கிறது தேவரினம்?

முக்குலத்தாருக்கும் தேவர்தான் தெய்வமல்லவா? தேவரே தெய்வம். பசும்பொன்னே கோவில். அப்படித்தானே முக்குலத்தாரே. தேவர் துணை. தேவரே கண்கண்ட தெய்வம். வசதி வந்தவுடன் தங்கக் காப்பெல்லாம் ஜொலிக்கிறது. தேவர் சிவனா? அதனால் தான் பரம்பொருள் தேவர் என்கிறீரா?

மறவர் முத்துராமலிங்கம் சிவனாவது சரிதான். சேர்வைக்காரருக்கு, அம்பலத்தானுக்குத் தெய்வம் யார்? அம்பலத்தில் ஆடுகிறான் எனப் பாட்டெழுதி வைத்ததால், ஆடுபவன் சிவன் என நினைத்து, தேவரை பரம்பொருள் என வழிபடுகிறீரா? தெருவெங்கும் சிலை நடுகிறீரா? அடேங்கப்பா, தலையில் போட்டுக் கொள்வதென்ன, மொட்டை என்ன, முளைப்பாரி என்ன, ஊர்வலம் என்ன, முடிக் காணிக்கை என்ன, ஜோதி ஓட்டம் என்ன, பேரவைகள் என்ன, முத்துராமலிங்க மறவனார் பரம்பொருள் எனில் கள்ளழகன் யார்? ஒரு தோசை வாங்கி ஊர் ஊராக, வீடுகள் தவறாமல் கொடுத்து வரும் நாட்டார்கள், முத்துராமலிங்கத் தேவர் பரம்பொருள் என்பதை ஒப்புக் கொள்கிறாரா?

கள்ளருக்கும் தேவர்தான் பரம்பொருள் இல்லையா? சிங்க சிம்மாசனத்தில் தேவர் அமர்ந்திருக்கும் சிலைகளை தெருவெங்கும் நட்டிருக்கிறீரல்லவா. தேவர்

சிங்கமா? முகநூல்களும், போட்டோக்களும், சிங்கங்களும், அருவாள்களும். என்னே வீரம். தமிழ் நாட்டில் சிங்கமே இல்லையே. எங்கிருந்து வந்தார்கள் இத்தனை சிங்கங்கள், சிங்கக் குட்டிகள். பொன்னி நடுவில் உறங்குவதுபோல் நடித்துக் கொண்டு கண்வளரும் அந்தச் சிங்கம் யார் எனக் கள்ளருக்குத் தெரியுமா? அந்தச் சிங்கத்தின் பேர் என்ன எனக் கள்ளர்குடி அறியுமா? மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும் அந்த சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீய் விழித்து வேரி மயிர்பொங்க மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டால் என்னாகும் என்பதை கள்ளர்கள் அறிந்திருக்க வில்லையா? அறிந்துமா சிங்கம் எனச் சொல்லிக் கொண்டு அருவாளைத் தீட்டுகிறீர்?

யாருக்கெதிராகத் தீட்டப்படுகின்றன கள்ளர்களின் அருவாள்கள்? மறவர்களின் வீச்சரிவாள்கள்? தேவன்லே. மறவன்டா. கள்ளன்டா. அருவாள்டா.

யாருக்கெதிராகத் தீட்டப்படுகின்றன முக்குலத்தோரின் அருவாள்கள்? தமிழ்ப் பகைவர்க்கெதிராகவா? மண்ணைக் கொள்ளையடிப்பவருக்கு எதிராகவா? பெண்ணைக் கொலை செய்பவருக்கு எதிராகவா? திருடர்களுக்கெதிராகவா? பொய்யர்களுக்கெதிராகவா? குற்றம் புரிந்தோருக்குகெதிராகவா? கயவர்களுக்கெதிராகவா? சாதி வளர்க்கும் மடையர்களுக்கெதிராகவா? மதவெறியைத் தூண்டும் அறிவிலிகளுக்கெதிராகவா? வணிகக் கொள்ளையருக்கெதிராகவா? நிலத் தரகருக்கு எதிராகவா? பெண்களை வைத்துச் சம்பாதிக்கும் பேதைகளுக்கெதிராகவா? யாருக்கெதிராகத் தீட்டப்படுகின்றன அருவாள்கள்?

பள்ளருக்கெதிராகவா? பறையருக்கெதிராகவா? நாடாருக்கெதிராகவா? ஆம் எனில், பள்ளர் தமிழ்ப் பகைவரா? திருட்டுத் தொழில் செய்கிறாரா? பெண்களை சீரழிக்கிறாரா? குடித்துவிட்டு தகராறு செய்கிறாரா? பள்ளர் தம்மை தேவேந்திரர் எனக் கூறுவதை, நாடாண்ட பரம்பரை எனக் கூறுவதை, போஸ்டர் அடித்து ஒட்டுவதை தேவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லையா? ஆம் எனில், கள்ளர் எப்போது தேவரானார்? குற்றப் பரம்பரை எப்போது ஆண்ட பரம்பரையானது? பள்ளரும் படித்திருக்கிறாரல்லவா? அவரும் கேள்வி கேட்பாரல்லவா?

கள்ளர் தமிழர், பள்ளர் தமிழ்ப் பகைவர். பேச முடியுமா கள்ளரால். கள்ளர் யோக்கியர். பள்ளர் கன்னக் கோல் வைப்பவர். கள்ளர் மனம் ஒப்புமா? கள்ளர் சைவக்காரர். பள்ளர் அசைவக்காரர். கள்ளரால் சொல்ல முடியுமா? கள்ளர்

காடுகரைகளில் உழைத்துச் சாப்பிடுகிறார். பள்ளர் உழைக்காமல் உண்டு வயிறு வளர்க்கிறார். உலகம் ஒப்புமா? கள்ளரைவிட பள்ளர் எதில் குறைந்தவர்? வீரத்திலா? அன்பிலா, சாமி கும்பிடுவதிலா, பாசத்திலா, ஆண்மையிலா?

கள்ளர் தேவராகும்போது பள்ளர் தேவேந்திரராகக் கூடாதா? கள்ளரும் பள்ளரும் வருசநாட்டுப் பகுதிகளில் எப்போதிலிருந்து வாழ்கிறீர்? பழங்காலத்திலிருந்தே வாழ்கிறீரா அல்லது சில நூற்றாண்டுகளுக்குமுன் அங்கே குடிமாறினீரா? சில நூற்றாண்டுகளுக்குமுன் எனில் எப்போதிலிருந்து, எங்கிருந்து, யாரால் மலைக் காடுகளுக்குள் வாழத் தலைப்பட்டீர். கள்ளர் ஆண்ட குடியெனில் மதுரையையும் ஆண்டிருப்பீர். மதுரையில் ஆட்சியதிகாரத்தை விட்டுவிட்டு காடுகளுக்குள் ஓடி ஒளிந்ததேன் அரச பரம்பரையினரே.

மற்ற சாதிக்கெதிராக கள்ளர்கள் அருவாள் தீட்டப்படுவதுபோல் தெரியவில்லை. மற்ற மொழிக்காரருக்கு எதிராகத் தீட்டப்படுவதில்லை. மற்ற மதத்தாருக்கு எதிராகத் தீட்டப்படுவதில்லை முக்குலத்தோரின் அருவாள்கள்.

மாற்று மொழிக்காரரை, பிற மதத்தவரை உறவுமுறை சொல்லிப் பேசும் முக்குலம், தோள்மேல் கைபோட்டு அரவணைக்கும் முக்குலம், தமிழ் மண்ணுக்குரிய சாதிகளுக்கு, இம்மண்ணின் மூத்த குடிகளுக்கு, தமிழ் மொழியின் மீதும், தமிழ் இனத்தின்மீது பெருமதிப்பும் உயர்வும் வைத்திருக்கும் குடிகளுக்கு, குலங்களுக்கு, எதிராக அருவாளைத் தீட்டுகிறதெனில், கழுத்தில் பாய்ச்சுகிறதெனில், தமிழர் யார்? தேவர் யார்? முக்குலத்தார் எவர்?

பள்ளரும், பறையரும், நாடாரும், கோனாரும், மீனவரும் இன்னபிற எளிய குடிகளும் தமிழர் இல்லையெனும்போது, இம்மண்ணின் மைந்தர் இல்லையெனும் போது, ஆண்ட பரம்பரை இல்லையெனும்போது, தேவர்கள் என்பவர் யார்? இவரெப்படி தமிழகத்தை ஆண்டிருக்க முடியும்? இவர் எங்கிருந்து வந்தார்? இவர் ஆண்ட காலம் எது? எப்படி ஆண்டார்? யாரை ஆண்டார்? பள்ளர் குடியையும், பறையர், நாடார் குடிகளையையும் சேர்த்து நாம்தமிழர் எனச் சொல்ல முடியாத முக்குலத்தார் தமிழக்குடியாக இருக்க முடியுமா?

பள்ளர் ஆந்திராவிலிருந்து வந்தவராம். நாடார் இலங்கையிலிருந்து வந்தவராம். பறையர் அடிமைகளாகக் கொண்டுவரப்பட்டவராம். சங்ககாலம் தொட்டு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து தற்போதுவரை தமிழகத்தை ஆண்ட ஒரே

இனம் தேவரினமாம். மூன்று அரச குடிகளும் மூன்று குலத்தவரைச் சார்ந்தவராம். முக்குலத்தவராம். யாராவது மறுத்தால். மறுத்துப் பேசினால். தேவரின் அருவாள் பேசுமாம்.

நாடாண்ட பரம்பரையினர் எப்போதிலிருந்து படிக்க ஆரம்பித்தார்கள் பெருங்கவிஞர்களே. எப்போதிலிருந்து பள்ளிக்கூடம் போக ஆரம்பித்தார்கள் பெருங்கலைஞர்களே. எத்தனை எத்தனை சினிமாக்கள். எவ்வளவு பாட்டுக்கள். நாடாண்ட இனமடா. முக்குலத்து சிங்கமடா. வீச்சருவா பேசுமடா.

மீசை முளைக்காத இளைஞர்களுக்கு வேண்டுமானால் வரலாறு தெரிந்திருக்காது. பெருங்கவிஞர்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். மூவேந்தரும் முக்குலத்தார் எனில் அன்று வாழ்ந்த மக்கள் யார்? அன்றைக்கு வாழ்ந்த மக்களே பண்பட்டவர்களாக இருந்திருக்கும்போது. நாடாண்ட அரசர்கள் எத்தனை பண்புள்ளவர்களாக இருந்திருக்க வேண்டும்?

பள்ளர்கள் ஈராயிரம் வருடங்களுக்கும்மேல் வயல்களில் களையெடுத்தே திரிகிறார்கள். முக்குலத்தோர் அந்த காலத்திலிருந்து தமிழர்களை அடக்கி ஆண்டு கொண்டே இருக்கிறீர். அப்படித்தானே.

ஓரிரு தலைமுறைக்கு முன்புவரை கள்ளர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை தமிழ்நிலம் அறியாது என நினைக்கிறீர்களா? வெள்ளைக்காரனிடமிருந்து பெற்ற மண்ணால் அல்லவா கள்ளர்குடி விவசாயிகளாகியது. வயல்களில் கடுமையாக உழைத்தல்லவா கள்ளர்குடி முன்னேறியது. ஆடும் மாடும் மேய்த்தல்லவா கள்ளர் குலம் வசதி வாய்ப்புக்களைப் பெருக்கியது. ஆண்ட பரம்பரை எனப் பேசியதும் எழுதுவதும் அதன் பிறகல்லவா? அதுவும் சமீபத்தில்தானே.

எங்களுக்கு எப்போதும் எக்காலத்தும் தேசத் தந்தை நேதாஜி மட்டும்தான். தேவர் வீட்டு சிறுபையன்களின் முகநூல் பதிவுகளில் தவறாமல் இந்த வாசகமும் இடம்பெறுகிறது. நமக்கு யாரால் சுதந்திரம் கிடைத்தது முக்குலத்தோரே? ஒரு வேளை இந்தியாவிற்கு வீரத்தால் சுதந்திரம் கிடைத்திருக்குமேயானால் இந்தியா எப்படி இருந்திருக்கும்? மூவேந்தர்களும் வீரமே பெரிதென்று சண்டையிட்டுக் கொண்டதால் இன்றைக்கு தமிழ்க் குடி எப்படி இருக்கிறது? தமிழ் நிலம் எப்படிக் கிடக்கிறது? தமிழகத்தை விடப் பரப்பளவில் குறைவான நாடுகளுக்கு உலகில் எவ்வளவு மதிப்பும் மரியாதையும் கொடுக்கப்படுகிறது? பத்துக் கோடிப் பேர்கள்

கொண்ட தமிழினம் பூமியில் எங்கெல்லாம் சிதறுண்டு கிடக்கிறது? தமிழர் எண்ணிக்கையைவிடக் குறைவான பிற நாடுகளின் குடிகள் உலகத்தில் உயர்வானவர்களாக அறியப்படும்போது, தமிழர்க்கு ஏன் சென்ற இடமெல்லாம் சிறுமை நிகழ்கிறது? வீரத்தால் எல்லாம் முடியுமானால் ஈழம் எப்போதோ பிறந்திருக்காதா? உலகத்தை வீரத்தால் வெல்ல முடியுமா? வீரத்தால் மக்கள் மனங்களை வெல்ல முடியுமா? வீரத்தால் வெல்வது நிரந்தரமாகுமா?

தேவரினப் பெருங்கவிஞர்களுக்குத் தெரியாதா? ஒரு புல்லைக்கூட வீரத்தால் வெல்ல முடியாது என. வாள் கொண்டு புல்லை வெட்டுகிறோம், ஒழித்துக் காட்டுகிறோம் என ஒருவன் சவால்விட்டு வெட்ட ஆரம்பித்தால் என்னாகும்? எத்தனை தலைமுறைகள் வெட்டினாலும் புல் மீண்டும் முளைக்குமன்றோ. வெட்டி அகற்றிவிட்டோம் என நினைத்தால் சிறுமழைக்கே துளிர்த்து வருமன்றோ? கோடையில் காய்ந்து விட்டதே என இறுமாப்பு எய்தினால் காலத்தில் மீண்டும் முளைவிடுமன்றோ. புல் முளைக்காமல் தடுக்க வேண்டுமெனில் அதற்கு அறிவல்லவோ தேவை.

வல்லான் வகுத்தது சட்டமாகுமா? வல்லவன் சொல்படி உலகம் நடக்குமா? தமிழர் அறிவில் சிறந்தவரா அல்லது வீரத்தில் சிறந்தவரா? மூவேந்தர் மரபு வீரத்தால் மதிக்கப்படுகிறதா அல்லது அறிவால் கொண்டாடப்படுகிறதா?

நாடாண்ட பரம்பரை, ஆண்ட பரம்பரை, மூவேந்தர் பரம்பரை எனப் பேசுவதற்கு தமிழர்க்கு வெட்கமா இல்லையா?

அன்றைய பிராமணர் மகுடம் சூட்ட மறுத்திருந்தால் என்ன, இன்றைய பிராமணர் கும்பாபிஷேகமே செய்து வைக்கிறார். முன்னெல்லாம் முக்கியச் சாலைகளிலும், பேருந்து நிறுத்தங்களிலும் பெரிய பெரிய சிலைகளாக வைத்தீர். தற்போது கோவில்கள் கட்ட ஆரம்பித்துவிட்டீர். பசும்பொன் முத்துராமலிங்கம் முக்கியக் கடவுளாக இருக்கிறார். இருபக்கமும் துவார பாலகர்கள் நிற்கிறார்கள். இப்படியல்லவா கோவில் இருக்க வேண்டுமென்று புளகாங்கிதமடைகிறீர். தமிழ்நாடு முழுக்க தேவர் கோவில்கள் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறீர். நமது தேவருக்குக் கோவில் பாரீர் என ஏராளமான பதிவுகள் சுட்டிக் காட்டுகின்றன.

ஆளுக்கொரு செங்கல் எடுத்து அறுபடை வீடு கட்ட வாரீர். பிரம்மாண்டமாகக் கட்டிவிட்டீர் அல்லவா? மூவேந்தர் யாரேனும் மண்ணில் பிறந்து

இறந்தவருக்கு கோவில் கட்டியதாக அறிந்திருக்கிறீர்களா தேவர்களே? மூவேந்தர் மரபினர் எனில், தமிழ் நிலமெங்கும் யாருக்குக் கோவில் கட்டி வருகிறீர்? சிவபெருமான் சாதியடா, அவருள் நாங்க பாதியடா, தென்னாட்டுச் சீமையில எங்க தெய்வந்தான் வாழுதுங்க. தேவரைய்யா பேரச் சொன்னா தெய்வமும் வணங்குமுங்கோ.

ஆர்.எஸ்.எஸ்.ஸில் சேர்ந்து கடுமையாக உழைக்கும் தேவர்கள் கொதிக்கிறார்கள், தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் தேவாலயங்களாக கட்டி வருகிறார்களாம். தமிழர்களைப் பூராவும் மதம் மாற்றாமல் விடமாட்டார்களாம். தமிழ் நிலத்தில் எப்படி மசூதிகள் கட்டலாம்? மசூதிகளில் எப்படி பாங்கு ஒலிக்கலாம்? பிள்ளையார் சதுர்த்திக்கு மசூதி வழியே ஊர்வலம் போகக் கூடாதாம், போனாலும் ஆட்டம் பாட்டம் இல்லாமல், கொட்டடிக்காமல் போக வேண்டுமாம். எங்கே வந்து சட்டம் போடுகிறீர்? இது இந்து மண். இந்து ராஷ்ட்டிரம்.

தற்போதைய நிலையில் உலகில் மிகவேகமாகப் பரவும் மதம் தேவர்களின் மதமல்லவா. மிக அதிகமாக முன்னெடுக்கப்படும் ஒரே கடவுள் முத்துராமலிங்கத் தேவரல்லவா. ஆண்டவராம் இயேசு தமிழகத்திற்கு வர கிட்டத்தட்ட 1500 ஆண்டுகள் ஆனது. இசுலாமிய மதம் டெல்லிக்கு வர 600 வருடங்கள் ஆனது. தேவர் மதம் வெறும் அறுபதாண்டுகளில் டெல்லிக்குப் போய்விட்டது. வெறும் ஐம்பதாண்டுகளில் தமிழ் நிலமெங்கும் பெருகிவிட்டது. சிவனைப் போற்றிய நாயன்மார் எத்தனையோ முயன்றும் இன்னும் ஊர் ஊருக்கு சிவன் கோவிலில் வந்தபாடில்லை. ஆழ்வார்களால் பரம்பொருள் என நிறுவப்பட்ட கண்ணனின் கோவில்கள் அனைத்து ஊர்களிலும் இல்லை. பரம்பொருள் முத்துராமலிங்கனாரின் கோவில்கள் ஊர் ஊருக்கு வந்தாயிற்று. கொச்சியில் மூன்று சென்ட் நிலத்தில் கட்ட ஆரம்பித்தாயிற்றாமே. சீக்கிரம் கட்டி முடித்து கும்பாபிஷேகம் வைத்துவிடுங்கள். தேவர்களிடம் இல்லாத பணமா? அரசியல் செல்வாக்கா? அதிகாரமா?

அதிகாரமுள்ளவர் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். யாரை வேண்டுமானாலும் கடவுளாக்கலாம். உலகின் ஒப்பற்ற தலைவராக்கலாம். பெருங்கோவில்கள் எழுப்பலாம். மக்களையெல்லாம் மண்டியிடச் செய்து வழிபட வைக்கலாம். கடவுளுக்குக் காணிக்கை செலுத்த சட்டமியற்றலாம். நிலத்தைப் பிளந்துகொண்டு விதை முளைத்து வருவதுபோல் உண்மை ஓர் நாள் வெளிப்படும். அன்றைக்குத் தெரியும் உண்மை என்றால் என்னவென்று? பரம் பொருள் யாரென்று?

தேவர்கள் தேவர் திருமகனாரை பரப்புவதைப் போலவேதான், உலகில் அவரவர்கள் அவரவர் கடவுள்களை, பரம்பொருள்களை, ஆண்டவர்களைப் பரப்புகிறார்கள். தேவர்கள் இருபத்திநாளு மணி நேரமும் தேவர் பாடல்களை, தேவர் சாதிப் பெருமைகளைப் போடுவது போலவே, பிற சமயத்தவர் அவரவர் பாடல்களைப் போடுகிறார். தேவர்களுக்கு வசதிவாய்ப்புகள், அரசியல் லாபங்கள் வருவதைப்போல் அவர்களுக்கும் வெளிநாட்டு முதலீடுகள் வருகின்றன. அவர்களும் தேவர்களைப் போலவே ரோடுகளிலும், குளங்களிலும், முக்கியப் பகுதிகளிலும் அவரவர் சமய வழிபாட்டிடங்களைக் கட்டுகிறார்கள்.

எந்த தேவர் சிவனை, பெருமாளை, முருகனை வணங்குகிறார்? ஐம்பதாண்டுகளுக்குள் தேவரே பரம்பொருள் ஆகும்போது, ஈராயிரம் ஆண்டுகளில் கிறிஸ்து ஏன் பரம்பொருளின் மகனாக, பரம்பொருளாக ஆகக்கூடாது?

டெல்லியில் சிலை, மும்பையில் சிலை, கொல்கத்தாவில் சிலை, சென்னையில் சிலை, கோவையில் சிலை, இந்தியாவெங்கும் தேவருக்கு சிலைகள் வைப்பது எப்படி சாத்தியமானது? விரைவில் உலகெங்கும் தேவர் பெருங்கடவுளாகக் கொண்டு செல்லப்படுவார்தானே. இசுலாம் இவ்வளவு வேகமாகப் பரவவில்லை. அரேபியாவிலிருந்து பாரசீகம் வருவதற்கு நூறாண்டுகள் ஆனது. தேவர்கள் விரைவாகக் கடவுளைப் பரப்பினார் என கின்னசு சாதனைக்கு விண்ணப்பிக்கலாம்.

தமிழ்நிலத்தின் பெருமைமிகு மூவேந்தர்களை சாதிக்குள் அடைத்தது போதாதென்று, தமிழ்மண் வணங்கும் பேராண்மைக் கடவுள்களையும் சாதிக்குள் அடைக்க முயல்கீறீர். தேவன்டா.. சிவன்டா..

இந்திரன் தமிழ் கடவுளா? தமிழக புராணங்களும் இந்திய இதிகாசங்களும் கூறும் இந்திரன் நம் நாட்டின் கடவுளே அல்ல. அது ஆரியரால் இந்தியாவுக்கு கொண்டுவரப்பட்ட கிரேக்க கடவுள் ஜீயுஸ். இந்திரன் மழைக்கான கடவுளாக பார்க்கப்பட்டான். அதனால் வேளாளர்கள் இந்திரனை தெய்வமாக வணங்கினர். வேளாளரின் கொத்தடிமைகளான ஜாதிகளும் வணங்கி தங்கள் குல தலைவனாக இந்திரனை கூறுகின்றனர். இது நமக்கு எந்த வகையில் பொருந்தும். நாம் என்ன உழுகுடியா. முக்குலத்தோர் இந்திர மரபினர் என்பது கட்டுக் கதையே - தேவர் தளம்.

முக்குலத்தோர் உழுகுடியில்லையா? நிலத்தை உழுது பயிர் செய்யவில்லையா? ஏர் ஓட்டவில்லையா? வயலில் வேலை செய்யவில்லையா? வரப்பு வெட்டவில்லையா? களையெடுக்கவில்லையா? கதிரறுக்கவில்லையா? கோவணம் கட்டிக் கொண்டு நிலத்தில் அரும்பாடுபட்ட தேவர்களுக்கு இழுக்கில்லையா இப்படியான பதிவு.

மூவேந்தர் மரபும் இந்திர மரபென்றல்லவா பட்டயங்களும், சாசனங்களும் அறிவிக்கின்றன. விண்ணுலக இந்திரனின் சார்பாக, மண்ணுலகத்தை ஆள்வதாகவல்லவா புகழ் மொழிகள் எடுத்தாளப்பட்டுள்ளன. சாசனங்கள் இணையத்திலேயே  கிடைக்கின்றனவே. வேளாளரிடம் கொத்தடிமைகளாகக் கிடந்த ஜாதிகள்.. பரவாயில்லை, அவர்களாவது வேறு வழியில்லாமல், கஞ்சிக்கில்லாமல் கொத்தடிமைகளாகத்தான் கிடந்தார்கள். வயிற்றுக்குச் சோறிருந்தும், பதவிக்காக டயரில் விழுந்து கிடந்ததை வரலாறு மறக்கும் என்றா நினைக்கிறது தேவர் தளம்.

பெருங்கவிஞரின் காப்பியங்களை தேவர்கள் படிக்கிறார்களா எனத் தெரியவில்லை. எவ்வளவு நுட்பமான வேளாண்மைத் தகவல்கள், தெளிவான சித்தரிப்புகள். நீருக்காக, விவசாயத்திற்காக மூன்றாவது உலகப் போர் வருமாம். வருமா தேவர்களே. இலக்கியம், வரலாறு, அறிவியல் உட்பட அனைத்திலும் பெரும்புலமை பெற்ற மகாகணம் பொருந்திய தேவர்களே.. பூமி ஒருநாள் மழையைத் தாங்குமா?

தர்மத்தைப் பேசவேண்டிய கவிஞர்கள், அறத்தைப் பதிய வேண்டிய பெருங்கவிஞர்கள், முக்குலத்தோர் முகவரிக்கு பாடல்கள் எழுதினால் மழை எப்படி பெய்யும்? மண் எப்படி விளையும்? சாதி, மதத்திற்கு அப்பாற்பட்டவரன்றோ புலவர். தொகைப் பாடல்கள் அப்படித்தானே எழுதப்பட்டிருக்கின்றன.

போற்றிப் பாடடி பெண்ணே, தேவர் காலடி மண்ணே. என்றைக்கு மண்ணைப் பாடுவதை விடுத்து தேவர் காலடியைப் பாடினீரோ, கொண்டாடினீரோ, அன்றே மண்ணின் மணம் தொலைந்து விட்டது. மறவரின் புகழ் சிதைந்துவிட்டது. மறவருக்குப் பெருமை மண்ணால் வந்தது. மறவர் மறந்தது அல்லது மறக்கடிக்கப்பட்டது ஏனோ?

தர்மத்தைக் காக்க வேண்டிய மறவர் தேவர் எனும் பெருமையால் தர்மத்தைத் தொலைத்தார். தர்மத்தைப் பேண வேண்டிய மறவர் அதர்மத்திற்கு துணை நின்றார். மானத்திற்கும் ரோசத்திற்கும் பெயர் பெற்ற மறவர் கூட்டம், சூழ்ச்சியறியா மறவர்திரள், அரசியல் சூழ்ச்சிக்கு இரையானார். சமாதிக்குப் போனால் போதும் ஓட்டுக்களை அள்ளிவிடலாம் எனும் அவலநிலையை உருவாக்கினார். வெற்றுப் புகழுக்காக தமிழகத்தைக் கொள்ளையிட அனுமதித்தார்.

தர்மத்தைக் காக்க வேண்டியவர்களே தர்மத்தைத் தொலைத்தனர். தர்மத்தின் தலைவனை மறந்தனர். தர்மத்தின் காவலனைத் துறந்தனர். தர்மத்தை மறந்துவிட்ட தேவர் அறப்பிழைக்குத் தயாராகிறார். தமிழ் மண்ணில் அறம் பிறழ்கிறது.

சிறார்களைச் சிங்கங்களாக்கி, பேனா பிடிக்க வேண்டிய கைகளில் அருவாளைத் தூக்க வைக்கும் முக்குலத்தோர், யாசோதை இளஞ் சிங்கத்தை அறியாதது ஏன்? தேவகி சிங்கம் யாரென்று தெரியுமா முக்குலத்தோரே..

தர்மம் குறைந்தாலே ஓடோடி வந்துவிடும் கண்ணன் அறம் பிழைபட அனுமதிப்பானா? தர்மம் குறைந்தாலும் பரவாயில்லை, அறம் பிழைபட்டால் என்னாகும்? தமிழ் இலங்கியங்கள் அத்தனையும் அறத்தைப் பேசுவது அதனால்தானே. மண்ணில் தர்மம் கூட குறையலாம். அறம் பிழைபடலாகாது.

நல்ல மனிதராக இருந்திருப்பாரோ என நினைக்க வைக்கும் தேவரைக் கடவுளாக்கி அறப்பிழை செய்திட்டீர். தேவர்களுக்கு சமாதி வணக்கம் உண்டோ? தோன்றி மடியும் மானிடப் பிறவியா பரம்பொருள்? மனிதர் கடவுளெனில், ஆமையாய், கங்கையாய், ஆழ்கடலாய், அவனியாய், அருவரைகளாய், நான்முகனாய், நான்மறைகளாய், வேள்வியாய், தக்கணையாய் இருப்பவர் யார்?

முக்குலத்தோரே,

உங்கள் குலதெய்வம் எது?

தேவரினத்தின் தெய்வம் யார்?

தேவருக்கு சாதிவெறி தலைக்கேறி விட்டதெனில் நாடாருக்கு மதவெறி மண்டைக்குள் புகுந்துவிட்டது. கிறித்துவ நாடாரும் இந்து நாடாரும்

பகையாளிகளாக அடித்துக் கொள்ளப்போவது கண்கூடாகத் தெரிகிறது. இருவருக்கும் அவ்வளவு வெறி. சாவி கொடுத்தவா் சுகமாய் வாழப்போகிறாா். பொம்மைகள் அடித்துக்கொண்டு மாளப்போகின்றன.

சாதிக்காக ஓடுவது பத்தாதென்று சாமிகளுக்காகவும் ஓட ஆரம்பித்து விட்டீர். குமரியில் எத்தனை வருடங்களாக சிவாலய ஓட்டம் நடைபெறுகிறது? எந்த சாதிக்காரரெல்லாம் ஓடுகிறீா்? உள்ளூா் விடுமுறை விடப்படும் அளவிற்கு ஓட்டமாய் ஓடுவது ஏன்? குமரிக் கண்டத்திலிருந்து தப்பித்தால் போதுமென்று ஓடிவந்ததை மறந்து விட்டீரா? ஒலிம்பிக்கில் ஓடினாலாவது ஒரு தங்கப் பதக்கம் கிடைக்கும். குமரிக்காரா்களால் மாநிலத்திற்கும், நாட்டிற்கும் பெருமை வந்து சேரும்.

இந்தியாவில் அந்நியா் ஆதிக்கத்திலிருந்து பண்பாட்டிலிருந்து ஓரளவிற்குத் தப்பியது தமிழகமெனில், தமிழகத்தில் அந்நிய ஆதிக்கத்திற்கு, பண்பாட்டிற்கு தப்பிப் பிழைத்தது குமரியன்றோ? முந்துமொழி புகழுடன் விளங்கும் குமரியில்கூட தமிழராய் இணைந்திருக்க முடியவில்லையே. சாதி எனும் புதா்ச்செடிக்குள் மாட்டிக்கொண்டு படாதபாடுபட்டு வெளியில் வந்த குமரி மாவட்டம், வரலாறு தெரிந்தும் மதமென்னும் புதைகுழிக்குள் மாட்டிக்கொள்வது அறிவுடைமையாகுமா.

நாஞ்சில் நாட்டு வெள்ளாளரைப் பாா்த்து நாடாருக்கு மதபோதை தலைக்கேறியதா அல்லது 1980 களில் வந்த பிராமண இந்து முன்னணியினரைப் பாா்த்து மதவெறி போதையூட்டியதா அல்லது சிதம்பரம் தீட்சிதா்கள் வந்து ஷத்திரியா்கள் ஆக்கியதால் மதமென்னும் பேய் பிடித்துவிட்டதா. கல்வியைக் கையிலெடுத்து தமிழகத்தின் அறிவைப் பெருக்கிய நாடாா்குடி, மதத்திற்கு தலையைக் கொடுப்பது ஏன்? சாதியும் மதமும் மனிதரை என்னவெல்லாம் செய்யும், எப்படியெல்லாம் பித்துப் பிடிக்க வைக்கும், பித்தங்கொள்ள வைக்கும் என்பதை நாடாா்கள் அறிந்திருக்கவில்லையா. சாணாராய் இருந்தபோது அறிந்தது சில தலைமுறை இடைவெளியில் நாடாராய் மாறியபின் மறந்துவிடுமா? நாடாா் குடி மறக்கக் கூடிய இழிவா அது? சாதியின் பெயரால் கடவுளின் பெயரால் எத்தனை எத்தனை இழிவுகள், இழப்புகள், வலிகள், வேதனைகள், அவமானங்கள். அனைத்தும் சாதியில் உயா்ந்தால் மறந்துவிடும்போல. மதம் மாறினால் பறந்தோடிவிடும்போல.

வியாபாரத்திலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பதால், பணத்தை எண்ணுவதிலேயே முழுக்கவனமாய் இருப்பதால், நாடாா்கள் தமிழகத்தின் பழைய

வரலாற்றைப் படிப்பதில்லை போலிருக்கிறது. ஈராயிரம் வருடங்களாகியும் தமிழர் மதச் சண்டைகள் ஓய்ந்தபாடில்லை. அதற்கும் மேலான காலத்திலிருந்தே சாதிச் சண்டைகள் தொடர்ந்து வருகின்றன போலும். மூவேந்தரும் தமிழால் ஒன்ற முடியாமல் பகை கொண்டிருந்தாரெனில் அதற்கு வேறென்ன காரணம் இருக்க முடியும்? மூவேந்தர் பகைக்கு மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை, பொன்னாசை காரணமில்லையெனும்போது, நம் மூவேந்தர் ஏன் சங்ககாலம்தொட்டு சில நூற்றாண்டுகள் முன்புவரை பகையாளிகளாக இருந்தார்கள்?

அவர்தம் இறைவன்கள்போல் யார் பெரியவர் என்பதில் ஓயாத சண்டையிட்டாரா? தீராத பகைமை கொண்டாரா? அல்லது நம்மை போன்றே சங்க காலத்திலும் தமிழர் சாதிகளாய்ப் பிரிந்திருந்து, அவரவர் சாதிக்காகச் சண்டையிட்டாரா? அந்தப் பகையை முடித்துவைத்து நம் காலத்திலாவது தமிழர் தமிழால் இணைந்தார், தமிழராய் ஒன்றானார் எனும் நிலைமை உருவாக வேண்டாமா? சாதிகளாய், மதத்தினராய் தமிழரைப் பிரித்து வைக்கும் சூழ்ச்சி தொடரத்தான் வேண்டுமா?

தமிழகம் எவ்வளவோ மதச் சண்டைகளைப் பார்த்திருந்ததாகச் சொல்லப்பட்டாலும், நம் காலத்தில் நிகழ்ந்த மண்டைக்காடு மதக் கலவரம், தமிழருக்கு மதம் பிடித்தால் என்னாகும் என்பதற்கு நேரடிச் சாட்சியமல்லவா? மதத்திற்காகச் சண்டையிட்டவர் யார்? நாடார். நாடார் யார்? ஆண்ட பரம்பரை. மதத்தின் காவலர்கள். நெல்லைலே. அருவாதா பேசும்லே. நாடார் குல சிங்கம்லே. காட்டை ஆள்வது சிங்கம். நாட்டை ஆள்வது நாடார். சிங்கம் சீறினா காடு தாங்காது. நாடான் சீறினால் நாடு தாங்காது. அற்புதம். அருமை. கொஞ்சம் காலத்தைப் பின்னோக்கிப் பார்க்கலாமா சத்திரியர் குல சிங்கங்களே, நாடார் குல சான்றோர்களே, கிராமணிகளே.

நாம் வந்த பாதையை மறக்கலாமா. பாதை சரியில்லையெனில் அதை செப்பனிட்டு, நடப்பதற்கு ஏற்றதாக மாற்றுவதல்லவோ அறிவுடைமை. பின்னால் வருபவராவது நம்மைப்போல சிரம்ப்படாமல், கொடுமைகளை அனுபவிக்காமல், அவராவது நன்றாக நடக்கட்டும், சுகமாய் வாழட்டும் எனத் திட்டமிடுவது செயலாற்றுவதுதானே சிறப்புடையதாக இருக்க முடியும்.

நம் காலத்திலேயே, நமது கணினி காலத்தில்கூட இந்தளவுக்கு சாதிச் சண்டைகள், மதத்தகராறுகள் நிகழ்கிறதெனில், முன்னர் சாதியும், மதமும்

மக்களை எந்தளவுக்கு தரம் தாழ்த்தி நடத்தியிருக்கும்? நிழலைக்கூட பார்க்கக் கூடாது, பார்த்தால் தீட்டு என்றதாலல்லவா அவர் வேறுபக்கம் மாறினார்? சக மனிதர் நிழலைக் கூடப் பார்க்க சசிக்காதவர் எங்கே. அவர்தம் கடவுள் எங்கே. அரவணைத்துக் கொண்ட அயலவர் எங்கே. குறைந்தபட்சம் கடவுளுக்காகவாவது அவர் நம்மை அரவணைத்தாரல்லவா? அணைத்துக் கொண்டாரல்லவா? ஒன்றாக ஏற்றுக் கொண்டாரல்லவா? நம்மைத் தீண்டியதால் அவருக்கு ஏதாவது நோய் வந்ததா? நம் நிழலைப் பார்த்து அவருக்கு ஏதாவது தீட்டுப்பட்டதா? கோவிலுக்குள் நம்மை விடமாட்டோம் என்றாரா? தடுத்தாரா? இயேசுவின் கருணையல்லவா நம்மை மனிதராகப் பார்த்தது. இயேசுவின் கருணை மதத்திற்காக எனில், அதே மதம்தானே கண்டாலே தீட்டு என்றது. அவர் கடவுள்தானே உள்ளே விடாமல் பூட்டிக் கொண்டது.

அங்கே போனதால் அல்லவா, போக ஆரம்பித்ததாலல்லவா சிதம்பரத்தார் ஓடோடி வந்தார். மதுரையார் ஆலயப்பிரவேசம் நிகழ்த்தினார். அதுவரைக்கும் நிகழாத ஒன்று திடீரென ஏன் நிகழ்ந்தது? நம் மிதிருந்த அன்பினாலா? கருணையாலா? பாசத்தாலா? பாசத்தால் எனில் அதுவரைக்குமில்லாத பாசம் சட்டென ஊற்றெடுத்தது ஏன்? கண்டாலே தீட்டு என்றது பூணுல் போட்டு விடுமளவிற்கு மனம் மாறியது எப்படி? எண்ணிக்கை குறையுமென்றா சத்திரியர்களே? இந்து தர்மத்தைக் காக்க வேண்டுமென்றா சான்றோர்களே?

இந்து தர்மத்தை தூக்கிப் பிடிக்கும் நாடார்களே, இந்தியாவில் தர்மம் இருந்ததா? தர்மம் இருந்ததெனில் எப்படிப்பட்ட தர்மம் இருந்தது? எல்லா மக்களுக்குமான தர்மம் இருந்ததா? அனைத்து மக்களுக்குமான தர்மம் இருந்ததா அல்லது குறிப்பிட்ட மக்களுக்கான தர்மம் மட்டும் இருந்ததா?

தமிழக மண் தர்மத்தில் சிறந்திருந்ததா? முன்னர் செழிந்திருந்த தர்மம் மீண்டும் தழைக்க வேண்டுமென்றா இந்து தர்மத்தைத் தூக்கிப் பிடிக்கிறீர்? இந்து தர்மமும், இந்துக்களும், உயர்சாதி இந்துக்களும், சாதி இந்துக்களும் எப்படி இருக்கும், இருப்பார்கள் என்பதைப் பார்த்தவர்களல்லவா நாம்.

கமுதி சுந்தரேசனாரைப் பார்க்க நடத்திய சட்டப்போராட்டங்களெல்லாம் நாடார் குல இளஞ்சிங்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை போலும். அப்பாக்களும், தாத்தாக்களும் பத்துக்குப் பத்து அறையிலோ, ஆறுக்கு ஆறு அறையிலோ, அடைந்து கிடந்து சம்பாதித்து, படிக்க வைத்து, பேராசிரியர்களாகவும் பெருவணிகர்களாகவும் ஆக்கியதால், ஈராயிரம் ஆண்டுகளாகவே நாடார்குடி

இப்போது போலவே கல்வியும் வசதி வாய்ப்பும் பெற்று அரசாண்ட குடியாக இருந்ததாக நினைக்கிறது முகநூல் நாடார் குல சிங்கங்களின் பதிவுகள்.

நாடாராய் இருப்பது அவனுக்குப் பெருமை. நல்லா தைரியமாய் சொல்லுங்க. நாடார் சிங்கமென்று சொல்லுங்க. வெட்டருவா வேல் கம்பு இவனக் கண்டா வணங்கும். இங்கு வீசுகின்ற காத்துகூட இவன் பெயரைச் சொல்லும். நாம நாடாண்டவங்க. நாடாளப் பிறந்தவர்கள் - நாடார் வெட்டறுவா பாடல்.

அறிவிற் சிறந்த நாடார், உழைப்பிற்குப் பெயர்பெற்ற நாடார், தமிழ்ச் சமூகத்தால் வன்முறையாளர்களாய்ப் பார்க்கப்பட்டவர்களைக் கொண்டாடுவதும். அவர்களே நாடார் குலத்தின் பெருமை எனச் சிறப்பிப்பதும், அவர்களோடு இணைத்து காமராஜர் புகழைக் கெடுப்பதும், காமராஜரைச் சாதித்தலைவராய்ச் சுருக்குவதும் ஏற்புடையது தானா?

எவ்வளவுதான் கல்வியில் முன்னேறினாலும், கல்வியறிவு பெற்றாலும், தமிழர் தம்மை சாதியாய்த்தான் உணருவார் போலும். ஆங்கிலேயரை எதிர்த்து வீரமாகப் போராடியதாகக் கொண்டாடப்படும் நெல்லைச் சீமையில்தான் தற்போது அதிகமான கொடூரக் கொலைகள் நிகழ்த்தப்படுகின்றன. கோபத்தில் பெரியவர் எனில் அவர் முட்டாள்தனத்தில் சிறந்தவர் என்றே அர்த்தம். அவர் இன்னும் மனிதராக மாறவில்லை எனவே பொருள். அசல் காட்டுமிராண்டி, வேட்டி கட்டினால், முழுச்சொக்காய் போட்டால், முகத்தில் பவுடர் அப்பிக் கொண்டால் மனிதராகிவிட முடியுமா? ஒன்றுமில்லாத உதவாக்கரை விசயத்திற்கு, சாதிப் பெருமைக்கு, கந்துவட்டிக்கு, கள்ளக் காதலுக்கு, மணல் கடத்தலுக்கு, நில அபகரிப்புக்கு, சாராயம், கஞ்சாத் தொழிலுக்கு கொலை செய்பவனெல்லாம் மாவீரன். செத்தவனெல்லாம் வீரத் தியாகி. வெட்கங்கெட்ட மூவேந்தர் மரபுகள் கிராபிக்சில் புகுந்து விளையாடுகின்றன. சாதிக் காவலரே, இனக் காவலரே.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே செவ்வியல் கவிதைகள் இயற்றிய தமிழ்நிலத்தில், சக மனிதரை, மனிதராய் மதிக்காமல், மனிதராய் நினைக்காமல், சாதியாய் அணி திரள்வதை என்னவென்பது. வேந்தர்களையெல்லாம் சாதியாய் சுருக்கியாயிற்று. தமிழகத்தில் ஒரு சாதிக்காரனும் கணியன் பூங்குன்றனார் எங்கள் சாதிப் புலவர் எனச் சொன்னதாகத் தெரியவில்லை. ஒருவேளை அர்த்தம் தெரியாமல் எந்தச் சாதியாவது சொல்லித்தொலைத்திருக்கலாம். ஆண்ட சாதிக்காரர்களுக்கெல்லாம் வீரத்தின் மேல்தான் பற்று. புலவர்களுக்கும்,

புலமைக்கும், ஆண்ட பரம்பரைகளுக்கும் ஏழாம் பொருத்தம். புலவரை எங்கள் சாதியென கொஞ்சம் படித்திருக்கும் ஆண்ட பரம்பரையினரும் சொல்ல மாட்டார்கள். கணியன் எங்கள் சாதிக்காரர் என்றால், யாதும் ஊரே, யாவரும் கேளீர் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டி வருமே. நாங்கள் நாடாண்ட பரம்பரை, அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம்வரை நாங்கள் நாட்டை மட்டுமே ஆண்டு வந்தோம், இனிமேலும் ஆளுவோம். எப்போதும் நாங்களே ஆளுவோம். நாடாண்ட பரம்பரையும் உழுகுடியும் ஒன்றா? உறவினரா? களையெடுத்துக் கஞ்சி குடிக்கும் அந்தப் பயலுகளும், நாடாண்ட வீரபரம்பரையான சிங்கங்களும் சகோதரர்களா, உடன் பிறந்தவர்களா. பூங்குன்றனார் தமிழரே இல்லை. வெள்ளைக்காரன் சூழ்ச்சி. வடுகரின் தந்திரம். கிறித்தவப் பாதிரிகளின் சதி. நாடாண்ட சிங்கங்களே, ஒன்று சேருங்கள். நம் சாதியின் பெருமையைக் குலைக்க சதி நடக்கிறது. சாலையை மறியுங்கள். பேருந்துகளைக் கொழுத்துங்கள். ஆண்ட பரம்பரை யார் என்பதைக் காட்ட வேண்டும்.

ஹலோ, கணியன்னு ஏதோ புலவராம். அவரு நாடாண்ட நம்மளையும் அந்தப் பயலுகளையும் உறவுக்காரங்கன்னு எழுதியிருக்காராம். சும்மா விடக்கூடாது. நாம யாருன்னு காட்டணும். நம்ம சாதிப்பெரும என்னானு ஒலகத்துக்கே காட்டியாகணும். ஒரு பஸ்சும் ஓடக் கூடாது. அலோ கணியன்னு ஒரு.

அல்லோ. அய்னா சப பொதுச் செயலாளரா.

ஆமா. நீயாருலே பேசுதது.

நாங்க ஆண்ட பரம்பரை. எங்க மொழிய உலகப் பொதுமொழியா அறிவிக்கணும். நாங்கதான் ஒலகத்துக்கே நாகரீகத்தக் கத்துக் கொடுத்தோம். ஒலகத்தையே நாங்கதான் ஆண்டோம். இனியும் ஆளுவோம்.

ஏலே, இந்த கன்னியாகுமரி மாவட்டத்துல மனுசங்கள பதினெட்டு சாதியா பிரிஞ்சிருந்தது நீங்க தானாவுலே.

அது வந்து, தொர, அவனுங்க மனசங்களே இல்ல தொர.

அவிங்க வந்தா விலங்குக மாதிரி சத்தம் போடணுமாம், நீங்க எதிர்க்க இருந்தா, கையோசை எழுப்பனுமாம், அதக் கேட்டுட்டு புதர்குள்ள, காட்டுச் செடிக்குள்ள அவிங்க ஒளிஞ்சுக்கணுமாம், ஏலே உண்மையாலே.

தொர, அது வந்து, தொர நாங்க மூவாயிரம் வருசத்துக்கு முன்னாடியே மொழிக்கு இலக்கணம் வகுத்த மூத்தகுடி தொர. ஈராயிரம் வருசத்துக்கு முன்னாடியே எல்லாம் எங்க வீடு எல்லாரும் எங்க சாதின்னு சொன்னவிங்க தொர.

ஏலே, மனுசன மனுசனா மதிக்கத் தெரியாத காட்டுமிராண்டிப் பயலுவ. நீங்களாவே ஒலகத்துக்கு நாகரிகத்த கத்துக் கொடுத்துருக்கப் போறீங்க.

தொர. ஒங்க அக்கவுண்ட் நம்பர் சொல்லுங்க. ஒரு நூறுசீ போடறோம். அறிவிச்சுடுங்க தொர. தமிழுக்குன்னா நாங்க உசுரையே கொடுப்போம் தொர. தமிழன எந்தச் சாதி தமிழன்னு பாத்து உசுரையே எடுப்போம் தொர. நூறு போதும்ல. இப்போதான் தமிழ் தொறய ஓப்பன் பண்றதுக்கு இருந்த சீயயெல்லாம் கொடுத்துட்டோம்.

ஏலே, ஒங்கள மாதிரி காசு வாங்கிட்டு ஓட்டுப் போடுற ஆளுன்னு பாத்தியாவுலே, காசு வாங்கிட்டு கொல செய்யற கூட்டம்னு நெனச்சயாவுலே.

அலோ. ஆன்ஜி. ஒலகமொழிக்காரனுவ ரொம்ப துள்றானுவோ. காவிரியில தண்ணி விட்றாதீக. முடிஞ்சவரைக்கும் நல்லா தண்ணி காட்டுங்க. அப்புறம்ஜீ, தண்ணில தாமரைய எப்படி செழிப்பா வளர்க்குறதுன்ற நம்ம புராஜெக்ட் எப்படி போய்ட்டிருக்கு.

நாடார்களே.. தமிழ்நாட்டில் தாமரை பூப்பூத்து மணம் பரப்ப ஆரம்பித்துவிட்டதுதானே. இமயம்முதல் குமரிவரை தாமரை பூத்துவிட்டதல்லவா? தென்தாமரைக் குளத்தில்தான் நல்ல அறுவடைபோல. தமிழகத்தில் தாமரை யாரால் பூக்க வைக்கப்பட்டது? எப்படி பூத்திருக்கிறது?

பூத்திருப்பது மணம் பரப்பும் தாமரையா? மதம் பரப்பும் தாமரையா? கோவிலுக்குள் விடாதா கூட்டம்தானே இந்து நாடு இந்துக்களுக்கே உரியது என்கிறது. நேற்று நாடாருக்கு நிகழ்ந்தது நாளை இசுலாமியருக்கு நிகழாதா? நிகழ்த்துவதற்கு நாடார்தான் முன்னால் நிற்கப் போகிறீர் அல்லவா?

நாடாண்டதாகச் சொல்லிக் கொள்ளும் நாடார்குடி, எந்த மதம் கோவிலுக்குள் நுழைந்தால் தீட்டுப்பட்டுவிடும் என்றும், கோவிலுக்குள் நுழைந்ததால் கோவில் தீட்டாகிவிட்டது, சுத்தப்படுத்துவதற்கு செலவுத்தொகை வசூலித்துக் கொடுக்க வேண்டுமென்றும் வழக்குப் போட்டதோ, அந்த மதத்தின் காவலர்களாக, போர்வீரர்களாக அணி வகுக்கிறது.

எந்த சாதியின் பெயரால் நாடார்குடி மிகப் பெரிய இழிவைச் சந்தித்ததோ, சாதியின் பெயரால் சொல்லொணாத் துயரங்களை எந்தக் குடி அனுபவித்ததோ, அது இன்றைக்கு சாதியை தலைமேல் தாங்கித் திரிகிறது. சாதிக்காக வன்முறையாளர்களாக மாற்றம் பெற்றிருக்கிறது. சாதிவெறியில், சாதிச்சண்டைகளில் தேவரே பரவாயில்லை என நினைக்க வைக்கிறது.

இந்தளவுக்கு சாதிவன்மம் நிறைந்தவராய் நாடார் இருக்கும்போது, அன்றைய திருவாதாங்கூரின் அத்தனை நிலைகளிலும் உயர்வு பெற்றிருந்த வெள்ளாளர் ஏன் சாதியை உயர்த்திப் பிடித்திருக்கக் கூடாது? தற்போது நாடார் பெருந்திரளாக இருக்கிறீர், என்னவேண்டுமானாலும் செய்வீர் எனில், அப்போது வெள்ளாளர் பெருந்திருளாக இருந்தார், அவர் அவர் சாதியை தூக்கிப்பிடிக்க சாதியை வளர்க்க எதுவேண்டுமானாலும் செய்வார். அது மட்டும் எப்படி தவறாகும்?

ஊரெங்கும் பள்ளிக் கூடங்களைக் கட்டியிருக்கும் நாடார், கல்வியை கையில் வைத்திருக்கும் நாடார், தமிழர்களும் எப்படி அயல்நாட்டவருக்குப் போட்டியாக ராக்கெட்டைச் செய்யலாம், விண்ணுக்கு அனுப்பலாம் என்பதைக் கற்றுக்கொடுப்பதற்கு மாற்றாக, யாருக்குப் பின்னால் அணி திரள்கிறீர்? படை திரட்டுகிறீர்? நாடார்களை வன்முறையாளர்களாக, சாதி வெறியர்களாக, அரசியல் கூத்தாடிகளாக மாற்றுபவர்கள்தான் நாடார் குல மேதைகளா? நாடார் பெயரைச் சொல்லி என்ன செய்தாலும், எத்தனை கொலைகள் செய்தாலும், நாடாண்ட நாடார் இனம் அவரை ஆதரிக்கும் இல்லையா?

தேவருக்கு படிப்பறிவு இன்னும் வரவில்லை, பட்டறிவு கூடும்போது ஓரளவிற்குப் பண்படுவார் எனப் பார்த்தால், பட்டறிவு பெற்றிருக்கும் நாடார்குடி, தேவரையே அனைத்திலும் முன்னுதாரணமாகக் கொள்கிறது. அவர் முத்துராமலிங்க தேவரை முன்னெடுத்தால் இவர் காமராஜர் நாடாரை முன்னெக்கிறார். காமராஜர் நாடார் எனப் போடலாமா? வரும் தலைமுறை, வருங்காலத் தமிழர்கள், நல்லவர் யார், கெட்டவர் யார், நாட்டுக்குப் பாடுபட்டவர் யார், சாதிக்குப் பாடுபட்டவர் யார், கல்விக்கு உழைத்தவர் எவர், சாதிக்கு உழைத்தவர் எவர் என்பதை அறியும் திறனற்ற, மதியற்ற, அறிவிலித் தமிழர்களாக இருப்பார்கள் என்றா நாடார்குடி நினைக்கிறது? அதனால்தான் காமராஜ் நாடார் என காமராஜரின் புகழை வளர்க்கிறதா? காமராஜ் புகழை நாடார்குடி வளர்க்கிறதா அல்லது சாதி எனும் குறுகிய வட்டத்துக்குள் அந்த மாமனிதரை அடைக்கிறதா?

கடவுள் காமராஜ். நாடாருக்கு கடவுள் யாரென்று தெரியாதா? தேவரைப்போல் காமராஜரையும் கடவுளாக்க வெண்டுமென்று ஆசை கொள்கிறதா நாடார்குடி? நாடார் இனமே, தமிழா் யாரையெல்லாம் கடவுளாக்குகிறார் என இணையத்தில் நுழைந்து பாரும். சாதிக்காக, சாதிப்பெருமைக்காக, சாதிப்பிழைப்பிற்காக, கட்டப்பஞ்சாயத்து செய்தற்காக, வெட்டியவனும் செத்தவனும் கடவுள் என்றால், மீசை முளைக்காத இளம்சிறார்கள் இந்த கடவுள்களுக்காக ஆடுவடும், பாடுவதும், விசிலடிப்பதும், ஊர்வலம் போவதும், கத்தியைத் தூக்குவதும், பேருந்தைக் கொழுத்துவதும். இந்த இளம் சிங்கங்கள்தான் வருங்கால தமிழகத் தலைவர்கள், கல்விமான்கள், அரசியல் அறிஞர்கள், விண்வெளி வீரர்கள். சாதி மதமில்லா ஒப்புயர்வற்ற சமதர்ம சமுதாயத்தைப் படைக்கப்போகும் புரட்சியாளர்கள்.

அங்கே எம்ஆர் பாய்ஸ். இங்கே என்.ஆர் பாய்ஸ். அது தேவர் பேரவை. இது நாடார் பேரவை. அங்கே சாதித்தலைவரெல்லாம் கடவுளானார். இஙகேயும் கடளானார்கள். அவர் அரசியலுக்குப் போனார். இவரும் அதற்குள் நுழைந்தார். அவர் அரசியலை போர்க்களமாக்கினார். இவர் வன்முறைக்களமாக மாற்றினார். அரசியல் தரம் தாழ்ந்தது. அரசியல்வாதிகள் தரம் தாழ்ந்தனர். ஓட்டு துட்டானது. குடி பெருகியது. லஞ்சமும் ஊழலும் வளர்ந்தது. கொலையும் கொள்ளையும் கூடியது.

சரிதானே நாடார்களே, நாடார்குல சிங்கங்களே. நாடார் என்ற ஒட்டுடன் ஏராளமான பெண்களின் பெயர்கள் வலைப்பக்கங்களில் உலா வருகிறதே. நாடார் குலப் பெண்மணிகள்தான் இப்படி கணக்குகளைத் துவக்கியிருக்கிறார்களா அல்லது போலியான கணக்குகளா. பத்திரகாளியம்மன் நாடார் பேரவை. அம்மனையும் நாடாராக்கியாயிற்று. அய்யாக்களையும் சாதியாக்கியாயிற்று. பெண்களுக்கும் சாதிப்பற்றை ஊட்டியாயிற்று. குழந்தைகள் மனதிலும் சாதி விதையை நட்டாயிற்று. விரைவில் செடியாகும் என நம்பலாம். நாளும் பொழுதும் தண்ணீர் ஊற்றப்படுகிறதே. வளராமல் என்ன செய்யும்.

நாடாண்ட நாடாரை, அரசாண்ட தேவரை, ஆண்ட பரம்பரை தேவேந்திரரை, முதலில் ஆண்ட முத்தரையரை, முன்னாடி ஆண்ட மறையோரை, சாதி என்னும் களைச்செடி, ஆண்ட பரம்பரை எனும் விஷச்செடி, சுற்றிப் படர்ந்து கொண்டிருக்கிறது. அதன் பிடியிலிருந்து நீர் மீள்வது கடினம். காடாகி, கழுத்தை இறுக்கும் நாளில்தான் களைச்செடியின் அருமையை நீவிர் உணரப் போகிறீர்.

அப்போதும் உணர்வீரா என்பது சந்தேகமே. அந்தளவிற்கு களைச்செடி காடாகிவிட்டது.

கிறித்தவ நாடார்களின் மதப்பற்று திகைக்க வைக்கிறது. அதிலும் பெண்களின் மதப்பற்று பிரமாதம். அது மதப்பற்றல்ல நாடார்களே, மதவெறி. எமது சொந்த அனுபவத்திலிருந்தே சொல்கிறோம். இவ்வளவு மதப்பற்றும், மதவெறியும் மனிதருக்குத் தேவையில்லை. மதவெறி மனிதனை முட்டாளாக்கும், முரடனாக்கும், கொலைகாரனாக்கும். மறவாதீர் மனிதரே..

எந்த சாதி சாதியடுக்கில் உயர்ந்தாலும், உயர்வு பெற்றாலும், தன்னைப் பெருமையாகவே நினைக்கும். அடுத்தவரை, அடுத்த சாதியை தாழ்வாகவே பார்க்கும். சாணார், நாடாராகி, கிறித்தவ நாடாராகியபின், நாடார் பெண்கள் மராப்பு போடுவது உயர்ந்தவரான கிறித்தவ நாடாருக்கு மட்டுமே உரியது என வழக்காடினீர்தானே. கிறித்தவரானவுடன் இந்து மதம் விரோதியாகிவிட்டது. அப்படித்தானே. இந்து கடவுள்களையெல்லாம் வேறு பெயரால் அழைக்க வேண்டுமென பிஞ்சுகள் மனதில் நஞ்சை விதைக்கிறீர். நீர் மறுக்க முடியுமா? உமது கடவுள் மட்டும் உலகின் ஒரே கடவுள். மற்ற மதத்தவர் கடவுளெல்லாம் கடவுளே அல்ல. இயேசுவே உண்மையான கடவுளென்கிறீர். நீங்கள் தத்துவ விசாரம் செய்து இயேசுவே உண்மையான கடவுள் என அறிந்து அங்கே போகவில்லை. உண்மையை உணர, உணர்வதற்காக அங்கே போகவில்லை. உலகத்திலுள்ள அனைத்து கடவுள்களையும் அறிந்து, அறிந்தவற்றுள் அதுவே உயர்ந்தது என்பதற்காகவும் அங்கே போகவில்லை. எதற்குப் போனீரென்று, மாறினீரென்று, உங்களுக்கும் தெரியும், உலகத்துக்கும் தெரியும்.

ஓரிரு தலைமுறைக்குமுன் கிறித்துவரான நீரே இந்தளவு மதத்தை தூக்கிப் பிடிக்கிறீர் எனில், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மதத்தை வைத்தே பிழைப்பு நடத்திவரும், வயிறு வளர்த்துவரும் கூட்டம், எந்தளவுக்கு மதத்தைத் தாங்கும், உயர்த்திப் பிடிக்கும்.

அப்பா இந்துவாக இருக்கிறார். அம்மா கிறித்துவராக இருக்கிறார். மகன் மகளின் பெயர்கூட இந்துவாகவே இருக்கிறது. ஆனால் உலகிலேயே உண்மையான கடவுள், ஒப்பற்ற ஒரே கடவுள் இயேசுதான் என்கிறீர். நீர் கண்டடைந்த உண்மையை உம்முடனேயே வைத்துக் கொண்டாலும்

பரவாயில்லை. உண்மையைச் சொல்ல ஊர் ஊராகக் கிளம்பிவிடுகிறீர். ஊரெல்லாம் நோட்டீஸ் கொடுத்துத் திரிகிறீர்.

உமது மதம் உயர்வான மதம். இந்திய மதங்கள், இந்து மதம், பிற மதங்கள். அதெல்லாம் மதமா? கிறித்தவர்களே உயர்ந்தவர்கள். அவர்கள் பண்பாடே மிகச் சிறந்தது. ஆங்கில மொழியே ஒப்பற்றது. வெள்ளைக்காரன் வாழ்க்கையே ஈடு இணையற்றது. ஐரோப்பியனே மனிதன். கிறித்தவர்கள் மட்டுமே வாழத்தகுதியானவர்கள். காட்டு மிராண்டிகளான இந்தத் தமிழர்களை கிறித்தவ மனிதராக்காமல் ஓயக் கூடாது, அசரக் கூடாது. கிறித்தவர்களே வாருங்கள். தமிழர்களுக்கு பண்பாட்டைக் கற்றுக் கொடுப்போம். எப்படி மனிதராய் வாழ்வது என்பதைக் கற்றுக் கொடுப்போம். எப்படி பேசுவது என மொழியைக் கற்றுக் கொடுப்போம். எப்படி உடுத்துவது, எப்படி உண்பது, எப்படி உறங்குவது, எப்படி பிரார்த்திப்பது என்பதைக் கற்றுக் கொடுப்போம். கிறித்தவ நாடார்களே.. கிளர்த்தெழுந்து வாருங்கள். கிறிஸ்து நம் நாதர். குறுத்தோலை கொண்டாடுகிறோம்தானே.  நாம் உலகாண்ட இனம். கிறிஸ்து நம் கடவுள். நாம் நாடார் இனம்.  நாடாண்ட குல சிங்கம். தமிழனுங்கள மனுஷனாக்காம விடக்கூடாது.

பாதர், ஒரு கிலோ மீட்டருக்குள்ளதான் சர்ச்சு கட்டக் கூடாதுன்னு சட்டம் சொல்லுது. நாம கட்டப்போற  சர்ச்சு ஒரு கிலோ மீட்டர், ஒரு அடி தள்ளியிருக்கு. நம்ம சர்ச்சுதான் ஊரிலேயே பெரிசா இருக்கணும். ஒசரமான கோபுரமா இருக்கணும். தென்முனைல நின்னு பார்த்தாலும் நம்ம சிலுவை தூக்கலாத் தெரியணும். கோபுர உச்சிக்கு மேலே பெரிய சிலுவையா வச்சி, லைட்டு போட்டுடணும் பாதர். ராத்திரி நேரத்துல எங்க இருந்து பாத்தாலும் பளிச்சினு தெரியணும். ஒலகத்துலேயே நம்ம சர்ச்சு மணிதான் ரொம்பப் பெரிசா இருக்கணும். அடிக்கிற சத்தம் குமரி மாவட்டம் முழுக்கா கேட்கணும். சரியா பாதர்.

சிறு மாவட்டத்திற்குள் எத்தனை எத்தனை சர்ச்சுகள், கோவில்கள், வழிபாட்டிடங்கள். அனைத்திலும் போட்டி. வழிபாட்டில் போட்டி, ஆராதனையில் போட்டி, ஓடுவதில் போட்டி, ஊர்வலத்தில் போட்டி. நன்றாகப் போட்டி போடுங்கள் தமிழர்களே, கிறித்துவர்களே, இந்துக்களே, நாடார்களே.

தேவன்களெல்லாம் சுவர்க்கத்தில் இருக்கிறார்களாம். அவர்களுக்காக மண்ணுலகில் மனிதர்கள் அடித்துக் கொள்கிறார்கள். நன்றாக அடித்துக்

கொள்ளுங்கள் மனிதர்களே. மனிதர்களின் மண்டைகளை உடைத்து உங்கள் கடவுள்களின் மகிமைகளைக் காட்டுங்கள்.

சி.எஸ்.ஐ. சர்ச்சுகள், ஆர்.சி சர்ச்சுகள், பெந்தே கோஸ்தே சர்ச்சுகள், சபைகள். மசூதிகள், தர்காக்கள், அம்மன் கோவில்கள், அந்தச் சாமியார், இந்தச் சாமியார் வழிபாட்டிடங்கள், மடங்கள், பீடங்கள், சன்னிதானங்கள், பகவதிகள், அய்யா வழி தங்கல்கள், குலதெய்வக் கோவில்கள், பெருந்தெய்வக் கோவில்கள், ஓயாத பாட்டுக்கள், இடைவிடாத பிராத்தனைகள், நிற்காத மன்றாட்டுக்கள், கடவுள்களுக்காகச் சண்டை, மொழிக்காக சண்டை. ஏன்றேனும் உண்மை தெரியாமலா போகப் போகிறது மனிதர்களே?

மண்டைக்காடு கலவரத்தில் சி.எஸ்.ஐ கிறித்தவர் யாரை ஆதரித்தார்? கிறித்தவர் என்பதற்காக மீனவரோடு சேர்ந்தாரா? மற்ற சர்ச்சுகள் கட்டுவதற்கு எதிர்ப்புக் காட்டும் இந்து மத நாடார்கள், சி.எஸ்.ஐ சர்ச்சுகள் கட்டுவதை எதிர்க்கிறாரா?

ஏலே நம்ம சாதிக்காரன்வ கோவில் கட்டுறானுவலே. கட்டட்டும் கட்டட்டும். நம்ம சாதிப்பயலுக எங்க இருந்தாலும் நல்லா இருந்தா போதும்லே. நம்ம சாதிக்காரன் நாலு பேரை வெட்டிப்புட்டான். அருமைடே. வீரன்லே. ஏலே அவனுங்க ரெண்டுபேர வெட்டிப்புட்டானுங்க. ஐயகோ. நம்ம தியாகிகள கொன்னுட்டானுங்களே. கோவில் கட்டணும்லே. ஏலே நம்ம சாதிப்பயலுக திருடிப்புட்டு மாட்டிக்கிட்டானுவா. அட விடுவே, தமிழ்நாட்டுல எல்லாச் சாதிப்பயலுகளும் திருடனுங்கதாவே. அவிங்க சாதிக்காரனுங்க திருடி மாட்டிட்டாங்க. அவனுங்க பூராம் திருட்டுக் கூட்டம்லே, அவனுங்க பரம்பர புத்திலே. நம்ம சாதிப் பெண்ண கூட்டிட்டு ஓடிப் போய்ட்டானுவ. எடுங்கடே அருவாள. தூக்குலே கத்திய. வெட்டுங்கலே அவனுங்கள. ஏலே நம்ம சாதிப்பய அந்தச் சாதிப் பொண்ண கட்டிட்டு வந்துட்டாம்லே. ஆம்பளச் சிங்கம்லா.

தமிழ்நாட்டில் மதமாற்றம் நடக்கிறதா? கண்டிப்பாக நடக்கிறது. பெரிய அளவில் மதமாற்றங்கள் நடைபெறுகின்றன. திட்டமிட்ட மதமாற்றங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எமது அனுபவத்திலேயே பார்க்கிறோம். வெள்ளாளர் நிறைய மதம் மாற ஆரம்பித்திருக்கிறார்கள். சமீபமாக விஸ்மகர்மாக்கள் மதம் மாற ஆரம்பித்திருப்பது தெரிகிறது. வெள்ளாளர் என்றில்லாமல் உயர்சாதிக்காரர்கள் மாறினால் ரோமன் கத்தோலிக்கராகவே மதம் மாறுகிறார்.

நாடார் சி.எஸ்.ஐ கிறித்தவராகவும், ஆதிதிராவிடர் பெந்தோ கோஸ்து கிறித்தவராகவும் மாற்றப்படுகிறார்கள். கிறித்தவர் எந்த சர்ச்சு, எந்தப் பிரிவு என்பதிலிருந்தே சாதியைச் சொல்லிவிடலாம். கிறித்தவர்கள் நடத்தும் ஏராளமான கல்விக் கூடங்களில் சேர்க்கை கிடைக்குமென்றும், படித்தவுடன் வேலை கிடைக்குமென்றும் மேல் சாதியினருக்கு உறுதியளித்து மதமாற்றம் நடைபெறுகிறது.

கிறித்தவர்கள் மிகவும் சாமர்த்தியமாகப் பெண்களையே முதலில் மதம் மாற்றுகிறார்கள். சிறிய அளவில் இடம் கொடுத்தால், பேச்சுக் கொடுத்தால், அதையே பிடித்துக் கொண்டு மனதை மாற்றுகிறார்கள். பொட்டு வைக்கக் கூடாது என்பதே மதமாற்றத்தின் முதல்படியாக இருக்கிறது. விரைவிலேயே வீடு ஜெபக் கூடமாகிறது. பைபிளை கையில் கொடுத்து சர்ச்சுக்கு கூட்டிச் செல்கிறார்கள். அம்மா போவதால் பிள்ளைகள் போகிறார்கள். ஆரம்பத்தில் முரண்டு பிடிக்கும் கணவன் பின்னர் குடும்ப அமைதி, பிள்ளைகள் எதிர்காலம் என அமைதியாகிறான். முடிந்தவரைக்கும் சர்ச்சுக்குப் போகாமல் இருக்கும் கணவனால் வீட்டில் நடக்கும் ஜெபக் கூட்டத்தை தடுக்க முடிவதில்லை. பெண் அவரது அம்மா, அக்கா, தங்கைகளிடம் மகிமைகளை எடுத்துரைக்கிறார். அக்கா தங்கைகள் ஒன்றாவதை, ஒன்று சேர்ந்து சர்ச்சுக்குப் போவதை அவரவர் கணவர்களாலும் தடுக்க முடிவதில்லை. ஒரு பெண்ணை மாற்றியதன் மூலம் குடும்பத்தை, உறவினர்களை மாற்றுவதோடு, அவர்தம் சந்ததிகளையும் மாற்றுகிறார்கள். மறுபடியும் இந்து மதத்தில் நம்பிக்கையற்றவரோ, வீட்டில் சாமி கும்பிடாதவரோ, கடவுள் மீது கோபம் கொண்டவரோ, பேராசை கொண்டவரோ கிடைப்பாரா எனத் தேடித் திரிவது தொடர்கிறது. உண்மை. பொய்யில்லை.

பட்டியல் சாதிப் பையன்களைத் திருமணம் செய்யும் பிற சாதிப் பெண்கள், பட்டியல் சாதியாக வெளியில் சொல்வதற்கு வெட்கப்பட்டு, கிறித்தவராக மாறுவதும் நடக்கிறது. கிறித்தவராக மாறினால் பிற்படுத்தப்பட்டோர் எனச் சொல்லிக்கொள்ளலாம் என்பதால் இப்படியும் மதமாற்றம் நிகழ்கிறது. இது மாதிரியான திருமணக்காரர்களுக்கும் மதமாற்ற வலை வீசப்படுகிறது.

நம்மிடம் புத்தகங்கள் கொடுக்கிறார்கள். சும்மா படிச்சுப் பாருங்க என்கிறார்கள். நாம் ஏதாவது புத்தகம் கொடுத்தால், நீங்களும் ஒருமுறை படிச்சுப்

பாருங்களேன் என்றால், இதெல்லாம் சுத்த வேஸ்ட் என்கிறார்கள். அப்படியானால் நீங்க கொடுத்தது

அது பெஸட்.

எதையுமே படிப்பதில்லை, எதையுமே பார்ப்பதில்லை, எதையுமே கேட்பதில்லை. அப்புறம் எப்படி உங்களோடதுதான் பெஸ்ட் என்கிறீர்கள்.

அது வந்து. அது அப்படித்தான்.

எங்கள் மதத்தைப் பற்றி ஏதாவது தெரியுமா?

நாங்க ஏன் தெரிஞ்சுக்கணும்?

அப்புறம் எப்படி உங்களோடதுதான் பெஸ்ட்டுனு சொல்றீங்க? ஒப்பீட்டுக்கு குறைந்தபட்சம் இரண்டு வேண்டுமல்லவா? இப்போ நீங்க ஒரு கடையில தோசை சாப்பிடுறீங்க.

கடையில எதுக்கு போய் தோசை சாப்பிடணும்? அத வீட்லயே செஞ்சு சாப்பிட்டுக்குவோம்.

சரி மேடம். நீங்க பிரியாணி சாப்பிடுறீங்க.

இது சரி. சொல்லுங்க சார்.

நீங்க ஒரே கடையில சாப்பிட்டுட்டு அந்தக்கடை பிரியாணிதான் ஊரிலேயே பெஸ்ட்னு சொல்லுவீங்களா? அப்படி சொன்னா அது உண்மையா இருக்குமா? நீங்க குறைந்தது ஒரு பத்து கடையிலயாவது பிரியாணி சாப்பிட்டுருக்கனும். அப்பதான் நீங்க சாப்பிட்டு ருசிபார்த்த கடைகள்ல எந்தக் கடையில ரொம்ப ருசியா இருந்ததுன்னு சொல்லமுடியும். ஒரே ஒரு கடையில மட்டும் சாப்பிட்டுட்டு ஊரிலேயே அந்தக் கடை பிரியாணிதான் டேஸ்ட்டானதுன்னு சொன்னா உலகம் ஒத்துக்குமா மேடம்?

சுத்தி வளச்சு என்ன சொல்ல வர்றீங்க?

இப்போ நீங்க ஆராய்ச்சி செய்றீங்கல்ல. கன்ட்ரோல் இல்லாம ஆராய்ச்சி பண்ண முடியுமா? கன்ட்ரோல மாதிரியோட ஒப்பிட்டுத்தானே பரிசோதனையில கூடியிருக்கா குறைஞ்சிருக்கானு சொல்ல முடியும். ஒப்பீட்டுக்கு குறைந்த பட்சம் இரண்டாவது வேணுமில்ல. ஒரே ஒரு மதத்த மட்டும் தெரிஞ்சுக்கிட்டு, எங்க

மதம்தான் உலகத்துலேயே பெஸ்ட் மதம்னும், எங்க கடவுள்தான் உலகத்திலேயே உண்மையான கடவுள்னும் எப்படி மேடம் சொல்றீங்க? அது தர்க்க ரீதியா சரிதானா?

தர்க்கம்லாம் யாருக்கு வேணும். நீங்க இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க?

ஷ்ஷப்பா.. கண்ணக் கட்டுதே. நீங்க புத்தகத்த கொடுங்க மேடம். நாளைக்கே படிச்சு முடிச்சுடுறோம்.

இத, இததான் எதிர்பார்த்தோம். ஆமா.. ஏதோ பிரியாணி அது இதுன்னு சொன்னீங்களே, சிக்கன் பிரியாணியா, மட்டன் பிரியாணியா.

என்னப்பா.. ஏதோ பிரியாணி பத்தி பேச்சு நடக்குது.

வாங்க மேடம். இவங்க இறால் பிரியாணி கேட்டாங்க. அதப் பத்தி.

இறால் பிரியாணி சிட்டி ஓட்டல்ல சூப்பரா இருக்கும்பா. நாங்க எப்பவுமே அங்கதான் போவோம். பிரியாணி பேச்சுல வந்த விசயத்த மறந்துட்டோம்.

சார், நம்ம ஊருக்கு சாதுசாமி வர்றாரு. எப்படி மனுசனா வாழறதுன்னு டிஸ்கோர்ஸ் பண்றாரு. ஒருமுறை அட்டன் பண்ணிப் பாருங்க. எத்தனமுற சொன்னாலும் நீங்க கேட்க மாட்டீங்கிறீங்க.

இப்பவும் மனுசனாத்தானே மேடம் இருக்கோம்.

இல்ல சார். நல்லா பேசுவார் சார். வேதங்கள்ல தேவனப் பத்தி என்ன சொல்லியிருக்குன்னு அருமையா விளக்கிச் சொல்லுவார் சார். ஆக்சுவலி சாமி பிராமிணா இருந்தவரு. தேவனோட மகிமைய உணர்ந்து, பொதுசேவ மாதிரி ஊர் ஊரா போய் பேசுறாரு. இந்த சான்ச விட்டா அடுத்த வருசந்தான் வருவாரு சார்.

நைட்டு டின்னர் உண்டு சார். குடும்பத்தோட போய் ஒருமுறை அட்டன் பண்ணுங்க சார்.

நாஞ்சில் என்றால் கலப்பையாமே. நாஞ்சில்நாடு என்றில்லாமல், தமிழ்நாட்டில் யாரும் கலப்பையே ஓட்டுவதில்லை. ஒரே நாள்ல ஊரையே டரடரன்னு உழுதிட்டுப் போயிடுது. எதுக்கு கலப்பை. ஒரு காலத்தில் ஏர் உழுது பெரும்பாடுபட்ட வேளாளர்கள், பின்னர் பெருநிலக்கிழார்களாகி, தற்போது பெருந்தொழிலதிபர்களாக, பெருமுதலாளிகளாக இருக்கிறார்கள்.

நாஞ்சில் வெள்ளாளரும், நெல்லைப் பிள்ளையும், கேரள நாயரும் ஒன்றாமே. நீங்கள்தான் மனிதனது நிழலைக் கண்டாலே தீட்டு என வாழ்ந்தீர்களா? உங்கள் முன்னோர்கள் அப்படிச் செய்தார்கள் எனில், உங்களைக் குறைகூற முடியுமா? முன்னோர் சொத்துக்கள் அப்படியே தலைமுறை தலைமுறையாக வரும்போது பழிச்சொல்லும் வரும்தானே. நம்பூதிரிகளைப் பார்த்து நீங்கள் கற்றீர்கள். உங்கள் வழியில் தேவர் வந்தார். சாதியைத் தூக்கிப் பிடிக்க, மதத்தை வாரி அணைக்க. தமிழ்நாட்டில் அத்தனை சாதிக்காரரும் சிவனாரின் பிள்ளைகளானதற்கு வெள்ளாளர்தான் காரணமல்லவா.

முன்னத்தி ஏர் சரியாகப் போனால்தான் பின்னத்தி ஏர்கள் ஒழுங்காக வருமாம். தமிழர்களின் முன்னத்தி ஏர் பிள்ளைகளல்லவா. வெள்ளாளரல்லவா. உங்களைப் பார்த்தல்லவா அத்தனை சாதிக்காரரும் வேசம் பூசுகிறார். சாதிக் காவலர்களாக, மதக் காப்பாளர்களாக.

மற்ற சாதிக்காரரையாவது வரலாறு தெரியாமல் பேசுகிறார் என விட்டுவிடலாம். பிள்ளைகள் அறிவில் சிறந்தவர்களல்லவா. அதிகம் படித்தவர்களல்லவா. உலக இலக்கியம், உலக சினிமா, உலக வரலாறு என அனைத்தையும் கரைத்துக் குடித்தவரன்றோ பிள்ளைகள்.

அறிவான பிள்ளைகளிடம்தான் பேச முடியும், விவாதிக்க முடியும். தேவரிடம் விவாதிக்க முடியாது. அருவாளைத் தூக்கிவிடுவார். நாடாருக்குப் பேசுவதற்கே நேரம் இல்லை. பேசிக்கொண்டிருந்தால் வணிகம் என்னாவது. தேவேந்திரர் இப்போதுதான் கொஞ்சம் படிக்க ஆரம்பித்திருக்கிறார். கவுண்டரிடம் பேசலாம்தான். எமக்கென்னவோ கவுண்டருக்கு தேவரே பரவாயில்லை எனத் தோன்றுகிறது.

கோயம்புத்தூருக்கு வந்த புதிதில் ஒரு கவுண்டரிடம் பேச வேண்டிய சூழல் வந்தது. ஏராளமான கல்வி நிறுவனங்கள் வைத்திருக்கிறார். கல்வி வள்ளல். நிறுவனங்களின் தாளாளரான அவரிடம் பேசியபோது, வார்த்தைக்கு வார்த்தை ஒருமையில் பேசினார். அவருக்கு யாம் என்ன சாதியெனத் தெரியும் என்பது உண்மை. யாம் கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றுகிறோம், என்ன இப்படி போவா நீய் என ஒருமையில் பேசுகிறீர்கள்? பின்ன உன்ன எப்படிக் கூப்பிடணும். மரியாத கொடுத்துன்னா எப்படி. நீய் பேசினா நாங்களும் பேசனுமா.

உன்ன எப்படிப் பேசணும்ற. போட்ட சத்தத்தில், உறுமலில், வேலைக்காரா்கள் வந்துவிட்டார்கள். வீட்டிற்குள்ளிருந்த மகன் வராந்தாவுக்கே வந்து விட்டார். யார் கிட்ட வந்து, யார் எடத்துல வந்து, என்ன பேசிட்டுத் திரியுற.

யாம் கூடுதலாக ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசியிருந்தால். யாம் பேசுபவர்கள் முகத்தையே பார்த்து நின்றோம். கோபமான கோபம். என்ன பார்த்துக்கிட்டே நிக்கற. கிளம்புறியா இல்ல. யாம் திரும்பிப் பார்க்காமல் விறுவிறுவென நடந்து வந்துவிட்டோம். ஊருக்குப் புதுசென்பதால் யாம் அறியாமல் இருந்து விட்டோம். கல்லூரித் தாளாளரே இப்படியென்றால், கிராமங்களிலிருக்கும் கவுண்டர்கள் எப்படி இருப்பார்கள் பிள்ளைகளே.

நாம் தமிழரா. நம்நாடு தமிழ்நாடா. இன்னும் எத்தனையாயிரம் ஆண்டுகள் ஆனாலும் நாம் தமிழராய் ஒன்றிணைவது சாத்தியமில்லைதானே. நிலவுக்குப் போனால் என்ன. செவ்வாயைக் கடந்தாலென்ன. பெரிய வியாழனில் பால்காய்ச்சினாலென்ன. அன்ட்ரோ மீராவுக்கு குடிபோனால்தான் என்ன. தமிழருடைய சாதிவெறி போகப் போகிறதா என்ன.

பிள்ளைக்கு அன்ரோமெடா கேலக்ஸி பற்றி தெரியும்தானே. நமது விண்மீன் குழுவிற்கு பக்கத்திலுள்ள விண்மீன் குழுவாம். ஆந்திரமேடா என்கிறார்கள். ஆந்திரக்காரா்களுக்குத் தெரிந்தால் அவர்களுடையது எனச் சொன்னாலும் சொல்லுவார்கள். அப்படித்தானே வடவேங்கடத்தை சொந்தமாக்கிக் கொண்டார்கள். நமது பால்வெளிக்கு அருகிலுள்ள அந்திரொமேடா பால்வெளி, நம்மிலிருந்து 2.5 மில்லியன் ஒளியாண்டுகள் தொலையில் உள்ளதாம். பிள்ளைகளுக்குத் தெரியாத ஒலியும் ஒளியுமா.

ஆல்பா செண்டாரி பற்றியும் பிள்ளை அறிந்திருப்பார். ஆல்பா செண்டாரி நமது சூரியக் குடும்பத்திற்கு மிக அருகில் உள்ள சூரியக் குடும்பமாம். இது வெறும் கண்களுக்கு ஒரே விண்மீன்போலத் தோன்றினாலும், உண்மையில் இது இரும விண்மீனாம். இரண்டுக்கும் அருகிலேயே புரோக்சிமா செண்டாரி இருக்கிறாம். மூன்றையும் எ.பி.சி என அழைக்கிறார்கள். இவை நமது சூரியனிலிருந்து 4.24 ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ளதாம்.

பிள்ளைகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் எனத் தெரியவில்லை. வெளிநாட்டுக்காரன் நட்சத்திரங்களாகக் கண்டுபிடித்து அவனுக்குச் சொந்தமாக்கிக்

கொண்டிருக்கும்போது பிள்ளை என்னடாவென்றால், எந்த ஊரில் துணிக்கடை வைக்கலாம். எந்த ஊரில் இங்கிலிஷ் மீடியம் பள்ளிக் கூடம் கட்டலாமென்று தேடித் திரிகிறார். பிள்ளை விண்மீனைக் கண்டுபிடிக்காவிட்டாலும், என்றைக்கு வெளிநாட்டுக்காரன் நமக்கு பக்கத்திலிருப்பது இரட்டை விண்மீன் எனச் சொன்னானோ, அப்போதே அது எங்கள் அப்பனும் அம்மையும், எங்களுக்குச் சொந்தமானது என துண்டை விரித்திருக்க வேண்டாமா? மூன்றாவது விண்மீன் அப்பன் முருகனுக்கு என வளைத்திருக்க வேண்டாமா?

இப்படித்தானே பிள்ளைகள் மொத்த பூமியையும் வெள்ளைக்காரருக்குத் தாரை வார்த்தார். அறிவில் சிறந்த நம்பிள்ளை, தேவரடியாரோடு ஆடியும் பாடியும் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்த காலத்தில், வெள்ளையர் உலகம் அனைத்தையும் பிடித்துக் கொண்டார். என்ன ஏதென்று பிள்ளை சுதாரிப்பதற்குள் பிள்ளையின் வீட்டையும் சுற்றி வளைத்துக் கொண்டார்.

வீட்டை விட்டு வெள்ளையரை விரட்டுவதற்குள் பிள்ளை பட்டபாடு கொஞ்சமா நஞ்சமா. மக்களை வதைத்துக் கொண்டிருந்த இந்தப் பிள்ளை, மண்ணைச் சுரண்டுகிறார், மக்களைச் சுரண்டுகிறார் என வெள்ளையரை விரட்டியது ஆச்சரியம். வெள்ளையருக்குச் சொன்னதையே கிளிப்பிள்ளைபோல் பிராமணருக்கும் சொன்னது அதிசயம். சமத்துப் பிள்ளையல்லவா. பிராமணரைப் பார்த்து வெகுண்டெழுந்த பிள்ளை, சமூக நீதிகாக்க ஒன்று திரண்ட பிள்ளைகள், தமக்குக் கிழே இருந்த பிள்ளைகளை என்றைக்கேனும் நினைத்ததுண்டா. நினைத்துப் பார்த்ததுண்டா.

ஆங்கிலேயர் காலத்திலேயே பெரும்பண்ணைகளாக இருந்த பிள்ளைகள், அதற்கு முன்பான நாயக்கர் ஆட்சியில், அதற்கும் முன்பான தமிழ் வேந்தர்கள் ஆட்சியில், அதற்கும் முன்பான களப்பிரர் ஆட்சியில் எப்படி இருந்தார்? தமிழகம் எப்படி இருந்தது? தமிழர் எப்படி இருந்தார்? தமிழ் எப்படி இருந்தது? உலகம் எப்படி இருந்தது?

நாடு சுதந்திரம் பெற்றபின் பிள்ளைகள் வாழ்வு எப்படி மலர்ந்தது? மற்ற தமிழ்ப் பிள்ளைகளின் வாழ்க்கை எப்படி இருந்தது? வெள்ளையரிடமிருந்து சுதந்திரம் பெற்றபோதே, பிள்ளைகள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கொண்ட பிள்ளைகளாகவே சுதந்திரம் பெற்றது எப்படி? பிள்ளைகளுக்கு மட்டும்

என்றில்லாமல் அவர்தம் மடங்களுக்கும், பீடங்களுக்கும், குருமகா சந்திதானங்களுக்கும் பத்தாயிரம் இருபதாயிரம் ஏக்கர் சொத்து எப்படி வந்தது?

பெருங்கோவில்களைச் சொத்தாகக் கொண்டிருந்தவர்கள் யார்? பிள்ளைகளா அல்லது பிற சாதித் தமிழர்களா? கடவுளையே தனிச் சொத்தாக பட்டா போட்டுக் கொண்டது யார்? கடவுள் எப்படி பிள்ளைக்குச் சொந்தமானார்? எப்போதிலிருந்து பிள்ளைகளின் சொத்தானார்? அன்பே சிவம் என இலக்கியம் படைத்த பிள்ளைகள், அன்பைவிட உலகில் உயர்ந்தது ஒன்றுமில்லை என உரக்கப் பேசிய பிள்ளைகள், அன்பாக இருந்தாரா? அன்பைச் சிறப்பித்தாரா? பிற தமிழ்ப் பிள்ளைகள் மீது அன்பு பாராட்டினாரா?

அன்பே சிவமென்ற பிள்ளைகள், தமிழென்றாலே அறிவு எனப் பேசிய பிள்ளைகள், பிற தமிழ்ப் பிள்ளைகள்மேல் அன்பு காட்டினாரா அல்லது அடக்கியாண்டாரா? அறிவை விற்றாரா அல்லது பொதுச் சொத்தாக்கினாரா?

பிராமணர்போல் ஒரு பர்லாங்கு தூரம் வீடு கட்டுவதற்கா பிள்ளைகளுக்கு அன்பை ஊட்டி வளர்த்தான் அப்பன்? பிராமணர் பிரம்மதேயம், சதுர்வேதி மங்கலம் போன்ற பெயர்களில் பெருநிலத்தை சொந்தமாககிக் கொண்டதுபோல், பிள்ளைகள் பண்ணை, பட்டம், பொறுப்பு, கர்ணம், மணியக்காரர் போன்ற ஏராளமான பெயர்களில் நிலங்களை அபகரித்துக் கொள்வதற்கா அவர்கள் இறைவன் அறிவைப் புகட்டி வளர்த்தான்?

இறைவன் அன்பே வடிவானவனாம். அளவிலா அன்பானவனாம். அவனது அன்புக்கு நிகர் எதுவுமில்லையாம். பெருங்கருணை கொண்டவனாம். பேரறிவுக்குச் சொந்தக்காரனாம். பேராற்றல் மிக்கவனாம். அருள் மாமழை பொழிபவனாம். இறைவி இவையெல்லாவற்றிலும் மேலானவளாம். அன்பின் இருப்பிடமாம். கருணையின் ஊற்றாம். சரிதானே பிள்ளைகளே.

இறைவன் எல்லோருக்கும் சமமானவனாம். அனைவருக்கும் பொதுவானவனாம். அறிவிற் சிறந்த பிள்ளைகளுக்கு இது தெரிந்திருந்ததா? தெரிந்திருக்கிறதா? கோவில் எப்படி தனிச் சொத்தாகும்? இறைவன் எப்படி தனி உடைமையாவான்?

ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் நிலம் வைத்திருந்த பண்ணைகள், பண்ணைகளில் வேலை செய்த பள்ளரையும், பறையறையும், இன்ன பிற எளிய

மக்களையும் எப்படி நடத்தினார்? நூறென்ன, இருநூறென்ன, ஒரு பெருங்கூட்டமே வந்தாலும் தங்கக் கூடிய அளவிற்கு பெரிய வீட்டில் வசித்த பிள்ளைகள், வயலில் உழுத குடிகளுக்கு குடிசையாவது கட்டிக் கொடுத்தாரா? வீடு முழுக்க நெல் மூட்டைகளை அடுக்கி வைத்திருந்த பிள்ளைகள், அரும்பாடுபட்டு நெல் விளைவித்த உழவர்களின் வயிற்றுப் பசியைப் போக்கினாரா? பட்டுப் பீதாம்பரத்தில் ஜொலித்த பிள்ளைகள், வயலில் கிடந்து வாடிய ஏழை மக்களின் மானம் காத்தாரா? விலைமகளிரிடமும், பொதுமகளிரிடமும் பணத்தை வாரி இறைத்த பிள்ளைகள், உழுகுடிகளிடம் கடுங்கோவம் காட்டினாரென்றல்லவா பதிவுகள் சுட்டுகின்றன. மாடுகளிடம் காட்டிய அன்புகூட அந்த மனிதரிடம் காட்டவில்லையல்லவா? பிள்ளையா அன்பில் சிறந்தவர்? அறிவில் உயர்ந்தவர்?

பிள்ளைகள் சமூக நீதிக்குப் பாடுபட்டீர்களாம். நீதிக்கட்சியினர் அல்லவா? கட்சியில் நீதியை வைத்துக் கொண்டீர். நீதியை நிலைநாட்டினீரா? சமூக விடுதலையைப் பற்றி என்றைக்காவது பேசியதுண்டா பிள்ளைகள். நீதியென்ற போர்வையில் ஆங்கிலேயரிடமும், அதற்கும் பிறகான அரசமைப்பிலும் நல்ல அறுவடை செய்தீர். சமூக நீதியை வெறும் இடஒதுக்கீடாக மாற்றிக் காட்டிய புத்திசாலிப் பிள்ளைகளல்லவா நீங்கள். அட்டவணையினருக்கு எவ்வளவு கொடுத்தீர்? எவ்வளவு எடுத்துக் கொண்டீர்? எதிலெல்லாம் இட ஒதுக்கீடு கொடுத்தீர்?

ஆசிரியர் பணியில் இடஒதுக்கீடு கொடுத்தபோது பட்டியல் சாதியினர் படித்திருக்கவே இல்லை. அதிலும் அரசு மட்டத்தில் மட்டுமே இட ஒதுக்கீடு. பள்ளிகள், கல்லூரிகள் ஆரம்பித்த அத்தனை சாதியரும் அவரவர் சாதிகளை வைத்தே நிரப்பிக் கொண்டீர். பட்டியல் சாதிக்கு ஒரு இடமாவது கொடுத்தீரா?

ஆரம்பத்தில் தகுதியான பட்டியல் சாதியினர் இல்லை என்பதைக் காரணமாகக் காட்டி அந்த இடங்களையும் அபகரித்தீர். அதனையே காரணமாகக் காட்டி வந்தீர். பட்டியல் சாதியினர் விவரம் தெரிந்து கேட்டபோது மூடி மறைத்தீர். எவ்வளவோ போராடித்தான் சிறப்பு ஒதுக்கீடு பெற முடிந்தது. அரசுக் கல்லூரிகளில் இரண்டாயிரமாண்டில்தான் சிறப்பு ஒதுக்கீட்டில் நூற்றுக்கணக்கில் பட்டியல் சாதியினர் இடம்பெற முடிந்தது. அதுவும் புதிய தமிழகம் நிறுவனர் பெரும் போராட்டம் நடத்தி பெற்றுத் தந்தார். மறுக்க முடியுமா?

நீதித்துறை, ஆராய்ச்சித் துறைகள், இராணுவம் என நாட்டின் முக்கியத் துறைகளில், பெரும் பதவிகளில் இடஒதுக்கீடு அறவே இல்லை. அரசு அதிகாரத்தில் செயலாளர் மட்டத்திற்கான பதவிகள்கூட தற்போதுவரை பெரிய சாதிகளுக்கே ஒதுக்கப்படுகிறது. மறுக்க முடியுமா?

சமூக நீதி என்றால் என்ன பிள்ளைகளே. பத்து இடங்களை ஆளுக்கு இரண்டாகப் பிரித்துக் கொள்வதா? அது இடஒதுக்கீடு அல்லவா? சமூக நீதி எங்கிருக்கிறது அதில்?

நாட்டில் அரசுத்துறைகள் எத்தனை இருக்கின்றன? தனியார் பணியிடங்கள் எவ்வளவு உள்ளன? விவசாயம் சார்ந்த வேலைவாய்ப்புகள் எவ்வாறு இருக்கின்றன? தனியாார் முதலாளி பட்டியல் சாதியினரை நிர்வாக இயக்குனராக வைத்துக் கொள்வாரா? மேலாளராகப் பணியமர்த்துவாரா? படித்திருந்தால், அறிவு இருந்தால் மேனேஜராக ஆக்குவார் எனில் பட்டியல் சாதிகளுக்கு பிள்ளைகள்போல் அறிவில்லாமல் போனது ஏன்? பண்ணை எங்கே? பண்ணை பிள்ளையின் பிள்ளை எங்கே? தாத்தா பண்ணை கொத்தடிமை, மகன் பண்ணை அடிமை, அவர் மகன் பண்ணை கூலிக்காரன். பண்ணை கூலிக்காரன் மகனுக்கு மேனேஜர் ஆகுமளவிற்கு அறிவிருக்குமா?

உலகமெங்கும் உழைப்பவருக்குத்தானே நிலம் சொந்தம். தமிழ்நாட்டில், இந்தியாவில் மட்டும் அது ஏன் இல்லை? பண்ணை குடும்பத்திற்கு மட்டும் ஆயிரக்காணக்கான ஏக்கர் நிலமெப்படி சொந்தமாக முடியும்? இதுதான் பிள்ளைகளின் சமூக நீதியா? அரசு மட்டத்தில் பல்வேறு உயர் பொறுப்புகளுக்குப் போன பிள்ளைகள், நிலத்தை ஏழை எளிய மக்களுக்கா தானம் பண்ணினார்? அங்கேயும் வருமானம். இங்கேயும் வருமானம். இதில் சமூகநீதி பேசி மேடைகளிலும் நல்ல வருமானம். சமூகநீதிக் காவலர் எனும் பட்டங்கள், விருதுகள் வேறு. பல தலைமுறைகள் அரசு உயர் வேலைகள், பதவிகள், வெளிநாட்டு வாய்ப்புகள் வந்த பின்னரும், நிலம் உங்களிடம்தான் இருக்கிறது. உண்மையில் இன்னும் கூடிக்கொண்டுதான் போகிறது. கம்பெனிகள் பெயரில் வாங்கப்படும் நிலங்கள் யாருடையது? கம்பனிகளின் நிர்வாக இயக்குனர்கள், உரிமையாளர்கள் யார்? அறக்கட்டளைகள் பெயரில் பதிவாகும் நிலங்கள் யாருக்குச் சொந்தம்? அறக்கட்டளைகளை நடத்துபவர்கள் யார்? மனைவி, மக்களையும், உறவுகளையும், முதன்மையான புரவலர்களாகக் கொண்டுதானே அறக்கட்டளைகள்

துவங்கப்படுகின்றன. அத்தனை கல்வி நிறுவனங்களும் அறக்கட்டளைகளால் நடத்தப்படுகின்றனதானே.

அறக்கட்டளை பெயரில் எவ்வளவு நிலம் வாங்கினாலும் செல்லுபடியாகும் என சட்டத்தை வளைத்தது யார்? நில உச்சவரம்பிலிருந்து ஆதினங்களுக்கு விலக்குப் பெற்றது எப்படி? தமிழகத்தில் நில உச்சவரம்புச் சட்டம் என ஒன்று இருக்கிறதுதானே. ஒரு குடும்பம் பதினைந்து ஏக்கர்வரை நிலம் வைத்துக் கொள்ளலாம் எனும் சட்டம் உள்ளதா? உள்ளதெனில் அந்த சட்டம் முறையாக அமல்படுத்தப்படாதது ஏன்?

தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் நில உச்சவரம்பு நிர்ணயச் சட்டம் 1961 என்ன சொல்கிறது பிள்ளைகளே. ஐந்துபேர் உள்ள குடும்பத்திற்கு 15 தரநிலை ஏக்கர்கள் உச்ச வரம்பாகும். கூடுதலான ஒவ்வொருவருக்கும் ஐந்து ஏக்கர்கள். எனினும் ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சமான நிலம் 30 ஏக்கர்களைத் தாண்டக் கூடாது. அறப்பண்பு கொண்ட பொதுப்பொறுப்புரிமை அமைப்பு அதாவது பப்ளிக் சாரிடபில் டிரஸ்டு அதிகமாக ஐந்து ஏக்கர்கள் கொண்டிருக்கலாம். சட்டம் எங்காவது பின்பற்றப்படுகிறதா?

2011ஆம் ஆண்டின் சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டின் முக்கியத் தலைவர், வேட்புமனுவோடு தாக்கல் செய்த சொத்துப் பட்டியல் பார்க்கலாமா பிள்ளைகளே. சொத்துக் கணக்கு 2011 வரை மட்டுமே. தற்போதைய வருடம் 2018 என்பதையும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த ஆறேழு ஆணடுகளில் நிலத்தின் மதிப்பு எங்கேயோ போய்விட்டது என்பதையும், கூடுதலாக எவ்வளவு சொத்துக்கள் வாங்கப்பட்டிருக்கிறது என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்.

தலைவருக்கு மட்டும் 61 ஏக்கர் நிலமிருக்கிறது. மனைவிக்கு 39 ஏக்கர்கள். மகன் பெயரில் 32 ஏக்கர். இதெல்லாம் விளையும் வயல்களாம். விவசாயமற்ற நிலங்கள் கிட்டத்தட்ட ஐந்தரை கோடி உரூபா மதிப்பிற்கு இருக்கிறது. அனேகமாக நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் இருக்கலாம். ஒரு குடும்பத்திற்கு எத்தனை ஏக்கர் நிலமிருக்கிறது பிள்ளைகளே. நில உச்சவரம்புச் சட்டம் அமலில் இருக்கிறதா இல்லையா? அமலில் இருந்தால் வேட்பாளர் தகுதி இழப்பிற்கு ஆளாவாரா இல்லையா? இதுதான் நாட்டின் எதார்த்தம் அல்லவா? ஏழை குப்பனையும், சுப்பனையும், கருப்பனையும் உயர்த்த அல்லவா பணக்காரர்களெல்லாம் அரசியலுக்கு வருகிறார்கள். நிலவுடமையாளர்களிடமிருந்து நிலத்தை மீட்டு,

குடியானவர்களிடம் கொடுப்பதற்கல்லவா அரசியல் கட்சிகள் துவக்குகிறார்கள். வறுமையை ஒழித்து, மக்களின் பசிப்பிணியைப் போக்கவல்லவா தேர்தல் களத்தில் குதிக்கிறார்கள்.

இருப்பதைப் பங்கிட்டாலே உலகில் வறுமை ஒழிந்துவிடுமே. வறுமை எனும் சொல்லையே உலகிலிருந்து நீக்கி விடலாமே. வறியவர், பசியாளர், பஞ்சம், பட்டினி எனும் அவலக் குரல்களே மக்கள் காதுகளில் விழாதே. ஒரு குடும்பம் நிலத்தை வைத்துக்கொண்டு உண்டு கொழுக்கிறது. வயிற்றை தூக்க முடியாமல் தூக்கித் திரிகிறது. பல குடும்பங்கள் ஒட்டிய வயிறுகளுடன் உழைத்துக் களைக்கின்றன. உழைத்தவன் வறுமையில் வாழ்கிறான். சட்டத்தின் மூலமும், சாதியின் மூலம், மதத்தின் மூலம், அதிகாரத்தின் மூலமும், வலிமையின் மூலமும், திருட்டின் மூலமும் நிலத்தை அபகரித்துக் கொண்ட கூட்டம், கோரமான நிலப்பசி கொண்டு எங்கேயடா மேலும் நிலம் கிடைக்கும் என சல்லடை போட்டுத் தேடித் திரிகிறது. தமிழகத்தின் பிள்ளைகள் போன்றே உலகமெங்கும் விவரமான பிள்ளைகள் ஏராளமானோர் உண்டு. அவர்கள் கடவுளும் அவர்களுக்குத்தான் புதிய புதிய நிலங்களை வாரிக் கொடுக்கிறார். யோகக்கார பிள்ளைகள். முதல் பிள்ளைகள், இரண்டாம் பிள்ளைகள், மூன்றாம் பிள்ளைகளுக்கும் யோகம்தான்.

தலைவருக்கு, தலைவரைப் போன்ற தலைவர்களுக்கு நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள், பெட்டி பெட்டியாக நகைகள், வணிகக் கட்டிடங்கள், வணிக வருமானங்கள், குடியிறுப்புக் கட்டிடங்கள், குடியிறுப்புத் தொகுப்புகள், பங்களாக்கள், நிறுவனப் பங்குகள், முதலீடுகள், வங்கி வைப்புகள், பத்திரங்கள் உள்ளன. கூடவே ஏகப்பட்ட கல்வி நிறுவனங்களும். வாகனங்களை விட்டு விட்டோமோ. இவ்வளவு வசதிகள் இருந்தும் தலைவர்கள் அரசியலுக்கு வருவது சமூகச் சேவைக்காக அல்லவா. நடிகர்கள் நாடாள நினைப்பது தமிழகக் குடிகளை ஒயர்த்த, ஒப்புயர்வாக்க அன்றி பிற எதற்கு வாக்காளப் பெருங்குடி மக்களே..

நில உச்சவரம்புச் சட்டம் பெருந்தோல்வியடைந்ததற்கு பிள்ளைகளே காரணமெனில் ஏற்புடையதுதானே. எத்தனை எத்தனை விதிவிலக்குகளைச் சேர்த்தீர். எவ்வளவு போலியான மாற்றுக்கள் செய்தீர். எந்த அளவிற்கு பாகப்பிரிவினை நடத்தீனீர். லஞ்சமும் ஊழலும் தலைவிரித்தாடும் நாட்டில் எத்தனையாயிரம் சட்டங்கள் போட்டு என்னாகப் போகிறது.

பிள்ளைகளைப் போன்றே, பிள்ளைகளின் கடவுள்களும் ஏகப்பட்ட நிலபுலன்களோடு வசதியாகத்தான் இருக்கிறார்கள். இந்து சமய திருக்கோவில்களின் வளர்ச்சிக்காக 1960இல் அமைக்கப்பட்ட இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் மட்டும் தமிழ்நாட்டில் 36,488 கோவில்கள், 56 திருமடங்கள், மற்றும் 58 திருமடங்களுடன் இணைந்த கோவில்கள் இருக்கின்றன. இந்து சமய நிறுவனங்களுக்கு சொந்தமான அசையா சொத்து மட்டும் 4,78,347.94 ஏக்கர்கள். இத்தனை லட்சம் ஏக்கர் நிலம் இருந்தும், அதன் மூலம் கிடைக்கும் வருவாயோ உத்தேசமாக ஆண்டுக்கு 58.68 கோடி மட்டுமே.

திருக்கோவில்களுக்குச் சொந்தமான நிலங்களை, வீடுகளை, கடைகளை, காலி இடங்களை வைத்திருப்பவர், ஆக்கிரமித்திருப்பவர், குத்தகைக்கு எடுத்திருப்பவர், வாடகைக்கு விடுபவர் யார் பிள்ளைகளே? கோவில் சொத்துக்களை கொள்ளையடிப்பவர் யார்? கொள்ளைக்கு கூட்டணி சேர்பவர் யார்? அறங்காவலர்கள், தக்கார்கள், கோவில் பணியாளர்கள், குருக்கள், பிற பணியாளர்கள் யார்? என்ன சாதிக்காரர்கள்? அறங்காவலர்களாக, புரவலர்களாக, குருக்களாக, பட்டியல் சாதியினர் இடம் பெற முடியுமா? கோடிக்கணக்கில், இலக்கக்கணக்கில் கோவிலுக்குச் சேர வேண்டிய பணத்தைச் சுருட்டிக் கொண்டவர், சுருட்டிக் கொண்டிருப்பவர் யார் யார்?

கடவுள் இருக்கிறார் என்று கல்லாக் கட்டியவர் பிள்ளையே. கடவுள் இல்லை எனக் கல்லாவை நிறைத்தவரும் பிள்ளையே. பிள்ளை ஆதரவில்லாமலா அண்ணா ஆட்சிக்கு வந்தார்? கருணாநிதி ஆட்சிக்கு வந்தார்? எம்ஜிஆர் ஆட்சிக்கு வந்தார்? அண்ணா ஆட்சியில் அனைத்திலும் செல்வாக்குப் பெற்றிருந்தது பிள்ளைதானே. புத்திசாலிப் பிள்ளை. தடுக்கி விழுந்தால் கோவில் மேல்தான் விழவேண்டும் எனும் நிலையில், ஊரெங்கும் கோவில்களாக நிறைந்திருக்கும் தமிழகத்தில், கடவுளே இல்லை எனும் பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டு, பெரும்பான்மையான மக்களால் ஓட்டளிக்கப்பட்டு, கிட்டத்தட்ட ஐம்பது வருடங்கள் ஆட்சிபுரிய முடியுமெனில் அது பிள்ளைகளின் கடவுள் பக்தியின்மீது விழுந்த அடிதானே. பிள்ளை ஓட்டுப்போடாமலா தி.மு.க வென்றது. அதுவும் குளித்தலையில். சோழ தேசத்தில்தான் பிள்ளைகளும் அதிகம், கோவில்களும் அதிகம், திராவிட முன்னேற்றக் கட்சிக்கு செல்வாக்கும் அதிகம்.

பிராமணர் கம்ஸ்யுனிஸ்ட்டு கட்சிக்கு ஓட்டுப் போட்டதாக வரலாறு உண்டா? பொதுவுடமைக் கட்சிகளை பிள்ளைகள் என்றைக்காவது ஆதரித்ததுண்டா? உயர்த்திப் பேசியதுண்டா? பிள்ளைகளெல்லாம் முதலாளிமாரன்றோ. கேப்பிடலிஸ்ட் அல்லவா. தனியார் சொத்துடமைவாதிகளன்றோ. முதலாளிமாரான பிள்ளைகளெல்லாம் ஒரு பக்கம். முதலாளிமார் கட்சி. பண்ணை தொழிலாளர்களெல்லாம் ஏழை கம்யூனிஸ்ட் கட்சி. முதலாளிகள் தொழிலாளர்களின் குருதியை உறிஞ்சுகிறார்களாம். உழைப்பாளர்களின் வியர்வையை கசக்கிப் பிழிகிறார்களாம். உண்மைதானே. பிள்ளைகளுக்கு வேண்டுமானால் வெண்மணி நினைவில்லாமல் போகலாம். உழைப்பாளிகள் மறக்கமாட்டார்கள். மறக்கக் கூடிய நிகழ்வா அது பிள்ளைகளே.

உழைக்கும் மக்களுக்கோ தீப்பசி, கடிப்பசி, கொடும்பசி. உல்லாச மக்களுக்கோ நிலப்பசி, பொருள்பசி, பொன்பசி, பெண்பசி. ஓலைக்குடிசைகளில் ஒட்டிய வயிறுகளோடு நாளை எப்படிப் போகுமோ எனும் நிலையில் வாழ்ந்த பள்ளு பறை எங்கே, உல்லாச மாளிகைகளில் ஒய்யார மெத்தைகளில் அறுசுவை உணவருந்தி ஆடல் மகளிர் வெற்றிலை ஊட்டிவிட அடித்துப் பிடித்து விளையாண்ட பிள்ளை போன்ற மேன்மக்கள் எங்கே. பாட்டாளி மக்கள் தாங்கள் உழைத்த உழைப்பிற்கு ஒருபடி நெல் அதிகமாகக் கேட்டதற்கா கோரத்தீ கொளுத்தியது ஆண்ட பரம்பரை? அவர்கள் என்ன நெல்லை விற்று பொன் வாங்கவா கேட்டார்கள்? ஆண்ட பரம்பரைகளுக்கு எதிராக நிலம் வாங்கவா கேட்டார்கள்? வயிற்றுக்குப் போதவில்லை எனக் கேட்டதற்கா இந்தக் கொடூரச் செயல்?

உலகம் அன்பானதாம். உலகம் அன்னமய கோசமாம். உலகமே அன்னமாம். தஞ்சையில் மட்டுமா பாட்டாளிகள் கொழுத்தப்பட்டார்கள்? உலகமெங்கும் எத்தனை எத்தனை பாட்டாளிகள், உழைப்பாளிகள், நல்ல மனம் கொண்டவர், இரக்க குணம் கொண்டவர், அதிகார வர்க்கங்களால், பேராசை நிரம்பிய ஓநாய்களால் கடித்துக் குதறப்பட்டிருக்கின்றனர். அதிகாரமும், ஆசையும் மனிதரை வெறிகொள்ள வைக்கும். எளியவர்களை வேட்டையாடவும் செய்யும்.

எங்கள் வீட்டில் இரவில் செருப்பை வீட்டின் முன்போ, முற்றத்திலோ கழட்டிப்போட விடமாட்டார்கள். இரவில் சிவன் ஒவ்வொரு வீடாகப் படியளக்க வருவாராம். வீட்டின்முன் செருப்புக் கிடந்தால் திரும்பி போய்விடுவாராம். இத்தனைக்கும் யாம் செருப்புப் போட்டதே உயர்நிலை படிக்கும் போதுதான் என

நினைவு. காடுகரைகளுக்குப் போகிறவர்கள் கூடப் பெரும்பாலும் செருப்பணிய மாட்டார்கள். வெள்ளாமைக் காட்டில் செருப்பணிய மாட்டார்கள். நாற்று நடும்போது யாராவது செருப்பணிய முடியுமா? வயல்களில் விளையும்போது செருப்போடு பேசமாட்டார்கள். ஆடு மேய்ப்பவர்கள் முள்குத்தும் என தோல் செருப்பு போட்டிருப்பார்கள். செருப்பில்லாத, செருப்பணியாத பள்ளக் குடியே சிவன் படியளப்பார் என நம்பும்போது, சிவ பிள்ளைகளான பிள்ளைமார் நிச்சயம் அறிந்திருப்பார். உலகுக்கே படியளப்பவர் சிவபெருமான் என்பது பிள்ளைக்குத் தெரியாமல் இருக்குமா? சரிதானே பிள்ளைகளே.

எல்லோருக்கும் படியளக்கிறாரா சிவன் அல்லது தம் பிள்ளைகளான பிள்ளைகளுக்கு மட்டும் படியளக்கிறாரா? எல்லோருக்கும் படியளக்கிறார் எனில் எல்லோருக்கும் ஒன்றுபோல் படியளக்கிறாரா அல்லது பிள்ளைகளுக்கு மட்டும் சிறப்பாகப் படியளக்கிறாரா? சிவனுக்கு பள்ளும் பிள்ளையும் ஒன்றா அல்லது வேறு வேறா. ஒன்று எனில் பள்ளுவை பண்ணைக் கொத்தடிமையாகவும் பிள்ளையைப் பண்ணையாகவும் படியளந்ததேன்? சிவன்தான் உலக மக்கள் அனைவருக்கும் படியளக்கிறார் எனில் கருப்புத் தோலுக்கு ஒரு மாதிரியாகவும் வெள்ளைத் தோலுக்கு ஒரு மாதிரியாகவும் படியளப்பதேன்? பிள்ளைக்கும், பள்ளுக்கும், பறைக்கும் சிவன் அப்பன் எனில் ஒவ்வொரு மாதிரி படியளப்பது ஏன்? எதற்காக? பிள்ளை சிவபக்தியில் சிறந்தவர் என பிள்ளைக்கு மட்டும் ஓவராகப் படியளக்கிறாரோ. பிள்ளைக்கு படியளப்பவர் பிள்ளைமார் சிவனா? பள்ளர் சிவன் என இருக்கிறாரா பிள்ளைகளே. ஈழவர் சிவன் இருக்கிறாரல்லவா. சிவன் விருப்பு வெறுப்பு அற்றவனாமே. சிந்தையில் நினைப்பவருக்கும் நினையாதவருக்கும் சொந்தமாமே. உண்மையா பிள்ளைகளே.

தமிழ்நாட்டில் எத்தனையாயிரம் சிவன்கள், பெருமாள்கள், அம்மன்கள், கோவில்கள், குளங்கள், மடங்கள், மசூதிகள், பிரார்த்தனைக் கூடங்கள், வழிபாட்டிடங்கள்.

எங்கும் கோவில்கள், எல்லா இடங்களிலும் கோவில்கள். எந்தக் கோவிலில் பார்த்தாலும் திருவிழா போல் கூட்டம். என்னே பக்தி. என்னே பரவசம். என்னே ஆன்மிக மலர்ச்சி. மறுமலர்ச்சியெனில் மிகையாகாது.

இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத ஏராளமான சிறிய கோவில்கள் தமிழ் நிலமெங்கும் நிறைந்துள்ளன. ஒவ்வொரு கிராமத்திலும்

சாதிக்கு ஒன்றிரண்டும், பங்காளிக் கோவில்கள் எனவும் எக்கச்சக்க கோவில்கள் உள்ளன. தமிழகத்தில் மொத்தம் 15243 கிராமங்கள் உள்ளதெனில், கிராமத்திற்குப் பத்துக் கோவில்கள் என வைத்துக் கொண்டாலும் கிட்டத்தட்ட ஒன்றரை இலக்கம் கோவில்கள் வந்துவிடும். குறைந்தபட்சம் ஒரு இலக்கமென்றுகூட வைத்துக் கொள்ளலாம். 1097 நகரங்களிலும் 148 பெரு நகரங்களிலும் 10 மாநகர்களிலும் ஆயிரக்கணக்கில் கோவில்கள் இருக்கின்றன. நடைபாதையெங்கும், மரமெங்கும் கோவில்கள், மரமொன்றில் துணியைச் சுற்றி கட்டிவைக்கிறார்கள். கொஞ்ச நாட்களிலேயே விநாயகர் சிலையொன்று வைக்கப்படுகிறது. தொடர்ந்து கம்பி போடுகிறார்கள். சீறு பீடமும் சேர்த்து ரோட்டை மறித்து ஒரு கோவில் எழும்பி விடுகிறது. திருவிழாக்கள் களை கட்டுகின்றன. உண்டியலும் கொட்டுகிறது.

ஓரிடத்தில் சாலையின் ஓரத்தில் சிறிய பீடமொன்றில் விநாயகர் சிலை இருந்தது. விநாயகருக்கு பெரிதாக பணம் சேரவில்லை போலும். விநாயகரை எடுத்து விட்டு சாய்பாபா சிலை வைத்தார்கள். சுற்றிலும் சிறிய சுவர் எழுப்பினார்கள். சாய்பாபா சட்டென சிவசாய்பாபாவானார். சிவ சாய்பாபா திருக்கோவில் மளமளவென வளர்ந்து வருகிறது. ரோட்டை ஒட்டி இரும்பு கம்பி வைத்து ஆக்கிரமித்தாயிற்று. இன்னும் சில வருடங்களில் புகழ்பெற்ற கோவிலாக மாறிவிடும். பிழைப்புக்காக உண்டியலுக்காக கடவுளையும் மதத்தையும் பயன்படுத்தும் கூட்டம் அதிகமாகிக் கொண்டே போகிறது.

நல்ல அகலமான முக்கிய ரோட்டில், திடீரென சிறிய பீடம் கட்டி மேரிமாத சிலை வைத்தார்கள். பார்த்துக் கொண்டிருக்கும்போதே பீடம் வளர்ந்து சுற்றுச் சுவரானது. தற்போது சாலையையொட்டியே பெரிய மாதா கோவிலாக வளர்ந்து நிற்கிறது. வண்டிகளில் போகிறவர்கள் வருகிறவர்கள் மண்டியிட்டு வணங்கி காணிக்கை செலுத்திச் செல்கிறார்கள். பூக்கடை வந்து விட்டது. பெட்டிக் கடை போட்டாயிற்று. இனி சாலையை ஆக்கிரமித்துக் கட்டப்பட்ட மாதா கோவில் என இடிக்க முடியாது. இடித்தால் மதப் பிரச்சினை உண்டாக்கப்படும். இந்தியாவில் சர்ச்சுகளைப் பூராம் இடிக்கிறார்கள் என பிரச்சாரம் முன்னெடுக்கப்படும்.

இந்தியாவில் கிறித்தவர்கள் எனும் தலைப்பில் உண்மைகள் மற்றும் விளக்கங்கள் எனும் பெயரிலான ஆங்கில வலைப்பக்கத்தில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தியாவில் கிறித்தவம் வளர்ந்த விவரத்தை எடுத்துரைக்கும் கட்டுரையில் இப்படி எழுதப்பட்டுள்ளது - கிறித்தவர்களே

தாக்குதலுக்கு எளிதான இலக்காகிறார்கள். அவர்கள் மிகவும் இலகுவான சிறுபான்மையினராக இருக்கிறார்கள். கொஞ்சம்கூட அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. முற்றாக எரித்து விடக்கூடிய அளவிற்கு மரத்தடுப்புகளையே சுவர்களாகவும் கிழித்த கூரைகளையும் கொண்டு சர்ச்சுகளில் பிரார்த்தனை செய்கிறார்கள். இந்துக்களை மதமாற்றம் செய்வதனால் இவர்கள் மேல் தாக்குதல்கள் நடக்கின்றன.

தமிழகத்தில் எந்த பிரார்த்தனைக் கூடம் ஓலைக் கூரை கொண்டு நிற்கிறது? எத்தனை கிறித்தவ - பிற மதத்தார் சண்டைகள் நடந்திருக்கின்றன? தமிழகத்தில் கிறித்துவரைத் தொட முடியுமா? கிறித்தவரே என்றாலும் அங்கும் சாதிதானே முக்கியம். கிறித்தவர்களின் மக்கள்தொகை குறைகிறதாகப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றனவாம். அதெல்லாம் இராஜதந்திரம்.

சமீபமாக கிறித்தவத்தில் புற்றீசல்போல சபைகள் முளைத்து வருகின்றன. இயேசுவின் பேராலும், ஆவியின் பெயராலும் அற்புத சுகமளிக்கும், நோய் தீர்க்கும் சபைகள் பெருகி வருகின்றன. விசுவாசிகளுக்கு தீர்க்க தரிசனம், அற்புத ஞானம் ஆவியின் பகுத்தறிதல், இரகசிய வெளிப்பாடு, குணமளிக்கும் அற்புத வரம், நம்பிக்கை, விசுவாசம், அன்பு எனும் பெயர்களில் எளிய மக்கள் வெகுவாக ஏமாற்றப்படுகிறார்கள். யார் வேண்டுமானாலும் இயேசு அழைக்கிறார், இயேசு விடுவிக்கிறார், இயேசு ரட்சிக்கிறார் எனும் பெயர்களில் சபைகளை உருவாக்கலாம் எனும் நிலைமை வந்துவிட்டது. நகர்களில் பேருந்து நிலையங்களை ஒட்டி நிறைய ஜெபக் கூட்டங்கள் திறக்கப்பட்டுள்ளன. ஞாயிற்றுக் கிழமைகளில் காலையிலிருந்து இரவுவரை விடாமல் ஜெபம் நடக்கிறது. நாள் முழுக்க எப்படி ஜெபம் பண்ணுவது என்பது அவர்களுக்கே வெளிச்சம். முழுஇரவு ஜெபம், நாற்பத்தி எட்டு மணி நேரம் இடைவிடாத ஜெபம், மூன்று நாட்கள் முழுஇரவு ஜெபம் என அழுகிறார்கள், ஆடுகிறார்கள், கத்துகிறார்கள், விழுகிறார்கள், ஓடுகிறார்கள், குதிக்கிறார்கள், பாடுகிறார்கள், உடலை அஷ்ட கோணலாகத் திருகுகிறார்கள், சிரிக்கிறார்கள், விழுந்து புரள்கிறார்கள். கையைத் தூக்குகிறார்கள். விரல்களை மடக்குகிறார்கள். இப்படித்தான் கிறித்துவின் வல்லமை நிகழும்போல.

சில சுயநலமிகளுக்காக, இயேசுவை வைத்து எப்படி பணம் பண்ணலாம் என நினைக்கும் வியாபாரிகளுக்காக, மக்கள் திரள் ஏமாற்றப்படுகிறது. சபை திறந்து வாரம் ஒரு நூறு பேர் வந்தால்கூட, அவர்களை வைத்து பிழைப்பை ஓட்டிவிடலாம்

அல்லவா? சபைக்காரர்களே அதிகமான மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது கண்கூடு. எமக்குத் தெரிந்த பாரம்பரியமான இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர், கிறித்தவப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர், அன்புகாரர்கள் பேச்சை நம்பி அங்கே போய்விட்டார். போனதோடு மட்டுமல்லாமல் இயேசுவைப் பார்த்ததாகக் கூறுகிறார். இரண்டு முறை பார்த்தாராம். ஈராயிரம் ஆண்டுகள் பழமையானவர் எனக் கூறப்படும் ரோமன் கார்களுக்கு இயேசு காட்சி கொடுத்ததாகத் தெரியவில்லை. அந்த பாதிரியார் யாரும் இயேசுவை நேரில் காட்டியதாக வரலாறு இல்லை. இயேசுவை நம்பும் இந்துவுக்கு இரண்டு மூன்று மாதங்களிலேயே காட்சி கொடுக்கும் அற்புதம்தான் ஆச்சரியமானது.

சில விசயங்கள் திட்டமிட்டே நடத்தப்படுகின்றன. இந்துப் பண்டிகைகளின் போது, குறிப்பாக தைப்பொங்கல் நடைபெறும் 15,16,17 தேதிகளில் சொல்லி வைத்தாற்போல அத்தனை சபைக்காரர்களும் மூன்று நாள் இடைவிடாத ஜெபம் நடத்துகிறார்கள். சாலைகளில் எங்கு பார்த்தாலும் இப்படியான போஸ்டர்கள்தான் ஒட்டப்பட்டிருக்கின்றன. தீபாவளி சமயங்களில் இப்படியான ஜெபக் கூட்டங்கள் நிகழ்த்தப்படுகின்றன. மதம்மாறி, மனம்மாறி வந்தவர்கள், எங்கே பழைய பழக்கவழக்கங்களைத் தொடர்ந்து விடுவார்களோ எனத் திட்டமிட்டே இப்படியான ஜெபக் கூட்டங்கள் ஏற்பாடாகின்றன.

தமிழகத்தில் ரோமன் கத்தோலிக்கத்தில் பெரிய சாதிக்காரர்களும் முக்கியமாக பிள்ளைமார் முதலியார் போன்றவர்களும், கடலோர மீனவர்களும், சி.எஸ்.ஐ சீர்திருத்தச் சபைகளில் நாடார்களும், சிறியளவில் பள்ளர்களும், பெந்தேகோஸ்து சபைகளில் பெருமளவில் பறையர்களும் இடம்பெற்றுள்ளனர். தென்னிந்திய திருச்சபைக்கு மட்டும் 14,000 சர்ச்சுகள் அதாவது பிரார்த்தனைக் கூடங்கள் இருப்பதாக கணக்கு சொல்கிறது. ரோமன் கத்தோலிக்கத்திற்கு நாடு முழுவதும் 132 லத்தீன மரபு வழி மறை மாவட்டங்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது. சிரியா – மலபார் மறை மாவட்டங்கள் 31, சிரியா – மலன்கரா மறை மாவட்டங்கள் 11 எனவும் கணக்கு சுட்டிக்காட்டுகிறது. மொத்தமாக பல்லாயிரக்கணக்கான பிராத்தனைக் கூடங்கள் இந்திய மண்ணில் நிறுவப்பட்டுள்ளன. கல்வி நிலையங்களுக்குள்ளும் பிராத்தனைக் கூடங்கள் இருக்கின்றன.

மனிதர்களை பிராத்தனை எனும் பெயரில் அழவைக்கும் மதம் என்ன மதமோ. மனிதர்கள் ஒப்பாரி வைக்கிறார்கள். ஓயாத ஒப்பாரி, எப்போதும் ஒப்பாரி,

எல்லாத்துக்கும் ஒப்பாரி. வெகு நேரம் கண்களை மூடிக்கொண்டு ஜெபிப்பதாலும், தாரைதாரையாகக் கண்ணீர் உகுப்பதாலும், ஒப்பாரிக்காரர்களின் கண்கள் மாறுபட்டுத் தெரிகின்றன. மனிதர்களின் அழகுக்கும் வசீகரிப்பிற்கும் கண்களே முக்கியம். கண்களே அழகு. பெண்களின் கண்களில் காதலும் காமமும் மிளிரும். ஒப்பாரி வைப்பவர்களின் கண்களைப் பார்க்கச் சகிக்கவில்லை. ஆணும் பெண்ணும் காதலையும் காமத்தையும் பறிகொடுத்து வருவது, இழந்து வருவது, இயற்கைக்கு ஏற்புடையதாக இருக்கப்போவதில்லை. நாள்முழுக்க ஆண்டவனை நினைத்து ஒப்பாரி வைத்துக்கொண்டே வாழ்வது என்ன வாழ்க்கையோ. விளையாட்டு சுத்தமாக இல்லை. விளையாடாவிட்டாலும் பரவாயில்லை. விளையாடும் பிறரையும் சகித்துக் கொள்ள முடிவதில்லை. வீட்டிலிருக்கும் பிள்ளைகளை வெளியில் விடாமல் பூட்டி வைத்துக் கொள்கிறார்கள். பிள்ளைகள் விளையாடுபவர்களை ஏக்கத்தோடு பார்க்கின்றன. எந்தக் கேளிக்கையும் இல்லை. திரைப்படம் இல்லை. தொலைக்காட்சி இல்லை. வீடுகளில் நாள்முழுக்க மதப்பாடல்கள் ஒலிக்கின்றன. ஞாயிறுகளில் அக்கம் பக்கம் குடியிறுப்புகள் இருக்கிறதே என கிஞ்சித்தும் நினைப்பில்லாமல் கூட்டு அழுகை அரங்கேறுகிறது.

முன்பெல்லாம் இந்து மதத்தில்தான் மூடநம்பிக்கைகள் நிறைந்திருப்பதாகக் கிண்டலடிப்பார்கள். வாயிலிருந்து லிங்கம் எடுக்கும் சாமியார்கள், கையில் திருநீறு வரவைக்கும் சாமியார்கள், சர்வ நோய்களையும் தீர்க்கும் சாமியார்கள், பிள்ளை வரமளிக்கும் சாமியார்கள் என விதவிதமான சாமியார்கள் நிறைந்திருப்பார்கள். தற்போதைய காலத்தில் இந்து மதமே பரவாயில்லை எனும் அளவிற்கு மாற்றங்கள் நிகழ்ந்திருப்பது கண் கூடு.

மீனவர் கிறித்தவரானார். ஆனால் பங்குத் தந்தையானது பிள்ளையல்லவா. நாடார் கிறித்தவரானார். ஆயரானது பிள்ளையன்றோ. பட்டியல் சாதியினர் மதம் மாறினார். அவர்களிலிருந்து ஒருவரும் பேராயராகவோ, பிஷப்பாக முடியவில்லை என்பதுதானே வரலாறு. அனைத்து மறைமாவட்டங்களையும் பிடித்துக் கொண்டது பிள்ளையின் சாமர்த்தியமல்லவா? பிள்ளை ஏன் கிறித்தவரானார்? சிவனே பரம் பொருள் எனக் கொண்டாடி வந்த பிள்ளை, எப்படி பரலோகத்திலிருக்கும் பரமபிதாவை ஏற்றுக் கொண்டார்? அகிலத்தை அடக்கியாள்வது அங்காளபரமேஸ்வரி அம்மன் எனக் கூத்தாடி வந்த பிள்ளைகளுக்கு, மேரிமாதா அன்னையானது எப்போதிலிருந்து? சிவன், பார்வதி, முருகன், விநாயகன், நாயன்மார், தேவராம், திருவாசகம், பீடாதிபதிகள், மடாதிபதிகள் என அத்தனை

பேரிடமும் கிடைக்காத அன்பு, அமைதி, உயர்வு, இயேசுவை ஏற்றுக் கொண்டவுடன் பிள்ளைக்குக் கிடைத்தது எதனால்?

பிள்ளை ஏன் கிறித்தவரானார்? சொத்து சுகத்திற்கா, பதவிக்கா, பட்டத்திற்கா, கல்விக்கா, வேலைவாய்ப்பிற்கா, சமத்துவத்திற்கா, புகழுக்கா அல்லது ஏசுவின் கருணைக்கா? சிவனது அன்பைவிட ஏசுவின் அன்பு பெரிதென்று அங்கே போனாரா பிள்ளை? ஒருவேளை சிவன் பரதவரையும், மரபறியாரையும், வேடரையும், ஏகாலியையும், புலையரையும், குறும்பரையும் அடியார்களாக ஏற்றுக் கொண்டதால், திருத்தொண்டர்களாக வைத்துக் கொண்டதால், வேளாளர்குடியான பிள்ளை கிறித்தவராக மாறினாரோ? இல்லை என பிள்ளை கிறித்தவரால் மறுக்க முடியுமா? இல்லையெனில் தமிழக கிறித்தவத்தில் சாதிப்பகுபாடு எப்படி வந்தது? யாரால் வந்தது? கிறித்தவ சகோதரிகளும், சகோதரர்களும் சாதியை ஒட்டாக இப்போதும் வைத்துக்கொண்டு திரிவது ஏன்? பிற மதத்திற்குள் போயும் அவர்களது மரபுகளைப் பின்பற்றாமல், அங்கேயும் சாதியடுக்கை உருவாக்கிக் கொண்டது பிள்ளையின் அறிவு முதிர்ச்சியல்லவா?

நாயன்மாரை இன்ன சாதிக்காரர் என அடையாளப்படுத்துவதே அவமானமல்லவா? சிவனும், உமையும் அவர்தம் பிள்ளைகளும் பிள்ளைகளின் உடைமையானார்கள். பெருமாள் பிராமணர்களின் சொத்தானார். பெருஞ்சொத்துக்காரர்கள் யாருடைய கடவுள் பெரிவரென்று அடித்துக் கொண்டீர்கள். உங்களைப் பார்த்து கடவுளால், கடவுள் பெயரால், எந்தச் சொத்தும் இல்லாத ஓட்டாண்டி சாதிகளும் எந்தக் கடவுள் பெரியவரென அடித்துக் கொள்கிறார்கள். கஞ்சிக்கு வழியில்லாவிட்டாலும், யார் கடவுள் பெரியவர் எனும் சண்டை மட்டும் குறைந்தபாடில்லை. அறிவில் சிறந்த பிள்ளை பெருமாளை வணங்கமாட்டார். ஆனால் இயேசுநாதர் அறிவானவர் என ஏற்றுக் கொண்டு கிறித்தவராக மாறுவார். ஊர் ஊருக்குப் போய் எளிய மக்களிடம் பிரச்சாரம் செய்வர். வேதங்கள் கிறித்துவின் பிறப்பு பற்றி என்னவெல்லாம் சொல்லியிருக்கிறது என புட்டுப்புட்டு வைப்பார். தமிழருக்கு சமயமும் நாகரிகமும் கற்றுக் கொடுத்ததே கிறித்துவும் அவரது சீடர்களுமே என சங்க இலக்கியங்களிலிருந்து அடுக்காடுக்கான சான்றுகளை அள்ளி இறைப்பார். ஞானிகள் அருளிய வேதங்களையும் அறிவிற் சிறந்த தமிழ் செய்யுள்களையும் சொத்துச் சேர்ப்பதற்காக பிள்ளைகள் பயன்படுத்துவது வெட்கக்கேடு.

இந்தியாவில் தமிழகத்தில் எத்தனையாயிரம் மசூதிகள், தர்காக்கள் குருத்வாராக்கள் இருக்கின்றன? எத்தனையாயிரம் புத்த விகாரங்கள், சிலைகள் இருக்கின்றன? எத்தனை இலட்சம் அம்மன் வழிபாட்டிடங்கள் இந்திய தேசத்தில் உள்ளன? மடாதிபதிகள், ஆன்மீகக் குருக்கள், வேறு எத்தனை எத்தனையோ பெயர்களில் மத அமைப்புகள், சேவை அமைப்புகள், அரசு சார அமைப்புகள் இருந்தும், இத்தனையாயிரம் கடவுள்கள் இருந்தும், ரோட்டில் சிறுவரும், கண்பார்வையற்றவரும், வயதானவரும் பிச்சையெடுத்துத் திரிவது எப்படி? ஏன்? யாரால்?

பூமியில் எத்தனையாயிரம், எத்தனை இலக்கம் கடவுள்கள், கோவில்கள், கல்விக் கூடங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், அட்வான்ஸ்டு ஆராய்ச்சிக் கூடங்கள்.. பசியை ஒழிக்க முடிந்திருக்கிறதா? திருட்டை ஒழிக்க முடிந்திருக்கிறதா? கொலையைத் தடுக்க முடிந்திருக்கிறதா? ஆயுதங்கள் வாங்க கோடி, கோடியாய் செலவிடும் அரசுகளால் நாட்டில் அனைவருக்கும் உணவு கொடுக்க முடியாதது ஏன்? அனைவருக்கும் விரும்பிய கல்வியைத் தர முடியாதது ஏன்? எங்கே தவறு நிகழ்கிறது? யார் தவறு செய்கிறார்? மக்களா? ஆட்சியாளர்களா? ஆட்சிப் பணியார்களா? திட்டம் தீட்டுபவர்களா?

இதுதான் மானிட குல உயர்வா? இதுதான் மனித முன்னேற்றமா? இதற்குப் பெயர்தான் தர்மமா? இதைத்தான் முன்னோர் அறமென்றாரா?

சாமி பெயரைச் சொல்லி, கடவுளைக் காட்டி, ஆன்மீகத்தால் அச்சுறுத்தி மனிதர் கொள்ளையடிக்கிறாரா அல்லது கடவுள்கள் மனிதர்களை வைத்து சொத்துச் சேர்க்கிறார்களா? சாலையின் ஓரத்தில் சும்மா கிடந்த நிலத்தில் குடிசை போடுகிறான். சிறிது நாட்களிலேயே மண்பீடம் வைத்து முக்தீஸ்வரர் என்கிறான். கூடவே முக்தீஸ்வரி அம்மனும் வைக்கப்படுகிறார். வெட்கங்கெட்ட அரசுத் துறைகள் கண்டு கொள்வதேயில்லை. கான்கிரீட் கட்டிடமே முளைக்கிறது. மின்சார இணைப்பும் கிடைக்கிறது. ரோட்டை மறித்து திருவிழா நடத்துகிறான். அரசுத்துறைகள் குறட்டை விட்டுத் தூங்குகின்றன. திடீரென ஒருநாள் நெடுஞ்சாலைக்காரன் சாலையை விரிவாக்க வருகிறான். உண்டியல் வைத்து பிழைப்பு நடத்துபவன் இந்து எனும் போர்வையில் கூட்டத்தைச் சேர்க்கிறான். கோவிலை இடிக்கக் கூடாது என சாலை மாறியல் செய்கிறான். அரசுத் துறைகள் பேசுகின்றன. அரசியல்வாதி புகுகிறான். ஓட்டைக் கணக்கிடுகிறான். பேச்சு

வார்த்தை சுமுகமாக முடிகிறது. பக்கத்திலிருக்கும் அரசு இடத்தில் கோவில் கட்டிக் கொள்ள அரசு இயந்திரம் அனுமதியளிக்கிறது. முத்தீஸ்வரா், வேத முக்தீஸ்வரராகி, பெருங்கோவிலுக்குச் சொந்தக்காரராகிறாா். உண்டியல்காரன் தா்மகா்த்தாவாகிறான். நடப்பதையெல்லாம் பாா்த்துக் கொண்டிருக்கும் இவனது சொந்தக்காரன், அவன் பங்குக்கு எந்த ரோட்டை மறித்து குடிசை போடலாமெனத் தேடுகிறான்.

அரசைக் குற்றம் சொல்லியோ, பிள்ளையைக் குறைசொல்லியோ என்னாகப் போகிறது. அனைத்திற்கும் மக்களே குற்றவாளிகள். கோவில் திருவிழாவிற்கு ஒன்றரை இரண்டு கிலோ மீட்டருக்கு பல்பு கட்டுகிறாா். ஒரு மாதம் ரேடியோ கட்டுகிறாா். ஒரு கிலோமீட்டருக்குள்ளேயே நாலைந்து கோவில்காரா் இருக்கிறாா். அடுத்த தெருக்காரா் மூன்று கிலோ மீட்டருக்கு லைட்டு போடுகிறாா். இந்த அளவுக்கு ஆடம்பரமாக சாமி கும்பிட வேண்டுமென, திருவிழா நடத்த வேண்டுமென எந்த சாமி சொன்னது? சாமியின் பெயரால் இவன்தான் கூத்தடிக்கிறான். தமிழ்நாட்டில் திருவிழா பெயரில் வாரி இறைக்கப்படும் பணம் மட்டுமே ஒரு வருடக் கல்விச் செலவுக்குப் போதும். இதையெல்லாம் யாா் சொல்வது? சொன்னாலும் யாா் கேட்பாா்? பூராம் குடித்துவிட்டு கூத்தடிக்கிறான். நல்லோா் போய் பேசமுடியுமா?

தமிழகத்தின் குடியை, குடிக்கலாச்சாரத்தைப் பற்றி பேச வேண்டுமா நண்பா்களே.. சாதிகளைப் பற்றி பேச ஆரம்பித்ததிலிருந்து நண்பா்களை மறந்தே போனோம். தமிழா்களின் சாதிவெறியை நினைத்தால் மனம் கனக்கிறது தோழா்களே. தமிழன் இந்தச் சாதியில் பிறந்ததற்குக் கொடுத்து வைத்திருக்கணும் என்கிறான். தமிழன் என்பதுகூட சாதிக்கு அப்புறம்தான். தமிழன் மனிதனாகச் சிந்திப்பதெல்லாம் செயல்படுவதெல்லாம் சாத்தியமில்லைபோல் தெரிகிறது.

தமிழன் திருவிழாப்போல் குடிக்கிறான். காலையிலிருந்து இரவுவரை கூட்டம். உடல் உழைப்புக்காரன் வேலை முடிந்து குடித்துவிட்டே செல்கிறான். சாப்பாட்டுக் கூடையோடும், வேலைச் சாமான்களோடும் தள்ளாடியப்படியே செல்கிறான். சம்பாதிப்பதில் பாதிக்கும்மேல் குடித்துவிடுவான் போல. குடும்பம் எப்படி உருப்படும்?

குடியில் நடக்கும் திருட்டுத்தனங்கள் சொல்லிமாளாது. அதைவிட பாரில் நடக்கும் கூத்துக்கள். குடிக்கு மதியை அடகுவைத்துவிட்ட தமிழனிடம், மனிதனிடம் என்னத்தைச் சொல்லி என்னாகப் போகிறது? குடி மட்டுமா? கஞ்சாக் கடத்தலும் தமிழ்நாட்டில் கூடிக்கொண்டே போகிறது. பான்பராக், குட்கா பற்றியெல்லாம் சட்ட

சபையிலேயே எவ்வளவோ பேசி விட்டார்கள். குட்கா ஆலைகளே இயங்குகின்றன. அதுவும் நகரின் மையப்பகுதியில். ஐந்து வருடங்களாக குட்கா ஆலை இயங்கி வந்திருக்கிறது. இத்தனை அரசுத்துறைகள் இருந்தும், ஆய்வுகள் நடத்தியும் கண்டுபிடிக்க முடியவில்லை. அரசுத் துறைகளின் லஞ்ச லாவண்யத்திற்கு வேறொரு சான்று வேண்டுமா தோழர்களே.

முதுநிலை மாணவர்களை அழைத்துக் கொண்டு இந்திய அறிவியல் மாநாட்டுக்குச் செல்கிறோம். பேராசிரியைகள், மாணவிகள் உடன் வருகிறார்கள். போவதற்கு முன்பே பயணத்தில், மாநாட்டில் எக்காரணம் கொண்டும் குடிக்கக் கூடாது எனச் சொல்லித்தான் அழைத்துச் செல்கிறோம். அவ்வளவு அட்வைஸ் பண்ணியும் முதல்நாள் இரயிலில் போகும்போதே பாட்டில்களை எடுத்துவிட்டார்கள். ஒன்றிரண்டு பேர் அல்ல. அத்தனை பேரும். டிக்கட் பரிசோதகர் பாட்டில்களையே தூக்கி வந்துவிட்டார், உங்கள் மாணவர்களின் லட்சணத்தைப் பாருங்கள் என்று. மாணவர்களிடம் பார் கூட தோற்றுவிடும் அளவுக்குப் பாட்டில்கள். பயணங்களில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், எக்காரணம் கொண்டும் குடிக்கக்கூடாது என அவ்வளவு ஆலோசனை சொன்னதன் அர்த்தம்தான் என்ன? குடித்தால் கல்லூரியில் டி.சி கொடுத்துவிடுவார்கள் எனும் நிலையிருந்தால் குடிப்பார்களா? யாம் அடிக்கடி மாணவர்களிடம் சொல்லும் பேச்சு, மாணவர்கள் அதிகாரத்திற்குத்தான் பயப்படுகிறார்கள் என்பதே. மக்களும்தானே நண்பர்களே. சிக்னலில் காவலர் இருந்தால் மக்கள் நடந்து கொள்ளும் விதத்திற்கும், காவலர் இல்லாத நிலையில் மக்கள் நடந்து கொள்ளும் விதத்திற்கும் வித்தியாசம் இருக்கிறதுதானே. இன்னும் எவ்வளவு காலத்திற்குத்தான் கம்புகள் தேவைப்படும்? விலங்குகளே சட்டென பழகிவிடுகின்றன. நாய்களைப் பார்க்கிறோம்தானே. எவ்வளவு விரைவாகக் கற்றுக் கொள்கிறது. எவ்வளவு ஒழுங்கில் செயல்களைச் செய்கிறது. குரங்குகளே புத்தக மூட்டைகளோடு பள்ளிக்கூடம் செல்ல ஆரம்பித்துவிட்டன. நமக்கு இன்னுமா கம்பு தேவைப்படுகிறது மனிதர்களே? இன்னுமா நமக்கு காவலர் வேண்டும்?

மதுபோதை மட்டுமா மனிதருக்கு. அனைத்திலும் போதை. பள்ளி மாணவர்கள் போதையூட்டிக் கொள்வதாக ஏராளமான செய்திகள் பதிவாகின்றன. கல்லூரி மாணவர்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். பாதிக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு படிப்பே வரவில்லை. சமூகம் அவர்களைப் பாடாய் படுத்துகிறது. பட்டங்கள் பெற்றாலும் எதற்கும் பயன்படப் போவதில்லை. கல்வி கற்பதில் ஆர்வமே முக்கியம். படிப்பில் ஆசை வர வேண்டும். தேடல் மனப்பான்மை வளரவேண்டும்.

எல்லோருக்கும் படிப்பின் மீதுதான் ஆசை வரவேண்டும்மெனக் கட்டாயமில்லை. இருபது ஆண்டுகளாக மாணவர்களைப் பார்த்து வருகிறோம். மாணவர்கள் தரப்பில் ஏகப்பட்ட குறைபாடுகள். ஆசிரியர் சமுதாயத்திடமும் ஏராளமான குறைபாடுகள். நிர்வாகத்தாரிடம் பலப்பல குறைபாடுகள். அரசு மட்டத்திலும் நிர்வாக ஓட்டைகள். கல்வியிலும் எண்ணற்ற குறைபாடுகள்.

எப்படிச் சொல்லிக்கொடுக்க வேண்டும் என்பதே பேராசிரியர்களுக்குத் தெரியவில்லை. வகுப்பறைகளில் அன்பைப் பொழிகிறார்கள். முதற்கோணல் இங்கிருந்துதான் ஆரம்பிக்கிறது. கல்விச் சாலைகள் அறிவை போதிக்கக் கூடியவை. கல்வி கற்பதே அறிவைப் பெறத்தான். மனிதர்கள் மற்ற விலங்குகள்போல் உள்ளுணர்வால் வழிநடத்தப்படவில்லை. மீன் குஞ்சு வெளியே வந்தவுடன் தானாக நீந்திக் கொள்ளும். கடல் ஆமைக் குட்டிக்கு யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. அதன் கூட்டத்தை உள்ளுணர்வால் கண்டு கொள்ளும். காக்கைக்கு எந்தக் கிளையில் எவ்வளவு உயரத்தில் எந்த மாதிரி குச்சிகளை வைத்துக் கூடு கட்ட வேண்டும் எனத் தெளிவாகத் தெரியும். அவை எந்தப் பள்ளிலும் போய் படிப்பதில்லை. போதிய வளர்ச்சியுறாமல், புழுபோல் பிறக்கும் கங்காருக் குட்டி, நேராக அம்மாவின் முலைக்காம்பைப் பற்றிக் கொள்ளும்.

மனிதருக்கோ அனைத்தும் கற்றல் மூலமே தெரிய வருகிறது. எவ்வளவு அறிவாளிகளுக்கு, ஞானிகளுக்குப் பிறக்கும் குழந்தையும் தானாகப் படிப்பதில்லை. எழுத்துக்களை ஆசிரியர்தான் கற்றுக் கொடுக்க வேண்டியதிருக்கிறது. எதைக் கற்றுக் கொடுக்க வேண்டும், எப்போது, எப்படி கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதை மனிதர்கள் இன்னும் அறிந்துகொள்ளவில்லை என்பது திண்ணம். வெள்ளைக்காரர் கல்வியே உண்மையான கல்வி என்றும் அவர்கள் செய்வதே அனைத்திலும் சிறந்ததென்றும் இந்தியா, சீனா உள்ளிட்ட அனைத்து நாடுகளுமே ஏற்றுக் கொண்டாயிற்று. இந்தியா எப்போதுமே அறிவை விலைபேசியதில்லை. ஞானத்தை விற்றதில்லை. இந்திய ஞானத்தின் ஒப்புயர்வற்ற உண்மைகளுக்கு அதுதான் காரணம். இந்திய மண்ணில் அறிவு சிறந்திருந்ததற்கும் பண்பாடு செழித்திருந்ததற்கும் அதுவே காரணம். இந்திய ஞானத்தில், சமூக அமைப்பில் சாதியை மட்டும் நீக்கிவிட்டால் அதுவே உலகில் உயர்ந்தது. சாதிகூட ஞானியர் உண்டாக்கியதல்ல. பிறரை சுரண்டிக் கொழுக்க நினைத்த கூட்டம் உருவாக்கியது. சாதியால் தொழிலும், தொழில்திறனும் கூடிக் கொண்டே போனதை, சமூகத்திற்குப்

பயன்பட்டதைத்தான் கணக்கில் கொண்டார்களே தவிர, அதன் மனிதத்தன்மையற்ற கொடூரத்தை எண்ணிப் பார்க்கவில்லை. விளைவாக, அத்தனை ஞானமும் பயனற்றதுபோல் தொலைந்து விட்டது. சாதியாலே இந்தியா அடிமைப்பட்டது. சாதியாலே இந்தியா சுரண்டப்பட்டது. சாதியாலே இந்தியா உருக்குலைந்தது. சாதியாலே இந்திய ஞானம் தலைகுனிந்தது. எவ்வளவு பெரிய ஞானமாகவே இருக்கட்டுமே. என்றைக்கு இந்திய ஞானம் இன்னொரு மனிதனைப் பார்த்து பிறப்பால் கீழானவன் என வரையறை செய்ததோ அப்போதே அது அஞ்ஞானமாகிவிட்டது. அது ஞானமாகாது.

கல்விக் கூடங்களில் அறிவே சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை. பின் எங்கே ஞானத்தைக் கற்றுக் கொடுப்பது. கல்லூரிகளிலேயே ஒப்பிக்கும் கல்வி இருந்தால் பள்ளிகளில் எப்படி இருக்கும்? ஆசிரியருக்கே உண்மை அறியும் மனம் இல்லை, உண்மையைத் தேட விரும்பம் இல்லையெனும்போது, மாணவ சமுதாயத்திற்கு எப்படித் தெரியும்? விளைவாக, மாணவர்கள்மேல் ஆசிரியர்கள், குறிப்பாகப் பேராசிரியைகள் பேரன்பு செலுத்துகிறார்கள். கண்ணே, ராஜா, தங்கமே, கழுதையே எனக் கொஞ்சுகிறார்கள், கெஞ்சுகிறார்கள், தாங்குகிறார்கள். பரிட்சையில் யாரையுமே பெயிலாக்குவதில்லை. மேலிருப்பவர்களும் பாஸ் போட்டுங்க, எப்படியாவது போகிறார்கள் என்கிறார்கள். எல்லோருக்கும் நூற்றுக்கு நூறு. நல்லாப் படிக்கும் மாணவருக்கு நூறு. ஒன்றுமே தெரியாத மாணவருக்கும் நூறு. கல்லூரிகளில் அதுவும் விலங்கியல் போன்ற பாடங்களிலேயே நூற்றுக்கு 98, 99 எடுக்கிறார் எனில் என்னத்தைச் சொல்ல.

ஒருவர்கூட எண்பதுக்கும் கீழே வாங்குவதில்லை. மாணவர் பாடம் நடத்துவதற்கு 25 மார்க். எல்லோருக்கும் 25. மாணவர்களின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட முடிவதில்லை. கட்டுரை சமர்ப்பிறபதற்கு 25 மதிப்பெண். எல்லோருக்கும் 25. 25 என்பது 24 ஆகலாம். ஒன்றிரண்டு பேர் 23. அதற்குக் கீழே குறையாது. செயல்முறைக்கு எல்லோருக்கும் 99, 100. ஆராய்ச்சி சமர்பித்தலுக்கு.. ஐயகோ மாணவன் எவ்ளோ உரூபா செலவு பண்றான். போடு 100 க்கு 100. இப்போதெல்லாம் யாராவது இரண்டாம் வகுப்பில் பாஸ் செய்கிறார்களா? தேடித்தான் பார்க்க வேண்டும்.

செல்லம். அனைத்து நிலைகளிலும் மாணவர்களுக்குச் செல்லம். வருகைப் பதிவு குறைவா இருக்கு. வேலைக்கு போற பையன், போட்டுவிடுங்க சார். தினமும்

ஏன் தாமதமா வா்ற. வேலைக்குப் போறோம். கெட் இன். மாணவா்களின் மீசையும், தாடியும், முடிவெட்டும், டக்இன் பண்ணுவதும், நடப்பதும், பேசுவதும், வகுப்புக்குள்ள ஓடிப்புடுச்சி விளையாடுவதும். பேராசிரியை வகுப்பெடுக்கிறாா். மாணவா்கள் உள்ளாடை அப்பட்டமாகத் தெரியுமளவிற்கு உட்காா்ந்திருக்கிறாா்கள். லோஹிப்பாமே. மொளியில் எதற்கு பெல்ட் அணிகிறாா்கள் எனத் தெரியவில்லை. அந்தக் காலத்துல மாதிரி நாலு அடி போடணும். ஸ்டைலாம். நடையும், உடையும். எங்கும் கண்டிப்பு இல்லை. எதிலும் ஒழுங்கு இல்லை. ஓரிருவா் கண்டித்தாலும், தூண்டி விடுவதற்கென்றே பெருங்கூட்டம் இருக்கிறது. எமது அனுபவத்தில் பேராசிரியா்கள்தான் அதிகமான புறணி பேசித் திரிகிறாா்கள். இங்கே ஒருமாதிரி பேச்சு. அங்கே வேறு மாதிரிப் பேச்சு. பெண் பேராசிரியா்கள்தான் அதிகமாக இருக்கிறாா்கள். குறை சொன்னால் ஆணாதிக்கம் என்று பேச்சு வரும். எதற்கு வம்பு. சரிதானே நண்பா்களே.

இடஒதுக்கீடு கேட்டு ஆண்கள் போராடும் காலம் விரைவில் வரும்போலத் தெரிகிறது. பெரும்பாலான அரசு கல்லூரிகளில் பெண்கள் 70, ஆண்கள் 30 என இருக்கிறது. இது அப்படியே ஆண்கள் 70, பெண்கள் 30 என இருப்பது நன்மையளிக்கும். பல்கலைகளில் 80, 20 என வைத்துக் கொள்ளலாம். மேனிலையில் ஆண் 60, பெண் 40 இருக்கலாம். உயா்நிலையில் 50, 50 நல்லது. நடுநிலையில் ஆண் 40, பெண் 60 போதும். ஆரம்பப்பள்ளியில் 3, 4, 5 வகுப்புகளில் 30 பெண், 70 ஆண் சிறப்பாக இருக்கும் 1, 2 இல் 80, 20 தராளமாகக் கொடுக்கலாம். 20 ஆண் ஆசிரியா்களும் விளையாட்டுக்காரா்களாக இருப்பது அவசியம். அதற்கும் கீழே மூன்றாவது வயதிலிருந்து ஐந்துவரை பெண்கள், அதுவும் இளம் பிள்ளைகள் இருப்பது உத்தமம். ஆட்டம், பாட்டம், விளையாட்டு, நாட்டியம் என மகிழ்சியாக குழந்தைகளை வைத்துக் கொள்ளலாம். பள்ளிகளில் பணியாற்றுபவா்களில் அனுபவமும் திறமையும் கொண்டவா்களை கல்லூரிகளுக்குப் பதவி உயா்த்தலாம். கல்லூரிகளில் அறுபதிலிருந்து எழுபது சதம்வரை பள்ளிகளிலிருந்தும், முப்பது சதம்வரை போட்டித் தோ்வுகள் வைத்தும் பணியமா்த்தலாம். கல்லூரிகளில் ஆராய்ச்சியின் மீது ஆா்வமிருப்பவா்களை பல்கலைக்கு உயா்த்தலாம். பல்கலைகளில் சிறப்பாக ஆராய்ச்சி செய்பவா்களை அடுத்த உயா்வாக தனித்திறன் ஆராய்ச்சிக் கூடங்களுக்குப் பரிந்துரைக்கலாம். கல்விக் கூடங்களில் அனுபவமும் இளமையும் இருப்பது சிறப்பு.

தற்போதைய கல்லூரிக் கல்வியில் பெண் பேராசிரியர்கள் பாடு படுதிண்டாட்டமாக இருக்கிறது. வீட்டில் வேலைகள் செய்வதில் தொடங்கி, குடும்பத்தைக் கவனிப்பது முதல், கல்லூரிப் பணிகள், ஆராய்ச்சி, ஆராய்ச்சி மாணவா்களுக்கு வழிகாட்டுவது என மூச்சு முட்டும் பணிகள். வீட்டில் குழந்தைக்கு சரியில்லை என்றாலோ, வேறு ஏதோ குடும்ப பிரச்சினை என்றாலோ, பெண்களால் நிச்சயமாக வகுப்பெடுப்பதில் கவனம் கொள்ள முடியாது. படிப்பதற்கும் வகுப்புகளுக்குத் தயாா் படுத்துவதற்கும் நேரமே இருப்பதில்லை. கல்லூரிகளில் ஏகப்பட்ட முரண்பாடுகள், விவாதங்கள், முட்டல் மோதல்கள் நடக்கின்றன. சில பேராசிரியைகள் வகுப்பில் கண்டிப்பு எனும் பெயரில் அதிகமாகச் சத்தம் போடுகிறாா்கள். சிலா் அதிக செல்லம் கொடுக்கிறாா்கள். ஆண் - பெண் பேராசிரியா்கள் இணக்கமாகப் பேச முடியவில்லை. பெரும்பாலான பெண் பேராசிரியா்கள் ஆண்களுக்கு ஒன்றுமே தெரியாது என எண்ணுகிறாா்கள். ஆண் பேராசிரியா்களோ படித்த பெண்களே இப்படித்தான் என நினைக்கிறாா்கள். துறைகளில் நடக்கும் விவாதங்களிலேயே கருத்து சொல்ல முடிவதில்லை. முதல்வா் தலைமையில் நடக்கும் குழுக் கூட்டங்களில் அடித்துக் கொள்ளாததுதான் குறை, அனேகமாக சட்டமன்ற, நாடாளுமன்றங்களே பரவாயில்லை. கல்வியைப் பற்றியும், கல்விக் கூடங்களைப் பற்றியும் பேசித் தீராது நண்பா்களே.

நவீன வாழ்க்கைமுறை மனிதா்களை கோபக்காரா்களாகவும், படபடப்புக்காரா்களாகவும், மன அழுத்தக்காரா்களாகவும் மாற்றிவிட்டது தோழா்களே. மனித சமூகம் உடனடியாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியது மனப்பதற்றம், மன அழுத்தம் என்றால் மிகையாகாது. மனிதா்கள் அதீத அழுத்தத்தில் வாழ்கிறாா்கள். நாளை சாப்பாட்டுக்கு இல்லை என வாழ்ந்த நேற்றைய மனிதா்கள் கேலி பேசிக்கொண்டும், சிரித்துக்கொண்டும் மகிழ்ச்சியான முகங்களோடு வாழ்ந்தாா்கள். நாமோ எந்நேரமும் கவலையிலும், வருத்தத்திலும் பதற்றத்துடனுமே வாழ வேண்டியிருக்கிறது. நேற்றைய மனிதா்களுக்கு அதிகபட்சமாகப் போனால் ஊரில் நடப்பது, மிஞ்சிப் போனால் பக்கத்து ஊரில் நடப்பது தெரியும். அதிகமும் படிக்காதவா்கள் என்பதால் செய்தியும் அறிந்திருக்க மாட்டாா்கள். வானொலிகளிலும் கொலை, கொள்ளை, பலாத்காரம் போன்ற செய்திகள் வராது. செய்தி சொல்லுவதே பத்து பதினைந்து நிமிடமே. முக்கியமான செய்திகளே சொல்லப்பட்டன, தெரிவிக்கப்பட்டன.

நம் காலத்திலோ அர்ஜென்டினாவில் இரண்டு மனிதர்கள் வெள்ளத்தில் சிக்கிக் கொண்டார்கள் என்பதிலிருந்து, ரஷ்யாவில் பனியில் சிக்கிக் கொண்ட கரடிவரை தலைப்புச் செய்தியாகக் காட்டப்படுகிறது. இருக்கிற அழுத்தம் போதாதென்று விவாதம் எனும் பெயரில் நடக்கும் கூச்சல்களும் திகிலைக் கிளப்புகின்றன. எங்கோ இருக்கும் குக்கிராமத்தில் நிகழ்ந்த, நிகழும் நிகழ்வு நாடு முழுக்கத் தெரிகிறது. செய்தித் தாள்களில் கொலை, கொள்ளை, திருட்டு, கஞ்சா விற்பனை, மோசடிகள், ஏமாற்றுக்கள், ஊழல்கள், அரசியல் கூத்துக்கள் போன்றவையே முக்கியச் செய்திகளாக இடம் பெறுகின்றன. சமூகம் சரியில்லை, கல்வி சரியில்லை, காவல் துறை சரியில்லை, அரசியல் சரியில்லை, சரியில்லை, சரியில்லை என எல்லாமே சரியில்லாமல் போய் விட்டது. நமது பொன்னான மனசு உட்பட.

எவ்வளவு சம்பாதித்தாலும் போதவில்லை. முன்னரெல்லாம் எந்தமாதிரி தொழில் செய்கிறார்களோ, வருமானம் எவ்வளவோ அதற்கேற்ப வாழ்க்கையும் வசதிகளும் இருக்கும். தற்போது எல்லா மட்டத்திலும் பேராசை வந்து விட்டது. மேலாளர் பெரிய வீட்டில் வசிப்பார். கார் வைத்திருப்பார். சிறப்பான உடைகள் அணிவார். ஆடம்பரமாக வாழ்க்கை நடத்துவார். கடைநிலை எழுத்தருக்கு சிறிய வீடு, பேருந்து பயணம். அவர் ஊதியத்தில் எளிய வாழ்க்கையே வாழ முடியும். பெரும்பாலும் மாதக் கடைசியில் கடன் வாங்க வேண்டி வரும். நேற்றைய எழுத்தர் அதை ஏற்றுக் கொண்டார். மேலாளர் நிறையப் படித்திருக்கிறார். பெரிய இடத்திலிருந்து வந்திருக்கிறார். அவர் அப்படித்தான் வாழ்வார். நமக்கு இதுதான், போதும் எனும் மனநிலையில் ஓரளவிற்கு மகிழ்ச்சியாகவே வாழ்ந்தார்.

இன்றோ, மேலாளருக்கு பொது மேலாளரைப் பார்த்து ஆசை, பொறாமை. பொது மேலாளருக்கு நிர்வாக இயக்குனரைப் பார்த்து ஆசை, பொறாமை. இயக்குனருக்கு அவருக்கு மேலுள்ளவரைப் பார்த்து. இப்படியே போய் கடைசியில் எல்லோருமே இந்திய சனாதிபதியின் அரண்மனை போல் 320 ஏக்கர் அரண்மனை வீடு வேண்டுமென்கிறார்கள். ஏங்குகிறார்கள். எப்படியாவது வாங்கிவிட வேண்டுமென இரவு பகலாக உழைக்கிறார்கள். ராஷ்ட்டிரபதி பவன்போல் வீடு வாங்க வேண்டுமெனும் ஆசையில், முறையற்ற வழிகளில் இறங்குகிறார்கள். ஆசையும், குற்ற உணர்ச்சியும், அடைவோமோ மாட்டோமோ எனும் கொந்தளிப்பும் சேர்ந்து கொள்ள மனிதர்களால் தூங்கவே முடிவதில்லை. நவீன வாழ்க்கையின் பெரிய முரண்பாடாக எந்த மனிதரும் நிம்மதியாகத் தூங்கமுடியாத நிலை வந்து

விட்டது. விளைவாகக் குடிக்கிறார்கள். தம்மை மறந்து தூங்குகிறார்கள். மாத்திரைகள் போட்டுக் கொள்கிறார்கள். நிம்மதியாக உறக்கம் வருகிறது. குடியும் மாத்திரையும் தற்காலிகமானதானே. நாளுக்கு நாள் அளவு கூடிக்கொண்டே போகிறது. ஏராளமான பக்க விளைவுகள். உடல்நலம் கெடுகிறது. ஜனாதிபதி மாளிகைபோல் வீடு வாங்க நினைத்தவர் மன அழுத்தத்திற்கு ஆளாகி, கடைசியில் மாளிகையைச் சுற்றிப்பார்க்கக்கூட முடியாத நிலைக்கு மாறி விடுகிறார்.

மேலாளரைப் போல் வாழ ஆசைப்படும் எழுத்தரோ, என்னென்ன வழிகளில் முறைக்கேடாகச் பணம் பெற முடியுமா அத்தனை வழிகளையும் கையாள்கிறார். மேலாளர் பெரிய அளவில் ஊழல், கையூட்டு பெறுகிறார் எனில் கீழ்நிலை ஊழியர் அவர் அளவுக்கு கையூட்டு பெறுகிறார். கருவூலம் போன்ற துறைகளில் வேலை எனில் பணம் பெறாமல் எந்த வேலையும் அவரிடம் நடப்பதில்லை. அவருக்கு தவறு செய்கிறோம், இது தவறு எனும் எண்ணமே வருவதில்லை. யார்தான் யோக்கியம் என்கிறார். கண்காணிப்பாளரைப் பற்றி தெரியாதா என்கிறார். இருக்கையின் மேல் உலகத்தோடு ஒட்ட ஒழுகல் குறளையும் மறக்காமல் எழுதி வைத்திருக்கிறார். உலகம் எப்படி இருக்கிறதோ நாமும் அப்படி இருக்கணுமாம். எல்லோரும் வாங்கும்போது அவர் மட்டும் ஏன் லஞ்சம் வாங்கக் கூடாது நண்பர்களே. கிளர்க்கா இருந்தால் என்ன? அவர் மனைவிக்கு அட்டியல் வாங்கிப் போட்டு அழகு பார்க்க ஆசை இருக்காதா? பிள்ளைகளை இலக்க, இலக்கமாகக் கொட்டி பெரிய பள்ளியில் சேர்த்து டாக்டராக்க நினைக்க கூடாதா? லஞ்சப் பணத்தில் நிலத்தில் முதலீடுகள் செய்யக் கூடாதா. அய்யன் சொன்னதை அப்படியே பின்பற்றுகிறார். உலகத்தோடு ஒட்ட ஒழுகல். இந்தியா ஏன் ஆயுதங்களாக வாங்கி குவிக்கிறது? உலகம் பூராம் ஆயுதக் குவியலா இருக்கு. இந்தியாவும் ஆயுதத்தை குமிச்சு வச்சிருக்கு. உலகத்தோடு ஒட்டுதா இல்லையா நண்பர்களே.

டீக்கடைக்காரர் பேராசிரியர் அளவுக்குச் சம்பாதிக்க நினைக்கிறார். தாம் மட்டும் எதில் குறைந்தவர் என எண்ணுகிறார். பிள்ளைகளுக்கும் பேரன்களுக்கும் சொத்து சேர்க்க முடியும் என நம்புகிறார். பாலோடு தண்ணீரை அதிகமாகக் கலக்கிறார். வடையைச் சிறிதாக்குகிறார். கலப்பட எண்ணெய் வாங்குகிறார். மலிவாக தூள் வாங்குகிறார். ஓரிரு வருடங்களிலேயே ஒரு கடை நான்காகிறது. சில வருடங்களில் பெரும் பணக்காரராகி விடுகிறார். எல்லோராலும் முன்னேற முடிகிறது. யாராலும் பணக்காரராக முடியும், எப்படியாயினும் பணம் சேர்க்க முடியும் எனும் நம்பிக்கை வந்துவிட்டது. ஆட்டோ ஓட்டியே மாதத்திற்கு முப்பதாயிரம்

சம்பாதிக்க நினைக்கிறார். ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு 50 உரூபா கேட்கிறார். இரண்டு மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு கூட 100, 120 உரூபா வாங்குகிறார். ஒரு ஆட்டோவில் எவ்வளவுதான் சம்பாதிக்க முடியும்? ஆட்டோவின் முதலாளி பெரும்பாலும் காவலராக இருப்பார். ஆட்டோ ஓடினாலும், ஓடாவிட்டாலும் அவருக்குச் சேரவேண்டிய பணம் கொடுத்தாக வேண்டும்.

கோவை போன்ற ஆட்டோக்கள் கொள்ளையடிக்கும் நகர்களில் நான்கு ஆட்டோக்கள் இருந்தால் போதும். பெரும்பணக்காரராகிவிடலாம். சமீபத்தில் ஒப்பணக்கார வீதியில் ஜவுளி வாங்கிவிட்டு அருகேயிருக்கும் பேருந்து நிலையத்தில் நின்றுகொண்டு வரும் மீட்டர் ஆட்டோக்களை ரேஸ்கோர்ஸ் போகலாமா எனக் கேட்கிறோம். சொல்லி வைத்ததுபோல் மீட்டர் போடமாட்டோம் என்கிறார்கள். மீட்டர் போட்டால் மீட்டருக்கு மேலே போட்டு கொடுங்க என்கிறார்கள். பேராசிரியர் இப்படி ஆட்டோ ஆட்டோவாக நிறுத்தி பேரம் பேசுகிறாரே என மனைவிக்கு பயங்கர கோபம். பிள்ளைகளோ பத்து உரூபாதானே கூடக் கேட்குறாங்க கொடுத்துடலாம்பா என்கிறார்கள். பத்து உரூபாவா முக்கியம். மீட்டர் ஆட்டோ எனப் போர்டு வைத்தால் அதன்படி நடக்க வேண்டும் இல்லையா? கோவையில் பேரம் பேசாமல் நாகரிகமாக ஆட்டோவில் சென்று வர எவ்வளவு காலமாகும் நண்பர்களே. அதுதான் ஓலா இருக்கிறதே என்கிறீர்களா?

ஆரம்பத்தில் எல்லாமே ஜோராகத்தான் போகும் நண்பர்களே. ஓசியில்தானே சிம்கார்டு கொடுத்தார்கள். தேநீர் அறியாத தமிழர்கள் வெள்ளைக்காரன் ஓசியில் கொடுக்கிறான் எனக் குடித்துவிட்டு தற்போது தேநீர் சுவைக்கு கிறங்கி போய்க் கிடக்கிறோமா இல்லையா. தேநீருக்காக மேற்குத் தொடர்ச்சி மலைகளை முற்றாக அழித்ததாலல்லவா காவிரிப் பெண் ஓடோடி வர முடியாமல் தவிக்கிறாள். இதைப் பற்றி ஒருவரும் பேசியதாகத் தெரியவில்லை. தண்ணீர் கொடு, தண்ணீர் கொடு என்றால் எங்கிருந்து தண்ணீர் வரும் நண்பர்களே. குடகு முழுவதும் தேயிலை, காப்பித் தோட்டங்கள். பவானி பாய்ந்தோடி வரும் நீலகிரி முழுக்க தேயிலைப் பயிர்கள். வயநாடு முழுக்க தேயிலைக் காடுகள். அமராவதி ஆர்ப்பரித்து வரும் வால்பாறை பூராவும் தேயிலை வயல்கள். காவிரி அன்னை எங்கிருந்து பாய்ந்தோடி வருவாள்? கும்பகோணத்து டிகிரி காப்பி. அடேங்கப்பா எவ்வளவு விளம்பரம். சாலைகளில் ஒருகிலோ மீட்டருக்கு ஒரு கும்பகோணத்து டிகிரி கடை. படித்து அறிவுபெற்றிருந்த மாமியும், மாமாவும், பிள்ளையுமல்லவா, வெள்ளைக்காரன் ஓசியில் எதற்கு காப்பி கொடுக்கிறான் என யோசித்திருக்க வேண்டும். பில்டர்

காப்பியில் நாக்கு ஊறிய கும்பகோணத்துக்காரர்களுக்கு காவிரி நீரா முக்கியம். காவிரிப்பெண் இல்லா விட்டாலும் பரவாயில்லை. பில்டர் காபி இல்லாமல் இருக்க முடியாது. சரிதானே அறிவில் சிறந்தோரே.

ஞானவே உருவெடுத்த பிராமணர், தமிழகக் கல்வி நிலை குறித்தோ, கல்வியின் தரம் பற்றியோ பேசியதுண்டா? பிள்ளைகளைச் சிறு வயதிலிருந்தே படிப்பு, படிப்பு, படிப்பு என்றே வளர்க்க வேண்டியது. எப்படியாவது ஐ.ஐ.டி.யில் சேர்த்துவிட வேண்டியது. அங்கிருந்தே அமெரிக்காவுக்கு அனுப்பிவிட வேண்டியது. எப்படியாவது அமெரிக்கக் குடியுரிமை பெற்றுவிடுவதே பெரும்பாலான பிராமணர்களின் ஒரே லட்சியமாக, வாழ்வின் லட்சியமாக இருக்கிறது. அமெரிக்க பிராமணரோ, அங்கிருந்து கொண்டே சனாதன தர்மம் கெட்டு விட்டது, இந்தியா கெட்டுவிட்டது, தமிழகம் கெட்டு விட்டது என எழுதிக் குவிக்கிறார். சனாதன தர்மம் கெட்டதற்கு பிராமணர்தானே பொறுப்பேற்க வேண்டும். வெள்ளைக்காரனால் அதிகம் பயனடைந்தது, பயனடைந்து கொண்டிருப்பது பிராமணர்கள் அல்லவா? இரண்டு பேருமே வெள்ளைதானே. சேரத்தானே செய்யும்.

சனாதன தர்மத்தில் பிராமணர் எப்படி வாழவேண்டுமென சொல்லப்பட்டுள்ளதா? பிராமணர் அப்படி வாழ்கிறார்களா? பிராமணர் வாழாததால்தான் மற்றவர் வாழவில்லை. முதலமைச்சரே ஊழல் செய்துகொண்டு மக்களே ஊழல் செய்யாதீர்கள் எனச் சொல்ல முடியுமா? பிராமணரே வரதட்சிணை வாங்கிக் கொண்டு மக்களைப் பார்த்து, வரதட்சிணை வாங்காதீர்கள் எனச் சொல்ல முடியுமா? வரதட்சிணை வாங்காதீர்கள் என ஒவ்வொரு கிராமமாகப் போய் பிராமணரல்லவா பேசியிருக்க வேண்டும். பிராமணருக்கு ஆச்சாரமும், அனுஷ்டானமும்தான் முக்கியமல்லவா? சமூகம் எப்படியிருந்தால் பிராமணருக்கு என்ன வந்தது. ஞானவான்கள். எப்படியாவது பிழைத்துக் கொள்வார்கள். பிராமணருக்கு இல்லாத மூளை உலகில் வேறு எவருக்கிருக்கிறது. மூளையோ மூளை.

பேசுவது மட்டும் கடவுள் க்ருதயத்திலிருக்கிறார். இதயத்துள் உறைகிறார். இருதயத்தின் உள்ளே அந்தர்மியாக உட்கார்ந்திருக்கிறார். பிராமணருக்கல்லவா மனமும், சொல்லும், செயலும் ஒன்றாக இருக்க வேண்டும். பிராமணராலேயே முடியாதபோது எளிய மக்களால் எவ்வாறு முடியும்?

உலகம் தர்மத்தால் தாங்கப்படுகிறதாம். உண்மையா பிராமணர்களே. தர்மம் என்பது என்னவென்று பிராமணர் நன்கறிந்திருப்பார். எல்லோருக்கும் சொந்தமாக இருந்திருக்க வேண்டிய பூமியை தனிச்சொத்தாக வைத்து கொண்டிருந்தவர், தற்போதும் வைத்திருப்பவர் யார்? பிராமணர் நிலம் வைத்திருந்தாரா? நிலம் வைத்திருந்தாரா அல்லது பெருநிலம் வைத்திருந்தாரா அல்லது ஒரு கிராமத்தையே வைத்திருந்தாரா? பிராமணர் சொத்து வைத்திருக்கலாமா? அட்டி, அட்டியாக நகைகள் அணியலாமா? நிலக்கிழாராகவும் தங்கப் பதுமையாகவும் இருக்கும் பிராமணர், பிராமணர் எனச் சொல்லிக்கொள்ள முடியுமா? சொல்வது தர்மமாகுமா? தர்மம் யாரால் குறைந்தது? தர்மத்தைக் குறைத்தது யார்? குலைத்தது யார்? சனாதன தர்மத்தைத் கெடுத்தது யார்?

தமிழகத்தில் சனாதன தர்மத்தைப் பள்ளரும் பறையரும் கெடுத்தாரா அல்லது ஐயரும் ஐயங்காரும் கெடுத்தாரா? நிலம் யாருக்குச் சொந்தமாக இருந்தது? தர்மத்தின்படி யாருக்குச் சொந்தமானதாக இருந்திருக்க வேண்டும்? உலகம் தலைகீழாக மாறிவிட்டதாம். யாரால் பிராமணரே? பள்ளு வீட்டிலிருந்து பிராமணருக்குப் பேய்ச்சேர வேண்டிய நெல் மூட்டைகள், பிராமணர் வயலிலிருந்து படிக்கணக்கில்கூட பள்ள வீட்டிற்கு வராமல் போனது எப்படி? நிலத்தை உழுவது யார்? பயிர் செய்வது யார்? பங்கு வைப்பது எப்படி? சனாதன தர்மம் வகுத்தபடிதான் தமிழகத்தில் நடந்ததா? பறையர் வீட்டிலிருந்து ஐயருக்கு காய்கறிகள் வந்திருக்க வேண்டும். நடந்ததென்ன பிராமணரே.

பள்ளுவீட்டில் நெல் விளைந்தால் யார் யாருக்கெல்லாம் பங்கு வைக்கப்படும் பிராமணரே? ஐயர் தொடங்கி, ஆசாரிமுதல் காவல்காரர்வரை அத்தனை பேருக்கும் போகுமல்லவா? பிராமணர் வயலிலிருந்து எத்தனை பகிரப்பட்டது எனச் சொல்ல முடியுமா? குடியானவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதா அல்லது நெல் விற்கப்பட்டதா?

நெல்லை விற்றவர் யார்? நெல்லை விற்றதால் வந்த பஞ்சத்திற்கு யார் காரணம்? பள்ளும் பறையும் இலங்கையில் போய் செத்ததற்கு பொறுப்பானவர் யார்? எது பாவம்? எது புண்ணியம் பிராமணரே? பூமித்தாய் அளிக்கும் நெல்லை விற்பது பாவமா, புண்ணியமா?

நிகழும் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது என்பதை ஞானத்தில் சிறந்த பிராமணவர் அறிவார்தானே. நெல்லை விற்கலாமா? நெல் வணிகப்

பொருளா? உணவு விற்பனைப் பொருளா? உணவுக்கு விலையுண்டா? உணவை விற்றால் என்னாகும்? காசுக்கு வாங்கப்படும் உணவைச் சாப்பிட முடியுமா? காசு கொடுத்து வாங்கும் உணவு வயிற்றை நிறைக்குமா? மனிதருக்கு வயிறு நிறைய வேண்டுமா, மனது நிறைய வேண்டுமா? சனாதன தர்மம் என்ன சொல்கிறது பிராமணரே? வயிற்றை நிறைக்க முடியுமா? சாப்பிட்ட ஐந்து நிமிடத்திற்குள் வயிறு மீண்டும் ஆசைப்படும் என்பது பிராமணருக்குத் தெரியாதா?

நிலத்தைப் பிராமணர்கள் பிடுங்கிக் கொண்டீர்கள். பள்ளுவகைகள் பட்டினியானார்கள். உங்களைப் பார்த்து பிள்ளைகளும் நிலத்தை பறித்துக் கொண்டார். பறைகளைப் பட்டினி போட்டார். பள்ளும், பறையும் புளித்த தண்ணிக்கும், உலுத்த கஞ்சிக்கும் கையேந்தி நின்றது. காவலரோ திருடி வயிறு வளர்க்க வேண்டிய நிலைக்கு ஆளானார். வெள்ளையரை வைத்து குற்றப்பரம்பரை சட்டம் போட்டு கொட்டிலில் அடைத்துவிட்டு, பிராமணரும் பிள்ளையும், நாதஸ்வர இசையும் நையாண்டி மேளமுமாக துரைமாரோடு டான்ஸ் ஆடித் திரிந்தீர். உலகில் தர்மமிருந்ததா பிராமணரே?

பிராமணருக்கு ஒரு தர்மம். பிள்ளைக்கு ஒரு தர்மம். திருடனுக்கு ஒரு தர்மம். தேவனுக்கு ஒரு தர்மம். எத்தனை தர்மமிருக்கிறது பிராமணரே? தர்மம் ஒன்றா அல்லது ஆளுக்கொரு தர்மம் இருக்கிறதா? தர்மத்திற்கு அளவிருக்கிறதா? ஆள் பார்த்து, சாதி பார்த்து, நிறம் பார்த்து தர்மம் மாறுபடுமா? அல்லது அனைவருக்கும் ஒரே தர்மம்தானா?

தர்மம் குறையுமா? தர்மம் கெட்டுப் போகுமா? தர்மம் இல்லாமலாகுமா? தர்மம் பொய்க்குமா? உண்மையும் தர்மமும் ஒன்றாகுமா? ஒன்று எனில் உண்மை குறையுமா? உண்மை கெடுமா? உண்மை பொய்க்குமா? பொய்யான உண்மை உள்ளதா? குறையான உண்மை இருக்க முடியுமா? கொஞ்சம் உண்மை எனச் சொல்ல முடியுமா? உண்மையான உண்மை எனக் கூற முடியுமா?

உண்மை வேறு தர்மம் வேறா? சத்தியம் வேறு உண்மை வேறு தர்மம் வேறா? தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வுமா? தர்மத்தையே சூது கவ்வுமெனில், சூதிடம் தர்மம் தோற்குமெனில், தர்மம் என்பதன் உண்மையான பொருள்தான் என்ன? தர்மம் எப்படி சூதிடம் தோற்கும்? உலகில் தர்மம் தோற்றால் என்னாகும்? சூதும் சூழ்ச்சியும் வென்றால் என்னாகும்?

நன்று எது? நன்மை எது? நல்லது எது? புண்ணியம் எது? தர்மம் எது? அறம் எது? அறம் குறையுமா? அறம் பிறழுமா? அறத்தை சூது கவ்வ முடியுமா? அறத்தை சூழ்ச்சி வெல்ல முடியுமா?

தமிழர் தர்மத்தை பேசினாரா? அறத்தைப் பேசினாரா? தமிழ் இலக்கியங்கள் தர்மத்தைப் பேசுகின்றனவா, அறத்தைப் பாடுகின்றனவா? அறம் எனில், தமிழ் இலக்கியங்கள் தர்மத்திற்கு மாற்றாக அறத்தைப் பேசியது ஏன்? பாடியது ஏன்? பதிந்தது ஏன்? அற்றம் எனில் இறுதி, கடைசி என்பது படிப்பில் மேன்மைபெற்ற பிராமணருக்குச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. தமிழ்க் கவிஞன் அறம் பாடியது ஏன் அந்தணர்களே? அறிவாழி என்றும் அறநெறி என்றும் அழைத்தது ஏன் பிராமணர்களே?

மண்ணில் அறவாழி அந்தணன் அறம் பிறழ்ந்த பிராமணரானது ஏன்? எப்போது? எப்படி? யாரால்? எதற்காக? அறம், பொருள், இன்பம், வீடுபேறு தானே. அறத்துப்பால் பிராமணர் அறிந்ததுண்டா அல்லது சமண இலக்கியம் என்று சொன்னதால் படிக்காமல் விட்டு விட்டீரா? நூல் ஒதுக்கல் பிராமணருக்கு ஒப்புமா? அறிவாகுமா?

அனைத்தும் அறிந்த பிராமணர்களே.. மழை பொழிவது ஏன்? மழை பொழிவது தர்மத்திற்கா? அறத்திற்கா? மழை குறைவு எனில் தர்மமும் குறைவு எனலாமா? அறம் குறைந்துவிட்டது எனலாமா? தர்மம் பார்த்து, அறம் பார்த்து மழை பெய்யுமா அல்லது உயிர்களுக்கு அமுதமான மாமழை பயன் கருதாது பொழியுமா? அன்னை தன் பிள்ளை திருடன் என்பதற்காக உணவிடாமல் விட்டுவிடுவாளா? எதிர்காலத்தில் எப்படி பிள்ளை நம்மை கவனிப்பானோ என நினைத்து குறைவாக ஊட்டப் போகிறாளா? பயன் கருதி அன்னை பாலூட்டுவாளா பிராமணரே? உலகில் முலைப்பால் விற்பனைக்கு வந்துவிட்டதை அறிகிறாரா பிராமணர்? கற்பு விலைபேசி விற்கப்படுவதை தெரிந்திருக்கிறாரா பிராமணர்? தமிழகத்தில் சோற்றுக்கில்லாத எளிய மனிதர்கள் தங்களைத் தாங்களே விற்றுக் கொண்டதைப் படித்திருக்கிறாரா பிராமணர்? யாருடைய ஆட்சியில் சோற்றுக்குப் பஞ்சம் வந்ததென்பதை அறிவாரா பிராமணர்? சோழ வளநாடு சோற்றுக்கு மனிதர்களை கூவிக்கூவி விற்ற காலம் எது? கால்வயிற்றுக் கஞ்சிக்கு வழியில்லாத எளிய மக்கள் செத்து மடிந்தபோது பிராமணர் எப்படி வாழ்ந்தார்? பிள்ளைமார் எப்படி வாழ்ந்தார்? மண்ணின் தர்மம் ஏன்

ஏழைகள் வயிற்றை நிறைக்கவில்லை? அறம் ஏன் உணவிடவில்லை? ஏழைகள் தா்மம் பட்டினி கிடப்பது. எளியவா் தா்மம் பட்டினியாகச் சாவது. பிராமணா் தா்மம்?

தா்மம் தலை காக்கும்.. அறிவில் சிறந்த பிராமணா்தான் எழுதி வைத்திருக்கிறாா். தலை காக்கும் தருமம் வயிற்றையும் காக்க வேண்டுமல்லவா? நவீன அறிவியல் வயிறே முக்கியம் என்கிறது. மூளை செயல்படுவதற்கு ஆற்றல் அவசியமாம். ஆற்றல் வேண்டுமாயின் வயிற்றுக்கு உணவு வேண்டும். உணவே ஆற்றலாகிறது. ஆற்றலே எண்ணமாகிறது. எண்ணமே செயலாகிறது. செயலே தருமமாகிறது. தருமத்திற்குக் காரணம் உணவு. உணவைக் கொடுப்பது மாமழை.

மழை பொழிவது தருமமா, அறமா, கருணையா, தயையா? மாரி பொய்த்தால், மழை என்னும் செல்வம் குறைந்தால், உழவா் உழமாட்டாா். உழவா் உழாவிட்டால் என்னாகும் பிராமணரே? நவீன காலத்தில் வேண்டுமானால், அடுத்த நாட்டிலிருந்து உணவை இறக்குமதி செய்யலாம். ஒருவேளை அங்கும் உழாவிட்டால். பிராமணா் குவித்து வைத்திருக்கும் பணத்தையும், நகைகளையும் உண்ணமுடியுமா? மழை பொய்த்தால் எமக்கென்ன, எம்மிடம் இல்லாத பணமா, இருக்கவே இருக்கிறது அக்குவாபினா என இறுமாந்திருக்கும் பிராமணரே, மழை நீரை காசுக்கு விற்பது தருமமாகுமா? எவ்வளவோ படித்திருப்பீரல்லவா. உலக இலக்கியங்களில் தண்ணீரை விற்றாா் எனப் படித்ததுண்டா? விற்றதில்லை எனில், தண்ணீரை விற்பது தருமமாகாது எனப் பிராமணா் தடுத்தாரா அல்லது எமது பணம், எமது மூளை, எமது உரிமை என முதல் ஆளாகப் போய் வாங்கிக் குடித்தாரா? வாழ்வின் ஒரே நோக்கம் பணம் சம்பாதிப்பதே என வாழும் பிராமணா், சுத்திகரிக்கப்பட்ட, சுத்தமான, சுவையான தண்ணீா், எத்தனை எத்தனை ரகங்களில் விற்கப்படுகிறது என்பதை அறிந்திருப்பாரல்லவா. அறிந்திருக்கிறாரா அல்லது ஆா்.ஓ போட்டு நேரடியாகவே அடுப்பங்கரையிலிருந்து அள்ளிக் குடிக்கிறாரா? அத்தனை பிராமணரும் அடுக்குமாடிகளுக்கு வந்தாயிற்றல்லவா? பாதுகாப்பு முக்கியம் இல்லையா? பணம் கொடுத்தால் என்ன வேண்டுமானாலும் கிடைக்கப் போகிறது. பணம் சம்பாதித்தால் எப்படி வேண்டுமானாலும் வாழலாம். சரிதானே பிராமணரே. பிராமணா் எப்படி வேண்டுமானாலும் வாழலாமா அல்லது இப்படித்தான் என வாழ வேண்டுமா? சனாதன தா்மம் என்ன விதித்திருக்கிறது பிராமணரே? சனாதன தா்மத்தைப் பின்பற்றுவதாலேயே ஒருவா் பிராமணராகிறாா். எப்போது பின்பற்ற வில்லையோ அப்போதே பிராமணா் எனும் தகுதியை இழந்துவிட்டதாகச் சொல்லலாமா?

சனாதன தர்மமும், வருணாசிர தர்மமும், இந்து தர்மமும், வைதீக தர்மமும், பிராமண தர்மமும் ஒன்றா? வேறுவேறா? மானுட தர்மம் என ஏதாவது சொல்லப்பட்டுள்ளதா? காந்தி சொன்ன முன்மொழிந்த சனாதன தருமத்திற்கும், பிராமணர்களின் சனாதன தருமத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன? எவ்வளவு?

பிராமணரே, உலகிலுள்ள மிகவும் சுவையான நீருள் ஒன்றாகப் புகழப்படும் சிறுவாணி நீர், மாநகரின் மிக முக்கியமான பகுதியாகக் கூறத்தக்க பந்தயச் சாலை அரசு குடியிறுப்புக்குக் கிடைப்பதில்லை. இரண்டு வருடங்களுக்கு முன்வரை, வாராவாரமோ பத்து நாட்களுக்கு ஒருமுறையோ வந்து கொண்டிருந்த சிறுவாணி நீர், அதன் பின்னர் வருவதில்லை. அருமையான நீரோடு மற்ற நீரைக் கலந்து கலப்புத் தண்ணீராகக் கொடுக்கிறார்கள். சுவை இல்லை. குடிப்பதற்கு தண்ணீர் நன்றாக இல்லை. இரண்டு வருடங்களாக கேன் குடிநீர் வாங்குகிறோம். 20 லிட்டர் முப்பது நாப்பது என விற்றது தற்போது 45 உரூபா. சிறுவாணி நீரைத்தான் வடிகட்டி விற்கிறார்கள். குடிநீர் கேன்கள் உடனேயே விற்றுவிடுகின்றன. மூன்று நாட்களுக்கு ஒரு கேன். மாதத்திற்கு 500 உரூபா வரை செலவாகிறது. குடிநீரிலேயே ரகம் ரகமாய் விற்கிறார்கள். அறுபதுக்கும் கிடைக்கிறது. 90, 150 உரூபாக்கும் கிடைக்கிறது. பெரிய பணக்காரர்கள் வாங்குவார்கள் போல. யாம் இலக்க உரூபா சம்பளம் வாங்குவதால் குடிநீருக்காகச் செலவிடும் 500 உரூபா ஒன்றும் பெரிதாகத் தெரியாது. ஒருவர் பத்தாயிரம் உரூபா மட்டும் சம்பாதிக்கிறார் எனில், மாதம் 500 உரூபா என்பது எத்தனை சதவிகிதம் பிராமணர்களே? குழாய்க்கு வராத சிறுவாணி நீர் விற்பனைக்குக் கிடைப்பதெப்படி? குடிப்பதற்கே கிடைக்காத சிறுவாணி ஏராளமான குடியிறுப்பு வளாகங்களில் குளிப்பதற்கும் பயன்படுவது எவ்வாறு? காசு கொடுத்து வாங்கும் குடிநீரை வயிராறக் குடிக்கமுடியுமா?

யாம் இலக்க உரூபா ஊதியம் பெறுவதால் ஒரு கரண்டி வெண்பொங்கலை 52 உரூபாக்கு ரசித்து ருசித்து சாப்பிடலாம். எல்லோராலும் முடியுமா? அன்னபூரணிகளில் நீங்கள்தான் நிறைந்திருக்கிறீர்கள். நீங்கள் பேசுவதுதான் தனியாகத் தெரிகிறதே. உருவத்தில், உடையில், பேச்சில் மற்ற மனிதர்களிடமிருந்து எவ்வளவு வேறுபாடு? ஞானமுள்ளவரென்று, அறிவில் சிறந்தவரென்று, பார்த்த உடனேயே தெரிய வேண்டுமல்லவா? கோவில்களில் மற்றவர்களுக்கு ஒரு கரண்டி தீர்த்தப்பிரசாதம். உங்களுக்கோ மூன்று கரண்டி.

மற்றவர்களை சீக்கரம் சீக்கரம் என விரட்டுபவர்கள் உங்களை விரட்டக் காணோம். யாராக இருந்தாலும் அறிவுள்ள பிள்ளைகள்தான் பிடிக்கும் போல.

பெருவாரியான மக்கள் சாப்பிட வரும் ஒரு உணவுவிடுதியில் இரண்டு சிறிய இட்லிகள் நாற்பது உருபாக்கு விற்கப்படுகிறது. பிராமணர்களே, நீங்கள் வெளிநாட்டுப் பயணம் போகும்போது, விமான நிலையங்களில் உள்ள கடைகளில் ஒரு குவளை தேநீர் 130, 200 என்றெல்லாம் குடித்திருப்பீர்கள். யாம் சொல்வது நகருக்குள் இருக்கும் கொஞ்சம் நல்ல உணவுவிடுதியை.

இரண்டே இரண்டு இட்லிகளில் இருக்கும் வியாபார தந்திரம் என்ன? நாம் சாப்பிடும் இரண்டு இட்லிகளின் மீது எதெல்லாம் ஏற்றிவைக்கப்படுகிறது? இரண்டு இட்லிகளும் 100 கிராம் இருக்குமா பிராமணரே. சிறிய இட்லிகள். கூடவே, சிறிய கிண்ணங்களில் சாம்பார், புதினா சட்டி, காரச் சட்னி, தேங்காய் சட்னி வைக்கிறார்கள். தம்ளரில் தண்ணீர் கொடுக்கிறார்கள்.

முதலில் இத்தனை சட்னி தேவையில்லை. சுவைத்து சாப்பிட வருவரெல்லாம் பிராமணர்களா. பசிக்கு சாப்பிட வருபவருக்கு எதற்கு மூன்றுவிதமான சட்னிகள். முக்கால்வாசி சட்னி வீணாகிறது. 100 கிராம் இட்லியில் அரிசி எப்வளவு இருக்கும்? உளுந்தம் பருப்பு எவ்வளவு இருக்கும்? இரண்டும் மூலப் பொருள் எனில் இரண்டு இட்லிக்கு உண்டான மூலப் பொருட்களின் மதிப்பு எவ்வளவு?

கடை வாடகை, சமையல் பணியாளர் சம்பளம், சமையல் உபகரணங்கள், உணவு பரிமாறும் பொருட்கள், மேஜை, நாற்காலி, உள் அலங்காரம், மின்சார உபயோகம், எரிபொருள் செலவு, பரிமாறுபவர்கள், துடைப்பவர்கள், பில் போடுபவர் பணம் வாங்குபவர் சம்பளம், போக்குவரத்து செலவு, வணிகவரி, அரசியல் நன்கொடை, தண்ணீர் வரி, மாநகராட்சி வரி, கணினிக்கான செலவு, தொலைபேசி, விளம்பரச் செலவு, காவல் துறை மாமூல், குண்டர்கள் பங்கு, கட்சிக் கூட்ட வசூல், கணக்காயர் செலவு, பணியாளர்கள் போனஸ், தேய்மானச் செலவு, பூஜை போடும் செலவு, சுத்தப்படுத்தும் செலவு என இவ்வளவுக்கும் செலவிட்டது போக, முதலாளிக்கும் பெரும் இலாபத்தை நாம் சாப்பிடும் அந்த இரண்டு இட்லி கொடுக்கிறது எனில், இரண்டு இட்லியின் உண்மையான விலைதான் என்ன? இவ்வளவு பேரை வாழவைக்கும் இரண்டு இட்லிகளைப் பாராட்டலாம்தானே பிராமணர்களே. வாழ்க இட்லிகள். வெல்க மாவு. வளர்க அரிசியும் உளுந்தும்.

நாகரீகமாகச் சாப்பிட்டால் நாலு வாய். சாம்பார், சட்னியைக் கொட்டி பிசைந்து உள்ளே தள்ளினால் இரண்டே வாய்தான். ஒரு கரண்டி மாவு, ஒரு கிண்ணி மாவு, இட்லியாக மதிப்புக் கூடி நம்மிடம் வரும்போது, கொள்ளை விலையுள்ள பொருளாக நம் தலையில் கட்டப்படுவதன் தந்திரம் என்ன பிராமணர்களே? ஒரு கரண்டி மாவுக்கு இவ்வளவு விலையெனில், நெல்லும் உளுந்தும் விளையும் மண்ணிற்கும், விளைவிக்கும் விவசாயிக்கும் எவ்வளவு விலை கொடுப்பீர்கள்? தண்ணீருக்கு எவ்வளவு விலை? சூரியனுக்கு எவ்வளவு மதிப்பு கூடும்? கார்பனுக்கும் விலையுண்டல்லவா?

நெல் எப்படி விளைகிறது பிராமணர்களே? அனைத்துப் பிராமணர்களும் கிராமங்களைக் காலி செய்து விட்டதால் ஒருவேளை அறிந்திருக்க மாட்டீர்கள். நீங்கள் அவசியம் அறிந்து கொள்ள வேண்டிய உண்மை, உங்களின் ஆன்மீகக் கடவுள்கள் அந்தரத்தில் சுழற்றி எதையெதையோ எடுப்பதுபோல், எந்த விவசாயியும், மந்திரமோ மாயஜாலமோ பண்ணி நெல்லை விளைவிப்பதில்லை. எங்கள் ஆண்டவரே மண்ணிலிருந்து நெல்லை உண்டாக்கும் என நாள்முழுதும் பிராத்தனை செய்தும் நெல்லை விளைவிப்பதில்லை. எம்மால் உறுதியாகச் கூற முடியும்.

யாம் விவசாயக் குடும்பத்தில் பிறந்ததனால், இருபது வருடங்கள் வரை கிராமத்தில் வாழ்ந்ததனால், உழுகுடிகளின் உழைப்பை நன்கறிவோம். எவ்வளவு கரிசனம்.. எவ்வளவு அக்கறை.. எவ்வளவு அன்பு.. விவசாயிகளின் முழு உழைப்பும் நிலத்திற்கல்லவா போகிறது. அரும்பாடுபட்டு உற்பத்தி பண்ணுவது விவசாயிகள். பெரும்பாடுபட்டு விளைவிப்பது உழுகுடிகள். நெல்லை வாங்குவதோ வியாபாரிகள். அதுவும் ஏலத்தில். கூட்டாகப் பேசிவைத்துக் கொண்டு குறைந்த விலைக்கு வாங்கப்படும் நெல், அநியாய விலைக்கு கைமாற்றி விடப்படுகிறது. இதற்கு அதிகாரிகளும் கூட்டு. மற்ற அனைத்திற்கும் உற்பத்தி பண்ணுபவரே விலையைத் தீர்மானிக்கிறார். விவசாயப் பெருட்களுக்கு மட்டும் யார் யாரோ விலை வைக்கிறார்கள். விவசாயிகளிடம் அற்பவிலை கொடுத்து வாங்கப்படும் நெல், அரிசி ஆலை முதலாளிகளால் விலை உயர்த்தப்பட்டு, வணிகர்களால் கூட்டி விற்கப்பட்டு, ஓட்டல்காரர்களால் மதிப்புக் கூடிய பொருளாக நமக்கு வந்து சேர்கிறது. ஒரு உரூபாகூட பெறாத மூலப்பொருள், நாற்பது மடங்கு உயர்த்தி விற்கப்படுவதை எதிர்த்து, என்றைக்காவது ஞானத்தில் சிறந்த பிராமணர் பேசியதுண்டா? எந்தக்

கடைகாரரிடமாவது கேட்டதுண்டா? பணிபுரியும் பத்திரிகைகளில் எழுதியதுண்டா? முகநூலில் பதிந்ததுண்டா அல்லது வாட்ஸ் அப்பில்தான் பகிா்ந்ததுண்டா?

கடன்வாங்கி, உழைப்பைக் கொட்டி, வியா்வை சிந்தி, களையெடுத்து, தண்ணீா் பாய்ச்சி, மக்களாவது வயிறார உண்டு பசியாறட்டுமே என உழவன் விளைவிக்கும் ஒப்பில்லாத நெல்மணிகள் மழையில் நனைந்து வீணாகின்றன. இலக்கக் கணக்கணக்கான நெல்மூட்டைகளைப் பத்திரமாக மூடிவைக்க மதிகெட்ட அரசுகளிடம் தாா்ப்பாய்கள் இல்லை. மாறாக, ஒரு சொட்டு மழைக்கே உள்ளம் பதறி, பிரம்மாண்டமாக பரந்து விரிந்திருக்கும் மட்டைப்பந்து மைதானங்களை, ஒரு துளி ஈரம் இறங்காமல் ஓடோடிப் பாதுகாப்பதில், ஈரமில்லாமல் பத்திரமாக மீட்பதில் சமா்த்தாக இருக்கின்றன, மிக துல்லியமாகவும் துரிதமாகவும் செயல்படுகின்றன.

கிரிக்கெட் விளையாடுவது பிராம்மனோத்தமா்களல்லவா? மைதானம் நனைந்தால் என்னாவது? பந்து எழும்போதே புவுண்டரி எப்படி அடிப்பது? சிக்ஸா் எப்படி விளாசுவது? கோடிகோடியாய் எப்படி சம்பாதிப்பது?

கிரிக்கெட் பாா்க்கிறீா்கள்தானே பிராமணா்களே. மழை வருவது போல் தெரிந்தாலே, வருணனையில் சொன்னாலே  மனம் பதறுகிறீா்கள் அல்லவா? மழை பெய்யும்போது எவ்வளவு விரைவாக, ஒழுங்காக, பிட்சை, ஒட்டு மொத்த மைதானத்தை, மூடுகிறாா்கள் பாா்த்தீா்களா? மழைக்கு மூன்று இலக்கம் நெல்மூட்டைகள் நனைத்து வீணாகின்றன. பிராம்மனோத்தமா்களுக்கு கிரிக்கெட்தானே பெரிது. கடவுள் இல்லையென்று நினைக்கிறீரா பிராமணரே.. கல்லெங்கே பேசப் போகிறது, கல்லுக்கென்ன தெரியப் போகிறது என்றா நினைக்கிறீா் பிராம்மணரே..

நகரங்களில்தான் இனி நல்வாழ்வு எனத் தெரிந்தவுடன் அத்தனை பிராமணக் குடிகளும் நகரங்களுக்குப் பறந்துவிட்டீா். பிராமணா் பின்னாடியே பெரும்பாலான பிள்ளைகளும் ஓடி வந்துவிட்டாா். விவசாயிகள் ஏன் நகரங்களுக்கு பறந்தோடி வருவதில்லை பிராமணரே. எல்லாம் நீா் எழுதிவைத்திருக்கும் தா்மம்தான் காரணம். அவரும் ஓடி வந்து விட்டால் உமது வயிற்றுக்கு சோறிடுவது யாா்? உமது கடவுள்களுக்கு ஆறுவேளை அன்னம் பலியிடுவது எப்படி? எளிய மனிதா்களுக்குத் தெரிந்திருக்கிறது. நாமளும் போய்ட்டா எப்படிப்பா எலலோரும் சாப்பிடுறது. அவரல்லவோ ஞானி. அவரிடமல்லவா நியாயமும் தா்மமும் இருக்கிறது. பிராமணா் பாா்வையில் அவா் பிழைக்கத் தெரியாதவா். சரிதானே.

அரசுக் கல்லூரி என்றில்லாமல், தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான கலை அறிவியல் கல்லூரிகளில் பிராமணர்களே இல்லை அல்லது விரல்விட்டு எண்ணி விடலாம். என்னதான் இருந்தாலும் பிராமணர் அறிவானவரன்றோ. கல்லூரிகளில் அறிவுக் குறைபாடு அப்பட்டமாகத் தெரிகிறது. பிராமணருக்கு மாற்றாக இடம் பிடித்த வெள்ளாளர்களால் சிறந்த கல்வியாளர்களாக ஆக முடியவில்லை. அது கல்வியின் அனைத்து நிலைகளிலும் எதிரொலிக்கிறது. பிள்ளைமார் போன்ற பெரிய சாதிக்காரர்கள் பிராமணர்களே பரவாயில்லை என நினைக்க வைக்கின்றனர். அர்ப்பணிப்பு இல்லை. கல்வியே பேச்சு, மூச்சாக வாழ்பவர், இருப்பவர் அரிது. இது எமது அனுபவத்தில் கண்ட உண்மை.

கல்லூரிகளில் பட்டியல் சாதியினர் சமீப காலங்களிலேயே அதிகமானோர் பணிபுரிகிறார்கள். பெரும்பாலும் முதல் தலைமுறைப் பட்டதாரிகளாகவும், சொற்பமானவர் இரண்டாம் தலைமுறையாகவும் இருப்பதால் கல்வி, கேள்வியில் பெரிய அளவிற்கு ஞானமில்லை. ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து வந்ததால் நல்ல மனமிருக்கிறது. மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. எப்படி என்பதுதான் புரியவில்லை. இடைநிலைச் சாதிகளுக்கும் இதுவே நிலை. கல்லூரிகளில் அகமுடையார்கள் ஓரளவிற்கு இடம் பெற்றுள்ளனர். மறவர், கள்ளர்கள் வெகு சொற்பமாகவே இருப்பது தெரிகிறது. நாடார் நிறைந்திருக்கிறார்கள். பெரும்பாலும் கிறித்தவராக இருப்பதால் ஆங்கிலம் ஓரளவிற்குத் தெரிகிறது. அதுவே அவர்களை எல்லாம் தெரிந்தவராகவும், உயர்வானவராகவும் எண்ண வைக்கிறது. பேராசிரியர்களே சாதியாய், மதமாய் பிரிந்து கிடக்கிறார்கள். மாணவர்களுக்குக் கற்பிப்பதில் மிகுந்த அலட்சியம் காட்டப்படுகிறது. மாணவர்கள் அதை அறிந்திலர்.

ஒரு காலத்தில் கலைக் கல்லூரிகளில் நிறைந்திருந்த பிராமணர், பொறியியல் கல்லூரிகளுக்குப் போய் தற்போது பன்னாட்டுக் கம்பனிகளில் இரவுபகல் பாராது உழைக்கிறார். பிராமணர்களின் கல்வியால், உழைப்பால், அறிவால், பன்னாட்டு நிறுவனங்களுக்கு நல்ல இலாபம். தமிழ்நாட்டுக் கல்வியோ தரம் தாழந்து கிடக்கிறது. கல்லூரிகளிலேயே இதுதான் நிலையெனில் பள்ளிகளைப் பற்றி, குறிப்பாக அரசு பள்ளிகளைப் பற்றி என்ன சொல்வது. முதல்தரமான பிராமணர் வெளிநாடுகளுக்கும், இரண்டாம் தரமானவர் பன்னாட்டுக் கம்பனிகளுக்கும், அதற்கும் குறைவானவர் ஆங்கிலப் பள்ளிகளுக்கும் போய்விட்டார். ஆங்கிலம் தெரிந்தால் போதும், அவரே சிறந்த ஆசிரியர், அவரே

அறிவில் சிறந்தவர் என சமூகம் ஆக்கப்பட்டுவிட்டது. ஆங்கிலத்தில் பேசுபவரே, வகுப்பெடுப்பவரே சிறந்த ஆசிரியர் என்பதே பெரிய பள்ளிகளின் நிலைப்பாடு.

தமிழகத்தின் ஒட்டுமொத்தக் கல்வியுமே தனியார்மயமாகிவிட்டது. கல்வியை, அறிவை பொதுவுடமை ஆக்க வேண்டிய பிராமணரே, கல்விக் கொள்ளைக்குத் துணைபோகிறார். பெரும்பாலான தனியார் பள்ளி, கல்லூரிகளின் முதல்வர்களாக பிராமணர்களே இருக்கிறார்கள். தமிழகக் கல்வியில் எங்கும் தனியார்மயம்.. எல்லாவற்றிலும் தனியார் மயம்..

தமிழகத்தில் கல்லூரிக் கல்வி இயக்குனரகத்தின் கட்டுப்பாட்டில், கலை அறிவியல் கல்லூரிகள், உடற்கல்வி கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள் உள்ளன. மொத்தமாக 1543 கல்லூரிகள் இருந்தாலும், அவற்றில் 1243 கல்லூரிகள் தனியாருக்குச் சொந்தமானவை. அரசுக்குச் சொந்தமாக 91 கலை அறிவியல் கல்லூரிகளே உள்ளன. இவற்றுள்ளும் 67 கல்லூரிகளே முன்பு இருந்தன. கடந்த சில ஆண்டுகளாகவே புதிதாக கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளன. மிகச் சில படிப்புகளே புதிய கல்லூரிகளில் கற்றுத் தரப்படுகின்றன. பெரும்பாலும் வருகை விரிவுரையாளர்களைக் கொண்டே கற்றுத்தரப்படுகிறது. பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் நாற்பது உள்ளன. இங்கும் அதே நிலைதான். அரசு உதவி பெறும் கல்லூரிகள் 139 இருக்கின்றன. அரசு உதவி பெறும் கல்லூரிகளில் சமீப ஆண்டுகளாக சுயநிதிப் பாடங்களுக்கே முன்னுரிமை தரப்படுகிறது. தனியார் கலைக் கல்லூரிகள் 514 செயல்படுகின்றன. மேலும், கல்லூரிக் கல்வி இயக்குனரின் வரம்பிற்குள் வராத கம்யூனிட்டிக் கல்லூரிகள் 200க்கும் அதிகமாக உள்ளதாக பத்திரிக்கை குறிப்புகள் சுட்டுகின்றன.

தமிழகத்தில் அரசு கல்வியில் கல்லூரிகள் ஏழு மட்டுமே. அரசு உதவி பெறுவது 14. தனியார் கல்வியியல் கல்லூரிகள் 712. அரசு சார்பில் உடற்பயிற்சிக் கல்லூரிகளே இல்லை. அரசு உதவியில் மூன்று கல்லூரிகளும், தனியாரிடம் எட்டும் இருக்கின்றன.

அறிவிலும் ஞானத்திலும் சிறந்த பிராமணரிடம் தமிழகத்தில் ஏன் ஏழே ஏழு அரசு கல்வியியல் கல்லூரிகளே உள்ளன, தனியாரிடம் எதற்காக 712 கல்வியியல் கல்லூரிகளைக் வாரிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதற்குப் பதிலிருக்கிறதா?

தனியார்கள் கல்விச் சேவைக்கா கல்வியியல் கல்லூரிகள் நடத்துகிறார்கள்? உலகிலேயே சிறந்த கல்வியாளர்களை உருவாக்கவா கல்லூரி நடத்துகிறார்கள்? தனியாருக்கு இலாபம், அதுவும் கொள்ளை இலாபம் முக்கியமா, கல்விச் சேவை முக்கியமா பிராமணரே? கல்வியை அதுவும் மாணவர் சமூகத்தை சமைக்கப்போகிற கல்வியியல் கல்லூரிகளைத் தனியார் முதலாளிகளிடம் கையளித்து விட்டு, அரசு எதை, சாலைகள் தோறும், வீதிகள் தோறும், ஊர்கள் தோறும் விற்றுத் திரிகிறது பிராமணரே? திட்டங்கள் தீட்டுவது அரசியல்வாதிகள் என்றால், திட்டங்களுக்கு ஒப்புதல் கொடுப்பது செயலாளர்கள்தானே. செயலாளர் கோப்பில் கையெழுத்திட மறுத்தால் அரசியல்வாதி என்ன செய்துவிடுவார்? வேலையை விட்டுத் தூக்க முடியாதல்லவா? பணியிடமாறுதல் செய்வாரா? எங்கே பணிபுரிந்தாலும் அரசு வீடு, அதே சம்பளம்தானே. ஏன் மறுத்தீர் பிராமணரே? அடியாள் வைத்து அடிப்பாரா? காவல் துறை இருக்கிறதே. காவல்துறையையும் அரசியல்வாதி கைக்குள் போட்டுக் கொள்கிறாரா? நீதித்துறை உள்ளதே. நீதித்துறையும் சரியில்லையா. மக்களிடம் சொல்லியிருக்கலாமே. மக்களும் சரியில்லையா. ஆண்டவனிடம் முறையிட்டிருக்கலாமே. அரசு வியாபாராம் செய்யக் கூடாதாம். சாஸ்திரம் சொல்கிறதாம். அர்த்த சாஸ்திரம்தானே பிராமணரே. எந்த சாஸ்திரம் சொல்லி அரசே மதுக்கடை நடத்துகிறது? கடையை மூடினால் கள்ளச் சாராயம் பெருகுமாம். கள்ளச் சாராயம் காய்ச்சுபவர் யார்? தமிழ் குடிகளில் எந்தக் குடி கள்ளச்சாராயம் காய்ச்சுகிறது? விற்கிறது? குடிக்கிறது?

பாக்கட் சாராயம் விற்றது யார்? அடித்த கொள்ளையில் ஒரு பங்கை தேர்தல் செலவுக்கு என்று கொடுத்தது யார்? ஊரெல்லாம் கடை திறந்து பெற்ற பெரும் பங்கில் ஓட்டுக்குப் பணத்தை வாரி இறைத்தது யார்? பிராமணருக்குத் தெரியாதா?

2015-16 ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி, தமிழகத்தில் 583 பொறியியல் கல்லூரிகள் இயங்குகின்றன. அரசு கல்லூரிகள் வெறும் 10. அரசு உதவிபெறும் கல்லூரி 3 மட்டுமே. தனியார் நடத்தும் பொறியியல் கல்லூரிகள் 553. அண்ணா பல்கலை உறுப்புக் கல்லூரிகள் 17.

ஒரு அரசு பொறியியல் கல்லூரிகூட இல்லாத காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டும் 84 தனியார் பொறியியல் கல்லூரிகள் செயல்படுகின்றன. இந்த மூன்று வருடத்திற்குள் இன்னும் எத்தனை கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளனவோ. சதமடித்திருந்தாலும் ஆச்சரியமில்லை. திருவள்ளூர் மாவட்டத்தில் 42.

அண்ணாவை உயர்த்திப் பிடித்த கழகங்களுக்கு அவர் பிறந்த மண்ணில் ஒரு அரசு பொறியியல் கல்லூரியைத் திறந்து வைப்போம் எனத் தோன்றவில்லை பார்த்தீரா பிராமணரே. கோவை மாவட்டதில் 73 சுயநிதிக் கல்லூரிகள். மாவட்டதில் இருக்கும் ஒரு அரசுக் கல்லூரிக்கும், இரண்டு உதவிபெறும் கல்லூரிகளுக்கும் பயங்கர டிமாண்ட். சரிதானே பிராமணரே. பொறியியல் கலந்தாய்வுக்கு நிச்சயம் பிள்ளைகளைக் அழைத்துச் சென்றிருப்பீரல்லவா.

கல்விக்கு கண் திறந்தவர் எனப் புகழப்படும் காமராஜர் பிறந்த விருதுநகரில் ஒரு அரசு பொறியியல் கல்லூரிகூட இல்லை. சிறு மாவட்டமான கன்னியாகுமரியில் 32 தனியார் கல்லூரிகள் நடைபெறுகின்றன.

நல்லது பிராமணரே. பொறியியல் படித்து தமிழக மாணவர்களெல்லாம் வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு வருவதை வரவேற்கத்தான் வேண்டும். கல்லூரிகளை நடத்தும் தமிழர்கள் யார் பிராமணரே? பிராமணரும் கல்லூரிகளை நடத்துவீர். நம்பலாம். சென்னையிலும், காஞ்சிவரத்திலும், திருவள்ளூரிலும் பொறியியல் கல்லூரிகளை நடத்துபவர்கள் எந்தச் சாதியைச் சேர்ந்தவர்கள்? கோயம்புத்தூரில் மூலைக்கு மூலை பொறியியல் கல்லூரிகளைக் கட்டி எழுப்பியிருப்பவர்கள் எந்தச் சாதிக்காரர்கள்? தமிழகமெங்கும் தனியார் முதலாளிகளால் நடத்தப்பெறும் 553 பொறியியல் கல்லூரிகளில், பட்டியல் சாதிக்காரர்களுக்கு எத்தனை கல்லூரிகள் சொந்தமானவை எனப் பிராமணர் அறிந்திருக்கிறாரா? எல்லாம் அறிந்த பிராமணர் இதையும் தெரிந்து வைத்திருப்பதில் தப்பில்லைதானே. பட்டியல் சாதியரும் கல்லூரிகளை நடத்த வேண்டியதுதானே, யார் மறுத்தார் என்கிறீரா பிராமணரே. நல்லது. லோன் கொடுப்பார்களா? வங்கி மேலாளராக இருப்பவர் பட்டியல் சாதிக்காரருக்கு பணத்தை வாரி வழங்குவாரா? பட்டியல் சாதிக்காரர் நிலத்திற்கு எங்கே போவார்? அவருக்கு யாரைத் தெரியும்? செக்ரட்டரியேட்டில் யாரைப் பார்த்து, யாருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டுமென்பதைக் கொடுத்து, பெற வேண்டியதைப் பெறும் சாமார்த்தியம் பட்டியல் சாதிக்கு உண்டா? அமைச்சரைப் பார்க்க முடியுமா? செயலரைப் பார்த்து பேசமுடியுமா? மாவட்ட நிர்வாகத்தை சமாளிக்க முடியுமா? வட்டத்தைக் கணக்குப் பண்ணத் தெரியுமா? சொந்தக்காரர்களைக் கொண்டு கல்லூரி அலுவலகத்தை நிறைக்க முடியுமா? சாதிக்காரர்களாகப் பார்த்து பேராசிரியர் பணியிடங்களை நிரப்ப முடியுமா? குறைந்தபட்சம், கிராம நிர்வாக அதிகாரியிடம் தடையில்லாச் சான்றாவது பெற முடியுமா? கட்டிடம் கட்ட காவேரி

மணலை கொள்ளையடிக்கத்தான் தெரியுமா? எப்படி பட்டியல் சாதியால் பொறியியல் கல்லூரி கட்ட முடியும்? உமக்கொன்று சொல்லுகிறோம் பிராமணரே. பட்டியல் சாதிக்கு கொள்ளையடிக்கத் தெரியாது. வேண்டுமானால் பிழைக்கத் தெரியாத சிலா் திருடலாம். அதுவும்கூட சிறு சிறு திருட்டாகவே இருக்கும். லாரி, லாரியாக மணல் கடத்துபவா்கள் தப்பிவிட, மிதிவண்டியில் மணல் மூட்டை அள்ளும் பட்டியல் சாதிக்காரா் மாட்டிக் கொள்வாா். கிரேன் வைத்து மணல் அள்ளும் முதலாளி சாமா்த்தியமாக தொழில் செய்யும்போது மாட்டு வண்டியில் மணல் அள்ளும் எளிய மனிதா்கள் பிடிக்கப்படுவாா்கள். ஆற்றோரத்திலுள்ள குடிசைகள் ஆக்கிரமிப்பு எனும் பெயரில் அகற்றப்படும். அதுவே ஆற்றை மறித்து கட்டப்பட்டிருக்கும் கல்லூரிகளோ, கட்டிடங்களோ, மருத்துவமனைகளோ, அரசு இயந்திரங்களின் பாா்வைக்கு ஒரு போதும் படாது. பணம் கண்ணை மறைக்கும் பிராமணரே.

அரியலூரில் 4, கடலூரில் 5, தா்மபுரியில் 5, இராமநாதபுரத்தில் 3, நீலகிரியில் 2, திருவாரூரில் 2 என தனியாா் கல்லூரிகள் இருப்பதன் காரணமென்ன? அங்கு வாழும் மக்கள் யாா்?

பிராமணரே, தனியாா் நடத்தும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள். மருத்துவக் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள், பள்ளிகள் போன்றவற்றின் அலுவலகங்களில் எத்தனை பட்டியல் சாதியினா் பணிபுரிகிறாா் எனும் விவரம் இருக்கிறதா? எந்த சாதிக்காரா் கல்வி நிறுவனம் நடத்துகிறாரோ, அந்த சாதியைச் சோ்ந்தவா்களே அலுவலகம் முழுக்க இருப்பதன் மா்மம் என்ன? சாதிப் பாசத்தால் அடிக்கும் கொள்ளைகளை வெளியில் சொல்லமாட்டாா் எனும் நம்பிக்கையா? நம்பிக்கை பெரு வெற்றி பிராமணரே.

செட்டியாா் நடத்தும் பாலிடெக்னிக் கல்லூரிக்குப் போகிறோம். கூட்டம் அலை மோதுகிறது. என்ன நடக்கிறது எனப் பாா்க்கிறோம். விண்ணப்பம் வாங்க வருபவா்களை அப்படியே அமுக்கி அட்மிசன் போடுகிறாா்கள். விண்ணப்பம் யாா் வாங்க வருகிறாா்கள் என்று பாா்த்தால் பெரும்பாலும் பன்னிரெண்டாம் வகுப்பு தவறியவா்கள். பாலிடெக்னிக்கில் சேருவதற்கு பத்தாம் வகுப்பே போதுமல்லவா. ஏதேதோ உறுதிமொழி கொடுக்கிறாா்கள். அறுபத்தைந்தாயிரம் உரூபா உதவித்தொகையாகக் கிடைக்கும் என்கிறாா்கள். சோ்க்கைக் கட்டணம் மட்டும்

கட்டிட்டு போங்க, நீங்க பீஸே கட்டவேண்டி வராது என்கிறார்கள். மாணவர்களும் பெற்றோரும் எளிமையானவர்களாக இருக்கிறார்கள். தயங்கும் மாணவர்களிடம் மாற்றுச் சான்றிதழை வாங்கிக் கொள்கிறார்கள். சேர்க்கை அப்போதைக்கப்போது சூடாக நடந்து கொண்டே இருக்கிறது. அலுவலகத்தில் வேலைபார்க்கும் அத்தனை பேருமே தெலுங்கில்தான் பேசிக்கொள்கிறார்கள். நாடார் நிறுவனங்களில் நாடார்களே அலவலகப் பணி, கவுண்டர் எனில் கவுண்டர். பிராமின் எனில் பிராமிண்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் எல்.கே.ஜி முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையிலுள்ள மெட்ரிக்குலேசன் பள்ளிகள் 176 இருக்கின்றன. சேலத்தில் 205, கோவையில் 282, நீலகிரியில் 301, திருவள்ளுர் 344. தமிழ்நாடு முழுதும் ஆயிரக்கணக்கான மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகள் இருப்பதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. 32 மாவட்டங்களிலும் சேர்த்து எல்.கே.ஜி முதல் பன்னிரெண்டு வரை 39,18,221 மாணவர்கள் படிப்பதாகக் கணக்கு குறிப்பிடுகிறது. கோவை மாவட்டத்தில் மட்டும் 270848 மாணவர்கள். இத்தனை இலக்க மாணவர்களுமே தனியார் பள்ளிகளில் மாதாமாதம் கட்டணம் செலுத்திப் படிக்கிறார்கள். எதற்கெல்லாம் கட்டணம் வாங்குகிறார்கள் பிராமணர்களே? உங்கள் பிள்ளைகளை நிச்சயம் இப்படியான பள்ளிகளில்தான் படிக்க வைத்திருப்பீர்கள் மற்றும் படிக்கவைத்துக் கொண்டிருப்பீர்கள்.

தமிழ்நாட்டின் மாணவர்கள் எண்ணிக்கை மட்டும் 1,28,55,485 என புளளிவிபரம் கூறுகிறது. ஆரம்ப நிலையில் 97,97,264 மாணவர் எனவும் மேனிலையில் 18,73,989 மாணவர் எனவும் 2010 இன் புள்ளிவிபரம் குறிப்பிடுகிறது.

தமிழ்நாட்டில் 34,180 ஆரம்பநிலை, 9938 நடுநிலை, 4574 உயர்நிலை மற்றும் 5030 மேனிலைப் பள்ளிகள் என சுமார் 53,722 பள்ளிக் கூடங்கள் இருப்பதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன (கல்வி தகவல். காம்). கோவையில் மட்டும் 608 ஆரம்பப் பள்ளிகள், 230 நடுநிலைப் பள்ளிகள், 215 உயர்நிலை மற்றும் 444 மேனிலைப் பள்ளிகள் என மொத்தம் 2864 பள்ளிகள் இருக்கின்றன. அதிகபட்சமாக வேலூர் மாவட்டத்தில் 3070 பள்ளிகள் உள்ளன.

இத்தனை பள்ளிகள் போக, சி.பி.எஸ்.ஸி பள்ளிகள், பன்னாட்டுப் பள்ளிகள், மத்திய அரசு நடத்தும் பள்ளிகள் என ஏராளம் உண்டு. கோவையில் மட்டும் சி.பி.எஸ்.ஸி பள்ளிகள் மட்டும் ஐந்நூறுக்கும் மேல் இருப்பதாகப் பதிவுகள்

குறிப்பிடுகின்றன. கடந்த ஐந்தாண்டுகளில் நடுவண் அரசின் பாடத்திட்டப் பள்ளிகள் பெருமளவில் அதிகரித்திருப்பதும் கண்கூடு.

தமிழகத்தில் எத்தனைப் பல்கலைகள் இருக்கிறதென்று பிராமணர்கள் நிச்சயம் தெரிந்து வைத்திருப்பார்கள். இந்தியாவெங்கும் எவ்வளவு பல்கலைகள் உள்ளன எனும் புள்ளி விவரமும் அறிந்து வைத்திருப்பார்கள். பல்கலைகள் தனியாருக்குச் சொந்தமாக இருப்பதையும், பல்கலையில் எப்படியெல்லாம் பட்டம் கொடுக்கிறார்கள், எப்படியெல்லாம் பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்பதையும், பல்கலைக் கழகங்களே போலியாகச் செயல்படுவதும், பணம் இருந்தால் எந்தப் படிப்பையும் விலை கொடுத்து வாங்கிவிடலாம் என்பதும் கண்டிப்பாகத் தெரிந்திருக்கும். மத்திய பட்ஜெட், மாநில வரவு செலவு போன்று கல்விக்கும் ஒரு பட்ஜெட் போடலாமா பிராமணர்களே.

எமது கல்லூரியில் ஏறக்குறைய 250 நிரந்தரப் பேராசிரியர்கள், 37 கௌரவ விரிவுரையாளர்கள் பணியாற்றுகின்றனர் (2017-18). தோராயமாகத்தான். அண்ணாமலைப் பல்கலையில் உபரியாக இருக்கிறார்கள் என அரசுக் கல்லூரிகளில் நிரப்பிக் கொண்டே இருக்கிறார்கள். பல்கலையில் உபரி எப்படி வந்தது? விருப்பம்போல் பணியமர்த்தியது எப்படி? யாரெல்லாம், எந்த சாதிகளைச் சேர்ந்தவரெல்லாம் இப்படி உபரியாகப் பணியமர்த்தப்பட்டார்கள்? குப்பனும் சுப்பனும் உபரியாகச் சேர்ந்திருந்தால், இவ்வாறு அரசு கல்லூரிகளில் பணியமர்த்துவார்களா? குப்பனும் சுப்பனும் கருப்பனும் சேர்ந்ததால்தானே சாலைப் பணியாளர்கள் சேர்க்கப்படவே இல்லை. மக்கள் நலப் பணியாளர்கள் ஆயிரக்கணக்கில் ஒரே நாளில் வீதிக்கு அனுப்பப்பட்டார்களே. அவர்களை ஏன் அரசு ஏற்றுக் கொள்ளவில்லை? பல்கலையை ஏன் தாங்கிப் பிடிக்கிறது? எப்படி ஆயிரக்கணக்கில் பேராசிரியர்கள், ஊழியர்கள் உபரியாகச் சேர்ந்தார்கள்? சேர்க்கப்பட்டார்கள்?

250 பேராசிரியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு சம்பளம் எவ்வளவு தெரியுமா? காலை, மாலை என 5200 மாணவர்கள் படிக்கும் கல்லூரியில், 250 பேராசிரியர்கள், வருகை விரிவுரையாளர்கள், ஆய்வக உதவியாளர்கள், அமைச்சுப் பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், அடிப்படைப் பணியாளர்கள், காவலர்கள் என அரசு பணியமர்த்தியிருக்கிறது. இவர்களை மேற்பார்வையிட கல்லூரிக் கல்வி இணை இயக்குனர், அவரது அலுவலகப் பணியாளர்களும் உண்டு.

5200 மாணவர்களின் படிப்பிற்காகத்தானே அரசு இவ்வளவு பணியாளர்களை அமர்த்தியிருக்கிறது. பேராசிரியர்களுக்குச் சம்பளம் தருகிறது. பேராசிரியர் சம்பள விவரத்தைச் சரிபார்க்க பர்சார் எனும் நிதியாளர் இருக்கிறார். அலுவலகக் கண்காணிப்பாளர் இருக்கிறார். எழுத்தர்கள் இருக்கிறார்கள். மாணவர்கள் சிறப்பாக சோதனைகள் செய்யத்தானே ஆய்வுக்கூட உதவியாளர்கள் இருக்கிறார்கள்.

இவ்வளவு பேருக்கும் மாதாமாதம் சரியாகச் சம்பளம் கொடுக்கும் அரசு, கட்டிடங்கள் கட்டவும் பணம் ஒதுக்குகிறது. வருடம் முழுவதும் ஏதாவது கட்டிடங்கள் கட்டிக்கொண்டே இருக்கிறார்கள். கல்லூரிக்குள்ளேயே பொதுப்பணித்துறை அலுவலகமும் இருக்கிறது. பெயிண்ட் அடிக்கிறார்கள், மின்சார பழுது நீக்குகிறார்கள். வகுப்பறைகளில் டைல்ஸ் பதிக்கிறார்கள். கட்டிட மராமத்துப் பணிகளும் நடக்கின்றன.

கல்லூரிக்கு திட்டச் செலவாகவும், திட்டமில்லாத செலவின முறையிலும் ஏராளமான நிதி ஒதுக்கப்படுகிறது. அனைத்து மாணவர்களுக்கும் ஏதாவது ஒரு பிரிவில் உதவித்தொகை கொடுக்கப்படுகிறது. விடுதியில் இருந்தால் லோன் கிடைக்கிறது. தமிழ் வழியில் பயின்றால் 500 ரூபாய் ஊக்கத்தொகையும் தருகிறது. பேராசிரியர்களுக்கென இருக்கைகள், மேஜைகள் உண்டு. ஆய்வுக் கூட உபகரணங்கள், வேதிப்பொருட்கள், கருவிகள், புத்தகங்கள் வாங்க பணம் செலவிடுகிறது. உயிரியல் மாணவரெனில் உயிரினங்கள் வாங்கவும் உரூபா செலவிடுகிறது. துறைத்தலைவர்கள் கல்லூரியின் கவுன்சில் கூட்டத்தில் கலந்து கொள்ள இனிப்பு, காரம், தேநீரோடு 700 உரூபாயும் அரசு செலவிடுகிறது. தேர்வுகள் சார்ந்தும் ஏராளமான செலவுகள். கணினிகள் கொடுக்கிறது. கல்லூரி தொடர்பாக சென்னைக்கு போக வேண்டிய தருணங்களில் அதற்கான செலவையும் அரசு கொடுக்கிறது. மாணவர்கள் விளையாடுவதற்கு அதிகமாகவே அரசு செலவிடுகிறது. நாட்டு நலப்பணிக்கு பணம் தருகிறது. பத்து நாள் முகாமுக்கு தாராளமாகச் செலவிடுகிறது. தேசிய மாணவர் படை, செஞ்சிலுவை போன்ற பலவற்றிற்கும் அரசு நிதி ஒதுக்குகிறது. ஆய்வரங்கம், பயிற்சி வகுப்புகளுக்கும் செலவிடுகிறது. ஆராய்ச்சி செய்வதற்கு இலக்கக்கணக்கில் நிதி தருகிறது.

மாநில அரசு என்றில்லாமல், பல்கலைக்கழக நிதிநல்கை அமைப்பு மூலமாகவும் கணிசமான பணம் ஒதுக்கப்படுகிறது. கல்லூரிகளில் மன்றங்கள் துவக்கவும் கல்லூரி நிர்வாகம் பணம் வழங்குகிறது.

இத்தனையும் அரசே செலவிடுகிறது. அரசுக் கல்லூரி மாணவர் கட்டுவதெல்லாம் ஆண்டிற்கு கற்பித்தல் கட்டணம் 550 உருபா மற்றும் இரண்டு பருவத் தேர்வுகளுக்கான கட்டணம். முதுநிலை படிப்பிற்கு ஒரு பேப்பருக்கு நூற்றி ஐம்பது உருபா எனில் நான்கு தாள்களுக்கு 600 உருபா. விண்ணப்பம் 50 உருபா. மதிப்பெண் சான்று 100 உருபா. ஆயிரத்துக்குள்தான் செலவாகிறது. தேர்வு நெறியாளர் அலுவலகம் செலவழிப்பதோ மிக அதிகம்.

பேராசிரியர்களுக்கு பேப்பர் திருத்துவதற்கு பணம். இளநிலைக்கு ஒரு கணக்கு. முதுநிலைக்கு ஒரு கணக்கு. வெளியூரிலிருந்து வரும் பேராசிரியர்களுக்கு போக்குவரத்து செலவு, தங்குவதற்கு ஒரு நாளைக்கு 300 உருபா உண்டு. தேர்வுப் பணி பார்த்தால் பணம். செய்முறைத் தேர்வாளராக இருந்தால் பணம். கேள்வித் தாள் தயாரிப்பதற்கு பணம். தேர்வுகளின் போது, வடை, தேநீர் உண்டு. பேராசிரியர்களுக்கு வருடத்திற்கு 180 நாட்களே பணிநாட்கள்.

5200 மாணவர்களுக்கு கல்வி புகட்டும் 250 நிரந்தரப் பேராசிரியர்களின் ஒரு மாத ஊதியம் மட்டுமே ஒன்றரை கோடிக்கும் அதிகம் (1,52,00,814 - ஜூன் 2018)). பேராசிரியர்களுக்கு மட்டும் ஆண்டுக்கு இருபது கோடி உருபாயை அரசு சம்பளமாகக் கொடுக்கிறது. ஒரே விதமான கல்வித்தகுதி பெற்றிருந்தும், ஒரே விதமான பாடத்திட்டத்தை நடத்தியும், வருகை பேராசிரியர்களின் மாத ஊதியமோ வெறும் பதினைந்தாயிரம் மட்டுமே. பலரும் பல வருடங்களாகப் பணியாற்றுகின்றனர். வருடத்திற்கு பத்து மாதங்கள் மட்டுமே பணி. 37 வருகை பேராசிரியர்களின் ஆண்டு ஊதியம் உருபா 55,55.000. பிற பணியாளர்கள் சம்பளம் இருக்கிறது. அரசு உதவித்தொகை மட்டும் கோடிக்கும் மேல் கொடுக்கிறது. கட்டிடம் கட்டுவது, மற்ற செலவுகள் அனைத்தையும் சேர்த்துப் பார்த்தால், 5200 மாணாக்கர்களுக்கு குறைந்தபட்சம் முப்பது கோடி உருபாக்கும் மேலாகவே அரசு கொடுக்கிறது. உண்மையெனில், பட்டம் முடிக்கும் ஒரு மாணவருக்கு அரசு செலவிடும் பணம் தோராயமாக இரண்டு இலக்க உருபா.

இவ்வளவு செலவு செய்து படிக்க வைக்கும் அரசு, மாணவர்களிடம் எதை எதிர்பார்க்கிறது? நன்றாகப் படித்து முன்னேற வேண்டும், தமிழகத்தை வளப்படுத்த வேண்டும், மானுட அறிவை உயர்த்த வேண்டும் என்பதுதானே. மாணவர்கள் நன்றாகப் படிக்கிறார்களா? படிப்பு இருக்கட்டும். அரசு நமக்கு இவ்வளவு பணம் செலவிடுகிறது என்பதாவது மாணவர்களுக்குத் தெரியுமா? அரசு உங்களுக்கு

வருடத்திற்கு இலக்க உருபா செலவிடுகிறது என்பதை பேராசிரியர்கள் சொன்னதுண்டா? இவ்வளவு செலவிடும் அரசுக் கல்லூரியில், ஒரு வகுப்பறையிலும் காற்றாடி சுவிட்சுகள் உடையாமல் இல்லை. பேன் ஒடுவது அரிது. வகுப்பறையெங்கும் குப்பை, தூசி. சமீபத்தில் யாம் இப்படி குப்பையில் நின்று வகுப்பெடுக்க மாட்டோம் எனச் சொல்லிவிட்டு இருக்கைக்கு வந்துவிட்டோம். அதற்குமுன் இரண்டு மூன்று முறை, வகுப்பு குப்பையாகக் கிடக்கிறது, துப்புரவுப் பணியாளருக்காகக் காத்திருக்காமல் நீங்களே சுத்தம் செய்யுங்கள் எனக் கேட்டுக் கொண்டோம். ஒரு மரியாதையும் இல்லை. பேராசிரியர் வகுப்பிற்கு போனால் குப்பையைக் கூட்டுங்கள், வகுப்பறையை சுத்தப்படுத்துங்கள் என்றெல்லாமா சொல்ல வேண்டியதிருக்கும். யாம் அமர்ந்திருக்கும் இடம் ஒரு பேராசிரியர் அமர்வதற்குக் கிஞ்சித்தும் தகுதியில்லாதது. தூசி, ஒட்டடை, குப்பை. பல நேரங்களில் யாமே சுத்தம் செய்து கொள்கிறோம். என்னத்தைச் சொல்ல. பெரும்பாலான பேராசிரியர்களுக்குத் தரமான அறைகள் இல்லை. ஒவ்வொரு துறையிலும் துறையின் தலைவருக்கு மட்டுமே தனி அறை கொடுத்திருக்கிறார்கள். வருடத்திற்கு இவ்வளவு செலவிடும் அரசு, ஏன் மாணவர்களைக் கொண்டே வகுப்புகளையும் வளாகங்களையும் சுத்தப்படுத்தக் கூடாது? ஒரு வகுப்பறையில் முப்பது மாணவர்கள் இருக்கிறார்கள். ஒரு நாளுக்கு ஒரு மாணவர் தூய்மைப் பணி செய்தாலே போதுமே. வகுப்பறை முழுதும் கிறுக்கல்கள், காகிதங்கள், அலட்சியம், அலட்சியம். எங்கும் அலட்சியம்.. எதிலும் அலட்சியம்.. தண்ணீர் குழாயின் தாமிரத் திருகுக்கு பூட்டுப் போட்டு வைக்க வேண்டிய நிலை கல்லூரிக்குள்ளேயே இருந்தால், இரயில்வேயில் டாய்லெட் கப்புக்கு சங்கிலி போட்டு வைப்பது முறைதானே. என்ன வாட்ச்மேன், இதுக்குப் போய் பூட்டு போடுறீங்க எனக் கேட்டால், கழட்டிட்டுப் போயிடுறாங்க சார் என்கிறார். விடுதி பற்றியெல்லாம் சொல்லவும் வேண்டுமா? சாப்பாடு தரமில்லை என்றாலும் தண்ணிக்குப் பஞ்சமில்லை.

பெற்றோரோடு சேர்ந்து அரசும் இவ்வளவு பணம் கொட்டி படிக்க வைக்கிறது. பெரும்பாலான மாணவர்கள் உணவகங்களில் வேலை செய்கிறார்கள். கல்யாணங்களுக்கு பந்தி பரிமாறப் போகிறவர் அனேகர். ஜவுளிக் கடைகளில், பழமுதிர் நிலையங்களில் பணிசெய்வோர் தாராளம். இரண்டு மணிக்கு கல்லூரி முடிகிறது. நேராக வேலைக்குப் போய்விடுகிறார்கள். பணிமுடிய பத்து மணியாகிறது. கொடுக்கும் சம்பளம் மூன்றாயிரம் உருபா. இதற்கு எட்டு மணி நேர வேலை. மாணவர்களின் ஏழ்மையை முதலாளிகள் சுரண்டுகிறார்கள்.

இவ்வளவுதான் சம்பளமா தம்பி? டிப்ஸ் கொஞ்சம் கெடைக்கும் சார். அத முதலாளி வச்சிக்கச் சொல்லிட்டார் சார். பத்து மணிக்கு வந்து அவர் என்னத்தைப் படிப்பார்? அறிவு எப்படி வளரும்? பெண் பிள்ளைகளின் நிலை இன்னும் மோசம்.

கலை அறிவியல் கல்லூரிக்கே அரசு இவ்வளவு பணம் செலவிடுகிறது எனில், மருத்துவக் கல்லூரிகளுக்கு எவ்வளவு உரூபா செலவிடும் பிராமணர்களே? கணக்குப் போட்டுப் பார்க்கலாமா?

தமிழகத்தின் சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை 24 அரசு மருத்துவக் கல்லூரிகள், பல்நோக்கு மருத்துவமனைகள், 32 மாவட்ட தலைமை மருத்துவமனைகள், 240 வட்டம், வட்டம் சாரா மருத்துவமனைகள், 1741 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 8706 துணை சுகாதார நிலையங்கள், 134 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், 88 தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனைகள், 4 இந்திய முறை மருத்துவமனைகள், 1375 மருந்தகங்கள், 30,000 மருத்துவர்கள் என மிகப் பெரிய அமைப்பைக் கொண்டு இயக்குகிறது. ஒரு நாளைக்கு மட்டும் சுமார் 5 இலக்கம் புறநோயாளிகள் பரிசோதனைக்கு வருவதாகக் கூறப்படுகிறது.

மருத்துவக் கல்வி இயக்கத்தின் புள்ளிவிவரப்படி, தமிழகத்தில் 24 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. 36 சிறப்பு மருத்துமனைகளையும் (டிஸ்பென்சரிஸ்) தமிழக அரசு நடத்துகிறது. 2017 கணக்கின் படி, இந்த 60 மருத்துவ நிலையங்களிலும் ஒரு ஆண்டில் 3,24,39,094 பேர் புற நோயாளிகளாக வந்துள்ளனர். கணக்கு சரிதானே. யாம் கூட பல வருடக் கணக்கோ என சற்று தயங்கிப் போனோம். சென்னை ராஜிவ்காந்தி மருத்துவமனைக்கு மட்டும் 27,50,290 புற நோயாளிகள் வந்துள்ளனர். நாளொன்றுக்கு 1000 பேர் என வைத்தாலும் வருடத்திற்கு மூன்று இலக்கத்து முப்பத்தாயிரம் பேர் வருகிறதல்லவா. கணக்கு சரிதான். ஸ்டான்லி மருத்துவமனைக்கு 34,79,817 பேர். கீழ்பாக்கம் மருத்துவமனைக்கு 10,85,369. ஆக மொத்தம் சென்னை மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளுக்கு மட்டும் 73,15,476 பேர் புற நோயளிகளாக வந்துள்ளனர். சென்னை பல் நோக்கு மருத்துவமனைக்கும் 1,80,766 புற நோயாளிகள் வந்துள்ளனர். மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு 25,30,783 போர், கோவை மருத்துவமனைக்கு 17,79,626 பேர், திருச்சி மோகன் குமாரமங்கலம் மற்றும் காந்தி நினைவு மருத்துவமனை இரண்டிற்கும் 26,66,107 மக்கள் வந்து சென்றுள்ளனர்.

தமிழகத்தின் மக்கள் தொகை ஏழரைக் கோடி. பல்வேறு நகரங்களிலும், தாலுக்கா அளவிலும் அரசு மருத்துவமனைகள் உள்ளன. பல்வேறு ஊர்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்படுகின்றன. அங்கெல்லாம் எவ்வளவு மக்கள் புறநோயாளிகளாக வந்திருப்பார்கள்? அரசு போக, வீதிக்கு வீதி நிறைந்திருக்கும் தனியார் மருத்துவமனைகள் எவ்வளவு? திருவிழாப் போல் மொய்க்கும் தனியர் மருத்துவமனைகளையும் சேர்த்துக் கணக்கிட்டால், தமிழக மக்கள் தொகையை விஞ்சிய எண்ணிக்கையில் மக்கள் புற நோயாளிகளாகப் படையெடுக்கிறார்கள் என்பது திண்ணம். தனியார் மருத்துவமனைகள் எதையெதையோ விளம்பரம் செய்கின்றனவே, ஒரு நாளில், மாதத்தில், எத்தனை பேர் புற நோயாளிகளாகப் பார்க்கப்பட்டனர் என்ற விவரம் இருக்கிறதா பிராமணர்களே? அரசுக்குத் தினமும் தகவல் தரவேண்டும் எனச் சட்டம் இருக்கிறதுதானே. ஒரு மருத்துவமனையின் வெப்சைட்டிலும் இப்படியான புள்ளி விவரங்கள் எங்கேயும் பதியாதது ஏன்? தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கேட்க வேண்டுமோ? வெளிநாட்டுக்காரர்களுக்குக் கொடுத்த சிகிச்சைககள், புகைப்படங்கள் போன்றவையெல்லாம் இடம்பெறும் பிரம்மாண்டமான தனியார் மருத்துவமனைகளின் வலைத்தளங்களில், இத்தனை நபர்கள் உள்நோயாளிகளாகச் சேர்ந்தார்கள், இவ்வளவு அறுவைச் சிகிச்சைகள் நடைபெற்றன போன்ற விபரங்கள் இல்லாதது ஏனோ? ஓமன், ஏமன், சுவீடன் எனப் போட்டோக்கள் பதிவிட்டால் வெளிநாட்டு நோயாளிகளை கொத்துக் கொத்தாக அள்ளலாம். இந்தியாவுக்கும் செலவாணி கிடைக்கும். அப்படித்தானே. பிராமணர்களுக்குத் தெரியாத பொருளாதாரமா..

சந்தையின் போக்கை மிகச் சரியாகக் கணித்து, சரியான நேரத்தில், சரியான முடிவுகளை எடுப்பதில் பிராமணர்களை விஞ்ச இவ்வுலகில் ஆள் ஏது? பங்குச் சந்தையில், உறுமீனைக் காத்து நிற்கும் கொக்குப் போல பொறுமையாகக் காத்திருப்பதில் பிராமணரை மிஞ்ச முடியுமா? மலிவான பங்குள்ள விலையை வாங்கி, சந்தை நன்றாக இருக்கும்போதே சட்டென பங்குகளை விற்றுப் பணம் பார்ப்பதில் உலகில் பிராமணருக்கு யாரேனும் ஈடாக முடியுமா? ஆறு மாதத்திற்கு ஒருமுறை பங்கின் செயல்பாட்டை கூராய்வு செய்து, கூர்ந்து அறிந்து, பங்குகள் நிலவரத்தை அறிந்து கொள்ளும் ஆராய்ச்சியில் பிராமணரை எவரேனும் வெல்ல முடியுமா? நல்ல, பெரிய நிறுவனங்களில் முதலீடுகளை வாங்கி, பொறுமையிலும்

பொறுமை காத்து பெரும்பணம் பண்ணும் பிராமணரின் அதிபுத்திசாலித்தனம் வேறொருவருக்கு வருமா?

பங்குச் சந்தைகளில் குப்பனும், சுப்பனும், முனியாண்டியும், முத்துச்சாமியும் முதலீடு செய்வது போல் தெரியவில்லை. யாம் பேராசிரியராக இருந்த போதிலும் பங்குச் சந்தை பற்றி ஒன்றும் தெரியாது. யாம் மட்டும் என்றில்லாமல், எம்மைப் போன்ற பெரும்பாலான பேராசிரியர்களும் பங்குச் சந்தைகளில் முதலீடுகள் வைத்திருப்பதுபோல் தெரியவில்லை. பங்குச் சந்தையில் பணம் போட்டால் அதைப்பற்றியே அல்லவா நினைத்துக்கொண்டு இருக்க வேண்டும். இந்தக் கம்பெனி பங்கை வாங்கினால் லாபம் கொட்டுமா, அந்தக் கம்பெனி பங்கை வாங்கி கோடீஸ்வரராவோமா என அல்லும் பகலும், நாளும் பொழுதும், பேராசிரியர்கள் தேடிக்கொண்டிருந்தால் பிள்ளைகளுக்கு எப்படி பாடம் நடத்துவது?

கம்பனி ஒன்றின் பங்கை வாங்கி வைத்து கொண்டு அதன் மூலம் பணம் சம்பாதிப்பது நேர்மையான சம்பாத்தியம்தானா பிராமணரே? அப்படி சம்பாதிப்பது தர்மத்தில் சேருமா? அந்தக் கம்பெனி எப்படி தொழில் செய்கிறது என்பதை எப்படி அறிந்து கொள்வது? எந்தக் கம்பெனியாவது நேர்மையாகத் தொழில் செய்யுமா? நேர்மையாக மட்டுமே தொழில் செய்யும் கம்பெனியின் பங்கில் கொள்ளை இலாபம் கிடைக்காதல்லவா. அரசியல்வாதிகளைக் கைக்குள் போட்டுக் கொண்டும், சட்டங்களை வளைத்துக் கொண்டும், நேர்மையைக் குழிதோண்டிப் புதைத்துமல்லவா மண்ணில் பெரு வணிகங்கள், பெருநிறுவனங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. கம்பெனி எதை வேண்டுமானாலும் செய்யலாம். எப்படி வேண்டுமானாலும் செய்யலாம். எந்த முறையிலும் நிதி திரட்டலாம். எந்தக் கம்பனியில் பெருலாபம் கிடைக்கிறதோ, எந்தக் கம்பனியின் பங்குகள் கொழுத்தலாபம் கொடுக்கிறதோ, அதில் பிராமணர் முதலீடு செய்வார். பங்குகளை வாங்கி, விற்று, மடை மாற்றி பணம் பண்ணுவார். உலகமும் அவரைத்தான் அறிவிற் சிறந்தவர் எனவும் கொண்டாடும். பங்குப் பணம், பங்குச் சந்தை, முதலீட்டாளர்கள், முதலீடு, கம்பெனிகள் எனும் பெயர்களில்தானே ஐரோப்பா மொத்த பூமியையும் சூறையாடியது. அறிவிற் சிறந்த பிராமணர் அனைத்தையும் மறந்தாரோ. பங்குச் சந்தையில் அனைத்துமே லாப நோக்கம்தானே. லாபமே முக்கியக் குறிக்கோள். முதலீட்டாளர்களுக்காக நிறுவனங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யும். முதலீட்டாளர்களோ எதில் கொள்ளைலாபம் கிடைக்கிறதோ அதிலேயே முதலீடு செய்வார்கள். பங்குச் சந்தைகள், முதலீடுகள், மீயூச்சுவல் பண்டுகள், மனிதரை

திடீர் பணக்காரராக்குகின்றனவா இல்லையா? திடீரென்று பணக்காரராகிறாரெனில் அது உழைத்துச் சம்பாதித்ததல்ல என்றுதானே பொருள். பங்குச்சந்தை எனும் மாய வலையில் சிக்கி சிதறுண்டே குடும்பங்கள் எத்தனையாயிரம் பிராமணரே?

பிராமணர் அறிவுள்ளவர், ஞானமுள்ளவர் எனில் பங்குச் சந்தையில் முதலீடு செய்வாரா அல்லது பங்குச் சந்தையின் அபாயங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்வாரா? ஒரு சிறிய உதாரணம் பார்ப்போமா பிராமணரே. ஒருவர் வெளிநாடுகளுக்கு வெள்ளரிக்காயை பதப்படுத்தி அனுப்பினால் இலாபம் கொட்டும் எனக் கண்டுகொள்கிறார். வெளிநாடுகளிலிருந்து கலப்பின வெள்ளரி விதைகளைத் தருவித்து, விவசாயிகளுக்கு நல்ல லாபம் தருவதாகச் சொல்லி, பெரியளவில் வெள்ளரியை உற்பத்தி பண்ணத் திட்டமிடுகிறார். பணம் திரட்ட வேண்டுமே. முதலீட்டாளர்களிடம் வருகிறார். பிராமணரும் பத்து பங்குகளை வாங்கிப் போடலாம் என நூறு உருபாக்கு பத்து பங்குகள் வாங்குகிறார்.

வெள்ளரிப் பழம் சாப்பிட்டதுண்டா பிராமணரே? சிறுவயதில் கரிசல் காடுகளுக்குப் போனால் வெள்ளரிப் பழம் மணக்கும் பிராமணரே. எவ்வளவு சுவையாக இருக்கும் தெரியுமா? ஒரு வெள்ளரிப்பழம் தின்றால் போதும். வயிறு நிறைந்து விடும். கோவை பழமுதிர்ச் சோலைகளில் வெள்ளரிப் பழங்களைப் பார்க்கும் போதெல்லாம் பழைய ஆசை பீறிடுகிறது பிராமணரே. மொக்கை மொக்கையான வெள்ளரிப் பழங்களாக அடுக்கி வைத்திருக்கிறார்கள். ஆனாலும் அவை பழங்களல்ல. வெறும் காய்கள். எத்தனை வருடமானாலும் அவை பழுக்காது.

அனைத்தும் கலப்பு. இன்றைய தலைமுறைக்கு நேற்று எப்படி இருந்தது எனத் தெரியாது. அவரைப் பொருத்தவரை இன்று கடைகளில் கிடைக்கும் வெள்ளரிப் பழத்தின் சுவை மட்டுமே தெரியும். இன்றைய வெள்ளரியைச் சுவைப்பவர் இன்றைய சுவையையே அறிவார். நேற்றைய வெள்ளரியின் சுவை எப்படிப்பட்டது எனத் தெரியாது. நேற்றைய வெள்ளரியைவிட இன்றைய வெள்ளரியின் சுவை எப்படி இருக்கிறது பிராமணரே. உங்களுக்கு நேற்றும் இன்றும் தெரியுமா? நாளை எப்படி இருக்கும் என்பதையும் அறிந்திருக்கிறீரா?

நேற்றைய பிராமணர் காடு கரையெல்லாம் திரிந்தார். யாமே பார்த்திருக்கிறோம். எங்கள் நெல் வயலுக்குப் போகும்போது, பிராமணர் அவரது தோட்டத்தில் மண்வெட்டி வைத்து வெட்டியதெல்லாம் பார்த்திருக்கிறோம். நீர்ப் பாய்ச்சினார். வாய்க்காலைச் செதுக்கினார். வரப்பைச் சரிசெய்தார். மாடுகளுக்குப்

புல்லறுத்து மிதிவண்டியில் ஏற்றி வந்தார். அறிவிற் சிறந்த பிராமணரே இருபது முப்பது வருடங்களுக்கு முன் வயல்வேலை பார்த்தார். அறிவிற் சிறந்த பிள்ளைகளோ குடும்பத்தோடு வயல்களில் பாடுபட்டார்கள். கந்தசஷ்டி கவசம் சொல்லிகொண்டே களையெடுத்தார். கணபதி பாடல்கள் பாடிக்கொண்டே கத்தரிக்காய் பறித்தார். முந்தானை கூட்டிவைத்து பருத்தியெடுத்தார். இல்லையென்று சொல்ல முடியுமா. நேர் சாட்சியாக யாமே இருக்கிறோம்.

தேவர்களும், நாடார்களும் புதிதாகப் பெற்ற நிலங்களில் கடுமையாக உழைத்தார்கள். கிணறுகள் தோண்டி தோட்டங்களாக்கினார்கள். நாயக்கர்கள் அருமையாக வயல்வேலைகள் பார்த்தார்கள். பள்ளும் பறையும் விவசாய நிலங்களில் நன்றாக உழைத்தார்கள். கிராமங்கள் தலைதூக்கின. தமிழகம் வளர்ந்தது. இந்தியா வறுமையை வென்றது. உற்பத்தி பெருகிறது. அதீத விளைச்சலை என்ன பண்ணுவது எனத் தெரியாமல் கோதுமையைக் கடலில் கொட்டியது. நெல்லை வெயிலிலும் மழையிலும் போட்டு வீணாக்கியது.

உழைப்பதற்கு கோடிக்கணக்கான மக்களிலிருந்தும், நீர்வளமிருந்தும், நிலவளமிருந்தும், பருப்பை கனடாவிலிருந்து இறக்குமதி செய்கிறது இந்திய அரசு. வெங்காயத்தை பாகிஸ்தானிடமிருந்து வாங்குகிறது. வெட்கங்கெட்ட இந்திய அரசு என எழுதினால் பாரதத் தாய் கோவித்துக் கொள்வாளா பிராமணரே?

பாரதத் தாய்க்கு நீங்கள் மட்டும்தான் பிள்ளைகளா? தாய்க்கு பிராமணர் மட்டும் ஒரே பிள்ளை. செல்லப் பிள்ளை. மற்றவரெல்லாம் வேறு யாரோ பெற்ற பிள்ளைகள். அப்படித்தானே. அதென்ன பாரதத் தந்தை எனச் சொல்லாமல் பாரதத் தாய் என்கிறீர். பிராமணர் தந்தைவழிச் சமூகம் என்றல்லவா வரலாறு சுட்டிக் காட்டுகிறது.

அனைவரும் பாரத அன்னை பெற்றெடுத்த பிள்ளைகள் என அறிந்திருந்தால், உணர்ந்திருந்தால், ஞானத்தால் தெளிந்திருந்தால், எங்கும் எல்லா இடங்களிலும் பிராமணருக்கு மட்டும் எனும் பலகைகள், போர்டுகள் வைத்திருந்திருப்பீரா? இப்பவும் சட்டம் அதற்கு அனுமதிக்கவில்லை. இல்லையென்றால்..

எங்கிருந்து வந்தீர் பிராமணரே? தமிழகத்தில் சுட்டுவதுபோல் நீர் ஆரியர் தானா? ஆரியர், திராவிடர் எனும் கருத்தாங்கங்களெல்லாம் உண்மைதானா? எங்கிருந்தோ வந்ததால்தான் இம்மண்ணுக்குரியவரை சாதியாய், மதமாய்

ஒதுக்கினீரா? இம்மண்ணில் வாழ்ந்த மனிதரை தீண்டத்தகாதவா் எது ஒதுக்கி வைத்து விட்டு, மண்ணை பாரதமாதா, பாரதத் தாய், அன்னை பூமி என்றழைத்தது எப்படி?

பாரத மாதாவைக் காக்க வாருங்கள் என முரட்டுச் சாதிகளையும், முட்டாள் சாதிகளையும், அருவா சாதிகளையும் கூா் தீட்டி அழைப்பதேன்? யாரால் பாரத மாதாவிற்கு ஆபத்து பிராமணரே? பெண்கள் கைகளிலும் கம்புகளைக் கொடுத்தாயிற்று அல்லவா. தமிழகத்தில் பெண்கள் வீறுகொண்டு எழுகிறாா்கள். மகிளா அணிவகுப்புகளெல்லாம் தூள் பறக்கின்றன. மாணவிகள் கம்பு சுற்றுகிறாா்கள். பேராசிரியா்களெல்லாம் பண்பாட்டு பயிற்சி வகுப்புகள் எடுக்க ஆரம்பித்துவிட்டாா்கள். கணபதி பாட்டுப் பாடுவதுதான் கோடைகாலப் பண்பாட்டு வகுப்பா? பண்பாட்டு வகுப்பில் என்னவெல்லாம் சொல்லிக் கொடுக்குறீா் பிராமணரே? இந்துப் பண்பாட்டை சொல்லிக் கொடுக்கிறீரா அல்லது மனிதப் பண்பாட்டைச் சொல்லிக் கொடுக்கிறீரா? மனிதப் பண்பாட்டை எனில், சாதி மதமாய் மனிதா்கள் பிரிந்து கிடப்பது தவறென்றா சொல்லிக் கொடுக்கிறீா்?

இன்னொரு நாட்டை எதிரியாக்கி, எதிரி நாடாகச் சித்தரித்து, இந்தியா் எனும் ஒற்றுமையை வளா்க்கும் புத்தியைப் போலவே, சூழ்ச்சியைப் போலவே, பிற மதங்களைக் காட்டி, இந்து எனும் போா்வையில் மனிதா்களை அணிதிரள வைப்பதும், தீவிரமாக முன்னெடுத்துச் செல்வதும் சரிதானா பிராமணரே? மதம் மாற்றுகிறாா் என்றால், ஏன் மாறுகிறாா்? பிராமணா் மாறவில்லையா? இந்தியா் அனைவரும் ஒருதாய் மக்கள், பாரதத்தாயின் மக்கள் என பிராமணா் நினைப்பாரேயானால், அவா் எதற்கு இன்னொரு மதத்திற்கு மாறப் போகிறாா்?

யாரெல்லாம் இந்து பிராமணரே? யாரையெல்லாம் இந்து தா்மத்திற்குள் உள்ளிழுக்கிறீா்கள்? யாரையெல்லாம் வெளியே நிறுத்துகிறீா்கள்? மாட்டுக்கறி சாப்பிடும் ஒரு மனிதன் இந்துவாக முடியுமா? கோசாலை எனும் பெயரில் ஊரெல்லாம் விளம்பரம் செய்து கொள்ளையடிப்பது தா்மத்தில் சேருமா? உணவுக்காக ஒரு மனிதா் மாட்டுக் கறியை உண்பது தா்மத்தின் பிழையாகுமா? மாட்டுக்கறி உண்டாா் என்பதற்காக மனிதா்களைக் கொடூரமாகக் கொல்வது எதில் சேரும் பிராமணரே? பாரதமாதா, இந்து தா்மத்தைக் காத்தாா் என்பதற்காக கொன்றவா்களைக் கொண்டாடுவாரா?

புத்திசாலித்தனமாக, எளிய மக்களை, ஆன்மீகம் என்றால் என்னவென்று அறியாத மக்களை, கடவுள் யாராம் எனச் சிந்திக்காத பெருந்திரளான மக்கள் கூட்டத்தை, மதங்கள் எதற்கு, எப்படி எனக் கேள்வி எழுப்பி விடை காணாத மக்கள் திரளை, இந்து எனும் ஒற்றைச் சொல்லின்கீழ் கிட்டத்தட்ட கொண்டு வந்து விட்டீர். இதற்காக, இப்படியொரு நிலையை அடைவதற்காக போட்ட திட்டங்கள் எத்தனை, செயல் வடிவங்கள் எவ்வளவு, செயலாற்றிய கர்மவீரர்கள் எத்தனை எத்தனைப் பேர். போட்ட கூட்டங்கள் எத்தனையாயிரம்.

இந்து மதம் முக்கியம். இந்து நாடு முக்கியம். இந்தி மொழி ரொம்ப ரொம்ப முக்கியம். இந்து தர்மம் அதி முக்கியம். எனில் மானுட தர்மம்? மானுட சாகோதரத்துவம்? மானுட குல வளர்ச்சி?

பெரியார் ஏன் இந்து தர்மத்தை இவ்வளவு தீவிரமாக எதிர்த்தார் பிராமணர்களே? யாம் பார்த்ததில்லை. கேள்விப்படுகிறோம். பெரியார் ஒன்றும் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் வாழவில்லையே. அவரைப் பார்த்தவர்கள் இன்னும் இருக்கிறார்கள். அவரோடு பழகியவர்கள் தற்போதும் இருக்கிறார்கள். பெரியார் உண்மையாகவே இந்த மண்ணில் வாழ்ந்தவர். உறுதியாக நம்பலாம். பெரியார் கட்டுக் கதையல்ல, கற்பனையல்ல, பொய்யல்ல. டிசம்பர்17, 1879 முதல் டிசம்பர் 24, 1973 வரை நகமும் சதையுமாக, இரத்தமும் மூத்திரமுமாக இம்மண்ணில் வாழ்ந்தவர். சந்தேகமே இல்லை. உறுதியாக நம்பலாம். நூற்றுக்கு நூறு நம்பலாம். சரிதானே பிராமணர்களே.

பெரியார் மறைந்தபோது யாம் பத்து மாதக் குழந்தையாக இருந்திருக்கிறோம். அனேகமாக தவழ்ந்து திரிந்திருப்போம். அடிமேல் அடியாக எட்டு வைத்தும் நடந்திருக்கலாம். யாம் பிறந்தபோது தமிழகமும், இந்தியாவும், உலகமும் எப்படி இருந்தது? பெரியார் பிறந்தபோது எப்படி இருந்தது? அவர் மறையும்போது எப்படி இருந்தது? தற்போது எப்படி இருக்கிறது?

எமது காலத்திலேயே சாதியும் மதமும் இந்தளவிற்கு கொடிகட்டிப் பறக்கிறதெனில், பெரியார் காலத்தில் எந்தளவிற்கு இருந்திருக்கும்? எமது காலத்திலேயே பிராமணர் பொதுப் பேருந்துகளில் பயணமாகவில்லை எனும்போது, பெரியார் காலத்தில் எப்படிப் பயணமாகியிருப்பார்? எங்கும், எல்லாவற்றிலும் பிராமணருக்குத் தனியிடம் வைத்துக் கொண்டீர் அல்லவா? இரயில்வே கேண்டீனில்கூட பிராமணர் மட்டும் போர்டுகள் வைத்துக்கொண்டீர். தங்கும்

இடங்கள் பிராமணருக்கு மட்டும். கோவில்கள் பிராமணருக்கு மட்டும். வெள்ளையர்களால் பேருந்து சேவைகள் வந்ததே, அதாவது எல்லோருக்கும் பொதுவானதாக இருந்ததா பிராமணரே. பேருந்துகளில் ஆதிதிராவிடரை ஏற்ற மாட்டோம் என பயணச் சீட்டுகளில் அச்சிட்டு சாதி போற்றியது யார் பிராமணரே? வெள்ளைக்காரன் கண்டுபிடித்ததற்கே இப்படியென்றால்? அனைத்திலும் பிராமணர் மட்டும். சமூகத்தோடு, பொதுசனத்தோடு, பொதுமக்களோடு, இன்றைக்கும் நீர் சேர்ந்து வாழ முடியவில்லை எனும்போது, நட்பாக வாழ இயலவில்லை எனும்போது, சகோதரர்களாக ஏற்றுக் கொள்ள இயலவில்லை எனும்போது, எம் தந்தை காலத்தில் நீர் எப்படி ஊரோடு, உலகோடு சேர்ந்து வாழ்ந்திருப்பீர்?

சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் நீர் அடித்த கூத்துக்களைப் பார்த்தல்லவா, தந்தை கடவுள் இல்லை, இல்லவே இல்லை என்றார். கடவுளை மற, மனிதனை நினை என உரக்கச் கூவினார். ஊர் ஊராகப் போய் பேசினார். எளிய மக்களும், சாமானிய மக்களும், எப்படியெல்லாம் சுரண்டப்படுகிறார்கள் என அறிந்தல்லவா தந்தை கடவுள் இல்லையென்றார். மதத்தின் பெயரால் மக்கள் படும் பாட்டையும், மகளிர் படும் துயரையும் தெரிந்தல்லவா தந்தை கடவுளே இல்லை என்றார். இந்திய விடுதலையைவிட சமூக விடுதலையே முக்கியம், பெண் விடுதலையே முக்கியம், பொருளாதார விடுதலையே முக்கியம் என முழங்கிய அந்தப் பெரியாரல்லவோ ஞானி. யாரய்யா மகான்? தாம் நரகம் புகுந்தாலும் பரவாயில்லை, எளிய மக்கள் அனைவரும் சொர்க்கம் சென்று சேரட்டும் எனக் கண்ணீரோடு கோபுரத்தில் ஏறி ஓம் நாமோ நாராயணா என உரக்கக் கூவினாரே ஒரு உத்தமஞானி, அவரைப் போல் பெரியாரும் ஒரு ஞானிதானய்யா.

கடவுள் இருக்கிறார் என்ற இராமனுஜ முனியும், கடவுள் இல்லை என்ற ராமசாமி பெரியாரும், மக்கள் திரள்மேல் பேரன்பு கொண்டவர்களல்லவா. மக்கள் சிறப்புற்று, மேன்மக்களாக வாழவேண்டுமென மனதார விரும்பியவர்களல்லவா. கடவுள் கொள்கையில் மாறுபட்டாலும் மக்களுக்காகப் பாடுபட்டவர்களல்லவா. எளிய மக்களை திருக்குலத்தார் எனப் பெயரிட்டு உடையவர் அழைத்தாரெனில், அதே எளிய குலத்தார் மேன்மையுற வேண்டுமென மேடைதோறும் முழங்கியவர் தந்தைப் பெரியாரல்லவா.

உடையவரை மகான் எனக் கொண்டாடும் பிராமணர்களே, உடையவர் வார்த்தைக்கு ஏதாவது மதிப்பளித்திருக்கிறீர்களா? ஆயிரமாவது ஜெயந்தி

விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடித் திளைத்தீர்கள். ஆகா, ஆகா, என்ன அற்புதம். என்ன அருமையான கொண்டாட்டங்கள். பேரணிகள் என்ன, ரதயாத்திரையென்ன, விழாக்கள் என்ன, மேடைப் பேச்சுக்கள் என்ன, புத்தக வெளியீடு என்னே, சி.டி.க்கள் என்னே. பெறற்கரிய நம் இராமானுஜ முனியின் ஆயிரமாவது ஜெயந்தியை எப்படிக் கொண்டாடியிருக்க வேண்டும் தெரியுமா பிராமணர்களே?

மகான் இராமானுஜர் மனிதகுலம் மேன்மையுற வேண்டும் என்றும், மண்ணில் ஆன்மீகம் தழைக்க வேண்டும், பக்தி செழிக்க வேண்டும் என்றும்தானே துறவு வாழ்க்கையில் ஈடுபட்டார். ஆன்மீகம் செழித்ததா பிராமணர்களே? ஆயிரம் வருடங்களுக்கும் மேலாக தற்போது வரையிலும் திருக்குலத்தார்களின் நிலை எப்படி உள்ளது பிராமணர்களே? உதாரணம் வேண்டுமா? தேனி மாவட்டத்தில் ஆதிக்க சாதித் தெருவழியாக பள்ளி சென்ற பையன் காலில் செருப்பணிந்து சென்றான் எனும் ஒரே காரணத்திற்காக, செருப்பை தலைமீது வைத்து நடக்க வைக்கப்பட்டான். எந்த ஊர் என்பதை பேப்பரில் பாருங்கள். உங்கள் இந்து பத்திரிக்கையும் செய்தி வெளியிட்டிருக்கிறது. பிராமணர்களுக்கு ஆயிரமாயிரமாண்டுகள் சொகுசு வாழ்க்கை. திருக்குலத்தாருக்கு? இன்னும் செருப்புப் போட்டால் அடி, உதை. எதிர்த்துப் பேசினால் வெட்டு, குத்து. இராமானுஜர் ஆதிஷேசன் அவதாரமாம். நீர்தான் சொல்கிறீர். ஒருவேளை நாராயணரே வந்தால்தான் திருக்குலத்தார் தெருவில் செருப்புப்போட்டு போகமுடியுமா பிராமணர்களே. மனிதன் செருப்புப்போட்டு நடப்பதற்குக் கூடவா நாராயணர் அவதாரம் செய்ய வேண்டும்? பிராமணரெல்லாம் எதற்கு இருக்கிறீர்? உமது அறிவு யாருக்கு? உமது ஞானம் எத்தன்மையானது பிராம்மனோத்தமர்களே?

கலியுகத்தை முடித்து வைக்க கண்ணன் பிறந்து வருவானாம். உண்மையா பிராமணர்களே? இராமானுஜர் பிறந்த உடனேயே கலி முடிந்து விட்டதாமே. நீங்கள்தான் பேசுகிறீர்கள். யாமே கேட்டிருக்கிறோம். அதென்ன பிராம்மனோத்தமர்களே, உபன்யாசம் பண்ணும்போதுகூட, நாம எனும் வார்த்தையைப் பயன்படுத்துகிறீர்கள். பிராமணர் மட்டும்தான் உபன்யாசம் கேட்க வருகிறார்களா? எம்மைப் போன்றவரும் வருவோமல்லவா. ஒருவிதத்தில் உங்களைப் பாராட்டுகிறோம் பிராமணர்களே. யாம் பல உபன்யாசங்கள் கேட்டிருக்கிறோம். யாரும் பிராம்மணரா எனச் சோதிக்கவில்லை. சோதித்திருந்தால் எமக்கெப்படி இதெல்லாம் தெரியப் போகிறது. தந்தை காலத்தில் சோதித்திருப்பீர்.

சட்டை போடாமல்தானே அன்றைக்கெல்லாம் உபன்யாசங்கள் நடந்திருக்கும். சட்டையைக் கழற்றினாலே தெரிந்துவிடுமல்லவா. பிராமணரா அல்லது பிராமணரல்லாதவரா என்று.

பிராமணர்களே.. உங்கள் கண்ணன் பத்தாவது அவதாரம் எடுத்து வந்தால், பெரியாரைப் பற்றி என்ன நினைப்பார்? என்ன சொல்வார்? உங்கள் ராஜாக்களோடும் உங்களது சுவாமிகளோடும் சேர்ந்துகொண்டு, உங்களை மாதிரி பெரியாருக்கு மரியாதை செய்வாரென்றா நினைக்கிறீர்? பெரியார் இராமாயணத்தையும், இராமனையும் இகழ்ந்ததாகப் பதிவுகள் சுட்டுகின்றன. கடுமையாகவே நடந்து கொண்டதாகக்கூட குறிப்புகள் காட்டுகின்றன. ஏன் இவ்வளவு கடுமை காட்டினார் பிராமணர்களே? இராமன் பெயரைச் சொல்லி அன்று நடந்த கூத்துக்களைப் பார்த்தல்லவா கொதித்தெழுந்தார். ஒழுக்கத்தில் சிறந்த இராமன் எங்கே.. படகுக்காரனையும், குரங்கையும் உடன் பிறந்தோனாக ஏற்றுக் கொண்ட இராமன் எங்கே.. மனிதர்கள் மேல் பேரன்பு காட்டிய அந்த ஸ்ரீஇராமன் எங்கே, மனிதர்களை ஒதுக்கி வைத்த நீர் எங்கே. பிராமணர் பண்ணிய அத்தனை தவறுகளுக்கும் இராமனையும், கண்ணனையுமல்லவா காரணமாக்கினீர். மனிதர்களை குலங்களாகப் பிரித்தது கண்ணன் என்றல்லவா கீதையை உதாரணம் காட்டினீர். இராமனும் கண்ணனும் மனிதர்கள்மேல் பேரன்பும் பெருங்கருணையும் காட்டினரா அல்லது உம்மைப்போல் ஒதுக்கியும் தள்ளியும் புறத்தேயும் வைத்தாரா?

கண்ணனையும், இராமனையும் அவ்வளவு எளிதாக நினைத்து விட்டீரா பிராமணரே? தர்மம் குறையும் போதெல்லாம் வருவோம் என்றானாம் கண்ணன். நல்லது பிராமணரே. வரட்டும் கண்ணன். கண்ணனுக்காக முதல் கேள்வி, தர்மம் என்றால் என்ன? உங்கள் கண்ணனால், பிராமணர் கண்ணனால் பதில் சொல்ல முடியுமா?

தர்மம் ஏன் குறைகிறது பிராம்மணோத்தமர்களே? எல்லாம் வல்லவன் கண்ணன் எனில் தர்மம் எப்படிக் குறையும்? யாரால் தர்மம் குறைகிறது? தர்மத்தைக் குறைப்பவர் யார்? கண்ணன் பிராம்மனோத்தமர்களிடம் நேரடியாகக் கேட்காவிட்டாலும் மனதிற்குள்ளாவது கேட்பானல்லவா.

கண்ணன் தர்மம் காக்க வருவது இருக்கட்டும். கல்வியிலும், அறிவிலும், ஞானத்திலும் சிறந்த பிராமணர், தர்மம் காக்க என்ன செய்தார்? பிராமணர் தர்மம்

எது, அதா்மம் எது என்பதை அறிந்திருக்கிறாரல்லவா. அறிந்திருக்கிறீரா பிராமணரே..

இருபத்தியிரண்டாயிரம் பேருந்துகள் வைத்திருக்கும் அரசு போக்குவரத்துக் கழகம் நட்டத்தில் இயங்குகிறது. இரண்டே இரண்டு பேருந்து வைத்திருக்கும் தனியாா் முதலாளி கோடீஸ்வரராக இருக்கிறாா். தா்மம் இருக்கிறதா பிராமனோத்தமா்களே? கண்ணன் தமிழக அரசுப் பேருந்துகளை நட்டமில்லாமல் இயக்குவதற்கு பிறந்து வரணுமா பிராமணா்களே. உங்களால் முடியாதல்லவா? எதற்கெல்லாம் கண்ணன் பிறந்து வர வேண்டும்? எத்தனை முறை கண்ணன் பிறந்து வரவேண்டும்? நீா் தா்மத்திற்காக சிறு துரும்பைக்கூட கிள்ளிப் போடமாட்டீா். நீா் அறிவிலும் ஞானத்திலும் சிறந்தவா். அந்தக் கண்ணன் மட்டும் எப்போதெல்லாம் தா்மம் குறைகிறதோ அப்போதெல்லாம் பிறந்து வரவேண்டும். தா்மத்தை நிலைநாட்டுவது என்ன கிள்ளுக்கீரையா பிராம்மனோத்தமா்களே? சட்டென காம்பைக் கிள்ளி இலையை வைத்துக்கொள்ள.

அரசுப்பேருந்து முக்கியச் சாலையிலிருந்து மூன்று கிலோமீட்டா் உள்ளே போகிறது. ஒட்டுநா் ஏதும் பாதை மாறிவிட்டாரோ என நினைத்தால், நடுக்காட்டுக்குள் அரசின் பணிமனை இருக்கிறது. அங்கே போய் பெட்ரோல் நிரப்பிவிட்டு மறுபடியும் மூன்று கிலோமீட்டா் ஓடிவந்து முக்கிய சாலையைத் தொடுகிறது. ஒரு வண்டி இப்படி பிரிந்து சென்று பெட்ரோல் நிரப்பி வருவதற்கே எப்படியும் ஒரு லிட்டா் பெட்ரோல் தீா்ந்துவிடும்போல. யாம் சொல்வதை நம்பவில்லையா பிராமணா்களே. கொடைக்கானல் போவதற்கு கொடைரோட்டில் இறங்குவீரல்லவா. அங்கே இறங்கி விசாரித்துப் பாரும். எந்தப் பிராமணா் ரயிலில் பயணிக்கிறாா்? கப்பல்போன்று குளிா்சாதன சொகுசு வண்டிகளல்லவா வைத்திருக்கிறாா்.

பிராம்மனோத்தமா்களே.. நீங்கள் எவ்வளவு நிலம் வைத்திருக்கிறீா்கள்? 1,30,058 சதுர கீலோ மீட்டா்கள் நிலத்தை ஆளும் தமிழக அரசுக்கு, முக்கியச் சாலையில் ஒரு பெட்ரோல் நிரப்புமிடம் வைப்பதற்கு இடமில்லை. முக்கியச் சாலையில் பணிமனை வைத்துக் கொள்வதற்கு நிலமில்லை. உரிமையில்லை. சாலைகள் எங்கும் எவ்வளவு கட்டிடங்கள், ஓட்டல்கள், விடுதிகள் இருக்கிறதென்பதைக் கவனிக்கிறீா்களா பிராம்மணா்களே. காட்டுக்குள் கிடக்கும்

அரசுப் பணிமனையை முக்கியச் சாலைக்குக் கொண்டுவருவதற்கு கண்ணன் வர வேண்டுமா பிராம்மனோத்தமர்களே?

கோயம்புத்தூர் வாருங்கள் பிராம்மணர்களே. சுங்கம் பணிமனை எங்கிருக்கிறதெனக் கேட்டு அந்தப் பணிமனையைப் பாருங்களேன். அசந்து விடுவீர்கள். கண்மாயை மேடாக்கி எவ்வளவு அழகாக பணிமனை கட்டியிருக்கிறார்கள் பார்த்தீர்களா? முப்பத்தியிரண்டு இலக்கம் சதுர கி.மீ நிலம் கொண்ட இந்திய அரசு, கண்மாயைத் தள்ளித் தள்ளி பணிமனையை விரிவாக்கிக்கொண்டே போகிறது. இரவெல்லாம் பேருந்துக்கள் சாலையில் நிற்கின்றன. இரவெல்லாம் கண் விழித்துப் பணியாற்றும் நடத்துனருக்கும் ஓட்டுனருக்கும் தூங்குவதற்கு என்னென்ன வசதிகள் இருக்கின்றனவோ. அப்படியே கொஞ்சம் கோயம்புத்தூரையும் சுற்றிப்பாருங்கள் பிராம்மனோத்தமர்களே. இரயில் நிலையத்தைப் பாருங்கள். மாநகரின் இரயில் நிலையம் எவ்வளவு விரிவாக இருக்க வேண்டும்? பன்னாட்டு விமான நிலையமாம். கொஞ்சம் விரிவுபடுத்திக் கொள்கிறோம் என அரசு கெஞ்சுகிறது, கொஞ்சுகிறது, முட்டுகிறது, மோதுகிறது. எதுவும் நடக்கவில்லை. தனியார் ஓட்டல்களைப் பார்த்தீர்களா? தங்குமிடங்களைப் பார்த்தீர்களா? இரவில் நீதிமன்றம் பக்கம் மட்டும் போய் விடாதீர்கள் பிராம்மணர்களே. நீதியைப்போல் நீதி மன்றமும் இருட்டில்தான் கிடக்கிறது. பார்த்தீர்களா பிராமணர்களே.. பணிமனைக்கு முன் எத்தனை கடைகள், எவ்வளவு ஆக்கிரமிப்புகள், எத்தனை கட்சிகளின் அலுவலகங்கள், அதுவும் முக்கியச் சாலையிலேயே. சொல்லுங்கள் பிராமணர்களே. அரசு பணிமனையை, கண்மாயை விட்டு அப்படியே அலேக்காகத் தூக்கி, வேறு ஒரு நல்ல இடத்தில் வைப்பதற்கு கண்ணன் வர வேண்டுமா? மலையைத் தூக்கிய கண்ணனுக்கு பணிமனையைத் தூக்குவது கடினமா என்ன?

வேறு எதற்கெல்லாம் கண்ணன் பிறந்து வரவேண்டும் பிராம்மனோத்தமர்களே. நீங்கள் பங்குச் சந்தையை ஆராயுங்கள். முதலீட்டு ஆலோசர்களோடு ஆலோசியுங்கள். எதில் முதலீடு செய்தால் அதிக லாபம் கொட்டும் எனச் சிந்தியுங்கள். விவாதியுங்கள். கண்ணன் எப்போதெல்லாம் தர்மம் குறைகிறதோ அப்போதெல்லாம் பிறந்து வரட்டும். நல்லது பிராமணரே. நன்று செய்தீர். வளரட்டும் உங்கள் பங்குச் சந்தை முதலீடுகள்.

வெள்ளரிக்காய் கம்பனி ஞாபகமிருக்கிறதல்லவா பிராமணரே. கம்பனி வெள்ளரிக்காயை விளைவித்து, அதை அமிலத்தில் போட்டு ஊற வைத்து, பாடம் பண்ணி வெளிநாட்டுக்கு அனுப்புகிறது. கொடுக்கப்பட்ட உரிமத்தின்படி, கம்பனி அமிலத்தண்ணீரை சுத்தப்படுத்த வேண்டும். ஆனால் கம்பனி கிணறு தோண்டி உள்ளுக்குள் கொட்டி வைக்கிறது. தரையிலும் கொட்டுகிறது. கம்பனி பெரிய காம்பவுண்ட் கட்டிக் கொண்டதால் உள்ளே என்ன நடப்பதென ஒருவருக்கும் தெரியவில்லை. அமிலத்தண்ணீா கொஞ்சம் கொஞ்சமாக நிலத்திற்குள் இறங்கி கிராமத்தின் நீரே அசுத்தமாகி விட்டது. பயன்படுத்த முடியாத அளவிற்கு நீா கெட்டுவிட்டது.

இந்தக் கம்பனியின் பங்குகளை வாங்கி வைத்திருக்கும் பிராமணருக்கு, கிராமத்தின் நீராதாரம் கெட்டுப் போனதில் பங்கிருக்கிறதா இல்லையா? சொல்லுங்கள் அறிவிற் சிறந்த பிராமணா்களே. இப்படியான நிறுவனங்கள் மூலம் பெறும் இலாபம் ஏற்புடையதா? இப்படி முகம் தெரியாத, அறியாத ஏதோ ஒரு கம்பனிக்கு பணம் கொடுப்பதும், அது என்னென்ன வழிகளில் பணம் ஈட்டுகிறது எனத் தெரியாமலேயே அது கொடுக்கும் இலாபத் தொகையை மட்டும் பெற்றுக் கொள்வதும் தருமமாகுமா? பங்குச் சந்தை பிராமணா்களே, உங்கள் கண்ணன் வந்தால், தேவரீா, பங்குச் சந்தையில் முதலீடு செய்வது பற்றி தங்களின் திருவுளம் என்னவோ என்பதையும் மறக்காமல் கேட்டுவிடுங்கள்.

கண்ணன் யாரால் தருமம் குறைந்தது எனக் கேட்பானா மாட்டானா?

பிராம்மணரே, கண்ணன் ஏன் அறிவான பிராம்மணா் வீட்டில் பிறக்காமல் அறிவில்லாத ஆயா் குடியில் அவதரித்தான்? அறிவொன்றுமில்லாத ஆயா் குலம் என ஆண்டாளும் சொல்கிறாா்தானே. உங்கள் திருமாளிகையில் பிறந்திருந்தால், அவன் சேட்டைகள் செய்திருக்க முடியுமா? திருடியிருக்க முடியுமா? விளையாடியிருக்க முடியுமா? மாடு மேய்த்திருக்க முடியுமா? புல்லாங்குழல்தான் இசைத்திருக்க முடியுமா?

பிறந்தது முதல் ஆயிரக்கணக்கான சாஸ்திர சம்பிரதாயங்களை அள்ளியிறைப்பவா்களன்றோ பிராமணா்கள். குழந்தைகூட அது விருப்பத்திற்கு உட்கார முடியாது. விரும்பியபடியெல்லாம் சாப்பிடமுடியாது. குழந்தை சோற்றுப் பருக்கையை கீழே போட்டால் அன்னத்தைச் சிதறவிடலாமா எனப் பதறிவிட மாட்டீா் பிராமணரே.

இஷ்டம்போல் குளிக்க முடியாது. ஸ்நானம் பண்ணுவதற்கென்று விதிகள் வகுத்திருக்கிறீா். ஆயா்கள் குடிலில் மகிழ்ச்சியாகக் குளிக்கலாம். குளிக்க அடம்பிடித்தால் பிராம்மனோத்தா் வீட்டில் அடுக்கடுக்கான ஆலோசனைகள் விழும். பிராம்மணா் குளிக்காமல் சாப்பிடுவதா என்பீா். அங்கோ குளிக்க வைப்பதற்குள் பெரும்பாடு. விளையாட்டு, செல்லம், அரவணைப்பு, அன்பு. இங்கே கண்டிப்பு, ஆலோசனை, அா்ச்சனை. குழந்தை எங்கே மகிழ்ச்சியாக இருக்கும் பிராமணரே?

அங்கே அனைத்து சிறுவா்களோடும் விளையாடலாம். இங்கே? முதலில் விளையாட முடியுமா? பிறப்பதற்கு முன்பிருந்தே வித்யாரம்பம் ஆரம்பமாகி விடுகிறது. படிப்பு, படிப்பு, படிப்பு. ஒழுங்கா படி. முன்னேறு. மேலும் முன்னேறு. மேலும் மேலும் முன்னேறு. நாம் பிராம்மணா். நாம் உயா்ந்தவா். நாம் எல்லோரையும் விடப் பெரியவா். நாம் முன்னேறியே ஆகணும். நாம பிராமணா். படி. நாம பிராமணா். நல்லா படி. நாம பிராமணா். படுச்சுட்டே இரு.

குழந்தை விருப்பம்போல் சாப்பிட முடியுமா? முடியாதே. இன்ன கிழமை, இன்னது சமையல். இந்த நேரத்துக்கு இது சாப்பிடக் கூடாது, இத சாப்பிடலாம். உட்காா்ந்தா சாஸ்திரம், நடந்தா சாஸ்திரம், சாப்பிடுவதற்கு சாஸ்திரம். எல்லாவற்றிற்கும் சாஸ்திரம். சட்டென ஓடிப்போய் குளத்தில் மூழ்கி குளித்துவிட முடியாது. எந்த திசையில் குளிக்க வேண்டும், முதலில் எந்தப் பாகத்தால் நீரைத் தொட வேண்டும், எந்த தேவதையை பூஜிக்க வேண்டும், எத்தனை முறை மூழ்கி எழுந்திருக்க வேண்டும், முதலில் எந்த உடல்பாகத்தைத் துடைக்க வேண்டும், எல்லாத்திலும் எண்ணிக்கை.. எது செய்தாலும் திசை.. எந்த திசையில தூங்க வேண்டும், விரிப்பு எப்படி இருக்க வேண்டும், கட்டில் எந்த மரத்தில் இருக்க வேண்டும், எத்தனை மணிக்கு தூங்க வேண்டும், எத்தனை மணிக்கு எழுந்திருக்க வேண்டும்? எண்ணிக்கையும், அளவும், சாஸ்திரமும்..

பிறக்க முடியுமா கண்ணனால்? தீராத விளையாட்டுப் பிள்ளை பிராமண ஆத்தில் பிறந்திருந்தால்? கண்ணனை பிராமண வீட்டில் நினைத்துப் பாா்க்க முடிகிறதா பிராமணரே. மகாராஜா வீட்டுப் பிள்ளையின் இளமைக் காலம் பற்றி ஏதாவது தெரிகிறதா? பிராமணப் பிள்ளையைவிட தந்தைக்கு மிகவும் பணிவு. ஈரடியில் உலகத்தை அளந்த அந்த உத்தமப் பிள்ளை பற்றி ஏதேனும் தெரியுமா பிராமணரே? கண்ணனைப் பற்றி மட்டும் ஏன் இத்தனை இத்தனை. ஆயா் குடி பிராமணரே. எளிய மக்கள். தலையில் வைத்துத் தாங்குவாா்கள். நந்தகோபன்

கண்ணனைப் படிக்குமாறு கூறினாரா அல்லது யாசோதைதான் சாப்பாட்டுப் பொட்டலம் கட்டிக் கொடுத்து சமத்தாப் போய் படிச்சிட்டு வந்துடு கண்ணு என அனுப்பி வைத்தாரா?

மாடு மேய்க்க நீயும் போக வேண்டாம் கண்ணே. காய்ச்சின பாலு தாறோம். கல்கண்டு சீனி தறோம். வயிறு நிறைய வெண்ணெய் தறோம். மாடு மேய்க்க நீயும் போக வேணாம் கண்ணா.

யமுனா நதிக்கரையில் எப்பொழுதும் கள்வா் பயம்.

கள்ளனுக்கோா் கள்ளனுண்டோ. கண்டதுண்டோ சொல்லுமம்மா. மாடு மேய்க்கப் போறோம். தேடி நீயும் வருகையிலே ஓடி வாரோம்.

கள்ள மாயனல்லவா.. பொல்லாத விசமக்காரனல்லவா.. வெண்ணெய் திருடி, யசோதை அன்னையிடம் மொத்து வாங்கிய அந்தக் கண்ணன், புல்லாங்குழலிசையில் கோபியரை மயக்கிய அந்த ஆயா்களின் தலைவன், வருவானா பிராமணரே.

நாம் வாழ்வது நவீன யுகமல்லவா. கணினி யுகமல்லவா. எவ்வளவு அறிவியல் முன்னேற்றம்.. எவ்வளவு தொழில்நுட்பம்.. மாடா்ன் உலகமல்லவா. தற்போதைய அல்ட்ரா மாடன் உலகம் எங்கே. அந்த எளிய ஆயா் குலக் கொழுந்து எங்கே.

வாளேந்தி வருவானாமே. மனிதரிடம் எத்தனை எத்தனை வெப்பன்ஸ் இருக்கிறது பிராமணரே? மூன்று கிலோ மீட்டர் தள்ளி இருப்பவரைக்கூட குறிபாா்த்து மிகத் துல்லியமாகச் சுடக்கூடிய நவீன துப்பாக்கிகள் பெருகியிருக்கும் நவீன வெப்பன் காலத்தில், வாளேந்தி வந்தால் முடியுமா? மாடு மேய்த்துத் திரிந்த கண்ணனுக்கு மாா்டன் மனிதரைப் பற்றி என்ன தெரியும் பிராமணரே?

சாதுக்களைக் காக்க கண்ணன் வருவானாம். உண்மையா பிராமணரே? சாது என்றால் சாமியாா்களா அல்லது சாதுவானவா்கள், எளிமையானவா்களா? ஏன் கேட்கிறோமென்றால் சாதுக்களே முதல்வா்களாக, மந்திரிகளாக, மடாதிபதிகளாக, தங்கக் கோவில்களுக்குச் சொந்தக்காரா்களாக, பெரும் செல்வந்தா்களாக, தனியாா் பாதுகாப்பு அரண் வைத்துக் கொள்ளும் அளவிற்கு பெரிய பெரிய சாமியாா்களாக இருக்கும்போது, அவா்களைக் காக்க கண்ணன் எதற்கு பிராமணரே. காசு கொடுத்தால் பிரேவேட் செக்யூரிட்டு கிடைத்துவிடப் போகிறது. அரசிடம்

பாதுகாப்பு அச்சுறுத்தல் எனச் சொன்னால், இசட், இசட் பிளஸ், பிளஸ் பிளஸ் என இறக்கிவிடப் போகிறது. கண்ணனெதற்கு பிராமணரே.

சாதுக்களை பாதுகாக்கத்தானே இந்திய அரசு எவ்வளவோ மெனக்கெடுகிறது. எத்தனை படைகள்? எவ்வளவு ஆயுதங்கள்? தமிழகத்தில் மட்டும் இலக்கத்திற்கும்மேல் காவலா்கள் இருக்கிறாா்கள். சிறப்புக் காவலா்கள், அதிரடிக் காவலா்கள், விரைவுக் காவலா்கள், அதிவிரைவுக் காவலா்கள், ஆயுதப் படைக் காவலா்கள். எத்தனை எத்தனை விதமான காவல்கள், காவலா்கள். இவ்வளவு காவலும் சாதுக்களைப் பாதுகாக்கவல்லவா.

மேதகு குடியரசுத் தலைவா் வெளியிட்ட இந்தியாவில் குற்றங்கள் 2016 புத்தகத்தை கொஞ்சம் படித்துப் பாா்க்கலாமா பிராமணரே. அதே புத்தகத்தில் ஒப்பீட்டுக்காக 2014, 2015களில், நாடு முழுவதும் நடந்த குற்றங்களின் எண்ணிக்கையும் இடம்பெற்றுள்ளன.

2016 இல் இந்திய குற்றத்தண்டனை தொகுப்புச் சட்டம் (ஐபிசி) பதிவு செய்த குற்றங்களின் எண்ணிக்கை 29,75,711. சிறப்பு மற்றும் உள்ளூா் சட்டங்கள் மூலம் பதிவான குற்றங்கள் 18,55,804. ஆக மொத்தம் 48,31,515 குற்றங்கள். ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும் பிராமணரே. இந்தக் கணக்கெல்லாம் காவல் நிலையங்களில் பதிவானவை. பெரும்பாலான வழக்குகள் பதியப்படுவதே இல்லை. பஞ்சாயத்துப் பண்ணியே முடிக்கப்படுகின்றன. கிராமங்களிலிருந்து காவல் நிலையம் போனால் உடனே பதிவதில்லை. எச்சரிப்பது, மிரட்டுவது, அடிப்பது, சமரசம் செய்து வைப்பது போன்றவையே பெரும்பாலும் நடக்கின்றன. பாதிக்கப்பட்டவா்களும், ஸ்டேசன்ல வச்சு நல்லா மிதிச்சானுங்கப்பா, சரி விடுங்கப்பா என்றே சமாதானமாகிறாா்கள். இன்னொன்றையும் மிகக் கவனமாக ஞாபகத்தில் வைக்க வேண்டும். இந்தியக் காவல் நிலையங்களில் பாதிப்புக்கு உள்ளானவரிடமும், யாரால் பாதிப்போ அவரிடமும் என இரு தரப்பிலிருந்தும் பணம் கறக்கப்படுகிறது.

2014 இல் 45,71,663 குற்றங்களும், 2015 இல் 47,10,676 குற்றங்களும் நடந்திருக்கின்றன. வருடத்திற்கு இலக்கம் குற்றங்கள் கூடுகின்றன. 2016 இல் மட்டும் 30,440 கொலைகளும், 88,008 ஆள்கடத்தல்களும் நடந்திருக்கின்றன. 2016 இல் பெண்களுக்கெதிரான குற்றங்கள் மட்டும் 3,38,954. வன்புணா்ச்சிக்கு ஆளான பெண்கள் 38,947. குழந்தைகளுக்கெதிரான குற்றங்கள். 1,06,958. சிறுவா்

குற்றங்கள் 35,849. திருடி மாட்டிக் கொண்ட சிறார்கள் 7,717. மூத்தகுடிகளுக்கு எதிரான குற்றங்கள் 21,410. கொலை செய்யப்பட்ட முதியோர் 1055. வழப்பறிக்கு ஆளானோர் 1024. பொருளாதாரக் குற்றங்கள் 1,43,524. சைபர் குற்றங்கள் 12,317.

கொலைகளுக்காக மட்டும் 55,026 புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு 85.2 சதமானம் குற்றப் பத்திரிக்கை தாக்கலாகியுள்ளது. 2,13,264 வழக்குகள் நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு 6,884 பேருக்கு தண்டனை உறுதி செய்யப்பட்டிருக்கிறது. கலவரங்களுக்கு மட்டும் 4,86,349 வழக்குகள் விசாரிக்கப்பட்டுள்ளன. தண்டனை வழங்கப்பட்டதோ வெறும் 4619. ஆசிட் வீச்சு உட்பட துயரமான காயங்களுக்கு மட்டும் 7,25,027 விசாரணைகள். தண்டனை பெற்றோர் 13,804 பேர். போதை சம்பந்தமான வழக்குகள் மட்டும் 1,99,412 தண்டனைக்கு உள்ளானோர் 25,782 பேர்.

இருபது இலக்கம் மக்கள் வாழும் மிகப் பெரிய நகரங்களில் மட்டும் 2016 இல் நடந்த குற்றங்கள் 8,08,637. டெல்லியில் மட்டும் 1996 வன்புணர்ச்சிக் குற்றங்கள் நடந்துள்ளன. மும்பையில் 712. பூனேயில் 354. டெல்லியில் 766 சிறார்கள் திருடினார்கள் எனில் சென்னையில் திருடியதோ 307. பூனேயில் 255. முதியோரிடம் வழிப்பறி செய்வதில் மும்பைக்கே முதலிடம். டெல்லி பெங்களுருக்கு அடுத்தடுத்த இடங்கள்.

எத்தனை எத்தனை விதமான குற்றங்கள். திருட்டு, வழிப்பறி, வன்புணர்ச்சி, முதியோர், பெண்கள், குழந்தைகளுக்கெதிரான குற்றங்கள். ஒரு வருடத்தில் பதிவு செய்யப்பட்ட குற்றங்களே இவ்வளவு எனில், படித்தவர்கள் அதிகமிருக்கும் கேரளாவிலேயே அதிகமான குற்றங்கள் நிகழ்கிறதெனில், ஒட்டுமொத்த பூமியிலும் நிகழும் குற்றங்கள் எவ்வளவு இருக்கும் பிராமணரே? மாடு மேய்ப்பதில் பெருவிருப்பம் கொண்டிருந்த அந்த ஆயர்குடிக் கண்ணன் இத்தனை குற்றங்களை எப்படித் தடுப்பான் பிராமணரே?

நீதி மன்றங்களில் தேங்கியிருக்கும் கோடிக்கணக்கான வழக்குகளை, வெண்ணெய் திருடித் தின்ற அந்தக் கண்ணன் எப்படித் தீர்த்து வைப்பான் பிராமணரே? இந்திய உச்ச நீதிமன்றத்தில் மட்டும், நவம்பர் ஒன்று, 2017 வரை, 55,259 வழக்குகள் நிலுவையில் உள்ளதெனில், நாடுமுழுவதும் எத்தனை எத்தனை நீதிமன்றங்கள் இருக்கின்றன.. எத்தனை வழக்குகள்.. எவ்வளவு விதமான

வழக்குகள்.. எப்படி பிராமணரே ஒற்றை ஆளாக அந்த ஆய்ச்சியர் கண்ணன் தீர்க்கப் போகிறான்?

துஷ்டர்களை அழிப்பதற்கு ஆநிரைகளின் பின்னால் அலைந்து திரிந்த கண்ணன் வருவானாம். எத்தனை துஷ்டர்களை அழிப்பான் அந்தக் கண்ணன் பிராமணரே? துஷ்டர்களை எப்படி அடையாளம் காண்பான்? அந்தக் காலத்திலாவது துஷ்டர்களுக்கு கொம்பு இருக்கும். அவர்களது சிரிப்பே காட்டிக் கொடுத்து விடும். நவீன கால துஷ்டர்கள் எப்படியெல்லாம் எங்கேயெல்லாம் நிறைந்திருக்கிறார்கள் பிராமணரே? மாநில, மைய, இண்டர்போல் என எவ்வளவோ அரசு அமைப்புகள், துப்பறியும் நிறுவனங்கள், உளவு அமைப்புகள் இருந்துமே துஷ்டர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லையே, பெற்றங்கள் பின்னால் ஓடித் திரிந்த அந்தக் கண்ணன் எப்படி துஷ்டர்களைக் கண்டுபிடித்து களையெடுப்பான் பிராமணரே?

எத்தனை பேர்களின் நோய்களைத் தீர்ப்பான்? எத்தனை எத்தனை விபத்துக்களைத் தடுப்பான்? தமிழகத்தில் அரசு சார்ந்த 60 மருத்துவமனைகளில், 2017 இல் மட்டும் 3,22,534 பெரிய அறுவைச் சிகிச்சைகளும், 6,34,511 சிறிய அறுவைச் சிகிச்சைகளும் நடந்துள்ளன. அரசு மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சைகளுக்கு வாரக்கணக்கில், மாதக் கணக்கில் காத்திருக்க வேண்டுமென்பதை பிராமணர் அறிந்திருக்கிறாரா எனத் தெரியவில்லை. வலியோடு அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளி ஒரு நாள், இரண்டு நாள் வலியால் அவதிப்படும் நோயாளி, மூன்றாம் நாள் தனியார் மருத்துவமனைக்கு போய்விடுகிறார். தனியார் மருத்துவமனைக்குப் போக வைப்பதே அரசு மருத்துவமனைக்காரர்கள்தான். காப்பீடு இருக்கிறதே, இங்கே ஏன் கெடந்து சாகுறீங்க என்கிறார்கள். அதிலும் கமிஷன் பார்க்கிறார்கள். தனியார் மருத்துவமனை அவசர ஊர்திகள் அருகிலேயே நிற்கின்றன. நோயாளி சரி எனத் தலையாட்டினால் போதும், அரசு மருத்துவமனைக்காரர்களே வண்டி ஏற்றி அனுப்பிவிடுகிறார்கள். தனியாரிடம் போனால் அனைத்தும் பணமாகிறது. முக்கியமாக அரசின் காப்பீட்டுத் திட்டத்தில் கொள்ளையோ கொள்ளை.

அறுபது அரசு மருத்துவமனைகளில் மட்டும் ஓராண்டில் சுமார் 4,94,31,658 ஆய்வகப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு வருடத்தில் விபத்துக்கான சிகிச்சை மட்டும் 13,25,623. விபத்தில் அடிபட்டால் ஏழைகள்தான்

பெரும்பாலும் அரசு மருத்துவமனைகளுக்கு வருகிறார்கள். பணக்காரர்கள் காப்பீடு வைத்திருக்கிறார்கள். எது என்றாலும் தனியார் மருத்துவமனைகளே. மருத்துவமனைகளிலும் கொகுசு வாழ்க்கை. சொகுசான அறைகள், கொகுசான குளிர் வசதி, சொகுசான சிகிச்சை. எங்கும் சொகுசு.. எதிலும் சொகுசு..

கண்ணன் சொகுசாக வாழ்ந்தானா பிராமணரே. அரண்மனையிலாவது ஏராளமான சொகுசுகள் இருந்திருக்கும். ஆயர் குடிலில் என்ன சொகுசு இருந்திருக்கப் போகிறது. ஆநிரையோட்டிய அசதியில் எங்கே படுத்துறங்கினானோ.

இத்தனை சொகுசு வேண்டாம் எனக் கண்ணன் சொன்னால் கேட்பீர்களா பிராமணர்களே? மருத்துவமனைகளிலேயே இத்தனை விதமான சொகுசு வாழ்க்கையெனில், இத்தனை விதமாக பாரபட்சமெனில், நோயுற்றவர்களுக்கு சிகிச்சையளிப்பதில் இத்தனை விதமான வேறுபாடுகளெனில், இத்தனை விதமான முன்னுரிமைகளெனில், மற்ற வாழ்க்கை வசதிகளில் எவ்வளவு வேறுபாடுகள் இருக்கும், இருக்கின்றன பிராமணர்களே.

பிராமணர்களால் குளிர்சாதன வசதியில்லாமல் வாழவே முடியாது எனும் நிலை வந்துவிட்டது உண்மைதானே? மனிதர்களால் காற்றாடி இல்லாமல் ஒரு ஐந்து நிமிடம்கூட இருக்க முடிவதில்லை. கண்ணன் வந்து, போற்றுதலுக்குரிய நம் பூமி வெப்பமாகிக் கொண்டே போவதாக விஞ்ஞானிகள் பதறுகிறார்கள், நீங்கள் கொஞ்சம் குளிர்சாதன வசதியில்லாமல் வாழப் பழகுங்கள் எனச் சொன்னால் கேட்பீர்களா ஞானத்தில் சிறந்த பிராமணர்களே? பூமி வெப்பமாகிக்கொண்டே போகிறதுதானே. பிராமணர்களுக்கே கண்கூடாகத் தெரிகிறதல்லவா? குளிர்சாதனப் பெட்டி, அறையின் வெப்பத்தை உறிஞ்சி வெளியிலல்லவா துப்புகிறது. அறையில் எந்த அளவிக்கு வெப்பம் குறைகிறதோ அந்த அளவுக்கு வெளியில் வெப்பம் கூடுகிறது என்றல்லவா பொருள். இப்படி ஊரெங்கும், ஓட்டலெங்கும், மருத்துவமனையெங்கும், குளிர்சாதனமாக்கிக் கொண்டால், அது எரியும் நெருப்பில் மேலும் எண்ணெய் வார்ப்பதாக ஆகாதா பிராமணரே.

எதற்கெல்லாம் கண்ணன் வரவேண்டும் பிராமணர்களே. நீச்சல் தெரியாமல் ஏராளமான சிறார்களும், இளைஞர்களும், பெண்களும் இறந்து போகிறார்கள். நீச்சல் தெரியவில்லையே என சும்மாவும் இருப்பதில்லை. குளங்களிலும், குவாரிக் குட்டைகளிலும், ஆறுகளிலும், கடல் அலைகளில் சிக்குண்டு ஏராளமானோர் இறப்பது ஏற்புடையதுதானா? மனிதர்களுக்கு மிகவும் அத்தியாவசியமான நீச்சல்

பயிற்சியை ஏன் கல்விக் கூடங்கள் கற்றுத் தருவதில்லை? ஏன் ஒவ்வொரு பள்ளியிலும் நீச்சல் குளங்கள் இல்லை? பன்னாட்டுப் பள்ளிகளைப்போல் நீச்சல் பழகுவதற்கு ஆயிரக்கணக்கில் ஆழவேண்டுமா? கோவையில் ஒரு நடுத்தரமான குளத்தில் பதினைந்து நாள்களில் நீச்சல் கற்றுக் கொடுக்க கட்டணம் 3500 உரூபாயாம். கிளப்பில் உறுப்பினராகச் சேரவும் வேண்டுமாம். எமது சிறுவயதில் கிராமங்களில் நீச்சல் தெரியாதவர்களே இருக்கமாட்டார்கள். தற்போதோ கிராமங்களிலேயே நீச்சல் தெரியாத தலைமுறைகள் உருவாகிவிட்டன. அரைப் பக்கெட் தண்ணியில் குளித்துவிட்டு பள்ளிக்கு கிளம்புகிறார்கள். மனிதர்களுக்கு நீச்சல் கற்றுக் கொடுக்க கண்ணன்தான் வரவேண்டுமா பிராமணர்களே. பிராமணர்கள், பிள்ளைமார்கள் போன்ற அறிவுஜீவிகள் வாழும் நாட்டில், நீச்சல் கற்றுக் கொள்வதற்கான கட்டமைப்பு ஏன் உருவாகவில்லை? பணம் கொடுத்துத்தான் நீச்சல் பழக வேண்டுமா?

எதற்கெல்லாம் கண்ணன் வர வேண்டும்? வயதானோரைப் பாதுகாக்க, பெற்ற பிள்ளைகள் கைவிட்ட பெற்றோரைப் பாதுகாக்க, கண்ணன் வர வேண்டுமா? ஐ.டி. கம்பெனியில் பணிபுரிந்து இரவில் வீடு திரும்பும் பெண் கூடவே கண்ணனும் போக வேண்டுமா? இரயிலில் பயணமாகும் பெண் கூடவே கண்ணனும் பயணித்து காமுகர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டுமா? சாலையில் பெருக்கெடுத்து ஓடும் குடிநீர் அடைப்பைச் சரிசெய்ய கண்ணன் வர வேண்டுமா? பிளாஸ்டிக் குப்பையை ஒழிக்க, மண்புழு உரம் தயாரிக்க, பனிமலைகள் உருகுவதைக் தடுக்க, ஓசோன் ஓட்டையை அடைக்க, காடுகளைப் பாதுகாக்க, வாகனங்கள் வெளியேற்றும் புகையைக் குறைக்க, மணல் கொள்ளையைத் தடுக்க, மலை உடைப்பை நிறுத்த, காவிரியில் தண்ணீர் பெற்றுத்தர, தமிழகக் கடனை அடைக்க.

சொல்லுங்கள் பிராமணர்களே.. எதற்கெல்லாம் கண்ணன் வர வேண்டும்? எத்தனையெத்தனை கண்ணன்கள் வரவேண்டும்? கோடிக்கணக்கில் திருடர்கள் நிறைந்திருக்கும் நாட்டில் ஒரு கண்ணனால் எப்படி கோடித்திருடர்களைப் பிடிக்க முடியும்? நாட்டில் நடக்கும் குற்றங்களில் திருட்டுத்தான் அதிகமாக நடக்கிறது. ஒரு கண்ணன் திருடனைத் துரத்திப் பிடிப்பானா? கொள்ளையனை விரட்டுவானா? கொலைகாரனை தடுப்பானா? கொலையும் கொள்ளையும் கூட்டம் சேர்ந்து நடக்கும்போது, கண்ணன் மட்டும் எப்படி ஒற்றை ஆளாகச் சமாளிப்பான்? போலிஸையே திருடன் வெட்டும்போது கண்ணன் வந்தால் மட்டும் என்னாகப் போகிறது?

விளைநிலங்களையெல்லாம் விலை நிலங்களாக மாற்றிவிட்டீர். குழந்தைகள் விற்பனை அமோகமாக நடக்கிறது. இவ்வளவு படிப்பறிவு வந்த பின்னும் குழந்தைத் திருமணம் ஜோராராக நடக்கிறது. ஒரே நாளில் ஒரு பகுதியில் மட்டும் ஏழு திருமணங்கள் தடுக்கப்படுகிறது எனில், தமிழ்நாடு முழுக்க எத்தனையோ. முன்னேறிய மாநிலமாகச் சொல்லப்படும் தமிழ்நாட்டிலேயே இப்படியெனில் வடக்கில் எத்தனை எத்தனையோ.

ஆசை மனநோய் போல் மக்களைப் பிடித்து ஆட்டுகிறது. விளம்பரங்கள் அனைவரையும் வீதிக்கு இழுத்து வருகிறது. எதையாவது எழுதித் தள்ளுபவர்களுக்கும் நல்ல அறுவடை. புத்தகச் சந்தை எனும் பெயரில் புத்தகங்கள் கோடிகளில் விற்கப்படுகின்றன. இரண்டு இலக்கம் சதுர அடிகளில், 750 பதிப்பகங்கள், ஐந்து இலக்கம் புத்தங்கம் இடம்பெறும் பிரம்மாண்ட புத்தகக் கண்காட்சியாம். 120 பதிப்பகத்தாருக்கு இடம் ஒதுக்க முடியவில்லையாம். புதிதாக 30,000 தலைப்புகளில் புதிய நூல்கள் தயாராம். இது 2015 இன் கணக்கு. அனேகமாக இலக்கம் புதிய தலைப்புகளில் புத்தகங்கள் எழுதி உலகிலேயே நம்பர் ஒன்னாக தமிழகம் முன்னேறும் என்பது திண்ணம்.

தண்ணீர் பற்றாக்குறை தலைவிரித்தாடுகிறது. பிராமணர்கள் கிராமங்களை மறந்தே போனார்கள். தெருக்குழாய் தண்ணீர்தான் அனைத்துக்கும். ஒரு நாள் தண்ணீர் வரவிட்டாலும் பெரிய திண்டாட்டமாகி விடுகிறது. கிராமத்தின் அத்தனை வீடுகளிலும் மின்மோட்டார் இயந்திரங்கள் வைத்தாயிற்று. அரைமணி நேரம் என்பதே அதிகம்தான். அதற்குள் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் அத்தனை தண்ணீரும் உறிஞ்சி எடுக்கப்படுகிறது. சமீபமாக தண்ணீர் குழாய்களில் யாரும் தண்ணீர் பிடித்து யாம் பார்த்ததே இல்லை. தண்ணீரும் வருவதில்லை. தேவை, ஆசை, போட்டி. ஊராட்சிகளால் ஒன்றும் செய்ய முடியாது. மோட்டார் வைக்காதீர்கள் என்றாலோ நடவடிக்கை எடுத்தாலோ ஓட்டு போய்விடும் பிராமணர்களே.

உணவுப் பொருட்களோடு தேவையில்லாத அவசியமற்ற நிறமிகள் சேர்க்கப்படுகின்றன. அழகு சாதனப் பொருட்களிலும் உடல் நாற்றத்தைக் தடுக்கும் தெளிப்பான்களிலும் அனேகவகை வேதிப்பொருட்கள் சேர்க்கப்படுகின்றன. சமீபமாக, உலகின் எல்லாத் துறைகளிலும் பேசப்படும் நானோ துகள்கள், உணவுப் பொருட்களிலும் சாயமேற்றிகளாகக் சேர்க்கப்படுவதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன.

விவசாயிகள் எதை விளைவித்தால் அதிக லாபம் கிடைக்குமோ அதை விளைவிக்கிறார்கள். வியாபாரிகள் எதை விற்றால் அமோக லாபம் கிடைக்குமோ அதை விற்கிறார்கள். நிறுவனங்கள் எதை உற்பத்தி செய்தால் அதீத லாபம் கிடைக்குமோ அதை உற்பத்தி செய்கின்றன. அதிகாரிகள் எந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் அபரிமிதமான கமிஷன் கிடைக்குமோ அதை செயல்படுத்துகிறார்கள். அரசியல்வாதிகள் என்ன செய்தால் பணத்தையும், ஓட்டுக்களையும் அள்ளலாமோ அதைச் செய்கிறார்கள்.

அனைத்துக் காய்கறிகளையும் பழங்களையும் குளிர்பதன கிட்டங்கிகளில் பாதுகாத்தே சந்தைக்கு அனுப்புகிறார்கள். பெரும்பாலும் அனைத்துமே குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்தே விற்கப்படுகின்றன. தக்காளி முதற்கொண்டு ஆப்பிள், மாம்பழம் என  அனைத்துமே கருத்துப்போய் கிடைக்கிறது. குளிர்சாதனக் கடைகளில் மாம்பழம் எப்படிப் பழுக்கும்? வாழைப்பழம் எப்படிக் கனியும்? வாழைக்காயை வெட்டி வந்து விற்கிறார்கள். நாம் காயாக வாங்கி வந்து பழுக்கவைத்து உண்ண வேண்டியிருக்கிறது. வியாபாரிகளுக்கு எதுவுமே நட்டமில்லை எனும் நிலை வந்தபின்னும் விலை குறைந்தபாடில்லை. முன்பெல்லாம் வதங்கிய, சூம்பிய காய் கனிகளை மலிவாக விற்பார்கள்.

திரைப்படங்களிலும், தொலைக்காட்சித் தொடர்களிலும் காண்பிக்கப்படும் வன்முறைகளும் துப்பாக்கிக் கலாச்சாரங்களும் தமிழகத்திற்கு நன்மையானதாக இருக்கப்போவதில்லை. சின்னத்திரைக்கு அருவாள்கள் வந்தன. தற்போது துப்பாக்கிக் கலாச்சாரம் பெருகி வருகிறது. பழிவாங்கும் போக்கும், திரைப்படங்களே தோற்றுப்போகும் வன்முறைகளும், கத்தல்களும், சண்டைகளும் மக்கள் மனங்களை வெகுவாகப் மாற்றப் போகின்றன. மாற்றியும் விட்டன.

ஓட்டல்கள் வைப்பது பெருந்தொழிலாக, கொள்ளைலாபம் கொடுக்கும் தொழிலாக மாறிவருவது எதிர்காலத் தலைமுறைகளின் வயிற்றுக்கு நல்ல செய்தியாக இருக்கப் போவதில்லை. ருசிக்காக எதை எதையோ கலக்கிறார்கள். சாப்பிட்டு முடிந்து வீட்டிற்கு வருவதற்கு முன்னரே பெரும்பாலான குழந்தைகளின் வயிறு கலக்குகிறது. பீட்சா, பர்கர் போன்றவற்றில் நடைபெறும் வணிக லாபங்கள் நிச்சயம் ஏற்கத்தக்கதல்ல. வெறும் மைதா மாவு, குடைமிளகாய், ஆனியன், தக்காளி, பொடிப்பொடியான கொஞ்சம் கோழிக்கறித் துண்டுகள். இவ்வளவு விலை வைத்தா விற்பார்கள்? 1200-1300 உருபாய் பில் வந்தாலும், இரு குழந்தைகளின்

வயிறு நிறைவதில்லை. பெட்டி பெட்டியாக சிக்கன் இறைச்சியை வாங்கி குழந்தைகளுக்குக் கொடுக்கிறார்கள். குடும்பம் குடும்பமாக உட்கார்ந்து, தீனிபோல் இறைச்சியைத் தின்கிறார்கள். முன்பெல்லாம் இறைச்சியைக் குழம்பு வைத்து, சோறோடு பிசைந்து சாப்பிடுவார்கள். சோறே முக்கியமான உணவு. வெறும் இறைச்சியை மட்டும் முக்கிய உணவாகக் கொண்டால், உடல் பருமன் வராமல் என்ன செய்யும்? 130 கோடி மக்கள் வாழும் இந்தியாவில் அத்தனை பேரும் ஆளுக்கொரு முழுக் கோழி சாப்பிட்டால், ஒரு வேளைக்கு 130 கோடி கோழிகளுக்கு எங்கே போவது?

திருமணங்களில் ஆடம்பரமான விருந்துகள், கேளிக்கைகள், ஆட்டங்கள், ஓட்டங்கள். மணமகனும் மணமகளும் ஆட வேண்டுமாம். கூடவே அவரவர் அப்பா, அம்மாக்களும் ஆடுகிறார்கள். பெண்ணை அழைத்து வரும்போதே, ஆடிக்கொண்டே மண்டபத்தில் நுழைகிறார்கள். புதுக் கலாச்சாரமா அல்லது யாம் தற்போதுதான் கவனிக்கிறோமா எனத் தெரியவில்லை. வடக்கத்திய கலாச்சாரம்போல் தெரிகிறது. வடக்கத்திய நெடுந்தொடர்கள்தானே அத்தனை தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்புகிறார்கள். உணவுகளில் பாதிக்குப் பாதி கழிவாகிறது. இத்தனை விதமான உணவுகளை ஒரே நேரத்தில் சாப்பிடுவது தேவையில்லாதது. அதிகபட்சமாக நான்கு, ஐந்து வகைகளே போதும். பத்திரிக்கையிலேயே போடுகிறார்கள். முப்பது வகை உணவுகள், முப்பதாறு வகை உணவுகள் என. வயிறு குடோன் போலும். அலங்காரங்களுக்கு அதிகமாக செலவு செய்கிறார்கள். புதிதாக நிறையக் கல்யாணங்களுக்கு செண்டை மேளம் வைக்கிறார்கள். சினிமா படப்பிடிப்புபோல் கிரேன் வைத்து, ரிமோட் காமராவைப் பறக்க வைத்து, சினிமா சூட்டிங்கே தோற்றுவிடும் போல. மணமக்களை சிரிக்க வைத்து கட்டிப்பிடிக்க வைத்து எடுத்த கலாச்சாரம் போய், காடுகளிலும், மலைகளிலும், ஏரிகளிலும், ஓட விட்டும், ஒளிய விட்டும் உரச விட்டும் படமெடுக்கும் காலம் வந்துவிட்டது. இப்படி படமெடுக்கும் மணவாழ்க்கை மகிழ்ச்சியாகவும் ஒற்றுமையாகவும் இருந்தால் நல்லதுதான்.

டெலி ஷாப்பிங் எனும் பெயரில் மக்கள் பெருவாரியாகக் கொள்ளையடிக்கப்படுகிறார்கள். ஒரு சாதாரண பிளாஸ்டிக் டப்பா 1700 உருபாக்கு விற்கப்படுகிறது.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உள்கட்டமைப்பிற்கே அதிக முக்கியத்துவம் தரப்படுகிறதே தவிர, கல்வியின் தரம் குறித்தோ, ஆசிரியர்களின் அறிவாற்றால் குறித்தோ பெரும்பாலும் சிந்திப்பதில்லை. முக்கியத்துவமும் தரப்படுவதில்லை.

தனிப்பட்ட மனிதர்களைப் போலவே மாநிலங்களும் நாடுகளும் பெருங்கடனாளிகளாகிவிட்டன. கடன்காரன் பிடியிலிருந்து எந்த மனிதரும், எந்த நாடும் இனித் தப்ப முடியாது எனும் நிலை வந்துவிட்டது. வல்லரசு நாடுகளும், பெரிய நாடுகளும் கடனாளி நாடுகளின் நகரங்களையும், வயல்களையும் எழுதி வாங்கத்தான் போகின்றன. பெரும்பாலான நாடுகளின் ஊழல் அரசியல்வாதிகள் கடனை வாங்கி ஏப்பம் விட்டுவிட்டார்கள். அவர்கள் வெளிநாடுகளில் பதுக்கி வைத்திருக்கும் பணத்தைக் கொண்டு உல்லாசமாக வாழப் போகிறார்கள். நாட்டு மக்கள்தான் மறுபடியும் அடிமையாகப் போகிறார்கள். ஊழல் பணம் வெளிநாட்டு ஊழல் வங்கிகளில் எத்தனையாயிரம் கோடிகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன என மக்கள் என்றைக்கு அறியப்போகிறார்களோ?

தனிமனிதர்களுக்கும் கடனால் பல்வேறு நெருக்கடிகள். இளைஞர்கள் வேலையில் சேரும் முன்னரே கடன் வாங்கி விடுகிறார்கள் போலும். வேலையில் சேர்ந்த ஆறு மாதத்திற்குள் இருக்கும் அத்தனை லோன்களையும் வாங்கி விடுகிறார்கள். ஒருவேளை ஏழாவது மாதத்திலோ, ஒரு வருடத்திலோ, வேலை படிக்கவில்லையெனில், ஒருபோதும் வேலையைவிட்டு விலகவே முடியாது. வாங்கியிருக்கும் கடன்களுக்கு அஞ்சியே பலரும் வேலையை விட முடிவதில்லை. மேலாளர் சரியில்லையெனில் பெண்களால் வேலையை விட முடியாது. வேலையை நம்பி கார் லோன் வாங்கியிருப்பார்கள். கணவரோ அட்ஜட்ஸ் பண்ணி போகச் சொல்லுவார். எல்லாம் கடன் படுத்தும் பாடு.

இராணுவ ஆதிக்கமும் பொருளாதார ஆதிக்கமும் பெற்ற வல்லரசு நாடுகளும், வளரும் நாடுகளும் பெரும் ஆதிக்கம் செலுத்த முயல்கின்றன, செலுத்துகின்றன. அரசியல்வாதிகளுக்கும், அறவுஜீவிகளுக்கும், பத்திரிக்கைகளுக்கும் பன்னாட்டளவில் வலை விரிக்கப்படுகிறது. கூலி சிந்தனையாளர்களும், கூலி அரசியல்வாதிகளும் இதில் பெருமளவில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

காவலர்கள்போல் நடித்து பணம் பறிப்பதே தற்போது மிகவும் சுலபமாகச் சம்பாதிக்கும் வழியாகிவிட்டது. வீடுகள் வணிக வளாகங்களாகவும், ஆடம்பர

அலுவலகங்களாகவும் மாறிக்கொண்டிருக்கின்றன. கடைகளின் சுவர்கள் முழுவதும் மார்பிள் கற்களாகவும், மிகுந்த வேலைப்பாடு கொண்டவையாகவும் காட்சியளிக்கின்றன. மிகவும் ஆடம்பரமான இருக்கைகள், விளக்குகள், அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன. விளக்குகளின் எண்ணிக்கை எண்ணி மாளாது.

பூக்கள் விற்பனையில் நடக்கும் வணிக முறைகேடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. வியாபாரிகள் கூட்டுச் சேர்ந்து கொள்ளையடிக்கிறார்கள். ஒரு கிலோ மல்லிகை 400 உரூபாக்கு வாங்கி வந்து, முழம் 50 உரூபாக்கு விற்கிறார்கள். ஒரு கிலோ பூவில் குறைந்தது 40 முழம் கட்டலாம். இப்படியுமா மனிதர்களுக்குப் பேராசை வரும். எல்லா வணிகத்திலுமே மும்மடங்கு, நான்கு மடங்கு லாபம் என்பது சட்டமாகிவிட்டது. பண்டிகை காலங்களில் நிகழும் விலையேற்றம் சாமிகளுக்கே அடுக்காது.

மனிதர்களின் புத்திசாலித்தனம் என்பது அடுத்தவர்களை ஏமாற்றுவதற்கே எனும் நிலை வந்துவிட்டது. சேலை வியாபாரம், டப்பர் வேர்ஸ், அரிசி வியாபாரம், ஒரு கிராம் நகைகள், நிலத்தரகு என மும்முரமான தொழிலதிபர்களாக பேராசிரியர்கள் மாறிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தில் இனி எதுவுமே பேசவோ, எழுதவோ முடியாது. எந்த ஒரு சிறு விசயத்தைப் பேசினாலும் எழுதினாலும் கொடி பிடிக்கவென்றே ஒரு பெருங்கூட்டம் காத்துக் கொண்டிருக்கிறது. சங்ககாலம் வரைக்கும் சாதி பார்த்தாயிற்று. சாதி, மதம், கடவுள், சமூகம், தொழில்கள் சார்ந்து எதுவுமே எழுத முடியாது. வக்கீலைப் பற்றி எழுதினால் எப்படி எழுதலாம் என வழக்குப் பாய்கிறது. மருத்துவர் பற்றி படமெடுத்தால் மருத்துவரை எப்படி தவறாகச் சித்தரிக்கலாம் எனப் போராட்டம் வெடிக்கிறது. எழுத்தாளர்கள் இனி எதையுமே எழுத முடியாது. தோராயமாக இத்தனையாயிரம் வருடங்கள் கழித்து இப்படி நடக்கிறது என்றுகூட இனி எழுத முடியாது. அப்போதும் எங்கள் சாதி மதம்தான் ஆளும், எப்படி எழுதலாம் என பெரும் போராட்டம் நிச்சயம் வெடிக்கும்.

இளைஞர்கள் வாகனம் ஓட்டுவது திகிலைக் கிளப்புகிறது. இரண்டு வண்டிகளுக்கும் குறுக்காகப் புகுந்து புகுந்து ஏன் வண்டியை ஒட்டுகிறார்கள் எனத் தெரியவில்லை. நகரின் மையப் பகுதியிலேயே பந்தயங்கள் நடக்கின்றன. ஊரே அமைதியாக இருக்கும்போது உச்சபட்சமாக வண்டிகளை உறும வைத்து சீறுகிறார்கள். இவர்களெல்லாம் யார் வீட்டுப் பையன்கள் என்பது காவல் துறைக்கும்

நன்றாகவே தெரியும். இந்தியாவில் ஆண்டுக்கு கிட்டத்தட்ட ஐம்பது லட்சம் பேர் வரை வாகன விபத்துக்களில் மாட்டிக்கொள்வதாக புள்ளி விவரங்கள் அறிவிக்கின்றன.

பூமியில் மாசுபாடு பெருமளவில் அதிகரித்து வருவது கண்கூடு. நகரங்களில் காற்று மாசுபாடு உச்சத்தில் இருக்கிறது. காற்று முழுதும் தூசு. தூசியைத்தான் மனிதர்கள் சுவாசிக்கிறார்கள். நகரங்களில் பெரும்பாலான மனிதர்களுக்கு சுவாசக் கோளாறுகள் பரவிவிட்டன. சிறுவர்களுக்கும் மூக்கடைப்பு, ஆஸ்துமா. மனிதர்களை வாழ வைக்கும் காற்றே கொல்லும் காற்றாக, கில்லர் ஏராக மாறிவருகிறது. காற்று மாசுபாட்டிற்கு தூசும், புகை மாசுபாட்டிற்கு பெருவாரியான வாகனங்களும் முக்கியக் காரணம். மனிதர்களுக்கு சுவாசக் கோளாறுகள் வருவது உடல் நலத்திற்குப் பெருங்கேடாகவே முடியும். நுரையீரலின் காற்று நுண்அறைகளைத் தூசிப் படலம் அடைத்துக் கொண்டால், உடலுக்குத் தேவையான ஆக்சிசன் குறையும். ஆக்ஸிஜன் பற்றாக்குறையானால் அத்தனை உறுப்புக்களும் பாதிக்கப்படும். முக்கியமாக மூளை. உடல் நலத்திற்கு மூச்சுப் பயிற்சி அவசியம் என்பது முன்னோர் கண்டடைந்த ஞானம். சுத்தமான காற்றைச் சுவாசித்தாலே உடலின் முக்கால்வாசி நோய்கள் ஓடிவிடும். எப்போதும் புத்துணர்ச்சி நிரம்பியவர்களாகவும் இருப்பார்கள்.

உலக மக்கள் அனைவரையும் ஒரே மாதிரியான தேவையுள்ளவர்களாக, விருப்பமுள்ளவர்களாக, வாழ்க்கைமுறை கொண்டவர்களாக மாற்றும் முயற்சியில் பெருவணிக நிறுவனங்கள் பெருவெற்றி பெற்றுவிட்டன என்றே நினைக்கத் தோன்றுகிறது. குளிர் நாடு, வெப்ப நாடு, பாலைவன நாடு என்றில்லாமல், மலை நாடு, பள்ளதாக்கு நாடு, சமவெளி நாடு என்றில்லாமல், எல்லா மக்களின் தேவைகளையும் ஒன்று போலவே ஆக்கி வணிகங்கள் சக்கைப்போடு போடுகின்றன.

தமிழ்நாட்டின் பெருங்கடைகளில் நான்காயிரம், ஐந்தாயிரத்திற்கு கம்பளி ஆடைகள் விற்கிறார்கள். தமிழ்நாட்டில் எங்கு குளிர்கிறது? அதுவும் இத்தனை உயர்தரமான உள்ளன் அணியுமாறு?

தமிழகத்தில் சொத்துத் தகராறுகளுக்காக நீதிமன்றங்களை நாடும் போக்கும் மிகவும் அதிகரித்துவிட்டது. வக்கீல்களுக்கு கொழுத்த லாபம். நீதி மன்றங்களுக்கும் நல்ல வருமானம். தட்டச்சு செய்பவர், நகல் எடுப்பவர்களுக்கும் செழிப்பான வருமானம். மனிதர்களால் குடும்பமாக, உறவுகளாக சேர்ந்து வாழமுடியாது எனும் நிலைமை வந்துவிட்டது. அனைவருமே சுதந்திரமாக வாழ

விரும்புகிறார்கள். கூட்டாக வாழ்வதில் உள்ள நன்மைகள், மன மகிழ்ச்சிகள், பகிர்ந்து வாழ்வதில் உள்ள அனுகூலங்கள், ஒத்தாசைகள், மனிதர்களுக்கு புரியாமல் போய்விட்டது.

தமிழ்நாட்டிலும் இந்திய அளவிலும் துப்பாக்கிக் கலாச்சாரம் அதிகரித்து வருவது கவலையளிக்கும் செய்தியாகவே தெரிகிறது. அரிதாகக் கேள்விப்பட்ட துப்பாக்கி சூடுகள், வன்முறைகள் பெருகிவருகின்றன. கொலைகாரர்களுக்கு எளிதாகத் துப்பாக்கிகள் கிடைப்பது மிகவும் ஆபத்தானதாகவே இருக்கும். இந்தியா இன்னொரு அமெரிக்காவாகி வருகிறது அனைத்திலும்.

ஆட்சியர் அலுவலகங்களுக்கு எண்ணெய்யோடு வருவதே தற்போதைய ஆட்சியாளர்களின் கவனத்தைக் கவரும் யுத்தியாக எளிய மக்களால் கைக்கொள்ளப்படுகிறது. தலையில் எண்ணெய் ஊற்றி நிற்கும் எளியமக்களைப் பாதுகாப்பது காவலர்களுக்கு பெரும் சவாலாக மாறிவருகிறது. காவலர்களே எண்ணெய் ஊற்றிக்கொள்வதும், துப்பாக்கியால் சுட்டுக் கொள்வதும், எந்தளவுக்கு மன நெருக்கடியில் வாழ்கிறார்கள் என்பதற்கான சாட்சிகள்.

மக்கள் சம்பாதிப்பதில் பாதியை உணவு விடுதிகளுக்கும், மீதியை உடைக்கும் கொடுத்து விடுகிறார்கள். வீடும், காரும் கடனில் வாங்கியாயிற்றல்லவா? பிறகென்ன, வாழ்க்கையைக் கொண்டாட வேண்டியதுதான். துணிக்கடைகளில் அடிக்கப்படும் கொள்ளைக்கு அளவே இல்லாமலாகிவிட்டது. அதிலும் குழந்தைகளின் உடைகள் கொள்ளையோ கொள்ளை. பாசிகளையும், ஜிகினா ஓடுகளையும் ஒட்டிவைத்துக் கொண்டு, சணல் துணிகளை நான்காயிரம், ஐந்தாயிரத்திற்கு விற்கிறார்கள். கேட்பதற்கு யாருமே இல்லை. நகரங்களில் பெண் குழந்தைகள் பிறந்த நாள்களுக்கு என்றே கண்ணாடிகள் ஒட்டிய கவுன்கள் விற்கிறார்கள். ஒரு முறை தண்ணியில் போட்டால் போதும், உடை அவ்வளவுதான். இப்படியுமா அழகு எனும் பெயரில் குழந்தைகளை ஏமாற்றுவது. முன்னெல்லாம் உடை எடுத்தால், தைத்தால் பெரும்பாலும் கிழியாது. தற்போது வரும் பெரும்பாலான உடைகள் ஒட்டப்பட்டே வருகின்றன. உடைகளை மட்டுமா ஒட்டுகிறார்கள்? அனைத்துமே ஒட்டு வேலை. செருப்பை, முழுக்காலணியை தைப்பதே இல்லை. பத்து நாட்களுக்குக்கூட ஒட்டு வேலை நிற்பதில்லை. செருப்பை ஒட்டுவதை என்னவென்பது. மனிதருக்கு அறிவு நன்றாகவே வளர்கிறது..

துணிக்கடைகளில் எந்நாளும் கூட்டம். வருபவா்களை கும்பிடுவதற்கென்றே இரண்டு ஆட்களை வைத்திருக்கிறாா்கள். அவ்வளவு மரியாதை. இருவருக்கும் கொடுக்கும் சம்பளம் தேவையில்லாத ஒன்று. தமிழா்கள் விருந்தோம்பலில் சிறந்தவா்களாம். எல்லாம் வியாபாரத் தந்திரமய்யா, தந்திரம். கடைகாரா்களுக்கு மனிதா்கள் மேல், வாடிக்கையாளா்கள் மேல் எவ்வளவு அக்கறை. கரிசனம். ஆண்டு முழுவதும் வியாபாரம். கோடையில் ஆடித் தள்ளுபடி. ரம்ஜான், தீபாவளி, கிறிஸ்துமஸ், பொங்கல். பின் அடுத்த ஆடித் தள்ளுபடி. துணிகளின் விலை இத்தனை கூடாது. மனிதா்களும் இவ்வளவு துணிகள் வாங்கவும் கூடாது. வீடு முழுதும் துணிகள். வீடுகளில் எங்கெங்கு காணினும் துணிகள். ஒருமுறை போட்ட உடைகளை மறுமுறை அணிய யாருக்குமே மனமில்லை. தினமும் புது உடை கேட்கிறாா்கள். சில பேருக்கு ஒவ்வொரு வேளையும் புது உடைகள் தேவைப்படுகின்றன. கல்யாணம் போன்ற விழாக்களில் மனிதா்கள் போட்டிருக்கும் உடைகளும், அணிகலன்களும, அப்பப்பா..

துணிக்கடைக்காரா்களும், நகைக்கடைக்காரா்களும் பண்ணும் விளம்பரங்களுக்கு அளவே இல்லாமலாகிவிட்டது. கடவுள்களோடு, ராஜாக்களோடு விட்டாலும் பரவாயில்லை. அவ்வையாரையும் விட்டுவைக்கவில்லை. வள்ளுவா் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எல்லாம் ஆசை. எல்லாத்திலும் காசு. பெட்டிபெட்டியாக நகை வைத்திருப்பதே மனிதராய் வாழ்வதற்கான ஒரே தகுதி எனும் அளவிற்கு நகைக்கடைகளின் விளம்பர மோகத்தில் தமிழா்கள் சிக்குண்டு கிடக்கிறாா்கள். போதுமென்ற மனமே பொன் செய்யும் மனமாம். மீள்வது கடினம். மக்கள் மீள நினைத்தாலும் நடிகா், நடிகையும், நகைக்கடை முதலாளிகளும் நகை மாயையில் மூழ்கடிக்காமல் விடமாட்டாா்கள் என்பது உறுதி. செய்கூலி சேதாரமில்லாமல் நகை கொடுப்பது, சுலபத் தவணைத் திட்டத்தில் நகை வழங்குவது மக்களுக்காகத்தானே. சமீபமாக, பழைய நகையைக் கொடுத்து அன்னிக்கி விலைக்கே பணமா வாங்கிட்டுப் போங்க என்ற வகை விளம்பரங்கள் உக்கிரமடைந்து வருகின்றன. முன்னரெல்லாம் அம்மாக்கள் நகைகளைப் பத்திரமாக வைத்துக்கொள்ளுமாறு சொல்வாா்கள். நவீன அம்மாக்களோ நகையைக் கொடுத்துட்டு துட்ட வாங்கிட்டு நடையைக் கட்டு என்கிறாா்கள். என்ன அம்மாக்களோ. விளம்பரங்களுக்கு செலவிடும் கோடிக்கணக்கான உருபாக்களும், கடைகளின் ஐந்து நட்சத்திர அலங்காரங்களும், நுகா்வோா்கள் பணம் என்பது

எப்போது புரியுமோ. பெரும்பாலான கடைகள் உத்தரவாதமான பரிசு எனும் அறிவிப்பையும் வெளிவிட்டு மக்களை இழுக்கின்றன.

தமிழ்நாட்டில் நாளொன்றுக்கு 1000 கிலோ தங்க நகைகள் விற்பனையாவதாக செய்திகள் வெளியிடப்படுகின்றன. அட்சய திருதியை அன்று மட்டும் 3200 கிலோ நகைகள் சுமார் 1000 கோடி உரூபாக்கு வியாபாரமாகியிருக்கிறது. தங்கமான தமிழர்களல்லவா. தமிழகத்தில் தங்க தோசையும் வந்துவிட்டது. தங்க தோசை 550 உரூபா. வெள்ளி தோசை 330 உரூபா. 50 மில்லி கிராம் தங்கம் சேர்த்து தோசை சுட்டுக் கொடுக்க ஜெர்மனி இயந்திரமும் இறக்குமதியாகியிருக்கிறதாம்.

சுயமரியாதை, சுயசிந்தனை, பகுத்தறிவு என முன்னெடுக்கப்பட்ட தமிழ் நிலத்தில், அனைத்துமே வழிபாட்டுக்குரியதாக மாறிவருகிறது. அரசியல்வாதிகள், நடிகர்கள், விளையாட்டு வீரர்கள், எழுத்தாளர்கள் என அனைவருமே வழிபாட்டுக்குரியவர்களாக மாற்றப்பட்டு வருகிறார்கள். நடிகர்களுக்குக் கொடுக்கப்படும் வழிபாடு சகிக்கவில்லை. நடிகையைப் பார்க்க கூடும் கூட்டம் கின்னஸ் சாதனை. ரசிகர் மன்றங்களுக்குள் நடக்கும் முட்டல் மோதல்கள், அடிதடிகள், அற்புதம். சினிமா மோகமும், நடிகரை கடவுளாக்குவதும் அருமை. ஒரே நாளில் ஒரு நடிகையின் சமூக வலைத்தளத்தை ஆறு லட்சம் பேர் பின்தொடர்ந்தார்கள் எனில் உலக சாதனையன்றோ.

சிறுசுகளைப் பூராம் கோடீஸ்வரக் கனவு காண வைத்திருக்கிறது கிரிக்கெட் விளையாட்டு. விளையாடும்போதே கனவு கண்டுகொண்டே விளையாடுகிறார்கள். பேட்டைத் தூக்கும்போதே சிக்ஸரா, போரா என்றே எண்ணுகிறார்கள். சிக்ஸ் ஆக அடித்து, ஐபிஎல்-ல் சேர்ந்து பெரிய ஸ்டாராக வேண்டுமென குக்கிராம இளசுகள் கூட கம்மாக்கரையில் உருண்டு புரண்டு திரிகிறார்கள். வணிக உலகத்தின் விட்டில் பூச்சிகள். வேறென்ன சொல்ல.

தமிழகத்தில் சுற்றுலாத் தொழில் வேகமாக முன்னேறி வருகிறது. பெரும்பாலான நகரவாசிகளிடம் கார்கள் இருப்பதால் விடுமுறைகளில் வீட்டில் தங்குவதே இல்லை. கம்பனிகளும் ஊழியர்களை சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்கின்றன. விளைவாக, பெரும்பாலான சுற்றுலாத் தலங்கள் மிக நெருக்கடியாக இருப்பதோடு, சுகாதாரமும் பெரிய கேள்விக் குறியாகிறது. சுற்றுலாவைக் குறிவைத்து நடக்கும் கொள்ளைகள் சொல்லி மாளாது. தங்குமிடங்கள்

பகல்கொள்ளை. விற்கும் பொருட்களில் கொள்ளையோ கொள்ளை. முடிந்தவரைக்கும் முயற்சித்துப் பார்க்கிறார்கள். விவரம் தெரியாத கிராமத்து மக்களும், எளிய மக்களும் வெகுவாக ஏமாற்றப்படுகிறாாகள். 200 உரூபா பெறாத ஜெர்க்கினை 1000 உரூபா என்கிறான். எளிய மனிதர் 800 உரூபாக்கு பேரம் பேசுகிறார். கடைக்காரன் 900 என்கிறான். இறதியில் 850க்கு பேரம் படிகிறது. எளிய மனிதருக்கோ 150 குறைத்து வாங்கிவிட்டோம் எனும் திருப்தி. அயோக்கிய கடைக்காரனுக்கு?

சிறப்பு பொருளாதார மண்டலங்கள் எனும் பெயரில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தனியாருக்குத் தாரைவார்க்கப்படுகின்றன. இங்கே எதுவும் உற்பத்தி செய்யப்படுவதில்லை. சேர்க்கை மட்டுமே நடைபெறுகிறது. உலகின் பல நாடுகளிலிருந்தும் உதிரி பாகங்களை இறக்குமதி செய்து, அவற்றை ஒன்றாக்கி மறுபடியும் ஏற்றுமதி நடக்கிறது. அரசுக்கு கிடைப்பதோ கொழுத்த ஏற்றுமதி இறக்குமதி வருவாய்கள்.

இந்தியாவின் சமீபத்திய அறிவியல் சாதனைகள் அனைத்தும் விலைக்கு வாங்கப்பட்டதாகவே உள்ளன. வெளிநாட்டுத் தொழில்நுட்பங்களை இறக்குமதி செய்கிறார்கள். விதை முதல் விமானம் வரை அனைத்தும். சொந்தமாக இந்தியாவே உருவாக்கிய தொழில் நுட்பங்கள், கருவிகள் எனப் பெரிதாக இல்லை. இராணுவத் தொழில் நுட்பங்களின் முன்னோடி வெளிநாடுகள் எனில் மிகையாகாது.

பெண்களின் அழகை வைத்தும், உடைகள், நகைகள் வைத்தும் மிகப் பெரிய அளவிலான வியாபாரத் தந்திரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. பெண்களை எளிதாக ஏமாற்றி வாங்கவைத்து விடலாம்போல. லிப் ஸ்டிக், லிப் பாம், லிப் கிளாஸ், லிப் கார்ட், லிப் ஆயில், லிப் ஜெல்.. தையலரின் மெல்லிய உதட்டுக்குத்தான் எத்தனை எத்தனை பாதுகாப்பு, பகட்டு, பளபளப்பு, வசீகரம். எல்லாம் வணிகமன்றோ.

உழைக்கும் மக்களின் வாழ்க்கையைவிட, பணக்கார நடுத்தர வீட்டு நாய்கள் சுகமாய் சொகுசாய் வாழ்கின்றன. நாய்களுக்கென்றே தனியான கடைகள் இருக்கின்றன. பெரிய கடைகளிலும் நாய்களுக்கென்றே தனியான பகுதிகள் வைத்திருக்கிறார்கள். நாய் வளர்ப்பிலும் மேலை நாடுகளை நகலெடுக்கிறார்கள். நாய்களை வைத்து கொழுத்த வணிகம் நடக்கிறது. நாய்க்கான உணவுகள், சோம்பு, ஷாம்பு, மருந்துகள், அணிகலன்கள், குடில்கள், வாகனங்கள், மருந்துகள்,

உடைகள், சங்கிலிகள் என ஏராளமாய்க் கிடைக்கின்றன. தினமும் கறி சாப்பிடும் நாய்கள், கொழுத்துப் போய் வீதிகளில் உலா போகின்றன. விமானத்தில் பறக்கும் நாய்களும் இருக்கின்றன. நாய்க்கு பரிந்து பேச ஏராளமான அறிஞர்கள், அமைப்புகள், அரசு சாரா அமைப்புகள், விலங்கு நல வாரியம் உண்டு. தெரு நாய்களைக் கொல்லக் கூடாது, கருத்தடைதான் செய்ய வேண்டும் என்றதால் நகரங்களில் நாய்களின் தொல்லை பெருந்தொல்லையாகிக் கொண்டிருக்கிறது. எந்தத் தெருப் பக்கம் போனாலும் நாய்கள் கூட்டம் கூட்டமாகத் திரிகின்றன. குப்பைக்குப் போகும் உணவும், நகர்களில் திரியும் எலிகளும், பெருச்சாளிகளும், நாய்களுக்குப் பெருந்தீனியாகின்றன. நாய்கடிக்கு ஆளாகும் மனிதர்கள், குழந்தைகள் ஏராளமானோர்.

உடல்நலத் தொழிற்சாலைகள் உலகமெங்கும் நிறைந்திருக்கின்றன. உடல்நலத்தைப் பேணுங்கள் எனும் பெயரில் கொள்ளையான கொள்ளை. மருந்து நிறுவனங்களின் முகவர்கள் மருத்துவமனைகளை நிறைக்கிறார்கள். பெரியதொரு மருத்துவமனையில் பத்துக்கும் அதிகமான முகவர்கள் ஒரு மருத்துவரைப் பார்க்க வரிசையில் நிற்கிறார்கள். மருத்துவர் ஒவ்வொருவருக்கும் ஒரு நிமிடம் கொடுக்கிறார். முகவர் படபடவெனப் பொரிந்து தள்ளுகிறார். மருந்துகள் கொள்ளை விலைக்கு விற்கப்படுகின்றன. மருத்துவர்களின் பரிந்துரைக்கு ஏற்ப கமிஷனும் கொடுக்கிறார்கள். எப்படியாவது அடித்துப் பிடித்து ஒரு மருத்துவராகிவிட்டால் போதும். ஆயுளுக்கும் பணமாகக் கொட்ட வைக்கலாம். வணிகக் குறியீட்டு மருத்துகள் பெரு விலையில் விற்கப்படுகின்றன. காப்பீட்டு நிறுவன மோசடிகள் சொல்லி மாளாது. மருத்துவ உலகம், நோய் வருமுன் காக்க வேண்டும் எனும் நோக்கமில்லாது, நோய் வந்தபின் தீர்ப்பதையே ஒரே நோக்கமாகக் கொண்டு செயலாற்றுகிறது. நோய்க்குறியை கண்டறிய முடியாத மருத்துவர்கள், நோய் முற்றிய நிலையிலேயே கண்டறியக் கூடியவர்களாக, நிபுணத்துவம் பெற்றவர்களாக மாறிவிட்டனர். அதுவும் நவீன உபகரணங்கள் இன்றி எந்த மருத்துவரும் எதுவும் செய்ய முடியாது எனும் நிலைமை வந்துவிட்டது. மருத்துவத் தொழிலே இன்றைக்கு பணம் காய்க்கும் மரமாக இருப்பது கண்கூடு.

உலகமே இன்று சந்தோஷச் சந்தையாகி விட்டது. சந்தோஷமே, மகிழ்ச்சியே வாழ்வின் ஒரே குறிக்கோள். அதை அடைவதற்காக, பெறுவதற்காக, உலகினர் எது வேண்டுமானாலும் செய்யலாம் எனும் மனநிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர். சந்தோஷத்தைப் பெறும் வழிமுறையில், அனைத்து சந்தோஷங்களையும் இழந்து

விடுவது கடைசியில்தான் தெரிகிறது. காலம் கடந்து தெரிவதில் என்னாகப் போகிறது? பணம் சம்பாதித்தால் அனைத்து மகிழ்ச்சியும் தானாக வந்துவிடும் என பணம் சம்பாதிப்பதையே முக்கியக் குறிக்கோளாகச் கொண்டு செயலாற்றுகிறார்கள். அல்லும் பகலும் உழைக்கிறார்கள். நாற்பது வயதிற்குள்ளேயே கோடிக் கணக்கில் சம்பாதித்து விடுகிறார்கள். இனிமேல் என்றும் மகிழ்ச்சிதான் என வாழத் தலைப்படும்போது, உடல்நலப் பிரச்சினை ஒன்றன்பின் ஒன்றாகப் படையெடுக்கிறது. சம்பாதித்த அத்தனை பணமும் போய், உடல் நலமும் போய், ஒட்டு மொத்த வாழ்க்கையும் மகிழ்ச்சியற்றதாக மாறிவிடுகிறது. சந்தோஷம் பொருள்களில், பணத்தில், பெண்ணில், மதுவில், விளையாட்டில், ஊர் சுற்றுவதில் இருப்பதாய் உலகம் எண்ணுகிறதே தவிர, மனதில், போதுமென்ற எண்ணத்தில், சமூகமாக ஒன்றிணைந்து வாழ்வதில் இருப்பதை அறியவில்லை. அறியவில்லை என்பதைவிட, வணிக உலகம் அறியவிடுவதில்லை என்பதே மெய். பேசுவதற்கு வந்த அலைபேசி. பின்னர் பாட்டுக் கேட்க, அதன் பின்னர் புகைப்படம் எடுக்க, படம் பார்க்க, கணினியாகப் பயன்பட்டது போய், தற்போதோ அனைத்திற்கும் அலைபேசியே எனும் நிலை வந்துவிடடது. பெரிய நவீன அலைபேசியே மனிதர்களுக்கு அதிகமான மகிழ்ச்சியைக் கொடுப்பதாக இருக்கிறது. உண்மையில் மகிழ்ச்சியைக் கொடுக்கிறதா எனில் அதுதான் இல்லை. யாரிடமாவது லேட்டஸ்ட்டான அலைபேசி இருப்பதைப் பார்த்துவிட்டால் இருக்கும் அத்தனை மகிழ்ச்சியும் காணாமல் போய்விடுகிறது. அது போன்ற லேட்டஸ்ட் அலைபேசியை வாங்க அடுத்த ஓட்டத்திற்குத் தயாராகிறார்கள். மகிழ்ச்சிக்கான ஓட்டங்கள் ஒரு போதும் நிற்கப் போவதில்லை. ஏன் ஓடுகிறோம், எதை நோக்கி ஓடுகிறோம், எதற்காக ஓடுகிறோம், எப்படி ஓடுகிறோம், யாரைப் பார்த்து ஓடுகிறோம், இலக்கு என்ன என்பதை என்றைக்கு அறிவரோ.

சந்தோஷச் சந்தைகளில் மக்கள் அனைத்தையும் விற்கிறார்கள். அனைத்தையும் வாங்குகிறார்கள். கனவுகளை, காதலை, காமத்தை, அன்பை, வீரத்தை, உடல் நலத்தை, அனைத்தையும் விற்கிறார்கள், வாங்குகிறார்கள். எல்லோரும் சந்தோஷ வியாபாரிகள். சந்தோஷச் தொழிற்சாலைகளிலிருந்து, சந்தோஷப் பொருட்கள், சந்தோஷச் சந்தைகளில் நிறைக்கப்படுகின்றன. இன்னும், இன்னும், இன்னும் என மக்கள் சந்தோஷப் பொருள்களை வாங்கிக் குவிக்கிறார்கள். சந்தோஷ வியாபாரிகளுக்கு லாபமோ லாபம். மக்களுக்கு?

தனியார் என்றால் தரமானது என்றும் அரசுடையது என்றால் தரமற்றது என்றும் மக்கள் மனங்களில் ஆழப் பதிந்துவிட்டது. அரசு சார்ந்த எதுவும், மருத்துவமனை, பேருந்துகள், உணவுப் பொருட்கள் போன்ற எதுவுமே தரமில்லாது இருப்பதும், மக்களின் எண்ணத்திற்கு வலு சேர்ப்பதாகவே இருக்கிறது. அரசுகள் வரிவசூலித்தால் போதும் என்றே செயல்படுகின்றன. எந்தத் திட்டத்தை செயல்படுத்துவது குறித்தும், முழுமையான திட்டமிடலோ, அறிவுப் பூர்வமான ஆய்வுகளோ நடப்பதே இல்லை. மக்களை மயக்கும் ஜனரஞ்சகமான திட்டங்கள், உபயோகமில்லாத திட்டங்கள், பெயரளவுக்கான திட்டங்கள், விளம்பரத்திற்காக திட்டங்களை, தேர்தல்களை மனதில் வைத்தே செயல்படுத்தப்படும் திட்டங்கள் என அனைத்துத் திட்டங்களுமே அரசியலுக்காகவே செயல்படுத்தப்படுகின்றன. மக்கள் நலன், எதிர்கால நன்மை போன்ற எதுவும் சிந்திக்கப்படுவதில்லை.

அரசுகளிடம் எந்தவிதமான உற்பத்தி முறைகளும் இல்லை. அரசுகள் எதையும் உற்பத்தி பண்ணுவதில்லை. முதலாளிகள் பொருட்களை உற்பத்தி பண்ணுகிறார்கள். அரசு முதலாளிகளுக்கு ஏராளமான சலுகைகளை வாரி இறைக்கிறது. எவ்வளவு வேண்டுமானாலும் தண்ணீர், இருபத்திநாலு மணி நேரமும் தடையில்லா மின்சாரம், முக்கிய சாலையில் அருகே பரந்த நிலம், துறைமுகங்களோடு இணைப்பு, சுற்றுச்சூழல் தடையின்மை எனப் பல வழிகளிலும் அரசு தொழில் துறையை ஊக்குவிக்கிறது. உற்பத்தியாகும் பொருட்கள் வியாபாரிகளால் விற்கப்படுகின்றன. வியாபாரிகளிடமிருந்து பெயருக்கு கொஞ்சம் வரியாகக் கிடைக்கிறது. வரியைக் கொண்டு, அதே வியாபாரியிடம் பொருட்களை வாங்கி, மக்களுக்கு விலையில்லாப் பொருளாக தாயுள்ளத்தோடு, தந்தையுள்ளத்தோடு அள்ளி அள்ளிக் கொடுக்கிறது அரசு. இலவசப் பொருட்களையாவது உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாக வாங்குகிறதா எனில் அதுதான் இல்லை. எல்லாம் பகல் கொள்ளை. வெளி வேஷம். கபட நாடகம். வியாபாரியிடமிருந்து பொருட்களை வாங்குவதற்கு இடைத்தரகர்கள், இடை நிறுவனங்கள் உண்டு. எல்லாம் அதிகார வர்க்கங்களின் உறவுகள், பினாமிகள். முட்டையை பண்ணைகளிலிருந்து நேரடியாக அரசு வாங்காது. அரசு சார்ந்த எத்தனையோ அலுவலர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு என்ன வேலை என யாரும் கேள்வி கேட்க முடியாது. கேட்டால் வழக்கு பாயும். லாக்கப் மரணம் நிகழும். ஜெயிலில் மின்சாரப் பெட்டி திறந்தே கிடக்கும். மீறி ஏதேனும் எதிர்ப்போ, ஊர்வலமோ எழுப்பினால் லத்திகள் உடையும், ரவைகள் மார்பைத் துளைக்கும்.

மக்கள் அரசுகள், மக்களாட்சி அரசுகள், மக்களுக்காகவே நடத்தப்படும் அரசுகள். மக்களே எசமானர்கள். வெள்ளைக்காரன் தெய்வம். அவனாவது வானத்தை பார்த்துச் சுட்டான். தடியால் அடித்தான். முட்டிக்குக் கீழே சுட்டான். மக்களாட்சி அரசுகளோ முதுகில் சுடுகின்றன.

பண்ணைகளிலிருந்து முட்டைகளை தனியார் நிறுவனம் வாங்குகிறது. தனியார் நிறுவனத்திடமிருந்து அரசு மொத்தமாகக் கொள்முதல் செய்கிறது. தனியார் நிறுவனம் தொடங்கப்பட்டதே இப்படி முட்டைகளை கொள்முதல் செய்து அரசுக்கு விற்பதற்காகவே. அதற்கேற்ப சட்டங்கள், ஒப்பந்தப் புள்ளிகள் வளைக்கப்படுகின்றன. கோடிகோடியாக மக்கள் பணம் கொள்ளையடிக்கப்படுகிறது. அரசு பருப்பு வாங்காது. கம்பனிக்காரன் வாங்கியோ, வெளி மாநிலம், வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தோ கொடுப்பான். கம்பனியிடமிருந்து அரசு கூடுதல்விலை கொடுத்து வாங்கும். அரசு, பருப்பு வாங்கத் திட்டமிடுகிறது எனத் தெரிந்த உடனேயே, புதியதொரு கம்பனி முளைக்கும். மிகச் சரியாக அந்தக் கம்பனிக்கே ஒப்பந்தமும் கிடைக்கும்.

ஏன் அரசு ஒரு பொருளையும் உற்பத்தி பண்ணுவதில்லை? எத்தனை கோடி மிதிவண்டிகளை அரசு வழங்கியது? ஏன் ஒரு மிதிவண்டி தொழிற்சாலைகூட அரசிடம் இல்லை? அரசு நினைத்தால் மிதிவண்டிணை உற்பத்தி செய்வது கடினமா? இத்தனை இலக்கம் பொறியாளர்கள் நிறைந்திருக்கும் தமிழ்நாட்டில், ஒரு மிதிவண்டி கூடவா உற்பத்தி செய்ய முடியாது? முடியாது எனில், நுட்பம் தெரியாதெனில், எதற்கு இத்தனை பொறியியல் நுட்பக் கல்லூரிகள், பொறியாளர் படிப்புகள், பட்டங்கள்.

மிதிவண்டி முதலாளிகளால், சிறுவர்களைக் குறிவைத்து கொள்ளை விலையில் மிதிவண்டிகள் விற்கப்படுகின்றன. சிறுவர்கள் ஆசைப்படுகிறார்களே என பெரியவர்களும் அநியாய விலைக்கு வயிற்றெரிச்சலோடு வாங்கித் தருகிறார்கள். இரு சக்கரமும், முக்கோணப் கம்பியும், கைப்பிடியும் போதும். கடைகளில் விற்கப்படும் விலையோ சொல்லி மாளாது. வெளிநாட்டுக்காரன் ஒரு இலக்கத்துக்கு சைக்கிள் வாங்குவான். நமக்கு எதற்கு அந்த சைக்கிள். சைக்கிளின் டயர் டிராக்டரின் டயரைவிடப் பெரிதாக இருக்கிறது. சாலைகள் அறுத்தெடுக்கப்பட்டு, எங்கும் மேடும் பள்ளமுமாகக் கிடக்கின்றன. அரசு, சாலையை அறுத்து வயர் பதிக்கும் கம்பனி, ஒழுங்காக சாலையை செப்பனிடுகிறாதா, சமமாக

சாலையைப் போடுகிறதா, மேடுபள்ளமில்லாமல் சரிசெய்யப்பட்டிருக்கிறதா என்பதையெல்லாம் ஒழுங்காகக் சோதிப்பதில்லை. அரசு எப்படி நடு மையத்தில் சாலையை வெட்டி கேபிள் அமைக்க ஒப்புக் கொள்கிறது? காரில் போகிறவர் போய்விடுவார். இருசக்கரவாகன ஓட்டிகள் நிலை?

அரசு ஏன் தரமான மிதிவண்டிகளைத் தயாரித்து மக்களுக்கு விற்கக் கூடாது? அரசு எதையுமே உற்பத்தி செய்யக்கூடாது எனச் சட்டம் இருக்கிறதா? மேலை நாடுகள் எது செய்தாலும் அதை அப்படியே நகலெடுக்க வேண்டுமா?

360 பியூன் வேலைக்கு 23 லட்சம் பேர் விண்ணப்பம் செய்கிறார்கள். பொறியியல் படித்தவர்களும் ஏராளமானோர் உண்டு. ஒரு சைக்கில் உற்பத்தி தொழிற்சாலையோ, மிக்சி, கிரைண்டர், மின்விசிறி, கணினி, ஸ்கூட்டர், தொலைக்காட்சி தயாரிக்கும் தொழிற்சாலைகளையோ அரசு தொடங்கியிருந்தால், தொடங்கினால், குறைந்த பட்சம் பொறியாளர்களுக்காவது நல்ல வேலை கிடைக்குமே. அரசு நிறுவனம் நட்டத்தில் இயக்குகின்றனவாம். யார் காரணம்? முறையான திட்டமிடல் இல்லாதது, முடிவெடுப்பதில் மிகுந்த தாமதமாவது, அரசியல் தலையீடு, இவைதானே காரணம். இயந்திரத்தில் ஒரு சிறிய நட்டு கழன்று போனால்கூட, கண்காணிப்பாளர், மேலாளர், மேலதிகாரி, கூடுதல் மேலதிகாரி, பெரிய மேலதிகாரி, அவருக்கும் பெரிய மேலதிகாரி, கீழ் செயலர், இணைச் செயலர், செயலர், அமைச்சர், முதலமைச்சர் எனப் போக வைத்தது, வைப்பது யார்? நட்டு மாட்டலாம், நட்டுக்கான தொகை ஒரு உரூபாயைத் தாண்டக் கூடாது என உத்தரவு வருவதற்குள், இயந்திரத்தின் பேரிங் துருப்பிடித்துப் போய்விடுகிறது. பேரிங் துருப்பிடித்துவிட்டது என மேல் மட்டங்களுக்கு தகவல் அனுப்பி காத்திருந்தால், இயந்திரமே துருவேறிவிடுகிறது. யார் காரணம்? அரசுத் துறைகள் நட்டமாவதற்கு காரணம் யார்? காரணங்கள் எவை எவை? அரசுத் துறைகள் அனைத்திலும் கூட்டுக் கொள்ளை. கூட்டணிக் கொள்ளை. பேருந்து நிறுவனங்கள் ஏன் நட்டமடைகின்றன என எழுதித் தீருமா?

அரசு முடிவெடுத்தால், மக்கள் மனது வைத்தால், வரியே இல்லாத பட்ஜெட் போடலாமே. விவசாயத்தில் மட்டும் ஜீரோ பட்ஜெட் அல்ல, நாட்டுக்கே போடலாம். அதெல்லாம் வேண்டாமெனில், வணிகவரியை மட்டும் முறைப்படுத்தினாலே போதுமே. ஏன் முடியவில்லை? அரசுகள் எந்த முடிவு எடுத்தாலும் பாதிப்பவர் யார், லாபமடைபவர் யார், எத்தனை ஓட்டு கூடும், குறையும் என கூட்டிக் கழித்து,

அதற்கேற்பவே திட்டங்களை வகுக்கிறது. மக்கள் யார்? தொழிலதிபர்கள் யார்? தொழிலாளர்கள், விவசாயிகள், வியாபாரிகள் யார்? நெசவாளர்கள், மீனவர்கள், கல்வியாளர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் யார்? சினிமாக்காரர்கள், எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள், அனைவரும் மக்கள் தானே. ஏன் எல்லோரும் மகிழ்ச்சியாக வாழும் சூழலை அரசுகள் ஏற்படுத்தவில்லை? ஏற்படுத்தத் தவறின? மக்கள் ஏமாற்றப்படுவதை அரசு ஏன் அனுமதிக்கிறது? வேடிக்கை பார்க்கிறது? அரசு மதுபானக் கடைகளிலேயே கூடுதல் விலைக்கு மதுபானங்கள் விற்கப்படுவது எப்படி? மதுபானங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் சில்லறை விற்பனைக்குக் கிடைப்பது எப்படி? 47000 உருபா மதிப்புள்ள அலைபேசி தள்ளுபடி விலையில் 31990 உருபாக்கு விற்பதாக முழுப்பக்க விளம்பரங்கள் செய்திதாள்களில் வெளியிடப்படுகின்றன. அதெப்படி இவ்வளவு குறைந்து ஒரு பொருளை விற்க முடியும்? இவ்வளவு குறைத்து விற்றாலும் லாபம் வருகிறதுதானே. நட்டத்திற்கு யாரும் பொருளை விற்கமாட்டார்களல்லவா? அப்படியெனில், பொருளின் உண்மையான விலைதான் என்ன? அதை உற்பத்தி செய்வதற்கு எவ்வளவு செலவாகிறது? போலியான பொருளெனில் விற்பதற்கு, விளம்பரம் செய்வதற்கு அரசு எப்படி அனுமதிக்கிறது?

மழைநீரைச் சேமிப்பதை விட்டு விட்டு, நிலத்தடி நீரைப் பாதுகாப்பதை மறந்து விட்டு, தினமும் ஒரு கோடி லிட்டர் கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தை அரசு செயல்படுத்த விரும்புவதன் நோக்கம் என்னவாக இருக்கும்? 50,000 கோடி வெளிநாட்டுக் கடன்களில் இப்படியொரு திட்டத்தைச் செயல்படுத்த அரசுகள் முனைப்புக் காட்டுவது மக்களின் தாகத்தைத் தணிக்கவா அல்லது வேறு சிலரின் பெருந்தாகத்தை தீர்க்கவா? ஒரு இலக்கம் கோடிகள் இருந்தாலும், அன்னார்களின் தாகம் தீருமா? இந்தியாவின் மொத்தச் செல்வத்தையும் தின்று தீர்ப்பது வெறும் சில ஆயிரம் பேர்களல்லவா? உலகின் ஒட்டுமொத்த வளத்தையும் சொந்தமாக்கி வைத்திருப்பது சில இலக்கங்களல்லவா. ஒரு சதவீதத்திற்கும் குறைவே உலகம் முழுவதையும் சொந்தமாக்கி வைத்திருக்கிறது. மீதி தொன்னூற்றி ஒன்பது எப்படி வாழ்க்கையை ஓட்டுகிறது?

தமிழகத்தில் பெரியதும் சிறியதுமாக 33 ஆறுகள், 15000 ஏரிகள், 71 நீர்த்தேக்கங்கள், 40319 குளங்கள், 21205 குட்டைகள், 2395 கால்வாய்கள் இருப்பதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இவை தவிர இலக்கக்கணக்கில் கிணறுகள் உள்ளன. ஆழ்துளைக் கிணறுகள் எண்ணிக்கையற்று

போடப்பட்டுள்ளன. மழையும் ஓரளவிற்கு நன்றாகவே பெய்கிறது. இவ்வளவு நீராதாரங்கள் இருந்தும், நீரைச் சேமிக்க இவ்வளவு வசதிகள் வைத்திருந்தும், மக்கள் குடிநீருக்காக சாலைகளை மறிக்க வேண்டிய அவலம் நிகழ்வதெப்படி? தெருவில் நின்று எவ்வளவுதான் கத்தினாலும் அரசுகள் காதில் விழுவதில்லை. சாலைக்குப் போனால்தான் கொஞ்சமாவது அரசின் செவிகளுக்குப் போகும் எனும் நிலை வந்துவிட்டது. சாலைகளை மறித்தால் காவல்துறையே வருகிறது. காவல்துறைக்கும் குடிநீர்த் துறைக்கும் என்ன சம்பந்தம்? காவலர்களே பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள். மக்கள் உடன்படவில்லையெனில் மிருகத்தனமாக அடிப்பதும் நடக்கிறது. தண்ணீரும் கிடைக்காமல், அடியும் உதையும் வாங்கி வழக்குகளையும் சந்திக்க வேண்டி வருகிறது.

திராவிடக் கட்சிகளுக்கு நீராதாரத்தைப் பெருக்குவதற்கு எங்கே நேரமிருந்தது. மாறிமாறி ஆட்சிக்கு வந்தும் ஒருவரையொருவர் வசைபாடுவதிலேயே காலம் கழிந்துவிட்டது. இருக்கின்ற நீராதாரங்களையாவது பாதுகாத்தார்களா எனில் அதுவும் இல்லை. முதலில் ஆக்கிரமிக்கப்பட்டது குட்டைகள். அடுத்து குளங்கள். தொடர்ந்து கண்மாய்கள். ஏரிகளையும் விட்டு வைக்கவில்லை.

யாம் கோயம்புத்தூர் வந்த புதிதில் ஒண்டிப்புதூர் நெசவாளர் காலனி தாண்டி, ஒரு தோட்டத்தின் தென்னை மரங்களின் நிழலில் உட்கார்ந்து படிப்பதை வழக்கமாக வைத்திருந்தோம். மதங்கள் மற்றும் தத்துவவியல் தொலைநிலையில் பயின்றதால் அது தொடர்பாக படிப்பதற்கு, குறிப்புகள் எழுதுவதற்கு சனி, ஞாயிறுகளில் அந்த தோட்டத்திற்கு செல்வதுண்டு. 2008 ஆரம்ப மாதங்கள் வரை, கழிவுநீர் வாய்க்கால் தாண்டி ஒரு சில வீடுகளே இருந்தன. அனைத்தும் வயல்கள். மக்காச் சோளமும் சூரியகாந்தியும் போட்டிருந்தார்கள். ஆறுமாதங்களில் முதலாவதாக சில ஏக்கர் நிலத்தில் பிளாட் போட்டார்கள். பிளாட் போடுவது அதிகரித்துக் கொண்டே வந்தது. கிழக்குப் பக்கம் புதர்காடுகளாகவும் குட்டையாகவும் கிடந்தது. மழைநீரெல்லாம் அந்தக் குட்டையில்தான் தேங்கி கிடந்தது. குட்டையின் ஓரங்களில் சில குடிசைகள் இருந்தன.

ஓரிரு வருடங்களில் புதர்காடுகள் முழுமையாக அகற்றப்பட்டு, குளத்தை மூடிவிட்டார்கள். எந்த அரசியல்வாதி பிளாட் போட்டு விற்றாரோ, மொத்த பகுதியும் பிளாட்களாக பிரிக்கப்பட்டன. ரோடு போட்டார்கள். தெரு விளக்கு வந்தது.

ஏற்கனவே வயல்களில் பிளாட் போட்டவர்கள் வீடு கட்ட ஆரம்பித்தார்கள். திருச்சி சாலைக்கு அருகிலிருப்பதைப் பயன்படுத்தி பெரிய பெரிய கட்டுமான நிறுவனங்கள் குடியிறுப்புகள் கட்டினார்கள். 2008 இல் காடாகக் கிடந்தது, 2009 இல் வீட்டு மனைகளாக மாறியது, தற்போது கோயம்புத்தூரிலேயே மிகப் பெரிய நகர்ப்பகுதியாக மாறிவிட்டது. பள்ளமாகக் கிடந்த குட்டையில்தான் ஏராளமானோர் அடுக்குமாடிகள் கட்டியிருக்கிறார்கள். எம்மை ஒருமுறை ஒரு வீட்டுத்தரகர் அழைத்துப்போய் முன்னால் குட்டையில் பிரிக்கப்பட்டிருந்த வீட்டுமனையைக் காட்டினார். ஒரு சென்ட் ஐந்து இலக்கம் எனவும், முதலாளியிடம் பேரம் பேசினால் நாலரைக்குள் முடித்துவிடலாம் எனவும் கூறினார். முதலாளி திருச்சியில் இருப்பதாக அலைபேசி கொடுத்தார். திருச்சியில் இருப்பவருக்கு கோயம்புத்தூர் குட்டையில் பிரிக்கப்பட்ட பிளாட் எப்படி சொந்தமானதோ தெரியவில்லை.

நண்பர்களே.. நாம் காடுகளை அழித்துவிட்டு, மரங்களை வெட்டி விட்டு, ஏரி குளங்களை மண் மேடாக்கிவிட்டு, ஆறுகளைத் தூர்த்துவிட்டு, மலைகளை விற்றுவிட்டு, நிலங்களை நஞ்சாக்கிவிட்டு, வறட்சி வரி போடுகிறோம். வறட்சி வரியாவது அரசு ஒழுங்காக வசூலித்து உரியவர்களிடம் சேர்க்குமா தோழர்களே?

கிராமங்களில் விவசாயம் பண்ணவே முடியாத நிலை. வடக்கத்திக்காரர்களே இனி விவசாய வேலைக்கும் எனும் நிலை வந்துவிட்டது. படித்துவிட்டால் சிறிதுகூட உடல் உழைப்பு செய்யக்கூடாது எனும் அரிய கண்டுபிடிப்பை எவர் நிகழ்த்தியதெனத் தெரியவில்லை. உலகமெங்கும் கருப்பினர் என்றால் இந்தியாவெங்கும் இந்திக்காரர்களே மாடாக உழைக்கிறார்கள். ஒரு சிலர் திருடர்களாகவும், கொலைகாரர்களாகவும் இருப்பதால், ஒட்டு மொத்த வடக்கத்தியர் மேலும் அவநம்பிக்கை விழுகிறது. வரைமுறையில்லாமல் அந்த எளிய மக்களின் உழைப்பு சுரண்டப்படுகிறது. கோயம்புத்தூரின் பந்தயச் சாலையில் கட்டப்படும் கட்டிடங்களிலேயே காலைமுதல் இரவுவரை வேலை வாங்கப்படுகிறார்களெனில், மற்ற பகுதிகளில் எப்படி இருக்கும்?. தொழிலாளருக்கென்று எவ்வளவோ சட்டங்கள் இருக்கின்றன. சட்டங்கள் இருந்து என்ன பயன்? இரவு ஒன்பது பத்து மணிக்குக்கூட மாடிகளில் வேலை செய்வதைப் பார்க்க முடிகிறது. முதலாளிகளுக்கு சொன்ன தேதியில் கட்டி முடிக்கப்படவேண்டுமல்லவா. இரவெல்லாம் கட்டிட வேலைகள் நடக்கின்றன. அவர்களும் மனிதர்கள் தானே. சம்பளமும் குறைவு. தங்குமிடங்கள் கிஞ்சித்தும்

வசதியில்லை. ஆபத்தான வேலைகள். தமிழர்கள் எல்லாம் இதே போன்ற நிலையில் அரபு நாடுகளில் வாடிவதங்குகிறார்கள். இங்கே வடக்கத்திய மக்கள்.

உலகமே ஒன்றாகி வருகிறது. உலகினர் அத்தனை பேரையும் பேராசையும் பெருவிருப்பும் பித்தம் கொள்ள வைக்கிறது. மனிதர்கள் வாழ்க்கையே வீடு, கார், நகை, சுற்றிப் பார்ப்பது என்றளவில் சுருங்கிவிட்டது. மனிதர்களின் பெருங்கனவே வேலை பார்த்து சொந்தமாக வீடு கட்டவேண்டும், வாகனம் வாங்கவேண்டும் என்பதாக மாறிவிட்டது. எல்லோரும் மிக மிக வசதியான வாழ்க்கை வாழவே ஆசைப்படுகிறார்கள். எல்லோருக்கும் மகாராஜா, மகாராணியாக இருக்க வேண்டும், அரச சம்போகங்களை அனுபவிக்க வேண்டும், ஆயிரமாயிரம் பணியாளர்கள் இருக்க வேண்டுமெனும் ஆசை வந்துவிட்டது. ஆசையை எப்படியாவது, என்ன விலை கொடுத்தாவது அடைய நினைக்கிறார்கள். எப்படியாவது வெற்றி என்பதே தற்போதைய உலகின் தாரக மந்திரமாகிவிட்டது. எப்படியாவது வெற்றி. எப்போதும் வெற்றி. குறுக்கு வழிகளில், தவறான வழிகளில் நுழைகிறார்கள். அரசியல்வாதிகளுக்கு எப்படியாவது ஜெயிக்க வேண்டும், ஆட்சிக் கட்டிலில் எப்படியாவது அமரவேண்டும். நிறுவனங்களுக்கு எப்படியாவது லாபம் ஈட்ட வேண்டும். மாணவர்களுக்கு எப்படியாவது தேர்வாக வேண்டும். விளையாட்டு வீரர்களுக்கு எப்படியாவது வென்றாக வேண்டும். விளையாட்டுகளில் எவ்வளவு கோல்மால்கள், ஏமாற்றுகள், ஊக்க மருந்துகள், சண்டைகள். எப்படியாவது பணம் சேர்த்தாக வேண்டும். எப்படியாவது பணக்காரனாக வேண்டும்.

உலகம் போகும் போக்கு, செல்லும் பாதை, போகும் பயணம் சரிதானா என்பதை அறிவில் சிறந்தவர்களும், அறிஞர்களும், ஆசிரியர்களும், நல்ல உள்ளம் கொண்டோரும், நியாயமுள்ளவரும், நீதியுள்ளவரும், பிராமணர்களும், பிள்ளைமார்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாம் எங்கே போகிறோம், நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது, உலகம் எதை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறது, தமிழர் என்ன செய்யப் போகிறோம் என்பதை சிந்தித்துச் செயலாற்றும் கால கட்டம் வந்துவிட்டது தோழமைகளே.

எவ்வளவு சொன்னாலும், எழுதினாலும், தற்போதைய உலகத்தை முழுமையாகக் காட்டிவிட முடியாது நண்பர்களே. தமிழகம் போல்தான், தமிழகத்தின் பிரச்சினைகள், சவால்கள் போல்தான், இந்தியாவிற்கும் இருக்கின்றன. இந்தியா போன்றே அனைத்து நாடுகளும் எந்தத் திசையில்

பயணிப்பது எனத் தெரியாமல் குழப்பத்தில் சிக்கியுள்ளன. தனியார்மயம் பெரும் ஊழல்களிலும் பேராசைக்குள்ளும் மனிதர்களைத் தள்ளி விட்டுவிட்டது. பொதுத்துறை எனில் தேக்கமும், அலட்சியமும் வருகிறது. வளர்ச்சி தடைபடுகிறது. இரண்டையும் சமப்படுத்தத் தெரியாமல், எதிலெல்லாம் தனியார்மயம், எதெல்லாம் அரசு மயம் எனப் பாகுபடுத்தத் தெரியாமல், நாடுகள் குழம்புகின்றன. இந்தியா போன்ற ஊழலில் திளைத்துள்ள நாட்டில், அதுவும் மருத்துவத்துறையில் பகல்கொள்ளை நிலவும் தேசத்தில், உறுப்பு மாற்று சிகிச்சையை அரசு முன்னெடுப்பது, எதில் போய் முடியும் எனத் தெரியவில்லை. சமீபமாக மூளைச் சாவு எனும் பெயரில், பெருங்கூத்துகள் அரங்கேறி வருகின்றன. உறுப்பை தானம் செய்யுங்கள், உயிர்களைக் காப்பாற்றுங்கள் எனப் பிரச்சாரம் முன்னெடுக்கப்படுகிறது. இதில் மிக அதீதமான மோசடிகள் நிகழப்போகின்றன. தமிழக உடல் உறுப்பு மாற்று சிகிச்சை ஆணையத்தின் படி, 2015 வரை 687 மனிதர்களிடமிருந்து 3775 உறுப்புகள் பெறப்பட்டுள்ளன. மருத்துவத் தொழில் முற்றிலும் வணிகமயமாகிவிட்ட சூழலில், தனியார் மருத்துவமனைகள் நினைத்தால் எது வேண்டுமானாலும் செய்ய முடியும் எனும் நிலையில், மூளைச் சாவு எனும் பெயரில் உறுப்புகள் திருடப்படுவது பெருங்குற்றமாகும். மூளைச்சாவு என்கிறார்கள். மூளை செத்தால் இதயம் எப்படி துடிக்கும்? ஈரல் எப்படி வேலை செய்யும்? சிறுநீரகம் எப்படி சுத்திகரிக்கும்? விபத்து எனப் போனாலே, மூளைச்சாவு பற்றி பேச ஆரம்பித்துவிடுகிறார்கள். பணக்காரன் எப்படி வேண்டுமானாலும் வாழ்வான், எதை வேண்டுமானாலும் குடிப்பான். உறுப்பு கெட்டுப் போய்விட்டால் ஒன்றும் கவலையில்லை. எவருடைய இதயத்தையாவது, கல்லீரலையாவது வாங்கி பொருத்திக் கொள்வான். அவசரத்துக்குக் கிடைக்கவில்லையெனில் பணக்காரனே ஏற்பாடு செய்து கொள்வான். பணம் கொடுத்து எதை வேண்டுமானாலும் சாதிக்க முடியும் எனும் நாட்டில், இருதயமும், ஈரலும் கிடைப்பதா கடினம். எத்தனை மருத்துவர் எத்தனை மருத்துவமனைகள் அறத்தோடு செயல்படுகிறார்கள்? செயல்படுகின்றன?

மேலை நாட்டின் விற்பனைக் கலாச்சாரத்தை இந்தியாவில் இறக்குமதி பண்ணி, இந்தியாவையே காகித, பிளாஸ்டிக், அட்டைப்பெட்டி குப்பையாக மாற்றிவிட்டோம். ஒரு ஒரே இனிப்பு வாங்கினால் அதை எவ்வளவு நளினமாக பேக் செய்து, அட்டைப்பெட்டிக்குள் அடைத்து, பையில் போட்டு அழகாகத் தருகிறார்கள்? இனிப்பை வாயில் போட்டுவிட்டு, அது அத்தனையும் குப்பைக்குத்தானே போகிறது

நண்பர்களே. எதற்கு இவ்வளவு பேக்கிங்? இவ்வளவு அழகுணர்ச்சி? இவ்வளவு உழைப்பு? உண்மையில் இனிப்பைவிட, அதை பேக் செய்து கொடுப்பதற்கு செலவு அதிகமாகும்போல. அட்டை பலப்பல வண்ணங்களில் இருக்கிறது. அத்தனையும் சாயம். அவ்வளவும் பூமிக்கே.

பள்ளியொன்றில் நூறு கிலோ உப்பைக் கொண்டு கோலம் போட்டார்களாம். செய்தியை புகழ்ந்து தள்ளியிருக்கிறது பத்திரிக்கை. இதில் புகழ்வதற்கு என்ன இருக்கிறது? உணவுப் பொருளை வீணாக்குவது அறிவாகுமா? உப்பளத்தில் எவ்வளவு கடின வேலை செய்து தொழிலாளர்கள் உப்பை விளைவிக்கிறார்கள்? இப்படி வீணாக்கலாமா? உப்போடு கலர் பொடியும் சேர்த்து கோலம் போட்டால், அதை மறுபடியும் பயன்படுத்த முடியுமா என ஆசிரியர்கள் சிந்தித்திருக்க வேண்டாமா? நாளிதழாவது பாராட்டுவதற்கு முன்னர், 100 கிலோ உப்பை வீணாக்கலாமா என அறிவுரை சொல்லியிருக்க வேண்டுமல்லவா? தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் விளையாட்டு எனும் பெயரில் லிட்டர் லிட்டராக அரிசி மாவை தலையில் கொட்டி வீணாக்குகிறார்கள். தமிழர்கள் சிரிப்பாய் சிரிக்கிறார்கள். நன்றாகச் சிரியுங்கள் தமிழர்களே. பசியறியா தமிழர்களாகி விட்டோம். நம் முன்னோர் கைப்பிடி உணவு கிடைக்காமல் இலக்கக் கணக்கில் செத்து மடிந்ததை நினைவூட்ட ஆள் இல்லை. மனிதர்கள் ஒரு வேளை பசி தாங்காதவர்களாக மாறிக் கொண்டு வருகிறார்கள். நீராதாரம் குறைந்து கொண்டே வருகிறது. வயல்கள் சுருங்கிக்கொண்டே போகின்றன. அரிசிக்கு வெளிமாநிலங்களை நம்பி தமிழகம் இருக்கிறது. பணம் பசி தீர்க்காது தமிழர்களே. இப்போது வரும் பணத்தை கழுதை கூட தின்னாது என்பதை மனதில் கொள்ளுங்கள்.

தமிழக அரசு கடனாளியாக, மேலும் கடனாளியாக, மேலும் மேலும் கடனாளியாக போய்க் கொண்டே இருக்கிறது. மக்களோ செல்வந்தர்களாக, மேலும் மேலும் பணக்காரர்களாக, கூடுதல் செல்வந்தர்களாக ஆகிக் கொண்டே இருக்கிறார்கள். இதென்ன வினோதம் நண்பர்களே.. கோடீஸ்வரர்கள் பெருகிக் கொண்டே இருக்கிறார்கள். ஒரே நாளில் 1000 கோடிக்கு நகை விற்கிறது. மின்சாரம் கொடுக்கும் அரசுக்கு ஒன்றரை இலக்கம் கோடி கடன். வியாபார நிறுவனங்கள் மின்னொளியில் எப்படியெல்லாம் ஜொலிக்கின்றன என்பதைப் பார்க்கிறோமல்லவா.

விளைபொருட்களில் அதீதமான பூச்சிக் கொல்லிகள், மருந்துகள் தெளிக்கப்பட்டு, உணவும் மண்ணும் நஞ்சாகி வருகிறது. சந்தேகமிருந்தால் வாழை

மண்டிகளுக்கு வரும் வாழை இலைகளை முகர்ந்து பாருங்கள் நண்பர்களே. வாழை இலை வாங்க நிற்கிறோம். கடைகாரர் வாழை இலைக் கட்டை அறுத்து, இலைக் கூட்டைத் திறக்கிறார். பூச்சிக் கொல்லி நாற்றம் சகிக்கவில்லை. வாழை இலையில் இவ்வளவு நெடி இருந்தால் மண்ணில் எவ்வளவு இருக்கும்? உண்ணும் வாழைப்பழத்தில் எவ்வளவு கலந்திருக்கும்?

நாம் வாழும் கணினிக் காலத்திய மனிதர்கள், தனி மனித மகிழ்ச்சிக்கே முதன்மை இடம் கொடுக்கிறார்களேயொழிய, சமூக நலன், சமூக அக்கறை, சமூகநீதி குறித்தெல்லாம் சிந்திப்பதுபோல் தெரியவில்லை. படித்தவர் தானும் தனது குடும்பமும், நன்றாக இருந்தால் போதுமென நினைக்கிறார். சிலர் கூடுதலாக தனது சாதிக்காரரும், மதத்துக்காரரும் நன்றாக இருந்தால் போதுமெனச் செயல்படுகிறார். ஒட்டு மொத்த மனிதகுலமும் மகிழ்ச்சியாக ஒற்றுமையாக வாழவேண்டுமென நினைப்பவர்கள் அரிதாகிக் கொண்டே வருகின்றனர்.

நிலத்தை விட்டு வெளியேறும் மக்கள்தொகை கூடிக் கொண்டே போகிறது. சாமானிய மக்களின் நிலங்கள் கார்ப்பரேட்காரர்களின் கைகளுக்குப் போவது எவ்விதத்திலும் மக்களின் பசிப்பிணியைப் போக்கப் போவதில்லை. பணம் இருப்பவனே பசியாற முடியும் எனும் நிலை வர வெகுநாட்களாகாது தோழர்களே. பணம் இருப்பவரே படிக்க  முடியும். பணம் இருப்பவரே திருமணம் செய்ய முடியும். பணம் இருப்பவரே குழந்தை பெற முடியும். எல்லாம் வலிமையுள்ளது வாழும் எனும் தத்துவம், புத்தி சாலித்தனமுள்ளது பிழைத்துக் கொள்ளும் எனும் தத்துவத்தால் வந்த கோளாறு. முடிந்தால் பணம் சம்பாதி. முடியாவிட்டால். எதற்கு இருக்கிறாய். உலகம் புத்திசாலிகளுக்கானது. சரிதானே பிராமணர்களே.

ஒரு கல்லூரிக்கு செய்முறை புறத்தேர்வாளராகப் போய்விட்டு, பேருந்தில் வந்து கொண்டிருக்கிறோம். எமது சீட்டில் ஒரு பிராமணர் உட்காருகிறார். பிராமணர்தான். பார்த்தாலே தெரிகிறது. பேசும் மொழியில் தெரிகிறது. அலைபேசியில் தெரிகிறது. கட்டுமான அலுவலகத்தில் வேலை போலும். பேருந்தில் உட்கார்ந்ததிலிருந்து யார் யாரிடமோ பேசிக்கொண்டே வருகிறார். முதலாளியிடம் சொல்கிறார். அவங்க ரெண்டு பேரும் சண்ட போட்டதுல நமக்கு என்ன பிளஸ் பாயிண்டுனா, 80 எல்லுட முடியுறது இப்போ 65 எல்லா முடிச்சாச்சு. பிளஸ் இல்ல, நமக்கு டபுள் பிளஸ் சார். எல்னா இலக்கம்தானே பிராமணர்களே.

உலகை புத்திசாலித்தனத்தால் வெல்ல முடியுமென்றா பிராமணர் நினைக்கிறார்? பேராசை பிடித்த பிராமணர் மக்களின் மனங்களில் இடம் பிடிக்க முடியுமென்றா நம்புகிறார்?

தமிழர்களே.. நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?

முதலியாரும் பிள்ளைமாரும் சேருங்கள். நமது சாதி இளைஞர்களை சேரச் சொல்லுங்கள். நமது இரத்த உறவுகளை எதிர்பார்க்கிறோம். இது இன்டர்நேசனல் முதலியார் பிள்ளைமார் அசோசியேசன் விளம்பரம்.

தமிழர்களே.. நாம் யார்?

சாதி வளர்ச்சியில் ஐ.எம்.பி.எ.வின் பங்கு என்ன தெரியுமா? அனைத்து துணைச் சாதிகளையும் ஒன்றிணைத்து ஒரே குடையின்கீழ் கொண்டு வருதல் - இளைஞர் கல்வி வளர்ச்சி - பணி வாய்ப்புகள் - சட்ட உதவி - மாணவர்களுக்கு போட்டித் தேர்வுகளுக்கு உதவி - வணிகம் - திருமண உதவி - பெண்கள் அணி - மருத்துவர் விவரப்பட்டியல் - தொழில் நிபுணர்கள் - அரசு அதிகாரிகள் தொடர்பு.

செங்குந்த முதலியார் மகாஜன சங்கம் - தொடக்கம் 1927. பதிவு 9/1938.

நோக்கங்கள் - செங்குந்தர்கள் அனைவரும் வாழ்க்கையில் எல்லா துறைகளிலும் முன்னேற்றம் அடையச் செய்வது. செங்குந்தர்களின் மறுமலர்ச்சிக்கும் நல்வாழ்விற்கும் பாடுபடுவது.

செங்குந்தர் உறுதி மொழி - நாம் இந்தியக் குடிமக்களாய் இருப்பதை - நாம் செங்குந்தர் என்ற உணர்வுடன் ஒன்று பட்டு.

நமது குலக் கொடியின் சிறப்பு - நமது குலக் கொடி வெள்ளை நிறத்துணியில் நடுவே குந்தமும் அதன் வலது புறத்தில் சேவலும் இடது புறத்தில் புலியும் சின்னங்களாகக் கொண்டு விளங்குகிறது. அதனை நாம் உணர்ந்து சிரம் தாழ்த்தி வணங்குதல் வேண்டும்.

நமது கடமை - நாம் எடுக்கும் விழாக்கள் எதுவாயினும் அவற்றின் துவக்கத்தில் கொடியேற்றி, வணங்கி, நம் குலத்திற்கு நலம் தரும் உறுதி மொழிகளை எடுத்துக் கொள்ளுதல் என்றும் நமக்கு ஏற்றம் தரும்.

துளுவ வெள்ளாளர் பேரவை, தொண்டை மண்டல துளுவ வெள்ளாளர் சங்கம், வஉசி பேரவை, முதலியார் முன்னேற்ற சங்கம், சோழிய வெள்ளாளர் சங்கம், நாஞ்சில் வெள்ளாளர் சங்கம். எத்தனை எத்தனை சங்கங்கள், பேரவைகள்..

நாம் தமிழரா நண்பர்களே.. நாம் ஒன்றா தோழர்களே..

நாம் எந்தக் காலத்தில் தமிழராய் இருந்தோம். இனிமேலும் நாம் தமிழராய் வாழப் போகிறோம். பிள்ளையும், முதலியும், கவுண்டரும், உடையாரும் ஒன்றாம். துளுவ வெள்ளாளரும், சோழிய வெள்ளாளரும், சைவ வெள்ளாளரும் ஒன்றாம். தமிழ்நாட்டில் வாழும் மற்றவர்களெல்லாம். தமிழ் பேசினால் தமிழராகிவிட முடியுமா? முதலியார் யாரு. எவ்வளவு அறிவான சாதி. பிள்ளைன்னா சும்மாவா.

பிள்ளைகளே.. சுயநல அறிவால் ஒருபோதும் உலகத்தை வெல்ல முடியாது. தன்னல அறிவால் ஒருபோதும் மக்கள் மனங்களில் இடம் பிடிக்க இயலாது.

உலகத்தோரே..

அறிவை விற்பவர் ஒருபோதும் ஞானியாகமாட்டார். பணத்திற்கு விற்கும் அறிவு எக்காலத்தும் ஞானமாகாது.

நாம் மனிதரா தமிழர்களே.. தமிழரெல்லாம் மனிதரெனில், தமிழ்நாடு தேர்வாணையப் பணி, தொகுதி ஒன்று முதல் நான்கு வரையிலான பணிகளுக்கு, முதலி பிள்ளைகளுக்கு மட்டும் எப்படி இலவச பயிற்சி வகுப்புகளை நடத்த முடியும்? இலவச பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கு முதலி பிள்ளை பிரிவை சேர்ந்த ஆசிரியர்கள் தேவை என எப்படி விளம்பரம் செய்ய இயலும்? கவுண்டர்கள் பன்னிரெண்டாம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற கவுண்டர் மாணவ மாணவிகளை மட்டும் அழைத்து பாராட்டும் பரிசும் கொடுக்கிறார்கள். பேசும் அத்தனை பேரும் மாணவர்கள் நன்றாகப் படித்து கவுண்டர் சமுதாயத்திற்குப் பாடுபட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறார்கள். தேவர்கள் அவர்களது சமுதாய மாணவர்களை மட்டும் அழைத்து பரிசு கொடுத்து, தேவர் சாதிக்கு உழைக்க வேண்டும் என்கிறார்கள். செட்டியார்களோ அவர்கள் சாதி மாணவ மாணவிகள் பன்னிரெண்டாம் வகுப்பில் அதிக மதிப்பெண் எடுக்க சிறப்பு ஹோமம்

வளர்க்கிறார்கள். ஏதோ மறைவாகக்கூடச் செய்யவில்லை. அத்தனையும் இலக்கக் கணக்கானோர் படிக்கும் நாளிதழ்களில் விளம்பரங்கள் கொடுத்து ஏற்பாடாகின்றன.

தம் சாதி மாணவர்கள் மட்டும் நன்றாகப் படித்து முன்னேறினால் போதும். மற்றவர் எக்கேடுகெட்டும் போகட்டும். தமிழர்கள் எத்தனை அறிவாளிகள்? அறிவில் சிறந்தவரெல்லாம் அவரவர் சாதிக்குப் பாடுபடுவதால் தமிழகம் எப்படி இருக்கிறது தெரியுமா பெரியோர்களே.

உறவினர் விபத்தில் சிக்கி கோயம்புத்தூர் அரசு மருத்துவமனையில் கவனிப்பாரற்று கிடப்பதாக எமக்கு தகவல் வந்தது. யாம் போனோம். அடிபட்டவர் தனியாகக் கிடக்கிறார். காதிலும், தலையிலும் குருதி வழிகிறது. கவனிப்பார் யாருமில்லை. மனைவி அழுகிறார். மருத்துவரைப் பார்த்துப் பேசினோம். எக்ஸ்ரே எடுங்க என்றார். அதற்கு ஆளில்லை. செயற்கை சுவாசம் பம்ப் பண்ணி செலுத்துவதற்கு ஆளில்லை. அடிபட்டவர் மனைவியை அழுத்தச் சொல்கிறார்கள். அவரால் எப்படி முடியும்? யாம் வாங்கி சுவாசம் அழுத்துகிறோம். உறவினர் என்பதால் எமக்கும் பதற்றமாக இருக்கிறது. எக்ஸ்ரே எடுக்கும் மேடைமீது தூக்கி வைக்க ஆள் இல்லை. டெக்னீசியனாக சிறு பையனே இருக்கிறார். யாம் தூக்குகிறோம் எனச் சொல்லி, மனைவி மூச்சுக் குழாய் அழுத்த, பெரும்பாடு பட்டு எக்ஸ்ரே மெசினில் ஏற்றி இறக்கி எக்ஸ்ரே எடுத்தோம். அதன் பின்னரும் எந்தவிதச் சிகிச்சையும் ஆரம்பிக்கவில்லை. எந்தவித உடல் அசைவுமின்றி பையன் கிடக்கிறார். வண்டி ஓட்டும்போது மது அருந்தியிருந்தாகத் தெரிகிறது. வண்டி சாய்ந்து கீழே விழுந்தாராம்.

கையைக் கழுவ அருகே இருந்த பாத்ரூம் போனோம். பாத்ரூமா அது? குப்பை, நாற்றம், சாப்பாடு, மதுபாட்டில்கள். மாலை ஐந்து மணி அளவில் கொண்டுவரப்பட்ட பையனை, அறைக்கு மாற்றவே பல மணி நேரம். அறைக்கு மாற்றியும் ஒரு சிகிச்சையும் ஆரம்பிக்கவில்லை. பையனுக்கு என்னாயிற்று என்பதற்கோ, எந்த நிலையில் இருக்கிறார் என்பதற்கோ, எந்தத் தகவலும் இல்லை. மருத்துவரிடம் கேட்டால் சொல்கிறோம், வெளியில வெயிட் பண்ணுங்க என்றே பதில் கிடைக்கிறது.

முதல் நாள் மாலையிலிருந்து அடுத்த நாள் மதியம் வரை ஒரே பதில். வெயிட் பண்ணுங்க, சொல்கிறோம். ஊரிலிருந்து உறவினர்கள் எல்லாம் வந்துவிட்டார்கள். என்னதான் சிகிச்சை செய்றீங்க எனச் சத்தம் போட்டால், ஸ்கேன் எடுக்க சற்று தள்ளியிருக்கும் அறைக்கு கொண்டுபோக வேண்டுமென்றும், கொண்டுபோக

தள்ளுவண்டி இல்லை என்றும் பதில் வருகிறது. தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கு வசதி வாய்ப்பு இல்லை. அடிபட்ட பையனை எட்ட நின்று பார்ப்பதற்குக்கூட விட மறுக்கிறார்கள். காவலாளியிடம் இருபது, முப்பது கொடுத்தால் பார்த்துவிட்டு உடனே வந்துவிடச் சொல்கிறார்கள்.

யாம் மருத்துவமனையிலேயே இருந்து பார்த்துக் கொண்டேதான் இருந்தோம். பையனுக்கு ஒரு சிகிச்சையும் நடக்கவில்லை. தெரிந்த மருத்துவரும் இல்லை. எமக்கோ, பையன் தரப்பிலிருந்தோ செல்வாக்கான நட்பும் இல்லை. சிகிச்சையே செய்யாமல் அடுத்த நாள் காலையில் உறவினர் இறந்து விட்டார். இள வயது. இரு பையன்கள். அரசு ஆஸ்பத்திரியின் அவலத்தை எங்கே போய்ச் சொல்ல? எங்கே அடிபட்டது, என்ன தாக்கம், என்ன சிகிச்சை செய்தார்கள், ஒன்றுமே தெரியவில்லை. சொல்லவும் இல்லை.

இறந்துவிட்டார் எனத் தெரிந்தவுடனேயே பணியாளர்கள் பணம் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். 1000 உரூபா கொடுங்க என வம்படிக்கிறார்கள். உடலைச் சுற்றிக்கட்ட துணி, டெட்டால் என அனைத்துக்கும் கொடுக்க வேண்டுமாம். 500 கொடுத்தவுடன்தான் தள்ளுவண்டியையே எடுத்தார்கள். தள்ளுவண்டியிலிருந்து இறக்கி போஸ்ட் மார்ட்டம் பண்ணும் இடத்திற்கு தூக்கிச் செல்ல ஆளில்லை. உறவினர்களே தூக்கிச் சென்றோம். அங்கே கண்ட காட்சி. இறந்தோர் உடல்களை அப்படியே தரையில் போட்டு வைத்திருக்கிறார்கள். பல உடல்கள். சொல்வதற்கே கேவலமாக இருக்கிறது. உறவினர் உடலையும் கீழே ஓரமாக வைத்து விட்டு வந்து விட்டோம். உடன் வந்தவர் வாந்தி எடுத்து தலை சுற்றிக் கிடந்தார் எனில் பார்த்துக் கொள்ளுங்கள். வெளியே வருவதற்குள்ளேயே போஸ்ட் மார்ட்டம் செய்வதற்கு பணம் கேட்கிறார்கள். பணம் கொடுத்தாதான் ஒரே நாளில் முடித்துக் கொடுப்பார்களாம். அதற்கும் 1500 உரூபா கொடுத்தாயிற்று.

விபத்து என்பதால் போஸ்ட் மார்ட்டம் செய்வதற்கு காவல் துறையிடம் அனுமதி வாங்கச் சொன்னார்கள். அருகேயிருந்த காவல் அறையில் பேசினோம். யாம் தாம் பேசினோம். காவலர் உடனே முடித்துக் கொடுப்பதாகச் சொன்னார். எம்மை அனுப்பிவிட்டு உறவினர்களிடம் தனியாகப் பேசினார். யாம் பேராசிரியர் என்பதால் எம்மிடம் கேட்க தயக்கமாக இருந்ததாம். உறவினர்களிடம் பேசி 1000 உரூபா வாங்கிக் கொண்டார். மதியத்திற்குள் உடலைப் பெற்றுக் கொள்ளலாம் எனச் சொன்னதால் அங்கேயே காத்திருந்தோம். விபத்து நடந்தது திருப்பூர் மாவட்ட

காவல் எல்லை என்பதால் அவர்களுக்கும் தகவல் சொல்லியாயிற்று. அவர்கள் மதியத்திற்குள் மருத்துமனைக்கு வந்து விடுவதாகச் சொன்னார்கள். உடலை வாங்கிக் கொண்டு வந்துவிடுவதாக ஊருக்கும் தகவல் சொல்லியாயிற்று.

திருப்பூர் காவலர்கள் வந்தபாடில்லை. ஒரு கட்டத்தில் அலைபேசியை எடுக்கவே இல்லை. அருகிலிருந்த ஒருவர் அவங்களைக் கவனிக்காம எப்படி வருவாங்க என்றார். அப்போதுதான் உறைத்தது. அந்த காவல்நிலையத்திற்கு இரண்டு மூன்று பேரை அனுப்பினோம். சுகட்டு மேனிக்குத் திட்டினார்களாம். நாங்க வராம பாடிய எப்படி கொடுபாங்க எனக் கேட்டார்களாம். அங்கேயும் பணம். காவலர், அதிகாரி, மணியக்காரர் என எட்டாயிரம் வரை செலவு. அடுத்த நாள் பத்து மணிக்கு ஆய்வாளர் மேடம் வந்தார். வந்ததற்கு டீசலும் எங்கள் செலவு. எம்மைக் கூப்பிட்டு அனுப்பினார். ஒரு காவலரை விட்டுச் செல்வதாகவும், அவர் அனைத்தையும் முடித்துக் கொடுப்பார் எனவும் சொல்லிச் சென்றார். அமரர் ஊர்தி அரசு சார்பில் கொடுப்பதாகச் சொன்னார்கள். மதியத்திற்கு மேல் உடலை ஏற்றிச் சொன்றோம். அமரர் ஊர்தி பழுதென்று ஒட்டன் சத்திரத்தில் வேறொரு வண்டியில் ஏற்றினார்கள். ஊர் போய் சேர்வதற்குள் இரவாகிவிடும் என்பதால், இடுகாட்டில் மின் விளக்கு போட்டு வைத்தார்கள். இரவிலேயே உடலை எரித்தும் விட்டார்கள்.

அரசு மருத்துவமனை, அதுவும், மாநகர அரசு மருத்துவமனையின் சிகிச்சையும், தரமும், நடைமுறைகளும் எப்படி இருக்கிறதென்று பார்த்தீர்களா? அனைத்திற்கும் காசு. அலட்சியம்.. அக்கறையின்மை.. ஏழை எளியவர் என்றால் அவ்வளவு இளக்காரம்.. அரசு மருத்துவமனையில் எதுவுமே முறையாக இல்லை. எமது காலில் எலி கடித்ததற்காக டி.டி. போடச் சென்றோம். பணி மருத்துவரைப் பார்த்தோம். எங்கே கடித்தது என்று கூடக் கேட்கவில்லை. செவிலியிடம் டி.டி போடச் சென்னார். எமது பெயரோ, எமக்கு ஊசி போட்டதாகவோ எங்கும் பதியவில்லை. டி.டி மருந்துக்கான கணக்கு?

யாம் காத்திருக்கும் நேரத்தில் நாய் கடித்துவிட்டதென்று சிறு பையனொருவனை முதியவர் அழைத்து வந்தார். பையனுக்கும் அதேதான். பையனுக்கும் ஊசி. பையனுடைய பெயரும் போட்ட ஊசிக் கணக்கும் எங்குமே பதிவாகவில்லை. இப்படியான லட்சணத்தில்தான் இயங்குகின்றன அரசு சார்ந்த அனைத்துத் துறைகளும். அரசின் அனைத்துப் புள்ளிவிவரங்களும் இந்த

லட்சணத்தில்தான் எடுக்கப்படுகின்றன. இந்திய அரசு வெளியிடும் எந்தப் புள்ளி விவரமும் நம்பகத்தன்மை கொண்டதாகச் சொல்வதற்கில்லை.

மின்சாரம் பயனீட்டு கணக்கு எடுப்பவா் முறையாக எடுப்பதேயில்லை. எமது வீட்டிற்கு ஒவ்வொரு முறையும் மிகச் சரியாக 1070 உருபா வருகிறது. பயன்படுத்தாமல் இருந்தாலும் அதே 1070 வருகிறது. கோடையில் ஊருக்குப் போய் ஒரு மாதம் பயன்படுத்தாமல் இருந்தாலும் அதே 1070 உருபாதான். கொஞ்சம் கூடவா கூடியும் குறைந்தும் வராது. எல்லாம் அலட்சியம். அரசு அலுவலகங்களில் உள் பணியாளா்கள் வைத்து வேலை நடைபெறுவது வெட்கக் கேடு. அரசு அலுவலா் அவா் பாா்க்க வேண்டிய வேலையை இன்னொருவரை வைத்துப் பாா்க்கிறாா். போலி அலுவலருக்கு பெயரளவிற்கு பணம் கொடுக்கிறாா். வேலை பாா்ப்பது வேறொருவா். சம்பளம் வாங்குவது அரசு ஊழியா்.

நண்பா்களே.. எத்தனையைச் சொல்ல. எவ்வளவு எழுத. பேராசையும், சுயநலமும் மனிதா்களைப் பிடித்து ஆட்டுகின்றன.

தோழா்களே.. காந்தி என்றொரு மாமனிதா் இம்மண்ணில் வாழ்ந்தாராம். மானுட சேவையே பெரிதென்றாராம். உண்மையே கடவுள் என்றாராம். கிராம முன்னேற்றம் குறித்து பாடுபட்டாராம். மானுட சமூகத்தின் ஒட்டுமொத்த விடுதலை குறித்து சிந்தித்தாராம். இதெல்லாம் பாடப்புத்தகத்தில் எழுதி வைத்திருக்கிறாா்கள். உண்மையில், யதாா்த்தத்தில், காந்திக்கு என்ன மரியாதை, செல்வாக்கு இருக்கிறது?

காந்தியெல்லாம் ஒரு ஆளு. சொல்வது பேராசிரியா். சத்திய சோதனை புத்தகம் இருக்கா. அந்தாளு புத்தகத்த எங்ககிட்ட ஏன் கேக்குற. கேட்டதும் பதில் சொல்வதும் பேராசிரியா்கள். கல்லூரியில் சத்திய சோதனை புத்தகத்தை முதலாமாண்டுக்கு விருப்பத்தோ்வு பாடமாக வைத்திருக்கிறாா்கள். என்ன நன்மை? காந்தியின் மீதமிருக்கும் கொஞ்சப் பெயரும் கெடுகிறது. பரிட்சையில் ஒன்றுமே எழுதாவிட்டாலும் பரவாயில்லை. படிக்கவில்லை என விட்டு விடலாம். எழுதியிருக்கும் பதில்களோ. சொன்னால் வெட்கக்கேடு.

எந்தையாம் காந்தியின் பெயருக்கும், தன்னலமற்ற சேவைக்கும், தியாகத்திற்கும், உண்மைக்கும், இந்திய மண்ணில் இவ்வளவுதான் மதிப்பு எனில், இந்தியா செல்லும் திசை எதுவென சிந்தியுங்கள் இந்தியா்களே.

விவாதங்களில் தேசியக் கட்சி சார்பாக பேசும் அறிஞர்களும், அமைப்பு சார்பாக பேசும் வேதாந்திகளும், காந்தியை ஒரு பொருட்டாகவே நினைப்பதில்லை. மதிப்பதில்லை. காந்தியின் மீது வெறுப்பை முன்னெடுப்பவர்கள், கொன்றவனைப் புகழ்கிறார்கள். தியாகி என்கிறார்கள். ஊர் ஊருக்கு சிலை வைப்போம் என்கிறார்கள். காந்தியெல்லாம் ஒரு மனுசனா என்கிறார்கள். தேசத்தை கெடுத்தார் என்கிறார்கள். தேசத்தைக் கெடுப்பதும், கெடுத்துக் கொண்டிருப்பதும் யார் எனச் சிந்தியுங்கள் இந்தியர்களே.

கிறித்தவர்களுக்கு காந்தியைப் பிடிப்பதில்லை. இத்தனைக்கும் காந்தி கிறித்துமேல் பெருமதிப்பு வைத்திருந்ததாகவே பதிவுகள் சுட்டுகின்றன. இசுலாமியர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். காந்தியப் படிச்சு எழுதித்தான் பட்டம் வேணுமின்னா அப்படியொரு பட்டமே வேண்டாம் எனச் சொல்லும் மாணவர்களைக் கண்டதுண்டோ? கல்லூரியில் சத்திய சோதனைக்குத்தான் அதிகமான அரியர்ஸ் எழுதுகிறார்கள். இந்துக்களுக்கு, அதுவும் சாதி இந்துக்களுக்கு, உயர்சாதி இந்துக்களுக்கு, காந்தி என்னும் பெயர் வேப்பங் காயாகக் கசக்கிறது.

மனிதர்களே.. காந்தி ஏன் கசக்கிறார் எனச் சிந்தியுங்கள்.

பேரறிவு கொண்ட மனிதர்களே.. எல்லாவற்றையும் வணிகமாக்காதீர்கள். எங்கும் கடைகளாக்காதீர்கள். அனைத்திலும் பணம் பண்ணத் துடிக்காதீர்கள். கோவையில் அழகானதொரு பந்தயச் சாலை இருக்கிறது. வெள்ளைக்காரன் திட்டமிட்டு அழகாக உருவாக்கியிருக்கிறார். இரு மருங்கிலும் உயர்ந்த மரங்கள் நடுவே நடைப்பயிற்சி செய்வது சுகமான அனுபவம். 2.4 கிலோ மீட்டர் தூரத்திற்கு அருமையான நடைபாதை உள்ளது. ஆங்காங்கே மேடு பள்ளம் இருந்தாலும் பரவாயில்லை என்றே சொல்லலாம். ஏராளமானோர் நடக்கிறார்கள். ஓடுகிறார்கள். பட்டாலியன்காரர்கள் பயிற்சி செய்கிறார்கள். மாநகரிலிருக்கும் இந்த அழகான பந்தயச் சாலை வரவர சந்தைக் கடையாக மாறிவருகிறது. புதிது புதிதாகக் கடைகள் திறக்கிறார்கள். பெருங்குடியிருப்புகள் கட்டுகிறார்கள். காளான்களாய் நடைபாதையின் இருபுறமும் கடைகள் முளைத்து வருகின்றன. கோவில்களும் வரத் துவங்கிவிட்டன. விரைவில் பெரிய வணிகச் சந்தைக்கான இடமாக நடைபாதை மாறப்போகிறது.

தினமும் இரு சுற்றுக்கள் நடந்தால் போதும். அற்புதமான உடற்பயிற்சி. உண்மையிலேயே மக்கள் நல அரசாக இருந்தால், மக்கள் உடல் நலம்மீது அக்கறையான அரசுத் துறைகள் என்றால், காலையும் மாலையும் ஐந்து மணிமுதல் எட்டுமணிவரை போக்குவரத்தைத் தடை செய்யும். வாகனங்கள் சீறிச் செல்கின்றன. ஆரன் சத்தம் கூடுதல். நடைப்பயிற்சி செய்வதற்கு ஏராளமான இடையூறுகள். நடைபாதையின் இருபுறமும் வணிக வளாகங்கள் கட்டுவதற்கு மாநகராட்சி எப்படி சம்மதிக்கிறது? ஏன் கோவை பந்தயச் சாலை முழுப் பகுதியையும் வணிகம் தடை செய்யப்பட்ட பகுதியாக ஆக்கக் கூடாது? அறிவிக்கக் கூடாது? அரசு, தமிழகக் கோவில்களை வணிகம் தடை செய்யப்பட்ட பகுதிகளாக அறிவித்தால், கொண்டு வந்தால் எவ்வளவு அழகாக இருக்கும்? சிந்தியுங்கள் தோழர்களே.

எமது வீட்டருகே இருக்கும் இரண்டு நியாயவிலைக் கடைகளுக்கு, பெரியபெரிய கார்களில் வந்து, விலையில்லா அரிசியை சாக்குப்பைகளில் வாங்கிச் செல்கிறார்கள். ஒவ்வொருமுறை இதைப் பார்க்கும்போதும், அரிசியை வாங்கிச் செல்பவர்கள் சோறாக்கித்தான் உண்கிறார்களா என எமக்கு சிந்தனை வருகிறது. நீங்களும் சிந்தியுங்கள். நாம் சேர்ந்து சிந்திப்போம் தோழமைகளே..

(சிந்திப்பது தொடரும்)

ஸ்ரீஆண்டாள் ரங்கமன்னாருக்கு நித்ய ஜெயமங்களம்!

ஸ்ரீஆண்டாள் ரங்கமன்னாருக்கு நித்ய ஜெயமங்களம்!!

நித்ய சுபமங்களம்!!!

“நாச்சியார் திருவடிகளே சரணம்”

# விக்ரமயூர்ஜிதசாஸனம்

## எப்போதும் வென்றான்

$$p + q = 1$$

## THE STORY OF A GREAT FATHER AND HIS BRAVE SON

தமிழ்கிருஷ்ணா